


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். பொ

# ஆண்மை

மித்ர வெளியீடு
375-10, ஆற்காடு சாலை,
சென்னை-600 024. இந்தியா.

469044
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு : நவம்பர் 1994
மித்ர : 9
உரிமைப் பதிவு
விலை ரூ. 75-00

# AANNMAI

-A Collection of Stories
in Tamil Language
by
S. PONNUTHURAI

First Edition :
20th November, 1994

Printers :
Kokila Sree Printers
Madras-600 094

Price :
Rupees Seventy Five only

Pages :
400

Cover Design :
TROTSKY MARUDU
3/D Old Tower Block
Nandanam Madras-600 035

Published by
Dr. PON ANURA

MITHRA PUBLICATIONS
375-10, Arcot Road
Madras-600 024 INDIA

UNIVERSITY OF PERADENIYA
17-2-1996
LIBRARY

அமைப்பு : இளம்பிறை எம்.ஏ.ரஹ்மான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
17-2-1996
LIBRARY

# பதிப்புரை

இந்த ஆண்டில் இது நமது ஆறாவது வெளியீடு. சற்றே திருப்தியாக இருக்கிறது.

மாதம் ஒன்று; ஆண்டுக்குப் பன்னிரண்டு புது நூல்கள். இவ்வாறு தமிழ் நூல் பிரசுரத்திலே நமது பங்களிப்பினைச் செய்து கொள்ளலாம் என்பது நமது இலக்கு. மூன்று ஆண்டுகளுக்கிடையில் பாதி தூரம் தாண்டியமை திருப்தி தந்தாலும், இந்த இலட்சியத்தினை அடைவதிலே உங்களுடைய நிச்சயமான ஆதரவை நாடுகின்றோம்.

புலம் பெயர்ந்த நாடுகளிலே வாழும் ஈழத் தமிழர்கள் தமிழர் பிரச்சினையைச் சர்வதேசிய மயப்படுத்தியுள்ளார்கள். அத்துடன் அவர்கள் நின்றுவிடவில்லை. கலை-இலக்கியங்களின் படைப்பிலும் பார்வையிலும் புதிதான ஒரு சர்வதேசியப் பரிமாணத்தினைக் கொண்டு வந்து சேர்த்துள்ளார்கள். ஆயினும், இந்தப் புதிய பரிமாணங்களைத் தக்க வைத்துக் கொள்வதும், அவற்றுக்கு சர்வதேசிய அளவிலே ஒரு கௌரவத்தினையும் அங்கீகாரத்தினையும், வென்றெடுப்பதும் நமது கைகளிலேதான் தங்கியுள்ளது.

புலம் பெயர்ந்த நாடுகளிலே தமிழ் இலக்கியப் படைப்பிலே ஈடுபட்டுள்ளவர்கள், அதனை ஊதியம் கருதிச் செய்யவில்லை என்பது உண்மை. பணத்தை உழைத்துக் கொள்வதற்குப் புலம் பெயர்ந்த நாடுகளிலே வேறு வழிகள் உள. எனவே, இலக்கியத் துறையிலே ஈடுபாட்டுடன் உழைப்பவர்கள், தமது தமிழ் நேசிப்பினை முதனிலைப் படுத்துகிறார்கள் என்பதை நாம் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய படைப்புகள் பரவலாகச் சென்றடைதல் வேண்டுமென்றால், அவை நூல் உருவிலே வெளிவருதல் வேண்டும். புலம் பெயர்ந்த நாடுகளிலே வாழும் தமிழ்க் குடும்பம் ஒவ்வொன்றும், புலம் பெயர்ந்த நமது படைப்பாளிகளுடைய நூல்களை பணம் கொடுத்து வாங்கி ஆதரிப்பதைத் தமது கடமையாக்கிக் கொள்ளுதல் வேண்டும். தமிழ் அன்னையின் சேவிப்பிலே, மாசந்தோறும் ஓர் அர்ச்சனைத் தட்டினை வாக்குவோம் என்கிற ஓர் ஆத்மார்த்த ஈடுபாட்டுடன் இதனைச் செய்ய முன்வருதல் வேண்டும். இந்த ஈடுபாடும் பக்தியுமே, தமது குடும்பத்தின் சூழலிலே, தமிழ் மொழியின் மணத்தினையும், நமது பாரம் பரியக்களின் தனித்துவத்தையும் பேண உதவும்.

நமது கௌரவங்களும், நமது இனத்துவத்தின் தனித்துவ மரியாதைகளும் பிறர் போடும் பிச்சையல்ல. நமது உழைப்பும் நமது பங்களிப்புமே இவற்றை வென்றெடுத்து நிச்சயப்படுத்துதல் வேண்டும். இத்தகைய ஓர் இலக்கிய ஊழியத்திலே உங்களையும் இணைந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றேன்.

தமிழ் ஊழியம் என்பது வியாபாரமல்ல; அது பக்தி.

டாக்டர் பொன். அநுர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
17-2-1996

# பாயிரம்

**'ஆண்மை'** எனும் போது, பெண்ணியவாதிகள் சீறுவதற்கு இடமிருக்கிறது. இச்சூழ்நிலையில், 'ஆண்மை' என்ற தலைப்பில் ஒரு சிறுகதைத் தொகுதியைக் கொண்டு வருவதற்கு அசாத்திய துணிச்சல் வேண்டும்.

கொண்டு வந்திருக்கிறார் எஸ்.பொ. இவர் எழுத்தின் முத்திரை துணிச்சல்.

எழுதத் தொடங்கிய காலத்திலிருந்தே, இவர் எழுத்துப் போராளி. மனிதனுக்காக சித்தாந்தமே யன்றி, சித்தாந்தத்துக்காக மனிதன் என்று சொல்லுவது மதியீனமென்று போராடியவர். எழுத்தில் தீட்டு தூய்மை என்று எதுவுமில்லை, சிந்தனையில் நேர்மையும், சொல்லில் கபடமின்மையுமிருந்தால் போதும், அதுவே உன்னத எழுத்து என்று போராடியவர்.

அதனால்தான், 'ஆண்மை' என்றால், பெண்ணியத்துக்கு முரணியதோ என்ற, மனச்சலனம் ஏதுமில்லாது, 'ஆண்மை'யின் வெளிப்பாடுகளாகத் தாம் கருதுவனவற்றைச் சிறு கதைகளாக ஆக்கித் தந்திருக்கிறார் எஸ்.பொ.

'ஆண்மை' என்பது 'ஆணை'ச் சார்ந்துதான் வழங்க வேண்டும் மென்ற அவசியமில்லை. 'ஆள்' என்பது வேர்ச் சொல்லாயின், ஆள்பவர் யார் வேண்டுமானாலுமிருக்கலாம். ஆணாயிருக்கலாம், பெண்ணாகவிருக்கலாம். ஆளும் பண்பே ஆண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தொகுதியிலுள்ள கதைகளைப் படிக்கும் போது தான் இக்கருத்து விளங்கும்.

'தேவதைகள் செல்லஅஞ்சும்' இடங்களுக்கெல்லாம் உல்லாச யாத்திரை போக எஸ்.பொ. தயங்குவதில்லை. இவர் எழுத்து ஆளுமைக்கு எல்லை, நிலம் கிடையாது. இலக்கியம் எனும் போது, படைப்பாளி தளையிட்டுக் கொள்ளக் கூடாதென்பதுதான் இவர் அணுகுமுறை. அவ்வகையில், சமூகத்தில் நாம் காணும் எல்லாவிதமான பிரச்னைகளும் இவர் கதைகளுக்குக்கருப்பொருளாயிருக்கின்றன. இதைச் சொல்லலாம், இதைச் சொல்லக் கூடாதென்று லட்சுமண ரேகை எதுவும் இவர் எழுத்துப் பயணத்தைத் தடை செய்யவில்லை. இதுவும் இவரை ஒரு சர்ச்சைக்குரிய படைப்பாளியாக இலக்கிய உலகுக்கு அடையாளப் படுத்திக் காட்டுகிறது. தம் எழுத்தின் பேரில் இவருக்கிருக்கும் அளவற்ற தன்னம்பிக்கையே இவர் படைப்பாற்றலின் அடிநாதம். இவர் எழுத்தில் அச்சம் இல்லை; தன்னுணர்வு (Self-consciousness) இவர் எழுத்துக்கு வேலியிடவில்லை. இதுதான் இவர் இலக்கிய ஆண்மை.

இக்கதைகளில் 'ஆண்மை' எனும் கோட்பாடு எத்தனை வடிவங்களில் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளுகின்றது?

போர் என்ற பேரில் இனவெறியைப் புலப்படுத்தும் ஈனச் செயலுக்கு உடன்படாத காதலர் அன்பின் செருக்காக, இயற்கைக்கும் ('ஊத்தையன்') செயற்கைக்கும் ('அறிவு ஜீவி') இடையே நிகழும் போராட்டமாக, இயற்கை செய்த வஞ்சனைக்குப் பரிகாரமாக, அண்ணன் விட்ட குறையைத் தொட்டு முடிக்கும் தம்பியின் கடமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுணர்வாக, கணமேனும் சினத்தைக் காக்க முடியாமல் செயல்பட்டு, மறத்துக்கும் அன்பே துணை என்றுணர்ந்து, தண்டிக்கப்பட்டவனுக்குத் தோள் கொடுத்து குணமெனும் குன்றேறி நிற்கும் பண்பாக, அரவத்தின் (ஃபிராயிடக் குறியீடு) அகிலா விளையாட்டே யதார்த்த உலகமென்ற மனிதத்தின் அரிச்சுவடிப் பாடமாக, அதிகாரத்தை அஞ்சாமல் எதிர்கொண்டு தன்னை இழந்து, தமரைக் காப்பாற்றும் விழுமிய அரசியல் கோட்பாடாக, கொள்கைத் துணிவாக, பாலுணர்வின் கன்னி அநுபவமாக, அகதியின் தேடலாக, பிணந் தின்னும் கழுதைப் புலிகளை நேருக்கு நேர் களம் காணும் வேங்கையின் சீற்றமாக, இறுதியில் இன்றைய குருக்ஷேத்திரத்தில், தனயனை தாரை வார்த்த ஒரு தந்தையின் கண்ணீர்க் காவியத்தின் உள்ளீட்டுப் பெருமிதமாக... எத்தனை அர்த்தப் பரிமாணங்களோடு விரிந்திருக்கிறது இவ் 'வாண்மை'!

எஸ்.பொ. அடிப்படையில் ஒரு 'மாரலிஸ்ட்' (moralist). அவரை ஒரு பிரச்சினைக்குரிய எழுத்தாளராக இலக்கிய உலகுக்கு அறிவித்த 'தீ' என்ற நாவலிலிருந்து, இன்று வரை அவர் படைப்புக்கள் எல்லாவற்றிலுமே இந்தப் பண்புதான் அடிக்கோலாக இருந்துகொண்டு வந்திருக்கிறது.

'Morality' என்பதைத் தமிழர்கள் பாலுணர்வுடன் மட்டும் சார்த்திப் பொருள் கொள்கின்றனர். இது மேலைய நாட்டுத் தொடர்பினால் ஏற்பட்டிருக்கக்கூடிய ஒரு பாதிப்பு என்பது என் கருத்து. 'Sex' உணர்வு நம் புராதனச் சிந்தனையின்படி ஒரு தீண்டத்தகாத மனநிலையன்று, கிறித்துவக் கோட்பாட்டின்படிதான் 'Sex', ஒரு பாவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் மனிதனும், முதல் பெண்ணும், பாலுணர்வு ஏற்பட்ட நிலையில், சபிக்கப்பட்ட பாவிகள். கிறித்துவக் கடவுளுக்கு மனைவி இல்லை, குடும்பம் இல்லை, கடவுளின் மகன் கூடத் திருமணம் செய்து கொள்ளவில்லை. அவன் கொள்கைகளை மற்றவர்களுக்குப் போதிக்கும் பிரசாரகர்கள்கூட (Catholic Priests) மணம் செய்து கொள்ளக் கூடாதென்ற கட்டுப்பாடு.

ஆனால் நம் கடவுளர் மணம் புரிந்து, குடியும் குடித்தனமாக வாழ்கிறார்கள். கடவுள் கோட்பாடே ஆண்-பெண் தத்துவம். இந்தியத் தத்துவ வரலாற்றில் பாலின உணர்வை பாவமென்று புறக்கணித்த சிந்தனை மரபு எதுவும் தோன்றியதாகத் தெரியவில்லை. யாக்கை நிலையாமையை வற்புறுத்தும் வகையில், நிலையில்லாதனவற்றில் ஒன்றாக பாலுணர்வு கூறப்பட்டிருக்கலாம்.

ஆனால் மேனாடுகளில், 'Sex' உணர்வு சபிக்கப் பட்ட காரணத்தால், ஈடன்தோட்டத்து ஆப்பிளைத் திருடித் தின்பது ஒரு சுகமாக, பாலுணர்வுக் கதை களை ரசித்துக் கூறுவதென்பது பொக்காஷியோ, பால்சாக் காலத்திலிருந்தே ஒரு மரபாகிவிட்டது.

முன்னூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட இந்த மேனாட்டுத் தொடர்புதான் 'Sex' பற்றிய நம் கண்ணோட்டத்தையும் பாதித்திருக்க வேண்டு மென்று எனக்குப்படுகிறது. இதனால்தான், 'தீ' வெளிவந்தபோது, எஸ்.பொ. கடுமையான விமர்சனத்துக் குள்ளாகியிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது.

எஸ்.பொ, பாலின உணர்வுகளையும், சிக்கல் களையும், வக்கிரங்களையும் சொல்லும் போது, அவரிடம் இந்த இரு வேறு கலாசார பாதிப்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையும் மனப் போராட்டத்தை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. மனிதன், 'தனது **பலவீன நிலைகளில்** செய்வனவற்றையும் அநுபவிப்பன வற்றையும் சொல்லவும் ஒப்புக்கொள்ளவும் ஏன் கூச்சப்பட வேண்டும்?' என்று அவர் 'தீ'யின் முன்னுரையில் எழுதுகிறார். பலவீன நிலைகளில் என்ற அவருடைய வாக்குமூலமே அவரை 'Moralist' என்று அடையாளம் காட்டுகிறது. ஆனால் 'இடக் கரடக்கல்' தேவையில்லை என்பதுதான் அவர் வாதம். 'தீ'யின் கதாநாயகன் இடையறாது உடல் வேட்டையில் இறங்கியதற்கு மனோ தத்துவக் காரணமாக, யோசப் சாமியாரின் பங்க ளிப்பை 'ஆசிரியர்' குறிப்பிட்டுள்ளார். இறுதியில் சரசு என்ற விலைமாதிடம் ஏற்படும் அநுபவம், பாலுணர்வின் எல்லைப் புள்ளி எது என்று அவனுக் குச் சுட்டிக் காட்டி விடுகிறது.

'தீ' 1961ல் வெளிவந்த நாவல். இன்று இந்நாவலை எஸ்.பொ. எழுதினாலும், வேறு மாதிரியாக எழுதியிருக்க முடியாதென்று நான் கருதுகிறேன். இதுதான் அவர் எழுத்தின் சத்திய ஆவேசம். வேஷம் தரித்து எழுதுவதென்பது அவரால் இயலாத காரியம். முகமூடிகள் அணிவது அவர் எழுத்தின் அடிப்படைப் பண்புக்கு முரணிய செயல். ஆல்பர்ட் மொராவியோவைக் கேட்டார் களாம். நீங்கள் ஆரம்பத்தில் எழுதிய கதைகளுக் காக இன்று வருத்தப்படுவதுண்டா? என்று; அவர் பதில்: அப்படி வருந்தினால் நான் மொராவியோ வாக இருக்க முடியாது. என்னால் இன்றும் அக் கதைகளை அப்படித்தான் எழுதியிருக்க முடியும்!

எனக்கு எஸ்.பொவின் எழுத்துடன் ஏற்பட்ட முதல் அநுபவம், 'நனவிடை தோய்தல்' மூலமாகத்தான். இது 1992ல் வெளிவந்தது. இதைப் படித்த பிறகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான், என்னுடைய இத்தனை ஆண்டுகள் இழப்பு எனக்குப் புலனாயிற்று, 'பிறந்த மண்ணிலிருந்து நாற்பத்தைந்து ஆண்டுகள்' புறத்தே ஓடித்திரிந்த ஒருவருக்கு வேரோடிருக்கும் பிரிக்க வொண்ணா சம்பந்தம் எப்படி ஒரு வசன காவியக் காட்சிகளாக விரியும் என்பதை என்னால்எஸ்.பொவுடன் பழக்கம் ஏற்பட்ட பிறகுதான் புரிந்து கொண்டேன். யாழ்ப் பாணத்திலேயே அவர் இருந்திருந்தால், நனவிடை தோய்தல் உருவாகியிருக்குமா என்பது சந்தேகந் தான். அவர் எழுத்தின் வேட்டை 'தேடல்!' பல 'நான்'களாகக் குழுமியிருக்கும் குவியலில், பிற 'நான்'கள் உருவாவதற்குக் காரணமான ஆதார ஸ்ருதியாகிய 'நானை' அடி மண்ணின் சூழ்நிலை யில் உணர வேண்டுமென்று மேற்கொள்ளும் முடி வில்லா பயணம் 'ஓடிஸி' என்று சொல்லலாமா? யுலிஸிஸ் பிரபஞ்சம் புறம் நோக்கிச் செல்கின்றார், இது அக வழிச் செலவு.

எஸ்பொவின் மற்றைய நூல்களையெல்லாம் நான் படிக்கத் தொடங்கினேன். இறுதியாகப் படித்தது, 'ஆண்மை'.

எவ்லாவற்றிலும் நான்காணும் இவைகளோடு மனிதனைஅவன்பலத்திலும்,பலகீனத்திலும் நேசிக் கத் தெரிந்த ஓர் உன்னதமான பண்பு. இது பல தோற்றங்களாக கொள்வதுதான் இவர் எழுத்தின் பலம்.அவரே ஓரிடத்தில் கூறுகிறார்.'என் எழுத்துப் பணி போரே. இது தொற்றித் தேவையான தேட லும்.எழுத்து ஊழியந்தான்என்ன?சௌந்தர்ய உபா சனையா? கலை ஆராதனையா? அழகுணர்ச்சிச் சலனங்களின் ஊற்று. பிரேமை என்கிற அன்பும், உணர்ச்சிகளின் அழகே. ஊற்றின் உதைப்பு ஆக்கம். கலை ஆக்க வெளிப்பாடே. கலா நிறைவு ஆனந்தம்; இன்பம். சத்திய எழுத்தின் சரஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை வெறியே. வெறியின் அம்ஸம் ஆவேசம், அடக்குமுறை, அட்டூழியம், அக்கிரமம், அநியாயம், அதர்மம், அழிவு, எனப் புழுத்துப் பெருகும். ஊழல்களைக் கண்டு ஆவேசம். அவற்றிலிருந்து மனிதம் விடுதலை சுகிக்கவேண்டு மென்கிற வெறி. சத்தியத்தினதும் தர்மத்தினதும் பரிபாலனம் விடுதலைக்கான உத்திரவாதம். இவையே மானுஷிகத்தின் ஆதாரம்.'

ஷெல்லியின் 'A defence of Poerty க்குப் பிறகு, எழுத்துப் பற்றிய ஆதார அறிக்கை நான் படித்தனவற்றுள், இதுதான் குறிப்பிடத்தக்கது என்பது என் அபிப்பிராயம். 'விடுதலை வெறி' தான் ஷெல்லியைக் கவிஞனாக்கியது. Poets are the unacknowledged legilators Of the world என்பது ஷெல்யியின் கருத்து.

பாரதியின் படைப்புக்களிலும் நம்மால் இந்த 'விடுதலை வெறி'யைக் காண முடிகிறது. அவர் ஷெல்லிதாசனாகத் தம்மைக் குறிப்பிட்டுக் கொண்டதில் ஆச்சர்யமில்லை. நவ யுவக் கவிஞனாக எஸ். பொ. போற்றும் பாரதியையும், எஸ். பொ. வையும் பிணைப்பதும் இவ்'விடுதலை வெறி'யே; 'சத்திய ஆவேசம்' என்றும் சொல்லலாம். உணர்ச்சி வழி எழுதும் இவர்கள் யாவருமே 'incorrigible romantics' ஆக இருப்பதைத் தவிர்க்க முடியாது.

இந்தத் தொகுதியிலிருக்கும் இறுதிக் கதையில் எஸ். பொ. என்ற படைப்பாளியை- மனிதனை- இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதன்று என்ற உண்மையைப் படம் பிடித்துக் காட்டுகிறது. இது 'தகப்பன் சாமி'யைப் பற்றிய கதை. 'கதை' என்றால் 'புனைந்து' எழுதப்பட்டதன்று; பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வுகளில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து, ஒருங்கிணைத்து, உணர்ச்சி லயம் கூட்டி, ஒரு impressio nitic ஓவியம் வரைவது, 'கதை' என்றால், இது கதை. தந்தையின் 'எழுத்து' ஆண்மை, மகனின் 'செயல் ஆண்மை'யாக உருப்பெறுகிறது என்பதைச் சொல்லுவது இச்சித்திரம்.

பூதஉடல் மறைந்து புகழுடம்புடன் வாழும் தனயனுடன் தந்தை நிகழ்த்தும் உரையாடலாகஇக்கதை அமைந்துள்ளது. உரையாடல் என்றால் ஒருதலை பேச்சு. தனிமொழி. தந்தை,அமரத்துவம் அடைந்து விட்ட மகனுடன் பேசுவதின் மூலம் தம்மையும், மகனையும், தந்தை-மகன் உறவு நிலையின் பல்வேறு பரிமாணங்களையும் இனக் கௌரவத்துக்காக உயிர்த் தியாகம் செய்வது ஒரு பெரும் விலையாகாது என்று காலனைக் காலுக்கருகே அழைக்கத் தூண்டிய அக்கோட்பாட்டு ஆண்மையையும் விமர்சிக்கிறார்.

'நான் மானுஷிகத்தின் தேடல் என்றேன். மானுஷிகத்தின் கௌரவம் பற்றிய தேடல் என்று திருத்தம் போட்டாய். நான் தமிழ் ஊழியம் என்றேன். நீ தமிழ் இனத்தின் ஊழியம் என்று திருத்தம் போட்டாய்' என்று மகனிடம் கூறுகிறார் தந்தை.

'சூட்சும'த்தைத் தேடும் தந்தைக்குப்'பரும'த்தைத் தேடி அடைவதுதான் யதார்த்தம் என்று போதிக்கின்றான் மகன். இம்மகனை அடையாளம் காட்ட அவருக்கு ஒரு சூறாவளி தேவையாக இருந்தது. நீர்ப்பிரவாகத்தில் தன்னந்தனியாகச் சென்று அகப்பட்டுக் கொண்டு நினைவிழந்த தந்தையைத் தன் பிஞ்சுக் கரங்களால் தூக்கிக் காப்பாற்றி, அவருக்கு புனர் வாழ்வளித்த பதினைந்து வயது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவனின் இம் மனத் துணிவில் விளைந்த அவனுடைய விசுவரூப தரிசனம் அவருக்குக் கிடைக்கிறது. அவனுடைய தனித்வம் அவருக்கு புலனாகின்றது. கண்ணனின் வாயில் பிரபஞ்சத்தைக் கண்ட யசோதையின் களிப்பு.

1963ல் பிறந்த அர்ஜுனா 1974ல், யாழ்ப்பாணத்தில் அதிகாரத்தின் ஆணவத்தை, இனவெறியின் உச்சத்தை நேருக்கு நேர் சந்திக்கின்றான். பதினொன்று வயதில் அடிமனத்தில் ஆழமாகப் பதிந்த இவ்வநுபவந்தான், அவனைப் போராளியாக ஆக்கியிருக்கக் கூடுமென்று நினைக்கின்றார் தந்தை. அநியாயத்தை எதிர்த்துப் போராடும் இயல்பு அவன் கருவிலிருந்தே பெற்ற வரப்பிரஸாதம். தாய்ப்பாசம், அவன் மனத்துக்கு எது நியாயமென்று படுகின்றதோ அதன் வழி நிற்றல்-என்ற இரண்டனுள், ஒன்றைத் தெரிவு செய்தல் என்பது அவன் சிந்தனையில் எந்த விதமான எக்ஸிஸ்டென்ஷியலிச மனக் குழப்பத்தையும் தோற்றுவிக்கவில்லை. அவன் தர்மத்தின் வழி நின்றான்; அல்லது, 'இராமன் வழியே தர்மத்தின் வழி' என்று கம்பன் கூறியது போல், அர்ஜுனா கண்ட பாதையே தர்மத்துக்கும் பாதையாயிற்று. மற்றையக் குழந்தைகள் 'இது வழக்குக்குரியதன்று' என்று வாளாயிருக்கையில், 'பணமில்லாத நிலையில் பண்டிகையின் போது, புத்தாடை எதற்கு?' என்று, சிறுவனாயிருந்த போதே அவன் தாயிடம் வாதாடுகின்றான். இந்தச் சின்ன சின்ன நிகழ்ச்சிகளை எல்லாம் நினைவு கூர்ந்து, 'விடுதலை வெறியின் ஆகுதி' யாக அவனைக் கொண்டு செலுத்தியது எது என்று தம் எண்ண அலைகளை அலசுகிறார் தந்தை. போராட்டத்தை இறுதித் தீர்வாகக் கொண்டவனுமல்லன் அவன்; அண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணனை விரும்பி, ஆனால் அது ஒருதலைக் காமமாக ஆகிவிட அதனால் மனம் சோர்ந்த வேணியின் மனம் நோகக் கூடாதென்பதில் அக்கறை காட்டும் இவ்விளைஞன், 'ஆடு மேய்ந்த செடி கண்டு தந்தை மனம் வாடக் கூடாதென்பதற்காக, புதிய வேலி ஒன்று நிறுவி, தண்ணீராற் காத்து, மரமாக்கிய இத்தனயன், மலரிலும் மென்மையான இதயம் உள்ளவனாக இருந்திருக்க வேண்டும். அவனை ஆயுதம் தாங்கச் செய்தது எது? தர்ம ஆவேசமா, சத்திய வெறியா, சிறுமையைக் கண்டு பொங்கும் சினமா, ஒடுக்கப்படும் தம்மினத்தவர் இடுக்கண் களைய அனிச்சையாய் எழும் வீரமா, எல்லாமுந்தானா? குரு க்ஷேத்திரத்தில் சாரதி பார்த்தனுக்கு அஹிம்சை போதிக்கவில்லை. தந்தையால் பார்த்தன் என்று அழைக்கப்பட்ட இந்த அர்ஜுனா கீதையின் சாரத்தை அன்றே கற்றுக்கொண்டு விட்டான்! தர்மத்துக்காக நடத்தும் போரில் கொலை வாளைக் குறித்தல் கடன் என்பதை உணர்ந்தான்.

1978ல் அண்ணன் அநுராவின் சிறைவாசமும் அர்ஜுனாவைப் பாதித்திருக்க வேண்டுமென்பது ஒரு குறிப்பு. இதுவும் சாத்தியமாக இருக்கக்கூடும். லெனினின் அண்ணன் அரசாங்கத்தால் படுகொலை செய்யப்பட்டதும் அவன் ஒரு புரட்சிவாதியாக மாறியதற்குக் காரணங்களுள் ஒன்று என்று சர்ச்சில் எழுதுகிறார்.

எந்த இனத்துக்காக அர்ஜுனா தன் உயிரை அர்ப்பணித்தானோ, அதே இனத்தில் சிலர் இத்தியாகத்தைக் கொச்சைப்படுத்துவது பற்றியும் தந்தை குமுறி எழுதுகிறார். தங்கள் இயலாமையினால் தங்கள் மீதே வெறுப்பு ஏற்படுவதைத் தவிர்க்க வீரர்தம் கல்லறை மீதுகல்லெறிந்து அவர் தம் போராட்டத்தைப் பேசிக் கொச்சைப்படுத்தித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களைத் தாங்களே தேற்றிக் கொள்வது ஈனர் தம் இயல்பு. இவ்வாறு சொன்னவர் ஒரு 'மார்க்ஸிஸ்டாக' ('மார்க்ஸிஸம்' என்பது ஒரு குல்லாய்; அது எந்தத் தலைக்கு வேண்டுமானாலும் பொருந்தும். தெய்வ நம்பிக்கையில்லாத மார்க்ஸ், 'மார்க்ஸிஸ்ட்களிடமிருந்து' தம்மை 'மீட்க' யாரை வேண்டிக் கொள்வார் என்பதுதான் பிரச்னை) இருந்தாரென்பது ஓர் எதேச்சையான சம்பவம்.

இறந்த மகனை ஒரு கதைக்குக் கருப்பொருளாக்குவது படைப்பாளி-தந்தைக்கு மிகவும் சிரமமான காரியம். அதுவும் ஒரு சாதாரண இறப்பல்ல. விடுதலைப் போராட்டத்தில் நிகழ்ந்த வீரமரணம். தந்தை 'சொல் ஏர் உழவர்', மகனோ, 'வில்லேர் உழவன்' வள்ளுவர் காலத்தில் ஆள்பவன் 'அறத்தாறு நுவலும் பூட்கை' யுடைய கண்ணியமிக்கவன். விற்சூட்டைக் காட்டிலும் கவிஞனுடைய சுடுசொல்லைக் கண்டு அஞ்சினான். ஆனால் பிணம் தின்னும் சாத்திரத் துணையுடன் பேய் அரசு செய்யும் இக்காலத்தில், சொற்களும் பொருள் துகிலிழந்து வெறும் எழுத்துப் பிரேதங்களாகிவிட்டன. எதுவும் யாரையும் பாதிக்கப் போவதில்லை. இந்நிலையில் வில்லேர் உழவனால் தான் சத்தியத்தின் சார்பாகப் போராட முடியுமென்றாகிவிட்டது. தந்தை இதை ஒப்புக் கொள்ளுகிறார். 'உன் பயணம் வேறு, என் பயணம் வேறு' ஆனால் பயணத்தின் நோக்கம் இரண்டிற்கும் ஒன்று தான்.

எஸ். பொ. இக்கதையில் 'தம்மை இழந்து' 'மகனைக் கண்டிருக்கிறார்.' வேர்ட்ஸ்வொர்த் ஷெல்லி ஆகிய இருவருமே இயற்கையைப் பாடிய கவிஞர்கள். 'வேர்ட்ஸ்வொர்த் இயற்கையிலே

தம்மைக் கண்டு தெளிந்தார்; ஷெல்லி இயற்கை யிலே தம்மை இழந்து இயற்கையைக் கண்டார்' என்று கூறுவார்கள். இம்மகனைப்பெற இத்தந்தை எந்நோற்றான் கொல் என்று படிப்பவரிடம் வியப் புணர்ச்சியைத் தோற்று விப்பதே இவ்வெழுத்தின் ஆற்றலாக எனக்குப்படுகிறது. இது இரங்கற்பா அல்ல; பெருமிதக் காவியம். 'சொல் ஆண்மை'!

எஸ். பொவின் நடையைப் பற்றிச் சொல்லியாக வேண்டும்.

குறுகத் தரித்த குறளின் சொல் கூர்மை. தாம் ஆளும் சொல்லை வெல்லும் சொல் இன்மையறிந்த பயிற்சி. யாழ்ப்பாணச் சிக்கனம். 'தனித்தமிழ்' விலங்கில்லை. எலியட் கூறுவது போல், 'கவிதை என்பது சிந்தனையின் நடை' என்றால், எஸ். பொ எழுதுவது கவிதை.

'மலையடிவாரத்துத் தடாகத்திலே வெண்தாமரை யும், செங்கமலமுமாக... மோஹனச் சிரிப்பின் இரகசியத்தை உதயமாகும் ஆதவனுக்கு மட்டுமே சொல்லிடல் வேண்டும் என்ற வேட்கை உதைத்த காதல் மயக்கத்திலே பொலிவு காட்டுகின்றன. எட்டாத் தூரத்து ஆதவனுக்குத் தாமரைப் பூக்கள் இதழ்கள் அவிழ்த்து அம்மணங் காட்டும் அந்த வேளையைத் தேர்ந்தெடுத்து, காமக் கிறக்கம் கொண்ட வண்டினம், அவற்றின் பீடங்களிலே அளைந்தும், ஆழ்ந்தும், சுயம் இழந்தும், சுதியிலே சுருதி தவறிப் பண்ணிசைத்தும்...சர அசர வேற்றுமை பாராட்டாது, உயிர்ப்பினை அள்ளித் தெளிக்கும் படைப்புக் கர்வம் சிறிதுமின்றி, புதியான கிறுக்கும் சிறுவனின் உவகையிலே, இளஞ் சூரியன் பொன்னிற வண்ணத்தை எட்டும் இடமெல்லாம் அள்ளித் தெளிக்கவும்... அங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழித்த சண்பகக் காட்டிலே அருணோதயந் தான் எவ்வளவு கம்பீரமாக இருக்கின்றது!

சொல் ஒழுங்கை, மாற்றிப் போட்டால் இது புதுக் கவிதை! பாரதிப் பாசறையைச் சார்ந்த ஒரு 'Romantic' கவிஞனின் சூர்ய நமஸ்காரம்!

கதைக் கருவுக்குத் தகுந்தாற்போல், நடையை அமைத்துக் கொள்வது வெகு நேர்த்தி. சம காலத்திய யதார்த்தக் கதைகளில், கதாபாத்திரங்களின் உரையாடல், வட்டார வழக்கில் கவிதையாகப் பொழியும்.

'நீ சொல்லவாறதும் மெய்தான்... இஞ்சாலை வந்து குடியிருக்கிறதுகள் எந்த விளாத்தி? ராத்திரி நல்ல அமளியல்லே? அவனுக்குக் கண்விண் தெரியாத வெறி. அவன் தன்ரைப் பெண்டிலை இழுத்துப் போட்டு மொங்கு மொங்கென்று மொங்கினான். இவளுமோ அடியை வாங்கிக் கொண்டு கொட்டினது நாலு வண்டில் பாரம்'

'உந்தத் தோறைக்கு உது வேணுமப்பு, உவள் கயம்புளியாள். புரியனைவிட்டு ஓடிவந்து, பெரிய கடையிலே கடகம் தூக்கிறாள். ஓமோம். அந்த அஞ்சனந்தாழ்வு மனுஷிக்குப் பக்கத்திலேயே யாவாரம். அடங்கா அமரிலை இப்ப இவனைக் கொழுவிப் பிடிச்சிருக்கிறாள்...' இதைப் படிக்கும் போது, பேச்சில் ஒரு சந்தம் இருப்பது புலனாகும். தாளம் தப்பாமல் பேச்சு நடக்கிறது.

'பல்லாங்குழி ஆடுவதற்குத் தோதான விதி', கோண வகிடு எடுத்தாற் போல் வளைந்து செல்லும் நதி'—என்பன போன்ற, காட்சிகளை உவமைகளில் 'கிளிக்' செய்து காட்டும் லாவகம் இவருக்கே உரித்தானது.

UNIVERSITY OF PERADENIYA
17 - 2 - 1996
LIBRARY
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிக் கதையில், எழுத்து கருத்துடன் இரண்டறக் கலந்து விட்ட அத்வைதம். ஆசிரியர் வாசகர்களுடன் நேரடியாக உரையாடுகிறார். 'மரத்தில் மறைந்தது மாமதயானை' என்பது போல்தான். உணர்ச்சி வெள்ளமாக பாயும் போது, கற்பனைக்கும் அலங்காரத்துக்கும் இடமில்லை. 'Where there is leisure for fiction, there is littie grief' என்றான் ஜான்ஸன். இந்தக் கதையைப் படிக்கும் போது, இது முற்றிலும் உண்மை என்று புலப்படுகிறது. எழுத்தே எண்ணம், எண்ணமே எழுத்து.

சென்னை 18

**இந்திரா பார்த்தசாரதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னீடு

என் எழுத்து ஆண்மையினால் மட்டுமன்றி, என்னை வசப்படுத்திய சில நிர்ப்பந்தங்களினாலும் இத்தொகுதி இவ்வாறு அமைகின்றது.

அவுஸ்ரேலியாவிலிருந்து வெளிவரும் 'அக்கினிக் குஞ்சு'வில் என் சிறுகதைகள் சில, இதழ்தோறும் பிரசுரமாக வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டேன். புதிதாகச் சிறுகதை படைக்க முனைப்புக் கொண்டுள்ள புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களுக்கு இது சகாயமாக அமையும் என்று வாதிடப்பட்டது. நான் மசிந்தேன். 'ஆண்மை' என்ற தலைப்பிலே சில கதைகள் எழுதினேன். அவை புதிய கதைகள் அன்று. ஏலவே பிரசுரமாகிய என் ஆரம்பக்கால கதைகள் சில Archives விலிருந்து மீட்டெடுக்கப்பட்டு, எனக்கு அனுப்பப்பட்டிருந்தன. என் இன்றைய அநுபவத் தளத்தில் நின்று அவற்றைப் புதுக்கி அமைத்தேன். அந்தக் கதைகளே இத்தொகுதியின் கருமையமாக அமைந்தன.

மெல்பேர்ன் நகருக்குச் செல்லும் சந்தர்ப்பங்களிலே பரமார்த்த இலக்கிய நேசன் ந. இளங்கோ வீட்டில் விருந்துண்டு மகிழ்வதுண்டு. அவர் என் தம்பியுடனும், என் மருமகனுடனும் உடன்சாலை மாணாக்கராகக் கல்வி பயின்றவர். அந்தக் கால யாழ்ப்பாண மண்ணின் நினைவுகளிலே சஞ்சரிக்க என்னைத் துணைப் பற்று வார். அவருடை தாயாரும் நல்ல இலக்கியச் சுவைஞர். 'நனவிடை தோய்த'லிலே வரும் ஒட்டை நாகேசர், பேப்பர் செல்லையா, அந்தமான் பொன்னர் ஆகிய பல பாத்திரங்கள் நடமாடிய அந்தக் காலத்திலே அவரும் பெருமாள்கோயில் அயலில் வாழ்ந்தவர். அவர்கள் பற்றி நான் எழுதத் தவறிய, ஆனாலும் இலக்கிய நயமான, பல நிகழ்ச்சிகளை நினைவு கூரு வார். அவர் தந்தை அக்கால அரசியல்வாதிகளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருங்கிப் பழகியவர். அவர் அத்தகைய நினைவு களிலே சஞ்சரிப்பார். மொத்தத்தில், இளங்கோ வீட்டில் இருக்கும் பொழுது, பனி நாட்டிலே வாழும் நிதர்சனத்தினை மறந்து, பனை நாட்டின் புழுதியை சுவாசிக்கும் அந்தக் காலத்திலே மிதப்பேன். ஆகா, அஃது எத்தகைய சுகமான அநுபவம்!

இந்த இலக்கிய யாத்ராவை மேற்கொள்ளுவதற்கு முன்னர், அவர் வீட்டில் இத்தகைய ஒரு மாலைப் பொழுதினைச் சுகித்தேன். இளங்கோ என்னுடைய இலக்கியத் திட்டங்களை ஆவலுடன் கேட்டார். கடைசி யாக, 'உங்களுடைய பிரசுர முயற்சிகளுடன் உங்கள் சிறுகதைத் தொகுதி ஒன்று வெளிவரல் வேண்டும். அதன் பிரசுரத்திற்கு என் சகல உதவிகளும் உண்டு' என்றார். விருந்துண்ட மயக்கத்திலும் அவருடைய ஆசைக்கு மசிந்தேன்.

என்னுடைய நான்கு சிறு கதைகள். அவை ஏலவே இலங்கைப் பத்திரிகைகளிலே பிரசுரமாகியவை. அவை என்னுடைய நல்ல படைப்புகள் என்கிற வாஞ்சை இன்றளவும் என் நெஞ்சில் பசுமையாகப் பதிந்துள் ளவை. புயலிலே நான் இழந்த சொத்துக்களுள் இவையும் அடங்கும். மானிட குலத்தின் ஆண்மை பற்றிய விசாரணையை முழுமைப்படுத்துவதற்கு அக் கதைகள் அற்புதமாகப் பொருந்தியிருக்கும். அவற்றை பத்திரிகையின் பக்கங்களிலிருந்து மீட்டெடுத்து அனுப்பி உதவும்படி என் நண்பர்கள் சிலரைக் கேட்டிருந்தேன். அவர்கள் உதவுவதாகவும் வாக்களித்திருந்தனர். அவை உரிய காலத்திலே வந்து சேரும் என்கிற கற்பனைக்கு மசிந்து, முன்னூறுக்கும் அதிகமாக பக்கங்கள் கொண்ட தொகுதியாக இதனை வெளியிடத்திட்டமிட்டிருந்தேன். அந்தக் கதைகள் இன்றளவும் கிடைத்தில. அவர்களு டைய அசிரத்தைக்கும் என் பொசிப்பின்மைக்கும் மசிந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாண்டு காலத்திற்கு பின்னர், நான் கொழும்பிலே சிலகாலம் தங்கினேன். பழைய எழுத்தாள நண்பர்கள் பலரைச் சந்தித்தேன். இடையில், கொள்கை ரீதியாக ஏற்பட்ட பிணக்குகளை மறந்து, இலக்கிய உலகிலே சல்லாபிப்பது இன்பமாகவும் இருந்தது. ஒரு நண்பன் என் மகன் மித்ர பற்றிச் சொன்ன சில குறிப்புகள் என் மனதை ஆழமாகப் பாதித்தது. இதனால் ஏற்பட்ட என் மன எழுச்சிகளை இலக்கியமாகப் பதித்திடல் வேண்டும் என்கிற ஆவேசம் என்னுள் எழுந்தது. படைப்பிலக்கியப் பணியில் சமத்துவ புத்தியை என் நெறியாகப் பயின்று வந்த நான், இந்த ஆவேசத்திற்கு அடிபணிதல் என் தர்மமாக விடிந்தது. அந்த ஆவேசத்திற்கும் மசிந்தேன்.

சிறுகதைச் சிருஷ்டியில், எனக்கு வயசு நாற்பத்தியேழு. சிறுகதைகளை எழுதி முடித்ததும், அவசர அவசரமாக அவற்றை அச்சிலே பார்த்துவிடும் ஆசைக்கு நான் மசிவதில்லை. அது ஏதாவது ஒரு மூலையிலே தூங்கிக் கிடக்கும். அவற்றை 'ஊறுகாய்' போட்டு வைத்திருப்பதாக வேடிக்கையாகச் சொல்லுவேன். ஆறு மாசமோ, அன்றேல் ஒரு வருஷமோ கழித்து அவற்றிலே என் அக்கறையும் கவனமும் திரும்பலாம். எனக்கு திருப்தி தராத படைப்புகளைக் கிழித்தெறிந்து விடுவேன். என் நேரம் அநமாகியது உண்மையேயாயினும், எனக்கே திருப்தி தராத படைப்புகளை வாசகன்மீது 'கட்டியடித்தல்' நியாயமாகாது. என் மனசு ஏற்றுக் கொள்பவற்றை அடித்துத்திருத்திப் புதுக்கி எழுதுவேன். நான் சில கதைகளை மூன்று நான்கு தடவைகளுக்கு மேலாகவும்திருப்பி எழுதுவதற்கு அலுப்புப்பட்டதே கிடையாது. சிருஷ்டியில் அவசரம் சோம்பல்ஆகியன தவிர்த்து, பொறுமையும் ஈடுபாடும் கடைப்பிடித்து வந்தேன். இதிலுள்ள ஓரிரு கதைகள் ஊறுகாய் போட்டு வைக்கப்படவில்லை. எனவே, அவசரத்திற்கு மசிந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தொகுதியில் இடம் பெறும் 'கதை-15'—கடைசிக் கதை- சற்று நீளமானது. அந்தக் கதையை ஒரே அமர்வில் குந்தி எழுதினேன். எத்தனையோ பிற வேலைப் பளுக்களுக்கு மத்தியில், அதனை நான் அடித் துத் திருத்தவில்லை. நேரம் தோதுப்படவில்லை என்பது மட்டும் காரணமல்ல; என் எண்ணமே எழுத் தாக வேண்டும் என்கிற வெறி. விடுதலை வெறி தொற்றிய வெறிக்குப் பூச்சுவேலை எதற்கு?

இதற்கான முன்னுரையை நண்பர் இந்திரா பார்த்த சாரதி அவர்களிடம் கேட்டேன். அவர் 'ஆண்மை'க்கு மட்டுமன்றி, என் எழுத்து ஆண்மைக்கே ஒரு 'பாயிரம்' பாடியுள்ளார். அவருடைய பாயிரம் இந்த நூலுக்கு ஓர் இலக்கியக் கனதி சேர்க்கின்றது என்பதை உன்னி மகிழ்கின்றேன். அவருக்கு என் மனசார்ந்த நன்றி.

இந்தக் கதைத் தொகுதியைச் சித்திரங்கள் சகிதம் பிரசு ரிக்க எண்ணினேன். சித்திரங்கள் கதைகளின் குறியீடு களாகவும் அமைதல் என்படைப்புக்குத் தோது. ஆசை களை ஓவிய நண்பர் 'மருது'விடம் வெளியிட்டேன். அவர் கைவண்ணம் உள்ளே மட்டுமல்ல, நூலின் அட்டை யாகவும் வனப்பூட்டுகின்றது. என் எழுத்தை அழகு படுத்திய அந்த ஓவியக் கவிஞருக்கும் நன்றி.

இந்த என்னுடைய மூன்றாவது கதைத் தொகுதியையும் தமிழ்வாசகப் பெருமக்கள் வரவேற்றுப் பாராட்டுவார் கள் என்கிற நம்பிக்கை என் வசம்.

18-11-95 எஸ்.பொ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் ஆண்மைப்
பயணத்தை
நினைத்தேன்...

சமர்ப்பணம்

UNIVERSITY OF PERADENIYA
17-2-1996
LIBRARY

என்
ஈஷாவுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதை

UNIVERSITY OF PERADENIYA
17-2-1996
LIBRARY





469044

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலை

**அந்த** மலையைத் தன் வேர்களினாலே குடைந்து, நிலை கொண்டு, செழுங்கிளைகள் பரப்பிய மரத்தின் உச்சாணிக் கொப்பிலே சயனிக்கும் காட்டுச் சேவல் பூபாளம் கூவி எவ்வளவோ நேரம்...

சண்பகக் காட்டினைத் தமது சரணாலயமாகச் சுகிக்கும் புள்ளினம், குறுணிக் குறுணிப் பண் இசைத்து, குஞ்சுக் குஞ்சு இறகசைத்து, திருப்பள்ளி எழுச்சியிலே ஆரோ கணித்து, இன்றைய தினமும் வாழ்ந்திடும் உந்து தலிலே அங்கும் இங்கும் பறக்கின்றன.

மலையடிவாரத்துத் தடாகத்திலே வெண்தாமரையும், செங்கமலமுமாக... மோஹனச் சிரிப்பின் இரகசியத்தை, உதயமாகும் ஆதவனுக்கு மட்டுமே சொல்லிடல் வேண்டும் என்கிற வேட்கை உதைத்த காதல் மயக்கத்திலே பொலிவு காட்டுகின்றன. எட்டாத் தூரத்து ஆதவனுக்குத் தாமரைப் பூக்கள் இதழ்கள் அவிழ்த்து அம்மணங் காட்டும் அந்த வேளையைத் தேர்ந்தெடுத்து, காமக் கிறக்கம் கொண்ட வண்டினம், அவற்றின் பீடங்களிலே அளைந்தும், ஆழ்ந்தும், சுயம் இழந்தும், சுதியிலே சுருதி தவறிப் பண்ணிசைத்தும்... சர அசர வேற்றுமை பாராட்டாது, உயிர்ப்பினை அள்ளித் தெளிக்கும் படைப்புக் கர்வம் சிறிதுமின்றி, புதியன கிறுக்கும் சிறுவனின் உவகையிலே, இளஞ்சூரியன் பொன்னிற வண்ணத்தை எட்டும் இடமெல்லாம் அள்ளித் தெளிக்கவும்... அங்கு கொழித்த சண்பகக் காட்டிலே அருணோதயந் தான் எவ்வளவு ரம்மியமாக இருக்கின்றது!

'காலைப் பொழுதின் கொள்ளை அழகு... திவ்வியத் தின் திருக்கோலம்... இன்பக் கிறக்கம் கலையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது உச்சி வெயில் வந்துவிடும்... வாலிபப் பருவத்து உணர்ச்சிப் போராட்டங்கள், பாலர் பருவத்துக் கனவுக் கற்பிதங்களைக் கலைத்து விடுகின்றன... அப்படியும் அல்ல! கள் வசப்பட்டவர்களும் காதல் வசப்பட்டவர்களும் விந்தைக் கனவுகளிலே மிதக்கிறார்கள்... நான் ஒன்றே ஒன்றுக்காகவே ஜன்மம் எடுத்திருக்கிறேன்... அதுவே என் தவம்... அவருடைய அன்பும், அது தரும் நலமான சுகங்களும் நித்திய அருணோதயமாக அமைய மாட்டாதா?'

தொட்டம் தொட்டமான, தர்க்க இழையினாலே கோர்க்கப்படாத, நினைவுகளிலே மிதந்து கொண்டிருந்தாள். சுழல் காற்று அடிக்கும் பொழுது, உதிர்ந்து விழுந்த சருகுகள், வழியும் திசையும் இழந்து, காற்றின் இயக்கத்திற்கு உட்பட்டு அலையுமே, அதைப் போலத்தான் அவள் நினைவுகளும்! அந்த நினைவுகளிலே மிதப்பது போலவும், அந்த மிதத்தலே சுகாநுபவம் என்பது போலவும் ஒரு பிரமை.

அந்தச் சண்பகக் காட்டிலேதான் அவர்களுடைய சந்திப்புகள் நிகழ்ந்தன. இறக்கைகள் இல்லாத பறவைகள். காலத்தின் சேதனைகளை மறந்த பறப்பு! கீதங்களின் அலைகளிலே, இறக்கைகளை அடிக்காது, வழுக்கிப் பறப்பது போன்ற சுகம். அந்தச் சுகத்தின் உயிர்ப்பையும் சுவையையும் வீணையின் நரம்புகளிலேதானும் மீட்டுதல் சாத்தியமோ?

உம்பாரப் பூக்கள் சுமக்கும் சண்பக மரம் ஒன்றின் நிழலிலே அவள் வஸந்த மண்டபம் நிறுவியிருந்தாள். அதற்குள், புலிஞ்ஞர் குலத்துக் கைவண்ணம் இணைத்து மலர்களினாலும்-காய்ந்த புல்லினாலும் இணக்கப்பட்ட அம்ஸதூளிகா மஞ்சம் வேறு! அவளே சில்பி; அவளே மயன். அதிலே படுத்து, உலகை மறந்து, அவனுடன் பேசுவதுதான் எவ்வளவு இன்பமயமானது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் மெல்லிய, இரகசியம் பேசுவது போன்ற குரலிலேதான் பேசுவான். அந்தக் குரலுக்கு உடலை அளைந்து சிலிர்க்கச் செய்யும் மந்திர சக்தி இருந்தது. குரல் வாகில் மனோரஞ்சிதத்தின் நறுமணம் கலந்து வருவது போலவும். அவளுடைய உள்ளத்தை மயக்கிக் கிறங்கச் செய்யும் போதை அந்தக் குரலிலே மண்டிக் கிடக்கும் மாயந்தான் என்ன? அவன் பேசும் பொழு தெல்லாம், அவளுடைய இதய நரம்புகள் கீதத்தின் அதிஜீவனைப் பிழிந்து கொட்டின. அந்தக் குரலிலே அவள் உலகின் அனைத்து ராகங்களினதும் மகா சுத்தத்தை மாந்தித் திளைத்தாள். சண்பகக் காட்டிலே சஞ்சரிக்கும் புள்ளினங்களின் வகைகள் எத்தனை? அவை எழுப்பும் கோலக் குரல்களின் வர்ணங்களும் தொனிகளும் எத்தனை? அவை அனைத்தும் அவன் குரலிடம் சுருதி சுத்தம் கற்க வேண்டும் என்று நினைத் துக் கொள்வாள். அந்தக் குரலை நினைத்தாலே, அவள் உள்ளத்தின் ஒரு மூலையிலே இன்பச் சுனையின் மெல்லிய சலசலப்பு!

அந்தச் சண்பகக்காடு ஒரு பென்னம் பெரிய யாழ் போலவும். காலைப் பொழுதில், அற்புத படைப்புக் கற்ப னைகளுடன் சோம்பிக் கிடக்கும் பிரம்மாவுக்குத் திருப் பள்ளி எழுச்சி பாடும் எத்தனத்திலே, அந்த அபூர்வ யாழிலே கலைவாணி தன் லலிதகரங்களை அசைத்துத் தெய்வீக இசைபிழிந்து மகிழ்வாள் போலும். அந்த இசையைப் பிரதிபலிக்கும் எத்தனத்திலே குயிலினம் ஈடுபட்டுத் தோற்றுச் சோகிப்பதாகவும் அவள் கற்பனை செய்வாள். அந்த இசையும், தென்றலிலே சோம்பல் முறித்து எழுந்த நறுமணமும் அவளை வசப்படுத்தின. அந்த மயக்கத்திலும், அந்தக் காட்டினை, சொர்க்கத் திலிருந்து நழுவி, ஒழுகி, விழுந்த ஒரு துண்டு என்று அவன் வர்ணித்தது அவள் நினைவுக்கு வந்தது. நெஞ்ச மெல்லாம் அவன் நினைவின் சிலிர்ப்பு! 'சேவல் கூவி, நாலு நாழிகைக் கெல்லாம் வருவதாகச் சொன்னாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பருவத்தில், அந்த மரத்தின் நிழல், இவ்வளவு நீளம் கவிழ்ந்தால், சரியாக நாலு நாழிகை கழிந்தது... மாளிகையிலே உடலின் மென்மைக்கு ஒருத்தி, உடலின் வட்டுறுப்புகளுக்கு ஒருத்தி, கலையின் பக்குவத்துக்கு ஒருத்தி... அத்தகைய விநோத உல்லாசங்களை எல்லாம் துறந்து வருபவன் மகா பித்தன். 'ஆம். நான் பித்தனே. உன்மீது காதல் வசப்பட்ட பைத்தியம்...' என்று பட்டுத்துணி உராயும் மென்மையிலே அடிக்கடி சொல்லுவார்... இன்று மட்டும் ஏன் இந்தத் தாமதம்?' சட்டென்று ஊதல் காற்றின் உதைப்பு! சருகுகள் கிளம்பி, அலைக்கழிந்து, மீண்டும் தரையிலே விழுந்து... அவள் மனத்திலே, சிரசுதயம் செய்த சந்தேகக் காற்றாடி வால் இழந்து, நூல் அறுத்து, குத்துக் கரணம் போட்டுத் தொலை தூரத்திலே...

'என் தேனே, அசோக மலரே! நான் இப்பொழுது பிரிந்து செல்ல அநுமதி. இதுவே நமது கடைசிப் பிரிவாக இருக்கும். நாளை, சேவல் கூவி நாலு நாழிகைக்கெல்லாம் வந்துவிடுவேன். பிறகு... பிரிவே இல்லாத வாழ்க்கை. இந்தச் சண்பகக் காட்டிலே மனித குலத்தின் அபூர்வமான காதல் சாம்ராஜ்யம் ஒன்றினை இருவரும் இணைந்து இணக்குவோம்.'

நேற்று அவன் சொன்ன வார்த்தைகள். அந்த வார்த்தைகள் அவள் உள்ளத்தில் ஒலித்தன. ஒலித்ததாவது? அந்த வார்த்தைகளின் உயிர்ப்பும் உறுதியும் இன்னமும் மடியவில்லை. அவன் நினைவே மாறாத அந்த அற்புத மந்திர லோகத்தில் அவை புதுமை மாறாக் கானமாக ஒலித்துக் கொண்டே இருந்தன.

அவள் அவனைப் பற்றிய நினைவுகள் என்னும் இன்பக் குன்றுகளிலே, பாதங்கள் பாவாத லாவகத்தில், குதித்துக் குதித்துத் தாவினாள். தென்றல், கானம், கள்ளுண்டு சுயமிழந்த பரவசம். எவ்வளவு நேரம் சென்றிருக்குமோ தெரியாது. குதிரையின் இலேசான குளம்போசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டுச் சுயநினைவு பெறலானாள். குப்பென்று அந்தச் சண்பகக் காட்டினைப் பாரிஜாதக் கந்தம் சிறை பிடித்த தைப்போல... திவ்விய நறுமணத்தின் குவிப்பிலே சிக்கி, மூச்சுத் திணறுவது போலவும்!

மரங்களுக்குக் கீழே கோணல் வகிடு எடுத்துச் சமைந் திருந்த ஒற்றையடிப் பாதையில், அவளுடைய கனவு களைக் கலைக்க விரும்பாத பலவந்த மெதுமையில் குதிரை வந்து கொண்டிருந்தது. அதில் அமர்ந்திருந்த அவனைக் கண்டதும், நுகட் பொழுதின் மிக நுண்ணிய பின்னத்திலே, அவள் விக்கித்துப் போனாள். பட்டும், முத்தும், பகட்டும், மினுங்கும் இளமுடியும் இழந்து... மறுகணம், இந்த இழப்புக்கூட, அவனுடைய வசீகரத் தினைத் தூக்கித் துலக்கிக் காட்டியது போலவும்! கூட்டி லிருந்து ஒழுகும் தேன் துளியின் துல்லிய சுத்தம் தோய்ந்த கம்பீரம்.

அவர்கள் தனிமையைக் குலைக்க விரும்பாத ஒரு போக் கிலே, குதிரை எதிர்த்திசையில் மிலாந்தவும், அவன் அவளை நோக்கிவந்தான். நடைபோலவும் இல்லை. கன வுலகிலே வருவது போன்ற, அழுத்தம் இல்லாத மென் மையானஅசைவு. அவன் முகத்திலே அபூர்வ அமைதி அப்பிக் கிடந்தது. மானஹம்ஸ தடாகத்தின் பனிக் குளிர்ச்சியை அவன் விழிகள் உண்டு மிளிர்ந்தன. அரண்மனைச் சுகங்கள் அனைத்தையும் இழந்து வருவ தினால், அவனுடைய முகத்திலே இழப்புகளின் துயர் நிழலாட்ட மிடலாம் என்று, வழக்கத்துக்கு மாறான, பெரிய மனுஷித் தோறணையிலே அவள் கற்பனை செய் திருந்தாள். மலர்க் கொத்தையே முகமாகக் கொண்ட மலர்ச்சியில், புன்னகையே பாவமாகிய திவ்விய கோலத் தில் வந்தான். அவன் நடை சிந்திய கம்பீரம், மூச்சுக் கூடப் படாமலே, அவள் உடலிலே சடைத்த புளகாங் கிதத்தை ஊட்டியது.

''வந்தே விட்டீர்கள்...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நதியின் பயணம் மலையைச் சுற்றி நின்று விடுவதில்லை...கடலுடன் கலத்தல் அதன் ஜன்ம பயன்...''

''உப்புக் கசமான கடல்...''

''முகில், நதி, கடல் எல்லாமே நீரின் ஸ்திதிகள். சம்சார சாகரத்தின் ஓட்டமும் ஸ்திதிகளும்...கடலின் அருட்கொடையே நதியின் ஜீவிதம்.''

இலேசான நாதம் எழுப்பும் குஞ்சிரிப்பு.

''இலட்சங்களுள் ஒருவனே அரச குலத்தில் பிறக்கும் பாக்கியம் பெறுகிறான்... போக சாலையாம் அரண்மனையைத் துறந்து வருவதற்கு...''

''கஷ்டமாக இருக்கவில்லை. ஆயிரமாயிரங்களுள் ஒருவனாய் வாழ்வதை என் மனம் நாடவில்லை... ஒருத்தியின் ஒருவனாய் வாழ்வதிலே அர்த்தமுண்டு என்கிற சித்தத் தெளிவுடன் வந்திருக்கிறேன். விண்ணுலகின் பாரிஜாதத்திலும் பார்க்க, இந்தக் காட்டின் சண்பக மலர்கள் எனக்கு நிறைவினைத் தருகின்றன. அரண்மனையிலே எழும் ஆரவாரமான சங்கீதத்தைப் பார்க்கிலும், உன் நயனம் சொரியும் மௌன மொழி எனக்கு அமைதியைத் தருகின்றது...''

பேச்சிலே அவனை வெல்ல ஏலாது என்பதை அவள் எத்தனையோ சந்தர்ப்பங்களில் உணர்ந்திருக்கிறாள். தோல்வியை ஆரவாரமாக ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தில் பெண்களுக்கு உடன்பாடும் இல்லை.

''ராணிக்கு என்மீது கோபமா?''

சண்பகமலர் ஒன்று உதிர்ந்தது. பலாக்கொட்டைகணியப் புள் ஒன்று, கீழ்க் கிளையிலிருந்து மேல் கிளைக்குத் தாவிற்று. மன மோனங்களை உடைக்காத, புற நிகழ்வுகள்!

''உன்னைப் போலவே, ராணியும் மிக இனிமையானவள். இன்று நான் அவளை இனிமையின் பூரணத்துவத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலே பார்த்தேன். இனிமைகளைப் பிரியும் பொழுது, என் மனம் எப்பொழுதுமே சங்கடப்படும்...''

எதையோ நினைத்துக் கொண்டவனைப் போல நிறுத்தினான்.

விரல் நொடிப்பு நேர மௌனத்தின் பின்னர், அரைத் தரிப்பிலே விட்ட வாக்கியத்தைத் தொடருபவனைப் போல, ''ராணி உன்னை வெறுக்கவேயில்லை. நீ மிகவும் இனியவளாகவும், அன்பை ஈர்க்கவும் சுரக்கவும் வல்ல தூயவளாகவும் இருப்பாயென்று அவள் சத்தியமாகவே நம்புகின்றாள். 'மகனே, நீ அவளை அனைத்துக்கும் மேலாக நேசிக்கின்றாய் என்றால், அவள் அதற்கு முற்றிலும் தகுதியான இனிய பெண்ணாகவே இருப்பாள். நீ காதலிக்கும் அவளையே மனைவியாக அடைந்து, அதே சமயம் ராஜ குடும்பத்தில் ஓர் அங்கத்தவனாகவும் இருந்தால், நான் எவ்வளவு சந்தோஷமாக இருப்பேன்...' குரல் உடைவை மறைப்பதற்கு மௌனியாகி விட்டாள். அதற்குப் பின்னர், கண்ணீர் அவள் பார்வையை மறைத்திருக்கக் கூடும்...'' தன் பேச்சு வம்பு சார்ந்து தடம் பிறழ்வதான உதைப்பில், பேச்சுக்கு முத்தாய்ப்பு வைத்தான்.

கான மழையின் மத்தியிலே, வீணையின் தந்தி ஒன்று அறுந்ததுபோல, அபசுரத்தின் தெறிப்பு.

கத்தும் குயிலோசை இடைநிரவல் செய்தது.

''எனக்கு ராணியைப் பார்க்க வேண்டும் போலவும்...'' வாக்கியத்தினை முடிக்காது நாக்கினைக் கடித்துக் கொண்டாள்.

இந்த ஆசை நிராசையே என்பதை அவள் உணர்வாள். இந்த ஆசைகள் மூட்டம் போட்ட ஆகாயத்தில் தோன்றும்வானவில் போலவும். கலைந்துவிடும் ரம்மியத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டுகள். இதனாலும், மனத்திலே ஆசைக் குமிழ்கள் நியதியுமாகின்றன.

அவள் கண்களிலே கண்ணீர்க் குருத்துக்கள்உயிர்த்தன. ஆதரவும் அபயமும் அளிக்கும் பாங்கில், அவன் அவளுடைய கைகளைப் பற்றினான். தொட்டதும் சுருங்கும் இலைபோல, அவள் அவன் மார்பிலே துவண்டாள்.

UNIVERSITY OF PERADENIYA
17-2-1996
LIBRARY

## மாலை

அவர்களுடைய பிரக்கினைக்கு அப்பாலும் பகலின் பயணம். மாலை நேரத்தின் மங்கலம் அப்பிய திவ்விய திருக்கோலம்.

படுவான் திக்கிலே வானமகள் நாணத்தில் கன்னஞ் சிவந்து கிடக்க... அந்த நாணச் சிலிர்ப்பினை ஒருகரையில் பிரதிபலித்தும், மறுகரையில் எதிரான சோபிதங் கூட்டியும், நெளிந்து, சுழிந்து, மெல்லிய அலைகளை உடல் நோகா லாவகத்தில் உருட்டிக் கொண்டு, கோணா நதி உறுவெலாக் கழிமுகம் நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறது. அந்த ஓட்டத்திலே, இசை தெளிக்கும் சலசலப்பு. வண்ணப் பறவைகள் ஜோடிகளாகவும், கூட்டங்களாகவும் கீச்சுக் குரல்கள் எழுப்பி, அடைதல் நாடிய பறப்பினை மேற்கொண்டன. அந்தக் கீச்சுக் குரல்கள், அவை மேய்ந்து வந்த சோலைகளின் எழில் வர்ணனைகள் போலவும்... தூக்கத்திற்கு முந்திய உடல் முறிப்பு ஓசை போலவும்... நீல நிறச் சிறகடித்துத் தனித்து வந்த பறவை ஒன்று, சடுதியாக ஆற்று நீரிலே செங்குத்தாக இறங்கி, மீன் ஒன்றைக் கவ்விக் கொண்டு மீண்டும் பறக்கலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்பகக் காட்டின் நிழல்கள் எழுவான் திக்கிலே நீண்டு பெரிதாகிக் கொண்டிருந்தன. நிறங்களை நீரிலே தோய்த்துத் தொலைத்தன போன்று, சாந்து பூசிய நிழல்கள் மட்டுமே! ஓவியத்திற்கு ஆழஞ் சேர்க்கும் நிழற்கோடுகளின் அற்புதங் காட்டும் கோலம் அவளை ஈர்க்கவில்லை.

'அவர் எனக்காக முடியையும், சிம்மாசனத்தையும் இழந்து வந்திருக்கிறார். ராஜபோகத்தையும், உடல் நோகா உல்லாசத்தையும் துறந்து வந்திருக்கிறார். அவருடையது ஞானப் பயணமல்ல. அவர் புத்தரு மல்லர். எனக்காகச் சர்வபரித்தியாகத்தை மேற் கொண்ட செம்மல். காமன் வேதத்தைப் பயின்ற அரண்மனை வாழ் பெண்களாலே கொடுக்க இயலாத திருப்தியையும் சுகத்தையும் என்னால் அளிக்க ஏலுமா? அவருடைய அருந் தியாகங்களுக்கு ஈடான பொருளாக என்னால் எப்படி வாழமுடியும்? கடவுளே, அவரை அவரைப் போலவே நேசிக்கவும், உலக இன்பங்கள் அனைத்தையும் அவருக்குத் திரட்டிக் கொடுக்கவும், எங்களுக்கு ஏற்படக் கூடிய இடர்கள் அனைத்தையும் நான் ஒருத்தியாகவே தாங்கவும், எனக்கு வல்லபத்தை யும் சக்தியையுந் தாரும்...' கடவுளுக்கு இப்படி ஓராயிரம் நேர்ச்சை வைக்கும் பவ்வியம். அந்தப் பவ்வியம் மருவிய நினைவுகளிலே சஞ்சரிப்பது விநோதமானது. சுகமான வேதனை போலவும்; ஆக்கினையான இன்பம் போலவும்! எது எதுவென மட்டிட முடியாத அவதியும் அல்லலும்.

அந்தி வானின் அழகுக்கு உறையிட்டு நிறை நிலாவின் பவனி. நிலவின் மோகனத்துக்குள் தன்னை ஒப்புக் கொடுக்க அவன் மறுகினான். தன் வாழ்க்கைத் தடத் தினை முற்றாக மாற்றுவதற்கு ஏதுவாய் அமைந்த அவளைப் பற்றிய நினைவுகளே அவனை நெருக்கின. அவள் பக்கத்தில் இருந்தபோதிலும், அவளைப் படர்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் வைத்து, நினைவுகளினால் அவளை அளைந்து கொள்வது சுகமாகவும் இருந்தது.

'அரண்மனைப் பெண்களிடம் இல்லாத எத்தகைய தனித்துவத்தால், இவள் என்னைத் தன்னவள் ஆக்கிக் கொண்டாள்? துல்லிய அன்பின் நடமாடும் திருதான் இவளா? என் சுகத்திற்காகத் தன் சகலவற்றையும் இழக்கத் தயாராக இருக்கும் பண்பினால் என் உள்ளத்தில் நீக்கமற நிறைந்தாளா? நான் முடிதுறந்து, அவளுடன் காட்டு வாசியாக வாழத் தீர்மானித்துள்ளதாக அன்று நான் சொன்னபொழுது... ''காமினி வேந்தரின் குலவிளக்கு நீங்கள். உங்களைச் சுற்றி அவர் எத்தகு அலங்காரமான சாம்ராஜ்யக் கனவுகளைத் தன் நெஞ்சம் நிறைய உருட்டிக் கொண்டிருக்கிறாரோ?... தகைமைக்கு மீறிய ஆசைகளைத் தன் நெஞ்சிலே வளர்த்த இந்தச் சண்டாளப் பெண் மகாபாவி... உங்களுடைய காதல் நினைவுகளை மட்டும் சுமந்து கொண்டு, கன்னியாக, இந்த வனத்திலே தன்னந்தனியாக, என்னால் வாழ்ந்திட முடியும் இளவரசே! என் காதலுக்காகச் சாம்ராஜ்யக் கடமைகளைத் துறக்காதீர்கள்... உங்கள் வாழ்க்கையில் நான் மகா மகா பூஜ்யம்... என்னை நீங்கள் மறந்து விடுவதுதான் தர்மம்!...'' என்று கூறித் தன் விழிநீரால் என் பாதங்களைக் கழுவினாளே... அரண்மனையின் உட்சூக்குமங்களை இவள் எவ்வாறு அறிவாள்? அன்பு-பாசம்-உறவு-தர்மம்-கடமை ஆகிய சொற்களுக்கு அரண்மனையில், ஆட்சியாளரின் வசதிகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப அர்த்தங்கள் கற்பிக்கப் படுகின்றன என்பது இவளுக்குப் புரியாது. என் இனியவளே! மாசறு அன்பின் உயிர்ப்பே! ஒன்றுமே அறியாத, என் நேசிப்பைத் தவிர வேறு ஒன்றுமே அறியாத, மங்குளிப்பெண்ணே! வாழ்க்கை ஒரு போர்க்களம். ஆசைகளுக்கிடையில் நிச்சய-நித்திய போராட்டம் நடந்து கொண்டே இருக்கும். ஓர் ஆசையின் பலிதத்திற்காக,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னோர் ஆசை பலியாக வேண்டும். அது நியதி. மலர்களின் பலியிலே அத்தர். தமிழரின் சிதையிலே சிங்களவரின் ஏகாதிபத்தியம். உன் அன்பிலே நான் வாழ்க்கைக்கான அர்த்தத்தினைத் தேடுகிறேன் என் பதை அறியாது நீ குழம்பிக் கிடக்கிறாய்...'

தூரத்தில் ஒலித்த ஆந்தையின் அலறல், அவன் சிந்த தனைகளை அறுத்தது. அவள் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதை, அவன் அப்பொழுதுதான் அவதா னிந்தான்.

''ராணி வேறொன்றும் சொல்லவில்லையா?''

''அன்னையா? நிறையச் சொன்னாள். நான் எப் பொழுது வேண்டுமென்றாலும், அரண்மனைக்கு வந்து தன்னைப் பார்க்கலாம் என்றாள்... என் கஷ்டங்களைப் பங்கிடத் தான் ஒருத்தி உயிர் வாழ்வதை மறக்க வேண் டாமென்று சொன்னாள்... ஈற்றிலே சிறு குழந்தையைப் போல தேம்பினாள். தன் கண்ணீர் மழையால், என் னைப் புனிதப்படுத்தி அனுப்பி வைத்துள்ளாள். அவள் உன்னைப்போலவே நல்லவள். நீ ராணியைப் பார்த் திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்?''

அவளுடைய விழியோரங்களிலே துளிர்ந்து நின்ற கண் ணீரை, தென்றல் காற்று உலுப்பி உதிர்த்தியது. அவன் அவளைத் தன் கரங்களுக்குள் வீழ்த்தினான். அவளு டைய கேசத்தினை, வீணையின் நரம்புகளைத் தடவு தைப்போல கோதினான். தன் முகத்திலே குஞ்சிரிப் பினை மலரச்செய்து, அவளுடைய முகத்தைத் திருப்பி, அவள் கண்களையே பார்த்தான். முகத்தின் பேர் பாதியை அடைத்ததுபோல எவ்வளவு பென்னம் பெரிய கருவிழிகள்! அவற்றின் மினுக்கங்களின் மையமாகத் தன் உருவமே உறைந்தும் உயிர்த்தும் இருப்பதை அவதானித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது நேரத்திற்குப் பின்னர், எதையோ நினைத்துக் கொண்டவனைப் போல சொன்னான்:

''என் தந்தையின் கோபத்தை நான் அறிவேன். ஏமாற்றந்தான் அவருடைய சினத்துக்குக் காரணம். அவர் சிறுவனாக இருக்கும் பொழுது என் பாட்டியைப் பார்த்து, 'அன்னையே! ஒரு பக்கம் கடல்; மறுபக்கம் நம்மை அடிமைப்படுத்தும் தமிழர். இவற்றுக்கிடையில் நீட்டி நிமிர்ந்து கட்டிலில் நான் எப்படிச் சயனிப்பேன்?' என்று கேட்டவராம். 'அவர் கருப்பையில் இருந்த பொழுது, தமிழர் எதிர்ப்புணர்வு ஊட்டப்பட்டது' என்று புதிய வரலாறு சோடிக்கும் மஹாவிஹாரத்து மகாதேரர் அன்றொரு நாள் பொச்சடித்துச் சொன்னார். என் தந்தையைச் சூலுற்றிருந்த பொழுது, பாட்டி விசித்திர மசக்கை யாக்களுக்கு உள்ளானாளாம். அவற்றுள் ஒன்று, தமிழனின் தலையைச் சீவிய வாளிலே படிந்திருந்த ரத்தத்தைக் கழுவிக் குடித்ததாம். தமிழனின் ரத்தத்தைப் பாட்டி குடிக்க, என் தந்தை தமிழரைக் கருவறுக்கும் மானவீரராய் பிறந்ததை அந்த மகாதேரர் எவ்வளவு விஸ்தாரமாகச் சொன்னார் தெரியுமா? என் தந்தை அகண்ட சிங்களத்தை நிறுவினாராம். அதனை அகண்ட சாம்ராஜ்யமாகக் கட்டி வளர்க்கவல்ல அதிவீரனாய் நான் வளர்வதை அவர் விரும்பினாராம். நான் இயற்கையினதும் மெல்லுணர்ச்சிகளினதும் உபாசகனாய் வளர்வதைக் கண்டு திகைத்தாராம்...சிங்கள இனத்தின் புனிதவரலாற்றைப்போதிப்பதற்கு விஹாரந்தோறும் அநேக தேரர்கள் தோன்றிவிட்டார்கள். தமிழர்களுடைய இரத்தத்தைக் குடிப்பதன் மூலமே சிங்களர் வீரம் ஓர்மம் பெறுகின்றது என்று அவர்கள் பிரசாரம் செய்யும் பொழுது, என்னுள் எழுந்த அருவருப்பு உணர்ச்சியை நான் யாரிடம் சொல்வேன்? தேரர்களுக்கும் சீலத்திற்கும் இடையிலே தோன்றிய இடைவெளிகள், போதனைகளுக்கும் நிதர்சனங்களுக்குமிடையி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லுள்ள இடைவெளிகள், என் மனத்தினை உலைத்தன... அமைதியையும், வாழ்க்கையின் அர்த்தத்தையும் நாடி, நான் அரண்மனையிலிருந்து, மக்கள் கூட்டத்திலிருந்து, தூரத்தில், மலையடிவாரத்திலுள்ள இந்தச் சண்பகக் காட்டுக்கு வரலானேன்... அமைதியையும் அர்த்தத்தை யும் தேடி வந்த இந்தக் காட்டிலே, என் தேடலின் தேட்டமாய் நீ கிடைப்பாயென்று நான் நினைக்கவே இல்லை.''

பட்டுத்துணியின் உராய்விலே எழும் இனிய குரலிலே அவன் பேசிய போதிலும், அவளுக்குச் சமாதானம் ஏற் படவில்லை.

''தங்களுடைய ஆசைகளை நிலைநாட்டவல்ல வாரிசு களாகவே பெற்றோர்கள் பிள்ளைகளைத் தரிசிக்கிறார் கள்... எங்கள் சந்திப்பும், மனமயக்கமும் சண்பகக் காட் டின் இனிய கனவாகப் பேசப்படட்டும்... எனக்காக நீங் கள் உங்கள் மகத்தான பணிகளை நிராகரித்தல் கூடாது...''

மேற்கொண்டு அவளைப் பேசவிடாது, அவளுடைய இதழ்கள் மீது தன் விரல்களைப் பதித்தான்.

''உனக்காக அல்ல. என்னுடைய விமுக்தியையும் நாடித் தான் நான் இங்கு வந்திருக்கிறேன்... ஆளும் வர்க்கத் தினர் மகா சமத்தர்கள். நான் இல்லாவிட்டால், தங்க ளுக்கு இசைவான இன்னொரு மன்னனை அவர்கள் உருவாக்கிக் கொள்வார்கள். ஏன்? என் சித்தப்பா இல்லையா? முன்னரே அரசுரிமைக்காகச் சண்டை போட்டவர்... இன்று, ஆளும் வர்க்கத்தின் ஆசை களை ஈசுர நியதியாகப் பிரசாரஞ் செய்து, ஆளும் வர்க்கத்திற்கு அதிகாரம் சம்பாதித்து, அந்த அதிகாரக் காங்கையிலே குளிர்காயும் சங்கம் ஒன்று, விஹாரந்தோறும் அவரால் உருவாக்கப்பட் டுள்ளது...என் செல்வமே! இந்த மண்ணை மனசார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசிப்பதற்கு மணிமுடி தரிக்கவேண்டும் என்று நான் நினைக்கவில்லை. இந்தச் சின்னஞ்சிறு தீவுதான் நான் பார்த்த உலகம். எத்தகைய அழகிய உலகம்! இந்த உலகத்திலேதான் மனிதப் பேராசைகள் தாவாத இந்தச் சண்பகக் காடும் இருக்கிறது. இந்தச் சண்பகக் காட்டிலேதான் அன்புக்கே தலைசாய்க்கும் உன்னைப் போன்ற அபூர்வ மலர்கள் தோன்று கின்றன!''

பேச்சுக்கான வார்த்தைகளைச் சோடிக்கும் எத்த னத்தை விடுத்து, நிலவொளியிலே தவழ்ந்து வந்த நறுமணத்திலே மனம் புதைந்து மௌனமானான்.

அவளுடைய முகத்தினைத் தன் கரங்களிலே ஏந்திக் கொண்டான். முழுமதியின் ஒளி அவள் முகத்திலே புதிய ஒப்பனை பூசும் அதிசயத்தில் அவன் மனம் ஒன்றினான்.

## இரவு

**அதிசௌந்தர்யத்** துளிகளைத் தெளித்து, அந்தச் சண்பகக் காட்டினை தெய்வீக ஜலக் கிரீடைக்குள் உட்படுத்திக் கொண்டிருந்தது அழகுநிலா!

நிலாவுக்கும் கள்ளுக்கும் உள்ள உறவென்ன? மனித மனசுகளுக்குப் போதை ஏற்றும் சக்தியை அவை எப்படிப் பெற்றன? பால் நிலவினை அருந்தியதாலா, அன்றேல் அஃது இசைக்கும் செவிப்புலனாகாத தெய்வீக இசையாலா, இந்தச் சண்பகக்காடு சயனக் கோலம் புனைந்துள்ளது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகாயத்திலே வித்தப் பட்டிருந்த எண்ணற்ற நட்சத்திரப் பூக்கள் கண்சிமிட்டிச் சொல்லும் சின்னச் சின்னக் கதைகள் என்ன?

இலையெனாத துடியிடையாள் வீசும் சாமரத்திலே உயிர்பெற்ற இளந்தென்றல் குளிர் அப்பி வீசுகிறது. அந்தத் தழுவலின் இறுக்கத்தைத் தாளாது சண்பக மலர்களின் இதழ்கள், மிக நொய்ப்பமான இசை கக்கி உதிர்ந்து விழுகின்றன. பொன் நிற நாக்குப் போன்ற இதழ்களின் நறுமணம் மனசை மயக்குவதில் கொட்டும் நிலாவுடன் போட்டியிடுவது போலவும். பக்கத்திலே படர்ந்த வாகான கொடியொன்றினை அறுத்து, சண்பகப் பூக்களைத் தொடுத்து அவள் அழகான மாலை ஒன்று இணக்கிக் கொண்டிருந்தாள். அந்த மாலையின் படைப்பிலே திருப்திப்பட்டவளைப் போல, ஒரு முனையைத் தன் கூந்தலிலே சொருகிக் கொண்டாள்.

இந்திர சபையிலாடும் அந்தரலோகப் பெண்கள், இப்படியான நிறைநிலா காலங்களிலே சந்திரக் கதிர்களை ஊர்திகளாக்கிக் கீழிறங்கி, பூலோகத்துத் தடாகங்களிலே ஜலக்கீரிடை செய்து மகிழ்வார்களாம்! அப்படி பூலோகம் வந்து வழி தவறி அலமந்து நிற்கும் அப்ஸரசோ என்கிற கற்பனையைத் தன் கண்களிலே தேக்கி அவளைப் பார்த்த அவனை, இனந்தெரியாத சிலிர்ப்பு வசியப்படுத்தியது.

அவள் கூந்தலிலே சொருகுண்ட மாலையை கசங்காத பக்குவத்திலே கழற்றி, ஒரு கிரீடத்தைப் போன்று அதனை அமைத்து, அவளுடைய தலையிலே சூட்டினான்.

கனவினால் அலைக்கழிவுற்ற புள் கூட்டம் ஒன்று, சிறகடித்துச் சுதாரித்து, மீண்டும் உறக்கத்தில் ஒன்றியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் கண்களைப் பார்த்தபடியே அவள் சிரித்தாள். அந்தச் சிரிப்பிலேதான் எத்தனை புதுமைகள்; எத்தனை சுருதிகள்!

''இந்தச் சண்பகக் காட்டின் இளவரசனால், இந்த மலர் முடியைத்தான் தன் இளவரசிக்குக் கொடுக்க முடியும்.''

''ஆனாலும் எனக்கு இந்த முடிதான் பிடித்திருக்கிறது. ஒவ்வொரு நாளும் புதுப் புது மலர்களைத் தொடுத்துப் புதுப் புதுக் கிரீடங்கள் செய்யலாம். தினம் ஒரு பட்டாபிஷேகம்!...'' குழந்தை உள்ளத்தின் குதூகலம் அவள் குரலிலே கெக்கலியிட்டது.

''தினமும் நிதமும் சண்பக இளவரசிக்குப் பட்டாபிஷேகம் நடத்தும் பாக்கியம் என்னதே...''

அவன் அவளை அணைத்தான். ஏதோ சொல்லத் துடித்த இதழ்களை தன் பட்டு விரல்களால் தடவாத நேர்த்தியில் நீவினான்.

அந்த லளித ஸ்பரிசத்தின் இன்பத்திலே லயிப்பவளைப் போலவும், அவளுடைய பெரிய விழிகள் மேலிமைக் கபாடங்களுக்குள் ஏறிச் சொருகின.

அந்த மென் கிறக்க நிலையிலேயே அவள் பேசினாள்.

''மகாராஜா ஒன்றும் சொல்லவில்லையா?''

''அவரை நான் பார்க்கவில்லை...''

தலையைத் தூக்கி, 'ஏன்' என்கிற கேள்வியைத் தன் விழிகளிலே தேக்கி, அவனைப் பார்த்தாள்.

''அவர் என்னைப் பார்க்கவும் விரும்பவில்லையாம்... தப்புகை யுக்தியோ என்னவோ, வைத்திய ஆலோசனையை நிராகரித்து, ரோகணச் செலவினை மேற்கொண்டிருக்கிறார்...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உங்கள் இழப்புகளை எல்லாம் எப்படி என்னால் ஈடு செய்ய முடியும்?''

''இனியவளே, நான் எதையுமே இழக்கவில்லை. உன் அன்பின் ஒளியிலே என்னை மீட்டெடுத்துள்ளேன் என்பதுதான் உண்மை...''

ஏதோ சொல்ல உன்னிய அவள் நாக்கு அண்ணத்திலே ஒட்டிக் கொண்டது. அவள் தவிப்பை அறிந்தவனைப் போல, அவனே பேசினான்.

''என் தந்தைக்கு அன்பின் சக்தி தெரியாது. காதலை மனிதப் பலவீனங்களுள் தலையாயது என்று அவர் ஏளனஞ் செய்கின்றார்... கழிவுக் கருமத்தின் ஒரு ஸ்திதியே காதல் உணர்ச்சி என்றும், அதற்கு வசதி செய்யும் குமரிக் குருத்துடல் கிடங்குகள் அநுராத புரவில் ஏராளமாக உள வென்றும் அவர் சொன்னா ராம்... அவர் அவதார புருஷராம். தூய சிங்கள ஏகாதிபத்திய வல்லபத்துக்கு உறுதியான அடித்தள மிடத் ததாதகரின் அருட் கொடையாகப் பிறவி எடுத்தவ ராம். இப்படியான ஒரு புதிய சரித்திரத்தை அவர் நிர்மாணிக்கும் தாதுகோபுரங்களினதும் விஹாரங்களி னதும் நிழல்களிலே நித்திய சோம்பல் வாழ்க்கையை மேற்கொண்டுள்ள பிக்குகளும் பிக்குணிகளும் மக்கள் மத்தியிலே பிரசாரஞ் செய்யத் துவங்கியுள்ளார்கள்...''

''வெற்றி மதுவைப் பார்க்கிலும் கடிய போதை வாய்ந்தது, இந்த அவதார புருஷர் என்னும் புகழ் மொழிகள். சித்த பரிசுத்த நெறியில் நிப்பாண அடையும் வெற்றியைப் புத்தர் சாதித்தார். பஞ்ச சீலத்தையும் அட்ட மார்க்கத்தையும் விமுக்திக்கான நியதிகளாக விதித்தார். புத்தரின் பெயரையும், சங்கத்தின் பெயரை யும், உச்சாடனஞ் செய்யும் நமது தேரர்கள், ஆட்சி ளாளர் வர்க்கத்தை உருவாக்கி, அந்த வர்க்கத்தின் அதிகாரங்களின் மறைப்பிலே குளிர்காயத் துவங்கியுள் யார்கள். தானம் பெறுவதற்குக்கூட அவர்கள் உடலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருத்துவதில்லை. அவர்கள் இருக்கும் இடத்தைத் தேடி நெல்லரிசிச் சோறும், நெய்யில் வாட்டிய இறைச்சியும் கிரமமாகச் செல்கின்றன. இந்த உடல் நோகா உல்லாச வாழ்க்கையைக் காலங் காலமாகத் தங்களுடன் தக்க வைத்துக் கொள்வதற்காக, புதிய கற்பனைகள் சோடித்து, அவற்றை வரலாறு என்று சாதிக்கிறார்கள். இந்த மண்ணிலே சிங்களப் பேரின வாதத்தினை புத்தரே நேரில்வந்து ஊன்றியதாகப் போதிக்கிறார்கள். சிங்கள இனத்தின் தூய்மை காக்க, இனப்படு கொலைகள் தக்கன எனச் சொல்கிறார்கள். முதலில் இயக்கர்கள், பின்னர் புலிஞ்ஞர்களும் சண்டாளர் களும்... இந்தப் பட்டியலில் இப்பொழுது தமிழர்களும் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்... அரசன் என்ற பெயரிலே இந்த அநியாயக்காரர்களின் கருவியாகவும் துணையா கவும் வாழ நான் விரும்பவில்லை...''

இடத்தை மறந்து, அவளுக்குச் சம்பந்தமில்லாத அரண் மனை விவகாரங்களைக் கொட்டி விட்டதான குற்ற உணர்வு அவனை வளைத்துக் கொண்டது. அவன் மௌனமானான்.

அவளுடைய கேசம் இரவின் சீதளம் ஒத்தி, காற்று வாக்கிலே பறந்து அவனை வருடிக் கொண்டிருந்தது.

கோணா நதியின் நீரிலே மூழ்கித் தலை நிமிர்த்திய ஓரிரண்டு தவளைகள் கத்தின.

''உங்களை எப்படியெல்லாம் இன்பமாக வைத்திருக்க லாம் என்பதை அறியாது தவிக்கின்றேன்...'' அவளு டைய தவிப்பிலே பாரிய சோகம் மண்டிக் கிடப்பதை அவன் உணர்ந்தான்.

''நான் என் புருஷார்த்தத்தினைந் தேடித்தான் இந்தக் காட்டுப் பகுதியிலே சஞ்சரித்தேன்...ஆளுவதற்கான தகமை, விஹாரம் வாழ் சோம்பேறிகளின் அநியாயக் கோஷங்களுக் கெல்லாம் தலையாட்டுவதுதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றால், அஃது உண்மையில் ஆளுமையல்ல என்பதை நான் அறிவேன். என் ஆண்மையின் தேடலுக்குக் கிடைத்த அற்புதப் பரிசுதான் நீ. கொடுப்பதும் பெறுவதும் ஏகத்துவத்தின் துவித சுருதிகள் என்பது உணரப்படும் அந்த ஆத்மார்த்தஉலகத்திலேதான் ஆண்மையின் அர்த்தம் விளைகின்றது... பிறிதொரு வகையிலே சொல்வதானால், மனிதம் சம்பாவனையாகும் இடத்திலேதான், உண்மையான ஆண்மை சங்கை செய்யப்படுகின்றது...''

புடம்போட்டெடுக்கப்பட்ட மனிதத்துவத்தினாலே கட்டுப்பட்ட அந்த இளம் காதலர்கள், பூவிழிக்கதவுகள் திறந்து ஒருவரை ஒருவர் அள்ளிப் பருகினார்கள்.

அவர்களுடைய தனிமையைக் கெடுக்காத பண்பிலே, சந்திரன் கருமுகிற் கூட்டங்களுக்குள் மறைந்தான்.

''நமக்குக் குழந்தைகள் பிறப்பார்களல்லவா?''

''ஆமாம்...'' இதை அவன் மிகவும் உறுதியான குரலிலே சொன்னான்.

''அவர்களுக்குத் தந்தையின் வம்ஸவழியைச் சொல்லும் உரித்தில்லாது போய்விடுமா? சண்டாளக் குழந்தைகள் என்று ஒதுக்கப்படுவார்களா?''

''இந்தச் சண்பகக் காட்டின் தொட்டிலிலே வளரப் போகும் அவர்கள் நிச்சயம் மனிதர்களாக வாழ்வார்கள்.''

மனிதத்துவத்தை அஞ்சலி செய்யும் அந்தக் காதலர்களை, முகிற் கூட்டங்களுக்கு மேலால், சந்திரன் ஒரு தடவை எட்டிப் பார்த்தான்.

மறதியிலும், அவதியிலும், தூரத்தில் சாமக்கோழி ஒன்று கூவிற்று.

அவன் அவளைத் தன் தழுவலுக்குள் வீழ்த்தி, அவள் இதழ்களிலே முத்தமிட்டான்! ○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதை



UNIVERSITY OF PERADENIYA
17-2-1996
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

**வெள்ளிக்கிழமைகளில்,** பாடசாலை மூடுவதற்கான மணியடிப்பதை, என்னுள் வாழும் அந்தக் 'குள்ளன்' மாணவ ஆர்வத்துடன் எதிர்ப்பார்ப்பது வழக்கம். ஐந்து நாள்களும் அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்ட ஏதேதோ எல் லாம் விடுதலை பெற அருள் பாலிப்பதைப்போல அந்த மணி ஒலிக்கும். Week-End 'குதியன் குத்து'க்குப் பூபாளம் போல, ஏதோ இரைச்சல்களின் சுருதிகளை வழியெல்லாம் கொட்டிக் கொண்டே மாணவர் கும்பல் வெவ்வேறு திசைகளிலே பறக்கிறது. இந்த இரைச்சல் முழுவதையும் மயான அமைதியாக மாற்றும் வித்தையை அந்தோணியார் கல்லூரி Rector வணபிதா சீவரட்ணம் சுவாமியார் எப்படித்தான் கற்று வைத்திருக்கிறாரோ? இரைச்சல்கள் பனங்காடுகளிலே புகுந்து ஓலமிடுவது போலவும், பின்னர் மங்கி ஒடுங்குவது போலவும்...

ஊர்காவத்துறை அமைந்துள்ள அத்தீவு காரை தீவை நோக்கி மூக்கை நீட்டுகிறது. அந்த மூக்கிலே ஒட்டி னாற்போல அமைந்துள்ள Jettyஐ நோக்கி நடக்க லானேன். சோம்பல் குளிக்கும் சுயாதீனம் வெள்ளிக் கிழமை பின்னேரங்களில் என் வசத்து. அயலிலே சிந்திக் கிடக்கும் அழகையெல்லாம் புதிதாகப் பார்ப்பவனைப் போல, பார்வையை அலைய விட்டுக் கொண்டே நடந் தேன். இடையில், மனித சுபாவத்தின் விசித்திரம் பற்றி யும் என் மனசு சலித்துக் கொண்டது. வீட்டின் முற்றத் திலே, என் தங்கை மிகுந்த அக்கறையுடன் மல்லிகைப் பந்தல் ஒன்று வளர்த்திருந்தாள். அது மகா சேட்டம். கொத்துக் கொத்தாக, வெண்மைத் தூய்மையை விசிறிக் கொண்டு மல்லிகை பூத்திருக்கும். அந்த மல்லிகைப் பந்தலினால் வீட்டுக்கு லட்சுமிக் களை வந்து பொருந்தி யதாக அம்மா சொல்லுவாள். அந்த அழகைக் கண்டு கொள்ளாமலிருப்பது என் சுபாவம். அன்றொரு நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலாலி விமான நிலையத்துக்குப் போகும் வழியில் மலர்ந்து கிடந்த அரளி மலர்களைப் பற்றி, அழகின் பரமார்த்த உபாசகனைப் போல, காவிய நயங்குழைத்துப் பேசி மகிழ்ந்தேன்... இன்றைக்காவது இந்தத் துறைமுகத்தின் அழகை...

சுகமான தென்றல் வீசுவதைப் போன்ற நினைவுகள். கட்டுப்பாடுகள் உடையும் பொழுது ஒழுக்கங்களை மீறிக்கொண்டு பீறிடும் உற்சாகம் போலவும், நாலா பக்கமும் குறிக்கோள் இல்லாது என் பார்வை மிலாந்தியது.

''ஸேர்!''

மிகப் பழக்கமான குரலாக இருக்கிறதே என்று திரும்பிப் பார்த்தேன்.

மணியன் அங்கே நின்றான். என் பிரியத்தைச் சம்பாதித்துள்ள மாணவர்களுள் ஒருவன். படிப்பிலே 'ஆகா ஓகோ' இல்லை. சாதா. ஆனால், சதா சிரித்த முகத்துடன், சுருள் கேசம் காற்றிலே அலைய, அவன் மச்சுவாயில் நீரலைகளைக் கிழித்துக் கொண்டு செல்லும் லாவகம் இனியது. உபசாரம் செய்வதில் இளகிய மனசு. உழைப்பாளியும். மொத்தத்தில் அவனை எனக்குப் பிடித்திருந்தது.

''பாதை அக்கரையிலே நிக்குது ஸேர்... வர நேரமாகும். லொறிகளையும் ஏத்தின பிறகுதான் வருவாங்கள். வாருங்கோ, நாங்கள் மச்சுவாயில போவம்...''

அவன் என் பதிலுக்குக் காத்திருக்காமல், கயிற்றை அவிழ்த்து மச்சுவாயை நீர்ப் பரப்பிலே தள்ளி, நீளப் பாய்ச்சலிலே நீரைத் தாண்டி, மச்சுவாய்க்குள் குதித்தான். அந்தக் குதிப்பின் தாக்கத்தை ஆட்சேபிப்பதைப் போன்று ஆடிய மச்சுவாயை லாவகமாக வலித்து, பாதையின் இறங்கு துறையிலே ஓரங் கட்டினான். அவனால் நிதானத்துக்குக் கொண்டு வரப்பட்டாலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரலைகளிலே ஆடிக் கொண்டிருந்த அதிலே எவ்வளவு ஜாக்கிரதையாக ஏறவேண்டி இருக்கிறது! வேண்டுமானால், ஆயிரம் வெண்கட்டிகளைத் தேய்த்து அவனுக்குப் பூமிசாத்திரம் கற்றுக் கொடுக்க என்னால் ஏலும். ஆனால், அந்த மச்சுவாயில் அநாயாசமாக ஏறும் வித்தையை அவன்தான் கற்றுத் தரவேண்டும்!

''வலிக்கவா?'' என்று கேட்டுக் கொண்டே தண்டைக் கையில் எடுத்தவன், மீண்டும் கரையைப் பார்த்தான். மச்சுவாயில் வசதியாக அமர்ந்து கொண்டு, அவன் பார்த்த திக்கிலே திரும்பினேன்.

அவள் அங்கே நின்றாள்.

...அக்கரையிலிருந்த பாதையைப் பார்ப்பதும், மணியத்தின் மச்சுவாயைத் திரும்பிப் பார்ப்பதுமாக...

அட, அவள் அந்த அவளா?

என் நினைவுகள் திமிர்த்துக் குதித்தன... சில மாதங்களுக்கு முன்னர் நடந்த வட்டாரப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியிலே...சந்தேகமில்லை; அவளேதான்!

விளையாட்டுப் போட்டியை நடத்துவதில் ஒத்தாசை செய்யத் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுள் நானும் ஒருவன். மாணாக்கர் போட்டிகள் முடிந்து, பரிசளிப்பு நடைபெறுவதற்கு முன்னர், உத்தியோகத்தர்களுக்கான சில விநோதமான போட்டிகள் நடைபெறும். வட்டார வித்தியாதிகாரி படுத்திய ஆக்கினையில் நான் கலந்து கொண்டது ஊசி-நூல் கோர்க்கும் போட்டி. ஆண்கள் ஊசிகளைப் பிடிக்க, பெண்கள் நூல்களைக் கோர்த்து விடுவார்கள். நான் ஊசியைக் கொண்டு ஓடவும், எதிர் வரிசையில் நூல் கோர்த்துவிடும் பெண்களுள் ஒருத்தியாக அவளும் நின்றாள். தனித்துவமாக, உயிரோவியமாக, அவள் நின்ற தோறணை யாரையும் கவரும்; என்னையும் கவர்ந்தது. அவளைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறி வைத்து நான் ஓட, என்னைக் குறுக்கறுத்துப் பாய்ந்த பிரான்ஸிஸ் மாஸ்டர் அவளைப் பிடித்துக் கொண்டார். அவளுக்குப் பக்கத்தில் ஸ்டீம் ரோலரைப் போல நின்ற அக்னஸ் டீச்சரிடம் நான் ஊசியைக் காட்டிக் கொண்டிருக்க, அவ அதிலே நூலைக் கோர்ப் பதற்கிடையில், அந்தப் போட்டியே முடிந்து விட்டது!

சுத்தமான தேன் துளியை நீரிலே விட்டால், அது குண்டாக, கலையாமல், கரையாமல், மெது மெதுவாக நீருள் அமிழ்ந்து, இறங்கி, அடியிலே படுத்துக் கொள் ளுமே... தேன் துளியின் இனிமையுடன் அவள் சில தினங்கள் என் மனசின் அடியிலே ஒட்டிக் கிடந்தாள். இரவு நேரங்களிலே தசை உபாதைகளுக்கு வடிகாலாய் நிலைத்திட்ட கற்பனா நினைவுக் கனவுகளிலும்... எலிசபெத் டெய்லரோ, ஸோபியா லோறய்னோ... யாரோ ஒரு நடிகையின் முகத்திலே அவள் முகம் Super-Impose ஆகி ஆக்கினைப் படுத்தியதாகவும் ஓர் உதைப்பு! பிரான்ஸிஸ் மாஸ்டரை அணுகி, அவளைப் பற்றி சீரியஸாகவே விசாரிக்கலாம் என்கிற எண்ணங் கூடத் தலை தூக்கியதுண்டு... இடையில் தோழர்கள் வைத்தியும் சண்ணும் முகாமிட்டு நடத்திய சித்தாந்த வகுப்புகளின் ஓங்காரத்திலே, அவளைப் பற்றிய நினைவுகள் மெல்ல வழுக்குண்டு தொலைந்து போயிற்று... போய் வந்த தடத்தையே நாடும் காண்டாமிருகம் போல, என் தசைப் பிடுங்கல்கள் சினிமா நாயகிகளின் முகங்களையும் ஸேப்புகளையும் நாடலாயிற்று...

இந்த நினைவுகள் எல்லாம் வார்த்தைகளிலேதான் ஜவ்வாகச் சப்புப் படுகிறதே தவிர, மற்றும்படி, சுத்த மான தேன்துளி போலவே மனசிலே இறங்கிற்று...

''மச்சுவாய் அக்கரைக்கா?'' வெட்கத்தைக் கிழித்துக் கொண்டு வார்த்தைகள் வந்தன. முதல் அநுபவங்கள் இனியன. அவள் வார்த்தைகள் இனித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நான் சாதாரணப் பயணிதான்; இவனே மீகாமன்...'' என்று வார்த்தைகள் உன்னின. அவை உதடுவரை எட்டிப் பார்த்துவிட்டு அடங்கின. ''பாவம், அவவுக்கும் அவசரமாக்கும்...'' என்று, ஏதோ சொல்லவேண்டும் என்பதற்காக வழிந்தேன்.

மச்சுவாயை மீண்டும் ஓரங் கட்டினான். என்னைப் போன்று சிரமப் படாயல் அவள் மச்சுவாயில் ஏறிக் கொண்டாள்.

நானும் அவளும், 'பிற'கத்தில் அக்கம் பக்கமாக உட்கார வைக்கப்பட்டோம்.

அந்தச் சிரிப்பு மணியத்துக்கு என்றும் மாறாது. அந்தச் சிரிப்பிலே தன் முகத்தை அலர்த்திக் கொண்டு, தண்டின் உதவியுடன் அவன் தண்ணீரிலே போர் தொடுத்தான்!

நெருப்புத் தணலை மடியிலே கட்டி வைத்திருப்பவனைப் போல நான் தவித்தேன். மனசிலே பனிக்கட்டிகளைப் போல உறைந்து கிடக்கும் உணர்ச்சிகளை—

ஊர்காவத்துறை பின்னே சென்றது... நான் கடமை யாற்றும் கல்லூரிக்கு அணித்தாகவுள்ள அந்தோணியார் கோயிலின் கூர்நுனிக் கோபுரம் பின்னேகி ஓடியது. வாழ்நாள் பூராகவும் வயலிலே வேலை செய்யும் அறுபது வயசுக் கூலிப் பெண்ணின் முகத்திலே தெரியும் வெடிப்புகளை, அக்கட்டடத்தின் முகப்பு பிரதி பண்ணி வைத்திருப்பதாக நான் நினைத்துக் கொள்வதுண்டு. இவ்வளவு தூரத்திலிருந்து பார்க்கும் பொழுது, கட்ட டத்தின் பிரமாண்டம் அவற்றை விழுங்கி விட்டது! அது மாலை வெயிலின் மஞ்சளிலே குளித்துக் காயகல்பம் சாப்பிட்டது போலத் தோன்றுகிறது...

மச்சுவாயைத் தாண்டி, குறுக்கு வாக்கில், பெரிய தொரு தோணி நயினாதீவை நோக்கி விரைந்து கொண்டிருந்தது. அதிலிருந்த யாத்திரீகர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'புத்தங் சரணங் கச்சாமி...' என பக்திக் கோஷங்களை எழுப்புவது காற்றிலே மிதந்து வருகின்றது. காற்று உப்பிய பாய்களை அகல விரித்து, அந்தத் தோணி கடற்கோட்டையைத் தாண்டுவது போலவும். அந்தக் கோட்டை யாழ்ப்பாணத்தவர்களுடைய அற்புத கட்டடக் கலைகளுள் ஒன்று. மனித ஆற்றலை இழிவு படுத்தும் தோறணையில், அதைப் பூதங்கள் கட்டி முடித்ததாக வழக்கிலிருக்கும் கதையை நினைக்கச் சிரிப்பு வந்தது.

நாலு பக்கமும் கடல்நீர். ஆனாலும், கரைகளிலே அணிவகுத்து நிற்கும் போர் வீரர்களைப் போன்று தோன்றும் பனைமரங்கள் எவ்வளவு அழகாக இருக்கின்றன! தூரத்திற்கு ஓர் அழகின் பரிமாணம் உண்டு. சம்பந்தா சம்பந்த மில்லாத நினைவுகளுடன், தண்ணீரைக் கையாலே தட்டி, அதன் முத்துக்களை நாலா பக்கமும் சிதறச் செய்தேன்.

என் சிறுபிள்ளை விளையாட்டைப் பார்த்து அவள் என்னைப் பற்றி என்ன நினைப்பாள் என்கிற எண்ணம் கிளை விட்டது.

அவளைப் பார்த்தேன்.

வயசுக்கு ஒத்துப் போகாத என் சேட்டைகளைப் பார்த்தா முறுவல் பூக்கிறாள்? ரோஜாப்பூவின் மலர்ச்சி இரகசியத்தையல்லவா நான் அவள் முறுவலிலே தரிசித்தேன்? முறுவலிலே சிக்குண்ட என் சிரத்தை, அவள்மீது முழுமையாகப் படர்கின்றது. அஃது என்னுள் ஒரு காவியச் சுவைஞனைப் படைப்பது போலவும்.

அழகிகளுள் அவள் அழகி! கைதேர்ந்த மலையாளச் சில்பி தந்தத்திலே செதுக்கிய ரதிச் சிலைக்குக்கூட அவளிடம் இருந்த நெளிவு சுழிவுகள் இருக்காது. பிரம்மன் சாப்பிடப் போகும் அவசரத்தில் அவளைப் படைக்க வில்லை. அறுசுவை உணவிலே பசியாறிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர், இனிமையிலே தோயும் இசையை சரஸ்வதி பிழிய, அந்த இனிமைக்கு சவாலாக தன் சிருஷ்டித் திறன் அனைத்தையும் அவளுடைய உருவத்தின் வடிப்பிலே செலவு செய்திருந்தான். இடையை மிக நுட்பமாக்குவதற்குக் கோலிய குருத்துத் தசையை எறிய மனமின்றி, கலாநயத்துடன் மார்பிலே அப்பி, அதன் மதாளிப்புக்குப் புதிய கனதி சேர்த்திருந்தான். அந்த விழிகளிலே உயிர்ப்பையே ஒளியாகக் கலந்திருந் தான். அந்த விழிகளைப் படைத்த பின்னர்தான் பிரம்மன் குவளை மலர்களைப் படைத்ததுடன், மானின் மருளலையும் திருத்தியிருப்பான்! இருள் பயங்கர மானது. அஃது அவள் இமைகளிலே ஒட்டியிருப்பது எவ்வளவு ரம்மியமாக இருக்கின்றது!

அவளுடைய சௌந்தர்யத்திலே இப்படிப் பிசினாக ஒட்டுதல் கீழ்த்தரமானது என்று என்னுள் வாழும் 'புத்திஜீவி' அதட்டினான்.

தண்ணீர் பட்டதும் நெருப்புத் தணல் சீறுமே; அதைப் போல என் சிந்தனைகள் சீறி, மறுகா அவிந்தன போலவும்.

''ஸேர், உங்களுக்குச் சுக்கான் பிடிக்கத் தெரியுந் தானே? இந்தப் பக்கமாக...'' என்றான் மணியம்.

''சுக்கான் பிடிக்கத் தெரியாமலா முப்பது பேருடைய சுக்கான் என் கையில்?''

அவள் என் நகைச்சுவையை ரஸிப்பாள் என்கிற ஆசை என்னுள் முகை வைக்க, அவளைப் பார்த்தேன். அவள் பார்வை வெகு தொலைவிலே சிக்குண்டது போல... அடி வானிலே பூமியும் வானமும் சங்க மிக்கும் கோலம்.

பச்சையும் நீலமும் கலந்த நீர்ப் பரப்பிலே மச்சுவாய் தத்திச் செல்கிறது. இடையிடையே உருக்கிவிட்ட வெள்ளியைப் போன்று அலைகள் மோதும். மோதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைகளிலே மச்சுவாய் ஊஞ்சலைப் போல ஆடிச் செல்வது எவ்வளவு சுகமாக இருக்கிறது?

உருப்போட்டு, மேடை உடைதறலிலே நழுவிப்போன பேச்சை, மீண்டும் நினைவுக்குக் கொண்டுவர முயலும் பாடசாலை மாணவனைப் போல, ஒரு தடவை தொண்டையைச் சரி செய்தவாறு பேச ஆரம்பித்தேன்.

''நீங்கள் கன்வென்...''

''யேஸ்... கன்வென்டில் படிப்பிக்கிறன்...''

''நான் அந்தோணியார் கல்லூரி ஆசிரியன். பெயர் பாலகிருஷ்ணன்...''

''தெரியும்... என் பெயர் புஷ்பம்.''

''நீங்களும் யாழ்ப்பாணந்தான் வருகிறீர்களா?''

'ஆமாம்' என்பது போல, தலையை அசைத்துவிட்டு, ஏதோ சொல்வதாக இருந்தாள்.

...மச்சுவாய் காரைநகர்க் கரையைத் தொட்டது!

**பஸ்** யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டது.

ஏனைய 'ரூட்' பஸ்கள் நவாலி வழியாகவும், சித்தங்கேணி வழியாகவும் ஊரெல்லாம் மேய்ஞ்சு கொண்டு போகும். நேரே யாழ்ப்பாணம் போவதற்கு கல்லுண்டாய் பஸ் தான் வசதி; கெதி. கந்தையா அண்ணர் வெற்றிலை குதப்பியபடி 'டிக்கற்' கிழித்துக் கொண்டிருந்தார். படித்தவர்களும் விஷயம் தெரிந்தவர்களும் அண்ணரை 'தோழர் கந்தையா' என்று அழைத்தால் சந்தோஷப்படுவார். தர்மகுலசிங்கம் காலத்திலிருந்தே தான் சமசமாஜக் கட்சி அநுதாபி என்று உரிமை பாராட்டுவதில் பெருமை. பஸ் கொம்பனிக்கும் நல்ல பிள்ளை. இல்லாவிட்டால், கல்லுண்டாய் 'ரூட்'டை அவருக்குச் சீதனமாகக் கொடுத்திருக்குமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மாஸ்டரும் டீச்சரும் அந்த சீட்டில சோடியாய் உட்காருங்கோ...'' என்று அவர் சொன்ன பொழுதுதான், புஷ்பம் டீச்சர் என் பின்னாலேதான் வந்து கொண்டிருக்கிறாள் என்பதை உணர்ந்தேன்.

பஸ்ஸிலும் அக்கம் பக்கமாக அமர்ந்து பயணத்தைத் தொடர்வது எனக்கு மகிழ்ச்சியே!

பல்லாங்குழி விளையாட்டுக்கு உகந்த வீதியிலே, பஸ் சில வேளைகளிலே பந்து போல 'பம்ப்' செய்தும் ஓடிக் கொண்டிருந்தது...

வயலின் அத்தனை சாங்கங்களையும் பெற்றிருந்த கரம்பு நிலம், எதிர்த்திசையில் ஓடுவதான ஜாலம். புல் காய்ந்து கருகிக் கிடந்தது. பசுமை இழந்து, புழுதி படிந்து, சோடை பற்றியிருந்த மரங்கள் நிழற் சித்திரங்களைப் போல எதிர்ப் பயணம் பயிலுகின்றன.

பார்வையை பஸ்ஸின் ஜன்னல் வெளியே துழாவ விடுகிறேன். அந்த சாகஸம் என்னைப் பற்றிய ஓர் உள் தரிசனத்துக்கு உதவுகின்றது.

பிரமச்சாரியத்தை உதற ஏலாது வாழ்கின்றேன். என் வயசை ஒத்தவர்கள் பிள்ளையும் குட்டியும் என அலுத்துக் கொள்ளவும் செய்கிறார்கள். அலுத்துக் கொண்டாலும், இல்லறத்திலே சுகம் இருப்பதான அவர்களுடைய நம்பிக்கை ஈரம் உறிஞ்சி வாழ்கின்றது. தங்கையின் சாட்டிலே, என் கல்யாணத்தை ஒத்திப் போடுவதில் பிரச்சினை இல்லை. தங்கை வீடெல்லாம் பசுமை தெளித்த சிட்டு. எப்பவும் துருதுரு. ஓய்வை மறுக்கும் இளமை. என் மாணாக்கரின் அப்பியாசப் புத்தகங்களை எல்லாம் மணி மணியாகத் திருத்தி வைப்பான். என்னைப் பார்ப்பதற்கு யார் வீடு தேடி வந்தாலும், ஆவி பறக்கும் தேநீர் வந்துவிடும். பொழுது சாயும் வேளைகளிலே அவளுடைய தெய்வ நம்பிக்கையின் சாட்சியாக சூடமும் சாம்பிராணியும் போட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டு மணக்கும். முற்றத்திலுள்ள மல்லிகைப் பந்தலின் வளமும் நறுமணமும் அவளுடைய உயிர்ப்பின் அடையாளங்களே. அவள் இப்பொழுது கணவனுடன் சென்று விட்டாள். வேறொரு வீட்டிலே இனிமையும் மணமும் பரப்பும் தத்துவக்காரி.

அளள் சென்றதினால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு ஒரு Replacement தேவை என்பது போன்ற அவதி அம்மாவுக்கு. சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுதெல்லாம் உடுவிலில் இருந்து வந்த சம்பந்தம் பற்றியும் அச்சுவேலிப் பகுதியாரின் நெருக்குதல் பற்றியும் நைஸாப் பேச்செடுப்பாள். ஒரு புறாமுக்கலே என் பதில். தனி ஆவர்த்தனம் என் வரையில் எடுபடாது என்று நினைத்தாளோ என்னவோ, இப்பொழுதெல்லாம் 'ஒன்றுவிட்ட' அண்ணரான 'சுழியன்' தம்பையரையும் துணைக்குச் சேர்த்திருக்கின்றாள். அவர் மட்டும் 'மகா பாரத' காலத்தில் வாழ்ந்திருந்தால், அந்த பீஷ்மரே கல்யாணத்துக்கு மசிந்திருப்பார் என்பதுபோல இவருக்குக் கியாதி. 'பெத்தவளெல்லே... மனுஷருக்கு நோய் நொடி சொல்லிக்கிடக்கே?... உன்னை ஒருக்கா மணப் பந்தலில பார்க்கிற தவிப்பு அவளுக்கு இருக்காதே?... நாங்கள் பார்க்கிற பொடிச்சியள் சரியில்லை எண்டால் வாயைத் திறந்து சொல்லன்... உன்ரை வழியில வாறதுக்கு எங்களுக்குப் பூரண சம்மதம்...' என்று பல 'மோடி'களிலே அவர் ஒரே விஷயத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். அவர் பிடிக்குள் சிக்காது நானும் வழுக்கிக் கொண்டிருக்கிறன்.

இந்த புஷ்பத்தைப் போன்ற ஒருத்தியை என் முன்னால் நிறுத்தியிருந்தால், 'சுழியன்' தம்பையர் தமது காரியத்தைச் சுலபமாகச் சாதித்திருப்பாரோ?

புஷ்பத்தின் முகத்தைப் பூரணமாகப் பார்க்க வேண்டும் என்கிற ஆசை, அவிழ்த்துப் போட்டுவிட்டு என்மனசிலே கூத்தாடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை நான் கவனிக்கவே இல்லை. வலப்பக்கமாக, கீழ் உதட்டின் கீழே இருக்கும் கறுப்பு மச்சம், குன்றிமணிப் பருமனில், எவ்வளவு அழகாக இருக்கின்றது! அதற்குத் தோது சேர்ப்பது போல, இடப்பக்கக் கன்னக் கதுப் பிலே இரண்டு முகப்பருக்கள், மாதுளம் முத்துக்கள் இரண்டினை ஒட்டி வைத்தது போல! கேசத்தைப்பின்னி அந்த 'வடைக் கொண்டை' போடுவதற்கு இருபது கொண்டை ஊசிகளையும், ஒரு மணி நேரத்தையும் செலவு செய்திருப்பாள். சிங்களப் பொற்கொல்லர் கை வண்ணம் செப்பும், அலர்ந்த தாமரை வடிவத்தில் அமைந்த அந்தக் கம்மல்கள் அவள் செவிகளிலே எடுப் பாக ஜொலித்தன. வடிவான, ஆனாலும் சகாய விலை யிலே கிடைக்கும் சேலை. இடையை ஓவென்று காட் டாமலும், கர்நாடகமாக மறைக்காமலும்... உடைய லங்காரத்திலே ஆங்கிலக் கல்வியின் நாகரிகம் நளின மாக இழையோடியது. நீலநிறச் சேலைக்கு ஏற்றாப் போல மஞ்சள் நிற மாங்காய் டிசைன் போட்ட 'பேர்ள்' சில்க் துணியிலே சோளி போட்டிருந்தாள். அந்த மதாளித்த அங்கத்தை அமுக்கி வைக்கும் ஆக்கினை யினாலோ என்னவோ, கமக்கட்டுப் பகுதியில் இரண்டு மூன்று தையல்கள் அறுந்து கிடந்தன...

குறுக்கறுத்து பிரான்ஸிஸ் மாஸ்டர் ஊசியுடன் ஓடுவது போலவும்...

இடது மணிக்கட்டில் சிறிய லேடீஸ் வாட்ச். வலக்கை யில் இரண்டு தங்க வளையல்களும் எட்டு ரப்பர் காப்பு களும்; மொத்தம் பத்து! அவள் கைகளிலே வைத்துப் புரட்டிக் கொண்டிருந்த புத்தகங்கூட ஓர் அலங்காரப் பொருளின் அமைதியையே பெற்றிருந்தது.

மிக நொய்மையான 'செண்ட்' வாசம் கசிகிறது. அவள் பக்கமிருந்துதான்! சோளிக்குள் வெளியே தெரியும்படி யாக வைக்கப்பட்டிருந்த 'ஐரிஸ்' கைக்குட்டையி லிருந்துதான் அது வருகிறது என்ற உண்மையைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்றே அவகாசம் எடுத்துத்தான் என்னால் உணர முடிந்தது.

பஸ்ஸின் ஓட்டுநர் Inside Review Mirror இல் பார்த்த படி, கந்தையா அண்ணருக்கு ஏதோ சொல்ல, இரு வரும் அவுட்டுச் சிரிப்பிலே குலுங்கவும்...

...நான் அவசர அவசரமாக என் பார்வையைப் பிடுங்கி பஸ்ஸுக்கு வெளியே எறிந்தேன்.

பஸ் புன்னாலைப் பாலத்தில் ஓடிக்கொண்டிருந்தது...

நேர் வகிடு எடுத்ததைப் போன்று நீரைப் பிரித்துச் செல்லும் இரண்டு மைல் நீளமுள்ள பாலம் அது. இரண்டு பக்கமும் விரிந்து கிடந்த பரவைக் கடலிலே மனித உருவங்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்தன. இடப் பக்கம் உயரக் கடல். மீன் பிடிக்கும் அந்த உருவங்கள்...வெகு தூரத்தில் ஐந்து கோடுகளினாலும் ஒரு வட்டத்தினாலும் கீறப்பட்ட Sketches போல மங்கலாகத் தோன்றின.

நீரிலே குளித்து வந்த காற்று 'ஜில்' தடவி வீசியது. 'ஐரிஸ்' கைக்குட்டை முனையில் தோய்ந்த அத்தர் மட்டுமல்ல... தாழம்பூ மணமும்! அவள் சேலை அதன் உற்பத்தி ஸ்தானம்... காற்றிலே அலையுண்ட அந்தச் சேலைத் தலைப்பு, என் முகத்திலே 'கீச்சமூச்சம்' காட்டி... மறைவு விலகிக் கிடந்த இடை என்னைப் பார்த்து என்னமாய்ச் சிரிக்கிறது! பிரம்மா, நீ எப்படி யடா இந்த இடையைச் செதுக்கினாய்?

என் பார்வை அவள் இடையைச் சுட்டிருக்குமோ?

என் முகத்தை அளைந்து கொண்டிருந்த சேலைத் தலைப்பை வலித்து, சேலையைச் சரி செய்வது போல என்னைப் பார்த்தாள்...காற்றின் ஹுங்கார உதைப் பிலே, சேலைத் தலைப்பு அவள் பிடியிலிருந்து விடு பட்டு, மீண்டும் என் முகத்திலே கால் உதைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாடவும்... பஸ் பள்ளத்திலே விழுந்து குலுங்கவும்...சோளிக்குள்ளிருந்து இரண்டு முயற்குட்டிகள் துள்ளுவது போல, தனத் திரட்சிகள் உயிர்ப்புச் சௌந்தர்யம் சிந்தவும்... மகா அந்நியோன்யமான உறவிலே பிணைக்கப்பட்டவர்கள் போலவும்... இந்தக் கலாதிகளிலே, சோளியின் கமக்கட்டில் மேலும் இரண்டு தையல்கள் அறுந்துவிட்டன போலவும்...

என்னுள் வாழும் ஊத்தையனுக்கு மகா கொண்டாட்டம்!

அம்மணமாக்கிப் பார்க்கும் ஊத்தையனின் அவதியிலே வெட்கப்பட்டவனைப் போல, என்னுள் வாழும் 'புத்திஜீவி' விழித்துக் கொண்டான்.

என்னுள்—மனசுக்குள்—பல நான்கள் வாழுகிறான்கள்.

அவர்களுள் 'புத்திஜீவி'யாக ஆரவாரங் காட்டும் நானையே, என் ஒரிஜினல் நானாகப் பிரகடனப் படுத்துவதே என் வாழ்க்கை என்று நம்புவனும்! அந்தப் புத்திஜீவிக்கு, சமுதாயப் புரட்சியிலே பரமார்த்த ஈடுபாடு. ஏகாதிபத்திய ஆட்சியின் பின்னர் நிலப் பிரபுத்துவ அமைப்பினாலும், தரகு முதலாளிகளின் கும்மாளத்தினாலும் சமுதாயம் சீணித்துச் சீரழிந்து கிடக்கிறது. அதன் ரட்சிப்பிற்காகப் பாட்டாளி வர்க்கம் போர்க்கோலம் பூண்டு புரட்சியைத் தோற்றுவிக்க வேண்டும். இந்தப் புரட்சிக்கான சரியான மார்க்கத்தை மார்க்ஸும் லெனினும் மகத்தான முறையிலே மனித குலத்துக்கு வகுத்துத் தந்துள்ளார்கள். மார்க்ஸிஸ-லெனினிஸ சித்தாந்தம் மகத்தானது மட்டுமல்ல, மகா சிக்கலானதும். தோழர்கள் வைத்தி-சண் ஆகியோருடைய வழி நடத்துதலில், அதன் சூக்குமங்களை அவிழ்த்து ஞானப்பிரகாசம் பெறுவதிலே மகா கவனம் ஊன்றியவன் அல்ல; அதற்கும் மேலே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்ஸிஸத்திலே போதமடைந்தவன் என்கிற பாராட்டும் பெற்றவன். அந்தப் புத்திஜீவி, போத மடைந்த தொண்டனல்ல. மார்க்ஸிஸ சித்தாந்த போதத்தினைப் பரப்பும் ஆசான்; தலைவனும்! புரட்சித் தீப்பந்தங்களைத் தூக்கவல்ல கரங்களின் எண்ணிக்கையைப் பெருக்கும் மாபெரும் அறிவுப் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானச் சித்தனும். வர்க்க பேதமற்ற சமத்துவ சமவுடமைச் சமுதாயம் ஒன்றின் மூலம் பூலோகத்திலே எவ்வாறு சொர்க்கம் மலரும் என்பதை மணிக்கணக்காகப் பேசி எண்பிக்க வல்லவனும். அடிமட்டத் தோழர்கள் அவனை அதிசயத் துடனும் பிரமிப்புடனும் தரிசிக்கிறார்கள். இவற்றால் ஏற்படும் கர்வத்திலே உள்ள சுகத்தைப் புசிக்கும் ராங்கிக்காரனும்!

என்னுள் வாழும் அந்த ராங்கிக்காரனைப் பிரீதி செய்யக்கூடிய பெண்ணைச் 'சுழியன்' தம்பையரால் நிறுத்த முடியுமா?

'பேசிச் செய்யும்' கல்யாணத்துக்கு மசிந்தால், நிலப் பிரத்துவ அமைப்பின் ஆசாரங்களுக்கு இசைந்தொழுகி வாழும் பழைய பஞ்சாங்கமாகத் தீவிர கட்சித்தோழர்கள் என்னைத் தரிசிக்க மாட்டார்களா? உண்மையான புரட்சிவாதி பழைமையின் அத்தனை விலங்குகளையும் உடைத்தெறிய வேண்டாமா? படலைக்குப் பின்னால் வேறொரு வாழ்க்கையும், பொது வாழ்க்கையில் வேறு ஆசாரங்களும் பேணி, இரட்டை அளவுகோல்களைக் கடைப்பிடித்து வாழும் தோழர்கள் பற்றி அதி புரட்சித் தோழர்கள் கடுமையாக விமர்சனஞ் செய்வதை நான் அறிவேன். அவர்களுடைய விமர்சனம் நியாயமானது என்று கட்சி பேசியுமிருக்கிறேன். எப்படிப் பார்த்தாலும் Arranged Marriage ஒரு புரட்சிவாதியினுடைய Image ஐ உயர்த்தமாட்டாது என்பதைப் புத்திஜீவி புத்தி பூர்வமாக விளங்கிக் கொண்டான். இதிலே பிறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொரு சங்கடம் இருப்பதையும் *அவன் உணராமல் இல்லை.

பேடுகளை மிதிக்கச் சேவல் ஒன்று துரத்தித் திரிவதைப் போன்றதுதான் காதல் Exercises என்று அந்தப் புத்திஜீவி நினைத்திருந்தான். தமிழ் சினிமாவில் வந்த 'டூயட்' காட்சிகளின் தாக்கத்தால் ஏற்பட்ட பிரமையோ என்பதை நிதானிப்பதற்கு அவனுக்கு நேரம் கிடைக்க வில்லை.

எது எப்படி இருந்தாலும், பெண் ஒருத்திக்குப் பின்னால் அலைந்து திரிவதையும் காதல் ஓர் அம்ஸ மாகக் கொண்டுள்ளது. ஒரு பெண்ணுக்குப் பின்னால், அவள் ஏதோ விதத்திலே மனசைக் கவர்ந்து விட்டாள் என்பதற்காக, வழிந்து கொண்டு திரிதல் ஆகுமா? எவ்வளவோ மனித உழைப்பு நேரம், இதற்காகச் செலவாவது தகுமா? ஒரு மங்குளிப் பெண்ணைத் துரத்தித் திரியும் ஒருவனை புத்திஜீவி என்று யார் மதிப்பார்கள்? காதலிலே சில தரவுகளை வைத்துக் கொண்டு, வேறு சில சமன்பாடுகளை ஊகித்தல் வேண்டும். ஊகிக்கப்படும் சமன்பாடுகளிலேதான் காதல் வாழ்க்கை ஆரம்பமாகின்றது.

மத்திய குழு உறுப்பினர்களான பெருந்தோழர் இருவர், காதலித்துத் திருமணம் செய்து கொண்டார்கள். அதுவும் எத்தகைய காதல்? ஒன்று ஐரோப்பியக் காதல். மற்றையது அந்தக் காலத்து இலங்கைப் பல்கலைக் கழகத்தின் Original காதல். இனங்களுக்குள் ஆன கலப்புத் திருமணங்கள்! பின்னர், என்ன நடந்தது? அந்தக்கல்யாண வாழ்க்கைகள் கட்சிப்பணிகளுக்கு ஒத்து வராததை உணர்ந்து, அவர்களைப் பிரிந்து வாழ்கிறார் கள். அவர்களுடைய குடும்ப வாழ்க்கை மகா பரிதாபம். இருந்தாலும் அவர்கள் எத்தகைய புத்தி ஜீவிகள்! அவர்கள் ஆதர்ஷத்துக்கு உரியவர்கள். அவர்களுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுகள் இன்றி கம்யூனிஸம் இலங்கை மண்ணிலே வேரூன்றியும் இருக்க மாட்டாது. தெருவின் மறுமுன்னையில் காத்து நிற்கும் புரட்சியை வழி நடத்தும் இளைய தலைமுறைத் தலைவன் ஒருவன், இடையிலே காதலிக்கும் கூத்துகளிலும் ஈடுபடுதல் எவ்வகையிலும் பொருந்தாது...

பக்கத்தில் இருக்கும் இவள்?

புத்திஜீவியின் பிரதாபங்களை நினைப்பதற்கு இதுவா நேரம்?

இத்தகைய சந்தர்ப்பங்கள் நினையாப் பிரகாரமாக வந்து வாய்க்கும்.

அவளுடைய பார்வை என்மீது படர்வதான ஓர் உணர்வு உறுத்தவும், அவளைப் பார்த்தேன்.

சோளிக்குள் சொருகப்பட்டிருந்த கைக்குட்டையை எடுத்து, தனது முகத்தை இலேசாக ஒற்றிக் கொண்டிருந்தாள். அவளுடைய ஓர விழி வீச்சு என்னை மேய்ந்து கொண்டிருந்தது.

அவளுடைய நயனமொழி சொல்லும் செய்தி என்ன?

எதிராக ஒரு 'லொறி' வேகமாக வரவும், சடன் பிரேக்குடன் றோட்டின் ஓரத்துக்கு வெட்டி எடுத்த சடுதியிலே, உடைந்து நொருங்கி விடும் சாகஸத்தில் பஸ் குலுங்கியது.

அந்தக் குலுக்கலிலே வேர் கிளப்பப்பட்டவளைப் போல சீட்டிலே தன் பிஷ்டம் பொருந்த என் ஆதாரம் தேவை என்னும் பாங்கில், என்மீது அவள் நெஞ்சு தோய மோதினாள்... அவள் சோளிக்குள் வாழும் அந்த முயல்கள் என் நெஞ்சிலே பதிந்து சொன்ன இரகசியம் என்ன?

அந்தக் கணத்தின் பின்னத்திலே நான் ஒப்புக் கொள்ளுகின்றேன்; பெண்ணின் ஸ்பரிசத்துக்கு மகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரசக்தி உண்டு! தேகம் புல்லரிப்பது என்பது இது தானா? அமுத சுவையின் பிழிவிலே வசம் இழந்தேன். தேனிலே விழுந்து விட்ட ஈயின் தவிப்பு.

மனித வாழ்க்கையின் சில அபூர்வ அநுபவங்கள், அறிவுப் பிரயத்தனங்களால் அன்றி, ஏதேச்சையான விபத்துக்களால் ஏற்படுகின்றன என்பதை இனங்காணு வதிலுள்ள சுகத்தையும் உணருகிறேன்.

உரசல் சுகத்தை நான் கள்ளத்தனமாகச் சுவைப்பதை ஆட்சேபிக்கும் கோலத்தில், அவள் முகத்தின் முகப் பருப் பிராந்தியத்தில், இலேசான குங்குமம் கொட்டுண்டு அழிந்து கொண்டிருக்கின்றது.

பாதையை ஒட்டி வளர்ந்த 'கறாளை'ப் பூவரச மரத்தி லிருந்த காகம் ஒன்று கத்தியது.

குறுக்கறுத்து பிரான்ஸிஸ் மாஸ்டர் ஊசியுடன் ஓடுவது போலவும்...

இரட்டைப் பனையடியைத் தாண்டி பஸ் ஓடிக்கொண் டிருப்பதை நிதானிக்க முடிகிறது.

கடற்கரை ஓரத்தில், தன்னந்தனியாக, இரண்டு பனை மரங்கள் எத்தனை ஆண்டுகளாக அந்நியோன்யமாக வளர்ந்து கொண்டிருக்கின்றன! என் அப்பா காலத் துக்கு முன்பே அது இரட்டைப் பனையடி.

அந்தப் பனைகளுக்கு அப்பால் பறவைக் கூட்டம் ஒன்று புலப்பெயர்ச்சிப் பறப்பிலே ஈடுபட்டிருக்கின்றது.

...வானம் பார்த்த பூமி எதிராக ஓடிக் கொண்டிருக் கிறது.

ஓட்டுமடச் சந்தி வெகு தூரத்திலே தெரிகிறது.

முட்டாசுக் கடைச் சந்தியிலில் நான் இறங்குவது வழக்கம். அது வசதியும்.

'இப்ப நேரத்தோடு பொழுது படுகுது.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...இந்தக் கலாதிகளுள் என்னுள் வாழும் ஊத்தையன் விழித்துக் கொண்டான்!

கொழும்பிலே வானொலி நிகழ்ச்சி ஒன்றுக்குச் சென்றிருந்த சமயம். வவுச்சர்கள் கவுண்டரில் காசாகக் கிடைக்க, வழமையான கூத்து. நடிகர் ராஜேஸ்வரன் பலவீனமான என் Spotஐ நைஸாகத் தொட்டு விட்டான். என்னுள் அடைபட்டு வாழ்ந்த அந்த ஊத்தையன் பூரண சுதந்திரம் அநுபவிக்க அடம் பிடிப்பதான உதைப்பும்...

டாக்ஸியைப் பிடித்து, அவனுக்குப் பழக்கமான அங்கொடையிலுள்ள அந்த வீட்டை அடைந்தோம். வீட்டுக்காரி கிழவி... குசுகுசுக் குரல்களும் சைகைகளும்! சிறிது நேரத்திலே கிழவியின் சமிக்ஞை. 'ஐஸே, துணிஞ்சு வந்தாச்சு. Enjoy Life as it comes... உள்ளே சிங்களம்-புஷ்பகம்-சாவகம் ஆகிய தீவுகள் பலவுண்டு. எதிலே எக்கொடி நாட்டுவது என்பது உங்கள் Selection ஐப் பொறுத்தது...' என்று பாரதியையும் கொச்சைப் படுத்தி, நாடக பாணியில் வசனம் பேசினான். நான் அறைக்குள் நுழைந்தேன். சிங்களத்தி குஸுமாவாம். மாகோ ஸ்டேஷனில் இளநீர் விற்க வரும் பெண்களுள் ஒருத்தியாகத் தோன்றினாள். கமலா என்று அறிமுகப் படுத்தப்பட்டவள், தோட்டக்காட்டு வாழ்க்கையிலிருந்து விடுதலை நாடி வந்து, வழுக்கி விழுந்தவளாக இருக்கலாம். மூவருள் ருக்யாவுக்குத் தனியான எடுப்பு. சாவகம் என்று சொன்னாலும், சில தலைமுறைகளுக்கு முன்னர் அரபு இரத்தமும் கலந்தது போன்ற வாகான தோற்றம். பின்புறமிருந்து இழுக்கப்பட்ட தாவணியை வலத்தோளுக்கு மேலாக எடுத்து மார்புகளை மூடிவிட்டதுபோல போக்குக் காட்டினாள்... மூன்று இனங்களைச் சேர்ந்த பெண்கள், உடலை விற்கும் தொழிலில் ஒரே வர்க்கமாகி இந்த அறையிலே நிற்கிறார்கள். இவர்களுடைய மானங்களைக் காப்பாற்றுவதாக இவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் சார்ந்த இனங்களின் அரசியல் தலைவர்கள் மேடை தோறும் பேசுவதைப்பற்றியும் இவர்களுக்கு அக்கறை இல்லை. உடல்களைப் போன்றே வாக்குகளும் விற்பனைப் பொருள்களே...என் சிலமனைக் காணாது கிழவி எட்டிப் பார்த்தாள். என் விழிகள் ஓர் அசட்டுத் துணிச்சல் பெற்று ருக்யாவைச் சுட்டின...

...ருக்யாவும் நானும் அந்த அறைக்குள் தனிமையில் விடப்பட்டோம்.

பாய் ஒன்றை எடுத்துத் தரையில் விரித்து என்னைப் பார்த்தாள். நான் பணத்தை நீட்டினேன்.

'பணமா பெரிசு?' என்று சற்றேமுணகிக் கொண்டாலும், பணத்தைச் சரி பார்த்து, 'லேஞ்சி'யிலே முடிந்துகொண்டாள்.

தன் உடைகளை ஒவ்வொன்றாகக் களைந்து, அவை கசங்காத பக்குவத்தில் மடித்து ஓர் ஓரத்திலே வைத்தாள்.

மிகவும் மெதுவாக. பொறுமையைச் சோதிக்க கூடிய அளவு ஆறுதலாக! என் ஆண்மைத் தவிப்புக்கு 'பெற்றேல்' ஊற்ற வேண்டும் என்கிற ஒரு வகைக் 'கேந்தி'யை ஒவ்வொரு செயலிலும் குழைத்தவளாக. தன் தொழில் மூலங்கூட கவர்ச்சி மேடுகள் இறுக்கந் தளராது நிமிர்ந்தே நிற்கின்றன என்பதை விலாசப் படுத்த விரும்புவளாக... அவள் சிரிப்புக்குப் பெயர்: கொல் நகை! பெண்மை முழுத்துவம் அம்மணத்திலே முப்பரிமாணம் பெறுகின்றது என்பதை விளக்குவதைப் போலவும்!

ஓர் உடலை அந்தக் கோலத்தில் அன்றைக்குத்தான் முதல் தடவையாகப் பார்க்கிறேன்... பயம். இனந்தெரியாத குழப்பம்; இலேசான நடுக்கம். உணர்ச்சிகளுடன் பீறிட்டுக் கொண்டு அறிவும்...நேரம் காலம் பார்க்காது புத்திஜீவி விழித்துக் கொண்டான். அவளுடைய உடலையும், உழைப்பையும், வாழ்க்கையையும் முதலாளித்துவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்புச் சுரண்டுகிறது! நான் முதலாளித்துவ அமைப்பின் ஒரு கருவி. இவளுடைய கூலியில் கண்ணுக்குப் புலனாகாத பெருந் தரகனுக்கு எவ்வளவு? வீட்டுக்காரக் கிழவிக்கு எவ்வளவு? இவளுக்கு எவ்வளவு?... காலம் காலமாக மகா அந்தரங்கமானதும், மகா புனிதமானதும் என்று சொல்லப்படும் புருஷன்-பெண் உறவு இங்கே... இவள் யார்? ஒரு வடிகால்; என் உபரி நீரை அப்புறப் படுத்த உதவும் ஒரு மதகு! இத்தகைய நினைவுகள் குதியாட்டமிட, என் முகம் வேர்வைக் காட்டில் தொப் பட்டமாகிறது. என் பயமும் தயக்கமும் அவளுக்கு விளங்கியிருக்க வேணும். 'நான் நல்ல சுத்தம்...வாங்க இருக்கலாம்...' வியாபார நாணயத்தைப் பற்றி இராஜேஸ்வரன் சொல்லியிருந்தான். உடலுறவுக்கு ஆன்மீகப் பரிமாணம் உண்டு என்பதை லோகாயுத வாதிகளும் ஏற்றுக் கொள்ளுகிறார்களா?... என்னை அணைத்து, தழுவி, தன் விரல்களை என் மேனியிலே நண்டூரச் செய்து, மூல விக்கிரகத்தை நோக்கிச் சறுக்கிய பொழுது... 'நான் நல்ல சுத்தம்' என்ற சொற்கள் என் செவிப் பறைகளிலே இரைகின்றன! இவள் பறங்கிப் புண் பரப்பும் ஏஜன்ஸியல்ல என்பதற்கு என்ன உத்தரவாதம்?... சே, இது என்ன வேலை? கம்யூனிஸ அணியிலுள்ள, மனிதகுலத்தின் மேன்மைக் காகவே உழைக்கும் எத்தனையோ புனிதர்களுடைய ஊழியத்துக்கு மாசு கற்பிக்கும் செயல்! முதலாளித்துவ அமைப்பு தன் வசதிக்காகச் செய்துள்ள ஒரு வகைச் சுரண்டலுக்கு நான் துணை போகலாமா? ஒரு வேகம்! அவளைத் தள்ளிக் கொண்டு, மசுவாதக் கிடங்கான அந்த வீட்டை விட்டு வெளியேறி, இராஜேஸ்வரன் பின்னால் வருவதையும் கவனிக்காது, எதிரில் வந்த டாக்ஸியை மடக்கி ஏறிக் கொண்டு...அன்று விட்டேன் கொண்டலடி!

இது நடந்து ஆறேழு ஆண்டுகளாகி விட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுள் வாழும் ஊத்தையன்கூட 'கற்பிழக்காது' பிரமச்சாரியாக வாழுகிறான் என்று பெருமையாக நினைத்துக் கொள்ளவும் முடிகின்றது.

அடுத்த சந்தியிலே கம்யூனிஸ புரட்சி மட்டுமல்ல, என் முப்பத்தி மூன்றாவது பிறந்த நாளும் காத்துக் கொண்டு நிற்கின்றது.

ஓட்டுமடம் சந்தியிலே, பஸ் எண்பது பாகையில் வெட்டித் திரும்பியது.

அந்தத் திரும்புதல் சிருஷ்டித்த பெயர்ச்சியிலே இருவருடைய பிஷ்ட பாகங்களும் நெருக்கமாக ஒட்டி உறவாடின. பஸ் நேர்நிலை அடைந்த போதும்... அந்த அசின உரசலையும், உடல் வெப்பக் குளிர் காய் தலையும் இருவரும் மோஹிப்பது போலவும்...

இந்தச் சுகத்திலே ஊத்தையனைப் பற்றி அநுதாப மாகவும் நினைக்கத் தோன்றுகின்றது. என் புத்திஜீவி ஏமாப்புடன் வாழவும், என் 'கற்பு' சோரம் போகாது நிலைக்கவும் உபகாரியானவன் அந்த ஊத்தையன் என்கிற நன்றிச் சேவிப்பும். அவன் இல்லாது போனால், என்னுள் அகங்காரங் கொண்டுள்ள 'நான்' அழிந்து போயிருக்கலாம். ஊத்தையன் மகா ஜாக்கிரதைக்காரனும். யாரும் நுழைய முடியாத தனிமையில்— கக்கூசில் அல்லது ஜாமம் தாண்டிய மையிருளில்—மட்டுமே விழித்துக் கொள்ளுவான். அடி மட்டத் தோழர்களுடன் சமத்துவம் பாராட்ட, கலரி மகாஜனங்களுள் ஒருவனாய்ச் சென்று சினிமா பார்ப்பது வெகுஜன முலாம் பூசப்பட்ட தந்திரோபாயம், புத்தி ஜீவிகள் கூட்டத்தில் கடுமையான விமர்சனங்களுக்கு மத்தியிலே—அங்கீகரிக்கப்பட்ட ஒன்று. இன்றைய முதலாளித்துவ அமைப்பிலே பாட்டாளி மக்களுக்குக் கிடைக்கும் மலிவான பொழுதுபோக்கு கலரி வகுப்புச் சினிமாதான் என்கிற கற்றுணர்ந்த விளக்கமும் தரப்

பட்டது. ஒளியினால் உருவாக்கப்படும் சினிமாவை ரஸிப்பதற்கு இருள் இன்றியமையாதது! ஆங்கிலப் படத்தின் எலிசபெத் டைலர், ஸோபியா லொறேயின், இந்திப் படத்தின் மதுபாலா, தமிழ்ப் படத்தின்... (பெயர்கள் இரண்டா, மூன்றா?)... யாராக இருந் தாலும் ஊத்தையன் மோப்பமிடும் பெண்மையின் குறியீடுகளுக்கு, அவர்கள் திரையிலே உதிர்க்கும் கவர்ச்சி நிறைவாகவே பயன்படும்... மனசிலே சினிமா நாயகிகளின் கவர்ச்சி உருவங்களை நிறைத்துக் கொண்டு... 'He goes to bed with a Sex problem wakes up with solution in hand' என்று இன்னொரு படு ஊத்தையன் உதிர்த்த அநுபவ வாக்கியத்தில் அமைதி கண்டு...

இந்த SEX ரூபனான ஊத்தையன் ஏனையோருக்கு அரூபியாய், உள்ளுக்குள் மூர்த்தியாய், சுயம்பு வான லிங்கமாய், சொர்க்கத்தின் 'பீட்ட'ராய், வடி காலின் சூக்குமமாய், கற்பிதங்களின் மோஹனமாய், மூளியாய், ஸகலிதமாய், விகாரமாய், அருவருப்பாய், சுகமாய், கனவாய், கனதியாய், பிரம்மச்சாரியத்தின் பாதுகாவலனாய், ஆண்மையின் கற்பாய், புத்திஜீவியின் அருட் கொடையாய், எதிரியாய், நண்பனாய், ஏஜமானாய், ஏகனாய், மீண்டும் சூன்யமாய், அரூபி யாய்...எத்தகைய, எத்தனை அவதாரங்கள்!

பஸ்ஸுக்குள் உத்திகளின் பெருக்கம்...

அவளுடைய கைக்குட்டை எப்படி என் காலடியில் வீழ்ந்தது?

அதனை எட்டி எடுப்பதற்கான எத்தனத்தில் அவளு டைய கால்கள் என் பாதங்களுக் கிடையில் புகுந்து...

இந்த உரசல் உணர்வுகளைக்கூட நான் இழந்ததினால் சாதித்தது என்ன என்கிற விசாரமும் புகுந்து கொள்ள...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மென்மையான ஸ்பரிசம் ஏற்படுத்தும் லாகிரியில் மிதப்பதும் சுகமாக இருக்கிறது!

''முட்டாசுக் கடைச் சந்தி!'' என்று கந்தையா அண்ணர் கூவியதை நான் செவிகளிலே வாங்கிக் கொள்ளவில்லை...

நான் சிறுவனாய் இருந்த பொழுது அகஸ்தீன் சுவாமியார் சொன்ன கதையொன்று ஞாபகத்திற்கு வந்தது. சிறுவன் ஒருவன் அவரை விதையை நிலத்தில் ஊன்றினானாம். அடுத்த நாள் எழுந்து பார்த்தபொழுது, அவரைச் செடி முளைத்து வானத்தைத் துளைத்திருந்ததாம். அவன் அதில் ஏறி...

என்னுள் வாழும் ஊத்தைக் குள்ளன், அவள் மீதுள்ள மோஹம் என்ற மரத்தில் ஏறி...

அந்த மோஹம் மகா மனித இயல்பு என்பது போலவும்.

புத்திஜீவி சேடம் இழுக்கின்றான்...

கல்யாண ஆசையுடன் ஒருத்தியைப் பார்ப்பது புதிய அநுபவமாகவும் இருக்கிறது. இயல்பானது போலவும்... கைக்குட்டையை எடுத்து அவளிடம் கொடுக்கிறேன்.

''தாங்ஸ்...'' அதைப் பெற்றுக் கொள்ளும் பொழுது அவள் விரல்கள் என் விரல்களுக்குச் சொன்ன இரகசியம் என்ன?

'The best things in life are free...' என்ற பாடலை அந்த விரல்கள் மீட்டினவா? 'தாங்ஸ்' எதற்கு?

குறுக்கறுத்து பிரான்ஸிஸ் மாஸ்டர் ஊசியுடன் ஓடுவது போலவும்...

யாழ்ப்பாணம் பஸ் ஸ்டாண்டில் பஸ் தரிப்பு நிலை அடையவும், நிஜ உலகத்திற்குள் வழுக்கி விழுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் இறங்கி வருவதற்காகக் காத்து நிற்கிறேன். வேறு ஏதோ பராக்கு என்கிற நடிப்பு. அவள் என்னை நோக்கி வருவது போலவும்.

''பிள்ளை...'' என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்க்கிறாள்.

அவளை அழைத்த வயோதிக மாது, ஒரு சிறுவனைக் கையில் ஏந்தி நின்றாள். அந்தச் சிறுவன் கிழவியின் பிடியைப் பிய்த்துக் சொண்டு, ''மம்மி!'' என்று மழலையிற்கூவி, புஷ்பத்தின்மீது தாவ முனைகிறான். என்னைப் பார்த்து முறுவலித்தபடி, புஷ்பம் அந்தச் சிறுவனைத் தன் கைகளிலே ஏந்தி, அணைத்தபடி, அவனுடைய கன்னங்களில் 'இச்சு' முத்தங்கள் வைக்கிறாள்.

என் கன்னங்களிலே ஊறும் எதையோ துடைக்கும் அவதி ஏற்பட்டாலும், அந்தக் கைக்குட்டை அவளுடையது!

சீமைக் குடிவகைகள் விற்கும் சாய்ப்பின் சுவரிலே பல விதமான விளம்பரச் சுவரொட்டிகள்.

'பல்லாயிரக் கணக்கான ரஸிகர்களுடைய வேண்டுகோளுக் கிணங்கி மீண்டும் வெள்ளித் திரைக்கு வருகிறாள்' என்ற அறிவிப்புடன் பழைய படம் ஒன்றின் புதிய வெளியீட்டிற்கான பெரிய போஸ்டர் ஒன்று ஒட்டப்பட்டிருக்கிறது.

படு கவர்ச்சி போஸிலே, போஸ்டரின் பெரும் பகுதியை விழுங்கி, கதாநாயகி நிமிர்ந்து நிற்கிறாள்.

'ஓடுமாம்... பத்து வருஷத்துக்கு முந்திப் பார்த்த படம்...' என்ற நினைவுடன் மீண்டும் ஒரு முறை போஸ்டரைப் பார்க்கும் பொழுது, அவளுக்குக் கீழே இருந்த கதாநாயகிகளின் படத்தின்மீது சாணி அப்பப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சாணி அடியால், நாயகியின் காம்பீர்யம் உயர்ந்துள்ளது!

நடக்கத் துவங்கினேன்.

சீவரட்ணம் சுவாமியாருக்காக 'சத்தியவேத பாது காவலன்' பழைய பேப்பர் ஒன்றினால் உறையிடப் பட்டிருந்த, லெனினின் 'கிராம ஏழை விவசாயிகளுக்கு' என்ற புத்தகத்தினை ஆதர்ஷத்துடன் தடவிக் கொடுக் கிறேன்.

நாளைக்கு தல்லாலையில் cell கூட்டம் என்று தோழர் கே. டானியல் சொல்லி வைத்தது நினைவுக்கு வருகின்றது... ○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

**கதை**



UNIVERSITY OF PERADENIYA
17-2-1996
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'கதிர்காமக்** கந்தனே' என்று வாய் 'புசத்த' முருகேசர் மறுபக்கம் புரண்டு படுத்தார். சில காலமாகவே அவருக்கு மனசு சரியில்லை. ஏதோ அச்சம்; பயங்கள். இவை எதனால் என்று தெரியாத ஆக்கினை வேறு. தூக்க நிலையில் ஏதேதோ கனவுகள். அர்த்தங்கள் பொருத்திப் பார்க்க முடியாத குழப்பம். நினைவுகளும் ஒழுங்காக இல்லை. வல்லை வெளியைப் போல மனசில் ஒரு வெறுமை. அந்த வெறுமையிலும், மனக்குழப்பங் களுக்கு மத்தியிலும், பூரணத்துக்குத் தாமே பூரணப் பாதுகாப்பு என்கிற உறுதியிலிருந்து மட்டும் அவர் தளரவே இல்லை. 'இப்படி ஒரு பிறவியைப் பெத்துப் போட்டேனே' என்று அரற்றி, கண்ணீரிலே தன் பாவங் களைக் கழுவ முயன்று, உக்கி வருத்தக்காரியாகி, அவரைத் 'தாலியறுத்தவ'ராக்கி மனைவி பரலோகம் சேர்ந்துவிட்டாள். வருஷம் இரண்டு. 'இவளுடைய வாய்க் கொழுப்புக்குத்தான் இவள் இந்தப் பிறப்புப் பிறந்திருந்திருக்கிறாள்' என்று கூடப்பிறந்த அக்காளே அவளுக்கு வக்கணைகள் தெளித்து, கட்டியவனுடைய குடும்ப மானத்தைச் சுமக்கப் போய்விட்டாள். இடை யிலே செல்லையர் பேசி வந்த சில சம்பந்தங்களும், அவளைக் 'கேளாக் கேள்விகள்' கேட்டு, அவமானப் படுத்திய பின்னர்தான் சறுகிப் போயின. இவை அனைத் தையும் தாங்க முடியாத ஓர் அந்தர நிலையிலே உயிரை மாய்ச்சுக் கொள்ளுறதுதான் ஒரே வழி என்று ஓடிப் போய் கிணற்றிலை விழுந்தவள். 'கிட்டத்தட்டப் பிரேத மாத்தானே கிணத்தில இருந்து தூக்கினனாங்கள்?' சும்மா கிடந்த ஊர் வாய்க்குப் பூரணம் கிணத்தில விழுந்தது அவல் போட்டதுபோல! இந்த ஊர்ச்சனம் ஆரைத்தான் வாழவிட்டிருக்கு? அப்பவும் செல்லையர்தான் மலை போல பக்கத்தில நிண்டவர். 'பிள்ளையையும் கூட்டிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு ஒருக்கா கதிர்காமம் போயிட்டு வா' என்று அவர் தானே அனுப்பி வைச்சவர்?உண்மையில கோயில் எண்டா கதிர்காமம். கங்கை எண்டா மாணிக்கக் கங்கை. அங்க வைச்சு எத்தனை புத்திமதிகளை அவர் பூரணத் துக்குச் சொன்னார்? 'எடி புள்ளை, இந்த லோகத்தி லையே நீ ஒருத்திதான் எனக்கு இருக்கிறாய். என் உயிர் உள்ள மட்டும் உன்னை வைச்சுப் பராமரிப்பன். உனக்கொரு வாழ்க்கை ஏற்படுத்தித் தராமல் கண்ணை மூடவும் மாட்டன். இனி நீ ஒரு நாளும் தற்கொலை செய்யிற எண்ணத்தை நினைச்சும் பார்க்க மாட்டன் எண்டு இப்ப இந்தக் கதிர்காமத்தான் ஆணையாச் சத்தியம் செய்து தா!' கேட்டதும் பூரணம் காலைக் கட்டிப் பிடிச்சுக் கொண்டு அழுதாள். பாவம் அவள் ஒரு குழந்தைப்பிள்ளை. விருத்தறியாதவள். 'அப்பு கண் மூடு மட்டும் நான் இசக்குப் பிசக்காய் ஒண்டும் செய்ய மாட் டன்!' பிறகுதான் அவள் ஊருக்குத் திரும்பியது. ஊருக்கு வந்த பிறகு அவளில ஒரு மாறுதல். மூலையில இருந்து யோசிக்கிறது இல்லை. வாழ்க்கையில நம்பிக்கை துளிர் விட்டதுபோல ஒரு செந்தளிப்பு! முருகேசரின் அன்பு மட்டுமே தன் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கப் போதுமானது என்பதுபோல ஒரு வைராக்கியம். 'பாவம் பொடிச்சி. அவளுடைய வாழ்க்கை எப்பதான் விடியப் போகுதோ?' என்று அவருடைய மன உதடுகள் அரற் றிக் கொண்டன.

'கொக்கரக்கோ...'

கூவுவதற்கு முன்னர் சேவல் தன் இறக்கைகளைச் சிலிர்த்து அடித்துக் கொண்ட சத்தங்கூட முருகேசருக் குக் கேட்டது. வீட்டுக்குப் பின்னால் காடு பற்றி வளர்ந் திருந்த அந்த முள் முருக்கம் மரத்திலேதான் இப் பொழுது சேவல் 'ராத் தங்கல்' வைத்துக் கொள்கிறது. பூரணத்துக்காக அவர் 'நேர்த்திக்கடன்' வைக்காத ஒரு கோயில் பாக்கியில்லை. அந்தச் சேவல் சுன்னாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயனாருக்கு நேர்ந்து விட்டது. பகலெல்லாம் ஊரா வீட்டுப் பேடுகளை மேய்ச்சுத் திரிந்து விட்டு, ராத் தங் கலுக்குச் சொல்லி வைச்சாப் போல முருங்கை மரத்தில அடையும். படலையில நின்று பார்த்தாலும், முருங்கை யின் கொப்புகள், வீட்டின் முகட்டுக்கு மேலாக, ஆலவட் டம் குத்தியதுபோல தெரியும். காலையிலே சேவல் கூவு வதைக் கேட்கும் பொழுதுதான், அது உயிர் வாழும் சங்கதியும், ஐயனாருக்கு வைத்துள்ள நேர்ச்சையும் அவர் நினைவுக்கு வரும். 'இந்த முறை அதைக் கொண்டு போய் பலிக்குக் கொடுத்திடுவம். தெய்வ கடன் பொல்லாதது' என்று நினைத்துக் கொள்வார். ரயில் ஆறரை மணிக்குப் பிறகுதான் ஸ்டேஷனுக்கு வரும். அவசரம் ஒன்றும் இல்லை. முருகேசர் ஸ்டேஷ னுக்குப் போகாவிட்டாலும், செல்லையர் நேரே வீட் டுக்கு வந்திடுவார். வரச் சொல்லிக்கூட அவர் எழுத வில்லை. இந்த ரயிலில வாறதாக ஒரு தகவல். வழக்க மாகக் கொழும்பிலிருந்து வந்தால், தன்னுடைய வீட் டுக்குப்போய் கைகள் ஆறித்தான், இஞ்சால வருகிற வர். நேரே இங்க வாறது எண்டால்? கதிர்காமத்துக்குச் சென்று வந்தபிறகு,பூரணம் பற்றிய பேச்சுக் கால்களை அவள் கேட்கும் படியாகப் பேசுவதைத் தவிர்த்தே வந் தார். ஸ்டேஷனுக்குப் போய்ச் செல்லையரைச் சந்திக் கிறதுதான் வடிவு. மரியாதைக்கு மரியாதையாகவும் போயிடும். விஷயங்களைக் காதும் காதும் வைச்சது போல பேசியும் கொள்ளலாம். செல்லையர் கொழும்பி லிருந்து வரும் பொழுது நம்பிக்கைகளைக் கொண்டு வரத் தவறுவதில்லை. பல பொய்த்தும் இருக்கின்றன. ஆனாலும், நம்பிக்கைகளிலே பற்று வைக்காது சூன்யத் திலே ஆழ்வதையும் அவர் விரும்பவில்லை. செல்லை யரின் வார்த்தைகள் பொய்யாகும் வரையிலும், அவற்றை வேத வாக்காக ஏற்றுக்கொள்வதிலே, வாழ்க் கையிலே ஒரு பிடித்தம் வந்து சேர்வது போலவும் அவர் உணர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஓமோம். இனி ஆரச் சோர ஒவ்வொரு அலுவலாகப் பார்த்தால், நேரம் சரியாக இருக்கும்' என்கிற நினைவுடன் எழுந்து பாயிலே குந்தினார். ஆனாலும், கண்களை விழிப்பதிலே பஞ்சி! குருட்டாம் போக்கிலே, தலைமாட்டிலே தடவி தீப்பெட்டியை எடுத்தார். குச்சி கிழித்து தீ ஜனித்ததும், அவர் கண்கள் திறந்தன. பக்கத்தில் இருந்த கை விளக்கை ஏற்றினார். அவிழ்ந்து கிடந்த தலைமயிரைக் கோதிக் குடும்பியைக் கட்டிக் கொண்டார். கைகள் இரண்டையும் நீட்டி உதறி, நெட்டிகளைச் சொடுக்கிவிட்டதும் உற்சாகம் இலேசாகத் துளிர்த்தது. தலையணைக்குக் கீழே பத்திரப் படுத்தப் பட்டிருந்த கொட்டப்பெட்டியிலிருந்து புகையிலையை எடுத்து, இரண்டு கீலங்களை வார்ந்து, மீண்டும் அதனைப் பழைய இடத்தில் வைத்தார். ஒரு மெல்லிய சுத்தை இணக்க ஆரம்பித்தார். விரல்களுக்கிடையில் சுழன்று சுத்து உருவாகிக் கொண்டிருந்தது. அவருடைய மனச் சுழற்சியிலே பூரணம் பற்றிய நினைவுகளே மீண்டும் எழுந்தன. நெஞ்சுக்குள் யாரோ உதைத்தது போல ஓர் அவஸ்தை. அந்த நினைவுகளைத் தலை குப்புற வீழ்த்தும் உத்தியாக 'முருகா' என்று உச்சரித்துக்கொண்டே, சுருட்டியெடுத்த 'சுத்'தைப் பல்லிடுக்கில் கௌவிப் பற்ற வைத்தார். புகையை உறிஞ்சி, அதன் இதத்தினை நெஞ்சிலே பரப்ப முயல்கையில், கண்டறியாத இருமல் வந்து தொலைத்தது! ஒரு பாட்டம் இருமி, அவஸ்தைகளுடன் குலுங்கினார்.

இந்த இருமலின் சந்நதத்திலே, அறைக்குள் படுத்திருந்த பூரணம் விழிப்படைந்தாள். கதிர்காமத்திலிருந்து திரும்பியது தொடக்கம் அப்பு ஒரு வகை இரட்டை வாழ்க்கை வாழ்வதாக அவள் நினைப்பதுண்டு. தன் உடலைப் பற்றி, சுகத்தைப் பற்றி, சில ஆதார சௌகரியங்களைப் பற்றிக்கூட அலட்டிக் கொள்ளாத ஒரு வகைத் துறவு நிலைக்குள் அவர் தம்மை உட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்திக் கொண்டதாக அவளுக்குத் தோன்றியது. ஒரு நாள் அப்பு சாப்பிட்டு முடித்தார். பிறகு அவள் சாப்பிட்ட பொழுதுதான் குழம்புக்கு உப்புப் போட மறந்தது உறைத்தது. 'அப்பு நான் கறிக்கு உப்புப் போட மறந்திட்டன் போலை...' என்று சொன்னாள். 'நான் கவனிக்கேல்லை புள்ளை...ஏன், கறி நல்லாத்தானே இருந்தது?' என்று சொல்லிச் சிரித்தார். ஒரு சொல்லுக்கூடத் தன்னைப் புண்படுத்தும் படி சொல்லக்கூடாது என்பதிலே அப்படி அழுங்குப் பிடியனாக இருப்பதை அவள் உணர்ந்தாள். 'இப்படிக் கொத்த அப்புவைத் தனிய விட்டிட்டு நான் சாகத் துணிஞ்சனே' என்கிற குற்ற உணர்வில் அவள் நெஞ்சு வெதும்பியது! 'எனக்கு என்ன குறை? என்ர அப்புவுக்கு இனி ஒரு நாளும் நான் கஷ்டம் குடுக்க மாட்டன்' என்று பட்சமாக நினைத்துக் கொண்டே, ''அப்பு!'' என்று குரல் கொடுத்தாள்.

''ஓம், புள்ளை...'' என்றார் முருகேசர். சுத்தைச் சுற்றிய பொழுது, அவர் நெஞ்சிலே எழுந்து, அவர் பிரயத்தனத்தினால் அடக்கப்பட்ட நினைவுகள், நீரிலே மூழ்கி அவஸ்தைப்படும் ஒருவனின் தலை நீருக்கு மேலாலே ஒரு தடவை பீறிட்டு எழும்புவது போல, அவஸ்தையில் கால்களை உதைத்துக் கொண்டு எழுந்தன. 'இருபத்திரெண்டு வயசு ஒரு பெரிய வயசில்லைத்தான். அவள் மற்ற மற்றப் பொம்பிள்ளை யளைப் போல பிறந்திருந்தால், இப்பத்தைய மோடிக்கு இது ஒரு வயசே? மூத்தவளின்ரை கல்யாணச் செலவு களுக்கு ஈடுவைச்ச வீட்டையும் மீட்டுப் போட்டார். இவளுக்கு அமெரிக்கன் மொடலிலை ஒரு வீடு கட்டத் தான் எனக்கு விருப்பம். இப்பவும் கட்டேலா எண்டில்லை. கொஞ்சம் அங்கால இங்கால அநியாயக் கடன்பட வேண்டி இருக்கும். அது பறுவா இல்லை. ஆனா, இப்ப வீடு கட்டத் துவங்கினால், அதுவே சலிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாப் போயிடும். எனக் கெண்டா ஒண்டும் விளங்க மாட்டன் என்குது. கதிர்காமத்தானே நீதான் எல்லாத் துக்கும் பொறுப்பு...' நினைவுகளில் அமைதி அடைத்து, மீண்டும் இருமல் வந்திடக் கூடாது என்கிற அவதானத்துடன், சுத்தின் புகையை இழுத்தார்.

அப்புவின் 'சிலமன்' காதில் விழாததினால், ''அப்பு'' என்று மீண்டும் பூரணம் குரல் கொடுத்தாள்.

''என்ன பிள்ளை...?'' குரலிலே கரிசனை குழைத்து முருகேசு கேட்டார்.

''வெள்ளணத்தோட எழும்பியிருக்கிறியள்...''

''இல்லை, புள்ளை. ஒருக்கா ஸ்டேஷன் வரையிலும் போயிட்டு வரலாமோ எண்டு யோசிக்கிறன்...''

''செல்லையா மாமா வருவார் எண்டு சொல்லிக் கொண்டிருந்தியள்...''

''ஓம், புள்ளை. அதுக்குத்தான்...''

''அப்ப தேத்தண்ணி வைக்கட்டே அப்பு?''

''வையன். நான் கொல்லைக்குப் போயிட்டு வாறன்.''

பூரணம் எழுந்து வந்து, முருகேசருக்குப் பக்கத்தில் எரிந்து கொண்டிருந்த கைவிளக்குடன், அடுக்களைப் பக்கம் சென்றாள். அவர் தலையணையைத் திணித்து, பாயைச் சுற்றி வைத்து, வீட்டுக் கொல்லையின் தொங்கலில இருந்த பனை வடலிப் பக்கமாகச் சென்றார்.

**நல்ல** உணவைத் துர்வாடை வீசும் கழிவுப் பொருளாக வெளியேற்றும் நித்திய காலைக் கருமத்தில் ஈடு பட்டிருந்த முருகேசர், ஒரு கட்டத்தை முடித்து, இன்னும் திருப்தி அடையாமல், குந்திய நிலையிலேயே இன்னோர் இடத்துக்கு நகர்ந்தார். வைகறை கரை யாத அந்த மென்னிருட்டில், நிலத்துக்குத் தொங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலம் அமைத்துக் கொண்டிருந்த வடலிக் கருக்கு மட்டை ஒன்று அவர் தொடையைக் கிழித்து விட்டது. கொக்கச் சந்தகத்தால கீறியது போல, சுளீரென்று எரிந்தது. அவர் அதைத் தடவிக் கொடுக்கும் பொழுது, இரத்தம் கசிவதை விரல்களின் ஈர உணர்வால் உறுதி செய்து கொண்டார்.

'பாழாய்ப் போன நிதானம். விடியக் காத்தாலை இதென்ன சனியன் முழிவிசளம்!' ஒரு சோர்வு அவரைச் சடுதியாக வளைத்துக் கொண்டது. சுருட்டின் தலையிலே குந்தியிருந்த நெருப்பை மூடிப் பூத்திருந்த சாம்பலை உள்ளங்கையில் தட்டியெடுத்து, இரத்தம் கசிந்த இடத்தில் வைத்து அழுத்தினார்.

வலி.

அத்துடன் அந்தக் கருமத்துக்கு 'மங்களம்' பாடி, கிணற்றுப் பக்கமாக நடந்தார். கிணற்றுக்குப் பக்கத்தில் அவர் கையடக்கமான பாத்தி ஒன்று சரிக் கட்டியிருந்தார். சிறுபிள்ளைத் தனமாக அவர் அந்தப் பாத்தியை வெண்டித் தோட்டமாக மாற்றியிருந்தார். அதுவும் ஒரு விளைச்சல்தான்! அந்த ராசியில் அது நிரந்தரமாக வெண்டித் தோட்டமாகவே கிடந்தது. முதலில் அதிலே எப்பொழுது வெண்டி விதைகள் ஊன்றினார் என்பது அவருக்கு ஞாபகம் இல்லை. எப்பவோ நடந்த சரித்திர நிகழ்ச்சி போல! பருவத்துக்குப் பருவம் என்னமாய் மஞ்சள் பூக்கள் பூக்கும்? அந்த மஞ்சள் பூக்களின் சௌந்தர்யத்திலும், இளமை தோய்ந்த பெண்மையிலும் மனசுகளைப் பறிகொடுத்தனவாய் வண்டினத்தின் மேய்ச்சல். பூவுக்கும் வண்டுக்கும் இடையில் தரகர்கள் தூது போவதும் கிடையாது. வெட்ட வெளியிலும், பட்டப் பகலிலும் வம்ஸ விருத்திச் சக்கரம், எத்தனம்-தெண்டிப்பு-பிரக்ஞை என்கிற எதுவுமே இல்லாது சுற்றிச் சுழல்கிறது. மஞ்சள் பூக்கள் வாடி உதிர்ந்த சில காலத்தில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீளமாய், மெல்லிதாய், வெளிர்ப் பச்சை நிறத்தில்... ஒன்றைப் போன்றுதான் மற்றயதும் என்கிற ஒரே சீர்த்தியில்... சமைக்காது, பச்சையாகப் பிடுங்கி அப்படியே வாயிலே போட்டுக் கொள்ளலாம் போன்று ஆசையைத் தூண்டி... சில தேர்ந்தெடுத்த காய்களை முற்றவிட்டு, அடுத்த நடுகைக்கான விதைகளையும் பெற்றுக்கொள்வார். அக்கம் பக்கத்துக் கமக்காரிச்சிகள் கூட இந்தத் தோட்டத்திலே கிடைக்கும் வெண்டிக்காய்களின் மகாத்மியம் பேசிய சந்தர்ப்பங்கள் நிறைய! சங்கிலித் தொடராக் வரும் விளைச்சலும், விருத்தியும்... ஆனால், பூரணம்? வடலிக் கருக்கு மட்டை தைத்த ரணம் மீண்டும் வலிப்பதான உணர்வு...

கதிகால்களாக வளர்ந்திருந்த பூவரசு மரங்களும் நல்ல சேட்டம். அடிமரத்திலிருந்து கிளை வெடித்து முளைத்து சின்னி விரலின் பாதிப் பருமனிலே வளர்ந்திருந்த தடியொன்றை முறித்து, அதிலே பதமான பகுதியைத் தேர்ந்து, அதனைக் குச்சியாக்கிப் பற்களைத் தீட்டத் தொடங்கினார். கிழக்கிலே சிதறிக் கிடந்த பனங்கூடல்களுக்கு மேலாக நொய்மையான செந்நிறத் தெளிப்பு. அந்தப் பக்கமாக காகங்கள் கூடுகள் கட்டியும் இருக்கலாம். காகங்கள் கரைகின்றன. 'இன்னொரு நாள் விடிகிறது. ஆரைக் கேட்டுக் கொண்டு பொழுதுகள் விடிகின்றன?' பூரணத்தின் வாழ்விலே எதிரி போல புகுந்து விளையாடி அரூபமாய் நழுவிக் கொள்ளும் ஏதோ ஒன்றின் முகத்திலே துப்பும் ஆக்ரோஷத்துடன், எச்சிலைக் காறாப்பித் துப்பினார். எத்தனை கல்யாணப் பேச்சுகளைத்தான் செல்லையர் கொண்டு வந்து சேர்த்தார்? 'இந்தா அந்தா சரி வந்திடும்' என்கிறது போலதான் எல்லாம் துவங்கும். சுற்றி வளைச்சுக் கடைசியில அந்த ஒரு விஷயத்திலை வந்து... அதுக்குப் பிறகு தேர் நகரவே நகராது... செல்லையரும் விடாக் கண்டனாய் எத்தனை எத்தனை கதைகளைத்தான் சொல்லிப் பார்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கிறார். 'இது சாதகத்தில உள்ள ஒரு தோஷம் கண்டியளோ?... கல்யாணத்துக்குப் பிறகுநான் ருது பிராப்தம் எண்டு எழுதியிருக்கு. அதை நாங்கள் அழிச்சு எழுதலாமோ...' என்ற தடத்திலே சில நியாயங்கள். 'கையோடை வந்து ஒருக்கா அரச வெளி நடராசாப் பரியாரியாரைக் கேட்டுப் பாருங் கோவன். அவருக்குத் தெரியாத மருந்து-மாயமே? கல்யாண அதிர்ச்சிதான் இதுக்கு ஒரேயொரு வைத் தியமாம்...' என்று பிறிதொரு 'ரூட்'டிலே சில நியாயங்கள். இத்தனைக்கும் செல்லையர் 'அசுப்பு சுப்'பானவரல்லர். சிக்கல்கள் நிறைந்து கரை சேர்க்க முடியாது என்று மற்றவர்கள் கைவிட்ட கேஸுகளைக் கூட அவர் பொறுப்பேற்று, ஒட்டுப்போட்டு, நிறை வேற்றி இருக்கிறார். 'முடிவு மங்கலமாக இருக்க வேணும்' என்பதுதான் அவர் தாரக மந்திரம். அழகி ஒருத்தியைச் செவ்வாய் தோஷக்காரியாக்கி மார்க் கெட்டில் மதிப்பிழக்கச் செய்வார். திருவலைப் பல்லுக் காரியின் நீண்ட பற்களை அதிர்ஷ்ட தேவதையின் சாட்சாத் உறைவிடமாக்கி உயர்த்துவார். அவருக்கு வசமாகாத சுழிப்புகள் இல்லை; அவர் அறியாத வாகடங்களும் இல்லை. அத்துடன் கரி நாக்குக்காரர். கல்யாணத் தரகு அவருக்கு ஒரு தொழிலல்ல. வேறும் பல பிஸினஸுகள். அரசியல்வாதிகளே அவர் தயவை நாடுவார்கள். இருப்பினும், மற்றும் கல்யாணத் தரகர்கள் அவரைத் தங்களுக்கு ஒரு மகாமகோ உபாத் தியாயராக ஏற்கப் பின்னிற்பதுமில்லை... அவருடைய அத்தனை ஜகஜால வித்தைகளும் பூரணத்தின் விஷயத்தில் மட்டும்... இந்தத் தோல்விகளை எல்லாம் தாங்க முடியாத ஆக்கினைகளாலுந்தானே பூரணம் இந்தக் கிணத்துக்குள்ளை வந்து விழுந்தாள்? செத் திருத்தால்? 'ஒரு பாவமும் அறியாத இந்தச் சின்னனை ஏன் இப்பிடிப் போட்டு அழுந்த வைக்கிறாய்?' அழுது தீர்த்தால்தான் மனப்பூங்காரம் முழுவதும் கரையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது போல அவர் மனம் குமுறியது. கதிர்காமக் கந்தனிலே பாரத்தை ஏற்றி, மனசிலே சமநிலை அடைந்தவராகக் கிணற்றின் படிக்கட்டில் ஏறினார்.

தண்ணீர் அள்ளுவதற்குத் துலாக் கொடியைப் பற்றினார். முற்றிய வைரப் பனையிலே செய்த அந்தத் துலா, கீழே தொங்கிய பாரக் கற்களுடன் 'உலாஞ்சி' ஆடியது. வீரியம் பெற்ற இராக்கத ஆண்குறி ஆடி யதைப் போன்ற ஒரு தோற்றம்! இந்த அசுரக் கற்பனைக்காக வெட்கப்பட்டு விக்கித்துப் போனார்.

அடிக்கழுவி முடித்து, முகங் கால் கைகளைச் சுத்தஞ் செய்து, கொல்லையிலிருந்த மரக்கறித் தோட்டத்தை ஏறிட்டும் பார்க்காமல், வீட்டுக்கு வந்தார். முருகன் படத்துக்கு முன்னால் நின்று சாமி கும்பிட்டார். பக்தி யிலும் வேண்டுதலிலும் அவர் மனம் கசிந்து உருகியது. சிரட்டையிலே கிடந்த விபூதியைப் பவ்வியமாக எடுத்து, கண்களுக்குக் கூரையிட்டிருந்த புருவங்களுக்கு மேலும், தலைமயிர் வேர் விட்டிருந்த மறுகரைக்குக் கீழுமாக வியாபித்திருந்த நெற்றிப் பிரதேசம் முழுவதும் அப்பிப் பூசினார். மனம் அமைதி கொண்டது போன்றஉணர்வு. வந்து திண்ணையிலே குந்தினார்.

சூடான தேநீரை ஒரு மூக்குப் பேணியிலிருந்து இன் னொன்றுக்கு மாற்றி மாற்றி ஊற்றிச் சூடு தணித்த படியே பூரணம் திண்ணைக்கு வந்தாள். தேநீரைப் பெற்று, பேணியின் மூக்கின் வழியே அண்ணாந்து குடித்துக் கொண்டே, ''பிள்ளை வெத்திலைத் தட்டையும் என்ரை சால்வையையும் கொண்டாணை'' என்றார்.

சால்வையை மடியிலே வைத்துக் கொண்டு, பாக்கு வெட்டியினால் கொட்டைப் பாக்கை வெட்டத் துவங் கினார். பாக்குத் துணுக்குகளை மூக்கில் முகர்ந்து, வாய்க்குள் போட்டு மென்று கொண்டே, வெற்றிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரம்பைக் கிள்ளி எறிந்து, அதில் சுண்ணாம்பைத் தடவினார். இடையில் எதையோ நினைத்துக் கொண்டவரைப் போல, ''புள்ளை, அந்த நாகு கன்றைக் கொண்டு வந்து படலேலை கட்டடீ.ண'' என்றார். வெற்றிலையைச் சிவக்க குதப்பியவாறு வேலிப் பக்கம் பார்த்தார். அடுத்த வீட்டுப் பேடுகளை 'அமத்தும்' நோக்கத்தோடு, ஐயனார் சேவல் பொட்டுக்குள் நுழைந்து, துரத்தியது...

ஸீட்டின் கீழே, சக பயணி ஒருத்தனுடைய பெட்டியின் அடியில் மாட்டிக் கொண்ட ஒற்றைச் செருப்பைத் தேடினார் செல்லையர். பெட்டி பாரித்தது. அதனை நகர்த்தித் தமது செருப்பை எடுப்பதற்குச் சிரமப்பட்டார். 'இவர் கொழும்பையே இந்தப் பெட்டிக்குள் அடைச்சுக் கொண்டு வாறாராக்கும்' என்று ஒரு பாட்டுக் கொடுக்க நினைச்சும், மனசை அடக்கிக் கொண்டார். அவர் மனசிலே பொங்கிக் கொண்டிருக்கும் சந்தோஷத்தில் எதையும் மன்னிக்கும் ஒரு பக்குவம். செருப்புகளை மாட்டிக்கொண்டு 'லவற்றி' பக்கம் நடக்கும்போது உற்சாகம் மேலும் சடைத்தது. ஆனையிறவு உப்பளப் பக்கமாக இருந்து வீசி வந்த் காற்று, யன்னல் வழியாகக் குளிர்ச்சியாகவும் இதமாக வும் வீசியது. காற்றிலே மிதப்பது போல நடந்தார். சந்திரனிலே காலடி பதித்த ஆம்ஸ்ரோங்கின் நடை சடுதியாக அவர் நினைவுக்கு வந்தது. ஆம்ஸ்ரோங்கின் சாதனைக்குப் பின்னால் எத்தனை பேர்களுடைய சிந்தனைகளும் உழைப்புகளும் துணை நின்றன? முடியாது என்று எல்லோரும் தீர்ப்பளித்திருந்த விஷயத்தைச் செல்லையர் தன்னந் தனியாகச் சாதித்து விட்டார்! சந்திரனுக்கு அப்பாலான ஒரு கோளிலே நடப்பதான பெருமிதத்திலும் slow motion இலும் அவர் நடந்தார். வெற்றி மது அருந்திய உற்சாகத்திலும், அந்தப் பெட்டியிலே தண்ணீர் பீய்ச்சி அடித்து வந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோரிலும், காலைக் கடன்களைத் திவ்விய திருப்தியில் முடித்து, தமது ஸீட்டுக்குத் திரும்பினார். தோல் பையைத் திறந்து தமது தோற்றத்தைத் திருத்தினார். நெற்றியில் விபூதியை அவர் அப்பிப் பூசுவது கிடையாது. நெற்றியின் சரியான சென்ரரில், 'லெட் பென்ஸில்' கனத்தில், செவ்வக வடிவத்தில் அது இடம் பெறும். கண்ணாடி தேவையில்லை. பழக்கவாசியினால் சொல்லிய 'ஸ்பொட்டில்' வைப்பார். அதற்குக் கீழே, இரு புருவங்களும் கரங் கோர்க்கும் இடத்துக்குச் சரி மேலே, ஒரு சத நாணய விஸ்தீரணத்தில் சந்தனப் பொட்டு. அதன் மேல், சந்தனப் பொட்டின் மையப் பகுதியைந் துலக்குவது போல, சுண்டு விரல் பருமனில் குங்குமத் திலகம். அவருடைய பொட்டின் வட்டுறுப்பில் அப்பம் சுட்டு எடுப்பதற்குச் சேணிய ஆச்சி இன்னொரு அவதாரம் எடுத்துவர வேண்டும்.

'கட கடா கட கடா' ஓசையுடன் ரயிலின் யாழ்ப்பாணம் நோக்கிய பயணம். யன்னலுக்கு வேளியே 'மணற் றிட்டி' என்றும், 'வடலிவெளி' என்றும் தரங்குறைத்துக் குறிசுடப்பட்ட யாழ்ப்பாணப் பூமி விரிந்து கிடக்கிறது. 'எங்கடை சனங்களுடைய நம்பிக்கையும் உழைப்பும் எப்பவும் அதம் போனதில்லை' என்று பட்சமுடன் நினைக்கிறார். அவருடைய நம்பிக்கையும் உழைப்பும் வேறு பரிமாணங்கள் கொண்டு மனசிலே எழுகின்றன. யார் அந்த விஞ்ஞானி? அப்பிள் பழம் நிலத்தில் விழுவதைக் கண்டு, அது ஏன் மேல் நோக்கிப் பறப்பதில்லை என்கிற சிந்தனையில் ஆழ்ந்து, புவியீர்ப்பின் தத்துவத்தை விளக்கியவன் யார்? பெயர் என்னவாக இருந்தால் என்ன? அவன்ஒரு விஞ்ஞான மேதை. டொமினிக் பற்றி செல்லையர் நடத்திய ஆராய்வுகளும், அவனை வசப்படுத்த அவர் மேற்கொண்ட உழைப்புகளும் சிந்தனா முயற்சிகளும் அதற்குக் கொஞ்சமும் குறைந்ததல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பிள் விழுந்ததும் பார்த்ததும் தற்செயல். அப்படித் தான் அன்று செல்லையர் தியேட்டருக்குப் போனதும். படத்தின் பெயர்கூட அவருக்கு நினைப்பில்லை. இடைப்பட்ட ஒரு மூன்று மணி நேரத்தை எப்படி 'மினக்கெடுத்துவது' என்பதை அறியாமல்தான் அவர் தியேட்டருக்குள் நுழைந்தார். 'கூட்டத்துக்க ஏன் புழுங்குவான்' என்கிற நினைப்பிலதான் 'பல்கனி' டிக்கற் எடுத்தவர் தற்செயலாக உள்ளே பரம்பியிருந்த ஊமை இருளைத் துழாவிய பொழுது, டொமினிக் செய்து கொண்டிருந்த 'சேட்டைகள்' அவர் பார்வையில் சிக்கின. அவன் மகாவித்தியாலயத்தில் படித்துக் கொண்டிருக்கக் கூடிய மாணவர் இருவருக் கிடையில் அமர்ந்திருந்தான். அவன் அவர்களுடைய தொடைகளிலே கையைப் போட்டு என்ன செய்து கொண்டிருக்கிறான்? ஏன் அந்தப் பையன்கள் வெட்கத் துடன் நெளிகிறார்கள்? மின்னல் சொடுக்கியது போன்று ஒரு பொறி. அதிலிருந்து டொமினிக்கே அவருடைய சிந்தனைகளினதும் ஆய்வுகளினதும் முழு முதற் பொருளானான்!

சின்ன வயசிலேயே டொமினிக் போர்டிங்கிலே சேர்க்கப் பட்டிருந்தான். நெடுமதிலால் சூழப்பட்ட கட்டடம். அந்த மதில்களின் உச்சியில் உடைந்த போத்தில்களின் 'வீதுறோடுகள்' பதிக்கப்பட்டிருந்தன. தீய சக்திகள் உள்ளே நுழையாத அத்தனை பாதுகாப்பு! கத்தோ லிக்க குருவானவர்கள் அங்கு மேய்ப்பர்களாக வலம் வந்தார்கள். அந்த மேய்ப்பர்கள் மகாயோக்கியர்கள். இல்லற வாழ்வின் பந்த பாசங்களுக்குள் தங்களைச் சிறைப்படுத்திக் கொள்ளலாகாது என்று Celibacy நோன்பை ஏற்றவர்கள். அந்த நோன்பினைக் கெட்டி யாகப் பற்றி, மெய்விசுவசிகளான பெண்களின் கற்புக்கு மகா உத்தரவாதமான உந்நத வாழ்க்கை வாழ்ந் தார்கள். 'திருமணம் சொர்க்கத்திலே நிச்சயிக்கப்படு

கிறது' என்று போதித்தார்கள். அந்த நிச்சயார்த்தம் தங்களுக்கு நடைபெறவில்லை என்பதை நம்பி, பெண்ணாசை துறந்து, சந்நியாசிகளாக வாழச் சித்தம் பூண்டார்கள். சருவேஸ்வர ஊழியம் புனிதமானது. அந்தப் புனிதத்தைக் கொச்சைப்படுத்தும் வகையில் யாருக்கு யாரும் விதையடிப்பதும் இல்லை. இதில் நிர்ப்பந்தங்களோ, கஷ்டங்களோ இருப்பதான கிலேசங்கள் அவர்களுக்குத் தோன்றுவதுமில்லை. கர்த்தரின் ஊழியத்திற்கு அர்ப்பணமானவர்கள் மனித உடலிலே நடமாடியதும் உண்மை. பெண்ணிச்சை என்பது வேறு; மனித உடல்களின் உணர்ச்சி ஆக்கினை என்பது வேறு. சல-மல உபாதைகளிலிருந்து மனித உடல் அவ்வப்போது விடுதலை பெறல் வேண்டும் என்பது மகா இயற்கை. ஆண்மை வீறுகளும் கழிக்கப்படுதல் வேண்டும். இந்தக் கழிப்புகள் நடைபெறாவிட்டால், மனித உடல் ஆரோக்கியமாக நடமாடவும் ஏலாது. அலைக்கழிக்கும் கனவுகளின் முடிவுகளாக போர்வைகளைக் கறைப்படுத்தி வாழ்வதே வாழ்க்கையாகி விடுமா? உடலின் ஊறல்கள் உடைப்பெடுப்பதை நெறிப்படுத்த, மசுவாதமற்ற, வேறு வழிகளும் உள... Gays ஆக வாழ்வதும் சமூகத்திலே அங்கீகரிக்கப்பட்ட நெறியாக்கப்படுதல் வேண்டும் என்கிற கோஷம் மேலை நாடுகளிலே எழத் துவங்கியுள்ளதாம்... இத்தகைய ஒரு வாழ்க்கை முறையிலே நிரந்தரமான Commitments இல்லை என்பது மகா சகாயமானது என்கிற ஞானமும் தெளிவும் நெடுமதில்களுக்கும் பின்னால் வாழ்ப்பவர்களுக்குத் தெரியும். அந்தச் சூழலிலே டொமினிக் வாழ்ந்து, அதைப் பழகி, ஆண் உடலுக்கு அந்தச் சுகம் மிகத் திருப்தியானது என்கிற மனப்பக்குவத்துடன், நெடுமதில்களுக்கு இப்பாலுள்ள வாழ்க்கையிலே ஈடுபடலானான்.

இந்த ஆராய்ச்சிகளிலும் தேடலிலும் செல்லையர் திரட்டிக்கொண்ட சங்கதிகளை அவரால் நம்பவும் முடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. அக்கம் பக்கமாக எத்தனை விநோதங்கள் இருப்பதை ஏன் அவரால் இவ்வளவு காலமும் அறிந்து கொள்ள முடிய வில்லை? Taking for granted என்கிற மனோபவம், எவ்வளவு குறுகலான அநுபவங்களுக்குள் எங்களைச் சிறைப்படுத்தி வைத்திருக்கின்றது என்பதை மகா அதிசயத்துடன் உணரலானார்.

இவற்றை எல்லாம் விளங்கப்படுத்த டொமினிக்எடுத்துக் கொண்ட அக்கறை பாராட்டத் தக்கது. அவரை யும் அழைத்துக் கொண்டு சில Exclusive Hotels களுக்கு அவன் சென்றான். டொமினிக் மதுப்பிரியன் அல்லன். Relaxed ஆகப் பேசுவதற்கு அது சகாயமான துணை என்பதை அறிந்தவன். 'இவன் எவ்வளவு யோக்கியமான பையன்' என்று செல்லையர் 'திலாக் டான' நிலையில் டொமினிக்கைப் பற்றி நினைத்த சந்தர்ப்பங்கள் அநேகம்.

'ஆரம்ப காலத்தில் மனிதன் வேட்டையாடியே வாழ்ந் தான். அப்பொழுது எல்லா மனிதர்களும் ஊன் பட்சினி களாகவே வாழ்ந்தார்கள். கால ஓட்டத்திலே தேவைகள் கருதியும் மனிதர் சிலருடைய உணவுப் பழக்கங்கள் மாறின. மனிதர்களிலே சிலர் இன்று மரக்கறி உணவே சிறந்த நாகரிகம் என்று வாதாடுகிறார்கள். பார்க்கப் போனால், மரக்கறி உணவுப் பழக்கம் என்பது மனிதன் ஏற்படுத்திக் கொண்ட செயற்கை முறைதான். அதைப் புனிதமானது, ஆகுமானது என்று ஏற்றுக் கொள்ள முடியுமானால், உடலில் ஊறும் உணர்ச்சிகளைத் திருப்தி செய்வதற்காக, சிலர் வகுத்துக் கொண்ட இதனை மட்டும் ஏன் அசூசையானது என்று முகத்தைச் சுழித்துக் கொள்ள வேண்டும்? பாலுணர்ச்சியும் உறவும் வம்ச விருத்திக்கான ஓர் ஏற்பாடு மட்டுந்தானா? அப்படியானால், ஒழுக்க சீலர்கள் எத்தனை குழந்தை கள் உற்பத்தி செய்வதை அனுமதிப்பார்கள்? அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தியிலே எத்தனை முயற்சிகள் உத்தமான நெறியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது? பிறகு ஏன் கருத்தடைகள் பற்றி இவ்வளவு வீறாப்பு மிக்க பிரசாரங்கள்? ஜனநாயகம் என்கிற பெயரால் மனிதனுடைய அடிப்படை உரிமைகள் பற்றிப் பேசுகிறார்கள். வாழ்க்கை மனிதனுடைய அடிப்படை உரிமை. சைவ உணவும், அசைவ உணவும் அங்கீகரிக்கப்பட்ட நாகரிகங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டால், ஏன் வாழ்க்கையிலே வேறு நெறிகளையும் அங்கீகரித்தல் ஆகாது?...' ஒரு சந்தர்ப்பத்திலே டொமினிக், பாவப்பட்ட தன்னினக்காரர்களுக்காக உருக்கமாக வாதிட்டான். செல்லையர் was simply clean Bowled !

தன் வெட்கங்களை மதுவிலே கரைத்த இன்னொரு சந்தர்ப்பத்திலே டொமினிக் சொன்னான்: 'வீட்டின் நெருக்குதலினால் திருமணத்திற்குச் சம்மதித்தேன். உங்களைப் போல நாலு பெரிய மனுஷர் சொன்னதினால்... It was forced on me! என்ர மனுஷி சில சம்பிரதாயமான எதிர்பார்ப்புகளுடன் வந்திருப்பாள். Quite natural அதற்காக, மணவாழ்க்கை என்பது ஆண் சதா நடத்தும் உழவுத் தொழில் என்று கற்பித்துக் கொள்வதா? அவளுடைய எதிர்பார்ப்புகளும் திருப்திகளும் வேறு. எனக்குப் பழக்கப்பட்ட திருப்தி வேறு. அவளுடைய கனவுகள் நொருங்கின. அவளுக்காக நான் வருந்தினேன். பிற அனைத்து சௌகரியங்களையும் அவள்மீது சொரிவதற்கு நான்படாதபாடுபட்டேன். அவளுடைய சீற்றங்களையும், அவமதிப்புகளையும், அகங்காரத்தையும் நீண்ட காலத்திற்குச் சகித்து வாழ்ந்தேன். பள்ளியறை விவகாரங்களை வெளியே வந்து பூதாகரமாக்கி அசிங்கமாக்கினாள். கட்டில் வாழ்க்கை மட்டுமே இல்லறம் என்று தெய்வமாடினாள். 'கம்பிமஸ்தான்' 'அம்மி பொழிய வாறான்' என்று ஹிஸ்ரியா பிடிச்சவள் போல கத்துவாள். எனக்காக என் பெற்றோரும்அந்த அவமதிப்புகளைத் தாங்க வேண்டுமா? நாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிகமாக, அவர் இஷ்டப்பட்ட நிபந்தனைகளுக்கு ஏற்ப விவாகரத்து— A divorce On her own terms! போதும். Let me enjoy life my way!'

இவற்றை அறிந்து கொண்டு, செல்லையர் பூரணத் துடைய மனுவை மிகவும் பவ்வியமாகச் சமர்ப்பித்தார். 'மணமானவன்' என்று சொல்லிக் கொள்வது ஒரு வயசுக்குப் பிறகு கௌரவம் சேர்க்கின்றது. அது மகா இயல்பானது என்று சமூகம் அங்கிகரிக்கிறது. Ideal Couple என்று வெளியரங்கத்திலே வேஷம் போடு கிறார்கள்! சத்தியமாய்ச் சொன்னால், வெற்றிகரமான தாம்பத்திய வாழ்க்கை என்பதே, கூச்சமில்லாமல் இரட்டை வாழ்வு வாழ்வதுதான். சில சமூக நியதி களுக்காகவும், சௌகரியங்களுக்காகவும் ஒருBetter - Half வீட்டிலே நடமாடுவது ஆரோக்கியமான ஏற்பாடு. விவாகரத்து உன் முந்திய மனுஷியின் ஈகோவை மட்டுமே திருப்திப்படுத்தியது. 'பூரணத்தைப் பற்றி முழுசும் சொல்லீட்டன். உன் மனுஷ காருண்யமே அவளுக்கு வாழ்க்கையிலே ஓர் அர்த்தத்தையும் பிடித் தத்தையும் ஏற்படுத்தும். அவளுக்கு ஒரு வாழ்க்கை கொடுப்பதிலே உன் ஆண்மை நின்று நிலவட்டும்' என்று கெஞ்சியபோது, தன் வயசையும், சம்பாஷணை நடந்த இடத்தையும் எண்ணிப் பார்க்காமல் செல்லையர் அழுதே விட்டார்!

'எந்தக் கோயிலிலையும் சத்தியம் பண்ணிச் சொல் லுவன். டொமினிக்கைப் போல இரக்க சுபாவமுள்ள மனுஷனை நான் வாழ்க்கையில காணேல்லை' என்று நினைக்கும் பொழுது, செல்லையரின் மகிழ்ச்சி, கொள்ளிடத்தை மேவிய நதியாகப் பிரவாகித்தது. 'ஏன் இடைக்கு இந்த ரயில் இவ்வளவு ஸ்லோவா ஓடுது?' என்று அலுத்துக் கொண்டார்.

...முருகேசர், தலைமயிரை மறுபடியும் குலைத்து, 'எரியல்' முனையுடன் குடுமியைக் கட்டி, சால்வையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ளி இட்டு தோளிலே போட்டு நாகு கன்றை விழித்து, படலையைத் தாண்டி வீதியிலே இறங்கினார்.

**'புவே'யிலிருந்து** காப்பி வந்தது. ஒரு 'கப்' வாங்கிக் குடித்தார். ரயிலின் வேகம் குறையத் தொடங்கியது.... 'ஓகோ, ஸ்டேஷன் வருகுது' என்று நிதானித்தார்.

**'பொடியன்** கிறிஸ்டியன். அவன் எங்கட சாதி. அதுதான் முக்கியம். நல்ல உத்தியோகம். சீதனம் எண்ட பிச்சல் பிடுங்கல் இல்லை. ஏன் தான் எங்களுக்குப் பெரிய எடுப்பை? எங்கடை சாதிசனந்தானே பூரணத்தை இவ்வளவு வசைபாடி உருக்குலைச்சு வைச்சிருக்கினம். இவை வந்தாலும், 'இருசிக்கும் இப்பிடி ஒரு வாழ்க்கையோ' எண்டு உமிஞ்சு போடுங்கள். அதுக்குத்தான் சொல்லுறன். ரிஜிஸ்தர் கல்யாணம். சட்டப்படி செல்லும். அவன் பென்ஷன் அது இது எல்லாத்திலயும் இவளுக்குப் பங்கு கிடைக்கும்...பின்னடிக்கும் அந்தரப்படமாட்டாள்...'

போர்டிங் ஸ்கூலில் ஏற்பட்ட பழக்க வழக்கத்தை அவர் மறைத்து விட்டார். அவர் சொல்லியிருந்தாலும், முருகேசருக்கு விளங்கியும் இருக்காது. அவருக்கு அப்பாற்பட்ட உலகத்துச் சமாச்சாரங்கள் அவை.

'எல்லாம் சரிதான் செல்லையா...முதல் கல்யாணம் ஒண்டு நடந்தது எண்டு சொன்னியே...' என்று முருகேசர் தயங்கியவாறு கேட்டார்.

'அது விதி. அவ்வளவுதான். இவன் பொடியன் மிதிச்ச இடத்துப் புல்லுச் சாகாது. நான் அவனிட்டை ஒண்டையும் மறைக்கேல்லை... பூரணத்தின்ரை உடல் குறைபாட்டை முழுதும் சொல்லீட்டன்...'

'எப்பிடி?'

'எப்பிடி எண்டால்? பொடிச்சிக்கு வயசு இருபத்திரண்டாகுது. சிவப்பி. வயசுக்குத் தக்க வாளிப்பு... ஆனால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னமும் சாமத்தியப்படேல்லை. அவளை 'இருசி' எண்டு ஊரிலை சொல்லுவினம்...'

'அட. அதுக்குப் பிறகும் பூரணத்தைக் கட்ட ஓம்பட்ட வனே? அப்படிப்பட்ட ஒருத்தனை ஏன் முந்தின மனுஷி...'

'முருகேசு, அவள் ஒரு அடங்காமாரி. ரேஸிலை ஓடுற குதிரை போல... சாதுவான பொடியனாலை அதிலை ஏறிச் சவாரி செய்து அடக்க முடியேல்லை. இத்தத் துளவாரம் எங்களுக்குத் தேவையோ?' என்று செல்லையர் மடக்கவும், வீடு சமீபித்தது.

முருகேசர் வீட்டு முகடுக்கு மேலாகவும் ஆலவட்டம் பிடிச்சது போல காடு பற்றி உயர வளர்ந்திருந்த முள் முருங்கை. காலை வெயிலின் கதிரிலே, அதன் உச்சக் கிளைகளில் இரத்த நிறத்தில் பூத்திருந்த மலர் கள் தெரிந்தன. 'என்ன வடிவான பூக்கள்? ஆனால், ஆண்டவன் பூஜைக்கு...' என்று எழுந்த யோசனையை அடக்கியபொழுது, அவர்களை எதிர்பார்த்துப் பூரணம் படலையில் நிற்பது தெரிகிறது. நடை விரைந்தது.

'பிள்ளை, உனக்குச் சோக்கான மாப்பிள்ளை கிடைச் சிருக்கிறான். உத்தியோகக்காரன். பஞ்சாங்கம்பார்த்து நாள் குறிக்க வேண்டியதுதான் பாக்கி...' என்று செல்லையர் உற்சாகமாகச் சொன்னதும், அவள் வெட்கப்பட்டவளைப் போல வீட்டுக்குள் ஓடினாள்.

பேடுகளை விரசிக்கொண்டு ஐயனார் சேவல் றோட்டுக் கடந்து எதிர்வீட்டுப் 'பொட்டு'க்குள் ஓடியது...

'அடுத்த ஆண்டு நீர் பேரனையும் பார்த்திடுவீர்...' என்று முருகேசரைப் பார்த்துச் செல்லையர் சொன் னார். 'அது ஒரு வெள்ளைப் பொய்' என்று உள் மனம் உதைத்த போதிலும், அவர் வளர்த்த ஆசையில் முருகேசர் முகம் மலர்ந்தது. உதடுகள் 'கதிர்காமக் கந்தனே' என்று பக்தியுடன் முணுமுணுத்தன. ○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை



**காற்றிலே** 'றபான்' ஒலி மிதந்து வருகின்றது.

வளவுஹாமு உடுராவண வீட்டிலிருந்துதான் அது வருகின்றது என்பதைக் கிராமத்திலுள்ள சகலரும் அறிவார்கள். எந்தப் பண்டிகைக்கும் றபான் ஒலி முதலில் அங்கிருந்து வருவதுதான் வழக்கம். இப்படியான விஷயங்களை அவர் சுதுமாமியிடமே ஒப்படைப்பார். சுதுமாமிக்குத் தெரியாத சனங்கள் இல்லை. அவள் சொன்னால் போதும், றபான் அடிப்பதற்கு ஒரு பட்டாளம் பெண்கள் திரளாக வருவார்கள். வளவு ஹாமுவுக்கு அவளுடைய வாழைத் தளிர் மேனியிலே எவ்வளவுக்கு மயக்கம் இருந்ததோ, அவ்வளவுக்கு அவளுடைய பொல்லாத வாயிலே கிராமத்தவர்களுக்குப் பயமும் இருந்தது. கடைசியிலே பார்த்தால் எல்லாம் அவருக்குச் சாதகமாகவே அமையும். மூன்று தலைமுறைகளாக வளவுஹாமு வீட்டில் அப்படி ஒரு ராசி நிலைத்து விட்டதாகப் பேசிக் கொள்வார்கள்.

அந்த ஒலி கேட்டதும் விசோமெனிக்கா பரண்மீது கிடக்கும் றபானை நிமிர்ந்து பார்க்கின்றாள். அந்தப் பெரிய 'றபான்' தூசி மண்டி உம்மணா மூஞ்சியாகக் கிடக்கிறது. ஆறு பெண்கள்—என் ஆறு பெண்கள்; எட்டுப் பெண்கள் கூட—சுற்றி வர அமர்ந்து அடிக்கக் கூடிய பெரிய றபான் ஒன்றினைத்தான் அப்போச்சி வாங்கி இருந்தார். அவருக்குப் பெரிய கை. எதையும் பெரிதாகவே செய்வார். சட்டியிலே சிரட்டைச் சில்லுகளைப் போட்டு நெருப்பு உண்டாக்கி, றபானுக்கு கிரி அம்மா வெக்கை காட்டுவதே கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும். பரணிலே கிடக்கும் இந்த றபானின் கியாதியைக் கேள்விப்பட்ட பிறகுதான், இப்பொழுது முழங்கும் பெரிய றபானை வளவுஹாமு வாங்கியதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதுமாமி செல்லுவாள். இவற்றை நினைக்கும் பொழுது மெனிக்காவுக்குத் துக்கம் கட்டித்தது. அழ வேண்டும் போலவும் தோன்றுகின்றது. 'வெசாக் பண்டிகையும் அதுவுமாகக் கண்ணீர் வடிப்பது வடிவில்லை' என்று அறிவு உறுத்தவே அவள் வாசலுக்கு வருகின்றாள்.

அறைக்குள்ளே அடைந்து கிடக்கும் கிரிபண்டாவுக்கும் றபான் ஒலி கேட்கின்றது. அதனை ஒரு தடவை உற்றுக் கேட்டவன், எதுவுமே நடவாதது போலத் தன் வேலைகளிலே ஒன்றுகின்றான்.

போன வருஷமும் அதற்கு முந்தின வருஷமும் வெசாக் பண்டிகையை நாடித் தானம் எதுவும் கிரி அம்மா வீட்டிலிருந்து பன்சலவுக்குப் போகவில்லை. தானம் வழங்க வேண்டும் என்ற ஆசாரத்துக்குக் குறுக்கே கட்டித்த துக்கம் நின்றது.

அப்போச்சி—அவர்தான் கிரி அம்மாவின் கணவர்—இருக்கும் வரையில் தானத்துக்கான உணவு தயாரிப்பதற்கு அயலிலுள்ள பெண்களும் உதவிக்கு வந்தால் தான் முடியும். 'நிலமாதா விளைந்து தருகிறாள்; ஏழைகளுக்கும் கொடுக்க வேண்டும்' என்று நிறைந்த மனத்தோடு கூறுவார். காலையிலே பிள்ளைகளுக்குக் கிரிபத்தும் லுணுமிறிஸ் சம்பலும் பரிமாறும் பொழுது கிரி அம்மாவுக்கு மூக்கில் புரை ஏறிற்று. பெரிய சீவன் நினைத்தால் அப்படி ஏற்படும் என்பது நம்பிக்கை. 'நம்மால் முடிந்த அளவுக்கு ஏதோ செய்து பன்சலவுக்கு அனுப்ப வேண்டும்' என்று தீர்மானித்து விட்டாள்.

மகள் விசோமெனிக்காவும் அவளுடைய சிநேகிதி குமாரியுந்தான் கூடமாட உதவி செய்தார்கள். சூதுரு சம்பாவில் சோறு. போஞ்சிக்காயிலும் கத்தரிக்காயிலும் இரண்டு கறிகள். சீனிச் சம்பல். உருளைக் கிழங்கிலே அளஹொதி. பப்பாக்காய், பச்சைக் கொச்சிக்காய் சின்ன வெங்காயம், கடுகு, வினாகிரி எல்லாம் கிரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டா வாங்கி வந்தான். அவற்றைக் கொண்டு மெனிக்கா செய்யும் அச்சாறு பற்றி அப்போச்சி புகழாத நாளில்லை. அவள் தயாரித்த அச்சாறும் வைத்துத் தான் பொட்டலங்கள் கட்டி அனுப்பப்பட்டன. தானத் துக்குச் சமையல் செய்த பாத்திரங்களைக் குசினியி லிருந்து ஒதுங்க வைத்துக் கொண்டிருந்த பொழுதுதான் றபான் ஒலி, கிரி அம்மாவின் செவிகளிலே விழுந்தது. அந்த ஒலியிலே இணைந்து வந்ததாகத் தோன்றும் நினைவுகளிலே அவள் ஒன்றினாள்.

'மூக்குள்ள வரையிலும் சளிதான். பண்டிகை கொண் டாடவில்லை என்று சிறுசுகள் பெருமூச்சு விடுவதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? அப்போச்சியும், ரன்பண்டாவும் இருக்கும் வரையிலும் கிராமத்தில் ஒரு தனி மதிப்பு. அதோ, வளவுஹாமு வீட்டில் றபான் முழங்குகின்றது...றபான் முழக்கம் என்ன, வேறெந்த வகையிலேதான் இந்த வீடு குறைவாக இருந்தது?... பரம்பரை பாம்பரையாக வந்து சேர்ந்த சொத்தை வைத்துக் கொண்டு கூத்தாடுபவன் உடுராவண...தமது உழைப்பாலும், சொந்த முயற்சியாலும் முன்னுக்கு வந்தவர் இவர்...'

''குமாரியா? உன்னைத்தான் நினைத்துக் கொண்டு நின்றேன்.''

வாசலில் நின்றே விசோமெனிக்கா தன் சிநேகிதியை வரவேற்றாள்.

''அம்மா எங்கே?''

''குசினியில் போல...இந்த முறை தானம் செய்ய அம்மாவே முன்னுக்கு நின்றாள். ஆனாலும், றபான் ஒலி இல்லையாகி விட்டது.''

''றபான் ஒலிக்காவிட்டால் பரவாயில்லை. அதைக் கொஞ்சக் காலம் பரணியிலும் வைத்திருக்கலாம். அதையும் உன் அண்ணர் செய்த வெசாக் கூடுகளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொத்தி எறிய வேண்டும் என்று அம்மா ஒற்றைக் காலிலே நின்றாளே...''

''அண்ணன் செய்த வெசாக் கூடுகளை என்னால் கூடப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அவற்றை அரைகுறையாக விட்டு, அவரையும் அரைகுறையாகத் தெய்வம் பறித்துக் கொண்டதே.''

சிநேகிதிகள் தாழ்ந்த குரலிலேதான் பேசினாலும் குசினியில் இருக்கும் கிரி அம்மாவுக்கும் உரையாடல் கேட்கிறது. அவளுக்குப் பாம்புச்செவி என்றுதான் ஊரிலே சொல்வார்கள்.

'அப்போச்சி இறந்ததும், 'புருஷனைத் தின்னி' என்ற பட்டமும் வந்து சேர்ந்து கொண்டது. இருந்தாலும் குடும்பத்தின் முதல்வன் என்ற இடத்தை என் மூத்த மகன் ரன்பண்டா நிறைவாக ஏற்றுக் கொண்டான். இவர் அவனைப் படிப்புக்காகப் பட்டினத்திலே கொண்டுபோய் விட்டபொழுது, ஊரிலே என்னவெல்லாம் பேசிக் கொண்டார்கள். 'இவன் படித்துக் கவர்னர் வேலை செய்யப் போகிறானாம்' என்று சுதுமாமி படியேறி வக்கணை சொல்லாத வீடு பாக்கியில்லை. பள்ளிப்படிப்பை உதறித் தள்ளிவிட்டு ஊருக்குத் திரும்பியவன், குடும்ப பாரத்தைத் தன் தோளிலே இழுத்துப் போட்டுக் கொண்டான்... அவனுடைய வளர்த்தியும் அப்படித்தான்... கூலிக்கு ஆட்களை வைத்து நிலத்தைப் பார்த்து, அவனைப் படிப்பிக்கலாம் என்றுதான் நான் நினைத்தேன். அந்தப் பேச்சைக் கேட்கவே மாட்டான். அப்பனைப் போல, பாம்பாகச் சீறுவான்.'

''ரன் பண்டா அண்ணனின் ஞாபகமாக அவை இருக்கட்டுமே...'' என்று ஏதோ சொல்ல வந்த குமாரி, ''இது என்ன? வெசாக் கூடுகள் இருக்கும் அறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூட்டியிருக்கிறதே. உள்ளே யார்?'' என்று கேட்கிறாள்.

''தம்பி கிரிபண்டா இரண்டு மூன்று நாட்களாக அறைக்குள் அடைந்து கிடக்கிறான்... உள்ளே எவரையும் போக விடுகிறானில்லை... உனக்குத் தெரியுந்தானே அவனது குணம்?''

'பாம்பாகச் சீறியவனைப் பாம்பே கடித்துவிட்டது. அவனுக்கு திருஷ்டி கழித்திப் போடுவதிலேயே அரை வாசி நாள் போயிருக்கும்... என்ன வளர்ச்சி? என்ன புத்தி... இந்தச் சிறிய வயதிலே, நாலு பேரும் பொறாமைப் படக்கூடியதாக இந்தக் குடும்பத்தைத் தூக்கிக் கொண்டு நடக்க முன் வந்தானே! சனங்களின் எரிச்சலே பாதி... அவனுந்தான் என்ன? எவரும் பொறாமைப்படத்தக்கதாகவே நடந்து கொண்டான்! உடுராவண வீட்டிலேதான் வெசாக்கூடு பிரமாதமாக இருக்கும். ஆராய்ச்சி வீட்டிலும், அவனுடைய மச்சான் றாலஹாமி வீட்டிலும் அதற்கு அடுத்தபடிதான். அங்கெல்லாம் அவற்றைச் செய்து முடிப்பதற்கு எத்தனையோ கைகள். வெளியூர்களில் இருந்தும் வருவார்கள். ரன்பண்டா தன்னந்தனியாக வீட்டின் ஒரு மூலையிலிருந்து கட்டி முடித்து விடுவான்...வெசாக் கூடு என்றால் இலேசா?சாதாரண வேலையா?புத்த பகவான் பெற்ற நிப்பாண ஒளியை உருவகப்படுத்துவதற்கு நம் மனமே போதுமானது...என்றாலும், மூங்கில்களும் பிரம்புகளும் சேர்த்துப் பட்டை தீட்டிய வைரங்களைப் போல பல்வேறு கோண வடிவங்களிலே... அதற்குள் தேங்காய் நெய் ஒளிச்சுடர்... பார்ப்பதற்கு ஒரு மன நிறைவு...வீட்டுக்கு ஒரு பொலிவு.'

சிநேகிதிகள் இருவரும் கூடத்தில் அமர்ந்து பேசுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சென்ற முறை ஒற்றைக் காலில் நின்றான் தம்பி... மெழுகுதிரியை உள்ளே வைத்து எரிக்கக் கூடிய வெசாக் கூடு ஒன்றைத் தொங்க விடுவதற்கு அனுமதி தந்தாள் அம்மா.''

''லீனமாத்தையா கடையிலே வாங்கி எரித்ததைச் சொல்லுகிறாய்.''

''அது சரி...இன்று பன்சலவுக்குப் போக வேண்டும் குமாரி.''

''வெயில் தாழ... பின்னேரம் போல போய் வாறது வசதி.''

''ஆனால், எவரும் போறதுக்கு முன்னர் போய்விட்டு வரவேண்டும்... கூட்டத்தில் போய் நிற்க எனக்கு விருப்பமில்லை.''

'வருஷத்திலே ஒருமுறை வருகிற பண்டிகை...ஒத்த வயதுப் பெண்களெல்லாம்... வெள்ளை உடை அணிந்து, அரளி-மல்லிகை-வெண்தாமரை ஆகிய மலர்கள் நிரம்பி வழியும் பூத்தட்டுகளை ஏந்தி, 'பூவிலே மணம் எவ்வளவு நேரம் நிலைத்து நிற்குமோ, அதே போன்றுதான் நமது வாழ்க்கையும் நிலைத்து நிற்கின்றது; அந்தச் சொற்ப காலத்திலேயே நம்முடைய புண்ணியம் எல்லாவற்றையும் செய்ய உதவும் புத்த பகவான்' என்ற நினைவை மனம் எல்லாம் நிரப்பிக் கொண்டு போவது நல்ல வடிவு. வானத்திலிருந்து தேவ கன்னியர் இறங்கி வருவது போல் இருக்கும்.'

'இதுகள் இரண்டும் பாவம்...ரன்பண்டா இருந்திருந்தா தகப்பனுக்குத் தகப்பனாக இந்நேரம் மெனிக்காவுக்கு ஏதாவது ஓர்இடத்தில் பார்த்துமுடித்திருப்பான்...அவள் குமாரி...அவள்தான் ரண்பண்டாவை எண்ணி எண்ணி ஏங்கி இருந்தவள். எனக்கும் நல்ல விருப்பம்...வடிவைப் போல்தான் அவளுடைய குணமும்... ரண்பண்டா அவளுக்காக வெசாக் கூடு செய்வதற்குப் பிரம்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூங்கிலும் எடுக்கப்போய்த் தானே இறந்தான்? பாம்பு பிரப்பம் பற்றைக்கு மட்டுந்தானா வரும்?'

''பன்சலவுக்கு உணவுப் பொட்டலங்கள் அனுப்புவது பற்றி அம்மா காலையிலேதான் தீர்மானித்தாள்.''

''நீதான் சொன்னியே...சிறிது சிறிதாக அம்மாவும் தேறுதல் அடைகிறாள்... இரண்டு வருஷங்கள் பன்சல வுக்கு ஒன்றும் அனுப்பவில்லை.''

'அப்போச்சியைப் போலவே ரண்பண்டாவும், நிலமாதா விளைந்து தருகிறாள்; ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டும்' என்று நிறைந்த மனத்தோடு கூறுவான்... ஏன், இவர் போனபிறகு கூட நிலத்தில் விளைச்சல் குறையவே இல்லை. ரன்பண்டா நாலு முழு ஆண்கள் செய்யக்கூடியவற்றைத் தனியே செய்தான். முதல் முறை—அதுதான் அப்போச்சி போனதும், பள்ளிப் படிப்பை உதறி விட்டு ஊருக்கு வந்து 'நான் இருக்கிறே னம்மா' என்று கூறிக்கொண்டு வயலுக்குப் போனானே அந்த முறை— விளைச்சலைப் பார்த்து எல்லோரும் பிரமித்துவிட்டார்கள்... சூடடித்துக் கட்டி வைத்தபின் ஓடிவந்து சொன்னான்...போய் ஒரு தடவை கண்குளிரப் பார்த்துவிட்டு வந்தேன். சூட்டு மேட்டிலே நல்ல பாம்பு ஒன்று படுத்திருந்தது. பாம்பைக் கொல்ல எல்லோரும் ஓடினார்கள். நான்தான் அவர்களைத் தடுத்து நிறுத்தி னேன்'

''ஒன்று...உன் அம்மாவுக்கு என் மீது எப்பொழுதும் ஒரு கோபம் இருக்கவே இருக்கும்,''

''ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?''

''குமாரிக்காகவே ரன்பண்டா பாம்புக்கடியுண்டு இறந் தான்' என்று எல்லாரும் நம்புகிறார்கள்...''

''அப்படிச் சொல்லாதே குமாரி...பாம்புக்குப் பெரிய மரியாதைகள் கொடுத்துப் பூஜைகள் வைத்துத் திரிந்தவ அம்மா.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பாம்பைப் பார்த்தால் தெரியுமே...பொன் நிறமாக இருந்தது...நன்மைக்கு வந்த நல்ல பாம்பு... தீமைக்கு வருவதென்றால் சீறிப்பாய்ந்து உடும்புத்தோல் போலக் கரடுமுரடான உடலுடன்...இது இறந்து போன பெரிய சீவன்... யார் என்ன சொன்னாலும் அதைக் கொல்லக் கூடாது என்று நான்தான் கூறினேன். ரன்பண்டாவின் விளைச்சலைப் பார்த்துப் பூரித்தபடி அது சூட்டு மேட்டிலே படுத்துக் கிடந்தது.

'விளைச்சலை வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்தான். அதன் பின்னர் நல்ல பாம்பு வீட்டுக்குவர ஆரம்பித்தது. முற்றத்திலே கற்குவியலின்மீது வெய்யில் காய்ந்து கொண்டிருக்கும். அதற்கு ஒருவிதத் தொந்தரவும் செய்யக்கூடாது என்று பிள்ளைகளிடம் கண்டிப்பாகக் கூறிவிட்டேன். வெற்றிலை வைத்துக் கேட்ட பொழுது, சோதிடர் என்ன கூறினார் தெரியுமா? 'மகனையும் உன்னையும் பார்த்துக் காவல் புரிய வந்துள்ளது. ஒரு தீங்கும் செய்து விடாதே' என்றார்.'

''நல்லபாம்பு, பெரிய சீவன்... அதற்கு மரியாதை கொடுத்தாள். ஆனால் இறுதியில் என்னவாயிற்று?''

''குமாரி! அந்தப் பேச்சை விடு. பேசுவதில் என்ன பயன்?''

''அந்தப் பாம்பைக் கொல்வதற்குப் பலர் ஆயத்தமானார்கள். அதை அறிந்து கொண்டதுபோல் அது காணாமற் போயிற்று. நான் அதைத்தான் சொல்ல வந்தேன்.''

'இவர்களுக்கு என்ன தெரியும்? அந்தப் பாம்பைக் கொன்றிருந்தால் ரன்பண்டா பிழைத்திருப்பானோ? இந்த லோகத்திலேயே ஒரே ஒரு நல்லபாம்புதானா இருக்கிறது!... அப்போச்சி இறந்ததும் குடும்பச் சுமையை என் வயிற்றிலே பிறந்தது தனியாகத் தூக்கும் படி ஆயிற்று... இவன் இளையவன்—கிரிபண்டா—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டும் ஒரு மாற்றுக்குறைந்தவனா? மூத்தவன் எள் என்றால் எண்ணையாகக் கொண்டு வருவான்... இவன் அதற்கும் ஒருபடி உயர்வாக அல்லவா இருக்கிறான்...? இருந்தாலும் நான் அவனை என் 'நெரிய'வில்— கொய்தகத்தில்— இழுத்துத் திரிகின்றேன்.

'அவன் பெரிய மேதையாக விளங்கவேண்டும் என்ற ஆசை எனக்குக் கிடையாது. பெரிய படிப்பு இல்லாத பிள்ளையாகவே இருந்துவிட்டுப் போகட்டும்... அவன் ஆண்பிள்ளை...வாழப்பழகிக் கொள்வான். நான்குநாட் களுக்கு முன், மூங்கில்களையும் பிரம்புகளையும் கட்டிக் கொண்டு வந்தான். பார்த்ததும் என் சர்வாங்கமும் நடுங்கி வெலவெலத்துப் போச்சுது. இவனும் ஆரம் பித்து விட்டானா? இவன் எந்தப் பாம்புப் புற்றுக்குள் கைவிடப் போகிறானோ?... சாண் பிள்ளையானாலும் ஆண்பிள்ளை. தொடர்ந்து கைக்குள் பொத்திப்பொத்தி வைக்க முடியுமா? 'நீங்கள் சும்மா இருங்கோ...நான் ஒன்றும் பெரிய வேலை செய்யவில்லை. அண்ணன் கட்டிய வெசாக் கூடுகளைக் கொஞ்சம் சரிசெய்து பார்ப்போம்' என்று கூறிக்கொண்டு இந்த அறைக்குள் அடைந்து கிடக்கிறான், இரண்டு மூன்று நாட்களாக...

'ஏதோ வீட்டுக்குள் இருக்கின்றான் என்ற அளவில் நிம்மதி...நான் என்ன செய்ய முடியும்? உண்மையில் என்னால் எதையும் செய்ய முடிந்ததா? அப்போச்சி யையும் மூத்தவனையும் அள்ளிக் கொடுத்துவிட்டு மலை மாதிரி இருக்கிறேன்... வேறென்ன...? எதையும் தாங்கக்கூடிய மாதிரி இதயம் கல்லாகி விட்டது... இன்று 'சில்'. இந்த விரதங்களினால் எனக்கு என்ன புண்ணியம் கிடைக்குமோ...? கிடைத்ததெல் லாம்போதும்... இவன் கிரிபண்டா பன்சலவுக்குப் போகி றானா என்று ஒருமுறைக் கேட்டுக் கொள்ள வேண்டும். எங்கே அவன் அறையை விட்டு வெளியே வருகிறா னில்லையே.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மெனிக்கா! நீ ஒன்றும் கோபிக்கக் கூடாது...உனக்கு எல்லாம் தெரியும். நான் ஏதாவது உன் அண்ணரிடம் பேசியிருக்கிறேனா?''

''குமாரி...அவராகத்தான் உனக்கும் ஒரு வெசாக்கூடு செய்து தருவதாகக் கூறினார். அதன்படி செய்து முடிக்கக் கொடுத்து வைக்கவில்லை... சரி. பன்சலவுக்குப் புறப்படுவோமா?''

''சனம் கூடுவதற்கு முன்னர் போய்விட்டு வருவோம்... அம்மா என்ன சொல்கிறார்...? போகக்கூடாது என்கிறாளா?''

''அவள் இப்பொழுது எதுவுமே பேசாதவளாகிவிட்டாள். நாங்களாகப் பார்த்து நல்லதென்று செய்தால் அவளுக்குச் சந்தோஷந்தானே?''

'**என்ன** இது? பொழுது சாயும் நேரத்தில் தூங்கி வழிகின்றேன்...மெனிக்கா குமாரியுடன் பன்சலாவுக்குப் போய்விட்டாள் போலிருக்கிறது... அவன்—கிரிபண்டாவை—ஓரிடமும் காணோம்... எதற்கும் முதலில் போய் முகத்தைக் கழுவிக் கொண்டு வந்து விளக்கு வைப்போம்.'

புத்த பகவானின் சிலைக்கு மலர் சாத்தி அதற்கு முன்னால் உள்ள தேங்காய்நெய் விளக்கில் சுடர் ஏற்றி, வணங்கிய பின்னர், கிரிஅம்மா வாசலுக்கு வருகிறாள்.

வானவில்லின் அத்தனை நிறங்களையும் அப்பியதாக ஜால வித்தை புரியும் வெசாக் கூடுகளின் ஒளித்திரள்களினால் கிராமமே புத்தம் புதிய அழகுப் பொலிவுடன் சௌந்தர்யம் சிந்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு இடங்களிலும், மூங்கில் கம்பங்களிலே, பல்வேறு அமைப்புகளிலும், அளவுகளிலும், நிறங்களிலும் தொங்கும் வெசாக் கூடுகளைப் பார்க்கிறாள்.

'வளவுஹாமு வீட்டிலேதான் ஆகப்பெரிய வெசாக்கூடு தொங்குகின்றது. ஆராய்ச்சியார் வீட்டிலும், றாலஹாமி வீட்டிலும் சென்ற வருஷத்தைப் போலதான் கூடுகள். எந்த மாற்றமும் இல்லை.

'இதோ, எங்கள் வீட்டிலே பென்னம் பெரிய வெசாக் கூடு... இப்பொழுதுதான் புரிகிறது. இது கிரிபண்டாவின் வேலை...அறைக்குள் அடைபட்டுக் கிடந்து இவன் இந்த வேலையைத்தான் செய்திருக்கிறான். எங்கள் வீட்டுக்கு முன்னால் தொங்கும் இந்த வெசாக்கூட்டின் அழகை எதுவும் மிஞ்ச ஏலாது. கண்ணில்லாதவன்கூடச் சொல்லிவிடுவான்.'

கிரி அம்மாவின் கண்களிலே நீர்த் திவலைகள் பனிக்கின்றன.

வீட்டு வாசலில் தொங்கும் வெசாக்கூட்டிலே சிக்கிய பார்வையைப் பிரித்தெடுத்து கண்களைத் துடைத்துக் கொண்டு, பன்சலவின் திசையிலே உள்ள பாதையைப் பார்க்கிறாள்.

சற்றுத் தூரத்தில் விசோமெனிக்காவும் குமாரியும் பன்சலவிலிருந்து திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்.

'பாவம். இரண்டும் குமரிப் பெண்கள். தூரத்தில் பார்த்தால், இரட்டைப் பிள்ளைகளைப் போல...பெற்றாருடைய திருஷ்டியும் பிள்ளைகளுக்கு ஏற்படுவது உண்டாம்.'

கிரி அம்மாவுக்கு சமீபத்தில் வந்துவிட்ட அவர்கள் வானவில்லின் அத்தனை நிறங்களையும் அப்பியதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜாலவித்தை புரியும் வெசாக் கூட்டை வைத்த கண் வாங்காமல் பார்க்கிறார்கள்.

''மெனிக்கா! நான் பொய் சொல்லவில்லை. இப்படி ஓர் அழகான வெசாக் கூட்டை நானென்றால் என் வாழ் நாளில் பார்க்கவில்லை.''

''குமாரி! அதோ, உங்கள் வீட்டிலும் வெசாக்கூடு ஒன்று ஏற்றப்படுகின்றது...''

''யார் ஏற்றுவது? எனக்குப் பெரிய புதினமாகத்தான் இருக்கிறது...''

''இன்னொரு புதினமும் இருக்கிறது. இந்த வெசாக் கூடும் உங்கள் வீட்டில் ஏற்றப்படும் வெசாக்கூடும் ஒரே அச்சில் வார்க்கப்பட்டவையாக இருக்கின்றன.''

மேல்மூச்சு கீழ்மூச்சுவாங்கக் குமாரியின் தங்கை—கொமலி நங்கி—ஓடிவருகிறாள்.

''எங்கள் வீட்டிலே யார் வெசாக் கூடு ஏற்றுவது?'' என்று குமாரி அவசரமாகக் கேட்கிறாள்.

''கிரிபண்டா அய்யாதான் ஏற்றிக் கொண்டிருக்கி றார்...'' என்று கொமலி நங்கி குதூகலத்துடன் கூறு கின்றாள்.

நிலத்தில் கால்கள் நிற்கமாட்டாத அவ்வளவு மகிழ்ச்சி அவளுக்கு.

''மெனிக்கா, வாவன் போய்ப் பார்ப்பம்... கிரி அம்மா, நான் இவளை எங்கள் வீட்டுக்கு அழைத்துப் போகின் றேன்...''

குமாரியின் வீட்டிலே ஏற்றப்படும் வெசாக் கூட்டை—தன்இரண்டு புத்திரர்களின்கூட்டு முயற்சியாக இயற்றப் பட்ட வெசாக் கூட்டை—பார்த்துக்கொண்டு கிரி அம்மா நிற்கின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கம் என்று சொல்ல முடியாது. அவளுடைய கண்கள் பனிக்கின்றன.

குமாரியின் வீட்டில் ஏற்றப்பட்ட வெசா கூட்டின் வெளிச் சத்தில் கிரிபண்டாவின் சிறிய உருவமும் தெரிகின்றது. 'இவன் சரியாக அப்போச்சியின் சாங்கம்' என்ற கிரிஅம்மாவின் நினைவு, நம்பிக்கையின் ஒளியிலே சுருதி சுத்தமாக இழைகின்றது.

குமாரியின் வீட்டிலிருந்து புதிதாக 'றபான்' ஒலி மிதந்து வருகிறது... ○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை



# ஆற்றை

## தினகரன்

**1972-ஆம் ஸு ஜனவரி மீ 21-ந் வ**

யுத்த நிறுத்தத்தை மீறியதாகப் பாகிஸ்தான் குற்றச்சாட்டு. பிரிட்டனில் பத்து இலட்சம் பேருக்கு வேலை யில்லை. ஜனாதிபதி பூட்டோ துருக்கி செல்கிறார். கெய்ரோ பல்கலைக்கழக மாணாக்கர் ஆர்ப்பாட்டம். நகல் அரசியல் அமைப்பில் கோரப்படும் திருத்தங்கள். இலங்கை வந்துள்ள ஜெர்மன் வர்த்தகர்கள். கொழும்பு விமான நிலையம் கூறும் வசிய மந்திரக் கதை. காலியின் புதிய மேயர். கார்த் திருட்டைத் தடுக்க நடவடிக்கை. திரைப்படக் கூட்டுத்தாபனம் உதயம். பள்ளி மாணவிகள் கவுண் அணிவதற்குத் தடை. களு அல்பட் தூக்கிலிடப்பட்டார். பம்பாயில் சோவியத் நடனம். இன்று தேவார இசை விருந்து. தினகரன் செய்தியால் கிட்டிய பலன். ''நான் துன்புறுத்தியதால் மனைவிக்கு மனநோய் ஏற்படவில்லை!'' தொழிலாளரிடையே வேற்றுமை கூடாது. கைக்கடிகாரம் களவு. கள்ள நோட்டு அச்சடித்ததாகக் குற்றச்சாட்டு. கிழக்கு ஜெர்மனியை இந்தியா அங்கீகரிக்கலாம். 100-வது தினம் அன் ஈவினிங் இன் பரீஸ். ஆப்கான் பிரதமரின் சோவியத் விஜயம். புதிய சீன வெளிநாட்டு மந்திரி காலமானார்.

பிரபல எழுத்தாளரும் பாடவிதான அபிவிருத்தி நிலையத்தில் கடமையாற்றுபவருமான திரு. எஸ். பொன்னுத்துரையின் தந்தை திரு. ஆறுமுகம் சண்முகம் காலமானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# II

**அப்புச்சி** வீட்டின் படலை கிறீச்சிடுகிறது.

''ஆரது?'' என்று கேட்டு ஒரு தடவை செருமியபடி, படலைப் பக்கமாக அப்புச்சி தன் பார்வையை எறிகிறார்.

மரப் பாலத்தின் மீது நாய் வருவது தெரிகிறது.

''அட, பொலிஸே? உமக்கும் இப்ப ஊர் உலாந்து மிஞ்சிப் போச்சுது...'' தனக்குத்தானே பேசிக்கொள்ளும் குரலிலே அப்புச்சி முணுமுணுக்கிறார்.

'பொலிஸ்' என்ற பெயர் பூண்டு வளரும் நாய், அவருக்குச் சமீபமாகச் சென்று வாலையாட்டி, ஒரு 'லொள்!'

தமிழர் தலைநகரம் என்கிற கியாதி எப்பொழுதும் யாழ்ப்பாணத்துக்கு உண்டு. பண்ணைக் கடலைப் பார்த்துக் கோட்டை தூங்கிக் கிடக்கும். அதன் இதயத் துடிப்பாக இயங்குவது பெரியகடைப் பகுதியே. அந்த இயக்கத்துடன் தொடர்புபட்ட நாளங்களாகவும் நாடிகளாகவும் ஆஸ்பத்திரி வீதி, பஸார் தெரு, கே. கே. எஸ். றோட், கஸ்தூரியார் வீதி ஆகியன விளங்கும். ஆஸ்பத்திரி வீதியுடன் 'T' முச்சந்தி போட்டு, முள்ளந்தண்டாக நீளும் கஸ்தூரியார் வீதி, வண்ணான் குளத்தையும் வின்ஸர் தியேட்டரையும் தாண்டி இந்துக் கல்லூரி மைதானம் நோக்கி நீளுகின்றது. அது கன்னாதிட்டி வீதியைக் குறுக்கறுக்கும் முச்சந்தியின் தென்மேற்கு மூலையின் முகப்பாக ஒட்டிக்கொண்டிருக்கிறது, பிரபலமான துரையப்பாப் பத்தரின் நகைக் கடை. அந்தக் கடையைப் பார்த்துக் கொண்டிருப்பது போல, வீதிக்குக் கிழக்கில், ஒரு 'தவ்வால்' பெட்டி. அது தன் கங்கிறீட் உடம்பை சிவப்பு வர்ணத்தில் தோய்த்து வைத்திருக்கிறது. சந்தியில் நின்று பார்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால், மேற்கில் வண்ணை வைதீஸ்வரன் கோயிலின் கோபுரவாசல் தெரியும். கிழக்கில் காளி கோயில். காளி கோயில் திசையில், கன்னாதிட்டி வீதியில், முப்பது யார் நடந்தால், இடக்கைப் பக்கமாக அப்புச்சி வீட்டுப் படலை. சந்திக்கும் குளத்துக்குமிடையில் அப்புச்சியின் படலைக்கு ஏக ஆட்சி.

படலையின் மேல் பகுதி, பழைய லொறி எஞ்சின் மூடி ஒன்றை நீட்டியடித்துச் செய்யப்பட்டது. கீழ்ப்பகுதி தகரம். ஒரு காலத்தில் அந்தப் படலைக்கு நீலப் பெயின்ற் அடிக்கப்பட்டிருந்தது என்பது வேலைமினக் கெட்டு ஊன்றிப் பார்ப்பவர்களுக்கு மட்டுமே தெரியும். அந்தப் படலையைப் புதுக்கும் எண்ணம் மட்டும் அப்புச்சிக்கு என்றும் தோன்றியதில்லை.

படலையைத் திறந்தால் கன்னாதிட்டிக் குளத்தை வண்ணான் குளத்துடன் தொடுக்கும் வாய்க்கால். மாரியின் இரண்டு மாசங்கள் தவிர, வாய்க்கால் வறண்டு கிடக்கும். அதற்கு மேலாக ஒரு மரப் பாலம். வளவில் பத்துப் பன்னிரண்டு தென்னை மரங்கள். குளப் பக்கக் காணியை மேடு படுத்திய பொழுது, புதிதாக நாலைந்து கன்றுகளை நட்டி ருந்தார். அவைக்கும் பாளை வந்து விட்டன. ஆண்டு தோறும் அவற்றுள் பேர்பாதி மரங்களை அப்புச்சி கள்ளிறக்குவதற்குப் பயன்படுத்திக் கொள்ளுவார். அதன் நடுவில், இரண்டு அறைகளும் விறாந்தையும் கொண்ட வீடு. பச்சை மண் சுவர் என்றாலும், நீறுபூசி, வெள்ளை அடிக்கப்பட்டு, எளிமையின் தூய்மை தூக்கி நிற்கின்றது. சின்னத்துரை மேசனின் கைவண் ணத்தைப் பறைசாற்றி, 'கிறில்'களுடன் அமைந்த அலங்கார வாசற்படிகள். சின்ன அறையைத் தொடுவது போல, கொட்டைப்பாக்குக் கணியம் அடுக்களை. பெரிய அறையின் தெற்குக் கூரையைத் தாங்கும் வளையி லிருந்து பத்தி இறக்கி, கோடிப் பக்கம் உள்ளிடிந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல ஒரு கொட்டில். அந்தக் கொட்டில் வீட்டுடன் ‘டு’ போட்டு ஒளிந்திருப்பது போலத் தோன்றும்.

கொட்டிலின் நடுவே தொங்கும் கயிற்றிலே கட்டப்பட்ட அரிக்கன் லாம்பு ஒன்று கொட்டிலுக்குள் மங்கலான வெளிச்சம் பரப்புகின்றது.

வியாபாரம் சோர்ந்து போகும் நேரம்.

அண்ணாமலை கடைசி மிடறு கள்ளைக் குடித்து முடிக்கின்றான்.

அப்புச்சி இடக்கையால் மூக்கைச் சீறி கொட்டிலுக்குப் பக்கத்தில் நிற்கும் செவ்விள நீர்க் கன்றிலே துடைக்கின்றார்.

‘‘அப்புச்சி கொட்டப்பெட்டியிலை கிடக்கிற புகையிலை ஒரு நெட்டி தாவன்...’’ புளாவில் மிஞ்சிய மண்டியைக் கொட்டில் குந்துக்கு வெளியில் ஊற்றி, அதனைக் கொட்டில் வளையில் தொங்கிய கம்பியில் கொழுவிவிட்டபடி அண்ணாமலை கேட்கிறான்.

‘‘உமக்கும் அப்புச்சியின்ரை பொயிலை ருசி நல்லாப் புடிபட்டுது போலை...’’ புளுகத்திலே மலரும் முறுவல் இதழ்க் கோடியிலே சுழிய, அப்புச்சி அரிக்கன் லாம்புக்கு முன்னால் வந்து கொட்டப்பெட்டியைப் பக்குவமாகத் திறக்கிறார்.

‘‘அப்புச்சி கைக்குளன் சந்தைக்குப் போய் ரூபாக்கு ஒரு பொயில எண்டு திறமாய்ப் பார்த்து வாங்கிறவர் எண்டது இஞ்சினை ஆருக்குத் தெரியாது?’’ என்று கேட்டு, எச்சில் தூவானம் பறக்கச் சிரித்து, பாக்குச் சீவலையும் வெற்றிலையையும் போட்டுக் குதப்புகிறான் அண்ணாமலை. சரியாக ஒரு வாய் வெற்றிலைக்கு அளவாகப் புகையிலை நெட்டியைக் கிள்ளிக் கொடுத்து, கொட்டப் பெட்டியை மீண்டும் நெருப்புப் பெட்டியுடன் சாறன் மடியிலே கட்டிக் கொள்ளுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உந்த வின்ஸர் மடுவத்தடியிலை ஒரு கலாதியாம்'' என்று கூறிப் புகையிலையைப் போட்டு அதப்புகிறான் அண்ணாமலை.

''தகரக் கொட்டகையிலைதானே?... ஓமோம். நானும் கேள்விப்பட்டனான். கொட்டடிப் பொடியன் ஒருத்த னுக்கு, இவன் ஆரியகுளத்தடியான்—பேர் நெஞ்சுக்கை கிடக்கு; வரமாட்டன் என்குது—இவன்தான் மேசன் நாகநாதியின்ரை மேன், அடிச்சுப் போட்டானாம். இவனுக்கு நல்ல கை வீச்சும்...''

''வசுக்கோப்பு முதல் ஆட்டம் கலையேக்குள்ளை கலம்பகம் பெருத்தாலும் பெருக்கும் போலை...''

''சாய்...''

''இல்லை அப்பு... இவன் செல்லத்தம்பியும் கொஞ்சம் அஞ்சனந்தாழ்வுப் பொடியளைக் கூட்டிக் கொண்டு போறானாம்... கொட்டடியாருக்கு ஒண்டென்றால் அஞ்சனத்தாழ்வான்கள் விடமாட்டான்கள்...''

''இது அண்ணாமலை ஒரு பழைய கறள். அவள் தாரக்குளத்தடிக் கங்காணிப் பொட்டையாலை—அவள் தான் அந்தமான்சுப்பரின்ரை பொறாமேளாலை—வந்த வினை. அவளுமோ எல்லாருக்கும் பாசு காட்டுறவள். புறத்தி ஆக்கள் எண்டாத்தான்—கரையூர் போலை எண்டாத்தான்—இவங்கள் தலை போடுவான்கள்... நீரும் நேர காலத்தோடை எழும்பி நாளைக்குச் சுன் னாகம் சந்தைக்குப் போக வேணுமல்லே?... கையோடை போய்ச் சாப்பிட்டிட்டுப் படும்.''

''அப்ப வாறன்...''

''இஞ்சை, அண்ணாமலை. மத்தியானம் போலை ஒரு ரூபாய் தந்திட்டு ஒண்டரைப் போத்தில் அல்லே குடிச்சனீர்? மிச்சம் எடுத்தனீரே?''

''எனக்கெண்டா ஞாபகம் இல்லை அப்புச்சி...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நான் கதைப் பிராக்கிலை இருந்திட்டன். நீர் போட்டீர். இந்தாரும் நாலு பணம்.''

படலை கிறீச்சிடுகிறது.

அண்ணாமலை படலையைத் திறந்து வீதியில் இறங்குகிறான்.

மீண்டும் படலை கிறீச்சிடுகிறது.

''ஆரது?''

''அது உங்கடை மூத்தவர்...'' நடக்கும் வாக்கில் அண்ணாமலையின் குரல் கேட்கின்றது.

'தம்பியும் வந்துட்டான். நேரம் எட்டுக்கு மேல இருக்கும். கலப்புக்கு எடுத்து வைச்சதைவிட ஒரு சாடி கள்—அது வள்ளிசாக இரண்ரைடக் கலன் கொள்ளும்—விலை போகாமல் கிடக்குது. வசுக்கோப்புக் கலைஞ்சால் கொஞ்சம் போகும். இதுவும் ஒண்டு. அவன்கள் வந்தால் படக்கதைகளைச் சளப்புவான்கள். சின்னப்பாதான் பெரிசு என்பான் ஒருத்தன். மற்றவன் தியாகராஜபாகவதரோட நாண்டு கொண்டு சாவான். பேந்து டி.ஆர். ராஜகுமாரியின்ரை வடிவை வர்ணிச்சு வீணீர் விடுவான்கள். நரகல் கதைகள். அதுகளாலை, இஞ்சாலை பிள்ளைகளின்ர படிப்புக் குழம்புறது வடிவில்லை...' அப்புச்சி நினைத்துக் கொள்ளுகிறார்.

'கத்தரிக்காயும் கணவாய் மைச்சொதியும் கொஞ்சம் சளிச்சிருக்கும். ஒருக்காச் சூடுகாட்டி எடுக்கிறதுதான் புத்தி.' இந்த நினைவுகளுடன் கை விளக்கு ஒன்றை எடுத்துக் கொண்டு குசினிக்குள் நுழைகிறாள் ஆச்சி.

மூத்தவன் கிணற்றடிக்குச் சென்று கை கால் முகம் கழுவிக் கொண்டு, விறாந்தையில் ஏறுகிறான். 'தம்பி உதிலையெல்லாம் வலு ஒழுங்கு. விபூதி மட்டும் பூச மாட்டான். அவன் தன்ரை மச்சான் எம்.ஸீ.யின்ரை கட்சியல்லே...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விறாந்தையில் போடப்பட்டு இருக்கும் மேஜையில் அமர்ந்து 'பெண்பிளை'ப் பிள்ளைகள் படித்துக் கொண் டிருக்கிறார்கள். குசினியிலிருந்து ஆச்சி குரல் கொடுக் கிறாள். மூத்தவள் ''ஓம் ஆச்சி'' என்று பதில்.

''படிப்புப் படிப்பு எண்டு, கதிரையிலை காலுக்கு மேல கால் போட்டுக் கொண்டிருந்தால் சரியே? கடுக்கண்டு மூண்டு நாலு வரியமாகுது. குசினி வேலை ஒண்டும் தெரியாது... நீ ஆசைப்படுறாய் எண்டுதான் படிப்பிக் கிறம். பேந்தென்ன? வெள்ளாம் பொடிச்சியளைப் போல உத்தியோகத்துக்குப் போறதா? மேசையில உள்ள புத்தகங்களை ஒதுங்க வைச்சிட்டு, கொண் ணரின்ரை சாப்பாட்டை எடுத்து வையன். அவனுக்கு மேசையில இருந்து சாப்பிட்டாத்தான் பொச்சம்.''

''ஓம், புள்ளையள். சாப்பாட்டை முடிச்சுப் போட்டு வந்து படியுங்கோவன். கோச்சியும் கோழியளோட எழும்பி, கழுவுறதும்- துடைக்கிறதும்- மினுக்கிறதும்- படைக்கிறதுமாகத்தான் இருக்கிறா. சாப்பிட்டிட்டு விட்டால் அவவும் கொஞ்சம் இடுப்பைச் சரிச்சுப் படுத் துக்கொள்ளுவாவல்லே?'' அப்புச்சி கொட்டில் குந்தில் அமர்ந்தபடி சொல்லுகிறார்.

மூத்தவன் மேஜையில் அமர்ந்து சாப்பிடுகிறான். தங்கை கள் குசினிக்குள் சாப்பிடுகிறார்கள். இவ்வளவு நேரமும் 'நிறுத்து'க் கொண்டிருந்த இளையவனுக்கு ஆச்சி ஊட்டுகிறாள்.

''புள்ளை, எழும்பிப் போய் ஒருக்கா கொண்ணரின்ரை கோப்பையைப் பாத்திட்டு வா. ஒரு இளந்தாரிப்பிள்ளை சாப்பிடுற சாப்பாடே சாப்பிடுறான்? இவன் படிக்கிற படிப்புக்கு இப்பிடியே நன்னுறது? அந்த முட்டையை எண்டாலும் எடுத்து வைச்சுத் தின்னச் சொல்லு...'' மூத்தவனின் செவிகளிலே விழவேண்டும் என்பதற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காகத்தான் ஆச்சி இப்படிச் சொன்னாள். 'சொல்லுற துக் கெண்டாலும் ஒரு கவளம் கூடத் தின்னுவான்.'

மூத்தவன் ஆச்சி சொன்னதுக்காக ஒரு வாயும், அப்புச்சி பார்த்துக் கொண்டிருப்பதற்காக இன்னொரு பிடியும் அதிகப்படியாகவே சாப்பிட்டுக் கையைக் கழுவுகிறான்.

'இதுக் கிடையிலை சாப்பிட்டிட்டான். இவன்ரை வயசிலை ஒரு முட்டைப் பொரியலோடையும் ரெண்டு பச்சை மிளகாய் வெங்காயத்தோடையும் ரெண்டு நீத்துப்பெட்டி புட்டைச் சாப்பிடுவன். அப்பவும் அரை வயித்துக்குச் சாப்பிட்டது போலைதான் இருக்கும். இதுவும் ஒண்டு சொல்ல வேணும். இவன் மெட்றா ஸிலை படிக்கத் துவங்கினாப் பிறகு தில்லைப்பிள்ளை கடைத்தோசை இரவிலை சாப்பிட்டாத்தான் பத்தியம். நான் எண்டால் இண்டைக்கு அயத்துப் போனன்.'

''எடுத்து வைச்ச சோறு அப்பிடியே கிடக்குது'' என்று கூறிக்கொண்டே பீங்கானையும் கறி ஏனங்களையும் குசினிக்குக் கொண்டு போகிறாள் மூத்தவள்.

மூத்தவன் வைத்த மிச்சப் பீங்கானிலே மத்தியானச் சோற்றுப் பானையிலே மீதமிருந்த சோற்றைப் போட் டுக் குழைக்கிறாள் ஆச்சி. மற்றைய ஏனங்களை மூத்த வள் கழுவுகிறாள்.

'இளையவள் வீட்டு வேலைக்குப் படுகள்ளி. கடைக் குட்டியன் போன போக்கிலே விறாந்தையில் படுத்திட் டான்.'

படலை கிறீச்சிடுகிறது.

''ஆரது?'' சில்லறைகளைக் கணக்குப் பார்த்துக் கொட்டப்பெட்டிக்குள் போட்டுக் கொண்டிருந்த அப்புச்சி கேட்கிறார்.

''அது...தம்பி'' ஆச்சி குசினிக்குள் இருந்தே பதில் தந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எங்கை போறானாம்?''

''சாப்பிட்டாப் பிறகு கொஞ்சம் உலாத்த வேணுமாம். உந்த புதுமோடிப் பழக்கங்களை எல்லாம் மெட்றாஸிலை படிச்சுக் கொண்டு வந்திருக்கிறான்.''

''அதுக்கு? வசுக்கோப்பு மடுவத்தில கலம்பகமாம்.''

''இவன் இஞ்சாலை காளிகோயில் பக்கமல்லே போறான். இஞ்சாரப்பா, நீங்களும் வாங்கோவன். ஒரு குழையல் தாறன். இவன் தம்பி உம்பாரம் மிச்சம் வைச்சிட்டான். வீணாகக் கொட்ட வேணும்.''

சாப்பிட்ட பிறகு சிகரெட் ஒன்றைப் புகைப்பதை மூத்தவன் பழக்கமாக்கிக் கொண்டிருக்கிறான். 'உதென்ன பழக்கம்? பேந்து கசம் புடிச்சு தேகம் உக்கி அல்லோ போகும்' என்று ஆச்சி கண்டித்தாள். 'நித்திரை முழிக்கிறதுக்குத்தானெணை இதைப் புகைக்கிறது' என்று மூத்தவன் நியாயம் கற்பித்தான். அப்புச்சிக்குத் தெரியாமல் ஆச்சி அதைப் பூசி மெழுகுகிறாள்.

அப்புச்சி குசினிக்கு வருகிறார்.

''உன்னாணையப்புச்சி கையை உதிலை குடத்துத் தண்ணியிலை கழுவிப் போட்டு வாருங்கோ... கையோடை ஒரு பூவரசம் இலையும் ஒடிச்சுக்கொண்டு வாருங்கோ...நான் ஒரு திரளை குழைச்சுத் தாறன்.''

''எனக்கு ஒரு மாதிரியா நெஞ்சுக்கை எரிக்குது. சோறு வேண்டாம். உதிலை இருக்கிற கணவாய் கூந்தலை மட்டும் எடுத்துத்தாணை...''

''ராச்சாப்பாடு இல்லாமல் படுத்தால் பத்து யானைப் பலமல்லே குறைஞ்சு போகும்... கொஞ்சமாக் குழைச்சுத் தாறேன் அப்புச்சி. கொஞ்ச நாளா உங்கடை உடம்பு எப்பிடிக் கொட்டுண்டு போச்சுது?''

கூந்தலைச் சாப்பிட்டுக்கொண்டே, ''அது கிடக்க, எங்கடை பேடுகள் அடையோ?'' என்று கேட்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நாலு பேடுகளும் முட்டை இடுகினம்.''

''விடியப்புறம் ஒரு முட்டைக் கோப்பி அடிச்சால் எல்லாம் சரியாப் போகும். எனக்கு இவன் கிட்டனுக்கு இருக்கிற மாதிரி நெஞ்சுக்கை இட்டுமுட்டுபோல ஒரு குணம்...''

''நேத்தும் இண்டைக்கும் யாவாரம் படுத்திட்டுது போல. நீங்களும் சொட்டுச் சொட்டா வயிறு முட்டத் தான் மொந்தியிருக்கிறியள்.''

''உனக்கென்ன விசரேணை? இஞ்சை உள்ள பொறுப்புத் தரிப்புகள் எனக்குத் தெரியாதே?''

''இஞ்சாலை குடுவர் வீட்டிலையும், அங்காலை முட்டுக் காயர் வீட்டிலையும் நாற்பேசம் ஆக்கிப் போட்டின மாம். புளுகு மயிலர் வீட்டில விலை குறைச்சு நாலைஞ்சு நாளாம். நீங்கள் விடாப்பிடியா அரை ரூபா யிலை நிறுத்திப் புடிச்சுக் கொண்டிருக்கிறியள்...''

''மலிவெண்டா அங்கை போய்க் குடிக்கட்டுமன். நேக்கென்ன? அறிஞ்சவன் அறிவான் அரியாலை பினாட்டை; தெரிஞ்சவனுக்குத் தெரியும் அப்புச்சி யின்ரை கள்ளு. மூண்டு நாளாக் கிளாக்கர் வரேல்லை. அவர் கொழும்புக்குப் போனவர். புரோக்கர் மலைக்குப் போட்டார். எண்டாலும் ஆள் சுழியன். இவன் தம்பியப் பாவுக்கு அங்காலை ஒரு பணச் சடங்காம். இடம் கிடைச்சு தெண்டால் அவன் கறுப்பனிலைதான் நிற்பான். ஊரிலை இருந்து பாஸின்ரை சொந்தக்காரர் வந்ததாம். அவர் நைனாதீவுக்குப் போயிருக்க வேணும். எங்கை எண்டாலும்செத்தவீடெண்டால் லெச்சுமி மனுஷி யைக் காணேலாது. மாரடிச்சு ஒப்புச் சொல்லுறதில மனுஷியை அடிக்க நான் எண்டா ஒருத்தியைக் காணேல்லை. செத்தராமன் வென்றேஷனல்லே?''

''இஞ்சேரப்புச்சி உங்களுக்கு எடுத்துவைச்ச துண்டு, நீத்துப் பெட்டிக்குள்ளை புட்டை அமுக்கி வைச்சது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலை. இதையும் தின்னுங்கோ'' என்று நல்லதொரு கணவாய்த் துண்டை எடுத்துக் கொடுத்த ஆச்சி, ''மண் அரிக்கிற பொடியன்களையும் காணேல்லை'' என்றாள்.

''அவன் நெடுவல் இந்தியாவுக்கல்லே போயிட்டான். அவன் சோக்கான ஆள். அவனோட வாற மற்றவன் படு எவிச்சோல்...''

பேச்சோடு பேச்சாக ஆச்சி சாப்பாட்டை முடித்து 'பொலீஸ்... பொலீஸ்'' என்று அழைத்துக் கொண்டு குஷினுக்கு வெளியால வருகிறாள்.

'இவ்வளவு சோத்தையும் பொலீசுக்கே கொட்டப் போறாய்?''

''ஓமப்புச்சி. இது மத்தியானச் சோறு. பழஞ்சோத்துக்கு வேர்த்துப் போகும்.''

''அப்பிடியெண்டா அரைச் சுண்டைக் குறைச்சுப் போடுறது...'' என்று கேட்டுக் கொண்ட, கணவாய்த் துண்டைச் சுவைக்கத் துவங்கினார்.

''மூத்தவன் வீட்டோடை நிக்கிறான். அவனோடை கூட்டாளிப் பொடியள் சாப்பாட்டு நேரத்துக்கு வந்தாலும் எண்டுதான்... உப்பிடி அருக்காணியம் பார்த்தால், முன்னாலை இருக்கிற துண்டை நீங்களல்லோ வாங்கியிருப்பியள்? உங்கடை முகத்துக்காகத் தானே—கொடுமை சொல்லப்படாது—அந்த விலைக்கு விற்க ஏர்வைப் பட்டவையள்?''

''ஓ, அதை உன்ரை கொண்ணருக்குத்தானே பேசித் தீர்த்தனான்? அவன் வேறை; நான் வேறையே எணை? அந்தத் துண்டுக்க இருக்கிற நாலு மறங்களை நான் சீவுறன். வாய்க்கால் சிவப்பியும் ரோட்டுக்கரை குரங்கு கடியனும் நல்லா ஊறும்; பாளையும் மாறாது. கண்ணை மூடிக்கொண்டு இருபது பவுண் குடுக்கலாம். அவன் ஒரு சேம் கேட்டவனே?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இஞ்சாலை சடைக்கு அத்திவாரம் போடேக்கை சின்னத்தம்பி மேசன்மாருக்கு நாங்கள் தானே அவிச்சுப் போட்டது?''

''இஞ்சாரப்பா உமக்குக் குரக்கன் சாதியளின்ரை புத்தி வந்திட்டுது. ஒண்டுக்குள்ளை ஒண்டு எண்டால், விட்டுத் தானே குடுக்க வேணும்? இருந்த காசுகளை எல்லாம் துடைச்சுத்தானே லைசென்சுக்காகக் கச்சேரியில கட்டி னனாங்கள். பேந்து இவனுக்கு மெட்ராசுக்கு அனுப்பக் காசு காணாமல் இருக்கேக்க, எங்கடை உத்தரிப்பைப் பாத்து அவன் பத்துப் பவுனைத் தூக்கித்தந்தவனல்லே? அந்தக் காசைக் கூட அவன் கேக்காமல் விட்டிட் டான்.''

அப்புச்சி முற்றத்துக்கு வந்துவிட்டார். சேட்டமாக வளர்ந்திருந்த தெங்குகளின் ஊடாக நிலவுத் துளிகள் முற்றத்துக்குக் கோலமிட்டிருந்தன. பெரிய நிலவு ஒழுக்கு ஒன்றிலே நின்று, கொட்டப்பெட்டிக்குள் இருந்த புகையிலையை எடுத்து, பீடிக் கணியம் சுருட்டு ஒன்று சுற்றி எடுக்கிறார்.

கறிச் சட்டிகளை எடுத்துக் குசினியை ஒதுங்க வைத்து, கதவை இழுத்துப் பூட்டி, அப்புச்சி நிற்கும் இடத்துக்கு வருகிறாள். அவர் சுத்தை மிகுந்த வாரப்பாட்டுடன் ஆச்சிக்குக் கொடுக்கிறார்.

''பறுவத்துக்கு இன்னும் நாலு நாள் இருக்கு...'' என்று சொல்லிக் கொண்டே குளத்தைப் பார்க்கிறாள்.

படலை கிறீச்சிடும் சத்தம் கேட்டு அப்புச்சி உற்றுப் பார்க்கின்றார்.

'அது உவன் தம்பி' என்பதை நிதானித்துக்கொண்டு, அப்புச்சி கொட்டிலுக்குள் போகின்றார்.

மூத்தவள் மேஜையில் ஏதோ எழுதிக் கொண்டிருக் கிறாள். சின்னவளும் ஏதோ படித்துக் கொண்டிருக் கிறாள். 'இவள் படிப்பிலை வலு ஊக்கம்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்தவன் ஈச்சேரிலே சாய்ந்து பாரதம் கணியம் பெரிய புத்தகம் ஒன்றை வாசித்துக் கொண்டிருக்கிறான். 'உது சோக்கான ஈச்சேர், பாஸையா கால்களும் கடைஞ்சு நல்ல வடிவாச் செய்து தந்தவர்.' மூத்தவன் லீவுக்கு ஊர் வந்து சேர்ந்தால், அப்புச்சி அதிலை சாயக்கூட மாட்டார்.

''கொட்டிலுக்கை குளிராக் கிடக்குது. குளத்துத் தண்ணி கசியுதாக்கும்... பாயை விறாந்தையில விரிக்கச் சொல்லட்டே?''

''பழக்கம் பெரிசோ, பரவணி பெரிசோ? போக்கிற துக்குப் பழஞ்சீலை ஒண்டு எடுத்துத் தரச் சொல் லெணை. நான் கொட்டிலுக்கைதான் படுக்கப் போறன்.''

'வசுக்கோப்பு ஆட்டம் முடியிற மட்டும் காத்துக் கொண் டிருக்கிறது புத்தியில்லை. அவையள் வந்தால் புசத்திக் கொண்டிருப்பானுகள். புள்ளையளின்ரை படிப்பும் கெட்டுப் போகும். அதுகளின்ரை படிப்பைவிட ரெண்டு போத்தில் அருக்காணியக் கள்ளு விக்கிறது பெரிய இதே?' அப்புச்சியின் தீர்மானம் இறுகுகின்றது.

அப்புச்சியும் தன்னுடைய காலத்தில் பள்ளிக்கூடம் போனவர்தான். அவர் 'நொறு நொறுத்த வட்டுக் காயக் குஞ்சாட்டம்' இருந்ததைப் பார்த்து, வேதப்பள்ளி யிலே சேர்ந்து நாலு கோணல் எடுத்துப் படிக்கக்கூடிய வன் என்று, வேதப்பள்ளி வாத்தியார் 'வெறிக்குட்டி' கணக்குப் போட்டிருந்தார். ஆனால், அவரை வேதச் சோறு தின்னவிட அப்புச்சியின் அப்புவுக்கு விருப்ப மில்லை. இரண்டு வருஷம் 'அரிவரி' படிப்பதான சாட்டில், அயலிலுள்ள வடலிகள், கொய்யாத் தோட் டங்கள், புளியடி வளவுகள் ஆகியவற்றின் பூகோளத்தை அங்குலம் அங்குலமாகக் கற்று, 'கெற்றபோல்' அடி யில் விண்ணனாய், 'கற்றது கைமண் அளவு, கல்லாதது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகளவு' என்ற திருப்தியுடன் அப்புச்சி படிப்புக்கு மூட்டை கட்டி வைத்தார். காணி உறுதிகளில், பற்றுச் சீட்டுகளில், லைசென்ஸ் ஃபோம்களில் புள்ளிகள் வைக் காது தமது பெயரின் அட்சரங்களை எழுதி ஒப்பமிடத் தெரிந்து வைத்து, தாம் ஒரு தற்குறியல்லர் என்கிற உண்மையை அடக்க ஒடுக்கமாக நிலைநாட்டி வரு கிறார். படிப்பின் அருமையை அப்புச்சி அறிந்தவர். 'மூத்தவன் மெட்றாஸிலை படிக்கிறான். ஒண்டரை வருஷம் பல்லைக் கடிச்சுக் கொண்டிருந்தால், அவன் ஒப்பேத்திப் போடுவான். பொடிச்சியளும் வேம்படி யிலை படிக்குதுகள். எங்கடை பிச்சைப்பாடுகள் எங்க ளோடை, அதுகள் நாலு பிள்ளைகளோட ஒத்ததாக நடக்க வேண்டாமே? அதுகள் செல்லன்ரை ரிக்ஷோவில தான் பள்ளிக்குப் போய் வாறது. படிக்கிற வயசில நாங்களும் பிரயாசைப்பட்டு அதுகளை படிக்க வைச்சுப் போட வேணும்.'

''நாளைக்குப் பண்டாரக் குளத்துக்குப் போறியளோ?'' விறாந்தையிலுள்ள கப்புடன் வந்து சாய்ந்து கொண்டே ஆச்சி கேட்கிறாள்.

அரைப் போத்தல் கள்ளைச் சிரட்டையில் எடுத்துக் கொண்டு வந்து, 'சோத்தித் திருகணி'யில் வைத்துக் கொண்டிருந்த அப்புச்சி, ''ஏனணை?'' என்று கேட் கிறார்.

''முடமாவடியலை சாமத்தியச் சடங்குக்குச் சொல்லி இருக்கினம். அவை உங்கட முந்தின அவவின்ரை சாதி சனமல்லே? போகாட்டிலும் வடிவில்லை. பேந்து வீமன்காமத்தாள் தடுத்துப் போட்டாள் எண்டு நாக்கு வழிப்பினம்.''

''பொடியள் படிச்சுக் கொண்டிருக்கிறது தெரியேல் லையே? உதிலை இருந்து கதைச்சால் அதுகளுக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராக்காய்ப் போயிடும். இஞ்சை வாவனப்பா...எங்கடை பொட்டுக்கேடுகளை இஞ்சை இருந்து கதைப்பம்...'' என்று கூறி, சிரட்டையை எடுத்து அப்புச்சி வாயை நனைக்கிறார்.

'தாயே காளியாச்சி' என்று கூறி எழ எத்தனித்த ஆச்சி படலை கிறீச்சிடும் சத்தங்கேட்டு அம்முயற்சியைக் கை விட்டாள்.

''ஆரது?'' என்று கேட்டு அப்புச்சி உரத்துச் செருமுகிறார்.

''அது நாங்தாங் அப்புச்சி.''

'ஆர்? பாஸையாவின்ரை குரலைப் போல கிடக்குது' என்று அப்புச்சி நிதானிப்பதற்கிடையில், 'பாஸ்' கொட்டிலுக்குள்ளே தொங்கும் அரிக்கன் லாம்பு வெளிச் சத்துக்கு வந்து விட்டார்.

''பாஸையா நயினாதீவுக்குப் போனவர் எண்டு இஞ்சினை சொன்னவங்கள்...''

''ஓ... நம்மட நோனா எல்லாம் ஊரில் இருந்து வந்தது தானே? கோச்சியில அனுப்பிப்போட்டு வாரெங்... அவன் வந்தா கரைச்சல்தானே? அப்புச்சி நல்ல சாமானா ஒண்டு தாங்க...''

கொட்டிலுக்கும் வீட்டுக்குமிடையில் மனோகற்பித வெளி ஒன்றை அப்புச்சி எழுப்பிக் கொள்ளுகின்றார். குடிக்குப்புருஷன் கதை என்ற பாங்கில் பாஸின் சளப்பல்களுக்கு அப்புச்சி ஈடுகொடுக்கிறார். ஆனால், விறாந்தையிலிருந்து படிக்கும் பிள்ளைகளுக்குத் தங்களுடைய உரையாடல் இடஞ்சலாக இருக்கக்கூடாது என்பதிலே அவர் வலு கரிசனை காட்டுகிறார். தன்னுடைய குரலை உயர்த்த எத்தனிக்கும் ஒவ்வொரு சமயமும் ''பாஸையா எனக்குச் சேவிடே? மெல்லக் கதையும்'' என்று பேச்சின் ஸ்தாயியைக் கட்டுப்படுத்துகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பாஸ் இண்டைக்குக் கறுத்தக் கழுத்தானிலதான் சரியா மினக்கெட்டிருக்கிறார். அதுதான் ஆள்கொஞ்சம் தள்ளம்பாடுது. ஆள் எப்பவும் நல்ல மரியாதை. ஆனால் கூடீட்டால் அண்டலிக்க ஏலாது. ஏதாவது 'சனியனை' யும் இழுத்துப் போட்டுக் கொண்டு...'

''சங்கரன்... சங்கரன்...'' வீதியிலிருந்து இரண்டு தடவைகள் குரல் கேட்டது.

வீட்டிலுள்ளவர்கள் அப்புச்சி என்று அழைப்பதால், வாடிக்கைக்காரரும் அப்பிடித்தான் கூப்பிடுவார்கள். ஆனால் ஆத்திகேட்டுக்கு வாய் நனைக்க வாறவை, 'சங்கரன்' என்ற பதிவுப் பெயரை அறுத்து உறுத்து உச்சரிப்பதும் உண்டு.

'ஓமோம்... ஆரது?'

'அது நான். நாகலிங்கம். சிவலிங்கப்புளியடி நாகலிங்கம். ரெண்டு கூட்டாளியளும் வந்திருக்கினம். ஏதேன் வாய்க்குமோ?'

'சாய்... இல்லிப்போல பிந்திப்போனியள்...'

'கலக்கிறதுக்கு எடுத்து வைச்சிருக்கிறதிலை எண்டாலும்... ஒரு அரை அரை... ஆத்திகேட்டுக்கு...'

'நீங்களும் காசு குடுத்துத்தானே குடிக்கப்போறியள்? இலவியத்திலை எண்டே புறியம் காட்டுறன்? முந்திப் போச்சுது. ரெண்டு கவடுகள் எட்டி நடந்தியள் எண்டால் குடுவரின்ர கொட்டில்... அவர் பத்து மட்டும் திறந்து வைச்சிருக்கிறவர்..'

'உங்கை கொஞ்சமும் வாய்க்காதோ?''

'சாய்... பொசிப்பில்லாமல் போச்சுது... மினக்கெடாமல் குடுவரின்ரை கொட்டிலைப் பாருங்கோ...''

படலையில நின்று கூப்பிட்டவர்கள் போகும் அரவத்தை அப்புச்சியின் செவிகள் பதிந்துகொள்கின்றன.

அப்புச்சி தனது சிரட்டையை எடுத்து இறப்பிலே சொருகுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நானும் படலையைப் பூட்டத்தான். பாஸையா எழும் புங்கோ... அங்காலை பிள்ளையள் படிக்குதுகள். பூட்டிப் போட்டு வந்து நானும் கொஞ்சம் கண்ணயரப் போறன்...'

'அதுதாங் சரிப்பட்டு வாறான் இல்லை... நம்மலுக்கு இன்னும் ஒண்டு தாறதுதாங்...'

'இப்ப கேட்டவைக்கு என்ன சொன்னான்?'

'நான் கஸ்டமர் ஆளுதானே? மூண்டு நாலு எண்டு எடுக்கிற ஆளு...அதுசுட்டி...'

'வாடிக்கையா வாற மனுஷன் எண்டுதான் நான் குடிக்க எடுத்து வைச்சிருந்ததைத் தூக்கி உமக்குத் தந்த னான்...'

'இந்தப் பகிடி பாஸுகிட்ட விட ஏலா. இந்தா ஐஞ்சு றூபா. எடுத்துக்கிட்டு... எனக்கு இன்னும் ஒண்ணு தாறாங்...'

'உங்கடை காசுக்கே எனக்குப் பெரிய இது? இருபது முப்பது ரூபா பாக்கி வைச்சாலும் கேட்கிறனானோ? நெக்குக் காசு பெரிசில்லை; நெக்கு மனுஷர்தான் பெரிசு... காசை கோட்டுப் பையில வைச்சுக் கொண்டு எழும்புங்கோ...''

எழுந்து நின்ற பாஸ், கால்கள் இடறுப்படத் தளம்புகின் றார். ஆனாலும், இன்னொரு போத்தல் கள்ளுக் குடிக் கும் ஆசையை அவர் துறக்கத் தயாராகவும் இல்லை.

'நாங் கேக்கிறாங்... நீங் சாதி புத்திகாட்டுறான்தானே? நாங் நிம்பளுக்கு மிச்சங் உதவி செஞ்ச ஆள்...'

'நீங்கள் எனக்கு உதவி செய்யேல்லை எண்டு நான் சொன்னனானே? ஆர் எது செய்தாலும் என்ரை நெஞ்சிக்கை கிடக்கும்... சரி வாருங்கோ பாஸையா... நான் படலையைப் பூட்டப் போறன்...'

இவ்வாறு கூறிய அப்புச்சி பாஸின் கையைப் பிடித்து மெதுவாக உசுப்புகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நீ என்ன சாதிங்? நீ நம்மலைத் தொடப்படாது தானே?...'

'நான் தொடக்குடாதுதான். நான் தொட்டுச் சீவுற கள்ளுத்தான் இப்ப உமக்குத் தேழ்வை. பேய்க்கதை கதைக்காமல் வாரும்.'

இருவரும் மல்லுக்கட்டிக் கொண்டு படலையடிக்கு வந்து விடுகிறார்கள்.

சாத்தப்பட்டும், மீண்டும் திறக்கப்பட்டும் படலை 'கிறீச் கிறீச்' ஓசையுடன் அவதிப்படுகின்றது.

'காளியாச்சி அறியக் கும்பிட்டுச் சொல்லுறன்...வாரும் போவம்...'

'நீ காளியாச்சி கும்பிடுறதுதானே?... பணிய விழுந்து என்னைக் கும்பிடு... நாங் போகமாட்டாங்...'

'ஐயா, நான் எல்லாருக்கும் நல்லவன்; எளியவன். பத்துத் தரத்துக்கு மேலை சொல்லிப் போட்டன். தண்ணியும் மூண்டு தரந்தான் பொறுக்கும். இனியும் என்ரை கதையைக் கேட்காட்டில், றோட்டிலை இழுத்து எறிஞ்சு போட்டுத்தான் படலையைப் பூட்டுவன்...'

'வின்ஸர் தியேட்டரடி பாஸ் நாங்... நம்மலை எல்லாருக்கும் தெரிவான்...'

'அது எல்லாருக்கும் அட்ரஸாத் தெரியும்... உந்த மசிர்க் கதையளை விட்டிட்டு வாரும்... பேந்து நேக்குக் கோபம் வந்துதெண்டால்...'

'உன்ரை கோவம் உன் நோனாக்குக் காட்டுறான்... நம்மளை என்ன செய்வான்?' என்று கேட்ட பாஸ், ஆக்ரோஷம் அடைந்தவரைப்போல சிங்களம்-தமிழ் ஆகிய இருமொழிகளிலுமுள்ள அத்தனை ஆபாச வார்த்தைகளையும் அப்புச்சிமீது அர்ச்சனை செய்கிறார்.

'பெண் புரசுகள் இருக்கிற வீடு... இனி...'

'இனி என்ன செய்வான்?...ம் பார்ப்பான்...' (சொச்சம் எஸ்.பொ. கூட சொற்களிலே போடக் கூச்சப்படும் அத்தனை ஊத்தை.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பளார்!' அடி விழும் சத்தம் முற்றத்துக்கு வந்துவிட்ட ஆச்சியின் செவிகளிலே விழுகின்றது. உடுக்கை இழந்தவனின் கையிலும் வீச்சாக ஆச்சி படலைக்கு வந்து விடுகிறாள். பாஸை குதறி எறியும் ஆவேசத்துடன் பொலீஸ் குரைக்கின்றது.

'பொலிஸ்... அடி... அங்கால போ...போ அங்காலை..' பாஸ் வேலியிலே சாய்ந்து, றோட்டிலே விழுகின்றார். மூத்தவன் பொல் ஒன்றுடன் படலைக்கு வருகிறான். தங்கைகள் இருவரும் முற்றத்தில்.

'இதென்ன தம்பி? கையிலை பொல்லு? உதுதான் மெட்றாஸ் படிப்போ? ஆத்தாப் போக்கிலிதான் பொல்லுத் தூக்குவான். எறிஞ்சு போட்டு உள்ளுக்க போ...'

'ஓம் தம்பி, பிள்ளையன் பயந்துபோய் நிக்குதுகள். நீ அதுகளை வீட்டுக்குள்ள கூட்டிக்கொண்டு போ...!' என்று ஆச்சி அப்புச்சிக்கு ஒத்தூதுகிறாள்.

'பாவம். ஒரு அடிகூடத் தாங்கமாட்டுது. நான் தூக்கிக் கொண்டு போய்ப் பட்டடையில விட்டிட்டு வாறன்...' என்று கூறி, கீழே விழுந்த பாஸை அப்புச்சி அலக்காகத் தூக்கித் தன்னுடைய தோளிலே போட்டுக் கொள்ளுகிறார்.

'நானும் துணைக்கு வரட்டே?' மூத்தவன் கேட்கிறான்.

'நீ இன்னமும் உதிலையே நிக்கிறாய்? நீ போய்ப் படி.. இதைப்போல நான் எத்தனையைக் கண்டிருக்கிறன்...' அப்புச்சி எவ்வித சிரமமுமின்றி நிதானமாக நடக்கத் துவங்கினார்.

'நான் வாறனெணை...'

'பின்னால பொலிசும் வருகுது... சுறுக்கா வாருங்கோ.' மேற்கிலிருக்கும் வைதீஸ்வரனையும், கிழக்கிலிருக்கும் காளி அம்மாளையும் மனசிலே மாறி மாறி வேண்டிக் கொண்டு, ஆச்சி, படலையிலே தவமியற்றுகிறாள்.

அரைமணி நேரம் கழிந்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னால் பொலீஸ் வர, முச்சந்தியிலே பிரகாசம் சிந்தும் 'மேர்கூரி' வெளிச்சத்திலே அப்புச்சியின் சிரிப்பினை ஆச்சி பார்த்து விடுகிறாள்.

'ஒண்டுமில்லை. பாவம். மெல்லமாத்தான் அடிச்சனான். இது மரமேறுகிற கை... ஏன் அடிச்சனான் எண்டு மனசார வருத்தமா இருக்கு...'

'ஏதேன் படாத இடத்தில...'

'சாய்... ஊரில இருந்து வந்த நோனாக்காரியோட ஏதோ சண்டையாம். பட்டடையிலை இருக்கிற பொடியன் சொன்னான். அதிலைதான் இவர் கண்விண் தெரியாமல் குடிச்சிருக்கிறார்... நான் ஒரு ஜின்சர்பியர் வாங்கிக் குடுத்துப் படுக்க வைச்சிட்டு வாறன்...'

'என்ன இருந்தாலும் குமர் குஞ்சுகள் இருக்கிற வீட்டிலை இப்பிடிக் கெறு விடுறது வடிவில்லை...'

அப்புச்சி படலையை இழுத்துப் பூட்டுகிறார்.

'சாய்... பாஸ் சோக்கான மனுஷன். இண்டைக்குத்தான் ஏதோ இசக்குப் பிசக்கா நடந்து போச்சுது... நான் அவசரப்பட்டு அடிச்சிருக்கப்படாது. ஊர்சனத்தை விட்டிட்டு இஞ்சை வந்து பிழைப்பு நடத்திற ஆள்... அதுகளோட நாங்களும் எங்கட கெப்பரை காட்டாமல் ஆதரவாகப் புழங்கிறதுதான் வடிவு...'

ஆச்சி, அப்புச்சியின் பாயைக் கொண்டு வந்து உதறிக் கொட்டிலுக்குள் விரிக்கின்றாள்.

'எல்லாரும் அவரைக்கவரை போய்ப்படுங்கோ... இனிப் படிச்சாலும் மூளையில ஏறாது. தம்பி நீயும் படு... விடியப்புறம் நாலு மணிக்கு எழுப்பி விடவோ?'

'ஓம், அப்புச்சி. சரியா நாலு மணிக்கு எழுப்பி விடுங்கோ...'

'புள்ளை கொண்ணருக்குச் சின்ன வீட்டுக்குள்ளை பாயைப் போட்டுவிடு. இளையவனையும் தூக்கி அதுக்குள்ளை வளத்திவிடு. நீயும் தங்கச்சியும் போய்ப் பெரிய வீட்டுக்குள்ளை படுங்க.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நீங்கள் ஆச்சி...'

'நான் விறாந்தையில படுக்கப்போறன். அப்புச்சி கலாதிப்பட்டிட்டு வந்து கொட்டிலுக்கை தனியப்படுக்கிறார்... பாவம்.'

'நெக்குத் தெரியும். இண்டைக்கு மனுஷிக்கு நித்திரை வராது. கலியாணம் முடிச்சு இண்டைக்கு வரையிலும்—இத்தனை பிள்ளைகளைக் கண்ட பிறகும்—நான் ஆரோடையும் கொழுவீட்டன் எண்டால், அவளுக்கு நிமையோட நிமை ஒட்டாது.'

'நான் கொட்டிலுக்கு எரியிற விளக்கை அணைச்சிட்டுப் படுக்கட்டோ?' அப்புச்சி குழந்தைப் பிள்ளை போல முற்றத்தில் நின்று கேட்கின்றார்.

'நீங்கள் படுங்கோ.. நான் வந்து நூர்த்துவிடுறன்.'

அப்புச்சி கொடுத்த பீடிக்கணியம் சுத்து ஆச்சியின் கையில் இருக்கிறது.

'ஏனெணை சுத்தப் பத்தாமல் வைச்சிருக்கிறாய்?... பத்திவிடட்டே?'

'வேண்டாமப்பா... எனக்கு வயிறு பத்துது.'

'நீ ஒரு விசரி... நான் வேணுமெண்டே?.. கமக்காரருக்குப் பணிஞ்சு சால்வை எடுக்க விரும்பாமல், சால்வையே போடாமல் விட்டனான்.. சரி, சரி.. எல்லாத்தையும் மறந்திடப்பா...' என்று கூறி, மடியிலிருந்த நெருப்புப் பெட்டியை எடுத்து, ஒரு குச்சியைக் கொளுத்தி, ஆச்சியைப் பட்சமுடன் பார்க்கிறார்.

படலையடியிலே நிற்கும் பொலிஸ்மீது அப்புச்சியின் பார்வை விழுகிறது.

'பொலிஸ், இஞ்சை வா...உமக்குப் படிக்கட்டில சாக்கு விரிச்சல்லே இருக்குது. போய்ப்படு... நீர்தான் இந்த வீட்டுக்குப் பெரிய காவலோ?'

அந்த வார்த்தைகளிலே வேறு அர்த்தங்களை இனங்கண்ட ஆச்சி, நமட்டுச் சிரிப்புச் சிரித்தபடி, பீடிக்கணியம் 'சுத்'தைப் பற்றவைக்கின்றாள். □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6

கதை



ஆண்மை

UNIVERSITY OF PERADENIYA
17-2-1996
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'...**பொல்லா** வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப்...' என்று ஒருவன்
எங்கேயோ பாடிவிட்ட குறையிலிருந்து
சிவபுராணம் பாடுகிறான்.

உள்ளே போன ஏதோ ஒன்று புளித்து,
ஏதோ ஒன்றைப் பெருக்க,
மூலை ஆசனத்தின் சுகத்தைச் சுகித்தவாறு,
போதையே பக்தியாய்க் கனிந்தது
போன்ற பரவசத்தில்,
எது எதற்கென்று தெரியாவிட்டாலும்,
ஏதோ ஒன்றுக்கு இறையச்சம் என்கிற
கவசந்தேவை என்கிற பழக்க
தோஷத்தினாலும்...
'பாம்பாகிக் கல்லாய் மனிதராய்ப்...'
என்று, அடுத்த அடிகளை நினைவுக்குக்
கொண்டு வரும் மோஸ்தரிலும்,
முந்திய வாக்கியத்தை **Repeat** செய்து
பாடுகின்றான்.

இது சிவபுராணகாரனின் பாடு.

'**எனக்கு** முன்னர் சித்தர் பலர்
இருந்தாரப்பா!'
எனத் தமது கவித்துவ தேவைக்காகப்
பாரதியார் பாடிய வீச்சிலே, மீளுயிர்ப்புப்
பெற்ற கோலத்திலே பாம்பாட்டி சித்தர்,

'நாதர்முடி மேல்இருக்கும் நாக பாம்பே
நச்சுப் பையை வைத்திருக்கும் நல்ல பாம்பே
பாதலத்திற் குடிபுகும் பைகொள் பாம்பே
பாடிப்பாடி நின்று விளையாடு பாம்பே'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தம்முடைய வித்துவத்தை
மகுடி வாசிக்க, ஈசனார் தோள்மீது
அழகு ஆபரணமாய் கோலங்காட்டிக்
கிடந்த பாம்பு, மகுடி வாசிப்பின்
வசியத்திற்கு உட்பட்ட உன்மத்தத்தில்
களம் மறந்து, தன்நிலை துறந்து,
சிவனாரின் தடந் தோள்களையே
தன் ஆடல் அரங்காகக் கற்பித்து,
அதிலே தன் உடற்பாதம் ஊன்றி,
ஆட்ட அபிநயத்தில் தன் சென்னியைத்
தூக்கவும், அனைத்தையும் எக்காலமும்
அறியும் ஆதி அந்தம் அநந்தம்
அனைத்தும் தானே என
ஏகத்துவத்தையும் ஏமாப்பையும்
இணைத்தவனான, சுடலைப் பொடியையே
தன் மேனி மினுப்புக்கு ஏற்ற
ஒப்பனைப் பூச்சாக அப்பியவனான,
நீரூற்றையும் நுதல் பிறையையும்
ஜடாமுடி அலங்காரப் பொருள்களாக
இணைத்து மகிழும் பித்தனான,
அந்தப் பித்தமே அண்ட சராசரங்களினதும்
அனைத்துத் தத்துவங்களையும்
முடிச்சவிழ்த்துக் காட்டும்
சித்தாந்தப் பேருண்மை என்று நிறுவும் ஞானப்
பிசக்கலனாகிய சங்கரன்,
முக்கடவுள்களிலும் முக்கண்ணனே
மூத்த கடவுள் என்னும் செம்மாப்புடன்
வாழத் தேர்ந்தெடுத்த, நித்திய
பனிக்கட்டிகள் வெள்ளிப் பாளங்களாக
மினுக்கம் காட்டி, சதா சீதளக் குளுகுளு
ஊட்டிக் கொண்டிருக்கும் கைலயங்கிரியிலே,
கந்தர்வர்-சின்னர்-உரகர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தர்-சித்தர்-வித்தியாதரர்-
அமரர்- அப்ஸரஸுகள்-
நாற்பத்தெண்ணாயிரம் இருடிகள்
பேரணியிலே வந்து அவையாக
வீற்றிருக்கவும்,

**நீளமாக** இழுக்கப்பட்ட கற்பாதை. மரங்களாக, பாலை மரங்களாக, அவதரித்ததுகள் உபகரித்த சிலிப்பர் கட்டைகள். படுக்கவைக்கப்பட்ட ஏணி போலவும். மனித கவடுதான் ஒவ்வொரு கட்டைக்கும் இடைப்பட்ட தூரம். அவற்றை நிலத்திலே புதைத்தும், புதைக்காமலும் தூவப்பட்டிருக்கும் மலைப்பிஞ்சுகள். சிலிப்பர் கட்டைகளை படுக்கையாக்கிப் புரண்டு நீளும் பாம்புகள் போன்ற தண்டவாளங்கள். சமாந்தரமாக நீளும் பாம்புகள். நிலத்தின் புவியியல் தேவைகளையும் அநுசரித்து வளைந்தும் நெளிந்தும் கிடக்கும் பாம்புகள். ஆனாலும், தங்களுக்கிடையில் சமாந்திரத்தைப் பேணுவதில் விடாப்பிடியான வக்கிரம். யார் அந்தக் கடவுள்? சின்னப் பயலின் மூஞ்சியுடன், சினத்திலே படமெடுத்த பாம்பின் தலையை ஆடல் அரங்காக்கிக் கூத்தாடியவன்? மெல்லிய பாம்புகளை ஆடல் அரங்காகப் பாவித்துத் தாண்டவம் ஆடும் கலையை அச்சிறு பயல் வந்து இந்த ரயிலிடம் கற்றுக் கொள்ளவேண்டும். பன்னிரண்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினைந்து பெட்டிகளை இணைத்து நிற்கும் ரயில்கூட இராக்கதப் பாம்பு போலத்தான். இந்தப் பாம்பின் தினசரி பயணிப்புகளான தாண்டவங் களின் மத்தியிலும், கற்களின் வலோற்கார அடக்கு முறைகளை மீறியும் புல்லாகிப் பூண்டாய்ப் பிறப் பெடுத்ததுகளும் தங்கள் உயிர்ப்பின் வல்லபத்தை நாட்டுவது போல, இங்கொன்றும் அங்கொன்றுமாக, அகதி நெருக்கடிகளுடன் வாழ்ந்தன! இரைச்சலை பெட்டிகளின் உள்ளே யும் வெளியேயும் சிந்தவிட்டு, ஆட்டத் திற்கும் ஓட்டத்திற்கும் சமிக்ஞை கொடுக்கும் கைகாட்டியின் உத்தர வுக்காக ரயில் படுத்துக் கிடக்கிறது. கைகளை நீட்டிப் பிடித்தகோலத்தில், கைகாட்டி மரம் நெற்றியிலே தேங் காயளவு இரத்த திலகம் தரித்து நிற்கின்றது.

**'நமச்சிவாய** வா... வா... வா...!' 'வாழ்க'
வின் முதல் அட்சரத்தை வாயிலே
ரப்பராக இழுத்துக்கொண்டே,
செயலில் நமச்சிவாயாவின்
காருண்யத்திலே நம்பிக்கை துறந்து,
முகத்துவாரத் திக்கிலிருந்து ஊளையிட்டு
வந்த குளிர் காற்றைத் தடுப்பதற்காக,
சிவபுராணகாரன், ரயிலின்
கண்ணாடி யன்னலைச் சாத்துகிறான்.
பொழுது செத்து, அமாவாசை
மருவிய இரவு ஆட்சி பரப்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நேரத்திலே,
விழிகள் எறிந்து துழாவுகிறான்.
தனது ரயில் பயணத்தைத்
துவங்கிவிட்டது என்கிற விமுக்தி
உணர்வு விரல் நொடிப்பு நேரத்தில் கரைய,
அடுத்த Track இல் எதிராக வந்த ரயில்
தரிப்பு நிலை கொள்ளுகிறது
என்கிற உண்மை உறைக்கிறது.

'பக்டரி ரயில் வந்திட்டுது.
இனி இது சுறுக்காப் புறப்படும்...'

'பாத்துக் கொண்டிருக்காமல் ஏறுமன்...'

பிளாட்பாரத்திலே நின்ற பயணிகள்,
அனுப்பி வைக்க வந்தவர்களிலிருந்து
கிளை பிரிந்து, பெட்டிகளுக்குள்
ஏறிக் கொள்ளுகிறார்கள்.

> **'கூக்கூ'** போடுகிறது ரயில். அது அதன் மொழி. 'ஆயத்தம் ஏறிக் கொள்ளுங்கள்' என்று அது சொல்வதாகப் பயணிகள் அர்த்தப்படுத்திக் கொள்ளுகிறார்கள். ஒலிகளுக்கு மனிதன் கற்பிக்கும் அர்த்தங்கள் தானே மொழி என்கிற பிரக்ஞைகூட அவர்களுக்கு இல்லை.

**'நாதன் தாள்** வாழ்க...'
சிவபுராணக்காரனின் சுருதி கூடுகின்றது.
யதார்த்தத்திலிருந்து தம்மை
பிரித்தெடுக்கும் எத்தனத்திற்கு
வயிற்றுக்குள் சென்ற எது எதுவோ
உதவாது போனாலும்,
'நமச்சிவாய' உதவுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரை விலத்திய மக்கள் கூட்டத்தின்
அவதிகளும் அந்தரங்களும்.

'எவடம்?'

'கொழும்புக்குத்தான்...'

'ஏதேன் அவசர பணிவிடையோ?'

'எம்பியும் போறார். இப்ப விட்டா, மறுகா ஒண்ணா.'

'எங்க? திருக்கோணமலைக்கோ?'

'அது தொங்கலில இரிக்கிற பெட்டியலுவா?'

'இதில ஏறினா, கல்ஓயாவில மாறிக்கிலாம்...'

'அது கணகாட்டு...'

**மறுபடியும்** கூக்கூ. கூஊஊஊக் கூஊஊ! ரயிலின்—கொழும்பு ரயிலின் தாண்டவமோ? அல்லது பயணமோ?—துவங்கி விட்டது. மெதுவாக நகர்ந்து... சற்றே விரைவு கூட்டி, ஓடுவதான பிரமையை ஏற்படுத்தி, கையைத் தாழ்த்தி நெற்றியிலே தேங்காயளவு மரகதப் பொட்டு வைத்துள்ள சிக்னல் போஸ்டையும் தாண்டி, மாநகராட்சியின் தெருவிளக்குகள் ஒளித் துளிகளாகவும், வெளிச்சப் புள்ளிகளாகவும் தெரிய, புதிதாக இருகரையும் துளிர்த்துவரும் கொலனி குடிசைகளை விலத்திக் கொண்டு, ஸ்டேஷனைப் பின்னங் காலால் உதைத்துத் தள்ளியது போலவும்... ரயில் இராக்கதப் பாம்புபோல நகருகின்றது. Poetic license என்பது வளத்துக்குத்தான். வரட்சிக்கு அல்ல. ரயில் நகரும் வீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்ல. நகரும் குஞ்சு நகருமல்ல. மா உலகத்தின் உடைந்த சில்லொன்றை அடைத்துக் கொண்டு ரயில் நகருகின்றது.

அர்த்தநாரீஸ்வர கற்பித சேவிப்புக்காக
உமையொரு பாகமாக
இணைந்த பொழுது சுயத்தின்
தனித்துவத்தை இழந்த சொரூபம்
புனைந்தும், அந்த இழப்புக்
கோலங்கூடத் தனியான தனிமத்தின்
மெய்த்துவ சூக்குமமான மெய்ப் பொருளே
என்பதை விளக்கும் திருட்டாந்தத் திலகத்தின்
திலகமாகவும், மையத்தின் அணுக் கருமையமாகவும்,
சக்திகளின்அதி சக்தியாகவும், அண்ட
சராசரங்களுக்குத் தாயாகவும், அதேசமயம்
தாய்மைத் தேய்வு நர உடல்களுக்கே
என்கிற பிறிதொரு விண்ணாணம்
செப்புவதுபோல குமரிமை நலங்காத
நித்திய கன்னியாகவே நிலைத்துள்ள
காமக்கொட்டி, கோமேதகம்-நீலம்-
பவளம்-புஷ்பராகம்-மரகதம்-
மாணிக்கம்-முத்து-வைடூரியம்-
வைரம் ஆகிய மனித ஞானம் அறிந்த
பல மணிகளின் சித்திர வேலைப்பாடுகளுடன்
சமைத்தது போன்ற ஒரு புனைவைக்காட்டி
ஆனாலும், அநந்தகோடி விண்மீன்களின்
எரிதுகள்களை உருக்கிச் சோதிமயஞ்
சிந்தும் திருத் தவிசிலே, மொட்டுகள்
பூட்டவிழ்த்து மலரும் இரகசியத்தை
அவிழ்த்துக் காட்டும் உத்திக்கு உபயமாய்
தன் அதரங்களிலே புன்னகைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொத்துக்களைத் தவழவிட்டு
வீற்றிருக்கவும்,

**'ஹலோ** நான் புவேக்கு ஒருக்காப்
போட்டு வாறன். இந்த 'பேக்'கை
ஒருக்காப் பார்த்துக் கொள்ளும்...'
'என்ன அரக்கிறீர்? அதிலை
இடம் இருக்குப்போல. குந்துமன்.'

'இதில ஆள் இரிக்கி...'

'எல்லாரும் காசு குடுத்து டிக்கற் வாங்கிக்
கொண்டுதான் வந்திருக்கிறம். அவர்
வந்தால் நெருக்கிக் கிருக்கி இருப்பம்...'

'கூகூக் கூகூகூ!' ஸ்பீட் எடுத்து
ஓடுவதை இவ்வாறு அறிவித்தவாறே
காயான்காடுகளைப் பிரித்துக்கிடக்கும்
தண்டவாளப் பாம்புகளிலே, ரயில்
பாம்பு ஓடிக் கொண்டிருக்கிறது.

**'தெமில** மினிஷுங்கே விதிய
ஓகொமத மாய். அனுங்கே
செபதுக் ஹிதலா பலன்னநே.'
'இஞ்சரப்பா, அதையும் எடுத்து
வைச்சனீரே?'
'ஓமோம்; அடிப்பெட்டிக்கை கிடக்கு!'
'ஹறாமில பிறந்ததுகள் அத
ஹறபாக்கிப் போட்டுத்தான் போவானுகள்.'
'நான் ஏழு மணியோடை சாப்பாட்டு
அலுவலை முடிச்சுப் போட்டன்.
கட்டிக் காவுறது சரியான
வில்லங்கம் பாருங்கோ...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வில் யூ பிளீஸ் கெற் மீ த லையிட்?'

'Sure, ஆ மச்சாங், இட்ஸ் யூ?... after ages'!

'இன்னா பார்ரா அம்பி, வாப்பா
கட்டின வீட்டில படுக்கிற கணக்கா
அவிய படுக்கிற சொகுஸ...'

'கல்லாத்தான்கள வச்சுக் கொண்டு
இந்த வழிசல் எங்கள மேய்க்கப்
பாக்கிறான். ஊர்ப் பிறந்தவன்,
பால் வாத்த பானய பாக்க வேணும்
எண்டு விட்டிட்டிரிந்தால், வெறுவாக்கிலும்
கெட்டவன் மிரிக்க அலுவா வாறான்?'

'இந்த முறையோட அவனுக்குக்
கட்டாயம் ரான்ஸ்ஃபர் கிடைக்கும்.
முதலில பீட்டரைத்தான் பாக்கவேணும்.'

'சீ, அவன் கெட்டான்.
இப்ப கெனமன நம்ப ஒண்ணா...
நேத்து குட்டி நிக்கிலாஸு மாஸ்டரோட
போன தெரியாதா?'

'இவனுகளுக்கும் இப்ப கொள்கை
இல்லாமல் போச்சு...'

'தங்கரத்தினம், ஏறாவூரிலை இறங்குவம்.
தளவாயிலை எனக்குத் தெரிஞ்ச வீடு
ஒண்டு இருக்கு...'

'என்ன இங்கின பம்பலாத் தெரியும்...
ஆரேன் பாத்தால், கோழிய
பிரிக்கிறாப்போல ஆன்... போன
மாசம் சோனக கிளை ஒண்டிட்ட
மாட்டுப்பட்டு...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பேந்து என்ன செய்வம்?'
'வாழச்சேனயில இறங்குவம்...
என்னப் பாக்காமல் பாலத்துப்
பக்கமா நட...நான் எலுவா இடம்
காட்டுவன்...'

**நிலத்தின்** குருத்துக் குறுணி மணல் மேனியைக் கங்கையிலிருந்து காப்பாற்ற கிளைகளை நிலம் நோக்கிக் கவிழ்த்துச் சடைத்திருக்கும் முந்திரி மரங்கள் இரு மருங்கிலும். ஏழ்மையில் வெட்கி ஒளிப்பன போன்று குடிசைகள் சில ஐதாக விசுக்குண்டு கிடக்கின்றன. குப்பி லாம்புகளின் திரிகளிலே உயிர்ப்பு ஒளித்துளிகள் அலைக்கழிந்து சேடம் இழுப்பதிலிருந்துதான் அவற்றைக் குடிசைகளெனக் கற்பிக்க முடிகிறது.

**சிவபுராணகாரனின்** கண்மூடிய கோலம்.
மறந்து போன வரிகளை நினைவுக்குக்
கொண்டு வரும் தியானமா?

கொள்ளை இன்பம் குலவு கவிதை
கூறு பாவலரும் பாவாரமியற்றி
விதந்தேத்தும் பாமுதல்வியும்
பனுவலாட்டியுமான நான்முகன் கிழத்தி,
வெள்ளைக் கலையுடுத்தி
வீணாகானம் வித்த,
வச்சிராயுதனும்
அயிராவத பாகனுமான உம்பர்கோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேங்குழல் இனிமை பொழிய,
துளப மௌலியனும்
கமலக் கண்ணனும்
கொண்டல் வண்ணனும்
உலகுண்ட பெம்மானுமான விட்ணு
மத்தள ஓசை இயற்ற,
திருமாலின் திருநாபிக் கமலத்தில்
அவதரித்த திசை முகனாம் பிரம்மா,
முன்னொரு காலத்தில் சிவனாரே
ஆனந்தத் தாண்டவஞ்செய்யும்
பொழுது,
கூத்தனின் திருப்பாதங்களை
அலங்கரிக்கும் கழல் கழன்று
'தா' என்ற ஒலியுடன்
அவர் தோளைத் தொட்டு,
'ளம்' என்ற சப்தத்துடன்
நிலத்தில் விழுவதற்கும் இடைப்பட்ட
நேரத்தை மிக நுட்பமாகக்
கணக்கிட்டு, அந்த நேரக் கணிப்புக்கு
இம்மியும் பிசிறாது
இசையும் வண்ணம் தாளம் போட,
பாற்கடலிற் பிறந்து
நாராயணன் மார்புக் கணப்பினைச்
சுகிக்கும் மாறிரு மார்பினளாம்
இலக்குமி,
வீணை-வேங்குழல்- மத்தளம்-
தாளம் ஆகியவற்றின் நாத ஒலிகளுடன்
நேர்த்தியாக இசையும்
வண்ணம், முல்லை முறுவல் வதியும்
மென்னிதழ்கள் விரித்து,
குயிலின் குரலைத் திருத்தும்
வகையிற் பாட, நாதமே உலக மயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற சித்தமே நித்திய வடிவமென்று
கற்பிதம் நாட்டுகையில்
அந்த நித்தியமும் அநித்தியத்தின்
அம்ஸமாக, அந்த 'இல்லை'யே
உண்மையின் உள்முடிச்செனக்
காளாத்திரி காட்ட,

'**ஆங்,** ஒக்கம புதி...மே
செப்ப கொல்லு தமங்கே
வித்தராய் பலன்னே...'
'கொஞ்சம் எடுக்கிறியோ...'
'சாய், இந்த ஆக்களுக்குள்ள...'
'பெரியவர், கொஞ்சம் தள்ளி இருமன்.'
'இஞ்சாலை சரியான வீடி மணம்.
சத்தி வரப்பாக்குது.'
'இதில ஆர் போற? சின்னத்துரை
மாஸ்டரலுவா?'
'ஆளுக்கு நல்ல மப்பு.'
'அவன் சரியான கனகாட்டில
மாட்டி இரிக்கான்.'
'அண்ணை, கொஞ்சம் காலை
மடக்கிறியளா? நான் கீழை
பேப்பரை விரிக்கிறன்.
நீங்கள் இஞ்சால மாறி இருந்து,
வசதியா உடம்பைச் சரிக்கலாம்...'
பேப்பர் விரிக்கப்படுகிறது.

மூன்றாவது 'சீட்'டுக்குக் கீழே,
சாறனைப் பாயாக விரித்து
ஓர் இளைஞன் படுத்துக் கிடக்கிறான்.
அவனுக்கு முன்னால், கெண்டைக்
கால்களுக்கு மேலாகவும் அம்மணமாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்கள் இரண்டு ஊஞ்சலுக்கு
உவமை பொருத்துகின்றன.

உள்பாவாடை 'லேஸ்'
அந்தக் கால்களுக்கு பெண்மையின்
மென்மையை அப்புகின்றது.

வசதியான இடத்தைக் கொத்தி
எடுத்திருக்கிறான்.

'சித்தாண்டி பாஸாயிட்டுது.
வாறது கல்குடாவாக்கும்...'

'நவம் மாஸ்டர்?'
'அவர் மற்றப் பாட்டியோட வாறார்.
கொழும்பில சந்திப்பார்...'

'ஒரே நியூசென்ஸா போச்சுது...
Teachers' transfer
செய்யவே நேரம் சரியா இருக்கு.
நல்லூர் மாநாட்டுக்கும் போகவேணும்...'

'ஓமோம்... நீங்கள் இல்லாட்டி
மாநாடு சப்பென்று போயிடும்...'

'மறுகா எப்ப இந்தியா போற?'

'சந்தனச் சிலை?'

'உஸ்... பக்கத்து பேர்த்தில மஜீத்...'

'சம்மான் துறையோ? நிந்தவூரோ?'

'ஆர்? பாலகிருஷ்ணனா? அவருக்கு
பேர்த் கிடைச்சிருக்கு.'

'Conference ஸோ?'
'Head Officeஸுக்குத்தான் போறார்...'

'பாக்கியம் எங்க போகுது?'

'கண்டிக்காம்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஏனாம்?'

'Wedding Suit தைக்கவாம்...'

'இங்க டெயிலர்மார் இல்லையோ?'

'நேருகூட பாரிஸிலதானே ஸூட்
தைச்சவராம்... எங்கடை சிவநேசன்
தைக்கிற சூட்டைக் கண்டால்,
சோளக்கொல்லை வெருளிகூட
கல்லடிப் பாலத்தில விழுந்து
தற்கொலை செய்து கொள்ளும்.'

'ஹஹ்ஹா...'

அக்காளாத்திரியைத் தன் வாயிலேந்திய
விரிசடையன் தோளிலும் மார்பிலும்
புரளும் அரவம்,
பாம்பாட்டிச் சித்தர்
பாடலின் ஓங்காரம் தூர்ந்து போகவும்,
ஏமாப்புடன் மேலே பறக்கும்
கருடனின்
சுகபலனை விசாரிக்கும் அபிநயத்துடன்
சென்னியை நிமிர்த்த,
பருவச் சுதி ஊட்டிய செருக்கிலே
இடம்- பொருள்-ஏவல் மறந்த
பஞ்சபாணனின் காமக்களியாட்டக்
கூத்தை அறுத்து
அவனை நீறாக்கவும்,
செந்தமிழ்ப் பரிபாலனம் நடாத்திய
சங்கத்திலெழுந்த சம்வாதத்திலே
சங்கறுக்கும் குலத்தோனின்
வித்துவச் செருக்கை
ஒறுக்கவுந் திறக்கப்பட்ட
நெற்றிக்கண் மூடியிருக்க,
இருசுடர்களை அப்பிய மற்றிரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களும் தேரோனின் மென் தழுவல்
பட்டுப் பூப்படையும் பங்கயத்தின்
பூரிப்பைப் படமெழுதிய வாக்கில் அலர,
நஞ்சுண்ட வாயின் அதரங்களிலே
குமிண் நகை பூக்க,
பிறை துலங்க,
தோடுகள் ஒளிர
படைத்தல்-காத்தல்-அழித்தல்-
மறைத்தல்-அருளல் என்னும்
ஐந்தொழிலையும் இயற்றும்
திருக்கரங்களின் ஐயிரு விரல்களும்
அபிநயத்தில் விரிய,
ஈசன் தன்
கைலாய நடனத்துக்கு
ஆட்ட வேகம் ஊட்டவும்,

'**BOY** get me a Lion Lager.'
'ஒம்லெட்.'
'மொனவத?'
'தே தெக்காக்.'
'Waiter! waiter!!'

'ரெஸ்ரோறண்ட் சேவையை ரயில்வே
எடுத்தபிறகு
சேர்விஸ் படுமோசம்...'
'தம்பிக்குக் கண்ணில
நித்திரை நிறஞ்சிட்டுது.
சாப்பாட்ட குடுத்துப் படுக்க வெய்யும்...'
'அது ஆன் புத்தி...'
'தண்ணிப் போத்தில் எங்கை?'

'பாருங்கோப்பா, எல்லாம்
ஒழுங்கா எடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைச்சனான். கார் வந்த பறதியிலை
மறந்து போய் வந்திட்டன்...'

'நாய் வாலை நிமித்தலாமே? உமக்கு...'

'ஆக்களுக்கை பழஞ்சீலை கிழிக்காமல்
பேசாமல் இருங்கோ...'

'வாழைச்சேனையோ?'

'கல்குடாவாக்கும்...அடுத்ததுதான்
வாழைச்சேனை.'

'பச்சைப்புள்ளை. கொஞ்சம் அரக்கி
இரு தம்பி... இதில வளத்துவம்...'

'அந்தப் பேப்பரை ஒருக்கா தாறியளா?'

'எங்க?'

'அங்கால போவம்...கொஞ்சம்
வசதியா இருக்கு...'

'அங்கால சேர் இரிக்கார்...
அந்த வட்டா தலையை
ஆட்டிக் கொண்டே...
எரிச்சலாய் இரிக்கும் மச்சான்...'

'தெரியுமா மச்சான்? வடிவேலு
கொண்டக்டரா எடுபட்டிட்டான்...'

'அவன் எம்பீன்ர பொடியன்...'

'இஸ்...இஸ்...'

'என்ன தங்கரத்தினம்?'

'நான் இறங்கிற பக்கமா
இறங்கு... பேசாம
பின்னால வா...

'சரி...'

அவனுடைய ஆர்வங்கள் அலைக்கழிக்கப்பட்டு,
பதிலிலே சுருதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறங்கியிருப்பதை உணர்ந்து,
தற்செயல் என்று போக்குக்காட்டி,
அவனுடைய ஆண்மையை
விழிப்படையச் செய்யும் ஓர் உத்தியை
லாவகமாக அவள் கையாண்டாள்.

'ரட்டகஜு...ரட்டகஜு'

'கச்சான்கொட்டை...கச்சான்கொட்டை...'

கூக்கூ...
வாழைச்சேனை ஸ்டேஷனிலே தரிப்பு நிலை அடைவதற்கான சமிக்ஞை. பக்கத்து லயனில் ரயில்கார் காத்து நிற்கின்றது. அது மாகோவிலிருந்து வந்தது. அதன் சேர்விடம் மட்டக்களப்பு.

**கண்ணாடி** யன்னல் ஊடாக ஓரிரு
உருவங்கள். இந்த ரயிலின் பயணிகள்
சிலரது பிரதிபிம்மங்களும்
தெளிவாகத் தெரிகின்றன.
அழகிய ஓவியம் வரைந்து
வைத்ததுபோல ஒரு சிங்களத்தி முகம்.
கற்பனை நயத்தரிசனத்தில்,
சீயகிரிச் சுவர் ஓவியத்தைப்
பெயர்த்தெடுத்து வந்து,
யன்னலிலே ஒட்டி வைத்தது போல!

'ஹொந்த படு!'

அவளுடைய மொழியிலேயே
அந்த அழகினை ஆராதனை
செய்த பொழுது, இதய நரம்பில்
நாதம் பிழிவதைப் போல அப்படியொரு
நிறைவு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அது** தன் பயணத்திலே எழுப்பிக் கொண்டிருக்கும் சமிக்ஞைகள்... கூஊஊஊக் ஊஊ... இராக்கதப் பாம்பு போலவும்... புல்லாய் புழுவாய் பாம்பாய் பல்விருகமாய்... பாம்பாய் மனோதர்மங்களிலே எப்படி எப்படிப் பிறப்பு விநோதங்கள் காட்டினாலும், மனித உடலங்கள் தாங்கிய பிறவிகள் பயணம், அது ரயில் பயணமாக இருந் தாலுங்கூட, சலனஸ்திதி என்கிற பிரக்ஞையை வழுவவிட்டு, சொந்த வீடுகளின் சகல சௌபாக்கிய வசதி களையும் சுவீகரித்துக் கொள்ளுதல் வேண்டும் என்கிற சுயநலப் பாம்புகள் மூர்க்கம் கொள்ளவும்... மா உலகத் தின் உடைந்த சில்லொன்றைஅடைத் துக் கொண்டு ரயில் நகருகின்றது.

**சலனத்தின்** சலனம்.
உடல்களின் சலனம்.
மனசின்-உணர்ச்சிகளின்-சலனம்.

உணர்ச்சிப் புடையன்கள்
வீறுகொள்ளுகின்றன.

செருப்புகளைத் தேடும் பாவனையில்
குனிந்து பார்க்கின்றான்.

ஜன்னலிலே பிரதிபிம்பமாக,
சீயகிரிச் சுவரோவியமாகத்
தோன்றயதின், கீழ்ப்பகுதி ஸ்தூலம்
சேலை போர்த்தி
'சீட்'டுக்குக் கீழே தொங்குகின்றது.

அந்தச் சேலையும்,
அது போர்த்திருந்த பாதங்களும்,

UNIVERSITY OF PERADENIYA
17-2-1996
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் பாயாக விரித்திருந்த பேப்பரைத்
தழுவிச் சுகிக்கின்றன.

'காலைக் கொஞ்சம் மடக்குங்கோ. நான்
கீழே படுத்துக் கொள்ளுகிறன்.'

> **'கூக்கூ...'** ரயில்பாதை ஓரமாக
> நடக்கும் அவள், முடக்கிலே, ரயிலின்
> வெளிச்சம் பரம்புவதற்கு முன்னரே'
> மரங்களிலே சமைந்த இருட்குகை
> ஒன்றுக்குள் ஓடி மறைகிறாள்.
>
> அவளுடைய கொய்தகத்திலே இழுபடு
> படுவனைப்போல அவன். அவர்
> களைத் தாண்டி...
>
> 'கூக்கூ...' ஓட்டமாவடிப் பாலத்திலே
> ரயிலின் ஓட்டமா அல்லது தாண்டவமா?

ஜால வித்தைக்காரனைப் போல
கைகால்களை மடக்கி,
பொந்துபோன்ற
இடத்திற்குள் புகுந்து, சுருள் நிலை
அங்கங்களை நெகிழ்த்தி, சயனகோலத்தின்
புனைவு.

'தம்பி செய்ததுதான் புத்தி. கரைச்சல்
இல்லாமல் கொஞ்சநேரம் உடம்பைச்
சரிச்சுக் கொள்ளலாம்...'

'சனங்களின்ரை காலுகள் முகத்திலை
படும்... காத்தும் வராது.
புழுதி மூச்சை அடைச்சுப் போடும்.'

'பயணம் எண்டாலே அந்தரம் தானே?'

'எங்கட நல்லயா மாஸ்டரை நினைச்சுப்
பாக்கிறதுக்கு இத்த பேப்பர்
பக்டரி எண்டாலும் இரிக்கி...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'கூ ஊ ஊ ஊக்...'** சிக்குப் புக்கு...
சிக்குப் புக்கு... ரம்புக்கண...
தொப்பித் தோட்டம்... மன்னப்
பிட்டி... கெக்கிறாவ... சிக்குப் புக்கு
சிக்குப் புக்கு

**மூன்றாம்** சீட்டுக்குக் கீழேதொங்கிய
கால்கள் சர்ப்பங்களாகப்
படமெடுக்கின்றன.

கீழே படுத்துக்கிடப்பவனின் கைகள் அவள்
தொடைகளைத் தொட்டு மகுடி
வாசித்ததின் நிகழ்ச்சித் தொடர்.
தொடரின் தொடர்ச்சி...
தீண்டுவதும், சீறுவதும்,
பாம்புப் பிணைச்சலாய் இணங்குவதும்,
எல்லாமே தூக்கக் கலக்கத்தில்
நிகழ்வதான நடிப்புகளும்.
'நள்ளிருளி னட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே
தென்பாண்டி நாட்டானே'
என்று பாடவேண்டிய
சிவபுராணக்காரன் எங்கே?

மூலை ஸீட்டின் சுகத்திலும், உள்ளே
சென்ற ஏதோ ஒன்றின் புண்ணியத்தாலும்
குறட்டை விட்டுத் தூங்குகின்றான்.

வேகம் உண்ட கைலயங்கிரி நடனத்திலே,
அவர் தோள்களிலே
கங்கணமாகப் புரளும் பாம்பு
திக்குமுக்காடுவதான சோகம் பற்றிய
அருட் தாகம் சித்திலே
ஊறிக்கிடந்த அந்தச் சித்தருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படவும்,
'சந்திரனைச் சூரியனைத் தாவித் தீண்டினாய்
சங்கரனுக்கு ஆபரந் தானுமாகினாய்
மந்திரத்துக் கடங்கினாய் மண்டலமிட்டாய்
வளைந்து வளைந்து நின்றுஆடு பாம்பே!'
என்று அதன் வரலாற்றுப் பெருமைகளை
ஊதி உசுப்பவும்,

**அரவ** மயம்.

கால்கள் பாம்புகளாகின்றன.

சில கைகள் மகுடிகளாக ஆட்டி
வைக்கின்றன. பெண்மைக் கால்களும்,
ஆண்மைக் கைகளும் பாம்புப்
பிணைச்சல்களாகும் தவிப்புகள். இடுப்புக்கு
மேலே ஓர் உலகம்.

மனிதக் குரல்களிலே பேசுகிறார்கள்.

மனிதகுலம் தக்க வைத்துள்ள
கலாசார விழுமியங்கள்
முற்று முழுக்க அம்மணமாகும்
வகையில் நடிக்கிறார்கள். அவற்றின்
கீழ் புற்றுகளும், அவற்றுள் புகுந்து
விளையாடும் தவனத்தின் வசப்பட்ட
அரவங்களும்...

**கூ ஊஊக்...கூ!**
சிக்குப்புக்கு... தொப்பித் தோட்டம்
சிக்குப்புக்கு... மன்னம் பிட்டி...
கட கடா...கடகடா...

'**அடுத்த** ஸ்ரேஷன் புனாளையே?'

'மன்னம் பிட்டியிலேதான்
சோக்கான தயிர்ப்பானை
வாங்கலாம்...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திலே தோய்ந்த பாம்பாட்டியின் வித்துவம்,
சிவனாரின் ஆட்டத்திலே
கங்கணமாக ஆடிய பாம்பின்
கட்செவிகளிலே ஏற
மறுத்ததினாலும்,
துறந்தவை எவையாக இருந்தாலும்
வித்துவத்தின் ஆணவம்
மட்டுமல்ல என்கிற வக்கிர ராங்கியுடன்,
'வட்ட முலையென்று
மிக வற்றுந்தோலை
மகமேரு என்று உவமை
வைத்துக் கூறுவார்
கெட்ட நாற்றமுள்ள
யோனிக்கேணியில் வீழ்ந்தார்
கெடுவார் என்றே நீர் துணிந்து ஆடுபாம்பே!'
என்று பாடிச் சோர்ந்து. அந்த ஈசனின்
ஆட்டத்தின் துரிதமும் இயக்கமும்
ஓய்வும் சகலமுமாக வியாபிக்கும்
உண்மை மின்னல் வீச்சுகளாகச் சித்தரின்
உள்ளத்திலே பளிச்சிட, சிவபுராணக் காரனின்
குறட்டையொலிக்கு
மகுடி வாசிப்பதைத் தவிர வேறு பயனில்லை
என்று மோனத்திலும்
தியானத்திலும் சித்தர் ஆழ்ந்தார்.

**கைலயங்கிரியா?** பாம்பாட்டிச் சித்தரா?
எல்லாமே கற்பனை மயனின் குறளிகளா?

**கூ. ஊ ஊ ஊ ஊ ஊ...**

ரயிலின் நீநீநீநீண்ட பயணம் நிசம்.
1970ஆம் ஆண்டு ஐப்பசி மாதத்தின்
அமாவாசையை அண்டிய ஓர்
இரவிலே கொழும்பு மெயில் வண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடிக் கொண்டிருக்கிறது. அதன்
பயணம் நிஜம் என்பது போலவும்.

'**ஹொறந்தபடு**'வின் கால்களைப்
போர்த்தியிருந்த சேலையைச்
சற்றே நெகிழ்த்தி,
பாலுணர்ச்சி தேடித்
தவிக்கும் வக்கிர ஆண்மையின்
ஏலாமைகளைத் துறக்கும் துடிப்புக்
கொண்ட அரவம் ஒன்று
புற்றினை நோக்கி நகருகின்றது!

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை

UNIVERSITY OF PERADENIYA
17-2-1996
7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம்
# 1

**மயிலருக்குப்** புலிவாலைப் பிடிச்ச நாயர் நிலை. பிடியை இறுக்கவும் ஏலாது; விடவும் பயம். கடையைத் திறக்க முந்தியே, ஐஞ்சு மணிக்கே கனகர் வந்திட்டார். சங்கானையில் முதல் திறக்கிறது மயிலு கடைதான். சேவை என்கிற நினைப்பும். தூர இடங்களுக்கு நேர காலத்தோடு போகிறவர்கள் அவர் கடையில் தேத் தண்ணி குடிச்சிட்டு முதல் பஸ்ஸை பிடிக்கிறது லேசு. இது வாடிக்கையும்.

'என்ன மயிலு பயமா இருக்குதோ? ஒண்டுக்கும் பயப் பிடாதை. பொலீஸ் எங்கடை பக்கம். சுடுறதுக்கும் 'ஒடர்' கையிலை வைச்சிருக்கிறாங்கள்...'

'அதுதான் பயமாக் கிடக்கு.'

கனகர் மயிலுவுக்கு 'ஒன்று விட்ட' உறவு. அவரின்ரை எழுப்பத்துக்கு இவர் இல்லை. இதனால், அவர் இவரின்ர கடையில கால் வைக்கிறதில்லை. இன்று? பாய்ஞ்சு வரும் சிங்கத்துக்குப் பராக்குக் காட்ட ஒரு முயல் தேவைப்பட்டது. சந்தர்ப்பத்துக்கு உதவுவது தானே பெரிய இடத்து உறவு? தேத்தண்ணிக் கடை வைச்சிருக்கிறவனுக்கு சாதித் தடிப்போ, யாவாரமோ பெரிசு? இந்தப் பக்கமும் சரியலாம். அப்படிச் சரிய விடாமல் 'முண்டு' கொடுக்கத்தான் கனகர் கடைக்கு வந்தவர்.

இளந்தாரிப் பொடியன் ஒருவன், கடைக்கு முன்னாலி ருக்கும் மரத்திலே தன் சைக்கிளைச் சாத்திவிட்டு, கடைக்குள் நுழைந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஆர் தம்பி நீர்? இந்த வெள்ளண்ண எங்கே வெளிக் கிட்டிருக்கிறீர்?' கனகர் பொடியனைக் குடைந்தார்.

அவன் ஒரு விறுதாப் பார்வை பார்த்துப் பதில் சொல் லாமல், கடைக்குள் போய் வாங்கில் குந்தினான். 'முந்த நாள் பிறந்த வடுவா' மயிலுக்கு முன்னால இப்படி அலட்சியமாக நடந்து கொள்வதை அவராலே தாங்க முடியவில்லை. ஏறிக்கொண்டு வந்த விஷரிலை அவ ருடைய மூலமும் சேர்ந்து கொதித்தது.

'தம்பி! நீர் ஊருக்குப் புதிசே? நான் கேக்கிறன். நீ ஏசண்டுத் துரைபோல உள்ளுக்கை போயிட்டீர். நீர் எந்த உலகத்திலை இருந்து முளைச்சனீர்? நான் ஆர் எண்டு தெரியுமே!'

பொடியன் பதில் சொல்ல முந்தி, மயிலர் ஓடிவந்தார்.

'அது அயலூர் பொடியன். தெரிஞ்சவன். காலமை ரியூஷனுக்குப் போற வழியிலை வாடிக்கையா இஞ்சை தேத்தண்ணி குடிக்க வாறது. உங்களைத் தெரியேல்லப் போல...' என்று கனகரைச் சமாதானப்படுத்தி, கனக ரின் பெருமைகளையும், இன்று நடக்க இருக்கும் 'திருவிழா'வையும் பொடியனுக்கு விளக்கினார்.

'வயசுக்கு மூத்தவை கேள்வி கேட்டால் பதில் சொல்லத் தெரியவேணும். ரியூஷன் படிச்சால் போதுமே? உலகப் படிப்பும் படிக்கவேணும். ஆராருக்கு எப்பிடி எப்பிடி மரியாத குடுக்கிறது எண்டது பெரிய படிப்பு...'என்று கனகர் இளகின இரும்பை மூசி அடித்தார்.

வெருண்டு போன வெள்ளாடு போல பொடியன் தலையை ஆட்டினான். தண்ணீர் கொதிக்கும் சத்தம் கேட்க, மயிலர் பித்தளை மூக்குப்பேணிகளைக் கழுவி, தேநீர் தயாரிப்பில் இறங்கினார். மற்றைய கடைகளிலே எவர் சில்வர் இயத்துகளின் நாகரிகம் புகுந்து விட்டது. மயிலர் மட்டும் பழைமையிலே தொங்கினார். இதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயப்படுத்த எத்தனையோ சாட்டுகள்...பேணிகள் இன்றைக்கு வழக்கம் போல பளபளப்பாக இல்லை. 'ஏதாவது கலவரம் கிலவரம் வந்திடுமோ?' என்று நினைச்ச பொழுது, கைகள் மட்டுமல்ல, மனசும் நடுங்கியது.

தேநீர்க் கடைகள் சில இன்று திறக்கா. விஷயம் இறுகிறதுக்கு முந்தியே சிலர் ஊரைவிட்டுப் பாய்ஞ்சிட்டான்கள். எல்லாக் கடைகளும் திறக்கவேணும் என்பது பொலீஸ் உத்தரவு. திறந்தால் அவங்கடை ஆக்கினை. திறக்காட்டில் பொலீஸ் உபத்திரவம். பாக்குவெட்டியில் அகப்பட்ட கொட்டைப்பாக்கு. மயிலருக்குக் கனகர் ரூபத்தில் இன்னொரு அச்சுறுத்தல்!

'கடையளை எத்தினை நாளைக்குப் பூட்டி வைப்பான்கள், உந்த எளிய சாதியளுக்குப் பயந்து? நாங்கள் றோட்டாலை வந்தால் தலையைக் கவிண்டு கொண்டு, வேலியைச் சிராய்ச்சுக் கொண்டு போற கீழ்சாதி நாய்கள், இண்டைக்கு எங்களோடை சமனாகக் குந்திக்கால் நீட்டிக் கொண்டு பேணியிலை குடிக்கப் போகினமோ? அந்தக் கெட்டித்தனத்தையும் ஒருக்காப் பார்த்திடுவம்...' எண்ணெய்ச் சட்டிக்குள் விழுந்த அப்பளமாகக் கனகர் பொரிந்து குதித்தார்.

'எல்லாம் பொன்னையன் விட்ட இடம். அவன் தன்ரை கடையைத் திறந்துவிடத் தயார் எண்டு பப்பிளிக்காகச் சொன்னதாலைதானே அவங்கள் துணிஞ்சு நிக்கிறாங்கள்? எங்களுக்குள்ள ஒத்துமை இருந்தால் அல்லோ?' சமயம் பார்த்து மயிலர் 'அள்ளி' வைச்சார். 'ஓமோம். இப்ப கடையைத் துறந்து விடுவான். பேந்து தன்ரை பெண்டிலின்ரை பணியாரத்தையும் துறந்து காட்டுவான்... தூ! இவன் ஒழுங்கான அப்பனுக்குப் பிறந்தால் இப்படிச் செய்வானோ?'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேநீர் குடித்ததும், பையன் சைக்கிளை எடுத்துக் கொண்டு, மெல்ல நழுவினான்.

'பொன்னையன் கொஞ்சக் காலமாய் நிச்சாமப் பக்கம் போய் வாறானாம்...ஏதோ அரசியல் வகுப்பாம்...'

'அரசியலோ? அதுக்கு ஏன் நிச்சாமம் போறான்? என்னட்டைக் கேட்டால் அமுதலிங்கத்திட்டைஅறிமுகப் படுத்தியிருப்பனே...அரசியல் பேசுறதுக்கு ஒரு தகுதி வேண்டாமே? மயிலு, இவன் அங்கை ஆரேன் பள்ளிச்சி யின்ரை சீனி அரியரத்திலை சொக்கி இருக்கவேணும். பொன்னையன் தரவளியளைக் கவனிக்காமல் விட்டது தான் எங்கடை பிழை. இண்டைக்குத் திருவிழா முடியட்டும். அவனை நான் ஒரு கை பாக்கிறன்.'

மயிலருக்கு வலு திருப்தி. பொன்னையனை மாட்டிக் கொடுத்த திருப்தி. பொன்னையன்தன் கடைக்கு ஃபேன் பூட்டியிருக்கிறான். எல்லாமே எவர்சில்வர் பாத் திரங்கள். பொடியளோட 'சளசண்டியாய்' பேசுவான். இவரின்ரை வாடிக்கைகள் சிலவும் அங்காலை பறிஞ் சிட்டுது. தொழில் போட்டியை இப்பிடிக் கொண்டு வந்து மாட்டினதிலை, மயிலருக்குப் பரம சந்தோஷம்.

அந்த நேரம், அங்கு வந்த அவர், சைக்கிளில் இருந்தபடி காலூன்றி நின்று கனகரையும் மயிலரையும் கடைக் கண்களால் நோட்டமிட்டு, மிக நிதானமாக இறங்கி, சைக்கிளைக் கடையோரமாக ஸ்ராண்டில் நிறுத்தி, உள்ளே வந்தார். நல்ல நெடுவல். அதற்குக் கம்பீரம் ஊட்டும் ஆஜானுபாகுத் தோற்றம். பாலாடையை உடையாக்கியது போல வெள்ளை வேஷ்டி; வெள்ளைச் சட்டை. ஒரு பக்கத்தில் நின்று பார்த்தால் நாற்பது வயசு வாலிபர் போல. இன்னொரு கோணத்திலே ஐம்பது வயசு மதிக்கலாம் போலவும். மானுட நேசிப்பில் மினுங்கும் கண்கள். சதா சிரிப்பிலே செந்தளிப்புப் பெற்ற முகம். தாம் உள்ளே நுழைந்ததும் மயிலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கடப்படுகிறார் என்பதை நிதானித்த அவர், நட்புப் பாராட்டும் சாமான்யக் குரலிலே, 'மயிலரின்ரை கையால தேத்தண்ணி குடிச்சுக் கனகாலம். உம்முடைய ஸ்பெஷல் ரீ ஒண்டு போடுமன்' என்றார்.

'என்னண்ணை? இந்தப் பிரச்சினைக்கை வெள்ளெனப் புறப்பட்டிருக்கிறியள்?' என்று மயிலர் கேட்டார். குரலிலே இலேசான பதட்டம்.

அந்த நெடுவல் மனிதர், வாங்கிலே சாவகாசமாக அமர்ந்து, கையில் கொண்டு வந்த சிவத்தப் புத்தகத்தை மேஜையில் வைத்த பின்னர், அவரைப் பார்த்துப் புன்னகைத்தார்.

'எங்கை பிரச்சினையோ, அங்கைதானே நானிருப்பன். உமக்குத் தெரியாதே?'

'தெரியும், தெரியும்' என்று அவசரமாகப் பேச்சை முறித்தபடி, தேநீரைக் கொண்டு வந்து வைத்தார்.

'இஞ்சை ஒரு பிரச்சினையும் இல்லை. கொஞ்ச பள் பொடியளுக்குப் பேணிலை தேத்தண்ணி குடிக்க ஆசை வந்திருக்கு. இண்டைக்குப் படிக்கிற பாடத்திலை தேத்தண்ணியே வேண்டாம் எண்டு ஓடுவாங்கள்!' என்று சீறினார் கனகர். அந்த நெடுவல் மனிதர் அவரையும் பார்த்துப் புன்னகைத்தார். தேநீரைச் சுவைத்துக் குடித்தார். அவரை மடக்கிய திருப்தியுடன் கனகர் வெளியே எட்டிப் பார்ப்பதும், உள்ளே வருவதுமாக 'நாட்டாமை' நடை பயின்றார்.

'மயிலர், காசை எடும். சரியே?...அப்ப வாறன்' என்று சிவத்தப் புத்தகத்தைக் கையில் எடுத்துக் கொண்டு எழும்பினார்.

'ஓமோம், வாருங்கோ...' என்று கடையிலிருந்து வீதியில் இறங்கி, அவரை வழியனுப்பி வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகருக்கு எரிச்சல் எரிச்சலாய் வந்தது. தனக்கு முன்னால் இன்னொருவர் முதல் மரியாதை பெறுவதை அவர் என்றுமே சகிக்கமாட்டார்.

'உவர் ஆர்? பெரிய எம்.பீ.யே? விழுந்து விழுந்து உபசாரம் செய்யிறாய்?'

'உங்களுக்குத் தெரியாதே? இவர்தான் மணியத்தார். கொம்யூனிஸ்ட் மணியத்தார்...'

'அடியடா செருப்பாலை. உவன்ரை உஷாரிலைதான் அந்தப் பள்ளுகள் துள்ளுகினம் எண்டு நானும் கேள்விப் பட்டனான். உவன்தானே?... அந்தப் பொலீசுக்கார மயிராண்டியளை இப்ப போய் ஒரு கேள்வி கேட்டுப் போட்டு வாறன். உவனைப் பிடிச்சடைச்சால் எல்லாத் தையும் அடக்கலாம் எண்டு 'Map' போட்டு, கஷ்டப் பட்டு, உவனுக்குப் 'பிடிவிறாந்து' எல்லோ வாங்கி னாங்கள்? கண்ணுக்கு முன்னாலை றோட்டிலை திரியிற இவனைப் பிடிக்கிறம் பிடிக்கிறம் எண்டு அவங்கள் சூப்பித் திரியிறாங்கள்...' என்று கத்திக் கொண்டே, இன்னும் கொஞ்சம் 'உஷார்' ஏற்றிக் கொண்டு வரப் புறப்பட்டார்.

கனகர் சத்தம் போட்டதைப் போல, மணியத்தாரை மடக்கிறது, அவ்வளவு லேசான காரியமல்ல என்பது பொலீஸாருக்கு நல்லாத் தெரியும். இதை அறியாமல் பாய்ஞ்சவங்களுக்கு அவர் 'தண்ணியும்' காட்டி இருக் கிறார். ஓர் இடத்தில அவரின்ர அசுமாட்டம் இருக்கும். அடுத்த கணம் எந்தக் குச்சொழுங்கையால் விழுந்து, எங்கே மிதப்பார் என்பது யாருக்கும் தெரியாது. அவரைப்பற்றி விபரமான File பொலீஸில் உண்டு. அதைப் படித்த மேலிடம் அவர்மீது பயங்கலந்த மரியாதை பாராட்டியது. 'இருமரபும் துய்ய வந்த' உயர் ஜாதி. பொருள் வசதியில் சாதாரண குடும்பம். சிறு வயதிலேயே கொம்யூனிஸ்ட் கட்சிக் கொள்கையால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவரப்பட்டு, முழு நேரக் கட்சி ஊழியனாய் அரசியலுக்கு வந்தவர். அதிகமாகப் பேசமாட்டார். யார் எது சொன்னாலும் எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்பார். நிறைவாக வாசிப்பவர். கூர்மையாக அவதானிப்பவர். சாதாரண மக்களுடைய தளத்தில் நின்று பிரச்சினைகளை அணுகுபவர். மாஸ்கோவில் மழை பெய்தால் இங்கே குடைபிடிக்க வேண்டும் என்கிற அடிமை மனப்பான்மை பிடிக்காது. 'புத்திஜீவித'ப் பெருமிதத்துடன் சித்தாந்தம் பேசும் தலைவர்கள், மக்களிடமிருந்து பிரிந்து, தங்களை அந்நியப்படுத்தி வாழுதல் கொம்யூனிஸ்ட் இயக்கத்தைப் பலவீனப்படுத்தும் என்று கடுமையாக விமர்சிப்பவர். போதனைகள் வேறு, வாழ்க்கை வேறு என்கிற மனோபாவத்துடன் வாழ முனைந்த வைதீக மார்க்ஸிஸ சித்தாந்தத் தலைவர்களுடைய இரட்டை வாழ்க்கையை இடையறாது சாடியவர். மக்களுடைய தலைவர்கள் மக்களுடன் மக்களாக வாழ வேண்டுமென்று ஆசைப்பட்டவர். மண்ணின் பிரச்சினைகளை மானுஷீகத்தின் அளவுகோல்களாலே அளக்க வேண்டும் என்று வற்புறுத்துபவர். 'தலைவர்கள் கொம்பு முளைத்தவர்களுமல்லர்; வழிபாட்டிற்குரியவர்களும் அல்லர். தலைவர்கள் உத்தம தோழர்கள்; நல்ல மனிதர்கள்...' என்று மனந்திறந்து சொல்லுபவர். சாதாரண மனிதனாய், காதல் வசப்பட்டவர். ஜாதி வேலிகளைத் தகர்த்து, விரும்பியவளைக் கரம்பற்றியவர். சாமான்ய குடும்பத் தலைவனாய் வாழ்தல், அற்புத புருஷார்த்தம் நிறைந்த வாழ்க்கை என வாழ்ந்து காட்டியவர். 'தாழ்த்தப்பட்ட மக்களுடைய போராட்டம், வாக்குகளைப் பெறுவதற்குச் சகாயமான கோஷமல்ல. அதிகாரங்களைச் சுகித்து வந்தவன் அவற்றை ஒரு பொழுதும் தன்னிச்சையாகத் துறக்க விரும்பான். நசுக்கப்பட்டவர் போராடித் தமது உரிமைகளையும் சுதந்திரத்தையும் பெறுதல் நியதி. தாழ்த்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட மக்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடுவதை ஜாதிச் சண்டை என்று கொச்சைப்படுத்துதல் ஆகாது. நல்லிதயம் கொண்ட ஜாதிமான்கள். 'அம்பையர்' வேலை பார்ப்பதுதான் தங்கள் வேலை என்று கடமைகளைக் கை கழுவிவிடக்கூடாது. மனிதன் உண்மையின் பக்கமும் விடுதலையின் பக்கமும் ஏணியாய் நிற்க வேண்டும். தமிழ்த் தேசிய இனம் தன்னுடைய உரிமைகளையும் உரிய கௌரவத்தினையும் தேசியரீதியில் வென்றெடுத்தல் வேண்டும். நம்மவர்களாக, நம் மத்தியிலே வாழும் தமிழர்களிலே ஒரு பகுதியினரை உரிமை அற்றவர்களாகவும், அடிமைகளாகவும் வைத்துக் கொண்டு, தமிழ்த் தேசிய இனத்திற்கான உரிமைகள் என்று முழங்குவது மகா கேவலமானது. பழைமைத் தளைகள் அனைத்தையும் உடைத்தெறியும் பொழுதுதான், தேசிய இனத்தின் கௌவரத்திற்காகப் போராடக்கூடிய உண்மையான போராட்ட வீரர்கள் உருவாகுவார்கள். இன்று ஜாதியத்திற்கு எதிராகப் போராடும் பஞ்சைகளும், பாமரரும், பஞ்சமருமே நாளைய தேசிய விடுதலைப் போராட்டங்களின் முன்னணித் தானை வீரர்களாகத் திகழ்வார்கள்...' என்று தமது ஊழியத்துக்கு மட்டுமல்லாமல், தமிழ்த் தேசிய இனத்தின் நாளைய செயற்பாடுகளுக்கும் மார்க்ஸிஸ சிந்தனைத் தடத்திலே புதிய அர்த்தம் பாய்ச்சியவர். மார்க்ஸிய இயக்கத்தின் புத்திஜீவிகள் தலைமைத்துவத்துக்கும் பட்டங்களுக்கும் பதவிகளுக்கும் ஆலாய்ப் பறந்த பொழுது, மக்கள் தொண்டனாகவும் ஊழியனாகவும் வாழ்வதிலே திருப்தி கண்டவர். அவர் கூச்சப்பட்ட போதிலும், மண்ணின் தேவைகளை மாண்புடன் மதிக்கும் மார்க்ஸிஸ இயக்கத்தின் தலைவராக உயர்த்தப்பட்டவர். மார்க்ஸிஸத்தை மக்கள் மயப்படுத்திய தலைமைத் தொண்டன்! அவர்தான் மணியத்தார். மாலைகளுக்காகவும் பந்தாவுக்காகவும் அலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாத கர்மவீரர். ஜாதிய வெறித்துவத்தினால் தான் தோன்றித் தலைமைத்துவத்திற்குத் தங்களைத் திடீரென்று நியமித்துக் கொண்ட கனகர் போன்றோர் அவரை நேரிலே பார்த்திராதது வியப்பன்று.

ஆனால், இளவாலை மாதாகோயில் சம்பவத்திற்குப் பின்னர், பொலீஸார் அவரைப் பற்றி நிறைவாகவே அறிந்து வைத்திருந்தனர். 'தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்' என்ற பாட்டினை மைக் பூட்டி ஒலிபரப்பி ஏசு பிரானின் சுவிசேஷ ஊழியத்தைப் பிரசாரஞ் செய்யும் கத்தோலிக்கர் இளவாலையில் கணிசமாக வாழ்கிறார்கள். யாழ்ப்பாணத்தின் ஜாதிய வைதீகத்திற்கு முன்னால், ஏசுநாதர் போதனைகள் சிற்றூழியஞ் செய்யும் கருவியாகத் தாழ்ந்து போயிற்று! இளவாலையின் அயலிலே வாழ்ந்த, கத்தோலிக்க மதத்தினை தங்கள் ரட்சிப்பிற்கான மதமாக ஏற்று ஞானஸ்நானம் பெற்றிருந்த தாழ்த்தப்பட்ட மக்கள் 'நாங்களும் உள்ளே வந்து மனித கௌரவத்துடன் பிரார்த்தனை செய்ய விரும்புகிறோம்' என்று இள வாலை மதாகோயிலின் கதவுகளைத் தட்டிக் கொண்டே இருந்தார்கள். யாழ்ப்பாணத்து ஜாதியம் கதவுகளைச் சிக்காராகப் பூட்டி வைத்திருந்தது. இதனால் உரிமைக் கான போராட்டம் தவிர்க்க இயலாத தர்மமாக விடிந் தது! இருபக்கமும் கொலைகள் விழுந்தன. தாழ்த்தப் பட்ட மக்களின் போராட்ட ஓர்மத்தின் முனையை மழுங்கச் செய்வதற்கான திட்டம் தீட்டப்பட்டு, கோடா லிக்காடு என்னும் கிராமம் பொலீஸ் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு, தாழ்த்தப்பட்ட சமூகத்தின் பத்து இளைஞர்களைக் கைது செய்து சென்றது. இந்தப் பொலீஸ் அராஜகத்திற்கு எதிராகக் குரல் கொடுத்து, இழைக்கப்பட்ட அநியாயங்களை நேர் செய்யச் சிலிர்த்து நின்றார் மணியத்தார். அவருடைய பிரயாசைகளுக்கு நிச்சாமக் கிராமம் முழுமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகத் திரண்டு தோள் கொடுத்தது. இச்செயலால் நிச்சாம மக்கள்மீது கனிந்த அன்பு பாராட்டுதல் மணியத்தாரின் பலவீனமாகக்கூட மாறியது! இதனா லும், சங்கானைக் களத்திற்கான உபாயங்கள் வகுக்கப் பட்ட கூட்டத்திலே மணியத்தார் ஒரு பார்வையாள னாகக் கலந்து கொண்டார்.

அந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு பரமண்ணரே தலைமை தாங்கினார். எவரெவர் எந்தெந்தப் பணி களை எப்படிச் செய்வது? எதிர்பாராத எத்தகைய நிலைமைகள் உருவாகலாம்? இவற்றை எப்படி எதிர் கொள்வது? பொலீஸாரால் தேடப்படுவதால் நடேசு தலைமறைவாகி விடவேண்டும். பரமண்ணர்மீது பொலீஸ் இன்னமும் 'கறல் வைச்சி'ருப்பதால், இன்னும் கொஞ்ச காலத்துக்கு நிச்சாமத்தை விட்டு வெளியே வராமல் இருப்பதுதான் புத்தி. தன்னை விட்டுவிட்டு மற்றவர்கள் 'திருவிழா'வுக்குப் போவார்கள் என்பது பரமண்ணருக்குச் சற்று ஏமாற்றமாக இருந்தது. நிச்சாம மக்கள் ஜாதியத்திற்கு எதிரான போராட்டங் களை 'திருவிழாக்கள்' என மதிக்கும் ஒரு பக்குவத் தினை அடைந்திருந்தார்கள். போராட்டத்தில் ஈடுபடும் பொழுது ஏற்படும் ஜாதி அபிமான உணர்வும், அநியாயத்திற்கு எதிராகத் தர்மத்தின் பக்கலிலே நிற்பதான நிறைவுமே இந்தப் பக்குவத்தினை அளித்தன. சொற்ப காலத்திற்கு முன்னர்தான் மாவட்டபுர ஆலயப் பிரவேசப் போராட்டம் நிகழ்ந்தது. அடங்காத் தமிழன் என்றும், 'சுதந்திர தமிழீழம்' பற்றிய கருத்துவத்தை முதலில் வெளியிட்ட தீர்க்கதரிசி என்றும் 'கியாதி' பெற்றிருந்த ஸி. சுந்தரலிங்கம் 'ஜாதிய அடக்குமுறை' என்ற தானைக்குத் தளபதி யாக நியமிக்கப்பட்டிருந்ததாலும், இந்தப் போராட்டம் அநியாய பத்திரிகை விளம்பரங்களைச் சுகித்தது. இந்தப் போராட்டத்திலே பங்கு பற்றச் சந்தர்ப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்காத நிச்சாம இளைஞர்கள் அதனை நினைவு படுத்தி, சங்கானைப் போராட்டத்தில் தமக்கு இடம் தரவேண்டும் என்று வாதிட்டார்கள். இந்தப் போராட் டத்தில் சுந்தரம் என்னும் இளைஞனுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.

இவ்வாறு திட்டமிடப்பட்ட 'சங்கானை தேநீர்க் கடைப் பிரவேச இயக்கம்' பத்து மணிக்குத் துவங்கும் என்றே பொலீஸுக்குச் செய்திகள் கிடைத்திருந்தன. பத்து மணிக்கு முன்னரே குண்டாந்தடிகள், துவக்குகள் சகிதம் சங்கானையின் கேந்திர இடங்களிலெல்லாம் பொலீஸார் முளைத்து விட்டனர். சந்தையில் வழமை யான கலகலப்பில்லை. திருவிழாவிலே 'சதிர் கச்சேரி' எப்பொழுது துவங்கும் என்கிற எதிர்பார்ப்பும், நிலை கொள்ளா அந்தரமும் நிலவியது. நேரஞ் செல்ல செல்ல எதிர்பார்ப்பின் உக்கிரம் சோர்ந்தது. எதிர்க்கக் கச்சை கட்டிக் கொண்டிருந்த ஜாதிமான்களுடைய 'உஷார்' கரைந்து, ஒருவகைக் களைப்புணர்ச்சி புகலாயிற்று.

'பள் பயலுகள் பயந்து போனாங்கள். மணி நாலாப் போச்சுது. இனி மரம் ஏறத்தான் போவான்கள். இஞ்சை வரமாட்டான்கள். நான் வீட்டை போய்ச் சாப்பிட்டிட்டு வாறன். ஏதாச்சும் அசுமாத்தம் தெரிஞ் சால் உடனை வீட்டுக்கு ஆள் அனுப்பு...' என்று சொல்லிக் கனகர் புறப்பட்டார்.

பொலீஸுக்கு 'ஏத்தப்பட்ட' உஷார் இறங்கி விட்டது. பின்னேரம் போல மேலும் இரண்டொரு தேநீர்க் கடைகள் வியாபாரத்திற்குத் திறந்து கொண்டன.

யாரும் எதிர்பார்க்காத சடுதியில், ஐந்து மணிஅளவில், நிச்சாமம் முழுவதும் அள்ளுப்பட்டு வந்தது போல சங்கானையில் ஒரு கூட்டம். பொன்னையா கடைக்குப் போய் 'கை விசேஷம்' செய்து கொண்டுதான் மற்றக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைகளுக்கு வரக்கூடும் என்பதுதான் பொதுவான எதிர்பார்ப்பு. ஆனால், அவர்கள் 'டக்'கென்று மயிலரின் கடைக்குள் புகுந்தார்கள். அவர் திகைத்து விக்கித்தார். கடைக்கு முன்னால் 'சென்றி' போல நின்ற இரண்டு பொலீஸ்காரர் அவர்களைத் தடுத்து நிறுத்தப் பார்த்தார்கள்.

சுந்தரம் முந்திக் கொண்டு, 'நீங்கள் சமாதானத்தைப் பாதுகாக்கிறதுக்கு வந்து நிற்கிறீங்கள். நீங்கள் அம்பாயஸ் மாதிரி. மயிலண்ணர் என்ன சொல்லுறார்? நாங்கள் உள்ளுக்கை வரலாமோ, வேண்டாமோ?' என்றான். மணியத்தாரின் ஆளுமைக்கு உட்பட்டு, அவரைப் பிரதிபண்ண எத்தனிப்பவன் அவன்.

மயிலர் முழிசினார். கனகரின் 'நாட்டாமை' அந்தக் கடைக்குள் மூக்கை நீட்டி இருக்கிறது 'வேண்டாம் எண்டா இவங்களும் சும்மா கிடக்க மாட்டான்கள்.' காலையில் மணியத்தார் வந்து போனதும் அவர் நினைவுக்கு வந்தது. அவர் ஒன்றுமே சொல்லாது, உமிரியை விழுங்கினார்.

'பாத்தியளே. அவர்தான் கடை முதலாளி. அவர் தடுக்கேல்லை...' என்று சொல்லிக் கொண்டே சுந்தரம் கடைக்குள் சென்றான். அவன் கூடவே இன்னும் ஐந்தாறு பேர் நுழைந்தார்கள். அவர்கள் அங்கு போடப்பட்ட வாங்குகளில் அமைதியாக அமர்ந்து கொண்டார்கள். மயிலர் தேநீர் தயாரிப்பில் ஈடுபட்டார்.

'வழக்கம்போல கிளாஸ்கள் வேண்டாம்... இண்டைக்கு எல்லாரைப் போலவும் பேணியிலைதான் எங்களுக்கு ரீ வேணும்...' என்று சுந்தரம் சொல்லவும், மற்றவர்கள் சிரித்தார்கள். அப்பொழுது வேறு இரண்டு பொலீஸ்க் காரருடன் ஒரு சார்ஜன்ட் உள்ளே வந்தார்.

'எழும்புங்கோடா... கீழ்சாதி நாய்கள். பேணியிலையல்லே ரீ சூப்ப வந்திருக்கினம்' என்று சார்ஜண்ட் தன் 'தொப்பை' குலுங்கக் கத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரம் எழுந்து நின்று அமைதியாகச் சொன்னான்: 'மயிலண்ணர் சொன்னால் நாங்கள் வெளியால போறம். நீங்கள் இந்தக் கடைக்குச் சொந்தக்காரர் இல்லை. எங்களை வெளியாலை போகச் சொல்ல உங் களுக்கு உரிமை இல்லை.'

'பள் நாயே! என்னடா சொன்னாய்?' அவனுடைய தொண்டையைக் கடித்துக் குதற ஆவேசம் கொண்ட வரைப் போல கத்தினார்.

'ஐயா, வெருட்ட வேண்டாம். நாங்கள் கோர்ட்டுக்கு மட் டும் அல்ல, பாலிமெண்ட் வரை போவோம். சட்டம் என்று ஒண்டு எல்லாருக்கும் பொதுவா இருக்கு.'

'மயிலு! என்ன சொல்லுறீர்? இவங்களை வெளியாலை போகச் சொல்லும்!...' சார்ஜன்ட் தமது பற்களை நறுமினார்.

'பறுவாயில்லை' என்று கடைசியில் மயிலர் திருவாய் மலர்ந்தருளினார்! அவர் வலு கணக்காளி. கனகருக்கு இரகசியமாக 'விசளம்' அனுப்பிவிட்டார்.

இதற்கிடையில், வேறு இரண்டு தேநீர் கடைகளுக்குள் நுழைந்தவர்களுக்கும் கடைச் சொந்தக்காரர்களுக்கு மிடையில் வாய்த் தர்க்கம் ஏற்பட்டிருக்கு. வேடிக்கை பார்க்க வந்த ஜாதிமான்கள் அதனைக் கை கலப்பாக மாறச் செய்தார்கள். இத்தகைய ஒரு சந்தர்ப்பத்திற் காகக் காத்திருந்த பொலீஸார், 'தாழ்த்தப்பட்ட' தொண்டர்கள்மீது தடியடிப் பிரயோகம் செய்யவும், நியாயத்திற்காகத் தொண்டர்கள் திமிர்த்து எழவும்...

கனகர் சாப்பிட்டு முடியவில்லை. 'அவங்கள் வந்திட் டாங்கள்' என்ற செய்தியைத் தொடர்ந்து, 'கலாதி துவங்கீட்டுதாம்' என்ற செய்தியும் வந்தது. கைகளைக் கழுவி, அதைத் துடைக்கக்கூட நேரங்கிடைக்காத பறதி யிலே, சந்தையை நோக்கி அவர் விரைந்தார். அடுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதியால் திரும்பியவுடன் சங்கானை மெயின் வீதி தெரியும். ஜாதி வெறி அவரை விழுங்கிவிட்ட ஆவேச அவசரம்!

சடுதியாக, அவருக்கு முன்னால், அவரை இடித்துத் தள்ளிவிடும் போன்ற வேகத்தில் ஒரு சைக்கிள் வந்து நின்றது. சைக்கிளில் காலூன்றியபடி நின்ற அந்த நெடுவல் உருவம் அவரைப் பார்த்துப் புன்னகைத்தது! மணியத்தாரேதான்.

'அண்ணர், என்ன அவசரம்? கொஞ்சம் பொறுங்கோ..' என்று மிகவும் அமைதியான குரலிலே கனகரை நிறுத்தினார்.

'என்ன வேணும்? நீர் ஆர் எண்டு காலமை தெரிஞ்சிருந்தால், இப்ப நீர் உள்ளுக்கை கம்பி எண்ணிக் கொண்டு இருந்திருப்பீர்... நிண்டு கொள்ளும் வாறன்...' பொலீஸை உடனடியாக உதவிக்கு அழைத்துக் கொள்ளலாம் என்கிற நப்பாசை கனகருக்கு,

'கனகர் நீர் ஆர் என்கிற முழு ஸ்ரோறியும் எனக்குத் தெரியும். அவசரப்படாமல் இதை ஒருக்காப் பாருங்கோ...' கையிலிருந்த சிவப்புப் புத்தகத்தைத் திறந்து, அதற்குள் பக்குவப்படுத்தப்பட்டிருந்த சுழல் துப்பாக்கியைக் கையில் எடுத்தார்.

'சுட்டுப் போடுவியோ?' உள்ளூரச் சினைத்து வந்த பயத்தை மறைப்பதற்காகக் கேட்டார்.

'ஒரு தோட்டாவைச் சிலவழிக்கிறதுக்கும் ஒரு தகுதி வேணும் அண்ணர். இப்ப நீங்கள் பேசாமல் வீட்டுக்குத் திரும்பிப் போறது உங்களுக்கு நல்லது. பேணியிலை தேத்தண்ணி குடிச்சால் நளவரும் பள்ளரும் உங்களிட்டைச் சம்பந்தம் பேச வந்திடுவாங்கள் எண்டு ஏன் அண்ணர் வீணாக் கனவு காணுறியள்? அவங்கடை விஷயங்களிலை இனி நீங்கள் தலைப் போடாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறதுதான் உங்களுக்கும் நல்லது... உங்கடை குலப்பெருமைக்கும் நல்லது. வயித்துக்கு வஞ்சகம் செய்யாமல் போய் வடிவாச் சாப்பிட்டு முடியுங்கோ...' கோபம் எதுவும் இல்லாமல், சந்தோஷத்திலே பகிடி கதைக்கிறது போல, எப்படி இவரால் இப்படி ஆறுத லாகக் கதைக்க முடிக்கிறது என்று கனகர் வாய டைத்துப் போனார்!

## களம் 2

**நிச்சாமம்,** சங்கானைக்கும் பண்டத்தரிப்புக்கும் இடையே உள்ள ஒரு சிறிய கிராமம். மாதவிடாய் காலங்களிலே, வீட்டிலிருந்து ஒதுங்கி வாழும் அந்தக் காலத்து யாழ்ப்பாணப் பெண்களைப் போல, மெயின் றோடுகளிலிருந்து ஒதுங்கி இருக்கிறது. அதைச் சுற்றி லும் கமங்கள். குச்சொழுங்கைகளும் முடக்குகளுமே அதற்குச் செல்லும் வழியிலே கொட்டுண்டு கிடக் கின்றன. பனை ஓலையில் வேய்ந்த மண்வீடுகளே அதிகம். பொருளாதார மாற்றத்தைப் பறைசாற்று வதைப் போல, அங்கொன்றும் இங்கொன்றுமாக அரிதாக ஓட்டு வீடுகள். வேலி அறிக்கை இல்லாத வீடு களும் இருந்தன. வேலிகளும் இருந்தன. உயர்ந்த வேலிகள் சில. தாழ்ந்த வேலிகள் சில. கிராமத்தைச் சூழ்ந்திருக்கும் கமங்கள் அனைத்தும் சங்கானையில் வாழும் கமக்காரர்களுக்குச் சொந்தமானவை. அவர் களுக்குத் தங்களுடைய காணிகளின் எல்லைகள் மட்டுமே தெரியும். அதுவும் உறுதிகளைப் பார்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதி செய்தபிறகு! அந்தக் காணிகளைக் குத்தகைக்கு எடுத்துக் கமம் செய்யும் ஏழைப்பட்ட, தாழ்த்தப்பட்ட குடியானவ மக்களே நிச்சாமத்தில் அதிகமாக வாழ் கிறார்கள். தேவைக்கு ஏற்பக் குத்தகைக் காணிகளின் பரப்பு விரியாததினாலும், மரவரி முறையினால் கள்ளி றக்கும் தொழில் பொருளாதார சுதந்திரம் வழங்கியமை யாலும் சிலர் 'சீவல்' தொழிலுக்குப் போய் விட்டார் கள். வேறு தொழில் முயற்சிகளை நாடியவர்களும் உளர். இவை சமீபத்தில் புகுந்த மாற்றங்கள். இந்தப் 'புதிசுகள்' கொஞ்சம் படிச்சதுகளும். இவர்களுடன் ஏற்பட்ட பழக்கத்தினாலேதான், மணியத்தார் அங்கு வந்து போகவும், மக்களுடன் அன்புடன் பழகி உறவாட வும் தலைப்பட்டார். அவருடைய 'சுவிசேஷ'ப்பணி களுக்குப் பரமண்ணர் ஓர் அருமையான, விஷய ஞான முள்ள தோழராக முகிழ்ந்தார்.

ஊருக்கு நடுவே ஒரு வயிரவர் கோயில். அதனைஅண்டி னாற்போல ஒரு சனசமூக நிலையம். அதனைப் புதிய சிந்தனைகளின் விளைநிலமாக மாற்றிய பெருமையில் மணியத்தாருக்குக் கணிசமான பங்கு உண்டு. இளைஞர் கள் 'வொலிபோல்' விளையாடப் பயன்படுத்தும் சிறிய வெளியும் சனசமூக நிலையத்தின் ஆட்சிக்கு உட்பட்டது போலவே அமைந்திருந்தது. புதிதாக யாராவது கிராமத்திற்குள் நுழைந்து மிலாந்தினால், 'பரமண்ணர் வீடோ?' என்று முன்பின் அறிமுகமில்லாதவர்கள்கூட அன்புடன் விசாரிப்பார்கள். வியாபாரிகள் யார், 'மற்ற வர்கள்' யார் என்பதை மட்டிட்டுவிடும் கிராமியம் அவர்களுக்கு இயல்பானது.

நிச்சாமத்தின் கொண்டாட்டங்களும், புதிய சிந்தனை களுடன் உறவு வைத்துக் கொள்ள உதவும் கூட்டங் களும் அந்த சனசமூக நிலையத்தை மையமாகக் கொண்டே நடைபெறும். ஊர் அடங்கிவிட்டதுபோல கோலம். ஆனால், பரமண்ணரும் இன்னும் சில இளமட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டங்களும் எதையோ எதிர்பார்த்த வண்ணம் சனசமூக நிலையத்தடியில் காத்திருந்தார்கள். அவர்களுக்குக் கொஞ்சம் யோசினையும்.

'நிச்சாமத்துப் பள்ளரா? அல்லது ஆண்ட பரம்பரை யான நாங்களா?' என்று விவகாரத்தை மிகவும் சுலப மான சுலோகமாக்கிக் கொடுத்திருந்தார் தளபதி. இந்தக் கோஷத்தை சங்கானை முழுவதும் மலிவித்தார் தான்தோன்றித் தலைவராய் உயர்ந்த கனகர். அவர் வீட்டில் தினந்தினம் பொலீஸுக்கு வேள்விகள் நடந்தன சங்கானை அயலிலே 'கொத்தித் திரிந்த' கோழிகளும், 'மேய்ஞ்சு திரிந்த' ஆடுகளும் கனகர் வீட்டு 'மணம்குண' மான மசாலாக்களிலே வெந்து அற்புத கறிகளாக மாறின. எலெக்ஷன் கால மோஸ்தரில் 'தண்ணி'யும் வற்றாது பாய்ந்தது. இத்தகைய ஞான வேளைகளிலே 'சுந்தரத்தின் மீதான குற்றங்கள் பெருப்பிக்கப்பட்டும் புதுப்பிக்கப்பட்டும் எழுதப்பட்டன. அந்தச் சோடிப்புகள் 'சுந்தரம்—பயங்கரவாதி நம்பர் ஒன்' என்று அறுதியிட் டன. சுந்தரத்துக்கு முந்தி 'இவன் மணியனை பிடிச்சு நல்ல ஒட்டல் சாப்பாடு தீத்துவிக்க வேணும்' என்றும் கனகர் கறுவினார். 'மணியனைப் பிடிச்சு அடைச்சால் தான் எல்லாம் அடங்கும்' என்று தளபதியாரும் பொலீ ஸுக்கு 'அசுக்கிடாமல்' அறிவுறுத்தி வைத்தார். யாழ்ப் பாணம் டெப்யூட்டி மேயர் செல்லத்துரையை அழைத் துப் பண்டத்தரிப்பிலே சமபந்தி விழா நடத்தி தமது 'நடுவு நிலைமை'யைத் தளபதி பிரயாசைப்பட்டு நிறுத்த முயன்ற போதிலும், நிச்சாமத்திலே கோவணங் கட்டாது திரிந்த 'சிறுசு'கள்கூட உண்மையை அறி வார்கள்.

நைவேத்திய ஆராதனைகளாலே மனங் குளிர்ந்த பொலீஸ் தெய்வங்கள் மணியத்தாரையும் சுந்தரத்தை யும் கைது செய்வதற்குப் புதுப்புது உபாயங்கள் வகுக்கத் தங்களின் தலைகளைப் பிய்த்துக் கொண்டன!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘மணியத்தார் எப்ப வருவார்?’ என்று ஓர் இளைஞன், சற்றே பொறுமை இழந்தவனாக, பரமண்ணரைப் பார்த்துக் கேட்டான்.

‘நான் வந்திட்டன்’ என்ற குரல் கேட்டு எல்லாரும் திரும்பிப் பார்த்தார்கள்.

மணியத்தார் எப்பொழுதும்போல அதே புன்னகைத்த முகத்துடன் அவர்கள் முன் பிரசன்னமானார். இருக்கை யாகப் பயன்படத் தறித்துப் போடப்பட்டிருந்த பனங் குற்றியிலே அமர்ந்தார்.

‘நான் அங்கால சைக்கிளக் குடுத்திட்டு, இங்கால நடந்துதான் வாறன்’ என்றார் காலாறியவாறே. அமைதி நிலவியது.

அரிக்கன் விளக்கின் திரியைப் பரமண்ணர் கொஞ்சம் தூண்டிவிட்டார்.

‘வெளியிலை என்ன நிலவரம்?’ பரமண்ணர் கேட்டார். வழக்கத்துக்கு மாறான ஒரு பரபரப்பு அவர் குரலிலே தொனித்தது.

‘பறுவாயில்லை.’ மணியத்தாருடைய தோறணை அவர் களுக்கு நம்பிக்கை ஊட்டியது.

‘அதுக்காக நாங்கள் படுத்திருக்க ஏலாது. என்ன நேரம் என்ன நடக்கும் எண்டு சொல்ல முடியாத நில வரம். நான் சமாளித்துக் கொள்ளுவன். சுந்தரத்தைத் தான் கவனமா இருக்கச் சொல்ல வேணும். அவனைப் பிடிச்சால் ஆக்கினைப் படுத்தி உருக்குலைச்சுப் போடு வாங்கள். அவன் ஒளிச்சிருக்கிற இடம் இனிச் சரிப்பட்டு வராது. வேறை இடத்துக்கு மாற வேணும்...’ அவர் களுக்கு வீண் பயம் ஊட்டக்கூடாது என்கிற அவதானத் துடன், சாதாரண குரலிலே, மணியத்தார் நிலைமையை விளக்கினார்.

‘அவன் இப்ப இங்கை வருவான்...’



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இங்கையோ?' என்று மணியத்தார் கேட்ட தொனியில், ஏதோ பிழை நடக்கிறது என்று பரமண்ணருக்கு விளங்கிப் போச்சுது.

'ஓம். அவன் இண்டைக்குக் கட்டாயம் வரவேணும் எண்டு விடாப்பிடியா நிண்டான். இளரத்தம். ஆனமான சாப்பாடும் இல்லை. குஞ்சாச்சிதான் ஏதோ கோழி ஆக்கி வைச்சிருக்கிறா போல. நெடுகிலும் அடைஞ்சு கிடக்க ஏலுமே?' பரமண்ணர் ஏதோ சமாதானம் சொன்னார்.

'பொலீஸ் நிச்சாமத்துக்குள்ள வராது எண்டு கவனக் குறைவா இருக்கேலாது. அவங்கள் இஞ்சை பாய்ஞ் சாலும் பாய்வாங்கள் எண்டுதான் என்ரைமனம் சொல்லுது...' என்று மணியத்தார் எச்சரித்தார்.

'ஏலுமெண்டா வந்து பார்க்கட்டுமன்' என்று இளமட்டம் ஒன்று சவால் விட்டது.

அவனுக்குத் துவக்குச் சுட நல்லா வரும்.

'இப்ப எங்களிட்டை ஆயுதங்கள் காணாது. பொலீஸிட்டையும் ஜாதிமான்களிட்டையும் பறிச்செடுத்த இறதல் துவக்குகள். வெருட்டலாம்; பயங்காட்டலாம். நிண்டு ஆனமான சண்டை பிடிக்க ஏலுமே? சீனாவிலை இருந்து வந்ததை, அழகரத்தினத்தாரின்ரை உதவியோடை கொண்டந்து சேத்திட்டன். அதைப் பாவிக்கிறதுக்கு முறையான றெயினிங் தேவை. பத்திரமான கைகளுக்குத்தான் போய்ச் சேரவும் வேணும். அதுக்கெல்லாம் நேரம் காணாது...' என்று சொல்லி, கையிலிருந்த சிவத்தப் புத்தகத்தைச் சுரண்டியபடி சிறிது யோசித்தார்.

மற்றவர்கள் ஒன்றும் பேசவில்லை.

மீண்டும் மணியத்தாரே சொன்னார்: 'தெற்கிலை இருந்து பொலீஸ்படை ஒண்டு யாழ்ப்பாணம் வந்திருக்காம். அவங்களை சங்கானைக்கும் அனுப்பி வைக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாம். நாங்கள் சும்மா விடுப்புக் கதைச்சுக் கொண்டு இருக்கேலாது. எதுக்கும் ஒரு முறை இருக்கு. தற்பாது காப்பும் பின் வாங்கலுந்தான் இப்போதைக்கு ஏலுமானது...'

'இவங்களோடை ஒண்டும் பறையேலாமல் கிடக்கு. வீம்புக் கதையளை விட்டிட்டு, என்ன செய்யவேணும் எண்டதைக் கவனமாக் கேளுங்கோ...' என்றார் பரமண்ணர்.

'பாராளுமன்றத்தில அமிர்தலிங்கம் பேசினதைக் கேட்டனீங்களோ?' என்று மணியத்தார் கேட்டார்.

'அவன் தானே எல்லாத்தையும் போட்டுப் பிசக்கிக் கொண்டிருக்கிறான். ''துப்பாக்கிக் குண்டு விளையாட்டுக்குண்டு'' என்று மேடையிலை வீர வசனம் பேசி அடி வாங்கிக் குடுப்பான். அடி விழுந்தோடனை இங்கை ஓடி வந்து, ''ஐயோ, தமிழனுக்கு ஒரு உரிமையும் குடுக்கிறாங்கள் இல்லையே... பேரினவாதச் சிங்களவனோடை இனியும் அண்டலிக்க ஏலாது... தமிழீழம் வாங்கிறது தான் இதற்கு ஒரே ஒரு மருந்து...'' என்று கண்ணீர் விட்டு வாக்குப் பொறுக்குவான்... நாங்கள் என்ன சீனாக்காரரே? நாங்கள் போய் தமிழன்ரை கடையிலை பேணியிலை தேத்தண்ணி குடிச்சால், அவரின்ரை தமிழ் உரிமைகள் எல்லாம் பொலுபொலுத்துக் கொட்டுண்டு போயிடும்...' பரமண்ணர் வழமைக்கு மாறாகச் சற்று ஆவேசமாகப் பேசினார்.

'தருமம் முதலிலை வீட்டிலை துவங்கவேணும். எங்களோடை காலம் காலமாக வாழ்ந்து, தமிழ் மட்டுமே பேசும் தாழ்த்தப்பட்ட மக்களின் சில அடிப்படை உரிமைகளை முதலிலை அங்கீகரிக்க வேணும்; கொடுக்க வேணும். பொதுவான போராட்டத்துக்கு அவர்களைச் சமஉரிமையுள்ள பங்காளிகளாக்கிக் கொள்ள வேணும். அதுக்குப் பிறகு தமிழ் இனத்தின் உரிமைகளுக்கான போராட்டம் ஒன்றைத் துவங்கிறதிலை அர்த்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும். கூட்டணிக்காரருக்கு பார்லிமெண்ட் சீட்டுகள்தான் முக்கியம். சும்மா 'சூக்'காட்டுறதுக்காகப் பொடியங்களைப் பலியாக்கப் பாக்கிறாங்கள். வீர வசனங்கள் பேசுவதல்ல போராட்டம். விடுதலைப் போராட்டம், ஒரு போராட்ட காலாசாரத்தில் வேரூன்ற வேண்டும். திட்டமிட்ட முறையிலே, நாங்கள்தான் உரிமைகளை வென்றெடுப்பதற்குப் போராட்டத்தை ஒரு கருவியாக முன்னெடுத்துச் செல்லுகிறோம்...சிறு குழுவினர் நிறுவப்பட்டுள்ள அமைப்புகளுக்கு எதிராகப் போராடும் பொழுது, தற்பாதுகாப்புக்காகப் பின்வாங்குதல் இன்றியமையாத தந்திரமாகும்...' என்று மணியத்தார் விளக்கினார்.

'நீங்கள் சொன்னால் சரி... அமிர்தலிங்கம் என்ன பேசினவர் எண்டு ஒருக்காச் சொல்லுங்கோ...' என்று விடலை ஒருவன் ஆவலுடன் கேட்டான்.

'சங்கானையில நடக்கிறது சாதிச் சண்டை இல்லையாம். ஷங்காய் போராட்டமாம். மாவோதான் நடத்துவிக்கிறாராம்... இது சாதிப் பிரச்சினை. இது மனுஷப் பிரச்சினை. அதை மறைச்சு கொம்யூனிஸ பூச்சாண்டியை எழுப்புறார்... தக்க சமயத்தில் தோழர் எஸ். டி. பண்டாரநாயக்கா பதிலடி கொடுத்து இவரின்ர வாயை அடைச்சவர்...' என்று நாடாளுமன்றத்திலே நடந்தவற்றைச் சொல்லிக் கொண்டிருந்த மணியத்தார், பேச்சை இடைமறித்து, 'ஆர் அது? சுந்தரமே? ஆர் உன்னை இஞ்சை வரச் சொன்னது?' என்று கேட்டார்.

'நான் முதலில பரமண்ணை யிட்டைச் சொல்லி இருந்தனான்' என்று சொல்லிக் கொண்டே, அவர்கள் கூடியிருந்த இடத்துக்குத் தயக்கத்துடன் வந்தான்.

மணியத்தார் சற்றே யோசனையில் ஆழ்ந்தார். தாம் யோசிப்பதை மற்றவர்கள் அவதானிக்கலாகாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிற அக்கறையில், சீக்கிரமே சுதாரித்துக் கொண்டார்.

'போராட்டம் என்று வந்து விட்டால், ஒவ்வொரு கட்டத்தையும் எதிர்கொள்ளந்தானே வேணும்? இனிச் சுந்தரம் நிச்சாமத்தை விட்டு வெளியேறுவதும் ஆபத்து... சுந்தரம் நீ எங்க தங்கப் போறாய்?'

'பொரியல் கரியல் எல்லாம் குஞ்சாச்சி வீட்டிலதானே நடந்தது...' என்றார் பரமண்ணர்.

'சுந்தரம், நீ குஞ்சாச்சி வீட்டிலைதான் தங்கு... வீணா யோசிக்கத் தேவையில்லை. ஆனால், எதுக்கும் ஆயத்த மாகப் படுங்கோ. விளங்குதுதானே?' என்று சொன்னவர், 'நான் ராவைக்குப் பரமண்ணர் வீட்டிலதான் தங்கப்போறன்...' என்று அறிவித்ததும், பொலீஸார் நிச்சாமத்திற்கும் பாயலாம் என்பதை எல்லோரும் ஊகித்தார்கள்.

'இங்க நாங்கள் கூட்டமாக இருந்து, விடிவிளக்கு எரிக்கிறது புத்தியில்லை. காலையில் ஒரு அசுமாத்தமும் இல்லாட்டில், அவரவர் உங்கடை உங்கடை பாடுகளைப் பாருங்கோ...' என்று கூறி மணியத்தார் எழுந்தார்.

**கமக்கரையைத்** தாண்டினால் வருகிற முதல் வீடுகளுள் ஒன்று வேலாயுதத்தினுடையது. வீட்டு முற்றத்தில் நின்று பார்த்தால் கமங்கள் முழுவதும் தெரியும். 'திருவிழா' விஷயங்களிலை அவனும் முன்னுக்கும் பின்னுக்கும் ஒடித்திரிஞ்சவன். இதனால் இறைப்பு வலு பிந்திப் போச்சுது. நாலரை மணிக்கு எழும்பி, இறைப்பு வேலைகளைக் கவனிக்கிறது அவன் வழக்கம். ராத்திரி நித்திரை நேர காலத்துக்கு வரேல்லை. கனவுகளின் கோலத்தில் குழம்பிய நினைவுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்து முற்றத்துக்கு வந்தான். 'நேரம் ஐஞ்சு மணி யாயிட்டுது!' வானின் வெள்ளாப்புப் பார்த்து நேரத்தைச் சரியாக நிதானிப்பது யாழ்ப்பாணத்துக் கமக்காரர் எல்லோருக்கும் கைவந்த கலை. 'இண் டைக்கு இறைப்பம்' என்ற நினைப்புடன் கமப் பக்கம் பார்வையைச் செலுத்தினான். கமக்காரன் தன் பயிர்களைப் பார்க்கும் அந்தப் பாமரப் பாசத் துடன்.

பயிர்களுக்குப் பின்னால், ஏதோ அசைவது போலத் தெரிந்தது.

'மணியத்தார் பயந்தது போல ஏதேன்...' என்ற எண்ணம் சடக்கென்று தைத்தது. முள்ளந் தண்டிலே சடுதியாக ஊசி ஏற்றியது போன்ற ஒரு அவதி. ஒரு கணந்தான். அவனுள் வாழ்ந்த கமக்காரன் மறைந் தான். அவனுள் உறங்கிய போராளி துளிர்ந்தான்! 'யாரடா அங்கை?'—நிச்சாமம்முழுவதும் எதிரொலிக்கக் கூடிய குரலிலே கேட்டான்.

பயிர்களுக்குப் பின்னால் பல உருவங்கள் ஏக காலத்தில் தலை நிமிர்த்தின.

'பொலீசுக்காரங்கள் வந்திட்டாங்கள்...' என்று கத்திக் கொண்டே வேலாயுதம் சனசமூக நிலையத்தின் திசை யிலே ஓடினான்.

அடுத்த கணமே நிச்சாமம் சிலிர்த்துக் கொண்டு எழுந்தது!

வேலாயுதத்தைத் துரத்திக் கொண்டே பொலீஸார் நிச்சாமத்துக்குள் நுழைந்தார்கள். அவர்களிலே சிலர் துப்பாக்கிதாரிகளாகக் காணப்பட்டார்கள்.

சுந்தரத்துக்கு இரவு நித்திரையில்லை. மணியத்தா ருடைய அங்கீகாரமின்றி நிச்சாமத்திற்குள்வந்தது தப்பு என்கிற குற்ற உணர்வு அவனை வருத்தியது. குஞ்சாச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியின் வீடு மண்வீடு. ஒரு அறை. அறையின் ஒரு சுவர் அரைக் குந்து. அறையின் அறிக்கைக்காக அதன்மீது தட்டி ஏற்றிக் கட்டப்பட்டிருந்தது. இரவோடு இரவாக குஞ்சாச்சியின் துணையுடன் அந்தத் தட்டியின் இறுக் கத்தை இளக்கி, தப்பியோடுவதற்கு வழி சமைத்திருந் தான். அதால இறங்கி, தாழ்ந்த வேலி தாண்டினால் பூமணி வீடு. பூமணி வீட்டின் வேலியோரம் ஓடை. வேலியின் பொட்டுக்குள் புகுந்து, ஓடையில் இறங்கி, முடக்கிலே திரும்பினால் யாராலும் பிடிக்க ஏலாது. தப்பு வதற்கான வழியைச் சுந்தரம் மனதிலே நன்றாகப் படம் போட்டு வைத்துக் கொண்டான்.

வேலாயுதத்தின் முதல் குரலிலேயே சுந்தரம் தயாரா னான்.

பொலீஸார் எல்லா வீடுகளிலும் தமது பருந்துப் பார்வை யைச் சுழற்றிக் கொண்டிருந்தார்கள்.

'சுந்தரம் நீ பாய்...நான் முன்னுக்கு நிண்டு சமாளிக் கிறன்' என்று குஞ்சாச்சி துரிதப்படுத்தினாள்.

'குஞ்சாச்சி...'என்று சுந்தரம் ஒரு கணம் தயங்கினான்.

'நீ பயப்பிடாமல் போ... நானும் நிச்சாமத்தாள் தாண்டா...' என்று உறுதியுடன் கூறி,வீட்டின் பலகைக் கதவைத் திறந்து கொண்டு, வீட்டுக்கு முன்னாள் வந்தாள்.

பெண் வந்து நின்ற வீட்டுக்குப் பின்னால், ஒருவன் பாய்ந்தோடுவது பொலீஸின் கழுகுப் பார்வையில் பதிந்தது.

'ஓடுபவன் சுந்தரமாக இருக்கலாம். அல்லது நெருங்கிய கூட்டாளியாக இருக்கலாம். ஓடுபவனைப் பிடிக்க வேண்டும். இரண்டு மிதி மிதிச்சால், இவள் முழுசையும் கக்குவாள்...' என்று பொலீஸ் மூளை சுறுசுறுப்படைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலீஸார் இருவர் குஞ்சாச்சியின் வீட்டுக்கு முன்னால் விரைந்தார்கள். ஒருவன் கையில் துவக்கு இருந்தது. வந்த வேகத்திலேயே வீட்டுக்குள் நுழைய எத்தனித்தனர். வீட்டுக்குள் நுழைந்தால், சுந்தரம் தப்பிய சுவட்டில் இவர்கள் துரத்துவார்கள். பிடிபட்டாலும் பிடிபடுவான். விஷயத்தை நிதானித்த குஞ்சாச்சி, கதவை மறைத்து நின்றாள். அவளை ஒருபக்கமாகத் தள்ளிவிட்டு, உள்ளே நுழைய முயன்றான் ஒருவன். குஞ்சாச்சியின் உறுதியும், அது ஊட்டிய பலமும் அவன் எதிர்பார்க்காதது. தன் ஆண்பலம் அவளை உசுப்ப வில்லை என்கிற வெப்பிசாரம்.

'தள்ளி நில்லடி பள் வேசை?' தன் ஏலாமையை மறைக்கக் கத்தினான்.

'என்ரை வீட்டை வந்து, எனக்கே நாட்டாமை காட்டுறியளோ?'—குஞ்சாச்சியின் குரல் எல்லோருக்கும் கேட்டிருக்கும்.

பார்த்த இடமெல்லாம், குஞ்சு குருமான்களையும் சேர்த்து, மக்கள் முளைத்து நின்றார்கள்.

துவக்குக்காரனுக்கு ரோஷம் வெடித்தது. குஞ்சாச்சியின் நெஞ்சிலே படும்படி துவக்கை நீட்டினான். துப்பாக்கிக் குழல் அவளுடைய திரண்ட மார்புகளை அளைந்தது போலவும். குறுக்குக் கட்டுக்குள் மறைந்திருந்த அந்த மார்புகள், அவள் ஆவேசத்தைப் பிரதிபலித்துத் திமிர்த்தன.

துவக்கின் குழல் அதிகம் அழுத்தவும், குறுக்குக் கட்டின் மேல் பட்டுச் சொருகல் இலேசாக அவிழ்ந்தது.

துவக்குக்காரனின் வக்கிரம் விழித்துக் கொண்டது.

அந்தக் குழலாலேயே அவள் மார்பினை அம்மணமாக்கிப் பார்க்கும் வெறி...'இவளை அவமானப்படுத்தினால், முழுக் கிராமமும் அடிபணியும்' என்று தன் வக்கிரத்துக்குப் பொலீஸ்கார நியாயங்கள் கற்பித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாறே, துவக்குக் குழலால் அவள் மார்பினைப் போர்த்தியிருந்த குறுக்குக் கட்டினை அவிழ்க்க முயன்றான்.

அவனுடைய அசிங்கமான செயலால் குஞ்சாச்சி ரௌத்திரமானாள். முதலிலே தன் அவிழும் குறுக்குக் கட்டினைச் சரி செய்யமுயன்றாள். தன் மானத்தைக் காக்கும் எத்தனத்துக்குக் குறுக்கே, துவக்கின் குழல் குறிசுட்டுச் சுழல்வதை உணர்ந்தாள். ஆவேசத்துடன் குழலைப் பற்றி இழுத்தாள். துவக்குக்காரனின் கவனம் காம விகார நினைவுகளிலே மிலாந்திக் கொண்டிருந்தபடியால், அவன் பிடி தளர்ந்திருந்தது. இதனால், அவள் பிடித்திழுத்த வேகத்தில் துவக்கு குஞ்சாச்சியின் கைக்கு வந்துவிட்டது. இருப்பினும், இந்த இழுபறியினால், குறுக்குக்கட்டு முற்றாக அவிழ்ந்து, குஞ்சாச்சி இடைக்கு மேல் அம்மணமாகத் தோன்றினாள். இந்தத் துகிலுரி ஆக்கினையினால், குஞ்சாச்சியின் ரௌத்திரம் சிரசு வரை ஏறிற்று.

வெடித்து வந்த அழுகையை உதடுகளினால் கடித்துக் கொண்டு, இந்தக் கிலிசகேட்டுக்குள் தன்னை உட்படுத்திய துவக்குக்காரனைத் தன் பலம் முழுவதையும் திரட்டி துவக்கின் சோங்கினால் மொங்கினாள். சற்றும் எதிர்பாராத இந்தத் தாக்குதலினால், துவக்குக்காரன் நிலத்திலே வீழ்ந்தான். மற்றவன் ஓடினான்.

'அந்தப் பள்ளியைச் சுட்டு வீழ்த்துங்கோடா...எல்லா வீடுகளையும் நெருப்பு வைச்சுக் கொழுத்துங்கோடா...' என்று உத்தரவுகள் மாறிமாறி ஒலித்தன.

துவக்கைத் தூக்கி எறிந்துவிட்டு, தன் குறுக்குக் கட்டைச் சரி செய்த குஞ்சாச்சி எட்டிப் பார்த்தாள்.

சுந்தரம் ஓடைக்குள் பாய்ந்துவிட்டான். 'குஞ்சு தப்பீட்டான்...' என்கிற நிம்மதி அவள் நெஞ்சில் ஊர்ந்தது. அதே சமயம் எங்கிருந்தோ பாய்ந்து வந்த தோட்டா ஒன்று அவன் துடைகளுள் ஒன்றைப்பிய்த்துச்சென்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால் துண்டிக்கப்பட்டது போல தாங்க முடியாத வேதனை. 'ஐயோ, என்னைச் சுட்டுப் போட்டாங்களே...' என்று அவலக் குரல் எழுப்பி, குஞ்சாச்சி விழுந்தாள்.

பொலீஸார் சனசமூக நிலையத்திற்குள் மறைவிடந் தேடினார்கள். இடையிடையே துவக்குச் சத்தங்கள் கேட்டன. யார் சுடுகிறார்கள்? யாரை வீழ்த்தச் சுடுகிறார்கள்? ஒரே குழப்பம். இந்தக் குழப்பங்களின் மத்தியிலே, ஒடுக்கப்பட்ட மக்களுடைய விடுதலைக்கான போர்க்களமாக நிச்சாமம் கோலம் புனைந்து நின்றது! புயலுக்கு முன் நிலவும் ஒரு பேய் அமைதி.

அதைக் கிழித்துக் கொண்டு பொலீஸ் ஜீப் ஒன்று வந்து சனசமூக நிலையத்தின் முன் நின்றது.

ஜீப்பிலிருந்து ஆயுதந்தாங்கிய பொலீஸார்குதித்தனர். மறைவிடம் தேடிய பொலீஸார், புதிதாக வந்து சேர்ந்த ஆயுதந் தாங்கியவர்களுடன் சேர்ந்து கொண்டார்கள். ஜீப்பிலே பூட்டப்பட்டிருந்த ஒலிபெருக்கி உயிர்ப்புப் பெற்றது. 'ஹலோ...one...two...ஹலோ...'

'பொலீஸ் அறிவித்தல். இந்த நிச்சாமக் கிராமத்தில் வாழும் சகல வயது வந்த ஆண்-பெண் இருபாலாருக்கும் அறியத் தருவது. மூன்று நிமிஷ அவகாசம் தரப்படுகிறது. தங்களுடைய இரு கைகளையும் தோளுக்கு மேலாக உயர்த்திப்பிடித்த வண்ணம் சனசமூக நிலையத்திற்கு வந்து சரணடையவும். ஏனையோரைக் கைது செய்வதற்குத் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்படலாம். இது முதலாவது அறிவித்தல்...'

குஞ்சாச்சி மட்டும் தொடையிலிருந்து ரத்தம் வழிந்தோட வாசலிலே கிடந்தாள்.

கதவு இடுக்குகளிலே எட்டிப்பார்த்த தலைகள்கூட உள்ளே இழுத்துக் கொண்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூச்சு விடுவதுகூட பயங்கரமாக ஒலிக்கும் மகா ஆக்கினையான நிசப்தம். இந்த நிசப்தத்திலே ஒரு நிமிஷம் கரைந்திருக்கும்.

'பொலீஸ் அறிவுப்பு...' எனத் துவங்கி, 'இது இரண்டாம் அறிவித்தல்... இரண்டாம் அறிவித்தல்...' என முடித்தது ஒலிபெருக்கி.

அறிவித்தலைத் தொடர்ந்து, ஆகாயத்தை நோக்கிச் சுடப்பட்ட துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டது.

அது எங்கிருந்து கிளம்பியது என்பதை நிதானிப்பதிலே பொலீஸார் முனைந்தனர்.

'சொன்னபடியே எல்லாம்... சரி, பரமண்ணர் நான் வாறன்.'

தன்னந் தனியாக, வெற்றுக் கைகளைத் தோள்களுக்கு மேலாகத் தூக்கிப்பிடித்த வண்ணம், நெடுவல் உருவம் ஜீப்பை நோக்கி நடந்தது. வருபவர் மணியத்தார் என்பதை நிதானித்ததும், பொலீஸ் புருவங்கள் பல ஆச்சரியத்தால் உயர்ந்தன.

இந்த நேரத்திலே அவர் நிச்சாமத்தில் நிற்கலாம் என்பது அவர்கள் கனவிலேகூட நியாயப்படுத்த முடியாத ஒன்று.

'இன்ஸ்பெக்டர், உங்கள் அறிவிப்பை நிறுத்தி, நான் சொல்வதைக் கொஞ்சம் பொறுமையாகக் கேளுங்கள். அதற்குப் பிறகு உங்கள் இஷ்டம்...'

'ம்...'

'நீங்கள் ஊகிப்பது உண்மை. இங்கே ஆயுதபாணிகளான பலர் இப்பொழுது தயார்நிலையில் நிற்கிறார்கள். அவர்களிடம் மிக நவீனமான சீனத் துவக்குகள் இருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியாது. இவர்கள் சமூக நீதிகோரிப் போராளியானவர்கள். அந்த நீதியை மறுக்கும் ஜாதிமான்களுக்கு எதிராக—உண்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் ஜாதியத்திற்கு எதிராக — போராடுகிறார்கள். இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய ஜாதிமான்கள் எங்கே? வசதியாகத் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். உங்களுக்கும் இவர்களுக்கும் என்ன பகை? முன் விரோதம் உண்டா? ஏன் உங்கள் அணியிலே உள்ள பொலீஸ் இளைஞர்கள் அநியாயமாகச் சாக வேண்டும்? உங்கள் உயிர்களைப் பாதுகாக்க வேணும் என்பதற்காகத்தான் நான் சரணடைகிறேன்...'

'இது நியாயம் பேசுவதற்கான வேளையும் இல்லை. இடமும் இல்லை. அவற்றைக் கோட்டிலே பேசிக் கொள்ளலாம்' என்று இன்ஸ்பெக்டர் குறுக்கிட்டார்.

'நீங்கள் சட்டம் பேசப் பாக்கிறீங்கள். நான் பேசுவது மனுஷ நீதி. நீங்களும் நானும் மனுஷ ஜாதி. இன்ஸ்பெக்டர், மனுஷ உயிர்கள் துப்பாக்கித் தோட்டாக்களிலும் பார்க்க மகா மதிப்பு வாய்ந்தவை. ஏழைகள் வாழும் ஒரு கிராமத்தை மயானமாக்கும் அதிகாரத்துடனேயா இங்கு வந்திருக்கிறீர்கள்? சங்கானைச் சம்பவங்கள் தொடர்பாக இரண்டு முக்கிய நபர்களை நீங்கள் கைது செய்ய வேண்டும். ஒருவன் சுந்தரம். அவன் தப்பி ஓடிவிட்டான். நீங்கள் எத்தனை உயிர்களைக் காவு கொடுத்தாலும், அவனை இப்பொழுது கைது செய்ய ஏலாது. சில மாதங்களாகவே என்னைக் கைது செய்ய அலைகிறீர்கள். என்னைக் கைது செய்து விட்டீர்கள். உங்கள் திறமையை மேலிடம் மெச்சும். அதற்கு மேல் ஏன் வீண் உயிர்ப்பலி? இனி, உங்கள் இஷ்டம்...'

அவர் கைகளைக் கீழே விட்டார். மணியத்தார் ஜீப்பை நோக்கிக் கம்பீரமா நடந்தார். அவருடைய பேச்சிலே தொனித்த உறுதியும், அவர் செயலிலே இழையோடிய மனிதநேயமும் இன்ஸ்பெக்டரை ஒரு கணம் உலுப்பியது.

'Operation Palmyra over' என்று இன்ஸ்பெக்டரின் உதடுகள் சடுதியாக உத்தரவு பிறப்பித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலீஸார் கலைந்து செல்ல ஆயத்தமாவது கண்டு பரமண்ணர் வியந்தார்.

'மணியத்தாரின் ஆளுமை யாரையும் வசீகரிக்கவல்லது' என்று பட்சமுடன் நினைத்துக் கொண்டார். அவர் மீளும் வரையிலும், அவர் ஒப்படைத்துள்ள சிவப்புப் புத்தகத்திற்கும் அதன் மரபுக்கும் உரிமைக்காரர்களாக நிச்சாமம் வாழவேண்டும் என உறுதி பூண்டார்.

'ஒரு சிறிய வேண்டுகோள் இன்ஸ்பெக்டர். குண்டடி பட்ட குஞ்சாச்சி பாவம். அவளைத் தாமதமின்றி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்ல வேண்டும். தயவு செய்து...'

'Dont Worry, It's done'

'நன்றி.'

பொலீஸ் ஜீப்பின் ஒலிபெருக்கி, சமாதானப் பணியிலே, உயிர்ப்புப் பெறலாயிற்று. □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**8**

**கதை**





**ஜோர்தன்** நதிக்கு அருகில் யோவான் ஸ்நானன் நின்றான். வெட்டுக்கிளியையும் காட்டுத் தேனையும் ஆகாரமாகப் புசிக்கும் அப்புனிதன் ஒட்டக மயிர் உடையைத் தரித்திருந்தான். அரையிலே வார்க் கச்சை அலங்கரித்தது. அப்பொழுது கலிலேயாவி லிருந்து வந்த இயேசு அவனால் ஞானஸ் நானம் பெறுவதற்கு முன் வந்தார். யோவான் அவருக்குத் தடை செய்து, 'நான் உம்மாலே ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா?' என்று கேட்டான். அவனுடைய வினாவுக்குப் பிரதியுத்தரமாக, 'இப் பொழுது இடம் கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்ற தாயிருக்கிறது' என்றார்.

**தமது** மேஜைக்கு முன்னால் அ. சிங்கராயர் அமர்ந் திருந்தார். வாத்தியார் என்றாலும், 'சீனியர் அஸிஸ்டன்' ஆகப் பதில் கடமை புரிகிறார். அவருடைய கழுத்தில் வெள்ளிச் சங்கிலியிலேஒரு சிலுவை தொங்கிக் கொண்டிருக்கும். அவருடைய பாலாமணி முழந்தாள் வரை நீண்டிருக்கும். அவருடைய கவனத்தை ஈர்ப்பதற் காகச் செருமியவாறே, இன்னாசிமுத்து ஆசிரியர் அறைக்குள் நுழைந்தார். இன்னாசிமுத்துவின் கையி லிருந்த படிவத்தைக் கண்டவுடன் சிங்கராயர் விஷயத்தை ஊகித்தறிந்தார். 'நான் என்னுடைய படிவத்தை உம்மைக் கொண்டு நிரப்பலாம் என்று நினைத்திருக்கும் பொழுது, நீர் என்னிடம் வந்திருக் கிறீர்' என்று கூறி நமட்டுச் சிரிப்புச் சிரித்தார். அவர் மனமறிந்து பொய் பேசுகிறார் என்பது இன்னாசிமுத்து வுக்குத் தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நீர் உம்முடைய படிவத்தை நிரப்பிவிட்டீர் என்பது வெளிப்படையானது. நீர் மேய்ப்போனைப் போல. அதைப் பார்த்து என் படிவத்தை நிரப்புவதுதான் ஏற்றது...' என்றார்.

'அப்படியானால் உன் சித்தப்படியே' என்று தாம் நிரப்பி வைத்திருந்த படிவத்தை எடுத்து, இன்னாசி முத்துவுக்கு முன்னால் வைத்தார்.

> இவ்வாறு, இயேசு ஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினார். இதன் பின்னர் அவர் பிசாசினால் சோதிக்கப் படுவதற்காக ஆவியானவராலே வனாந் தரத்துக்கு ஏவப்பட்டார். அவர் இரவும் பகலும் நாற்பது நாள் உபவாசமாயிருந்த பின்பு, அவருக்குப் பசியுண்டாயிற்று.

அ. சிங்கராயர் நிரப்பியிருந்த படிவத்தைப் பார்த்த வாறே, 'எனக்கென்னவோ அரசாங்கப் பாடசாலையிற் சேருவது அவ்வளவு விருப்பமாக இல்லை. பிரைவேட் டாகப் போகும் புனித அந்தோனியார் கல்லூரியில் ஓர் இடம் எடுத்துத் தருவதாக சுவாமியார் சொல்லி இருக்கிறார்' என்று இன்னாசிமுத்துவானவர் இழுத் தார்.

'அங்கால பென்சனும் இங்கால சம்பளமும் வருமென்று நினைப்பாக்கும். இவ்வாறு செய்வதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என்று நான் நினைக்கவில்லை. கட்டணங்கள் வசூல் பண்ணாமல், எத்தனை வருடங் களுக்கு, எத்தனை பாடசாலைகளைப் பிரைவேட்டாக நடத்தமுடியும்? கன்னங்கரா கொண்டு வந்த இலவசக் கல்வித் திட்டத்தையும் திருச்சபைக்காரர் முதலில் எதிர்த்தவர்கள்தானே? பிறகு ஆளுபவர்கள் சொல் வதைக் கேட்டு இவர்கள் பிரதியுத்தரம் எதுவும் சொல் லாமல் ஏற்றுக் கொண்டார்கள். இதிலும் அவ்வாறே நடப்பார்கள்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது சோதனைக்காரன் இயேசு நாதரிடம் வந்து, 'நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகளை அப்பங்களாகும்படி சொல்லும்' என்றான். 'மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்று இயேசு பிரதியுத்தரம் கூறினார்.

இன்னாசிமுத்து வாத்தியார் யோசித்தார். சிக்கராயர் தொடர்ந்து பேசினார்.

''கோழி மேய்க்கிற வேலை என்றாலும் கோர்ணமேந்து வேலை' என்று நம்மவர்களுடைய புதிய வாடகத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. இலவசப் பயண வசதி. ஆண்டுக்கு மூன்று 'செட்' தாராளம். வாடகைப்படி. அரசாங்க ஊழியர்களுக்குக் கிடைக்கும் அத்தனை சலுகைகளும் கிடைக்கும். உம்முடைய மனைவிக்கு கிடைத்துள்ள தலைமை ஆசிரியர் பதவி உறுதி செய்யப் பட்டு, எயுக்கேஸனல் சர்வீசுக்குள் சேர்ந்துவிடுவார். அமைச்சர் கொண்டு வந்த 'பில்'லில் அது தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஃபாதர்மாரும், மதர்மாரும், பிறதர்மாரும் அரச சேவையை விரும்பிப் படிவங்களை நிரப்பிக் கொடுத்து விட்டார்கள்...' என்று சிங்கராயர் பல விஷயங்களுக்குத் தம்மைச் சாட்சியாக்கினார்.

சிங்கராயருடைய படிவத்தைப் பார்த்து, தம்முடைய படிவத்தை இன்னாசிமுத்து வாத்தியார் நிரப்பத் துவங்கினார். ஓரிடத்திற்கு வந்தபொழுது இன்னாசிமுத்து வாத்தியார் தான் சோதனைக்குட் படுத்தப்பட்டவரைப் போல இடறலானார்.

'இதென்ன இப்படி நிரப்பியிருக்கிறீர்கள்?'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுவைப் பரிசுத்த நகரத்திற்குக் கொண்டு போய், தேவாலயத்து உப்பரிகையின்மேல் அவரை நிறுத்தி, 'நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக் குதியும்; ஏனெனில், தம்முடைய தூதர்களுக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிடுவார். உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளிலே ஏந்திக்கொண்டு போவார்கள் என்பதாய் எழுதியிருக்கிறது' என்று வேதவாக்கியத்தில் மேற்கோள் காட்டிச் சாத்தான் பேசினான். 'உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறதே' என்று இயேசு பதிலளித்தார்.

'எது?'

'சமயம் என்று கேட்டிருக்கிற இடத்தில், இந்து என்று போட்டு வைத்திருக்கிறீர்...' இயேசுவை மேய்ப்பராக ஏற்று, அவரின் சத்தத்தைக் கேட்டு, நம்பி; அவரைப் பின் தொடர்ந்த அந்தோனியார் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனாகப் பிறந்த சிங்கராயர், இப்படியாகத்தானே நிரப்புவார் என்று அவர் எதிர்பார்க்கவேயில்லை.

'மரண பயத்திலே ஏன் இப்படிக் கத்துகிறீர்? நாம் இப்படி நிரப்பிக் கொடுத்தோம் என்பது எத்தனை பேருக்குத் தெரியப் போகிறது? இந்த விவரங்கள் எல்லாம் ஏதாவது ஆவணத்திலே புகுந்து நித்திரை செய்து கொண்டிருக்கும். தீர்க்கதரினத்துடன் சில விஷயங்களை என்னாலே பார்க்க முடிகிறது. பாடசாலையிலே சரஸ்வதி பூஜை கொண்டாட அனுமதி தாருங்கள் என்றுதான் முதலில் கேட்பார்கள். பாடசாலையின் பெரும்பான்மை மதத்தவர்களுடைய மத அனுஷ்டானங்களுக்கு பாடசாலை வளவு பயன்படுத்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படலாம் என்று மசோதாவில் தெளிவாச் சொல்லப்பட்டிருக்கிறது. ஊசி போகிற இடம் கிடைத்தால், உலக்கையை நுழைக்கிறது எங்களுடைய மக்களுடைய பிறவிக் குணம். எங்களுடைய பாராளுமன்றப் பிரதிநிதிகளிலே, எத்தனை பேர் கிறிஸ்தவர்கள்? அவர்களிலே எத்தனை பேர் இயேசு கிறிஸ்துவின் ஊழியத்திற்குப் பாராளுமன்றத்திலே சாட்சியம் அளிக்கத் தயாராக இருக்கிறார்கள்? தமிழர் பிரச்சினை என்பது வேறு; சமயப் பிரச்சினை என்பது வேறு. எனக்குத் தெரிஞ்ச கிறிஸ்தவ எம்.பி ஒருவர், இந்துக் கோயிலுக்குப் போய்க் கும்பிட்டு, நெற்றியிலே விபூதி பூசிக்கொண்டு வந்து, கூட்டத்திலே பேசுகிறார். இப்படிப்பட்டவர்களா எங்களுடைய மீட்சிப்புக்கு வரப் போகிறார்கள்? மெய்யாகவே: அறிந்து கொள்ளும். நேற்றுத்தான் ஆசிரியர் கலாசாலையிலிருந்து வெளி வந்த ஒருவனுக்குக் கீழே, உதவி ஆசிரியனாக இருந்து ஓய்வு பெறுவதுதான் உமது ஊழியம் என்று நீர் விசுவாசித்தால், நீர் விரும்பியது போலவே நிரப்புவதற்கு இங்கு யாரும் தடை சொல்லப் போவதில்லை. ஆகிலும், நாம் நடப்பித்தவைகளுக்கு எங்களுக்குப் பலன் வேண்டும். இது தகாதென்று யாராலும் பிரதியுத்தரம் சொல்ல முடியாது...'

அவர் கூறிய விளக்கங்கள் இன்னாசிமுத்து வாத்தியாருக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. தன்னுடைய படிவத்தை, மேற்கொண்டும் பூர்த்தியாக்காமல், மடித்துக்கொண்டு எழுந்தார். அவர் தன்னைப் பற்றிய ஒரு சுயதேடலில் ஈடுபட்டார்.

தமிழ்மொழி மூலம் சீனியர் சோதனையிலே சித்தியடைந்து, தோட்டக்காட்டுப் பாடசாலைகளிலே ஆண்டு பல எழுத்தறிவிக்கும் இறைவனாக 'மட்டை'யடித்து, முயற்சி திருவினையாக்கும் என்று எழுதியிருக்கிறபடி முயன்று, பல முறைகள் தோற்றும், இறுதியிலே தேறி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலே இரண்டாண்டுகள் பயின்று, பயிற்றப்பட்ட உதவி ஆசிரியராகப் புனித அன்னம்மாள் பாடசாலையிற் சேரும் பொழுது சரவண முத்து வாத்தியாருக்கு 'வள்ளீசாக' முப்பத்திரெண்டுக்கு மேலிருக்கும். அங்குதான் அவருக்கு திரேஸாவின் அறிமுகம் கிட்டிற்று. பிறப்புக் கொப்பியின்படி அவரிலும் பார்க்க அவள் மூன்று வயதுகள் மூத்தவள் என்று யாரும் சொல்ல மாட்டார்கள். அவரிலும் பார்க்கப் பத்து வயது இளையவள் போன்று ஓர் இளமைச் செழிப்புடன் தேவ ஊழியத்திலும் ஈடுபாடுடையவளாகக் காணப்பட்டாள். மண்ணின் சம்பிரதாயங்களும், லௌகீகக் கடமைகளுமே வாழ்க்கை என்று அர்த்தப்படுத்தி, அயலார் பழிக்காத வண்ணம் தமது குடும்பப் பொறுப்புகளைச் சீராக ஒப்பேற்றி வைத்தார். அந்த நிறைவேற்றுதல்களே அவரைக் குடும்பத்திலிருந்து அந்நியப்படுத்தியது போன்ற வெறுமையுடன் வாழ்நாள்களை ஓட்டிக்கொண்டிருந்தார். அவர் அறிந்ததற்கு அப்பாலான ஒரு வாழ்க்கையும் உண்டு என்பதை திரேஸா டீச்சரின் குளிர்ந்த பார்வையும், இதமான செல்லக் கதைகளும் நினைவு படுத்தின. தமக்கு விவாக முடிச்சு சுவர்க்கத்திலே நிச்சயிக்கப்பட்டது என்கிற கெட்டியான நம்பிக்கை இருவர் உள்ளத்திலும் ஏக காலத்தில் ஏற்பட்டது. திரேஸாவின் கிறிஸ்தவ ஊழியத்திலே பங்கு கொள்ளாமல், அவளுடைய திருக்கரம் பற்ற முடியாது என்கிற வாஸ்தவத்தையும் அவர் அறிந்தார். அவளுக்காகவே அவர் கிறிஸ்தவ நற்செய்திகளிலே ஆரம்ப ஈடுபாடு காட்டினாலும், புதிய மதத்திலே சீக்கிரமே அவருக்கு விசுவாசம் ஏற்படலாயிற்று. கிறிஸ்தவ விசுவாசத்திலே சாட்சியம் கூறும் வகையில் ஞானஸ்நானம் பெற்று, இன்னாசிமுத்து என்கிற கிறிஸ்தவ நாமமும் சூடி திரேஸாவை மண முடித்தபொழுது, எல்லா வகையிலும் புதிதான ஒரு வாழ்க்கை தமக்கு மலர்ந்துவிட்டதாக அவர் திருப்திப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டார். ''முற்றிய குமரான திரேஸாவின் திரண்ட சொத்துக்கள்; சீதன வீட்டுக்குப் பக்கத்தில் நிரந்தர சேவை... இத்தியாதி சௌகரியங்களுக்காகத்தான் அவர் ஞானஸ்தானம் பெற்றார்'' என்று சில விஷமிகள் அபவாதச் செய்திகள் பரப்பினார்கள். அவர்கள் விரியன் பாம்புக்குட்டிகள் என்பதைத் தேவகடாட்சம் சுவாமியார் அறிவார்... தேவ நற்கருணைக்கு உரித்துடையவராக வும் திரேஸா டீச்சரின் இல்லற மாலுமியமாகவும், 'பட்டம் கட்டப்பட்டு' ஐயாயிரத் தைநூறு இரவுகளும் பகலும் கழிந்துவிட்டன. இதற்கிடையில் தேவகடாட்சம் சுவாமியார், கர்த்தரின் சேவையிலே தீவின் பல பாகங் களிலும் தொண்டியற்றி, மீண்டும் சொந்த ஊருக்குத் திரும்பினார். அப்பொழுதும் மெய்விசுவாசிகளான இன்னாசிமுத்து தம்பதிகள் புனித அன்னம்மாள் பாட சாலையில் உதவி ஆசிரியர்களாகவே உழைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்ததும், அவர்கள்மீது அவருக் குக் கழிவிரக்கம் ஏற்பட்டது. இன்னாசிமுத்து ஆசிரியரிலும் பார்க்க திரேஸா டீச்சர் ஏழு வருடங்கள் மேலதிக சேவை செய்துள்ளமை தேவகடாட்சம் சுவாமி யாரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. 'அவளுக்கு உரியதை அவளுக்கே கொடுங்கள்' என்று இன்னாசிமுத்து உறுதியாகவும் வெளியரங்கமாகவும் சொல்லி விட்டார். யாரும் எதிர்பாராத சடுதியில் திருமதி திரேஸா இன்னாசிமுத்து புளியடிக்குடா றோ.க.க.பாடசாலையின் 'ஹெட் மிஸ்ரஸாக' நிய மனம் பெற்றார். அந்த நியமனம் உரிய காலத்தில், உரிய வகையிலே உறுதி செய்யப்பட்டது. ஆனாலும், இன்னாசிமுத்துவின் மத அநுட்டான சீலமும், உதாரண மான முறையிலே குடும்பத்தை நடத்தும் சீர்த்தியும் வெகுமதிக்குரியன. அவருடைய 'புரமோஷன்' தவணை யிடப்படலாகாது எனவும் தேவகடாட்சம் சுவாமியார் திருவுளம் கொண்டார். ஓராண்டுக்கிடையில் புனித லூர்த்துப் பாடசாலையின் தலைமையாசிரியரான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலர் ஓய்வு பெறுவதாக இருந்தார். அந்த இடத்துக்கு இன்னாசிமுத்து ஆசிரியர் நியமனம் பெறுவார் என்று பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. இந்நிலையிலேதான் அவரோ, தேவகடாட்சம் சுவாமியாரோ எதிர்பார்க்காத கடுகதியில், ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கத்தினால், உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் அரசுடமையாக்கப்பட்டன. உதவி நன்கொடைப் பாடசாலையின் ஆசிரியர்கள் அனைவரும் அரசசேவையிலே சேரவிருப்பமாயின் அதற்கான படிவங்களை நிரப்பிச் சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தார்கள். இந்தப் பணியிலேதான் இன்னாசிமுத்து ஆசிரியர் சிங்கராயரின் உதவியை நாடினார்.

> சாத்தான் இயேசுவை விடவில்லை. அவரை உயர்ந்த மலையின் மேல் கொண்டு போய், உலகின் சகல ராஜ்யங்களையும்அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து, ''நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து என்னைப் பணிந்து கொண்டால், இவையெல்லாம் உமக்குத் தருவேன்'' என்று சொன்னான்.

'படிவத்தை நிரப்பும் உத்தேசம் இல்லையா? வலிய வாற சீதேவியை காலால் எட்டி உதைப்பதுபோல என்று சொல்வார்கள். யூலியன் என்கிற வெள்ளைக்காரச் சுவாமியார் இந்தப் பகுதியிலே ஒரு காலத்திலே ஊழியஞ் செய்தார். ''சுதந்திரமானவன் எல்லாவற்றிற்கும் எஜமானாயிருந்தும், அவன் சிறுபிள்ளையாய் இருக்கும் காலமளவும் அவனுக்கும் அடிமையானவனுக்கும் வித்தியாசமில்லை'' என்ற வேதவாக்கியத்தை அடிக்கடி சொல்லுவார். இலங்கைக்குச் சுதந்திரம் கொடுத்து வெள்ளைக்காரன் கப்பலேறியதுடன் எங்களுக்கு இருந்த மதிப்பும் மரியாதையும் கப்பலேறிப் போய்விட்டது. இப்ப ஹாமுதுருக்களுக்குத் தான் காலம். அவர்கள் சொல்லுவதுதான் சட்டம். முதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமனம் பெற்று இங்கு வந்ததிலிருந்து உம்மை எனக்குத் தெரியும் என்றபடியால் இவற்றைச் சொன்னேன். இனி உமது பாடு...' என்றார் சிங்கராயர். அவர் கழுத்திலே குருசு கோர்த்த வெள்ளிச் சங்கிலி தொங்கிக் கொண்டிருந்தது.

'ஒரு தலைமை ஆசிரியர் பதவிதான் வாழ்க்கை என்று நான் நினைக்கவில்லை. மனிதகுமாரனின் ஊழியத்தை ஏற்றுள்ள மனிதனாய் வாழ்வது எனக்கு நலமாய் இருக்கிறது. ''நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்'' என்கிற தேவ வசனத்திலும் எனக்கு நம்பிக்கை இருக்கிறது...' மிக அமைதியாகக் கூறிய இன்னாசிமுத்து ஆசிரியர் நடக்கத் துவங்கினார்.

'ஏதோ பெரிய பிறவிக் கிறிஸ்தவனைப் போல இவர் தேவவசனங்கள் பேசுகிறார். இவருக்கு திரேஸாடீச்சரில நல்ல பயமிருக்கு... அதை மறைக்கிறதுக்குத் தேவ வசனங்கள்...' என்று அ.சிங்கராயர் முணுமுணுத்தவை இன்னாசிமுத்து வாத்தியாரின் செவிகளிலே துல்லியமாக விழுந்தன.

திரும்பிப் பார்த்து, ஒவ்வொரு வார்த்தையாகச் சொன்னார்.

'நான் எப்படிப் பிறந்தேன் என்பதல்ல. எப்படி வாழ்கிறேன் என்பதுதான் என்னைக் கிறிஸ்தவனாக்குகின்றது. இயேசு மனித கோலத்திலே சிலுவையில் மரித்த தாழ்மையான வேலைக்காரன் என்கிற நினைவு எனக்கு எப்பவும் இருக்கிறது. மணவாட்டியை உடையவனே மாணவாளன். என் மணவாட்டிக்கு கிறிஸ்தவனின் மனைவியாக வாழும் உரிமையை நான் வழங்குவேன். உம்முடைய அகராதியிலே அன்பு என்கிற சொல்லுக்குப் பயம் என்கிற அர்த்தம் இருந்தால், அது உமது பாடு.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பெண்ணின் அன்பை மகுடமாகத் தரித்த மாட்சிமையுடனும், தமது மனைவிக்குத் தமது வாழ்க்கையிலே சரிபாதியை அருளிய மனித நிமிர்வுடனும், இன்னாசி வாத்தியார் தமது வகுப்பறையை நோக்கி நடந்தார்.

அப்பொழுது இயேசு, ''அப்பாலே போ சாத்தானே! உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே'' என்றார். சாத்தானானவன் அவரை விட்டு விலகிப் போனான். இயேசு சோதனையிலே ஜெயித்தார். □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கதை**

# 9





**காங்கேசன் துறையை** நோக்கி நீளும் ரயில்பாதை, சிறாம்பியடியையும் ஆரியகுளத்தையும்இணைக்கும்தார் வீதியைத் தாண்டி வடக்குத் தெற்காகப் படுத்துக்கிடக் கிறது. விசாலாட்சி மாமி வீட்டுக்குப் புறமுதுகு காட்டி நிற்கிறது கைகாட்டி மரம். நாவலர் வீதி ரயில்பாதை யைக் குறுக்கறுக்கும் இடத்திலும் ஒரு 'கேற்'. அந்த 'கேற்'றை ரயில்களின் நேர அட்டவணைப்படி திறந்து மூடும் மீசைக்காரப் பழனியப்பன் தன் குடும்பத்துடன் வாழ்ந்த 'காம்பரா' றோட்டுக்குத் தெற்கில், ரயில் பாதைக்குக் கிழக்கில் குந்தியிருக்கிறது. அந்தக் காம்ப ராவை ஒட்டினாற்போல, அரசமரம் குடைபிடித்திருக்க, நீள் சதுரப்பெட்டியைக் கிடத்திவிட்டதுபோல மண்பிட்டி இணக்கப்பட்டிருக்கிறது.அதுதான் நாவாந்துறை ரயில் தரிப்பு நிலையம். அங்கிருந்து பார்த்தாலும் கோயில் வளவு வடிவாத் தெரியும். வெண்தாடிக் கிழவர் வெயில் குளிக்கும் இடத்திலிருந்து பார்த்தாலும் அது வடிவாத் தெரியும்.

பளைக்குப் போகும் 'லோக்கல்' இன்னும் வரவில்லை. வழக்கமா அது எட்டு மணிக்குப் பிறகுதான் வாறது.

'என்ன அப்பு?' என்ற குரல் கேட்டு வெண்தாடிக்கிழவர் (என் தாத்தா) திரும்பினார். 'ஓட்டை' நாகேசர் தொழில் அலங்கிருத்தியனாக அங்கு வந்து சேர்ந்தார்.

'மெய்ய நாகேசு? உன்னைக் கேழ்க்கவேணும் எண்டு இருந்தனான். இப்ப நீ கோயில் வளவுக்குள்ளயும் மினக்கெடுறாய்... ஏதேன் கட்டியிருக்கிறியோ?'

'ஓமப்பு.' ஓட்டை நாகேசர் சுருக்கமான பதில் தாறது வலு ஒறுப்பு.

**'என்ன தாலியக்கட்டைச் சொல்லுறாய்?மக்கிக்கிடங்கடி நல்லாம்பீன்ரை மூத்தவன்— அவன்தான் ரத்தினம்— அதுக்குள்ள இருக்கிறதுகளைச்சீவுறான் எண்டெல்லோ நான் நினைச்சுக் கொண்டிருக்கிறன்?'**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அதுவும் மெய்தான். அவன் பனையளை எடுத்திருக்கிறான். முத்து மனுஷீன்ரை குடிலுக்குப் பின்னாலை, சின்னாச்சி மனுஷீன்ரை வேலியோரம் உள்ள ரெண்டு தென்னம்பிள்ளையளும் சேட்டமாய்க் காய்க்கினம். பாளையள் வெடிச்சுச் சிரிக்கிறது ஒரு வடிவப்பு. அதுகள் உசரியும் இல்லை. ஒருக்காத் தட்டிப் பாப்பம் எண்டு தான். என்ன இருந்தாலும் ஒரு தொழில் பிராக்கும் வேணுமல்லே?'

'நீ சொல்ல வாறதும் மெய்தான்... இஞ்சாலை வந்து குடியிருக்கிறதுகள் எந்த விளாத்தி? ராத்திரி நல்ல அமளியல்லே? அவனுக்குக் கண்விண் தெரியாத வெறி. அவன் தன்ரைப் பெண்டிலை இழுத்துப்போட்டு மொங்கு மொங்கெண்டு மொங்கினான். இவளுமோ அடியை வாங்கிக்கொண்டு கொட்டினது நாலு வண்டில் பாரம்...' வெண்தாடிக்கிழவர் தாடியை உருவியபடி, கைத்தடியை எடுத்து மற்றப் பக்கமாக வைத்தார்.

'உந்தத் தோறைக்கு உது வேணுமப்பு... உவள் கயம் புளிபாள். புரியனைவிட்டு ஓடிவந்து, பெரிய கடையிலை கடகம் தூக்கிறாள். ஓமோம், அந்த அஞ்சனத்தாழ்வு மனுஷிக்குப் பக்கத்திலதான் யாவாரம். அடங்கா அமரிலை இப்ப இவனைக்கொழுவிப் பிடிச்சிருக்கிறாள். இவன் அவளைப் பார்க்கிலும் எட்டு வயசு வள்ளீசா இளமை எண்டு கேள்வி. அவளுக்கு கடுக்கண்ணிற வயசிலை ஒரு பொடிச்சி. இருந்து பாரனப்பு நடக்கப் போற புதினங்களை...'

'இந்தக் கிலிசகெட்ட சனங்களின்ரை...' என்று வெண் தாடியர் சொல்ல வந்ததை முடிக்காமலே, அயலிலை மிலாந்திக் கொண்டிருந்த என்னைப் பார்த்து விட்டார். சொல்ல வந்ததை அந்தரத்திலை விட்டிட்டு, 'பார்த்தியே நாகேசு? 'தந்தை எவ்வழி மைந்தனும் அவ்வழி' எண்டது எவ்வளவு அச்சோட்டாகச் சரி வந்திருக்குப் பாத்தியே? கொஞ்சமும் மரியாதை இல்லாமல் நாங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைக்கிறதை இவன் விடுப்புப் பாக்கிறதை. இது பண்டாரக்குளத்துப் புத்தி...' என்று எனக்கு அர்ச்சனை செய்யத் துவங்கினார். என்னைத் திட்டுறதுக்கு அப்பை யாவையும் பண்டாரக்குளத்தையும் இழுத்தடிக்காட்டில் அவருக்குப் பத்தியமில்லை. மறுபேச்சுக்குக் காது குடுக்காமல் நான் வீட்டுக்குள் ஓடினேன்.

பளை 'லோக்கல்' வாற சத்தம் கேக்கத் துவங்கியது.

மணிக்கூட்டு றோட்டிலிருந்து, பெருமாள் கோயிலைப் பார்த்து, எதிர்ப் பக்கம் கெவர் விடும் ஒழுங்கை—அதைச் சைவப்பள்ளி ஒழுங்கை எண்டுதான் அயலட்டையிலை சொல்லுவினம்—ரயில் பாதையைத் தொட்டு முடியிறது போலத்தான் தெரியும். ஆனால், அது அந்த இடத்திலை இருக்கிற றெயில்பாதைப் பாலத்துக்குக் கீழாலை புகுந்து, சேணிய தெருவைச் சுரண்டிக்கொண்டிருக்கு. அந்த இடத்தில், சேணிய தெருவுக்குக் கிழக்கில், பெரிய இடத்தை அடைத்துக் கிடப்பதுதான் கோயில் வளவு.

ரயில் பாதையில் நின்று பார்த்தால், இடக் கைப்பக்கத்தில் பனைகள்—ஆண்பனைகளும்பெண்பனைகளுமாக—உயர்ந்து வளர்ந்திருப்பது தெரியும். பனங்காய்க் காலத்திலை பின்னேரங்களிலை கனகம்மா அக்கா பனங்காய்ப் பணியாரம் சுட்டு விக்கிறவ. கோயில் வளவு ஒரு சமதர்மப் பூங்கா போலவும். அங்கொன்றும் இங்கொன்றுமாக மூன்று நாலு குடிசைகள். கனகம்மாக்காவின் குடிசை வீடு போலப் பெரிசு. வலப்பக்கத்திலை பெரிதொரு இலுப்பை மரம். வேதப்பள்ளிக்கு முன்னாலை இருக்கிற இலுப்பை மரத்திலும் பார்க்க இது பெரீசு. மழை அடிக்கேக்க அதுக்குக் கீழை நிண்டால் ஒரு துளி மழையும் படாது. அதின்ரை கொப்புகள் அவ்வளவு அடர்த்தி. அந்த மரத்தின் நிழலிலிருந்து தப்பி விட்டதைப் போல, மேற்கில், ரயில் பாதை ஓரமாக முத்து மனுஷியின் குடிசை. அவ விடியப்புறம் கடகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைத் தூக்கித் தலையிலை வைச்சுக் கொண்டு போய் விடுவா. அவவின்ரை மேள் பூரணமக்கா—செத்தராமன் பெண்டில்—அயலட்டையிலை மாவிடிக்கவோ, தூள் இடிக்கவோ, சபை சந்திச் சமையலுக்கு உதவவோ போயிடுவா.

இலுப்பை மரத்துக்கு வலு பின்னுக்கு, கட்டைசாமியரின் வளவின் பின்வேலி தெரியிற இடத்தில், அவர் வீட்டின் கக்கூசின் பிடரியைச் சொறிந்தபடி ஒரு புளிய மரம். அந்தப் புளியமரத்துக்குக் கிட்டவும் ஒரு குடிசை. அந்தக் குடிசையிலை ஆக்கள் சீவிக்கினமோ இல்லையோ எண்டதும் தெரியாது. தென்னோலைத் தட்டியாலான அதன் கதவிலே ஒரு ஆமைப்பூட்டுத் தொங்கும்.

வளவினை நேர்வகிடு எடுத்ததுபோல செல்லும் ஒற்றை யடிப் பாதை, சரியாகத் தோசைக்காரக் கனகம்மாக்கா வின் முற்றத்திலை ஏறும். கனகம்மாக்காவின் தோசைக்கு அக்கம் பக்கத்திலை நல்ல 'மானம்'. அவவிட்டத் தோசை வாங்க நான் எத்தனையோ தரம் போயிருக்கிறன். அவவின்ரை புருஷனை நான் ஒரு நாளும் கண்டதில்லை. அவவுடைய வீட்டின் தெற்குப் பக்கம், அவ வீட்டுக் கூரையிலிருந்து பத்தி இறக்கியது போல ஓர் அறை உண்டு. அந்த அறையிலைதான் 'ஓட்டத்த' மயில்வாகனம் வாழ்றவர். அவர் அவவுக்கு 'ஒன்றுவிட்ட' அண்ணராம்.

கோயில் வளவு பென்னம் பெரிய 'டானா' எழுத்துப் போல. ரயில் பாதையில் நின்று பார்த்தால், அதன் மடங்கிய கீழ்ப் பகுதி தெரியாது. அது கனகம்மா அக்கா வீட்டை ஒட்டினாப் போல, வடக்குப் பக்கமாக நீளுகிறது. அதன் அந்தலை, நாவலர் றோட்டிலுள்ள கோயில் தெற்கு வீதி. கோயி லின் கோபுரமும், முன்னாலுள்ள கிணற்றின் துலாவும் தெரிவதினால், இதனை நிதானிக்கலாம். அந்தப் பகுதி சரியாக் காடுதான். மனித நாகரீகம் அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னிச்சையைக் கெடுக்கவில்லை. அப்பையா வேட்டை யாடுறதுக்கு இயக்கச்சிக்குத் தெற்கேயுள்ள காட்டுக்குப் போகத் தேவையில்லை எண்டு எத்தனையோ தரம் மலைச்சிருக்கிறன். விழ முடியாத அவலத்துடன் ஒவ்வொரு பனையிலும் மூன்று நாலு காவோலைகள் தொங்கிக் கொண்டிருக்கும். அந்த மரங்களைச் சீவ ஆரும் ஏர்வைப்பட்டதும் இல்லை. இரண்டு பனைகளைச் சுற்றி வளர்ந்தது போல இரண்டு இலந்தைமரங்கள். ரயில் பாதையின் திக்கிலைதான் இலந்தை மரங்கள். கிழக்குப் பக்கம் கொய்யாக் காடு. கொய்யாக்காட்டுக்குப் பின்னால், கோயிலின் வேலியோரமாக அன்னமுன்னா மரங்கள். அந்த வளவின் பெரிய பரப்பை அடைச்சுக் கொண்டு நிக்கிறதுபோல ஒரு நாவல் மரம். நல்ல பெரிய பழங்கள். இடியப்பக்கார புவனா அக்காவின் வீட்டுக்கு முன்னால் இருக்கிற நாவல் மரத்தின் பழம், இதுகின்ரை கால்வாசி சைஸுக்கும் வராது. தசைப் பிடிப்பம். வலுசின்னக் கொட்டை. இந்த நாவல் பழங் களைப் போல ருசியான பழங்கள் அந்தப் பகுதியில் வேறை எங்கயும் கிடையாது எண்டு அப்பையாவும் சொல்லுவார். இந்த விஷயங்களில் அப்பையாவுக்குள்ள ஞானம் யாருக்கும் இல்லை. இலந்தைப் பழங்களும், கொய்யாப் பழங்களும், அன்னாமுன்னாப் பழங்களும் ஆயிறது அவ்வளவு லேசில்லை. நிலத்திலை ஒரே பற்றை. இக்கிரி, நாயுருவி, தொட்டாச் சுருங்கி, இன்னும் எத்தனையோ செடி கொடிகளும் நிலத்தை மறைச்சு வளர்ந்திருக்கும். சாயக்கார ஒழுங்கையில் வாழும் சிவராஜா பரியாரியாருக்கு அநுமாரின் உதவி யில்லாமல் கிடைச்ச சஞ்சீவி மலைதான் இது எண்டு ஓட்டை நாகேசர் வாயூறுவார். தேவையான அத்தனை முகிலிகளையும் பரியாரியார் அங்கை வந்து பிடுங்கிக் கொண்டு போவாராம். எத்தனையோ வகையான பறவைகளும் அங்கு இருக்கு. சின்னண்ணனுக்குப் பின்னாலை நான் வால்போல இழுபடுறதும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அது என்ன குருவி அண்ணை, இது என்ன குருவி அண்ணை?' எண்டு கேட்டுக் கொண்டிருந்தன். 'டக்' கென்று விட்டார் ஒரு குட்டு. அப்படிப்பட்ட குட்டின்ரை அர்த்தம் எனக்கு எப்பவும் விளங்கும்: 'பேசாமல் வாயைப் பொத்திக் கொண்டு இரடா!' புறா, மைனா, கிளி, கரிக்குருவி, சிட்டுக்குருவி, பிலாக்கொட்டைக் குருவி, சூத்தாட்டிக் குருவி, மரங்கொத்தி, குயில், காகம், செண்பகம், புழினி, பிராந்து எண்டு எத்தனையோ பறவைகள் எனக்குத் தெரியும். பண்டாரக் குளத்திலை இன்னும் எத்தனையோ பறவை களின்ரை பெயரை அறிஞ்சு வைச்சிருந்தனான். இலந்தை மரத்தைக் 'கைது' செய்தது போல அக்கமும் பக்கமும் இரண்டு பனைமரங்கள். இரண்டுக்கும் வட்டுகள் இல்லை. பட்டுப்போய் இருந்தன. அவற்றிலே பொந்துகளும் உண்டு. அவற்றின் வாசல்களிலே கிளிகள் காணப்படும். அவை அந்தப் பொந்துகளை வீடுகளாக்கி வாழ்கின்றன என நினைத்துக் கொண்டேன். அந்த இரண்டு பனைகளும் இடியேறு விழுந்துதான் பட்டுப் போயின என்றும், இடியேறு விழுந்ததைத் தாம் தமது கண்ணாலே பார்த்ததாகவும் ஓட்டை நாகேசர் சாதித் தார். அவர் சொல்லும் புராணங்கள் கந்த புராணத்துக் கடைசி ஒற்றையில் காணப்படா விட்டாலும், அதை எதிர்த்து வாதாடித் தப்பவும் ஏலாது.

கோயில் வளவிலிருந்து, தெற்குப் பக்கத்தில், ரயில் பாதை ஓரமாக, ஐந்து வீடுகள் தள்ளித்தான் சேணியச் செட்டியாரின் கடை. ஒவ்வொரு மாசமும் முதலாவது சனிக்கிழமை பின்னேரங்களில் செட்டியார் கடையிலை இருக்க மாட்டார். பெருமாள் கோயிலடியிலே பக்திப் பரவசமாகத் திரிவதிலே நேரத்தைக் கொல்லுவதைத் தவிர அவருக்கு வேறு வழியும் இருக்கவில்லை. ஏனென்றால், அந்த நேரத்தில் அவருடைய கடை முகப்பை அந்த வட்டாரத்திலே வாழும் பெண்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சிப்படுத்தி விடுவார்கள். மனைவி வந்து யாவாரம் செய்யிறதுதான் அவருக்குப் பிடிக்காது. ஆனால், அவ நடத்திற 'சின்னச்' சீட்டுக்கு அவர் மகா ஆதரவாளர். பெண்கள் நாள் செலவுகளிலே 'அரிச்சுக் கிரிச்சு' மிச்சம் பிடிக்கிறதை நாளாந்தமாகவோ, தவணை முறையிலோ மாதத்துக்கான சீட்டுக் காசாக இறுக்கிக் கொள் வார்கள். அது குலுக்கல் முறைச் சீட்டு. ஆருக்கு அந்த மாசச் சீட்டு விழுகிறது என்று அதிர்ஷ்டத்தைப் பார்த்துக் கொள்ளவும் பரபரப்பு. 'விசாலாட்சி... பிளாங்கு... அம்மாக்குட்டி பிளாங்கு... கனகம்மா பிளாங்கு ..' என்று கரிசனையாக ராகம் இழுக்கிறதும் வடிவாக இருக்கும். குலுக்கல் முடிந்த பிறகு அது மாதர் மகாநாடாக மாறிவிடும். செய்திகள், வதந்திகள் வம்புகள் எல்லாமே அலசப்படும். தூரத்தில் நின்று பார்த்தால் வேடிக்கையாகவும் இருக்கும். தலைகளை ஆட்டுவதிலிருந்தும், கைகளை ஆட்டிக் கொள்ளும் அபிநயத்திலிருந்தும் யார் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அனுமானிக்க ஏலும். தூரத்திலிருந்து பார்த் தால், அந்தக் காலத்துச் சார்லி சப்ளின் நடிச்ச ஊமைப் படங்களைப் பாக்கிறபோலை இருக்கும். அவர்களுடைய தலை ஆட்டங்கள், கை அபிநயங்களைப் பார்த்து, தன் கற்பனையையும் குழைத்து பெரியண்ணர் 'டப்பிங்' குரல் கொடுத்து, எங்களைச் சிரிக்க வைப்பார். பின்னர் இது அலுத்து விட்டது. அந்த மாதர் மகாநாட்டிலே அலசப்பட்ட முக்கிய விஷயங்கள், வெந்தீஸ் பற்றிப் பறை போடும் மூப்பன் துணையின்றியே, பிரசித்தமாகி விடும். பராசக்தி அக்காவின் அம்மா அந்தக் குலுக்கல் சீட்டில் சேர்ந்து கொள்ள விரும்பினவவாம். அவளைச் சேர்க்கிறதில்லை என்று தீர்மானித்து விட்டார்களாம். விசாலாட்சி மாமியின் இடைவிடாத பரிந்துரைகளுக்கு மசிந்துதான் அம்மா இந்தச் சீட்டிலை சேர்ந்தவ எண்டு ஞாபகம். கோயில் வளவிலை இருக்கிற நாவல் மரத்திலை பேய் இருக்குது. மத்தியானம் பன்னிரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிக்கு அதனுடைய அட்டகாசம் தாங்கேலாது. ஒரு பேயோ ரெண்டு பேயோ எண்டு சரியாச்சொல்லேலாது. கனகம்மா அக்கா ஒண்டைக் கண்ணாலை கண்டவ. பொடிப் பிள்ளையளை மத்தியான நேரம் அங்காலை மிலாந்த விடுகிறது வடிவில்லை. 'அப்பு, மத்தியான நேரத்திலை கோயில் வளவின் பின்பக்கம் போயிடாதை யெணை' எண்டு அம்மா அலட்டத் துவங்கீட்டா. ஒரு நாள் இந்த அலட்டல் அப்பையாவின் செவிகளிலையும் விழுந்து விட்டது. 'ஆர்? கனகம்மாவே சொன்னவள்? மத்தியான நேரத்தில் அந்தப் பேய்கள் வளவிலை இருக்கிற இலந்தைப்பழம்-கொய்யாப்பழம்-நாவல் பழம் அன்னமுன்னா எல்லாத்தையும் ஆய்ஞ்சு கனகம்மா விட்டைக் குடுக்கும். அதுகள் முத்து மனுஷியின்ரைக் கடகத்துக்குள்ளாலை புட்டிச் சந்திக்கு யாவாரத்துக்கு வந்திடும்... விஷயத்தை ஒரு நாளைக்குச் சிவனடி யானின்ரை பெண்டிலைக் கேட்டுப் பாரன்' என்று சொல்லி அப்பையா சிரிக்கத் துவங்கினார். 'உந்தப் பேய்க்கதைகளைச் சொல்லிப் பொடியளைப் பயந்தாங் கொள்ளிகளாக வளர்க்காதை' என்றும் சொன்னார். மற்றப்படி அம்மா எது சொன்னாலும் அப்பையா 'ஓம்' போடுறவர்தான். கருங்காலிப் பொல்லு ஒன்றுடன், நட்ட நடுச் சாமத்திலும், எந்தச் சுடலையையும் தாண்டிப் போறவர் அப்பையா. 'இந்த வயிரவரைக் கண்டோடனை பேய் பிசாசுகளும் முனியளும் ஓடி ஒளிஞ் சிடும்' எண்டு அவர் அடிக்கடி சொல்லுவார். அப்பை யாவுக்கு 'வயிரவர்' எண்டும் ஒரு பட்டம் இருந்தது. அப்பையாவின் பிள்ளையாகவும் வளர்ந்ததினால் எனக்குப் பேய்களைப் பற்றிய பயம் இருந்ததேயில்லை. ஆனாலும், நான் சில காலமாகவே கோயில் வளவின் பின்பக்கம் போனதே இல்லை. அதுக்குக் காரணம் வேறை.

பனை கொடியேறிய காலங்களிலை 'ஒட்டத்த' மயில் வாகனம் செய்யிற அட்டகாசங்களை அண்டலிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏலாது. ரயில் பாதையிலே அவர் அட்டகாசமாக உதிர்க்கும் தூஷணங்கள், அந்தப் பகுதியில் ஊரடங்குச் சட்டம் பிறப்பித்தது போன்ற ஒரு பிரமையை ஏற்படுத்தும். இந்த அட்டூழியங்களுக்கு எதிராக ஒரு நடவடிக்கை எடுக்கச் சின்னண்ணர் தீர்மானித்தரர். விசாலாட்சி மாமியின் கொல்லைப்புறம், பின் வாய்க் காலுக்கும் முன் ரயில்பாதைக்கும் இடையில் நெருக்குப் பட்டு, கோடாலியின் அமைப்பிலே முடிவடையும். அந்த எல்லையை உறுதிப்படுத்த கணபதிக் கிழவர் ஒரு தென்னம்பிள்ளை நட்டவராம். அது முடத்தெங்காக வளர்ந்திருந்தது. ரயில் பாதையிலிருந்து துள்ளி ஏறி, விசாலாட்சி மாமியின் கொல்லைப் புறத்துக்கு லேசாப் போகலாம். அங்கை கக்கூஸடியிலை மறைஞ்சு நிண்டால் ஆருக்கும் தெரியாது. அந்த மறைப்பின் பாதுகாப்பில், ரயில் பாதையை யுத்த பிராந்தியமாகப் பிரகடனப்படுத் தியிருந்த 'ஓட்டத்த' மயில்வாகனத்தை எதிர்கொள்ள அவர்மீது கற்களை வீசத் துவங்குவார். 'ஆரடா அது கல்லெறியிறது? இந்த ஓட்டத்து மயில்வாகனத்தின் மயிரைக்கூட ஆராலும் புடுங்க ஏலாது' என்று வீர வசனங்கள் பேசிக் கொண்டே, ஓட்டம் போன்ற வேக நடையில், கோயில் வளவுக்குள் பூந்து மறைவது வேடிக்கையாக இருக்கும். மயில்வாகனத்தின் மண்டையை அல்ல, அவருடைய கெறுவைக் கல்லெறிந்து உடைக்க வேணும் என்று நான் நினைச்சுக் கொள்ளுவன். இதனால், வெகு தூரத்துக்கு விண்கூவிக் கொண்டு போகக் கூடிய வட்டுறுப்பான கற்களை எல்லாம் பொறுக்கிக் கொடுத்து, சின்னண்ணரின் வீர சாகஸங்களுக்குத் துணை நின்றேன். அகஸ்டீன் சுவாமி யார் கோலியாத் என்னும் அரக்கனை வீழ்த்திய தாவீதின் கதை சொல்லும் பொழுது, எனக்குச் சின்னண்ணரின் ஞாபகந்தான் வரும்.

ஒன்றைச் சொல்ல மறந்து போனன். சின்னண்ணரின் இந்த மூர்க்கம் முற்றிலும் பொது நியாயத்தில் வேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டது அல்ல. அவருக்கு 'ஓட்டத்த' மீது தனிப்பட்ட 'கற'ளும் இருந்தது. குக்கலுக்குப் புங்கங்காயுடன் சேர்த்துக்கட்டுற புலித்தோல் துண்டுகள் கொஞ்சம் அவருக்கு வாய்ச்சுப் போய்ச்சுது. அதுகள் அந்தமான் பொன்னரின் வீட்டிலை கிடைச்சிருக்க வேணும். ராசா அண்ணரின் சைக்கிள் கடைக்கு முன்னால் நாண்டு கொண்டு நின்று ஒரு பழைய சைக்கிள் டியூப்பும் 'அடிச்சுக் கொண்டு' வந்திட்டார். எந்த விளையாட்டி லும் சின்னண்ணரை யாரும் வெத்தேலாது. இரண்டு நல்ல Catapault ருகள் இணக்கி எடுத்தார். வேட்டை ஆடுறதுக்கு கோயில் வளவின் பின்பக்கந் தானே சோக்கான இடம்? கொய்யாப் பற்றைப் பக்கம் நிறைய அணில்கள் ஓடும். இலந்தை மரங்களின் அயலிலே புறாக்களும் மேயும். இவை இரண்டும் பொரிச்சுத் தின்னறதுக்கும் ஏற்றன. ஆச்சியை வளைச்சால் பொரிச்சுத் தந்திடுவா. ஓடுற அணிலை அடிச்சு விழுத்துறதுதான் கெட்டித்தனம் எண்டு சின்னண்ணர் சொல்லுவார். அன்றைக்கு ரெண்டு அணில்கள் 'குளோஸ்'. இந்த வேட்டையிலே அணில் கூடு ஒன்று 'தொப்'பென்று நிலத்தில் விழுந் தது. அதற்குள் ஒரு 'தவ்வல்' அணில். விழுந்த அதிர்ச் சியால் அதனாலே ஓடமுடியவில்லை. அதனை வளர்க்க வேண்டும் என்கிற ஆசை அவருக்கு வந்துவிட்டது. அதை எடுத்துப் பக்குவமாகத் தன் மடிக்குள் கட்டிக் கொண்டு, கெற்றபோலையும் வேட்டை அணில் இரண் டையும் இன்னொரு கையிலே தூக்கிக் கொண்டு நடந்து வந்திருக்கிறார். அவருடைய கவனம் முழுவதும் மடிக் குள் கட்டியிருந்த அணில் குஞ்சிலே இருந்தபடியால், எதிரில் 'ஓட்டத்த' மயில்வாகனம் வந்ததைக் கவனிக்க வில்லை. 'யாரடா நீ... இந்த மயில்வாகனத்தின்ரை குத்தகை வளவுக்குள்ளை வந்து கள்ளப்படையள் பட்டப் பகலிலை களவெடுத்துக் கொண்டு போகுதுகள். இதுக் காகத்தான் எளிய சாதியளை அயலிலை குடியிருக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடக்கூடாது எண்டிறது...' என்று கத்தினார். அது பனை கொடி இறக்கப்பட்ட காலமும்.

சின்னண்ணர் ஆருக்கும் பயப்படாத ராங்கிக்காரன். பெரிய மாமா நூற்றுக்கணக்கான பூவரசம் கம்புகளை அவர் முதுகிலை அடிச்சே முறிச்சிருக்கிறார். ஓடவும் மாட்டார்; அழவும் மாட்டார். கையுளையிற விரக்தி யிலை மாமா தானாக நிறுத்தினால் உண்டு. இந்த உலகத்தையே தன்னந்தனியாக எதிர்த்துநிற்க, வெண் தாடிக் கிழவரின் ஆசிர்வாதம் மட்டுமே போதும் என்பது போல அவர் போக்கு. 'இந்த வளவை உன்ரை கொப் பரே உமக்குக் குத்தகைக்குத் தந்தவர்? உம்முடைய சண்டித்தனத்தை எள்ளெண்ணெய்ச் சட்டி எரிக்க வாற வையளிட்டக் காட்டும்' என்று வயசையும் மதிக்காமல் கெறுக்காட்டிக் கொண்டு ஓடிவிட்டார். 'ஓட்டத்து' மயில்வாகனம் விசர் பிடிச்சவரைப் போல கத்தினார். எனவே, சின்னண்ணர் அவர்மீது மேற்கொண்ட தாக்கு தல் முன்விரோதம் காரணமாகவும் என்பதைப் பின்னர் விளங்கிக் கொண்டேன். பிறகு அவர் கோயில் வளவுப் பக்கம் போறதில்லை. 'கெற்றப்போல்' அடியிலும் விருப்பம் இல்லை. 'சைஸ் வல்லி'யின் மகன் சண்முகத் துடன் சேர்ந்து விளையாட்டுக் கழகம் அமைப்பதிலே அவர் புலன் செலவாகியது. குட்செற்றடிப் பக்கம் என்னைச் சின்னண்ணர் கூட்டிப் போகவும் விரும் பேல்லை.

சின்னண்ணர் என்னை விட்டிட்டு, அவர் பெரிய மனுஷன் போல நடந்து கொள்ளுறார் என்கிற வெப்பிசாரம் எனக்கு. ஒரு வகை வெறுமை. நீண்ட காலத்துக்குப் பிறகு ஒளிச்சுப் பிடிச்சு விளையாடுற சின்னப்பிள்ளை களுடைய கூட்டத்திலை போய்ச் சேர்ந்தேன். நான் பெரிய பையன் எண்டாலும், 'பாவம் பார்த்து' என் னைச் சேர்த்துக் கொண்டார்கள்.

பிள்ளைகள் அநேகமாக ஒளிக்கிறதுக்கு கோயில் வளவின் பின்பக்கமாகத்தான் ஓடுவார்கள். ஒளிக்கிற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாட்டிலை அங்கினை பழங்கள் பொறுக்கிறதுக்கும் நல்ல தருணம். 'ஓட்டத்த' மயில்வாகனத்தைத் தாக்குறதுக்கு கல் பொறுக்கிக் கொடுத்த குற்ற உணர்வினால், கோயில் வளவின் பின்பக்கம் போவதை முற்றாகத் தவிர்த்துவிட்டேன். எனவே, ஒளிக்கிற இடம் தேடி ரயில் பாதைப் பக்கமாக வந்தேன். ரயில் பாதையில் நிண்டால் டக்கென்று பிடிபட்டுப் போவன். இது எனக்குத் தெரியும். யோசிக்காமல் சைவப்பள்ளிக்குள் நுழைஞ்சன். பள்ளியின் ஒரு மூலையிலை அப்ப ஏதோ ஒரு கூட்டம் நடந்து கொண்டிருந்தது. 'ஆரடா பொடியள்? பள்ளிக்குடத்துக்குள்ளை பூத்து குதியன் குத்துறது?' என்று ஓர் அதிகாரச் சத்தம். இதுக்கும் பிறகும் அங்கை நிக்கிறது புத்தியில்லை. ஒளிக்கிற இடம் மணிக்கூட்டு றோட்டுக்கு இந்தப் பக்கம். அங்காலை பெருமாள் கோயிலடிப் பக்கம் போனால் சேர்ப்பில்லை.

மயிலுகடை பெருமாள் கோயில் பக்கம். மயிலு கடையைக் கண்டதும் 'டக்'கென்று ஒரு பொறி. முந்தியெல்லாம் மயிலு கடைக்குப் போறதுக்கு, பராசக்தி அக்கா வீட்டுப் பொட்டுக்குள்ளாலை பூந்து, வேதப்பள்ளிக்குள்ளாலை போறனான். இப்படி வந்தால் நடக்கிற தூரம் அரைவாசிகூட இல்லை. பராசக்தி அக்காவுக்கு நான் மயிலுகடையிலை உப்பிலை ஊறின நெல்லிக்காய் வாங்கிக் குடுத்திருக்கிறன். பகல் நேரங்களிலை அந்த வீட்டிலை ஆக்களின் சிலமனே இருக்காது. பராசக்தி அக்காதான் அங்கினை இங்கினை நிண்டு விடுப்புப் பார்த்துக் கொண்டிருப்பாவு. அவவை அப்பிடித் தனியாப் பாக்கப் பாவமாகவும் இருக்கும். என்னைக் கண்டால் வலு விருப்பத்தோடை கதைக்கிறவ. ஒரு நாள் நான் அவ வீட்டுக்குள்ளாலை போனதைக் கண்டு வெண்தாடிக் கிழவர் பூண்ட நரசிம்ம அவதாரத்துக்குப் பிறகு, நான் அங்காலைப் பக்கம் போறதை விட்டிட்டன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் யாருடைய கண்ணிலும் பட்டிடக்கூடாது எண்ட பறதியிலை, பராசக்தி அக்கா வீட்டுப் பொட்டுக்குள் புகுந்துவிட்டேன்.

'என்ன தம்பி? இப்பவெல்லாம் இஞ்சாலப் பக்கம் வாறது இல்லை...' எண்டு பெரிய மலுஷி போலை அவ கதை குடுக்கத் துவங்கினாவு.

'அக்கா, முதலிலை நான் ஒளிக்கிறதுக்கு நல்ல இடமாக் காட்டு. அவங்கள் பின்னாலை துரத்திக் கொண்டு வாறாங்கள்...'

'அப்பிடியே? சுறுக்கா எனக்குப் பின்னாலை வாரும். ஆரும் உம்மைக் கண்டு பிடிக்க ஏலாத சோக்கான இடத்தை உமக்குக் காட்டுறன்...' என்று கூட்டிக் கொண்டுபோய், வீட்டுக்குள் இருந்த 'பக்கூஸ்' பெட்டிக்குப் பின்னால், பாழி போலத் தோன்றிய இடத்தில, படுத்துக்கிடக்கச் சொன்னாவு. அவ சொன்னது போல செய்தன். கனநேரம் போயிருக்கும். நான் பிடிபடாமல் இருக்க அவ கண்ணும் கருத்துமாகக் காவல் காக்கிறா எண்டதும் விளங்கிப் போச்சுது. 'அவை இஞ்சாலப் பக்கம் வராமல், புளியடி வளவுக் குள்ளை போறாங்கள்...' எண்டு செய்திகளும் வந்து சொல்லிக் கொண்டிருந்தாவு. எனக்குப் பசிக்கும் எண்டு இரக்கப்பட்டு பாணிப் பனாட்டுத் துண்டு ஒண்டு கொண்டுவந்து தந்தவ. ஆச்சி போடுற பாணிப் பனாட்டின் ருசிக்குக் கிட்டவும் வராது. என்னிலை உள்ள பட்சத்தாலை தாறாவு எண்டு நினைக்கச் சந்தோஷமாவும் இருந்தது. கடைசியிலை, பழையபடி பொட்டுக்குள்ளாலை பூந்து, சைவப்பள்ளி ஒழுங்கை யாலை மிதந்து, கோயில் வளவின் இலுப்பை மரத்தின் கீழிருந்த தாச்சியிலே தொட்டன்.

'ஒரு இடமும் உன்னைக் காணேல்லை. நீ பெருமாள் கோயிலடிப் பக்கம் போய் ஒளிச்சுப் போட்டு இப்ப வந்து அளப்புகிறாய்...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பெருமாள்சாமி ஆணை, நான் அந்தப் பக்கம் போகேல்லை. ஒளிக்கிறதுக்கு வடிவான இடம் கண்டுபிடிச்சிருக்கிறன். முடியுமானால் அதைக் கண்டு பிடியுங்கோவன்' என்று அவர்களுக்குச் சவாலும் விட்டேன்.

ஒளிச்சு விளையாடுறது எண்டால், ஆர் கண்களிலும் படாமல் பராசக்தி அக்கா வீட்டுக்குள் நுழையிறதை நான் வழக்கமாக்கிக் கொண்டன். அவவும் நான் ஒளிக்க வருவன் எண்டு காத்திருக்கிறது வாடிக்கை. புழுக்கொடியல், பனாட்டு, கொய்யாப்பழம், கடலைக் கொட்டை எண்டு ஒவ்வொரு நாளும் நான் சாப்பிடுற துக்கு ஏதாவது ஒண்டு தருவாவு. பிறத்திச் சனம் ஆரும் அவவைப் போல என்னிலை பட்சம் பாராட் டினது இல்லை. அவவுடைய அன்பு, பரிவு, சிரிப்பு ஆகிய எல்லாமே எனக்கு ஏதோ வகையான நிறை வினைத் தருவது போன்ற உணர்வும். இந்த உணர்வு களைச் சுமப்பதற்காகவே நெடுகிலும் ஒளிச்சுப் பிடிச்சு விளையாட வேணும் எண்டது போலவும்.

'ஒளிச்சுப் பிடிச்சு' விளையாட்டிலை சில சமயங்களிலை பொடிச்சியளும் சேர்ந்து கொள்ளும். புவனா அக்கா வின் மூத்த மகள், ரெங்கண்ணாவின் கடைக்குட்டித் தங்கச்சி, கிட்டிணசாமி வீட்டிலை இருக்கிற மாமியின் ரெண்டு பெட்டையள் வருவினம். நெடுகிலும் எண்டு சொல்லேலாது. இருந்திட்டு, இருந்திட்டுத்தான் வந்தா லும், 'கோயில் திருவிழா விளையாட்டுத்தான் நல்லம்' என்று பெரிய அருக்காணியம் காட்டித்தான் விளையாட வருவாங்கள். அதுகள் பழிப்பு வேறுகாட்டுங்கள். தற்செய லாக் கை கால் பட்டாலும் வேணுமெண்டு தனகினதாக அழத்துவங்கீடுவினம். அதுகளைச் சேர்க்காமல் விளை யாடினால் நல்லது எண்டது என்ரை எண்ணம். தானே பெரிய ஆள் எண்ட எண்ணத்தோடே மகாதேவன் நடந்து கொள்ளுவான். முட்டைக் கண்களை உருட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருட்டி, தான் பொடிச்சியளை மேய்க்கிறஆளைப்போல! இதுகளுக்கும் பராசக்திஅக்காவுக்கும் எவ்வளவோவித்தியாசம். முக்கியமான ஒரு வித்தியாசம். அது சட்டென்று விளங்கிற மாதிரியும் இல்லை. ஒரு நாள் அவ எனக்குப் பின்னாலை நிண்டு கொண்டு, 'முன்னுக்குப் போமன்' எண்டு தன்ரை நெஞ்சாலை என் முதுகை இடிக்கேக்க தான் அந்த வித்தியாசம் பட்டென்று விளங்கிற்று!

விளையாடுற மற்றப் பெட்டையளுக்கு நெஞ்சு தட்டை. பொடியளைப் போலை. பூரணமக்கா குறுக்குக் கட்டோடை நிண்டு மாவிடிக்கிறதைப் பாத்திருக்கிறன். அது புதினந்தான். அதுகள் துள்ளுறது வலு வடிவு. அதுகளை அப்பிடி விடுப்புப் பாக்கிறது வம்புத்தனமான வேலை எண்டதும் எனக்குத் தெரியும். பெரிய மனுஷியளைப் போலவும் இல்லை. பொடிச்சியளைப் போலவும் இல்லை. வீட்டின் சங்கடப் படலைக்குப் பக்கதிலை ஒரு செவ்விளநீர் மரம். அதன் வட்டுக்குள் அணில்கள் விளையாடித்திரியும் பொழுது, சில வேளைகளிலை குரும்பட்டிகள் கீழை விழும். நாங்கள் தேர் கட்டுறதுக்குப் பாவிக்கிற குரும்பட்டிகள் சின்னன். நாலும் ஒரே சைஸாகப் பாத்துப் பொறுக்க வேணும். செவ்விளநீர்க் குரும்பட்டிகள் பெரிசு. இவை மாதிரித்தான் அவவின்ர நெஞ்சு. அதிலை அழகை அள்ளிப் பூசினது போலை தெரியும். அண்டைக்கு அவ அதாலை இடிக்கு மட்டும், கடவுளாணை நான் நினைக்கேல்லை அவை அவ்வளவு மென்மையாகவும் சுகமாகவும் இருக்குமெண்டு. பொட்டணி யாவாரியான சீனன் வந்து பரப்பிவைக்கிற பட்டுத் துணிகளை நான் தொட்டுப் பார்த்திருக்கிறன். அதுகள் கூட இவ்வளவு மிருதுவாக இருக்குமெண்டு நான் நினைக்கேல்ல. அவவோடை தனகிக்கொண்டிருக்கவும் ஆசை. அது வம்புத்தனம் எண்டதும் தெரியுது.

அண்டைக்கு வானம் கறுத்திருந்தது. 'சாங்கத்தைப் பாத்தால் இண்டைக்கு நல்லதொரு பாட்டம் மழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெய்யும் போலை' எண்டு அப்பையா காலமையே சொன்னவர். 'கோயில் வளவுப் பக்கம் விளையாடப் போகாதை. மழைக்குள்ளை நனைஞ்சு வந்தால் இஞ்சை ஆராலும் உத்தரிக்க ஏலாது' எண்டு அம்மா குஷினீக்க இருந்து கத்தினவ. முட்டைக் கண்ணனுக்கும் அவ்வளவு விருப்பமில்லை. 'மழைக்குள்ளை ஒருக்கா விளையாடிப் பாப்பம்' எண்டு சிலர் சத்தம் போடவே விளையாட்டுத் துவங்கினது. மழையைப் பீற்றடிக்கவேணும் எண்டு சைவப்பள்ளி ஒழுங்கையாலை வேகமாக ஓடி, பராசக்தி அக்கா வீட்டுப் பொட்டுக்குள் நுழையிறதுக்கு முந்தியே மழைத்துளிகள் புளியம்பழம் போல விழத்துவங்கின! அவவீட்டுக்குள் ஓடுவதற்கு முந்தியே நல்லா நனைஞ்சும் போனேன்.

'என்னடா தம்பி இது? பேந்து தடிமனும் வந்திடும்...' என்று சொல்லி, பழைய சீலை ஒன்றை எடுத்து வந்து என் தலையைத் துவட்டினா. தலையைத் தன் நெஞ்சுக்கு முன்னாலை வளைச்சுப் பிடிக்கொண்டு துவட்டினதாலை, அதுகள் என் முகத்திலும், கன்னத்திலும் பட்டன. அதைப்பற்றி அவ கவலைப் படேல்லை.

'நெஞ்சும் நனைச்சிருக்கு... சட்டையைக் கழட்டிப் போடும்... நான் நெஞ்சையும் துவட்டி விடுறன்...' நான் திமிறினதையும் கவனிக்காமல், சேட்டைக் கழற்றி, என் நெஞ்சையும் துவட்டத் துவங்கினா. அப்பிடிச் செய்ய, கீச்சாமூச்சம் காட்டியது போலை நான் நெளியத் துவங்கினேன்.

'என்ன நெளியுறீர்?'

'நீங்கள் செய்யுறது கூச்சாம இருக்கு...'

'நீர் பெரிய ஆம்பிள்ளை எண்ட நினைப்போ?'

'சின்னதோ, பெரிசோ... நான் ஆம்பிள்ளைதான்...' என்று மகாரோஷத்துடன் சொன்னன்.

'எனக்குத் தெரியாமல் போச்சுது...' என்று சொல்லி துவட்டுறதை நிப்பாட்டி என்னை அப்பிடி ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வை பார்த்தா, 'அப்ப உமக்கு எல்லாம் தெரியுமோ...' என்று செவிகளிலை இரகசியம் பேசுற குரலிலை கேட்டா.

'என்ன எல்லாம்?'

'அப்பா—அம்மா விளையாட்டுத்தான்...'

'எனக்குத் தெரியாது...'

'விளையாடிப் பாப்பமா?'

'உங்களுக்கு விருப்பம் எண்டால் விளையாடுவம்.'

'நான் தான் இந்த விளையாட்டுச் சொல்லித் தந்தனான் எண்டு ஆருக்கும் சொல்லப்படாது...'

'சொல்லமாட்டன்...'

'உன்னாணை.'

'உன்னாணை!'

'கண்ணாணை.'

'கண்ணாணை!'

'பெருமாள்சாமி ஆணை,'

'பெருமாள்சாமி ஆணை!'

'அப்ப பக்கூஸ் பெட்டிக்குப் பின்னாலை போய் உம்முடைய கழிசானையும் உரிஞ்சுபோட்டு நில்லும்...' நான் பக்கூஸ் பெட்டிக்குப் பின்னால போனன். அவவுக்கு முன்னாலை கழிசான் இல்லாமல் நிற்கிறதை நினைச்சால் வெட்கமாக இருந்தது. அருவருப்பாகவும் இருந்தது. அதனை ஆட்சேபிப்பதைப் போல நான் பேசாமல் நிண்டன். என்றும் இல்லாத பரபரப்புடன் அவ வெளியாலை போனாவு. இந்தப் புது விளையாட்டுச் சோக்காத்தான் இருக்கவேணும் என்று நினைச்சுக் கொண்டன். இந்த விளையாட்டிலை ஒருத்தரை ஒருத்தர் கட்டிப் பிடிக்கவேணும் எண்டது மட்டும் விளங்கீச்சு. அவவை நல்ல வடிவாக் கட்டிப் பிடிச்சுக் கொஞ்ச எனக்கும் ஆசைதான். அதுக்காக ஏன் கழிசானை உரிய வேணும்? நான் குளிக்கும் பொழுதும் கோவணம் கட்டுறனான். வெட்கத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருத்தருக்கும் காட்டக்கூடாது. அது சரியான கெட்ட பழக்கம். நான் மாட்டன்!

பராசக்தி அக்கா, வீட்டின் செத்தைக் கதவை சாத்திக் கொண்டு உள்ளே வந்தாவு. வெளியாலை நல்லா மழை பெய்ந்து கொண்டிருக்க வேணும்.

'நீர் ஆம்பிள்ளை எண்டல்லே சொன்னனீர்...இப்ப பொம்பிள்ளைப் பிள்ளை போல நிக்கிறீர்...' என்று கேட்டுக் கொண்டே வந்து என்னை இறுக்கிக் கட்டிப் பிடிச்சாவு. அவ கட்டிப் பிடிச்ச இறுக்கத்திலை அவவின்ரை நெஞ்சு முழுதும் என் நெஞ்சின் மீது அழுந்தி... அப்பதான் அவ தன் ரவிக்கையின் பூட்டுசி களைக் கழற்றிவிட்டு வந்திருக்கிறா எண்டதும் விளங்கீச்சுது.

'அப்பா-அம்மா விளையாடுறது சாமி கும்பிடுறது போலை... சாமியை மறைச்சுக் கொண்டு எப்படிக் கும்பிடுறது...? என்ரை காளியாச்சியைத் தடவிப் பாரும்... உம்முடைய சாமிதான் சிவலிங்கம்...'

கிளி கத்திக் கொண்டு பறக்கிற சத்தம் கூரைக்கு மேலால கேட்டது. பாவம் அது தன்ரை பொந்தைத் தேடிப் பறக்குதாக்கும்...

அது கோயில் வளவில இருக்கிற பட்ட பனையிலை குடி யிருக்கிற கிளியாக்கும்.

எத்தகைய ஒரு விழிப்பு. என் ஆண்மை பற்றி ஏற்பட்ட முதலாவது விழிப்புணர்ச்சி.

பராசக்தி அக்கா மிகவும் நல்லவ. எல்லாரிலும் மேலானவ. எனக்காக உசிரைக்கூடத் தருவாவு. அவ ஒரு காளியாச்சி. நான் மனங்குளிரக் கும்பிடுறது அவவுக்கு விருப்பம். அவவின்ரை அன்புக்காக நான் உசிரையும் குடுக்கலாம். என்னுள் ஒரு 'கடுக் கண்ட' எண்ணமும் உணர்வும் அவவாலதான் ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள். பராசக்தி அக்கா வீட்டிலிருந்து, நேராக ரெயில் பாதையில் ஏறிய பொழுது, பெரிய மாமா பூவரசம் கம்புகளுடன் எனக்காகக் காத்திருப்பார் என்று நான் நினைக்கவே இல்லை. 'வடுவா! அந்த எளிய சனங்கள் வீட்டிலை உனக்கென்னடா வேலை...' என்று கேட்டுக் கேட்டு...

'நாகேசு ஐமிச்சப்பட்டு, வட்டுக்கை இருந்து கவனிச்ச படியால்... இல்லாட்டில்... அடிச்சுக் கையைக் காலை முறிச்சு விடடா...' என்று வெண் தாடிக் கிழவர், மாமாவின் சினத்திலே எண்ணெய் ஊற்றினார்.

கம்புகள் என் முதுகிலும் கால்களிலும் முறியச் 'சவல்' அடி-அன்று விட்டேன் கொண்டலடி!...

அட, அதற்கிடையில் அரை நூற்றாண்டு காலம் ஓடிவிட்டதா? நான் இப்ப தாத்தா. நான்கு பேரப் பிள்ளைகள்.

அப்பா-அம்மா உறவு என்பது என்ன? அது விளை யாட்டா? மாமிச இச்சைகளைப் பூர்த்தி செய்வதற்கான நாகரிக ஏற்பாடா? சாமி கும்பிடுவது போல ஆத்மார்த்த மானதா? அல்லது அதனை விளங்கிக் கொள்வதற்கான தேடல்தான் வாழ்க்கையா?

ஆண்மை பற்றிய சுய விசாரத்தில் பராசக்தி அக்காவின் நினைவு ஏன் தொங்கிக் கொண்டிருக்கிறது?

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

## கதை





UNIVERSITY OF PERADENIYA
17-2-1996
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தியான** காலங்களில் தேவதைகளின் நிழல்களும், ஏன் தழுவல்களுங்கூட எனக்குச் சலித்துப் போய்விடுவதுண்டு. மோகமுள்களையும் முறித்து முனை மழுங்கச் செய்து நான் சமைக்கும் தியானத்தின்இலக்கு எதுவாம்? இலக்கு இல்லாமலும் தியானமா? ஈசுரார்ப்பணம் பெரிய வார்த்தை. என் தியானம் சத்தியார்ப்பணமா? வெறும் பாவனையா? தேவதைகளின் உடல்கள் கடித்த இந்த உடலின்மீது விசிறிச் சிதறுண்ட லீலாவிநோதத் துகள்கள் அழிந்து விட்டனவா? அவை அழியும் தரத்தனவோ? நானும், என் சுத்தமும், என் தியானமும்....

கனவுப் பெட்டகமே என் ஆன்மா. குளவிக் கூட்டைப் போல பெட்டகம். அதற்குள் நிறையக் குஞ்சுக் குஞ்சு அறைகள். இந்த துளித் துளி அறைகள் தனித் தனிப் பெட்டகம் போலவும். நிதானமாகப் பார்த்தால் குளவிக் கூடுதான் பெட்டகம். கனவுக்கு முழுமம் கொடுப்பது கலை. படைப்பு! எயார் போட்டை விட்டு, இறுதிச் சேர்விடம் எதுவாகவும் என்னவாகவும் இருக்கும் என்பதைப் பற்றிய குழப்ப நிலையில், வானில் பறந்த போது... துளித் துளி அறைகள், கையடக்கமான நெருப்புப் பெட்டிசைஸ் பெட்டகங்கள். ஒவ்வொன்றிலும் ரகஸியமாகப் புகுந்த பொன்வண்டுகள். அவை முணுமுணுத்த காதற் கவிதைகள், லட்சுமி மனுஷி வைக்கும் ஒப்பாரிகளாகி என்னைக் கடித்தன. ''ஒரு, சிறிய யாத்திரை மட்டுமே'' என நான் என் பொன்வண்டுகளுக்குச் சொன்ன உண்மையும் பொய்யாயிற்றே. நான் யாத்ரீகன் அல்லன். அகதி. நான் மனிதனும் அல்லன். அகதி முகமற்றவன்.

என் முகத்தை எங்கே தொலைத்தேன்? ஆரிய இனத்தின் தூய்மையைக் காக்கக் குட்டிக் குட்டி அனுமார்கள், வோட்டேர்ஸ் லிஸ்டைக் கையில் வைத்துக் கொண்டு, லங்கா தகனத்தை ஆரவாரமாக நடத்துகிறார்கள். அந்தப் பெரு நெருப்பிலே *சீதைகள்* எரிந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும், தகனமே பிரதானம். நெருப்பு அழுக்குகளை எரிக்கும். துப்புரவு புடமாகும். அழுக்குகள் ஊத்தை களே! ஊத்தைகளுக்கு எதற்கு மொழி-மானம்-வீரம்-சொத்து-சுகம்... ஊத்தைகளுக்கு உயிரே வேண்டாம். உயிர் தேவையில்லாத ஊத்தைகளுக்கு முகம் எதற்கு? பனங் கொட்டைகளுக்கு எதற்கு முகம்? அந்த முகங்கள் லங்கா தகனத்தின் எரி பொருளாகி மூசி மூசி எரியட்டும்! அந்தத் தகனத்திலே தப்பியோடிய வர்த்தமானத்தை தேவதைகளுக்கு ரஸனையுடன் கதை அளந்தேன். கதை யிலே குழைந்து குறுகிய பொன்வண்டுகளாகிய தேவை களையும் நெருப்புப் பெட்டிகளிலே அடைத்தேன்... பொன்வண்டுகளை நெருப்புப் பெட்டிகளிலே அடைத்து வைத்தல் ஜோரான பொழுது போக்கு. ரோஜா முள் என்ன, முள்? இலந்தை மரத்திலும் முள் உண்டு. இலந்தை இலைகளைப் பறித்து அவற்றுடன் வைத்தேன். இலைகள் அதுகளுக்கு உணவாம். என் லயிப்புக்குப் பொன்வண்டுகள் ஊர வேண்டும். இந்த ஊருதல் கூட தேவதைகள் ராஜ்யத்தில் உயிர்ப்பு! யாத்ராவில்—அகதியின் யாத்ராவில்—நெருப்புப் பெட்டி கூடக் குண்டுக் கல்லாய்ப் பாரிக்கும்...

அகதி என்ற பிலாக்கணமா? நான் தாழ்த்தப்பட்டவன்... ஆம்; உலக பந்தத்தில். உயர்த்தப்பட்டவன், எனது தேவதைகளின் சாம்ராஜ்யத்தில்...அங்கு சில பொழுது களில் தாழ்த்தப் பட்டவனும் கூட. தாழ்த்தப்படுதலும் உயர்த்தப்படுதலும், தேவதைகளினது சாம்ராஜ்யத் திலே, தேக யாசிப்பின் அடிப்படையிலே சமத்துவம் கொண்டவையே.

தேக யாசிப்புக் காலங்களும், அகதியாகிய எனக்குத் தியான காலங்களாகப் பட்டதுண்டு. கனவே தேகம், தேகமே கனவு, இவை இரண்டினதும் சங்கமத்திலே கருக்கொண்டதே தியானம் என எனக்குள் ஜனித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானத்தில், நான் திருத்தம் போட மாட்டேன். நானின் அழிவு, நான்களினுடையதாகா.

என் தியான காலம் குறுகிய ஆயுளைக் கொண்டது. இதுவே என் தியானத்தின் வரை விலக்கணமாக இருத்தல் வேண்டும் என்பதும் என் யாசிப்பு. தியான காலத்திலே, நான் சிரிக்கின்றேனோ? அழுகின்றேனா? எனது தேவதைகளைச் சபிக்கின்றேனா?... பல்கிப் பெருகும் வினாப் பாம்புகள் என்னைக் கொத்தும்... உடலிலிருந்து குருதி கொட்டும். குருதி எப்பொழுதும் சிவப்பு நிறமாக இருக்க வேண்டும் என்கிற கட்டாயமும் இல்லை...

ஆனால், நான் நானாகவும், எனது தியானங் களுடனும்...

நான் நானை நானுக்குள் கண்டு பிடித்தேனா? அல்லது இன்னொரு நானுக்குள்ளா...?

கதவைத் தட்டுவது காற்றா? கையா? தியான காலங் களில் கதவுக்குப் பூட்டுப் போடுதலும் என் நெறிகளுள் ஒன்று.

தியானம், என் தியானம்... உண்மையிலேயே என் தெரிவா? என் தேவதைகளின் தெரிவா? கதவைத் திறப்பதா? திறக்காமல் விடுவதா? தட்டும் கையைக் கட்டி இழுப்பதா? வெட்டி எறிவதா? ஊர்வசிகளுடைய முகங்கள் மீது காறித் துப்பும் துணிச்சல் அகதிக்கு எப் படி வந்ததாம்? இந்த அகதியின் துணிச்சலை ஆண்மை என்பதா?

கண்ணீர் சிந்தாதே! உனது விழிகளில் பூசப்பட்ட அஞ்ச னம் கசிந்துவிடும். உனது விழிகளில் இருந்து என்னைக் கிறங்கப் பண்ணும் அஞ்சனத்தை, எனது விழிகள் குடிக்க விடு! தேவதையே! நீ அழாதே! உனது கூந்த லில் நான் மொட்டுகளைச் சூடினேன். அவை புஷ்பிக் கும் கணங்களைத் தரிசிக்கத் துடிக்கும் என்முன் நீ அழாதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பூக்கள் நனவுப் பூக்களாகுமா?
அகதியே! கனவு காணும் உரிமைகூட உனக்குத் தடுக்கப்பட்டுள்ளது! கவனம்!
கவனம் அழுத்தப்பட வேணும். கருணைகளைக் கணக்கெடுக்கக் கூடாது. எல்லையற்றதுக்குக் கணக்கு வைப்பது பாவம். கனவையே வாழ்க்கையாக்கி வாழும் கூட்டத்துக்கு நீ உறவு. கனவுத் தொழிற்சாலையின் சிறுதேவதையாக வலம் வந்த அவளைத் தெரியாதா? அந்தக் காலத்து உன் கனவுகளை அவள் மொய்த்திருக்கக் கூடும். கனவுலகில் முகில் உராய நடந்தவர்களின் பாதம் நோகாமலிருக்க தன் உடலையே புஷ்பங்களாக்கிக் கிடந்தாள். அதனை மிதித்துத் துவைத்து நடந்தவர் கொஞ்சமா?கேட்டவர்களுக்கும் கேட்காதவர்களுக்கும், விருந்துகள் படைப்பதிலே உடல் தேய்ந்து உக்கவும்... தன்னை இழந்தே, மற்றவர்களை உள்ளிழுத்தே, மற்றவர்களை அழிக்கும் அற்புத ரஸவாத வித்தை. கனவுலகின் அபூர்வ சிலந்தித்தேவதை! உடல் அசதியுடன் சேர்ந்த குளிப்புகள்! கிளியோப்பெட்ராவா? கழுதைப் பாலிலே குளித்துச் சருமத்தை மென்மைப் படுத்தியவள்? வீரிய ஸ்கலிதங்களே ஸவராக, கொட்டோ கொட்டென்று... பனங்கொட்டை என்ற பூர்வீகத்தை மறக்காதே! நுங்குக் குளியல்! மூழ்கி, திக்குமுக்காடி, மூச்சுத் திணறி, காணாமற் போய், சூன்யமாகி, பூஜ்யமாகி, ஃபொனிக்ஸாகி, உயர்ந்து, விஸ்வரூபமாகி, தாயாகி, செல்வியாகி, கன்னியாகி, அதி தெய்வமாய், தெய்வத்தின் தெய்வமாய், புலி வேட்டைப் பிரியத்திலே, பனங்காய் தலைகளே படிகற்களாக வேண்டும் என்று பலிகேட்ட காலத்திலும், உனக்கு அபயமளிக்கப்பட்டது! உயிருக்கு அபயம். தேவை முகமல்ல. முகமில்லாத உனக்கு ஏன் கனவு? கனவுகள் முகமற்றன. எனவே தடுக்கப்பட்டுள்ளது! கவனம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தழுவ வரும் கனவின் கரங்கள் அறுபட அறுபடத் தூரஞ் செல்லும் சுகந்தங்கள்...தனிமைச் சிலுவையைச் சுமந்த படி நடக்கும் இந்த அகதியின் கால்கள் காடொன்றின் முன்னே வந்து நிற்கின்றன. காடு! கண்சிமிட்டும் காடு! ஆகா! எவ்வளவு தேவைகள்! கனவை உடல் முழுவதும் அப்பிக் காத்திருக்கும் தேவதைகள்! தூரச் சென்ற சுகந் தங்களின் பிறப்பிடமோ வதிவிடமோ இந்தப் பூலோன் காடு என்ற முழிசாட்டம் அகதிக்கு. **Peep Show** களிலே கண்கள் தோண்டுப்படும் அளவுக்கு அம்மணத்தின் அத்தனை சுருதிகளைப் பார்க்கும் வசதியுள்ள நாட்டிலே வந்து விழுந்த அகதிக்கு, இத்தேவதைகளின் ஜடைகள் பரமார்த்த ரகஸியமாக நிலைக்கவில்லை. நிச்சயமாக அவனது நினைவுப் பெட்டகத்தின் நெருப்புப் பெட்டி சைஸ் அறைகளிலே அகப்பட்ட—அன்றேல் அடைக்கலம் புகுந்த—பொன்வண்டுகளுமல்ல, இந்தத் தேவதைகள். தொலைந்து போனவற்றின் நினைவுகளான தேவதை களின் அருள்பாலிப்பைக் கணிக்கவும் ஏலாது. தோலின் நிறமல்ல. தேவதைகள் தேவதைகளே!

தேவதையின் சல்லாபத்துக்கு அருச்சனைக் கட்டணம் தெரிந்தாக வேண்டும். அருச்சனை இல்லாமலும் வழிபாடா?

எப்பொழுதோ, எங்கேயோ, தொலைத்துவிட்டதான துணிச்சலின் எச்சிலைவிழுங்கி, ''*COMBIE* (எவ்வளவு)'' எனக் கேட்கிறான்.

50 *FRANCS LA PIPE*
100 *FRANCS L'AMOUR*

50 பிராங்கிற்கு உதட்டு உபாசனை. பொன்வண்டு களின் லோகத்துச் சம்பூரண உபாசனைக்கு 100 பிராங்...

அகதியானாலும் பனங்கொட்டைப் புத்தி போகாது. ஐம்பது மலிவு. எதிர்கால உபாசனைக்கு ஐம்பது கையிருப்பு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''LA PIPE.''

காட்டின் பசிய இலைகள் அசைத்து ஆடித் தென்றலுக்குக் கூச்சம் ஊட்டவும், எத்தனையோ தேவதைகளுக்கு சில தலைமுறைகளாவே மஞ்சம் விரித்த, செழுங்கிளை பரப்பிய மரத்தின் பின்னால், தேவதையின் வசியத்தில் கட்டுண்டு செல்கின்றான்... மனதில் ஒரு வெளிச்சம். மரத்தின் பின்னே மெல்லிய இருள். எங்கிருந்தோ ஓடி வந்த கிழட்டு எலியை அவள் தன் முட்சப்பாத்தால் நசித்துக் கொன்றாள். சடுதியான, மனச்சலனம் எதுவுமே ஏற்படுத்தாத கொலை. பின் அவனுடைய நானிலே பாயும் வீறு கொண்ட புதிய எலியை உரு வாக்கி...எலியா?

உதடுகள் வாய்க்கு ஒரு விளிம்பு-ஒரு வரம்பு. உதடுகள் மட்டுமல்லாமல், மந்திர உச்சாடனத்துக்கும், வேதம் ஓதுதலுக்கும், இசையின் சுருதியை எழுப்புவதற்கும் வாயின் வேறு உறுப்புகளும் துணைக்கு வரவேண்டும். நீ பனங்கொட்டை சூப்பிய பனங்கொட்டை! நீ திருந்த மாட்டாய். உன் பொன்வண்டுகள் உதட்டுக்குச் சாயம் பூசுவதில்லை. முத்தக் கலையின் கருவி என்பது பழைய பஞ்சாங்க நோக்கு. உன் முயற்சிகளும் பாடுகளும் இன்றி... 'தண்டால்' எடுக்கும் சிரமமும் இன்றி,...நீ கனவும் தியானமும் அத்வைதமாகிய நிலையில், சுகமான விமுக்தி! புளிச்! மரத்துக்குப் பசளை எறிவது உபவிளைவு. மரம்! தர்ம பரிபாலனம். நின்ற இடத்திலேயே தேவதையின் அருள் பாலிப்புக் கிட்டுகிறது. எவ்வளவு நான்களை உண்டு செழித்து வளரும் மரம்!

இன்னொரு தினத்தில் அகதி விழிக்கின்றான். முகத்தையா தேடுகிறான்? அது பிரக்ஞையற்ற நித்திய தேடல். தொலைத்த முகம் திரும்பி வரப்போவதில்லை. புதிதாக ஒரு முகத்தை மாட்டிக் கொள்ளலாம் என்கிற நம்பிக்கை. முகத்துக்கு முன்னரே பெயர் தொலைந்து போயிற்று. முன்னரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது முக்கியமில்லை. லங்கா தகனத்திற்கு முன்னரும் பெயரை நினைவில் வைத்திருக்க யார் அக்கறைப் பட்டார்கள்? அவன் ஒரு பனங்கொட்டை. குழூஉக் குறி போதும். கனவுலகின் அதிதேவதையாய் பிறிஜிட் பாடோ அவதரித்த மண்ணிலே கூட, 'அடையார்கள்', 'கறுப்பர்கள்', 'காய்கள்', 'சுத்துமாத்துகள்' என்று குழூஉக் குறிப் பெயர்கள். பொருத்தமான ஒன்றை அகதி மாட்டிக் கொள்ளலாம். முகத்தைத் தொலைத்து விட்டாலும், தேடிக் கொள்வதாக மனசை அலட்டிக் கொள்ளவேண்டும். தேவதைப் பூஜையை முகந்தேடும் சடங்காகச் சம்பாவனை செய்யவேண்டும். அதுவு மில்லாவிட்டால் ஜடமல்ல, சவம்! சவம் லங்கா தகனத்தில் எரிந்திருக்கலாம். சவம் அல்ல என்கிற நிஜந்தான், அகதிக்கான மகா ஆறுதல். சவமற்ற நிலையை உறுதி செய்வதற்கு தேவதை பூஜை உதவும். ஆசைகள் எந்த வைட்டமினும் விழுங்காமல் சிலிர்த்துக் கொள்ளுகின்றன. பூலோன் காட்டுத் தேவதையை மீண்டும் சந்திக்க வேண்டுமென்ற பேரவா அவனுள். 'இன்றைக்கும் அங்கு தரிசனமாக வேண்டும்' என்ற நேர்ச்சையுடன் அவன் அங்குவந்தால்... ஆம்! அவளும் அங்கே!

*L'AMOUR!* எப்பொழுதோ, முகமுள்ள மனிதனாய், பொன்வண்டுகள் தேவதைகளாய் வலம் வந்த உலகத் தில் அனுபவித்தது. யோனிக் கேணிக்குள் நீச்ச லடிப்பது! பனங்கொட்டையே, 100 பிராங்குகள் பெரிய காசே? பீங்கான் கழுவியே உழைச்சுக் கொள்ளலாம்.

''*L'AMOUR!*'' என்றான் உத்ஸாகமாக.

அதே மரம்; அதே அவள்; அதே அவன்! *PIPE* தினத் தில் கொல்லப்பட்ட எலி காய்ந்து கருவாடாகக் கிடந்தது. பூலோன் காடு தேவதைகளின் சஞ்சாரத் திற்கும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று நானைச் செயலிழக்கச் செய்த அவள் உதடு களைக் கடிப்பது போன்ற மூர்க்கத்தில் சுவைத்து... பிருஷ்டத்தைத் தடவி... முனைப்புடன் முன்னேற... திடுக்குற்றான்!

'சொல்! நீ யார்?'

'நான் எலிஸபெத்...'

'சொல்! நீ...'

'நான் பெண்!'

'இல்லை!'

'பெண்ணாகவோ, ஆணாகவோ வாழும் முடிவை எடுப்பது என் சுதந்திரம்! இந்தியனே! இதோ, உனது 100 பிராங். ஒடிப்போய் விடு!'

அவளைப் பற்றிய உருவ தரிசன மயக்கம் ஒரு வகை மாயையே. அவனை 'அவள்' இந்தியனாக நினைத்துக் கொண்டது, இன்னொரு வகையில் மாயையே. முகமற்ற மனிதனுக்கு நிறமுண்டு. வானவில்லின் நிறங்களை வைத்து நிற ஜாலங்கள் செய்வதும் முழுமையல்ல. இந்திய நிறம்! வர்ணாசிரம நிறங்கள் வகுத்த இந்திய வல்லபத்தின்மீது வெள்ளைக்காரர் அப்பிய நிறம் இந்திய நிறம்! இந்தச் சிக்கல்களுக்குள் 'பனங்கொட்டைகள்' நிறத்திலும் தனித்துவம் இழந்து விட்டார்கள். முகமிழந்த அகதிக்கு வர்ணம் ஒரு கேடா?

> 'வாழ்வும் மனிதர்களும் மாறிக்கொண்டே இருக்கும். புதிது போன்ற மாற்றங்கள். இந்த மாற்றங்களினாலும் இடையறாத தேடல். வெளித்தோற்றங்கள். உடல்கள். முகங்கள் இலகு படுத்தப்பட்ட அடையாளங்கள். உடலின் உள்ளே இருப்பது ஆன்மாவா? உடலினதும், ஆன்மாவினதும் உள்ளே கொழுந்து விட்டெரியும் தீயின் நிறம் என்ன? நிறம் தீயின் தன்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைக் காட்டிவிடுமா? இந்தத் தீயல்லவா மனிதர்கள் அனைவரதும் உண்மையான வழிகள் காட்டி? இந்தத் தீயின் சந்நிதானத் திலே தராசுகளின் விற்பனை தடுக்கப்பட்டு உள்ளதல்லவா? மர்மக் கனவுகளினதும் வெளித் தோற்றங்களினதும் மகா அந்தரங்க மான புணர்ச்சியில் ஜனித்ததல்லவா இந்தத் தீ! என்ன மாயம்? இந்தத் தீ நேரம் பார்த்து ஐஸ் கட்டியைப் போல குளிரவும் செய்யும்.'

தனது தியான காலத்தில், அவன் இப்படி ஒரு தத்து வத்தை இணக்கிக் கொண்டான். தத்துவ மயக்கத்திலும் தியான காலம் நீளலாம்.

''நீ ஏன் இங்கு வந்தாய்?''

''நான் வந்தது உனக்கு இடைஞ்சலா?''

''இல்லை. சந்தோஷத்தைத் தருகிறது. இப்பொழுது மத்தியானம். சாப்பிடுவோம்!''

அவன் அவளை இழுத்து முத்தமிடுகிறான். நாகரிகச் சுமைகளை அவிழ்த்து எறிந்து, ஜனன கோலத்திலே அவளைக் கர்வங் கொள்ளச் செய்கிறான். படைப்பின் பரமார்த்த அதிகோலத்தை நிர்வாணம் என்பது எவ்வளவு கொச்சை! வெட்கம் துறந்தால் யுத்தந்தான்! கிள்ளுதல், பிறாண்டல், கடித்தல், அழுத்தல், ஆக்கினைப் படுத்துதல் எல்லாத் தாக்குதல் முறைகளும் இந்த யுத்தத்தில் ஆகுமானது. துடிக்கிறாள். இன்பாநு பவம் என்றும் முணங்குகிறாள். சோர்வு வெற்றியின் நிழலே. பிறகு தூக்கத்திலும் இருவரும் பங்காளிகளா யினர். அனுமானின் கால்பட்ட மண்ணிலே தகனம். இங்கு, சட்டியில் போடப்பட்ட முழுக் கோழி காணாமற் போய்விட்டது!

தியான காலம் புனிதமானது! இந்தக் காலத்தில் கருக் கொள்வன, ஜனிப்பனயாவும் விமர்சகர்களின் வாசிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புக்கு அல்ல. ரஸனையின் முதிற்ச்சியால் மருத்துவிச்சி யானோர் செத்துப் போனார்கள். புத்திஜீவிகள் வக்கிர புத்தியுடன் கருச்சிதைவுகள் நிகழ்த்திக் கொண்டிருக் கிறார்கள். எனவே, விமர்சகர்களின் வாசிப்புக்கு அல்ல. சாதாரணர்களின் உள்ளத்திலே அமைதிப் பூக்களைப் புஷ்பிப்பதற்கானது...

தியான காலம் ஒன்றிலே அவன் தன் தாயைப் பற்றியும் சிந்தித்தான். அம்மா செக்ஸ் வாழ்க்கைக்கு உட்படாத பவித்திரம் போல காட்டிக் கொள்வது மகா பொய் யானது. பொய்களை நம்பாவிட்டால் பாசம் ஏது? கனவிலே தோன்றிய கடவுள் கொடுத்த மாம்பழத்தைச் சாப்பிட்டா அவளுடைய வயிறு உப்பியது? ஒரு சுளகு தவிட்டுக்காக என்னை வாங்கியதாக அலுத்துக் கொண்டது எதனால்? அவள் என் பிறப்புக் குறித்துத் தரும் விளக்கங்களுக்கு அப்பா எப்பொழுதும் 'ஆமாம் சாமி!' அவருடைய ஆண்மைக்கு அம்மாவை விட்டால், வேறு சாட்சியம் இல்லை என்கிற பயம். குழந்தைகள் மட்டுமல்ல பன்னீர்க் குடங்களை உடைத்துக் கொண்டே பிறப்பது. பொய்களும் உண்மைகளும் பன்னீர்க் குடங் களை உடைத்துக் கொண்டே ஜனிக்கின்றன.

அவன் அம்மாவுக்கு அப்பால் ஒரு அம்மா. அவளுடைய அம்மா அவள். தியானத்திற்கு உகந்த மகா தேவதை அவள்!

சின்னஞ் சிறு நெருப்புப் பெட்டியும் கையுமாக, ஒரு சின்னஞ்சிறு பொன்வண்டைப் பிடிக்கும் தியானத்திலே அவன் அலைந்த காலத்தில், இலந்தை மரக் கிளையி லிருந்து, 'தொப்' பென்று அவன் காலடியில் விழுந்தது அந்தப் 'பெரிய' பொன்வண்டு! அவன் குறி வைத்த சின்ன வண்டின் அம்மா என்பதினால் 'பெரிய்ய!' களவும் தர்மமே என்னும் பேருண்மையைப் போதித்த வள். அதனாலும் 'பெரிய்ய!' தியான அநுட்டான வழி முறைகள் பலவற்றைப் பற்றிய ஞானம் ஊட்டியவள் என்பதினாலும் 'பெரிய்ய!'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பிஞ்சிடம் என்ன சுவை? என்ன சுகம்? உன் ஆண்மைக்குச் சவாலாக என்னையே உன்னிடம் தருகிறேன்...நீ எது வேண்டுமானாலும் செய்! என்னை நீ சித்தரவதை செய்யலாம்...என்னை நீ கொல்லலாம்...யாவும் நீயின் தீர்மானமாக இருக்கலாம்...என்ன யோசிக்கிறாய்? என்னை உன்னிடம் அர்ப்பணித்த இக்கணத்திலிருந்து என்னிடம் இழப்பதற்கு வேறு எதுவுமே இல்லை...''

எல்லாவற்றையும் இழந்தவளும், அந்த இழப்புகளுக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவனும் கலந்து, சுகத்திலே உருகி ஒன்றாகிய வேளைகளிலே 'பெரிய்ய' தொலைந்தது. அவளின் 'அம்மா' என்ற குறியீட்டிலே, சின்னவளும் ஒட்டிக் கொண்டதைப் பற்றி இருவருமே அக்கறைப்படவில்லை.

கனவிலே உள்ள மகா மோஹன சுகம், களவில் ஈடுபட்டவர்களுக்கே கிட்டும் பேறு.

அந்தத் தொடர்புகள் அறுந்து, யுகங்கள் கழிந்ததான ஒரு கோடை இரவிலே, தனிமையிலே கிடந்து அவன் கத்தினான். அவள் வெறிகொண்ட பேரொளியாகவும், அவன் ஒரு சின்னப் புள்ளியாகவும்...முன்பு அவனே பேரொளியாகவும், அவளே, அம்மாவே, காதலியே, கள்ளக் காதலியே சிறு புள்ளி...

இந்தச் சிறு புள்ளியே ஆண்மை...

அவன் ஆண்.

அவளே புள்ளி...

எனவே...

ஏன்?

மேஜையிலே வீசப்பட்டிருந்த நூறு பிராங் 'இந்தியனே' என்று கத்துமா? அதற்கு உதடும் இல்லை. வாயும் இல்லை. ஆண்மையும் இல்லை.

தொலைந்துபோன அந்தப் புள்ளிக்குள் தனது நானை அழிக்க அவன் துடித்து ஏங்குகின்றான்.

முகமற்ற நானுமற்ற அவனது பெயர்: அகதி. □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்தச்** சோம்பல் மகா சுகமானது. மணிக்கூடு நர்த்தகியின் கை உதறல்களுக்கு வசியப்படாமல், சலங்கை கட்டாத அதன் தேர்ந்த 'கிணிங்' ஓசைகளுக்கு வீழாமல், கட்டுப்பாடற்ற சுதந்திரத்தின் நிழலாக நீளும் இந்தச் சோம்பல் இனிமையானது. விழிப்பு ஏற்பட்ட பிறகும், இமைகளைத் திறக்காது, இனிமையான நினைவுகளைக் கனவுக் கோலத்தில் மனத்திலே உருட்டி நயக்க உபகாரியாய் உதவும் இந்தச் சோம்பலின் மோஹனம் அதனை அநுபவிப்பவனுக்கே புரியும்.

சுகத்தை— இனிமையை— மோஹனத்தை ஒன்றாய்த் தரும் இந்தச்சோம்பலை அடைகாத்து சாய்வு நாற்காலியிலே என் உடலை வளர்த்திக்கிடக்கிறேன். நினைவுகள் கனவுகளாக வலம் வரும் கோலம். 'இந்தப் பூரணை நீங்கள் விரும்பும் பூரணையாகவே இருக்கும்.' என் சொந்த இதயத் துடிப்பின் பரமார்த்த இரகசியக் குரல் போல, மிக மெதுவாகக் கேட்கிறது. இதயத் துடிப்பு என்னுடையது. குரல் 'அமரி'யினுடையது. 'அமரி' என்று என் நெஞ்சிலே சூக்குமமாகிவிட்ட அமராவதி. அதிக நேரப் பாவனையால் புதிசைப் பிசக்கக்கூடாது என்கிற பிரக்கினை உதைக்கவும் இமைகளைத் திறந்து கோண்டேன்.

சகஜமாகவும் லௌகீகமாகவும் நினைக்கும் பக்குவத்தைப் பிரயாசைப்பட்டே மீட்டெடுக்கிறேன்.

இன்று வெசக் 'போயா' விடுமுறை. சிங்கள-பௌத்த எழுச்சியினால் கிடைத்த சலுகைகளுள் ஒன்று பூரணை தோறும் விடுமுறை. 'புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்' என்பது போல, பிறரும் இந்த மேலதிக விடுமுறைச் சலுகை அநுபவிக்கலாம். அதை என் பாணியில் அநுபவிக்கிறேன். லங்கா பேக்கரியுள்ள சந்தியிலிருந்து எதிரே கடையர் தெருவுக்குப் போகும் வழியிலுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்த பன்சல வரை தென்னங் குருத்தோலைத் தோரணங்களும், ஜோடனைகளும் அழகாக இருக்கும். இன்னும் இரண்டு மூன்று தினங்களுக்கு இந்துக்கள் மத்தியில் புத்தர் கிருஷ்ணாவதாரம் என்கிற ஒருவகைப் பக்தி ஆட்சி புரியும்.

என்கூட வேலை செய்யும் சோமசிறி காலையில் தன் வீட்டுக்கு வருமாறு அழைத்திருந்தான். நான் இங்கு ஒண்டிக் கட்டையாக வாழ்வதினால் ஏற்பட்ட பரிவு. அவன் வீட்டில் 'கிரிபத்'தும் 'கட்டா சம்பலும்' காலை உணவாகக் கிடைக்கும். அவை சிங்கள உணவுச் சுவையின் பரிமாணத்தை நாக்கில் நாட்டும்.

மனம் மீண்டும் சோம்பலையே நள்ளுகின்றது. இமைகள் மூடுகின்றன. குருட்டு ஆசைகளை குருடாகி அனுபவிக்க வேண்டும்.

தன் வெட்கத்தை எல்லாம் அவிழ்த்து எறிந்துவிட்டு, என் ஆசைகள் அனைத்துக்கும் தன்னை ஒப்படைக்கத் தயாராக இருக்கும் அமரியின் துணிச்சல்... தென்னஞ் சோலைகளின் கீழ் கொட்டுண்டு கிடக்கும் வெண்மணற் குறுணிகளை எற்றியும், வயற்காட்டு வரம்புகளிலே துள்ளியும் நடைபயிலும் இந்தக் கிராமத்துப் பெண்களின் உள்ளங்களிலே காதல் எத்தகைய முரட்டுத் துணிச்சலை ஏற்படுத்தி விடுகின்றது?

செருமல் சத்தம் காதிலே விழுகின்றது. பழக்கப்பட்ட குரல் அது என்கிற உணர்வும் கலக்க...விழிகள் பூரண விழிப்பு அடைகின்றன.

எதிரில் மாமாங்கப் போடியார் நின்றார். கள்ளமற்ற சிரிப்பு.

'லீவு எண்டா மாய்ச்சல்தானே? காலேல பல்லில சாம்பல்கூடப் போடேல்லை யாக்கும்...' போடியாரின் சிரிப்பு என்றுமே வஞ்சகமற்றது.

'போடியார் காலங்காத்தாலை வந்திருக்கிறியள்?'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ரெண்டொரு பணிவிடை. முல்லைக்காரன் பெண்டில் ரவுன் ஆஸ்பத்திரியில பிள்ளப் பெத்திரிக்கி. பச்சைப் பிள்ளைத்தாச்சிக்கு ஏதாச்சிம் வாங்கிக் குடுத்திட்டு பாத்திட்டு வரவேணும்... மறுகா, மேட்டுக்கரையில இரிக்கிற காணிக்குத் தண்ணி பாய்ச்ச வழியில்ல... நாலாம் வாய்க்கால் தண்ணிய பேப்பர் பக்டரிக்குத் திருப்பிட்டாங்க... ஐயாவுக்குத் தெரியாது போல...'

'தெரியாமல்...முந்தநாள் போய்ப் பாத்தன். ஏழாம் வாய்க்கால் தண்ணியைப் பின்புறமா வளைச்சுக் கட்ட ஏற்பாடு செய்திருக்கிறன். வெள்ளிக்கிழமை தான் போய் 'செக்' பண்ணலாம்...'

'நீங்க இதில கரிசனம் எண்டு தெரியும். இனி எல்லாம் நீங்கதானே பாக்கவேணும், மேய்க்க வேணும்... வந்த இடத்தில ஒருக்கா நினைவு படுத்திறன்...'

போடியார் தமது பேச்சிலே திணித்த உட்பொருளை உணர்ந்து நெளிந்தேன்.

'இந்தப் பேச்சில வந்த காரியத்த மறந்திட்டன். ஊர்க் கண்ணக அம்மன் கோயிலில ராத்திரிக்கு குளுத்தி... நல்லா இருக்கும்...உங்க ஊர் முறைக்கிம் எங்க ஊர் முறைக்கிம் பம்பலா வித்தியாசம் இருக்கிம்...இது உங்களுக்கு புதினமா இரிக்கிமாம்...வாவா சொல் லிச்சு...நாகதம்பிரானுக்கு இண்டைக்கி பொங்கலும் இரிக்கி...வாவா சொல்லச் சொல்லிச்சு...' என்று போடி யாரே தொடர்ந்து பேசினார்.

ஏதாவது பேசவேண்டும் என்கிற நாகரிகத்துக்கு மட்டுமல்லாமல், சோம்பலிலே தொங்கிய நினைவு களின் தொடர்ச்சியாகவும், 'அமரி வேறு என்ன சொல்லிச்சுப் போடியார்?' என்று கேட்டேன்.

'எத்தின எண்டு சொல்ற? எந்த நேரமும் உங்கட கதையும் பேச்சுமாத்தான் இரிக்கி... நாம என்னத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்ற? எல்லாம் ஆண்டவன்ர புண்ணியத்தில எந்தக் கக்கிசமும் இல்லாம நல்லபடி நடக்கோணும்...'

மாமாங்கப்போடியாரின் சிரிப்பைப் போலவே மனசும் வஞ்சகமற்றது. அந்த மனசிலே, சில காலமாகவே செழித்து வளரும் ஆசைப் பயிரை நான் அறிவேன். அதைச் சொல்வதற்கு அவருக்கு வார்த்தைகள் கிடைக்காமல் தடுமாறுவதையும் உணர்வேன். அப்படியும் அல்ல. அதைப்பற்றி நேரடியாகப் பேசுவதற்கு ஒரு வகைக் கூச்சம். 'மாமாவுக்குச் சாடைமாடையா எங்கட விஷயம் தெரியும். அவர் இதுக்கு மறுப்புச் சொல்ல மாட்டார்' என்று அமரி சொல்லியிருக்கிறாள்.

போடியார் ஏதோ நினைவுகளிலே சஞ்சரிப்பவரைப் போல மௌனமாக நின்றார்.

'அமராவதியின்ரை வடிவுக்கும் குணத்துக்கும், மகராஜன் ஒருத்தன் தங்க ரதம் ஏறிவந்து, உங்க கடப் படியிலை நிண்டு பெண் கேட்பான்...' அமரியை நினைத்துக் கொண்டதும் என் கற்பனைகள் எப்படி எல்லாம் சிலிர்த்துக் கொள்ளுகின்றன!

போடியார் மன்னை விரியச் சிரிச்சார்.

'கருக்கலுக்கு முந்தியே வந்திடுங்க...வரம்புக் கட்டால நடக்க வேணும்...வழியில இந்தப் பூச்சிச் சனியனுக்குத் தான் பயம்...எதுக்கும் ரோச்சி லையிற்றையும் எடுத்திட்டு வாங்க...தம்பியே, வரவா?'

'ஓம் போடியார்...'

'வாவாட்ட என்ன சொல்ல?'

'கட்டாயம் வாறன் எண்டு சொல்லுங்க...'

'டவுன் பஸ்ஸப் பிடிச்சி ஆஸ்பத்திரிக்குப் போக வேணும்' என்று தனக்குத் தானே பேசும் தொனியிலே கூறிக்கொண்டே நடந்தார். என் கண்கள் அவர் நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமாங்கப்போடியார் குடுமியுடன் பழங்காலத்து மனுஷனாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறார். அந்தப் பழைய தோற்றத்திற்குள் துவளாத உழைப்பு, சோராத தியாகம், பொய்க்காத பாசம், திடமான நம்பிக்கை, தவறாத வாய்மை அனைத்தையும் இணைத்து வைத்திருக்கிறார். அவருடைய வாழ்க்கையை அறிந்தவர்களுக்கு, அவர்மீது ஒரு வகை மரியாதை தோன்றுதல் தவிர்க்க இயலாது.

போடியாரின் தந்தை கறுத்தாப் போடியார் அசலூர் எல்லாம் மெச்சப் பிரபலியமா வாழ்ந்தவர். அவர் எத்தனையோ கூத்துக்களை முன்னின்று நடத்தியவர். அவற்றால் கிராமத்தின் பெருமையை நாட்டியவர். அயலண்டையையும்மேவி நடந்தஅவர்,ஒரு நாள் காலையில், வெள்ளாமையைப் பார்த்து வரப் போனவர்தான். 'பூச்சி கொத்தி விழுந்து கிடக்கிறார்' என்று செய்தி வந்தது. மந்திரம் மருந்தெல்லாம் அவர் விஷயத்தில் பலிக்கவில்லை. அப்பொழுது மாமாங்கன் சின்னப் பொடியன். அக்கையைக் கட்டிய மச்சினன் நிலபுலன் களைப் பார்க்க ஏர்வைப்பட்டான். பொண்டாட்டியை ஊரிலை வைச்சிட்டு, புலிபாய்ஞ்ச கல்லிலை ஒன்றும், மொறக்கொட்டாஞ்சேனையிலை இன்னொன்றுமாகக் கூத்திகளை வைச்சுக் கொண்டான். விடிஞ்சாப் பொழுது பட்டால் குடி.வயலையும் முல்லைக்காரனிட்ட ஒப்படைச்சிட்டான். பங்குடாவெளி சாமித்தம்பி போடியாரிட்ட காணிகளைக் கிரயத்தில் அடைவு வைச்சு, பணம்புரட்டிச் சோக்குப் பண்ணினான். காணிகளும் கை கடந்தன. போடி மகளாகவும், போடி மனைவியாகவும் பெருமை சுகித்த அக்கை, கூத்துகளுள் ஒருத்தியாய் வாழும் சிறுமையிலே மனம் புழுங்கி முடங்கிட்டா. இருந்தாலும், வாழ்க்கைப்பட்ட கடன் சுடலை பரியந்தம் என வாழ்ந்து, அமராவதி பிறந்த வீட்டோடை எழுந்திருக்க முடியாத நோயாளியானாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'என்ர பெண்ணடியளுக்கு சகலதும் நீதான் பொறுப்பு. அந்த நாசமத்துப் போனவனிட்ட மட்டும் என்ர பிள்ளையளை விட்டிடாத. அப்படி அதுகளக் கரைசேர்க்க உன்னால முடியாட்டி கண்ணைக் கட்டிப் போட்டுக் கொண்டு போய் கடலுக்க தள்ளீடு... இல்லாட்டி தின்னிற சோத்துக்க ஒள்ளொப்பம் பூச்சி கொல்லி மருந்தப் போட்டுக் குடுத்திடு...' என்று தன் தம்பியிடம் வாய் புசத்திக் கொண்டே கண்களை மூடினாள்.

பெண்டிலுக்குக் கொள்ளி வைச்ச கையோட, 'கசாது' வைச்ச உறவுக்கும் கொள்ளி வைச்சதான நினைப்புடன், புலிபாய்ஞ்சகல் கூத்தியோட போய் அடுகிடை படுகிடையாய், 'அமைஞ்சிட்டான்.'

வித்துச் சுட்டது போக மிச்சம் மீதம் இருந்ததுகளை எடுத்துக் கொண்டு, அக்கைக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றும் விரத வாழ்க்கையை மாமாங்கன் மேற்கொண்டான். சதா உழைப்பு. இந்த ஊழைப்பின் மூலம் இழந்த அனைத்தையும் மீட்கும் வெறியும் தியானமும் அவர் வாழ்வாகியது. இன்று, தமது நாற்பதாவது வயசில், அவர் கறுத்தாப் போடியாரின் பெயர் துலங்க மாமாங்கப்போடியாராக வாழ்கிறார். இருபது ஏக்கர் வயல். முழுவதும் பாய்ச்சல் பூமி. கிரான் பூமியைத் தன் கைப்படவே திருத்தி, சந்திவெளித் தோட்ட முதலாளி சானா கூனாவே வாயூறும்படியான தென்னந் தோட்டமாக மாற்றி விட்டார். சந்தைக்குக் கிட்ட கொள்முதல் காணியை அவர் மாஞ்சோலையாக்கி மகிழ்ந்தார். ஆத்துக்கு அக்கரையிலே அவருடைய ஆட்டுப் பட்டியும் மாட்டுப் பட்டியும் பெருகின. இரண்டு வருடத்துக்கும் முந்தியே முந்நூறுக்கு மேல ஆடுகள் அவர் பட்டியில் இருந்ததாக ஏறாவூர் 'புச்சர்' கலந்தர் லெப்பை சொல்லித் திரிஞ்சான்.

அக்கை புருஷன் குடியிலும் கூத்திகளிலும் தன் ஆண்மையை விதைத்துச் சீரழிந்ததைப் பார்த்துப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயந்தோ...அக்கைக்குக் கொடுத்த வாக்கை நிறை வேற்றி வைத்தற்கு அப்பாலேதான் தனக்கென ஒரு வாழ்க்கை உண்டு என்று உறுதி பூண்டோ...தனக்கு வாய்க்கக் கூடிய மனைவி தற்போது அவர் பேணிய உறவுச் சமன்பாடுகளிலே வீக்க நாக்கங்களை ஏற்படுத் தலாம் என்று நினைத்தோ...கல்யாண ஆசையை எப்படித் தொலைத்தார் என்பதை அவராலேயே நிதானத்திற்குள் கொண்டு வர முடியாது. மருமக்கள் இருவரும் அவர்மீது அன்பைப் பிழிந்து சேவித்தார்கள். அவர்களுடைய நினைவுகளிலே தெய்வமாக நிமிர்ந் துள்ள தனக்கு உறவுப் பெருக்கம் அவசியமில்லை என்பது போன்ற ஓர் உணர்வு...அல்ல, வைராக்கியம்! இவற்றின் மத்தியிலே தமது மனிதப் பலவீனங்களுக் கான ஒரு வடிகாலையும் அவர் தேர்ந்தெடுத்துக்கொண் டார். அதுதான் வேட்டைக்குப் போவது. வேட்டை யாடுதல் அவருடைய ஆண்மையின் தேடலுக்கான வடி காலாகப் பக்குவப் படுத்திக் கொண்டார்.

மூத்தவள் உமையாள். அவளுக்குக் கொம்மாதுறையில், காளிங்காகுடியில் தெறிச்சுப் பார்த்தெடுத்த வேள்ளா மைக்காரனுக்குக் கட்டிக் கொடுத்து விட்டார். 'அமரி' என்று நான் வழங்கும் அமராவதியை அவர் 'வாவா' என்றுதான் செல்லமாக அழைப்பார். அவளுக்கு அவரே அம்மையும் அப்பனும். அவளை வந்தாறு மூலை மத்திய மகா வித்தியாலயத்துக்கு அனுப்பி இங்கிலீசும் படிக்க வைச்சவர். அவள் இன்னும் ஒரு பாடம் மட்டும் பாஸானால்—அவளுக்குக் கணக்குப்பாடம் அவ்வளவாக வராது—அவளை வாத்திப் படிப்புக்கு அனுப்பலாம் என்று சிவலிங்கம் மாஸ்டர் சொல்வதைக் கேட்டு அவர் பூரித்துப் போவார். அவள் தையலிலை நல்ல கெட்டிக் காரி என்று தம்பிராசா டீச்சர் சொல்லாத நாளில்லை. அவள் தைச்ச எத்தனையோ சட்டைகள் எக்ஸிபிஷன் களுக்குப் போய் பாடசாலைக்கும் நல்ல பெயர் வாங்கிக் கொடுத்தன. அவள் வீட்டிலும் தைச்சுப் பழகிறதுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஸற்றடே' கந்தசாமியைப் பிடித்து நல்ல சிங்கர் கால்மெஷின் ஒன்று வாங்கிக் கொடுத்திருக்கிறார். தீபாவளி-வருஷமென்றால் பம்பலான தையல் வேலைகள். இரவெல்லாம் விழித்திருந்து தைப்பாளாம். அம்மம்மாக் கிழவிக்கு இதெல்லாம் மகாபெருமையும். கிளியாரின்ர அம்மான் சிலைச் சாங்கத்துக்கும், இங்கிலீசுப் படிப்புக்கும் உத்தியோககார மாப்பிள்ளைதான் பார்க்கவேணும் என்று கிழவி மகனிடம் சொல்லுவாள். தன்னுடைய கிழக்கு மேட்டுக் காணிக்குத் தண்ணீர் பாய்ச்சுவது சம்பந்தமான முறைப்பாடு செய்வதற்காக மாமாங்கப் போடியார் வந்த பொழுதுதான் அவருடைய பழக்கம் ஏற்பட்டது. என் முதல் நியமனம் கோறளைப் பற்றுப் பகுதியின் கிருஷிக உத்தியோகத்தர். 'புது விளக்குமாறு நல்லாப் பெருக்கும்' என்பது போல நானும். சொந்தத்தில் ஸ்கூட்டர் இருந்ததினால், எதையும் உடனுக்குடன் கவனிப்பதில் உற்சாகமும் இருந்தது. அவர் பிரச்சினைக்கு அன்றைக்கே தீர்வு செய்து கொடுத்தேன். எனக்கு முந்தியிருந்தவர் வாரக் கணக்காக இழுத்தடித்த பிறகுதான் செய்வாராம். இப்படி இழுத்தடித்துச் செய்தால்தான் போடிமாரும் தக்கபடி கவனிப்பார்கள் என்று 'பியோன்' தாமோதரம் என் உத்தியோகத்திலுள்ள முடக்குகளைச் சொல்லித் தந்தான். என் முந்தையர் செயல்முறைகள் எனக்குத் தோதுப்படவில்லை.

தம்முடைய வீட்டுக்குக் கட்டாயம் வந்து போகும்படி மாமாங்கப்போடியார்என்னை அழைத்தார். அவருடைய அழைப்பிலே இருந்த குழைவும், அன்பு பாராட்டும் சுருதியும், அந்த வஞ்சகமற்ற சிரிப்பும் என்னைக் கவரவே, அவரையும் என் ஸ்கூட்டரில் ஏற்றிக்கொண்டு அவருடைய வீட்டுக்குச் சென்றேன்.

என்னைப் போன்ற ஒரு சாதாரண உத்தியோகத்தனையும் ராஜாவாகப் பிரதிஷ்டை செய்யும் செழுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பகுதிப் போடிமார் பயிலும் விருந்தோம்பலுக்கு இருந்தது!

நான் அந்த வீட்டின் எளிமையான அழகினை ரஸித்துக் கொண்டிருந்தேன். யன்னல்களிலும், கதவுகளிலும் தொங்கிக் கொண்டிருந்த திரைச்சேலைகள் தேர்ந்த தையல்காரியின் படைப்பாற்றலுக்குக் கட்டியங்கூறி அசைந்து கொண்டிருந்தன.

'வாவா...ஐயாவுக்குக் கட்டி வைச்சிருக்கிற சாமான் களை கொண்டு வா...' என்று போடியார் குரல் கொடுத்தார்.

நிலத்தில் விழுந்துவிட்ட மின்னல், துரித நடைபயின்று வீட்டுக்குள் மறைந்தது!

'போடியார், என்னைப் பற்றி இப்பிடி நினைச்சிருக் கிறீர் என்று தெரிஞ்சிருந்தால் நான் இங்கை வாறதுக்கு உடன்பட்டிருக்கமாட்டன்...'

'ஐயா, இதுதான் இங்க வழக்கம். நீங்களும் உதவி செய்யிறது தான். நாங்கள் எங்கடை சந்தோஷத்தச் செய்யத்தானே வேணும்?'

'நாங்கள் எங்கடை கடமையைச் செய்யிறம். இதைச் செய்யிறதுக்குத்தான் அரசாங்கம் எங்களுக்குச் சம்பளம் தருகுது... முந்தி இருந்த பீத்தலன்கள் எதுவும் செய் திருக்கலாம். இதெல்லாம் எனக்குப் பிடிக்காது... எனக்குக் காசு தந்து, அல்லது ஏதாவது சந்தோஷம் செய்து காரியம் பாக்கிறதா இருந்தால்...போடியார், இனிமேல் கந்தோருக்கு வராதேயுங்கோ...'

'ஐயா, நான் என்ன செய்திட்டன் எண்டுகோவப்படுற... முன்னால இருந்தது போல ஆன் நீங்களும் இருக்கிற எண்டு நினைச்சன். இப்பிடிக் கோவிப்பியள் எண்டு தெரிஞ்சிரிந்தால், நான் இப்படி எல்லாம் நினைச்சுக் கூடப்பாத்திரிக்கமாட்டன்... ஐயா, கோவியாதேயுங்கோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனா, எங்க வீட்டில கையை நனச்சிட்டுப் போங்க... இண்டைக்கு நல்ல நாளும் பெருநாளுமா இரிக்கி...'

'வீட்டுக்கு வாறவங்க சாப்பிட்டுப் போறதுதான் எங்க மண்ணின் வேளான் மரபு... சாப்பிடுறது Bribe இல்ல. அன்புக்கும் உறவுக்குந்தான் விருந்து...'

கதவுத் திரைக்குப் பின்னால் தோன்றிய மின்னல் பேசிற்று.

அவள் சொற்களிலே தொனித்த விருந்தோம்பல் 'றாங்கி' எனக்குப் பிடித்தது. சொற்களிலே அழுத்த மான தெளிவு. அந்தத் தெளிவுக்குப் பின்னால், அவள் தோற்றத்தில் ஒரு நெளிவு. அந்த நெளிவிலே பெண் மையின் வெட்கம் அப்பிக்கிடந்தது. கிராான் மண்ணிலே தெங்கு அழகாக வளரும். இவள் பெண்மையின் அழகு அனைத்துக்கும் ஏக உரிமைக்காரியாக நிற்கிறாளே! நெப்போலியனுக்கிருந்த நெஞ்சுறுதி எனக்கு இருப்ப தாக நான் பெருமை பேசுவது வழக்கம். ஆனால், இந்த மங்குளிப் பெண்ணை நான் 'வோட்டலூ'வில் சந்திக்க நேர்ந்துவிட்டது என்பதை நிதானிப்பதற்குச் சிறிது நேரம் எடுத்தது!

மட்டக்களப்புக்கு Posting கிடைத்தவுடன் எத்தனை உறவுப் பயன்கள் வந்து இலவச ஆலோசனைகள் வழங்கினார்கள். அவற்றுள் முக்கியமானது: 'மட்டக் களப்பாருக்கு நல்லா மந்திரம் தெரியும். இங்கை இருந்து போன எத்தினையோ பொடியள் மட்டக்களப் பாரின் மந்திரத்திலை பாயோடை ஒட்டிச் கிடந்தவை தெரியுமே? அவங்களோடை வலு கவனமாப் பழக வேணும்.'

மந்திரமாவது? 'சூயிங்கம்' ஆவது?

மின்னலின் அழகுச் சொடுக்கிலே நான் என் வசம் இழந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோஹம் என்பது சடுதியாக, உணர்ச்சிச் சலனங்களி னாலும், உடலில் ஏற்படும் ரஸாயன மாற்றங்களி னாலும் ஏற்படும் ஏதோ ஒன்றா? அல்லது பக்திக்கும் பைத்தியத்திற்கும் இடைப்பட்ட ஏதோ ஒன்றா? எது எப்படியோ, அது காரண காரியங்களை மட்டுமல்ல, மனசையும், மானத்தையும், நிதானத்தையும் ஏககாலத் தில் இடறச்செய்துவிடும்போல...அவள் என் மனசையும் கற்பனையையும் சிதைத்து, வானத்துக்கும் பூமிக்கும் தொங்குபாலம் அமைக்கும் அற்புத மாயமாகவே மனசிலே பளிச்சிட்டு, நிலைத்தாள்!

அவளுடைய கனவுகளிலே வெள்ளைப் புரவிகள் பூட்டிய தங்கரதத்திலே பவனி வந்த ராஜகுமாரன், ஆஷ் நிற ஸ்கூட்டரிலே என் உருவில் பூலோகத்தின் நிஜஅவதாரம் எடுத்து வந்ததாத அவள் என்னைப் பற்றி முதற் சந்திப்பிலே நிச்சயித்துக் கொண்டாளாம்.

உரையாடல்களிலும் பார்க்க, விழி மொழியும், வெளி யரங்க மௌனமும் சக்தி வாய்ந்த காதல் ஊடகம் என்கிற ஞானமும் வெள்ளரச மரமும் பூரணையு மின்றியே இருவருக்கும் ஏற்பட்டது.

பிறகெல்லாம் நான் போடியாரின் அழைப்புக்காகக் காத்திருக்கவில்லை. காரணங்களை நானே உருவாக்கிக் கொண்டேன். என் விஜயங்களை ஊக்குவிக்கும் விதத் திலே, புதிய காரணங்களை ஜோடிக்க அவள் உதவி னாள்.

ஆத்மார்த்த எழுச்சிகளும்- ஏக்கங்களும் என்கிற கற்பனையிலே மிதந்து...

புலால் இச்சைகளுக்கு அப்பாலான தெய்வீக அன்பு என்கிற மாய நூலிலே பட்டங்களாக பறந்து அலைந்து...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளங்களின் உந்நத இணைப்பின் தேவகானம் என்கிற விளக்கங்களிலே தேர்ந்தெடுத்த வார்த்தைகள் ஏராளம் விரயஞ்செய்து...

அந்த அழகிய உடலின் வாசியை-வாளிப்பை-மென்மையை-சுகத்தை-சுகந்தத்தை முழுமையாக அநுபவித்திடல் வேண்டும் என்கிற ஆசை, நாளாக நாளாக, முற்ற முற்ற, அதன் இச்சா பூர்த்தியே அந்த உறவின் சிகரம் என்கிற புதிய அவதி ஒன்று என் நெஞ்சிலே விஸ்வரூபமெடுக்கத் துவங்கிற்று!

ஒருநாள். மாலை. போடியார் வீட்டிலிருந்து புறப்படுவதற்கு ஸ்கூட்டரை 'ஸ்ராட்' செய்தால் 'மக்கர்' பண்ணியது. அமரியின் நினைவுகளின் செறிவினால், வாழைச்சேனையில் 'பெற்றோல்' நிரப்ப வேணும் என்று வாகனேரியில்எடுத்திருந்த தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை என்பது அப்பொழுதுதான் உறைத்தது...இந்த அவதிகளிலே காலையில் போகலாம் என்று முடிவாயிற்று. போடியாரின் பழுதுபடாத நெஞ்சத்திலே, அக்கையின் புருஷன் மட்டுமே விதிவிலக்கான பிறவியாகத் தோன்றினார். மாமரத்தின் கீழே, அதன் கிளைகளை உருவி நிலவு ஒளிக்கோலம் போட்டிருந்த முற்றத்திலே, அமரியும் நானும் நீண்ட நேரம் அமர்ந்திருந்து... சின்னக்கேள்விகள்-பாதியான பதில்கள். சின்னச்சின்ன-செல்லச் செல்ல வசனங்கள். மங்கிய ஒளியைச் சாதகமாக்கிய வெட்கப்பார்வைகள். ஒலிசேர்க்காத சிறு நகைகள். ஒரு மாமாங்க காலத்தின் பழக்கத்தில் உருவான நம்பிக்கை அந்த முன்னிரவுச் சல்லாபம் அவளுக்கு ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

'நிலவையும் தென்றலையும் விட்டால், இந்தக் கற்பனை வறண்ட கவிஞர்களுக்குக் கவிதை வராதா?' என்று சாடுவதிலே ஒரு 'திறில்' உண்டு. காதல் வசப்பட்ட ஒருவனும், அந்த வசத்தை உருவேற்றிய ஒருத்தியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கம் பக்கமாக இருக்கும் பொழுது, மெல்லுணர்ச்சி களைக் கிளறிவிடும் மோஹன சக்தி இந்தத் தென்ற லுக்கும் நிலவுக்கும் எப்படி வந்தது? உணர்ச்சிகள் புத்திஜீவித கற்பிதங்களின் கால்களை இடற விழுத்திக் கொண்டேஇருக்கும். புத்திஜீவித ராங்கியுடன் இணக்கங் காணாத உணர்ச்சி பூர்வமான வாழ்க்கையும் உண்டு. அந்த உணர்ச்சி பூர்வமான வாழ்க்கையை முற்றாகப் புறக்கணித்து மானுஷீகத்தின் உண்மைக் கோலத்தைத் தரிசித்தல் சாலாது என்பது போலவும்.

என்னையும்-அமரியையும் தம்பதிகளாக நோக்கும் ஒரு மனோபாவம், மெதுவாக, ஆனாலும் நிச்சயமாக, போடியார் வீட்டிலே பயிராகி வளர்வதை நான் உணர்ந்து கொண்டேன். அதனை ஆட்சேபிக்காத தினால் உண்டாகும் சகாயம் எனக்கு இதமானதாகவும் தோன்றியது. 'வாவா கார்த்திகை நட்சத்திரக்காரி. மாப்பிள்ளை வீடு தேடி வருவான்' என்று மாலைக் கண் ணுடன் வாழ்ந்த அம்மம்மாக் கிழவி அடிக்கடி சொல்லு வாள்.

வேட்டையாடுதல் கறுத்தாப்போடியார் காலத்திலேயே அந்தக் குடும்பத்தின் இயல்பாய் அமைந்துவிட்டது. ஆனால், மாமாங்கப்போடியார் அதனைத் தன் வாழ்க் கையின் அவசிய புருஷார்த்தமாகப் போற்றி வழி பட்டார் போலவும். மரை அல்லது மான் பட்டால், அக்கம் பக்கத்துக்குக் கொடுத்து மீதப்படுவதை, அக்கறையுடன் சூட்டிறைச்சியாகப் பதப்படுத்தி எடுப் பார். சூட்டிறைச்சிக் குழம்பு அமரியின் அம்மம்மா குஷினியின் ஸ்பெஷல். அதன் பாக முறை தனது குலவித்தை என்று அவ பெருமை பாராட்டுதல் முற்றி லும் தகும் என்பதை நான் அதனைச் சுவைத்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒப்புக்கொண்டிருக்கிறேன். வேட்டைக்குச் சென்றால் மற்றும் வெடில்காரன்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தண்ணி' பாவிப்பது அவருடைய வழக்கம். நண்பர்களுக்குத் தாம் அளிக்கும் சலுகை என்றுதான் போடியார் அதனை விளங்கிக் கொண்டார். அந்த 'நக்கல்குடி'யை தன் மகனின் பலவீனமாகத் தாய்க் கிழவி பாராட்டி வந்தாள்.

சென்ற போயா விடுமுறைக்கு, பொலநறுவைக்குச் சென்று திரும்பும் வழியில், அமரியின் வீட்டுக்கு என் ஸ்கூட்டர் சென்று நின்றது. முதல் நாள் வேட்டைக்குச் சென்ற போடியார், சற்று முந்தித்தான் திரும்பியிருந்தார். நல்ல 'மப்பு'. தலை தூக்க முடியாது படுத்துக் கிடந்தார்.

அருமையான மான் இறைச்சி கொண்டு வந்திருந்தார். அதனைச் 'சுடச்சுட' ஆயத்தப்படுத்தினார்கள். நான் அங்கு தங்கிக் கட்டாயம் சாப்பிட வேணும் என்று அமரியும், அம்மம்மாவும் வற்புறுத்தினார்கள். அவர்கள் வற்புறுத்தாவிட்டாலும், அங்கு தங்குவது எனக்கு விருப்பமாகவும் இருந்தது. அங்கு எத்தனையோ தடவைகள் சாப்பிட்டிருக்கிறேன். நான் சாப்பிடும் போதெல்லாம், சின்ன அறையில், அமரி படிக்க உதவிய மேஜை, எனக்குச் சாப்பாடு பரிமாறும் மேஜையாக மாற்றப்பட்டுவிடும்.

யன்னல் ஓரமாகப் போடப்பட்டிருந்த அந்த மேஜையில் அமர்ந்து சாப்பிட்டேன். அமர்க்களமான, படு ருசியான சாப்பாடு. வெட்கம் பாராது ஒரு பிடிபிடித்து முடித்தேன். நான் நன்றாகச் சாப்பிட்டால், அமரி தன் வயிறு நிறைந்ததுபோல சந்தோஷப்படுவாள். அத்தகைய பரவசத்திலே அவள் மயங்கிய பொழுது, குப்பென்று வீசிய காற்று, மேஜைக்கு ஒளி பரப்பிக் கொண்டிருந்த கைவிளக்கை அணைத்தது. யன்னல் ஊடாக நுழைந்த நிலவொளியிலே அவள் அழகின் முழுப் பரிமாணமும் காட்டி நின்றாள். 'நீல மணிமாடத்து நெடியதொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாளரத்தை, தொட்டுத் தடவி வந்து, தோயும் நிலாப் பிழம்பை, எட்டு எடுத்து இடை சுற்றிச் சேலையென ஒல்கி நடக்கும்...' அந்த கனவுத் தோற்றத்திலே என் உணர்ச்சிகளை மறைக்க ஏலாத அவள் மயமான நிலையில், சடுதியாக என் பிடிக்குள் வீழ்த்தி, தழுவு கின்றேன்.

இத்திடீர்ப் பாய்ச்சலை ஆட்சேபித்துத் திமிறிக் கொண்டு வெளியே ஓடுகிறாள்... வினாடிகள் கரையக் கரைய...மனக் கடிகாரம் அடித்து எழுப்பும் ஒலி பூதா காரமாக...நிலாக்கற்றையில் ஊர்ந்த ஊமை ஒளியிலும் தனிமையிலும்... எழுதிய கடிதங்களும் அதன் வாசகங் களும் பூர்வ ஜன்மத்து நினைவுகளோ என்கிற தவிப்பும் புகுந்து கொள்ள...

அவள் நிதானமாக அரிக்கன் லாம்பினை எடுத்துக் கொண்டு அறைக்குள் வந்தாள். விளக்கினை என் முகத்திற்கு நேராகப் பிடிக்கவும் எனக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது.

என் எரிச்சலைப் புரிந்து கொண்டு, 'நீங்கள் சரியான ஓர்மக்காரன்தான்' கூறிச் சிரித்தாள். அவளுடைய சிரிப்பு எப்பொழுதும் கம்பி மத்தாப்பு எரிவதுபோல இருக்கும்.

என் நிதானத்தை மீண்டும் வசப்படுத்தினேன்.

'அம்மம்மா முழிப்பு... மாமா சாப்பிடேல்ல... உங்க ளுக்கு...' சிரிப்பை மறைத்து ஒரு சிணுங்கல்... சிணுங் கலின் தேய்வில், கம்பி மத்தாப்பின் ஒளிச்சிதறல் பரப்பி, அந்தச் சிரிப்பு மீண்டும் மலர்ந்தது.

நடுநிசியைத் தாண்டிய, வைகறைக்கு முன்னுக்குள்ள ஒரு நேரமாக இருக்கவேண்டும்... கோடிக்கு பின்னா லிருந்த மாமரங்கள். நிலவை வடிகட்டிச் சமைத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிழல் திட்டிலே சந்தித்தோம். இந்தச் சந்திப்பின் திட்ட மிடல் அவள் உபயம்.

அவள் உடலின் மேடு பள்ளங்களைத் தழுவி, சுருதி கூட்டி ஆனந்திக்க அனுமதித்தாள். அந்த ஆனந்தத் தைப் பங்கிட்டு மமிழ்வதாகவுந் தோன்றினாள்.

கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவவிடாது பயன்படுத்தும் மூர்க்கத்திலே திரண்ட ஆண்மையின் ஆவேசம்...

மலர் மல்லிகைகளுக்கே மென்மை நடவும் அவள் உடல் எப்படிச் சிலையானது?

அகலிகை ஏன் சிலையானாள்? இந்ரன்அவள் உடலைத் தீண்டுவதற்கு முன்னரா பின்னரா என்று ஒரு புதுக் குழப்பம் என் மனசில்... கற்புக்கும் பெண்மையின் சிலைத்துவத்துக்கும் ஒரு தொடர்பு உண்டு என்கிற புதிய ஞானம். ஞானமாவது, மண்ணாங்கட்டியாவது! ஒரு பூரணை இரவும், ஓர் அரிய சந்தர்ப்பமும் பாழாகிக் கொண்டிருக்கிறது... என்மீதே எனக்குச் சினம். என் ஆண்மைக்குள் அவளை வசப்படுத்த முடியவில்லையே என்கிற சினம்... இனிய வார்த்தைப் பரிமாற்றம், காதல் உணர்ச்சிகளைச் சொட்டும் கடிதங்கள்... ஆண்-பெண் உறவின் உச்சம் இவை அல்ல...மாம்ஸத் தின் ஆசைத் தீக்கள் திருமுழுக்கில் அவிந்து, அடங்கி... எத்தனையோ நினைவுகள். அவற்றில் மிகச் சிலவே, பட்டப்பகலிலே மனித நாகரிகஞ் சார்ந்தனவாக அங்கீகரிக்கப்பட்டவை... அடுத்து வந்த நாள்கள் ஆக்கினை மலைகளாய் நிமிர்ந்தும் வளர்ந்தும் என்னை நசுக்கின! தாலிச் சரடு அல்லது 'கசாது'...இவற்றிலே தொங்கிக் கொண்டிருக்கும் உறவு வேண்டாம். முத்தாய்ப்பு. முடிவு. நிஜத்துவத்தை இழந்து விட்ட ஒரு கனவு. சீச்கிரமே நீண்ட லீவு எடுத்துக் கொண்டு யாழ்ப்பாணம் சென்று வரவேண்டும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நான் உங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையைச் சந்தேகிக்க வேண்டாம். இனி வரும் பூரணைகள் உங்களதே. சத்தியம். கட்டாயம் வீட்டுக்கு வரவும்...' அவள் எழுதிய கடிதங்களின் மையக் கருவும் கருத்தும் இவையே. வார்த்தைகளும் தொனிகளும் மாறியிருக்கும்.

காமம் வெளவாலே. பகல் நேரங்களில் இதயத்தின் இருள் பகுதிகளிலே தொங்கிக் கொண்டிருக்கும். இரவிலே இரை தேடும் பறப்பு!

பொழுது சாய்ந்ததும், ஸ்கூட்டரில் ஏறி அமரியின் வீட்டுக்குப் பறந்தேன்.

மாந்தோப்புக்குப் பின்னால் ஒரு சிற்றோடை. கார்த்திகை, மார்கழி மாதங்களில் மட்டுமே அதில் நீர் பாயும். மற்றைய மாதங்களில் வறண்டு கிடக்கும். அதற்கு அப்பால் காயான் பற்றை. வயல் வரம்பின் அமைப்பிலே, காயான் பற்றையைக் கிழித்துச் செல்லும் ஒற்றையடிப் பாதை. அது 'மானாவாரி' வயலிலே ஏறும். பிறகு, குறுக்கும் நெடுக்குமான வயல் வரம்புகள். படுவான் திக்கிலே வேப்ப மரங்களும், இரண்டு ஆல மரங்களும் சேர்ந்து ஒரு பசுமைத் தீவாகத் தோன்றும். அதிலேதான் கண்ணகையம்மன் கோயில். பக்கத்தில் நாகதம்பிரான். ஆண்டுக்கு ஒருநாள் பொங்கல் பானைகளினாலும், பக்தர்கள் திரளாலும் புதிய உலகம் ஜனிக்கும். சென்ற ஆண்டு வேடிக்கை பார்ப்பதற்காக வட்ட விதானையுடன் சென்றிருந்தேன். அப்பொழுது எனக்கு மாமாங்கப் போடியாரின் அறிமுகம் கிட்டவில்லை. வரம்புக் கட்டுகளாலே நடந்து போவது தூரந்தான். காக்கைப் பறப்புக்குக் கிட்டவும். எனவே, கோயில் பகுதியிலிருந்து மக்கள் கூட்டத்தை அடையாளமிடும் ஆரவாரம் மிகமிக நொய்மையாகக் காற்றிலே தவழ்ந்து வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடியாரின் அம்மைக்கிழவி பொங்கலுக்கு அடுக்குப் பார்ப்பதற்கு நேர காலத்துடன் சென்றுவிட்டாள்.

மாமாங்கப் போடியார் சால்வையை எடுத்துத் தோளிலே ஏகாவடமிட்டார்.

'வாவா, உனக்குத் தெரியுந்தானே நான் காப்புக் கட்டி இருக்கன். நான் வேளையோட கோயிலுக்குப் போறன். ஐயாவுக்குச் சாப்பாடு குடுத்திட்டு, டோச்சு லையிற்றை யும் மறக்காம எடுத்திட்டு, சுறுக்கா வந்திடுங்க...!

என்மீது எத்தகைய நம்பிக்கை!

புறப்பட்ட அவர் சற்றே தயங்கி நின்றார். எதையோ சொல்ல நினைப்பவரைப் போல சற்று நேரம் தயங்கி னார்.

தொண்டை அடைத்து விட்டதைப் போல மிகநொய்மை யான குரலிலே பேசினார்.

'வாவா கார்த்திகை நட்சத்திரக்காரி. மாப்பிள்ளை வீடு தேடி வரும் எண்டுஆன் பலன் சொன்ன... அந்த மாதிரிதான் இப்ப பலனும் நடக்கி. நான் பெத்தபிள்ளை எண்டுஆன் உங்கள நினச்சிரிக்கன். என்ர அக்கைக்கு குடுத்த வாக்கை நான் காப்பாத்தி, வாவாவை முறையா ஒப்படைக்க வேணும்...சரி சுறுக்கா புறப் பட்டுக் குளுத்திக்கி வாங்க... நான் வாறன்...'

அக்கைக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதற் காக, பீஷ்ம விரதம் அனுஷ்டித்து வரும் அந்த அபூர்வ மனிதர் ஒரு புள்ளியாக மறைந்து போகும் மட்டும் பார்த்துக் கொண்டே நின்றேன்.

'எனக்கு மாமாவும் தெய்வமும் வேறுவேறல்ல...' என்று அவர் சென்ற திக்கினை வணங்கும் பரவசத்துடன் அமரி கூறினாள்.

மௌனம்,

'சரி, வாங்க சாப்பிட...' என்று அமரி அழைத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எனக்குப் பசிக்கேல்லை...' என் அனைத்து இயலாமை களினால் சொன்னேன்.

'போன பூரணைக்கு ஏமாத்திட்டன் என்ற கோவம் இன்னும் மாறேல்லையா? நாங்கள் எப்பவும் நாக்கு சொல்லை நம்பி வாழ்ற கிராமத்துச் சனங்கள். இந்தப் பூரணையில் நீங்க சொல்லுறபடி எல்லாம் நடப்பன். இது சத்தியம். வாங்க சாப்பிட...'

'எனக்குப் பசிக்கேல்லை...' வார்த்தைகளை இழந்து விட்ட முட்டுப்பாட்டில் மீண்டும் அதையே சொன்னேன்.

'அப்ப வாங்க...'

குறும்புத்தனமான புன்னகை முகம் அடங்கலும் குளிர் தடவ, கனவுலக கற்பிதங்களிலே விளைந்த லஜ்ஜை இழையோட, என்னைப் பார்த்தாள். தாவணி அவிழ்ந்து நெகிழ்ந்து விலகியதைக் கூடச் சரிசெய்யாது, பூரணமாகத் தன்னை ஒப்புக் கொடுக்கும் பலிப் பொரு ளாய் கனிந்துவிட்ட ஒரு மோஹன மோனம்...உடலிலே சில்லிட்ட ஒரு வகைப் பயத்தினை அவளால் மறைக்க முடியவில்லை... கன்னத்தில் வேர்க்குருப்பருப்பத்திலே வியர்வை...வலையிலே அகப்பட்ட புறா சிறகுக்கு ஆக்கினை கொடுப்பது போல சலன லயம் படர்ந்த மார்புகள். அவளுடைய விழிக்கோடிகளிலே துளிர்த்து நின்ற கங்கைக் கொழுந்துகள் சொல்லும் கதை என்ன? 'அமரி என்னை மன்னித்துவிடு...நாக்குச் சொல் லுக்கே வேதத்தின் புனிதத்துவம் கற்பிக்கும் மனிதர்கள் நீங்கள்... ஆனால் நான்?... கன்னித்தன்மையின் மெருகுப் பூச்சில் குலுங்கும் உன் வாலைக் குருத் துடலை ஒரு தடவை அனுபவித்திடல் வேண்டும் என்ற ஆசைக்காக—உடல் வெறியைத் தணிக்கும் குரூர ஆசையைத் தீர்க்கும் ஒரு சந்தர்ப்பத்துக்காக—நான் சொன்னவை அனைத்துமே பொய்... உன்னைக் காதலிப்பதாக அள்ளித் தெளித்த அத்தனை வார்த்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் பொய்...நான் கல்யாணம் ஆகாதவன் என்று நீயும் உன் குடும்பமும் நம்பவேண்டுமென்று நடித்தேன் யாழ்ப்பாணத்திலே, நான் வாழும் கிராமத்திலே என் மனைவி வாழ்கிறாள். உன் அழகு அவளுக்கில்லை. அவள் கருங்கல்லுச் சிலை போல... அவளுடைய மேல் வரிசைப் பற்களை மூட அவள் உதடுகள் காணாது. இருந்தாலும் அவள் என் மனைவி. பனங்கூடல் ஊடாக இதே நிலவு அங்கும் வீசும். என் நினைவு களையே தன் நெஞ்சிலே சீராட்டிக் கொண்டு, இந்த நிலவு ஊட்டும் தாபங்களை மாய்த்துக் கொண்டு அவள் படுத்திருப்பாள்... ஆனாலும், என் மனைவி. நீ சொல்லுவாயே தங்கரதம் என்று... இந்த ஸ்கூட்டர் அவள் தந்தது... அவள் கொண்டு வந்த சீதனப் பணத் தின் ஒரு பகுதியை லஞ்சமாகக் கொடுத்துப் பெற்றது தான் என் உத்தியோகம்...உண்மை. உன் பேரழகின் அற்ப பின்னத்திற்குக்கூட அவள் ஈடாகாள். அவள் கற்புக்கும் வாழ்வுக்கும் வளத்துக்கும் என் ஆண்மையே காவல் என்று கிடக்கிறாள்...'

என் ஸ்கூட்டர் ரோட்டில் இறங்கியது.

என் பின்னால், கடப்புவரை ஓடிவந்த அமரியின் அவலக் குரல் காதுகளைக் குடைந்து ஒலிப்பதான ஒரு ஜாலம். தூரத்திலே, கண்ணகை அம்மனுக்கு குளுத்தி நடந்து கொண்டிருக்கிறது...

மட்டக்களப்பாரின் மந்திரம் என்ன?

பாயோடு ஒட்டும் பழிப்புரை என்ன?

இந்தக் கொச்சையான ஜோடிப்பிற்குப் பின்னால், எத்தனை அமரிகளுடைய கன்னிமை என்போன்ற யாழ்ப்பாண ஓநாய்களினால் குதறப்பட்டது?

அமரி நீ கார்த்திகை நட்சத்திரக்காரி. உன்மாப்பிள்ளை என்றாவது ஒரு நாள் உன் வீடு தேடிவருவான்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் மனிதனாய் மீளுயிர்ப்புப் பெற்ற திருப்தி, ஏனைய சோகங்களை விழுங்க, ஸ்கூட்டர் ஓடிக் கொண்டிருக் கிறது.

வைகாச பூரணையின் பால் நிலவின் அழகை ரஸிக்கும் மனோ நிலை மட்டும் எனக்கு இல்லை. □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12

கதை



# 1
# தொடுப்பு

**மீண்டும்** ஒரு வைசாக பூரணை...

பக்தியின் கனிவையும் இசையின் காம்பீர்யத்தையும் அற்புதமாக இணைத்துக் குழைத்து ஒலிக்கிறது அந்தக் குரல்.

'புத்தங் சரணங் கச்சாமி...'

ஒலிபெருக்கியிலே பரம்புவது மொஹிதீன் பேக்கின்—இந்திய முஸ்லிமான மொஹிதீன் பேக்கின்—சிங்களத் திரை இசை உலகில் முதன்மை பெற்ற பிசிரில்லாத கம்பீரமான குரலிலே பதிவு செய்யப்பட்ட ஒலி நாடா. அஹிம்ஸா தத்துவத்தின் பிரசித்தம்; அது தொனிக்கப் படும் குரலல்ல என்கிற திவ்வியம்!

பஸாரில் கடை நடத்தும் சிங்கள-முஸ்லிம்-தமிழ் வணிக நிலையங்களில் வசூலிக்கப்பட்ட தாராள நிதி வசதியிலே வெஸாக் கொண்டாட்டம் கோலாகலமாக கலகலக் கின்றது.

ஆயிரம் பேரைக் கொன்ற கொலைவெறியன் அங்குலிமாலரவை மன்னித்தருளினார் புத்தபகவான்.

அன்பின் அற்புதக் கனிவு நிலை அது. அதன் பிரசித் தமே அஹிம்ஸையின் சாரம் என்கிற அக்கறை. அந்த அக்கறையை கவின் ஓவியமாக்கி, அந்த ஓவியத்தைத் தாங்கிய தோரணம் நிமிர்ந்து நிற்கின்றது. அந்த ஓவியத்தைக் கவ்வும் விளிம்புகளிலே எண்ணற்ற மின்சா ரக் குமிழ்கள். பாயும் மின்சாரம் அந்த குமிழ்களிலே ஊர்ந்தோடி நிற அலைகள் பொருத்தி மயக்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெசாக் தோரணங்கள் அமைக்கும் மரபு பௌத்த சிங்களக்கலாநுட்பத்திற்குப் புதிய பரிமாணம் சேர்க்கின்றது. அழகிய தீவின், அமைதியான மக்களின், கலைத்துவ அக்கறை மானுஷீகத்தின் உயர்பண்பினைத் தேடிப் பிரசித்தப்படுத்துவது போன்ற கோலமும்.

மன்னித்தல் அருள். தானம் அருட்சுரப்பே. அன்னதானம் வழங்கும் வைபவம் கணபதிப் பிள்ளையால் துவக்கி வைக்கப்பட்டது. அவன் கூச்சத்துடன் ஒதுங்க நினைத்த போதிலும், சோமா விடவில்லை. அஸாருத்தீன் சிறப்புரை நிகழ்த்துதல் வேண்டும் என்றும் சோமாவே வற்புறுத்தினான். இன-மத ஒற்றுமை நாட்டின் வளத்துக்கும் புகழுக்கும் உறுதுணை என்று அவன் பேசினான். மனித நேயத்தின் உயர் பண்புகள் பெருக்கெடுத்தோடும் பான்மையில் பௌத்த சீலத்தின் பெருமையை விளக்கினார், அப்பகுதி மக்களின் மரியாதையைச் சம்பாதித்து வைத்திருக்கும் பிக்கு சரணங்க தேரர்.

இலங்கையில் வாழும் பல்லின மக்களிடையேயும், மதங்களுக்கிடையிலும் புரிந்துணர்வும் சௌஜன்ய உறவுகளும் சாத்தியம் என்பதை அந்த வெசாக் கொண்டாட்டம் நிறுவியது. அதனைக் கோலாகலமாகவும் ஆடம்பரமாகவும் ஏற்பாடு செய்ததிலே சோமாவுக்குப் பெரும் பங்கு இருந்தது. கணபதியை 'அப்பே முதலாளி' என்று அழைத்து அனைவரையும் அசத்தினான்!

சோமாவின் மனமாற்றத்தை அதிசயிக்காதவர்களே இலர்!

''அப்பே ஆண்டுவ' கோஷம் சாதாரண மக்களுக்கு ஆட்சி அதிகாரம் கிடைத்துள்ளதையே குறிக்கும்' என்று புதிய எழுச்சிக்குத் தலைமை தாங்கிப் பிரதமராய்ப் பதவி ஏற்ற சொலமன் வெஸ்ட் றிஜ்வே டயஸ் பண்டார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயக்க வெற்றிப் பெருமிதத்திலே அறிக்கையிட்டார். அவருடைய 'வெள்ளி நாக்கு' அசைந்து, ஒக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தின் வெள்ளைக்காரச் சபையையே கட்டுப்படுத்தி வைத்ததும் உண்டு. அது அந்தக் காலம். ஆங்கிலம் பேசும் துரைத்தனத்தினர் சார்பாகச் சுதந்திர இலங்கையின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பெரிய சேன நாயக்க, திரைமறைவு நாடகங்கள் மூலம் 'பண்டா' வின் ஆட்சிக் கனவுகளைச் சிதைக்க எத்தனித்தார். அரசியல் நாடி பார்க்கத் தெரிந்த பண்டா சளைக்க வில்லை. அதிரடி நடவடிக்கை போல எதிர்க்கட்சி ஆசனத்தில் சென்று அமர்ந்து 'என்னையே வெற்றி கொள்ளுகிறேன்' என்று எக்காளமிட்டார். பிக்குகள், சிங்கள மொழி ஆசிரியர்கள், ஆயுர்வேத வைத்தியர்கள் போன்றவர்களை தமது அரசியல் பங்காளிகளாகச் சேர்த்துக் கொண்டார். 'இருபத்தி நான்கு மணித்தியாலங்களுக்குள் சிங்கள மட்டுமே ஆட்சி மொழியாகும். உங்கள் மொழியும் உங்கள் மதமும் பண்டைய மேனிலையைப் பெறும்' என்று தூர்ந்து கிடந்த சிங்கள ஆதிக்க ஆசைகளையும் கனவுகளையும் கிளறினார்.

அப்படியும் அல்ல. நீண்ட காலம் போத்தலிலே அடைக் பட்டிருந்த பூதத்திற்கு விடுதலை வழங்கினார்.

நினைத்தது நடந்தது. அவர் பிரதமரானார். அவர் எதிர்பாராத வேகத்தில், அவர் கட்டவிழ்ந்து விட்ட சக்திகள் வளர்ந்தன. இரண்டு ஆண்டுகளுக்கிடையில் சிங்கள சுயாதீன எழுச்சி, தமிழர்களை அடக்கி ஆளும் பேரினவாதமாகச் சடைத்தது. அடைபட்டுக் கிடந்த பூதந்துக்கு விடுதலை வழங்கிய மந்திரவாதி பண்டா வுக்கு மீண்டும் அதனைப் போத்தலுக்குள் சிறைப்படுத் தும் வித்தை தெரியாது போயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய பூதம், ஒவ்வொரு நகரத்திலும் கிராமத்திலும் சீக்கிரமே குட்டிப் பிசாசுகளை உருவாக்கிக் கொண் டிருந்தது.

'சோமா' என்றழைக்கப்படும் சோமரத்னா சின்ன வயதில் சிறு திருட்டுகள் செய்து, 'மக்கோனா' பாட சாலையிலும் சோறு சாப்பிட்டு, இருபத்திரண்டாவது வயசிலேயே 'ஐஆர்சி' (Island Reconvicted Criminal) என்ற 'கியாதி' யைச் சம்பாதித்து, பண்டா ஆட்சிக்கு வந்தபொழுது நான்காண்டு சிறைவாசத் தினை 'எண்ணி'க் கொண்டிருந்தான்.

ஆயிரம் பேரைக் கொன்ற கொலைவெறியன் அங்குலி மாலாவை மன்னித் தருளினார் புத்தபகவான்.

அந்தக் கருணாமூர்த்தி புத்தரின் 2500 ஆவது ஜயந்திக் கொண்டாட்டங்களின் முன்னோடியாக மன்னிப்புப் பெற்று விடுதலையானோரில் சோமாவும் ஒருவன். சிறை அனுபவத்துடன், வேலையின்றி நடமாடிய 'ஐஆர்சி'க் களே சிங்கள மேன்மை காக்கும் குட்டிப் பூதங்களாக நிவேதிக்கப்பட்டார்கள். பாணந்துறைப் பகுதிக்கு நிவேதிக்கப்பட்ட சோமா எதிர்பார்க்கப்பட்ட கடமை களை நேர்த்தியாக விளங்கிக் கொண்டு, தமிழர் சங்காரத்துக்குத் தலைமை தாங்கினான்.

இருபத்தைந்து ஆண்டுகள்கூட ஆகவில்லை. அதே சோமா இனங்களுக்கும் மதங்களுக்குமிடையிலான நல்லுறவின் தூதுவனாக உழைத்து வருவது எல்லோ ரையும் வியப்பிலாழ்த்தியது.

ஆயிரம் பேரைக் கொன்ற கொலைவெறியன் அங்குலி மாலாவை மன்னித்தருளிய புத்தரின் கதை அஹிம்ஸா தர்மத்தை விளக்கக் காலங் காலமாகச் சொல்லப்படு கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உன் தந்தையைக் கொன்றவன் சோமா. அவனுக்கு உன் கடையில் தஞ்சமா?' என்று ஒரு சந்தர்ப்பத்திலே அஸாருத்தீன் கணபதியைக் கேட்டான்.

'இஞ்சை பாரும் அஸார்தீன். நான் பெரிய புத்தர் எண்ட எண்ணத்திலை இதைச் செய்யேல்லை. உவன் எப்ப பார்த்தாலும் இந்தப் பகுதியிலை வந்து கப்பம் கேட்டுத் தொல்லைப்படுத்துகிறான். நானும் யோசிச்சுப் பாத்தன். பழைய கறள்களை வைச்சுக் கொண்டு எத்தினை காலத்துக்குத்தான் சீவியம் பண்ணுறது? கையிலை ஒரு பிழைப்பிருந்தால் மனுஷன் திருந்துவான். அவனுக்கும் ஒரு சந்தர்ப்பம் குடுத்துப் பாப்பம் எண்டு நினைச்சன். பாக்குச் சீவி, வெத்திலை சுருட்டினாலும் சுயசம்பாத்தியம் எண்டு சொன்னன். அவனும் ஒத்துக் கொண்டு ஒழுங்கா வாழ்றான். இப்ப பஸாரிலை உள்ள வங்களும் நிம்மதியாக இருக்காங்கள்...நான் செய்தது பிழையெண்டே சொல்லுறீர்?'

'இரக்கப்படுறதும், சந்தர்ப்பம் தாறதும் நல்லம். பறக் கத்தான விஷயம். ஆனா, நம்ப நட; நம்பி நடவாதே...'

'நாங்களும் நம்பினாதானே அவங்களும் நம்புவான் கள்...'

'மஞ்சள் துண்டுக்குத் தன் தாயின் கழுத்தை அறுத்த சாதி...எங்க உம்மா அடிக்கடி சொல்வா. அதனால தான்...'

'ஓமோம்... அம்மா எனக்கும் சொன்னவதான். அதுவும் பாரும். மஞ்சள் அங்கி மந்திரவாதிகள் எல்லாத்தையும் உசுப்பி விட்டான்கள். உவன் பில்லிப் பிசாசு. ஏவல் பேய். ஏவினவங்களை எல்லோ சொல்லவேணும்? நான் அதுகளை ஒரு கெட்ட கனவு போலை மறக்கப் பார்க் கிறன்... சோமா திருந்தினமாதிரித் தான் நடக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறான்...' என்று சொன்ன கணபதி யோசனையில் ஆழ்ந்தான்.

அந்த யோசனை அசைபோடுதல் போலவும். நிலத்திலே கிடக்கும் சருகுகளை எல்லாம் வாரிச் சுருட்டி, சிறிது நேரம் அந்தரத்தில் வைத்துச் சுழற்றும் சுழல் காற்றுப் போலவும்

**அலாவுத்தீன்** ஹாஜியாரும் வேலுப்பிள்ளையும் அடுத்தடுத்த கடைக்காரர்கள். இதனாலும் நண்பர்கள். வேலாயுதம் தமது குடும்பத்தை வடக்கேயுள்ள காரை நகரில் வாழச் செய்து, தம்முடைய பிழைப்பைக் கவனிப்பதற்காக, இங்கே கடையிலேயே வசித்தார். அவருடைய மூத்த மகன் கணபதி ஊரிலே தெறிச்சுத் திரியிறான் என்று அடிக்கடி கடிதம் வந்து அவரைக் குழப்பியது. பலவாறு யோசித்த பின்னர், கணபதியைத் தம் கூடவே பாணந்துறைக்கு அழைத்து வந்தார். தம்முடைய நேரடிக் கண்காணிப்பின் கீழே இருந்தால், அவன் தன்னுடைய குழப்படிகளைத் துறந்து, படிப்பிலே கவனஞ் செலுத்துவான் என்று நம்பினார். கணபதிக்கு இங்கு தனிமை. கூட்டாளிகளும் இல்லை. மொழிப் பிரச்சினை வேறு. ஹாஜியாரின் மகன் அஸாருத்தீன் படித்த பாடசாலையிலேயே கணபதியும் சேர்க்கப்பட்டான். கணபதி அஸாருத்தீனுடன் மட்டுமல்லாமல், அவனுடைய வீட்டாருடனும் நன்றாக ஒட்டிக் கொண்டான். கடையில் இருந்து படிக்கவும் வசதிகளில்லை. அஸாருத்தீனின் அன்னை ஆயிஷாவுக்குக் கணபதியை நன்கு பிடித்தும்விட்டது. வீட்டுக்கு வந்து படிக்கும்படி அவள் வற்புறுத்தினாள். அப்படிப் படிக்க வரும்பொழுது, அவனை வெறும் வயிற்றுடன் திருப்பி அனுப்பவும் மாட்டாள். சாப்பாட்டின் பின் படிக்கும் பொழுது கணபதிக்கு தூக்கம் வந்து விடுவதும் உண்டு. அத்தகைய சந்தர்ப்பங்களிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் ஆயிஷா வீட்டிலேயே தூங்குவதும் வழக்கமாகியது. ஆயிஷா போடும் அனைத்து முஸ்லிம் சாப்பாடு வகைகளும் கணபதிக்கு ருசித்தன. இவ்வாறு கணபதி அலாவுதீனின் வீட்டில் ஒரு பிள்ளையாக வளர்ந்து வருவதை வேலாயுதபிள்ளை ஆட்சேபிக்கவும் இல்லை. இந்தப் புதிய உறவுகளால் கணபதி திருந்தி விட்டதைக் கண்டு அவர் உள்ளூர மகிழ்ந்தார். இவற்றால், ஹாஜியாருடன் பக்கத்துக் கடைக்காரர் என்கிற மரியாதைக்கு அப்பாற்படவும், அன்பு பாராட்டி நடக்கலானார்.

தனிச் சிங்களச் சட்டத்தினை அமுலாக்கி, 'அப்பே ஆண்டுவ' வை ஏற்படுத்திய பண்டா, தாம் பல புதிய நிர்ப்பந்தங்களின் கைதியாகி விட்டதைச் சீக்கிரமே உணரலானார். சிங்கள எழுச்சியிலே தங்களையும் தலைவர்களாக்கிக் கொள்வதிலே பலர் போட்டியிட்டனர். ஊவாப் பகுதியிலிருந்து எம். பி.யான கே. எம். பி. ராஜரத்தினா இந்தியக் 'கோணார்' இரத்தம் தன்னிலே பாய்வதை மறுதலிப்பதற்காக தமிழர்களைக் காலிமுகத் திடலில் போட்டுத் தோலுரிப்பேன் என்று வீரசபதங்கள் போட்டுச் சிங்களத்துவத்தை நிலைநாட்டினார். கொழும்பு மத்திய தொகுதியின் மூன்றாம் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தேமிஸ் தனது மலையாள வம்ஸா வழியை மறைக்கத் தனிச் சிங்கள எழுச்சியின் ஆதரவுத் தூணானார். இலங்கையின் மார்க்ஸிஸ இயக்கத்தின் மூத்த தந்தைகளுள் ஒருவரான பிலிப்குணவர்த்தனா சோஷலிஸவாதத்துக்குத் தடிப்பான இனவாத வர்ணம் பூசினார். 'புத்திஜீவி' தச் சிந்தனைகளின் கனதியைச் சிங்கள இனவாதத்திற்கு ஏற்றுவதிலே ஆனந்த கல்லூரி மூலம் பௌத்த கல்விச் சேவை செய்த மேத்தானந்த போன்றோர் முந்தி நின்றார்கள். சுகாதார அமைச்சரான விமலா விஜயவர்த்தனாவின் காதல் பார்வை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யையும் சம்பாதித்துக் கொண்ட களனி விஹாரத்தின் மகாதேரரான புத்தரக்கிதர் விமலாவை இலங்கையின் இரண்டாவது விஹாரமாதேவியாக நிவேதிக்கும் சூழ்நிலையை உருவாக்க 'பிக்குகள் பெரமுண'வைத் தூண்டினார். 'அப்பே ஆண்டுவ' மாற்றத்தினாலே புதிய அரசியல் விலாசங்கள் தேடிக் கொண்ட இவர்களுடன் சேர்ந்து, மாற்றுக் கட்சியின் அரசியல் தலைமைத்துவத்துக்குத் தவித்துக் கொண்டிருந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனா 'தமிழர்களுக்குக் கொடுக்கும் எந்தச் சலுகையும் சிங்கள இனத்தின் அடிமை சாஸனமாகும்' என்று 'கண்டி பாத யாத்திரை' ஸ்ரண்டுகள் இணைத்துத் துள்ளிக் கொண்டிருந்தார்.

ஆயிரம் பேரைக் கொன்ற கொலைவெறியன் அங்குலிமாலாவைப் புத்த பகவான் மன்னித்தருளினார்.

விடுதலை அடைந்த பூதம், பட்டிதொட்டி எல்லாம் குட்டிப் பூதங்களை உருவாக்கித் திரிந்தது.

இந்த அரசியல் சந்நதங்கள் கண்டு வேலாயுதபிள்ளை அஞ்சவில்லை. பாணந்துறைத் தொகுதி அந்தக் காலத்தில் சமசமாஜிகளுடைய கோட்டையாகத் திகழ்ந்தது. அதன் உறுப்பினரான காந்திய சுபாவம் குழைத்துப் பேசும் லெஸ்லி குணவர்த்தனா தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். அவருடைய தங்கையை சென்னை கிறித்தவக் கல்லூரி அதிபராகவும் விளங்கிய இந்தியத் தமிழரான சந்திரன் தேவநேசன் மணம் முடித்திருந்தார். 'ஒரு மொழி என்றால் இரண்டு நாடுகள்; இரண்டு மொழிகள் என்றால் ஒரு நாடு' என்கிற வாஸ்தவத்தைத் தீர்க்கதரிசனமாக விளக்கி, தனிச் சிங்கள ஆவேசத்தை சமசமாஜிகள் இயக்க ரீதியாகவும் எதிர்த்து வந்தார்கள். எனவே, அவர்கள் பிரதிநிதிகளாக விளங்கிய தொகுதிகளிலே இனக் கலவரம் ஏற்பட வழியில்லை என்று வேலாயுதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரிகரண சுத்தியாகவே நம்பினார். அந்த நம்பிக்கையை ஹாஜியாரிடம் தெரிவித்து, கடையை பூட்டி வழக்கம் போல அதற்குள்ளேயே அவர் படுத்துக் கொண்டார். அன்றிரவு சோமா கோஷ்டியினராலே நடத்தப்பட்ட வேள்வியிலே வேலாயுதத்தின் கடை எரிந்து சாம்பராகியது. பின்னர் எரிந்து கருகிய நிலையில் அவர் பிணம் மட்டுமே மீட்கப்பட்டது. அன்றிரவு அஸாருத்தீன் வீட்டிலே தங்கியதினால் கணபதி இந்தக் கோரத்திற்குச் சாட்சியம் சொல்ல உயிர் வாழ்ந்தான்.

'தகப்பனைத் தின்னி' யாகக் கணபதி பாணந்துறை பஸாரிலே நின்றான்! காரை நகரிலே வாழ்ந்த வேலாயுதம் குடும்பத்தின் முழுச் சுமையையும் தூக்க வேண்டிய பொறுப்பு கணபதியின் பிஞ்சுத் தோள் களிலே விழுந்ததை ஹாஜியார் உணர்ந்தார். வெறும் உபசார வார்த்தைகள் அவனுடைய சோகத்தைத் துடைக்கப் போதுமானவையல்ல. சாம்பலிலிருந்து மீளுயிர்ப்புப் பெற்ற ஃபொனிக்ஸ் பறவையின் இதிகாசத்தினை, அவர் பாணந்துறை மண்ணிலே நிசமாக்க உதவினார். வேலாயுதப்பிள்ளையின் கடை கணபதிப் பிள்ளை கடையாகச் செழிக்கலாயிற்று.

அலாவுத்தீன் ஹாஜியார் 'மௌத்'தான பின்னர் அஸாருத்தீன் தந்தையின் கடையைப் பொறுப் பேற்றான்.

ஒரு முழுச்சுற்று.

யோசனையின் சுழல்காற்று ஓய்ந்தது.

**ஆயிரம்** பேரைக் கொன்ற கொலைவெறியன் அங்குலிமாலாவை புத்தபகவான் மன்னித்தருளிய கதையைச் சித்திரித்த தோரணத்துடன் கூடிய 'வெசாக்' பண்டிகை இனிது நிறைவுற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனியும் ஓடியது. ஆடிப்பிறப்புக்கு வீட்டிலே நிற்கக்கூடிய தாக தன் யாழ்ப்பாணப் பயணத்தைத் திட்டமிட்டான் கணபதி. நொதும்பலாக இருந்த காணி ஒன்றின் பிரச்சினையும் இருந்தது. தங்கச்சி புருஷனின் வெளிநாடு செல்லும் ஆசையும் கிடப்பிலே கிடந்தது. எல்லாவற்றையும் கவனிக்க மூன்று நான்கு நாளாவது ஊரிலே தங்குவதென்று தீர்மானம். இவற்றை எல்லாம் சொல்லிக் கொண்டே, ஆயிஷா கையால் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

'புள்ள கணபதி. பயணத்துக்குப் பசிக்கும். நல்லா தின்னு மகன்' என்று கறிகளை அன்னை ஆயிஷா அள்ளி வைக்கும் பொழுது, அன்பின் உணர்ச்சிகளினால் திக்கு முக்காடினான். இந்தத் திக்கு முக்காடல் ஒரு கால் நூற்றாண்டு காலமாக நீடித்து வருவது அவனுக்கு ஆச்சரியமாகவும் இருந்தது. சாப்பாடு ஆயிற்று.

'அம்மா நான் போயிட்டு வாறன்' என்று அவன் விடைபெற்ற பொழுது, நோன்புப் பெருநாளுக்காகச் செய்த அச்சுப் பணியார கொக்கிஸ், பயத்துருண்டை, தொதல் ஆகியன வைத்துக் கட்டிய பார்ச'லைக் கொண்டு வந்து கொடுத்து, 'ஒங்கட உம்மாங்களுக்கு சலாம் சொல்லுங்க... எல்லாரையும் ஒரு தடவை கூட்டி வாங்க! அல்லாட காவல். போய் வாங்க மகன்' என்று பிரியாவிடை கொடுத்ததை அஸார்தீன் மனநிறைவுடன் பார்த்துக் கொண்டு நின்றான்.

'கணபதி மறக்காம பனங்கொட்ட கொண்டு வா...' என்று அவன் பகிடி பண்ணி வழியனுப்பி வைத்தான். கணபதி வடக்கே போகும் பொழுது, கித்துள் மா, கருப்பட்டியிலான பண்டங்கள், சீஸன் என்றால் மெங்கூஸ், ரம்புட்டான் பழங்கள் எடுத்துச் செல்வான். தெற்கே மீளும் பொழுது சீஸனைப் பொறுத்து பனக்கிழங்கு, மாம்பழம், இராசவள்ளிக்கிழங்கு ஆகியவற்றை அள்ளிக் கொண்டு வருவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஊருக்குப்** போன கணபதி ஒரு வாரமாகியும் திரும்ப வில்லை. இது அவனுடைய சுபாவத்துக்கு மாறானது. யாழ்ப்பாணத்திலே ராணுவக் கெடுபிடிகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளதாகவும் பேசப்பட்டது. 'போன புள்ளக்கி ஏதோ என்னவோ' என்று ஆயிஷா யோசிக்க ஆரம்பித்தாள்.

'எனக்கும் யோசினதான் உம்மா. எனக்குப் பேச் சஸுக்குப் போகவும் வழியில்ல... சோமா கண்ணுக் குள்ளான காசச் சொட்டுறான். ரெண்டு கடையையும் தனியாப் பாக்கிறது லேசான வேலயா? ஒரு கடையப் பூட்டினாயாவாரம் உடையும். கணபதி ஏன் சுணங்கி யெண்டு தெரியா உம்மா...? என்று அஸாருத்தீனும் கவலைப்பட்டான்.

'காலம் மிச்சம் கெட்ட காலம். வாற வழியில எனத் தியாலும் கலபலயோ தெரியா... அல்லாட கிரிபயால புள்ள கணபதி நல்ல சொகமா திரும்பிவரணும் ரப்பே!'

'வெள்ளிக்கெழம ராவக்கி ஹிளுறு தக்கியாக்குப் பாலும் பழமும் ரொட்டியும் சுட்டு நிய்யத்துக் கடனாக அனுப் பியன்...'

ஆயிஷா தலையில முக்காட்டை இழுத்துப் போட்டுப் பிரார்த்தித்தாள். தாயின் கண்களிலே கண்ணீர் துளிப்பதை அஸாருத்தீன் கவனித்தான். அந்த அன்பின் கசிவு அவன் மனசைத்தொட்டது. அவனும் பிரார்த்தித் துக் கொண்டான். அவர்களுடைய பிராத்தனைக்குக் கைமேலே பலன் கிடைத்ததுபோல, 'அம்மா' என்று கணபதியின் குரல் கேட்டது. குரலைத் தொடர்ந்து அவன் தோன்றினான்.

'ஏன் சொனங்கின...' என்று ஆயிஷா ஒரு வகை அன்பின் உரிமையும் கண்டிப்பும் கலந்த தொனியிலே கேட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அம்மா யாழ்ப்பாணம் இப்ப பழைய யாழ்ப்பாணம் போலையே கிடக்குது? எண்டைக்கு யாழ்ப்பாணம் லைபிறறியை எரிச்சாங்களோ, அண்டைக்குப் பிடிச்ச சனியன்தான். இப்ப ஆமிக்காரன் நினைக்கிறதுதானே சட்டம். குட்டிமணியையும் தங்கத்துரையையும் பிடிச்ச தோடை, யாழ்ப்பாணம் முழுசையும் பிடிச்சுப் போட்டம் எண்ட கெப்பரோடைதான் ஆமிக்காரன்கள் நடக்கிறாங்கள். பெண் புரசுகள் றோட்டாலை நடக்கேலாது. அட, அறுவான்கள். யூனிவேர்ஸிட்டியிலை படிக்கிற ரெண்டு பெம்பிள்ளைப் பிள்ளையளைத் தங்கடை ஜீப்பிலை ஏத்திக் கொண்டு போட்டாங்களாம். அவங்களை அலங்கோலப்படுத்தினாங்களாம். அட அறுவான்களே பொடியளோடை சண்டை எண்டால், அவங்களோடை சண்டைபிடிக்கிறது தானே?குமர் குஞ்சுகளை உப்பிடிக் கெடுக்கிறதே...? பலாலியிலை இருந்து யாழ்ப்பாணம் வாற ராணுவந்தான் உதைச் செய்திருப்பாங்கள் எண்டு பொடியங்கள் அறிஞ்சிட்டாங்கள். அவங்கள் பொட்டையளை எந்த இடத்திலை வைச்சு பைபோர்ஸாக ஏத்தினாங்களோ, அந்த இடத்திலை வைச்சு பொம்ஸ் எறிஞ்சு அவங்களைக் கொண்டிருக்கிறாங்கள். பதின்மூண்டு ஆமிக்காரன் அந்த இடத்திலேயே குளோஸ்... இப்ப அங்கை ஆமிக்காரன் வெறி பிடிச்சுத்தான் திரிவான்கள். அவன் மாறி இவன், இவன் மாறி அவன் எண்டு இது தொடர்ந்து நடக்கத்தான் போகுது... பொடியங்களும் லேசிலை வுட்டுக் குடுக்க மாட்டாங்கள் எண்டுதான் அங்கினை கதைக்கினம்...'

இப்படிச் சகட்டு மேனிக்குப் பேசுவது கணபதியின் சுபாவமே இல்லை. யாழ்ப்பாணத்திலே அவன் கண்டும் கேட்டும் வந்தவை அவன் மனசை நிரம்பவும் பாதித்திருந்தது என்பது அவன் பேச்சிலே விளங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பயந்தானே?... எனக்கே பயம்... பெத்தவங்களுக்கு கல்பு எரியாமல் இருக்குமா?' என்று ஆயிஷா தலை யாட்டிக் கொண்டிருந்தாள்.

யாழ்ப்பாணத்திலே பதின்மூன்று ராணுவ வீரர்கள் கொல்லப்பட்ட நிகழ்ச்சியைச் சிங்களப் பத்திரிகைகள் பெரிதுபடுத்தி எழுதியிருந்தன. சுதந்திர இலங்கையின் ராணுவ வரலாற்றிலே இவ்வளவு பெருந்தொகையான வர்கள் ஓர் இடத்தில் வைத்துக் கொல்லப்பட்டது இதுவே முதல் தடவை. சிங்கள ஆதிக்க மேலாண் மையை 'ஒழுங்கா மூத்திரம் பெய்யத் தெரியாத பொடியள்' பரிகசிக்க வைத்துவிட்டார்களே என்கிற போல ஓர் ஆத்திரத்தையும் ஆவேசத்தையும் கிளப்பக் கூடியதான பிரசாரம் மேற்கொள்ளப் பட்டுள்ளதையும் அஸாருத்தீன் சாடைமாடையாகக் கேள்விப்பட்டிருந் தான். 'இறந்துபட்ட அந்த இராணுவ வீரர்களுக்கு கொழும்பில் ராணுவ மரியாதைகளுடன் நல்லடக்கம் செய்யப்படும்' என்று அரசு பிரகடனப்படுத்தி, சிங்கள வீரத்துக்கு ஒரு மகிமையும் கற்பிக்க முன் வந்தது.

தெற்கிலே உருவாகிவரும் மனக்கோலங்கள் வேறு.

வடக்கிலே ஏற்பட்டு வரும் சிந்தனை மாற்றங்களைப் பிரதிபலித்துக் கணபதி பேசினான்.

இவற்றின் மத்தியிலே அஸாருத்தீன் எதையும் பெரிது படுத்தாமல், யதார்த்தமாக நடந்து கொள்வதுதான் செய்யத் தக்கது என்று தீர்மானித்தான்.

'கணபதி நீ கடையத் தொறந்து யாவாரத்தப் பாரு. நான் கொழும்புக்குப் போய் பேச்சஸ் பண்ணிக் கொண்டு வாறன்'

'கொழும்பிலை கொஞ்சம் பரபரத்தான் இருந்தது. ஆக்கள் கும்பல் கும்பலா நிண்டு குசுகுசுக்கிறதைப் பார்த்தால், அவ்வளவு நல்லது போலத் தெரியேல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் டாக்ஸியைப் பிடிச்சுக் கொண்டுதான் வந்து சேர்ந்தனான்...' என்று அவன் பயணத்தைத் தடுக்க விரும்பியவனைப் போல கணபதி இழுத்தான்.

'ஓ, குழப்பம் ஏதாவது வர முன்னுக்கு சாமான்கள கொண்டாந்து ஸ்டொக் பண்ணிக் கொள்ளோனும். நான் வாரன் உம்மா...'

'அல்லாட காவல்...போய் வாங்க மகன்'

**அஸாருத்தீன்** ஏறிய பஸ் காலியாகத்தான் கிடந்தது. அங்கொன்றும் இங்கொன்றுமாக நாலைந்து பேரே பஸ்ஸுக்குள் இருந்தனர். வதந்திகளைக் கேள்விப் பட்டுப் பயந்து, மக்கள் வீட்டோடு இருக்கத் தீர்மானித் திருக்கலாம் என்று அவன் சகஜமாக நினைத்துக் கொண்டான். பஸ் கொழும்பை நெருங்க நெருங்க, விஷயங்கள் தான் நினைத்ததுபோல இல்லை என்பதை உணரலானான்.

பஸ்ஸிருந்து இறங்கிய பொழுதான் அவதானித்தான், புறக்கோட்டை பஸ்நிலையம் வழமைக்கு மாறாக, இரைச்சல் இழந்து, ஓட்டமாக விரைவு பயிலும் பயணி களுமாக இருக்கக் கண்டான்.

சந்தியில், அரசமரத்தின் கீழ், ஆயிரம் பேரைக் கொன்ற கொலை வெறியன் அங்குலிமாலாவை மன்னித்தருளிய புத்த பகவான் சிலை வடிவில் அமர்ந்திருந்தார்.

'ஊர் அடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு விட்ட' தாகவும் பேசிக் கொண்டார்கள். மூன்று நான்கு நாட்களாகவே பேச்சேஸ் பற்றியே கவலைப்பட்டுக் கொண்டிருந்த படியால், ஏனைய விஷயங்களுக்கு அவன் முன்னுரிமை கொடுத்து யோசிக்கவில்லை. கணபதியின் எச்சரிக் கையை உதாசீனப்படுத்தியது தப்பு என்கிற குற்ற உணர்வு அவனை வதைத்தது. தான் மிகவும் சுறுசுறுப் பாக இயக்க வேண்டிய அவசரத்தின் முழுப் பரிமாண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும் அவனுக்குப் புலப்பட்டது. மெயின் வீதிகளைத் தவிர்த்து பின் தெருக்களிலே புகுந்து நுழைந்து ஓட்டமும் நடையுமாக வாழைத்தோட்டம் வந்து சேர்ந்தான். புரோக்கர் அஸீஸ் காக்காவின் வீட்டை அடைந்து, ஒரு கிளாஸ் தண்ணீர் குடித்த பிறகுதான் வாயில் ஏற்பட்ட உலர்வும், அடி நாக்கில் ஏற்பட்ட கரிப்பும் குறைந்தன.

தமது வீட்டிலே தங்கி, ஊரங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட பிறகு பயணம் வைச்சுக் கொள்ளுவதுதான் நல்லது என்று அஸீஸ் காக்கா சொன்னார். இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பத்திலே உம்மாவுக்கும் கணபதிக்கும்துணையாகவும் பாதுகாப்பாகவும் வீட்டுக்கு உடனே திரும்ப வேண்டும் என்று அஸாருதீன் சொன்னான். விரும்பியதை எப்படியும் அடைய வேண்டும் என்கின்ற குழந்தையைப் போல அவன் முரண்டு பிடிப்பதைக் கண்டு அஸீஸ் காக்கா நெகிழ்ந்தார். அதற்கு மேல் அவர் எதையும் வற்புறுத்தவில்லை.

அஸீஸ் காக்கா வழைத்தோட்டம் பகுதியில் மட்டுமல்ல, கொழும்பு மத்திய தொகுதியிலேயே அரசியல் செல்வாக்குப் பெற்ற பிரமுகராகவும் திகழ்ந்தார். ஏ. ஈ. குணசிங்ஹாவின் தொழிற்கட்சித் தொண்டர்களாக, தற்போதைய பிரதமர் பிரேமதாஸாவும் அவரும் ஒரே வாளிக் கிணற்றிலே குளித்து, உடம்பிலுள்ள ஊத்தைகளைப் பிரட்டியவாறே அரசியல் பேசினார்கள் என்றும் சொல்வார்கள். பிரேமதாஸா கொழும்பு உதவி மேயராக இருந்த காலத்தில், கொழும்பு முனிசிப்பல் தேர்தலிலே போட்டியிட்டு அஸீஸ் காக்கா எம். எம். ஸியாகவும் இருந்திருக்கிறார். சென்ற தேர்தலிலே பிரேமதாஸாவின் தேர்தல் ஏஜண்டாக அஸிஸ்காக்கா வாழைத்தோட்டம், புதுக்கடைப் பகுதிகளிலே உழைத்தபடியாற்றான் அவர் முதலாவது எம். பி.யாக வெற்றியீட்டினார் என்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசிக் கொண்டார்கள். மதச் சார்புகளுக்கு வளைந்து கொடுக்காமல், நட்புக்கு முன்னுரிமை கொடுத்து அவர் செயற்பட்டார் என்பது யாராலும் ஆட்சேபிக்கப்படவில்லை.

அத்தகைய அஸிஸ் காக்கா தமது செல்வாக்கினைப் பிரயோகித்தார்.

செல்வாக்குகளுக்கு மேலாகவும் அஸாருத்தீன் காசை விசுக்கிச் செலவழிக்கவும் தயாராக இருந்தான். ஒன்றுக்கு நான்கு மடங்கு ஹயருக்கு 'டெக்ஸி' அமர்த்தப்பட்டது. அதன் முன்னால் வெள்ளைக்கொடி ஒன்று பறக்கவிடப்பட்டது. அவசர சிகிச்சைக்குக் கொண்டு வந்த நோயாளியைத் திருப்பிக் கொண்டு போவதற்கான அனுமதிப் பத்திரம் வாழைத்தோட்டம் பொலீஸில் பெறப்பட்டது.

கண்ணாஸ்பத்நரி கடந்து, தும்முல்ல சந்திதாண்டி டிக்மன் வீதி ஊடாக டெக்ஸி காலி வீதியை அடைந்த பொழுதுதான், கொழும்பில் உருவாக்கப்பட்டிருந்த அவலங்களின் முழு வடிவத்தையும் அஸாருத்தீன் கண்ணாற் கண்டான்.

இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் ஒப்புயர்வற்ற தர்மிஷ்ட ஜனநாயகப் பண்புகளைப் பாதுகாக்க, வடக்கே தோன்றியுள்ள பயங்கரவாதத்தினைப் பூண்டோடு கல்லியெறிந்து, உதவி நன்கொடை செய்யும் நாடுகளின் நன்மதிப்பினைப் பெறவேண்டிய அவசியத்தை அதி உத்தம - அதிமேன்மையுள்ள, நிறைவேற்று அதிகாரமுள்ள முதலாவது ஜனாதிபதி ஜூலியஸ் ரிச்சட் ஜெயவர்த்தனா அநேக சந்தர்ப்பங்களிலே மக்களுக்கு நினைவுபடுத்தியிருக்கிறார். அவர் மிகவும் அநுபவம் பெற்ற ராஜதந்திரியும். எனவே, 'தமிழ்ப் பிரச்சினைக்கு அவர் ஓர் இறுதித் தீர்வினை' முன்வைக்க வல்லவர் என்கிற நம்பிக்கையும் மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியிலே இருந்தது. அந்த இறுதித் தீர்வினைச் செயற்படுத்தும் உரிமையைத் தமது கட்சியின் தொழிற் சங்கத் தலைவர் சிறில் மத்தியூவிடம் ஒப்படைத்தாரா அல்லது அவராகவே அந்த உரிமையை எடுத்துக் கொண்டாரா என்கிற சர்ச்சைக்கு இலேசிலே தீர்வு காண ஏலாது. ஆனால், அமைச்சர் சிறில் மத்தியூவின் முகாமையிலே இறுதித் தீர்வுக்கான நடவடிக்கைகள் காலி வீதியிலே எடுக்கப்பட்டுக் கொண்டிருப்பதை அஸாருத்தீன் அப்பொழுது தன் கண்ணாரக் கண்டான். சீருடை தரித்த ஆசாமிகள்—அவர்கள் பொலீஸ்காரர் களாகவும் இருக்கலாம், ராணுவத்தினராகவும் இருக்க லாம்; அவர்களே ஊரடங்குச் சட்டத்தை அமல் செய்யும் அதிகாரிகள்—கைகளிலே சில தஸ்தாவேஜுகளுடன் காணப்பட்டார்கள். அவற்றிலிருந்து தமிழர்களுடைய வதிவிடங்களும், அவர்களுடைய சொத்துக்களும் பிசகில் லாமல் அடையாளம் காணப்படுகின்றன.

அன்று ஆயிரம் பேரைக் கொன்ற கொலை வெறியின் அங்குலிமாலாவை மன்னித்தருளினார் புத்தபகவான்.

புத்தபகவானுடைய பெருமைகளை உலகுள்ளளவும் நிலைக்கச் செய்வதற்காகப் படைக்கப்பட்ட சிங்கள இனத்தின் உயிர்களையும் உடமைகளையும் காப்பாற்று தல் வேண்டும் என்கிற காருண்யத்திற்கு அக்கறையான முன்னுரிமை இன்று வழங்கப்பட்டிருக்கிறது.

தீயணைப்புப் படையின் வாகனங்கள், தீவைப்புச் சடங்குகளுக்குத் தலைமை தாங்கும் அற்புதக் கோலம்! இந்த அதிசயங்களைச் சாதிக்கும் விவேகம் தனிச் சிங்களத் தூய்மையின் பரமார்த்த உபாசகர்களின் மூளைகளிலேதான் உதயமாகும் என்பது போலவும்... தீவைப்புக் கோஷ்டியினருக்கு உபகாரம் செய்யக்கருதி மின்சார இலாகாவுக்குச் சொந்தமான Cater Pillar களும் இந்தச் சங்காரக் கூத்திலே இணைந்துள்ளன. டெக்ஸி ஓடிக் கொண்டிருக்கிறது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கில் பம்பலப்பிட்டி எரிந்து கொண்டிருக்கிறது. மேலே மேலே கரும்புகைகளே முகில்களாகப் பரம்பு கின்றன. அந்தப் புகைப்பட்டங்களுக்கு வால் தீட்டியும், தீ நாக்குகள் உயரமாகவும் பரவலாகவும் சங்காரத் திருத்தாண்டவத்தில் ஈடுபட்டுள்ளன.

தெற்கில், வெள்ளவத்தையின் ஊடாக டெக்ஸி ஓடிக் கொண்டிருக்கிறது...

ஊர் அடங்குச் சட்டமா? வெசாக் திருவிழாக் கூட்டமா? வீதி ஓரத்திலே நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களிலே தமிழர் வீடுகளிலே 'மண்கொள்ளை' யடிக்கப்பட்ட சொத்துக்கள் அவசர அவசரமாக ஏற்றப்படுகின்றன. அந்த வாகனங்களிலே பல எந்த Curfew order ஐயும் மீறிச் செல்ல அதிகாரம் பெற்ற அரச வாகனங்கள்... வெள்ளவத்தையிலும் தீ பரவத்துவங்கிவிட்டது. அதிலே வேகும் பிணங்களின் நாற்றம் காற்றிலே கலந்துள்ளது போலவும்.

இந்தப் பேரழிவுக்கு அரச வசதிகள் அனைத்தையும் ஒருங்கிணைப்பதற்கு வாரக்கணக்கிலே திட்டமிடப்பட்டிருக்க வேண்டும். ஆண்டுக் கணக்கிலே ஒருமுகப்படுத்தப் பட்ட வெறியை, மாதக் கணக்கிலே பிரகடனப்படுத்தப் பட்ட இறுதித் தீர்வை, செயற்படுத்தத் திட்டமிடுதலில் சில வாரங்கள் ஒரு பொருட்டா? ஆனால், பதின்மூன்று போர் வீரர்களுடைய சாவுக்குப் பொறுக்கமாட்டாது, சிங்கள இனம் சடுதியாகவும் மூர்க்கமாகவும் ஆண்மை கொண்டு எழுந்தது என்று ஒரு சாட்டினைப் பொருத்து வதற்கு மகா புத்திசாலித்தனம் வேண்டும். அதுமட்டும் போதாது. அதிர்ஷ்டம் எப்பொழுதும் சிங்களவர்களைப் பார்த்தே புன்னகைத்துள்ளது...

அவர்களைக் காவல் செய்யும் புத்தபெருமான், ஆயிரம் பேரைக் கொன்ற அங்குலிமாலாவை மன்னித்தருளிய மகாத்மா.



UNIVERSITY OF PERADENIYA
17-2-1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அவலங்களுக்குச் சாட்சியாய் இருக்கும் ஆக்கினையிலிருந்து விடுபடுவதற்கேனும், டெக்ஸி வேகமாகச் சென்று கொழும்பு எல்லையைக் கடந்திட வேண்டுமென்று அஸாருத்தீன் வேண்டிக் கொண்டான்.

தெஹிவலைப் பாலத்தைத் தாண்டியதும், நிம்மதியாக மூச்சு விட்டு இரண்டு பக்கமும் பார்த்தான். அங்கும் அழிவின் தூதுவர்கள் திரண்டுகொண்டிருப்பதைக் கண்டு துணுக்குற்றான்.

டெக்ஸி வீட்டுக்கு முன்னால் போய் நின்றதும், மகா பயங்கரமான தீய கனவிலிருந்து விழித் தெழுவது போன்ற உணர்வு அவனுக்கு ஏற்பட்டது. அவன் இறங்கியதுமே, சொல்லிக் கொள்ளாமல் டெக்ஸி ஓடிமறைந்தது. நான்கு மடங்கு ஹயர் தன் உயிருக்கு ஈடு அல்ல என்கிற பயம் அவனை அப்படி விரட்டியடித்திருக்கக் கூடும்.

வீட்டிற்குள் நுழைந்ததும், 'உம்மா கணபதி எங்கே?' என்றுதான் அஸாருத்தீன் கேட்டான்.

'எங்கள் கடைய காப்பாத்த வேணும் எண்டு ஓடினான் மகன்.'

'நீங்கள் அவனைத் தடுக்கவில்லையா உம்மா?'

'நான் சொன்னன். எங்கள் கடை மண்ணாப் போனாலும் காரியமில்ல. நீ பத்திரமா ஊட்டில இரு எண்டு சொன்னன். அவன் ஏண்ட பேச்சையும் தட்டிட்டு ஓடினான்...'

'உம்மா கொழும்பே நாசம்...அவனை நான் காப்பாத்த வேணும்...'

'ஓடிப் பெய்த்து அவனைக் கூட்டிவா மகன்...'

அஸாருத்தீன் தொப்பியையும் ஜூப்பாவையும் எடுத்துச் சுற்றிக் கொண்டு சைக்கிளை கேற்றுக்கு வெளியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தள்ளி, அது உருண்டோடும் வேகத்திலேயே அதில் தாவி ஏறி, வேகமாக மிதித்தான்.

காலி வீதியில்—அதுவே பஸாரின் பிரதான வீதி—அங்கும் இங்கும் தீவிர குழுக்கள் கூடி நின்றன. ஏதோ ஒரு சமிக்ஞைக்காகக் காத்து நிற்பது போலவும். மகா ஆபத்து உருவாகிக் கொண்டிருப்பதை அவன் சட்டென்று உணர்ந்தான். சைக்கிள் கடையின் பின்புறத்துக்கு நேராகச் சென்று, அங்கே நின்ற வாழை மரங்களுடன் மோதி நின்றது.

கடையின் பின்பக்கக் கதவை அஸாருத்தீன் தட்டினான்.

அமைதி. கதவு திறக்கப்படவில்லை.

'கணபதி...நான் அஸார்தீன். கதவைத் திற...' என்று குரல் கொடுத்தான். குரல் எழுப்பிச் சத்தம் போடவும் பயம். நல்லவேளை. குரலை நிதானித்து, கதவு இடுக்கினால் பார்த்து உறுதிப்படுத்திக் கொண்டு, கணபதி மெதுவாகக் கதவைத் திறந்தான்.

'இந்தா, இத உடுத்துக் கொண்டு வா. வீட்டுக்குப் போவம்...' ஒவ்வொரு நிமிஷ தாமதமும் எதிரிகளுக்கான வாய்ப்பினை அதிகரிக்கும் என்பதை அஸாருத்தீன் உணர்ந்திருந்தான்.

'இல்லை...உன் கடைச் சாமான்களைக் கொள்ளை அடிக்காமல் இருக்க, நான் இருந்து பாதுகாக்கிறேன்...'

'முட்டாள்தனமாகக் கதைக்காதே. உடமை போனால் தேடிக் கொள்ளலாம் உயிர் போனால் திரும்பி வருமா? வா போவம்...'

தொப்பியைப் போட்டுத் தயங்கிக் கொண்டு நின்ற கணபதியை 'பைபோர்ஸா'க இழுத்து சைக்கிள் பாரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றிக் கொண்டு, காலி வீதியை வேகமாகக் குறுக் கறுத்துக் கொண்டு சைக்கிளை ஓட்டினான்.

எங்கிருந்துதான் சோமா இவர்களை மோப்பம் பிடித்தான் என்பது தெரியாது.

'தம்யா தெமலாவ அந்தரப்பங்' என்று கத்திக் கொண்டே, கிறீஸ் கத்தியுடன் சோமா அவர்களை நோக்கிப் பாய்ந்து வந்தான்.

சைக்கிளின் வேகத்தை அதிகரிக்க அஸாருத்தீன் பலங்கொண்ட மட்டும் மிதித்தான். வீட்டுக்குச் செல்லும் கிறவல் றோட்டிலே அவன் சைக்கிள் பாய்ந்து ஓடியது.

வேறு ஒரு சைக்கிளைத் தட்டிப் பறித்து, அதிலே ஏறி, சோமா அவர்களைத் துரத்தினான். சோமாவைத் தொடர்ந்து, அவனுக்கு 'ஸப்போட்'டாகக் கூடி யிருந்த காடைக் கூட்டமும் பின் தொடர்ந்து துரத்திக் கொண்டு வந்தது.

வீட்டின் 'கேற்' சாத்திக் கிடந்தது. இந்த அவசரங் களுக்கிடையில் சைக்கிளின் 'பிரேக்' கட்டைகள் தெறித்துப் பறந்து விட்டதை அப்பொழுதுதான் அஸாருத்தீன் உணர்ந்தான். கால் பிரேக் போட்டு அதனை நிறுத்த முயலுவதற்கிடையில், அந்தச் சைக்கிள் கேற்றுடன் மோதி, கிறவல் றோட்டிலே விழுந்தது.

இதற்கிடையில் மதில் ஓரத்திலே போய் மோதும்படி சைக்கிளை நகர விட்டு இறங்கிய சோமா, விழுந்து கிடந்த உருவங்களின் ஒன்றின் முதுகிலே தன் கிறீஸ் கத்தியைப் பாய்ச்சினான்.

'கணபதி, என்னை சோமா குத்திப் பெய்த்தான்...நீ வீட்டுக்குள் ஓடு...' என்று அஸாருத்தீன் கத்தினான். மகாசடுதியாக கணபதிக்குள் ஒரு அதிமாற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ந்தது. கணபதி அச்சம் துறந்தான். எதற்கும் துணிந்த நிதானத்துடன் எழுந்து நின்றான். நிகழ்ச்சி களைப் பூதக் கண்ணாடிக்குள் பார்ப்பது போலத் தெரிவாகத் தரிசித்தான்.

அஸாருத்தீன் முதுகிலே சொருக்கப்பட்டிருந்த கத்தியை இழுத்து எடுப்பதிலேதான் சோமா குறியாக இருந் தான். அவன் எதிர்பார்க்காத சடுதியிலே, தன்னுடைய முழு உடற்பலத்தையும் தனது வலக் காலிலே ஒன்று குவித்து, அவனுடைய ஆண் உடம்பும் விதைகளும் தெறித்து விழக்கூடிய மூர்க்கத்தில், அவனுடைய மர்ம உறுப்பிலே எட்டி உதைத்தான். இத்தாக்குதலைச் சற்றும் எதிர்பார்க்காத சோமா, அந்த உதையின் உக்கிரத்தால் றோட்டிலே சுருண்டு வீழ்ந்தான். மின்னல் வேகத்திலே, அஸாருத்தீன் முதுகிலே சொருகப்பட்டிருந்த கிறீஸ் கத்தியைப் பிடுங்கி, விழுந்து கிடந்த சோமாவின் நெஞ்சிலே குத்தினான். அவன் நெஞ்சிலிருந்து பீறிட்டெழுந்த ரத்தம் கணபதி யின் முகத்திலும் சிதறியது.

தூரத்தில் ஓடிவந்த மிகுதிக் கூட்டத்தையும் எதிர் கொள்ளத் தயாரான மோஸ்தரில், கையில் கிறீஸ் கத்தியுடன் கணபதி நின்றான்.

'மே பள்ள கணேபதி, மூதமாய் கொட்டியோ, ஒக்கம அறங்காவே' நாலு திக்கும் அதிரும்படி சோமா மரண ஓலம் எழுப்பினான்.

சோமாவுக்கு பின்னர் உற்சாகமாக ஓடிவந்த காடைக் கூட்டம் பின்வாங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2
# முடிப்பு

**வாசகனே,**

கதைக்கு ஒரு முடிவு எழுதுவது ஒரு சம்பிரதாயமாகவும் சடங்காகவும் நிலைத்து விட்டது. இந்தச் சடங்குக்கு இசைந்தொழுகுதல், கதைஞனுக்குக் கதை சொல்லும் கலையிலுள்ள வாலாயத்தினை மட்டிட்டுக் கொள்வதற்கு உனக்கு வசதியாக இருக்கும் என்பது உன் தளம். அதனைப் பிரீதி செய்வதானால்...

**மீண்டும்** ஒரு வைசாக பூரணை வரும். மொஹிதீன் பேக்கின் ஒலி நாடா ஒலிக்கும்.

ஆயிரம் பேரைக் கொன்ற கொலைவெறியன் அங்குலிமாலாவை மன்னித்தருளிய புத்தபகவானின் ஓவியங்கள் தோரணங்களை அலங்கரிக்கும்!

உனக்குத் திருப்தியா? எனக்குத் திருப்தியில்லை. இந்தத் கதையை எழுதும் பொழுது கதை சொல்லும் Niceties களையும் Craftsmanshipயும் என் சேதனையிலே நான் இருந்திக் கொள்ளவில்லை. கதை சொல்லும் எத்தனத்துக்கு அப்பாற்பட, உண்மைகள் பற்றிய ஒரு தேடலிலே இங்கு ஈடுபட்டேன். அந்தத் தேடல், கதை சொல்லும் திறனுக்கு மேலானது என்பது என் தளம். தேடலுக்குத் தோதான ஒரு முடிவுதான் எனக்குத் திருப்தி தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிணந்** தின்னும் கழுதைப் புலிகள், வேங்கைப் புலியை நேருக்கு நேராக எதிர்த்ததாக இல்லை, வரலாறு!

இதில் முக்கியம் என்ன வென்றால், வரலாறு என்கிற சொல்லிலே முடிவு அமைவதுதான். வரலாற்றுக் கதைகள் 'இணக்கு' பவர்களுக்குத்தான் கதை சொல்லும் நுணுக்கம் துணைக்கு வரவேண்டும். பதின்மூன்று இராணுவ வீரர்களுடைய கொலைபற்றிக் கணபதி தன் உரையாடலிலே (பக்கம் 259) குறிப்பிடுகின்றான் அல்லவா? யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் பின்வீதி, கிழக்குப் பக்கத்தில் நீண்டும் நெளிந்தும் பலாலி வீதியிலே ஏறுகின்றது. அதன் முகப்பில், இடப் பக்கத்தில், நடப்பட்ட தண்டவாள நறுக்கிலே ஒரு தபால்பெட்டி தொங்கிக் கொண்டிருக்கிறது. அதனால் அது தபாற் பெட்டிச் சந்தி. அதன் அயலிலேதான், 1983 ஆம் ஆண்டு, ஜூலை 23 ஆம் திகதி, நள்ளிரவு தாண்டிய வேளையிலே, யாழ்ப்பாணத்தின் மானம் காக்கும் இந்த 'சூரசங்காரம்' நடந்ததாகச் சொல்லுகிறார்கள். அப்பொழுது நான் நைஜீரியாவில் வாழ்ந்து கொண்டிருந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13

**கதை**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'ஈச்சேரி'ல்** 'விழுந்த' சந்திரசேகரம் கோழி உறக்கத்தை வாலாயம் பண்ணி, அதனைச் சுகிக்கின்றார். யாழ்தேவியிலே பகற் பயணம். அகோர வெயில். காட்டு வெக்கை. இத்தனைக்கும் மேலாகச் சிவசம்புச் சாப்பாட்டுக்கடைச் சோற்றைக் கொறித்தார். மனசார ஒரு மயக்கம். சாய்வு நாற்காலியிற் தாம் தூங்குவதான நினைப்பே அவருக்கு யாரோ உடம்பைப் பிடித்து விட்டது போன்ற சுகத்தைக் கொடுத்தது.

வள்ளிசாக மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர், அவருடைய குடும்பம் தாயடி வீட்டிலே வந்திருக்கிறது. பெத்துப் பெருகிய குடும்பம். அவருடைய மனைவி சரஸ்வதி முதல் ஐந்து பிள்ளைகளையும் பெட்டைக் குஞ்சுகளாகவே பீச்சிவிட்டாள். அரிய விரதங்கள் பிடித்து, இருக்காத தவம் எல்லாம் கிடந்து, கண்ட கண்ட தெய்வங்களை யெல்லாம் கையெடுத்துக் கும்பிட்டது வீண்போகவில்லை. சோட்டை தீர்க்க ஆறாம் காலாகப் பொடியன் பிறந்தான். சந்தான விருத்தியில் அவனே மங்களமாக அமைந்தான்.

பயணக் களைப்பைப் பாராட்டாமல், சரஸ்வதியும் புத்திரிகளும் வீட்டைத் துப்பரவு செய்யும் உழவாரத் திருப்பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

சந்திரசேகரத்தைச் சயன நங்கை முற்றாகச் சரித்து விடவும் இல்லை. இமைகளைப் பிளந்து காங்கை ஏறுவதான கூச்சத்தில், அவருடைய கண்களின் இமைக் கதவுகள் சற்றே அகலும். இமைகளின் ஈயக் குண்டுகளைச் சுமக்க இயலாது என்கிற வாக்கில் மீண்டும் மூடிக்கொள்ளும். இமைகள் இலேசாகத் தோன்றுகின்றன. முற்றத்தில் மாமரங்கள் செழுங் கிளைகள் பரப்பியிருக்கின்றன. அவை வெக்கையை உறிஞ்சுவதினாலேதான் இத்தகைய இதம் விடிந்திருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது என்பதை அநுமானிக்க முடிகிறது. மாமரங்களுக்கு அப்பால் 'கேற்' தெரிகிறது. அதிலே கறல் மண்டிக் கிடக்கிறது.

கேற்றிலே நிலைகுத்திய விழிகளைப் பிய்த்தெடுத்து, இடப்பக்கமாக மேய விடுகிறார். மதிலில் பாசி சடைத்து நுதம்பி வழிகின்றது. சுவரின் வெடிப்பிலே ஆலங்கன்று ஒன்று வேர் விட்டு, கொழுத்து வளருகின்றது. 'உதை உப்பிடியே வளரவிட்டால் சுவருக்கு மோசம் தரும்!' —ஐயரின் வளவைச் சுற்று மதில் வளவு என்றுதான் சொல்வார்கள். அந்த எல்லையைப் பற்றியும் அறிக்கையைப் பற்றியும் கவலையில்லை. வலப்பக்கமும், கொல்லையும் வேலியும். வலப்புற வேலியிலே ஊரும் அவருடைய பார்வை தரிக்கின்றது. அந்த வேலி கறையான் தின்று இறந்து கிடக்கின்றது. கோழி ஒன்றும் அதன் குஞ்சுகளும் ஒரே சுரத்தொனியைச் சாதகஞ் செய்துகொண்டு, வேலியிலுள்ள கறையான்களை மேய்கின்றன... பூரணத்திற்கு வேலியைப்பற்றி என்ன கவலை? சோட்டைக்குத் தானும் அவளுக்கு ஒரு பெட்டைக்குஞ்சு பிறக்கவில்லை. சீமாட்டிக்கு எல்லாம் கடுவன்கள்.

வேலியையும் தாண்டி சேகரத்தாரின் மனம் அலைமோதுகின்றது.

**முப்புரம்** எரிக்க முனையும் முக்கண்ணனாகச் சாம்ப சிவத்தார் காட்சியளிக்கின்றார். சொற்கள் அனற்குழம்பை அள்ளிச் சொரிகின்றன.

''உந்த வேலியைப் பிரிச்செறிஞ்சு போட்டு மதிள்தான் கட்டவேணும். உவளவை கோயில் கிணத்திலைபோய்த் தண்ணி அள்ளட்டுமன்...ம்.. பக்கத்திலை பாவங்கள்—ஏழை பாளையள்—வந்து தண்ணி அள்ளட்டும், போகட்டும் வரட்டும் எண்டு ஒரு பொட்டு விட்டால்,

தட்டுவாணியள் மாப்பிள்ளையல்லோ கொள்ளப்பாக் கிறாளவை...''

'பொட்டு' மேவப்பட்டு, பனையுயரத்தைஎட்டமுனைந்த புதுவேலி சாம்பசிவத்தாரின் வைராக்கியத்தைப் பறை கொட்டியது. பூரணத்தைப் பார்க்க முடியாது, தூண்டிற் புழுவின் ஆக்கினையைத் தமதாக்கிச் சந்திரசேகரம் சாம்பினான்.

அழகு என்ற சொல்லின் அர்த்தப் பொலிவு முழுவதை யும் தனதாக்கி எழில் பிழிந்தவள் பூரணம். இடையை இறுக்கிச் சுருக்கும் பாவடையோடும், குரும்பை மார்பை அமுக்கி விறைத்த சட்டையோடும், சருவக் குடம் சுமந்து, அவள் தன் வீட்டிற்கும் அயல் வீட்டுக் கிணற்றுக்கும் நடைபயில... அந்த நடைபயிலும் நர்த்தனக் கால்களிலே தன் உள்ளத்தை வெள்ளிப் பாதசரமாகத் தொங்கவிட்டு...

விழி மொழிக் கொஞ்சல் முற்ற முற்ற, கிணற்றடி கமுக மரவட்டில் காதற் கடிதங்கள் கனிந்து தொங்கத் தொடங்கின. கமுகமரம் சமத்தான தபாற்காரன் தான். ஆனால் காற்றும் காகமும் செய்த திருக்கூத்தால், பூரணத்தின் கடிதம் ஒன்று சாம்பசிவத்தாரின் கை களிலே சிக்கியது. உறவு பிளவுற்றது; வேலி பனை யுயரத்தை எட்ட முனைகிறது!

வேரோடி விளாத்தி முளைத்தாலும் தாய்வழி தப்பாது என்று சொல்வார்கள். தாய்வழியில், பூரணம் சந்திர சேகரத்தின் மனைவியாக வாழத்தக்க உறவு முறை. ஆசையின் தொங்கு தாவல்கள், பூரணத்தை அடை வதற்குத் தாயின் ஆதரவைத் திரட்டும் நள்ளல். இரவுச் சாப்பாட்டின் போது இதைப்பற்றி சேகரம் மெதுவாகப் பிரஸ்தாபிக்கிறான். சித்திரைப் புழுக்கத் திற்காக விறாந்தையில் விசிறியுடனிருந்த சாம்பசிவத் தாரின் செவிகளிலே அந்த உரையாடலின் சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நறுக்குகள் விழுந்து விடுகின்றன. காலம் அப்பிய சாம்பற் புழுதியை உதிர்த்துக் கொண்டு, கோபம் அம்மணமான அக்கினி உடம்பைக் காட்டலாயிற்று.

''உங்கை என்ன காத்தையைக்... கதையள்? இப்பவே தாய்க்கும் மேனுக்கும் சொல்லிப்போட்டன். அந்த எடுப்பை மறந்து போடுங்கோ. நான் மசிவனென்டு கனவிலும் நினையாதையுங்கோ... உதுக்குக் கன்னிக் கால் நடுகிறதிலும் பாக்க நான் பாடையிலை போக ஓமெண்டுவன்.''

அதிலே தொனித்த உறுதி சேகரத்தின் தாய்க்குத் தெரியும். மகனுடைய ஆசையின் பக்கம் தன்னால் சாயமுடியாது என்ற நிதர்சனத்தின் உறைப்பு.

''உங்களுக்குத்தான் ஆண்டவன் கண்டறியாத தொண்டையைப் படைச்சிருக்கிறான்! இப்ப என்ன நடந்து போச்சு என்டு துள்ளுறியள்? இவன் வாயுழையப் புசத்துறான் எண்டு கேட்டுக் கொண்டிருந்தால்... நான் என்ன சுகத்தைக் கண்டன்? மத்தளம் போல இரண்டு பக்கமும் அடிபடுறன்...'' என்று சலித்து, மூக்குச் சிந்தி, முன்றானைக்கும் வேலை கொடுத்தாள் தாய்.

தொடர்ந்து புகுந்த மௌனம் நீண்டது.

''டேய் சந்திரன்! ஏண்டா, இப்படி எங்களைக் கொல்லுறாய்? உன் விருப்பப்படி ஆட, எனக்கும் உன் கோத்தைக்கும் முதலிலை ஏதேன் நஞ்சைத்தாவன்! கண்டறியாத பலகாரத்தைக் கண்டவனைப் போல, இடியப்பக் காரியின்ரை வாடிப்போன நோடாலத்தை நினைச்சு இந்தப் பேயன் உருகுகிறான்...'' என்று விவகாரத்திற்குச் சாம்பசிவத்தார் புதிய வேகம் கொடுத்தார்.

அடுக்களையிலிருந்து எவ்வித சளசண்டியும் எழும்பவில்லை. இளகிய இரும்பும், கருமத்தில் மனம் குத்திய கொல்லனும்! குரலின் சுருதியைத் தாழ்த்தி, அதிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசத்தைக் குழைத்து, ''தம்பி, நீ ஒருத்தன் நல்லா வாழ வேண்டுமெண்டுதானே இவ்வளவு பாடுபட்டம்? உனக்கு ஒரு கெடுதல் வந்து அண்ட விட்டிடுவமே? கலியாணம் எண்டால் சின்னச் சோறு கறி ஆக்கிற அலுவலில்லை. அதைப் பெரியவங்களின்ரை பொறுப் பிலை விட்டிடு...சோதினை பாஸ் பண்ணினாப்போலை போதுமே? நல்ல உத்தியோகம் ஒண்டிலை உன்னைக் கொழுவிவிடவேணும் எண்டு நான் ஓடித்திரியிறன். நீ என்னடா எண்டால் குறுக்காலை தெறிக்கப் பாக்கி றாய்...இனிமேல், ஒண்டு சொல்லிப்போட்டன். அந்தப் பலகாரக்காரியளின்ரை கதை இந்த வீட்டிலை எடுக்கப் படாது...''எனப் பேசி முடித்தார்.

பேச்சுக்கு முத்தாய்ப்பு வைத்ததுடன் சாம்பசிவத்தார் நின்றுவிடவில்லை. ஓடி அலைந்து, பிற்கதவுகளில் நுழைந்து, பிடிக்கவேண்டியவர்களைப் பிடித்து, இழுக்க வேண்டிய கயிறுகளை இழுத்து, மகன் சந்திர சேகரத்தை நல்லதோர் உத்யோகத்திலே மாட்டிக் கொழும்புக்கு அனுப்பிவைத்தார். அதற்குப் பின்னர் தான் சாம்பசிவத்தார் நிம்மதியாகத் தூங்கினார் என்று கூடச் சொல்லலாம்.

**தூங்குவதான** பாவனையில் பழைய சம்பவங்களை அசைபோட்டுக்கொண்டு கிடக்கிறார் சந்திரசேகரர்.

''சரசக்கா! எப்பிடிப் பாடுகள்? உடம்பு கொஞ்சம் இளைச்சுக் கிடக்குது''—இது பூரணத்தின் குரல்.

'அவளின்ரை குரல் அப்பிடித்தானே கிடக்குது? ஒரு உடைவோ, ஒரு கரகரப்போ?'

பக்கத்து வீட்டாரைப் பற்றிய நினைவின்றி இயந்திர வாழ்க்கை உருளும் கொழும்பில் வாழ்ந்த பிள்ளை களுக்கு அயல் வீட்டுப் பரிவு புதுமைச் சுவையை ஊட்டு கிறது.

UNIVERSITY OF PERADENIYA
17-2-1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வாருங்கோ, பூரணமக்கா! புழக்கமில்லாமல் பூட்டிக் கிடந்த வீடு. உதைத் துடைச்சுத் துப்பரவாக்கிறதுக் கிடையிலை இடுப்பு முறிஞ்சு போடுமெணை. உதென்ன சருவச்சட்டிக்கை?''

''இதெணை கொஞ்சம் இராசவள்ளிக் கிழங்கு. புள்ளை யளுக்குப் பிரியமா இருக்குமெண்டு கிண்டினனான். இது தானே மூத்த பொடிச்சி? உங்கை பாருங்கோவன் நல்ல வடிவா வளந்திருக்கிறாள். எக்கணம் என் கண்ணும் பட்டுப்போகும்...எடுங்கோ புள்ளை. ஐயா நித்திரையே? அவருக்கும் கொஞ்சம் கொண்டு போய்க்குடு தங்கச்சி''...

சந்திரசேகரத்தார் தாம் நித்திரையில் ஆழ்ந்து விட்ட தாக நடிக்கிறார். 'ஐயா நித்திரையெண்டால் எழுப்பக் கூடாது' என்ற ஞாயிற்றுக்கிழமை— பிற்காலத்தில் போயா தின—'மெட்னி'த் தூக்கங்களுக்கு விதிக்கப் பட்டிருந்த பொது விதி அவரைக் காப்பாற்றுகின்றது.

'பழைய பூரணமே? பெருவிரல்களால் பத்து இடங்களில் குழிதோண்டி, இரண்டு வார்த்தைகள் பேசத் திக்கு வாளே அந்த மங்குளிப் பெண்ணா இவள்? இப்பொழுது கதை கண்டவிடம் சொர்க்கம்.'

சந்திரசேகரத்தாரின் மனம் நினைவோடையைக் கிழித் துச் செல்கின்றது.

உத்தியோகமான புதிதில் கொழும்பிலே போர்டிங் சீவியம். அலாம் மணி—பிளேன் டீ—பேப்பர்—முகச்ச வரம்—தந்த சுத்தி— குளிப்பு முதலியன— பாண்— விறுக்கு நடை— பஸ்— ஓட்டம்— கந்தோர்— 'அலுவல் கள்'—டீயும் முஸ்பாத்தியும்— அலுவல்கள்— சோறு என்ற நினைப்பில் கல்லைக் கொறிக்கும் 'லஞ்ச்' என்ற வித்தை; வம்பு மடம்—அலுவல்— டீ— நடை—பஸ்— மெது நடை—அரட்டை— சாப்பாடு— இங்கிரமெண் டைக் காப்பாற்றப் படிப்பு— லைட் அவுட்— தூக்கம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவ ஒழுங்கிலே நேரத்தின் ஆட்சிக்குள் உடலை வசக்கி எடுக்கும் இயத்திர இயக்கம். பின்னேர டீயுடன் ஒரு வடை—கடுதாசி விளையாட்டு—வசுக்கோப்புப்படம் என்ற விதி விலக்குகளுக்கு மேற்படி நேரசூசியில் மிகமிக ஒறுப்பாக அனுமதி வழங்கப்பட்டிருந்தது. மற்றும்படி பிரக்ஞைகூட ஸ்மரித்த இயக்கம். பக்கத்து வீட்டுப் பூரணத்தின் முகம் தலை நீட்டுவதுண்டு... நேரத்தின் இராக்கதம் அதனைப்பிடித்து விழுங்கும்.

சாம்பசிவத்தார் அனுபவசாலி. மகனைத் 'தனிக்க' விடாது அடிக்கடி கொழும்புக்கு இஷ்டமானசோட்டைத் தீன்களுடன் வந்தார். எத்தனையோ குழையடி கோசு களுக்குப் பிறகு, சரஸ்வதியை அவனுடைய வாழ்க்கைத் துணைவியாக்கி விட்டார். சரஸ்வதி ஆதன பாதனங் களுடன் சீமாட்டியாக வந்து சேர்ந்தாள். 'அப்பன் கீறிய கோட்டைத் தாண்டாத சற்புத்திரனாக' நற் பெயர் எடுத்து சந்திரசேகரம் இல்லற வாழ்க்கையில் இறங்கினான். மூன்று ஆண்டுகளாக மலடியோ என்று பூச்சாண்டி காட்டிய சரஸ்வதி தொட்ட சொச்சம் விட்ட மிச்சம் என்று ஐந்து பெண்களையும் ஒரு கடுவனையும் அடுக்கடுக்காகப் பெற்றெடுத்துவிட்டாள். அத்துடன் கணவருக்கு 'ஆர்' விகுதியையும் சேர்த்து சந்திரசேகரத் தாராக மகிமைப்படுத்தி விட்டாள். அவள் தாயில்லா தவள். நல்லதுக்கும் கெட்டதுக்கும் மாமியார் வீடுதான். மூன்றாம் பிள்ளையின் பிரசவ வீட்டில் சாம்பசிவத்தார் கண்களை மூடினார். 'பேத்தி பிறந்த ஜாதக பலன்' என்று அந்த நிகழ்ச்சிக்கு விவரணம் கூறிய ஊர்ச்சனம், 'நெய்ப் பந்தம் பிடிப்பதற்கு ஒரு பேரன் இல்லையே' என்ற ஒறுவாயையும் சுட்டிக்காட்டியது.

சாம்பசிவத்தாரின் மனைவி வலுத்த சீவன், ஆறாம் பிள்ளைப் பேறுக்காகப் பழக்க தோஷத்திலேதான் வீட்டுக்கு சரஸ்வதியைக் கூட்டி வந்தார். அவருடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயாருக்கு ஏலாத நிலை. பொடியன் பிறந்தான். அவனைத் தடுக்கிலே கண்டு களித்த நிலையிலே 'பெத்தாச்சி'க் கிழவி மோசம் போனாள். ஆண்டு திவசத்திற்குப் பிறகு இந்த வீட்டை அவர் சரியாகப் பராமரிக்கவில்லை. பொடியனுக்கு இப்பொழுது வயது நாலு. 'ஊமை' என்ற பட்டத்தைச் சுமக்கிறான். டாக்டர்கள் அவன் பெரிய 'பேச்சாளனாக' விளங்குவான் என்று அபிப்பிராயப்படுகிறார்கள். அவனைப்பற்றி வளர்ந்துவரும் விசாரமும் ஒரேடியாக வீட்டோடு வந்து குடியேறுவதற்குக் காரணமாக அமைந்தது.

''மூத்தவன் இந்த கோசுதான் யூனிவேஸிடி என்றன்ஸ் எடுத்தவன். கூப்பிட்டிருக்கிறாங்களாம். எடுபடுவன் எண்டுதானெணை சொல்லுறான்.'' பூரணம் இன்னும் போகவில்லை. எல்லோரும் பேச்சிலே குந்தி விட்டார்கள்.

''என்ன எடுத்தவர்? என்ஜினியரிங்கோ?'' சரஸ்வதி மூத்தபெண் திலகம் கேட்கிறாள். அவள் யாருடனும் சட்டென்று பழக்கம் பிடித்துக் கொள்ளுவாள்.

''இல்லை, புள்ளை டாக்குத்தர் படிப்புக்கும் போக வேணும் எண்டு இஞ்சினை சொல்லித் திரிஞ்சான்...'' பூரணத்தின் குரலிலே எவ்வித பெருமையும் மண்டவில்லை. புதிதாகச் சேர்ந்துள்ள பெரும் பணத்தின் செருக்குத் துளிகூட இல்லை.

சந்திரசேகரத்தார் மறுபக்கம் திரும்பிப் படுப்பதான அபிநயத்துடன் புரளுகின்றார். மனம் பூரணத்தைப் பற்றிய நினைவுகளிலே மொய்த்துச் சுகிக்கின்றது.

'கடையப்பக்காரியள்' என்று சாம்பசிவத்தார் சிந்திய சுடுசொற்கள் பூரணத்தின் தாயாரை வெகுவாகத் துன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறுத்தியது. அன்று தொடக்கம் அவள் நாயாக அலைந்து, தன் மகளுக்குக் குடும்ப வாழ்க்கை ஒன்று குதிரச் செய்துவிட்டாள். சின்ன வயது தொடக்கம் வல்வெட்டித்துறையாருடைய கடையிலே வேலை செய்த அனாதைப் பையன் சோமசுந்தரத்தைக் கைப்பிடித்த ராசி அள்ளிக் கொடுத்தது. திருச்சி பீடிக் கொம்பனிக்கு ஏஜன்ஸி எடுத்து ஆரம்பமானது அவனுடைய தனி வியாபாரம். இன்று, இங்கு ஒரு கடை, குருநாகலில் இரண்டு கடைகள், கொழும்பில் பீடிபக்டரி, கிளிநொச்சியில் வெள்ளாண்மைப் பூமி, ஐந்து லொறிகள் என்று செல்வம் பொங்கி வழிகின்றது. 'புளியுருண்டை' வியாபாரமும் உண்டு என்று பேசிக் கொள்கிறார்கள். காகம் குந்தியே மாடு சாகப் போகுது? சென்ற ஆண்டு அவருக்கு ஜே.பி.பட்டமும் கிடைத்திருக்கிறது!

''ஓமெணை, அவர் யாவார விஷயமாத்தான் கொழும்புக்குப் போயிருக்கிறார். என்னதான் அள்ளிக் குவிச்சாலும் வீட்டுச் சோறுக்கும் தண்ணிக்கும் பொசிப்பில்லை. அந்தரிச்ச சீவியமெணை...''

'பூரணம் உண்மையிலை சீதேவிதான். இல்லாட்டில் என்னைக் கட்டிக்கொண்டுதானே கஷ்டப்பட்டிருப்பாள்? அவளுக்கு நாலும் கடுவன்கள். ஆசைக்குக்கூட ஒரு பொட்டை இல்லை. அவளுக்கு எல்லாம் பெண்களாகப் பிறந்திருந்தாலும் கவலையில்லை. தெறிச்சுப்பார்த்து நல்ல மாப்பிள்ளை எடுக்கிறதுக்கு வேண்டிய காசு இருக்குது. எனக்கு எல்லாம் பொடியன்களாகப் பிறந்தாலும் என்ன புண்ணியம்? சீனியரோடை நில்; என்னை போலப் கிளாக்கராகு என்றுதானே சொல்லியிருப்பன்? இந்த வீடும் வளவும்! காடலைந்த முயலாட்டம் இந்த வளையை நாடி வந்திருக்கிறேன். சரஸ்வதி கொண்டுவந்ததுகள் சில ஈட்டிலை கிடக்கு. அதுகளை மீட்டாலும் கோமணத் துண்டளவிலை ஒரு வளவும், பேரளவுக்கு ஒரு வீடும் கட்டிக் குடுக்கத்தான் தேறும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்து வருஷ சேர்விஸோடை ஸ்பெஷல் கிரேடிற்குப் போகேக்கிள்ளை எல்லாத்தையும் வெட்டிப் புளக்கலாம் எண்டுதான் நினைச்சன். நான் கிளறிக்கல் சேர் விஸிலை சேர்ந்து கொட்டப்பெட்டிச் சம்பளத்தோடை சமாளித்தது போலேதான் நடக்குது. சரசுவுக்கு என்ன தெரியும்? பிள்ளையளுக்கு என்ன விளங்கப்போகுது? பாவம், அதுகளும் ஏதோ அந்தஸ்தைப் பற்றி பெரிசா நினைச்சுக் கொண்டிருக்குதுகள்...'

காதலின் மெல்லிய உணர்ச்சிகள் என்ற பழைய நினைவுகளை அசை போட்ட சந்திரசேகரத்தார் புத்தி பூர்வமான லோகாயுத விசாரணையில் இறங்கி, மனத்தைப் புண்ணாக்கி அப்படியே தூங்கிவிட்டார்.

**விழித்தபொழுது** வள்ளிசாக ஒரு மணி நேரமாவது தாம் தூங்கிவிட்டதை அவர் உணர்ந்தார். கை கால்களை அலம்பிக் கொண்டு தேநீர் குடிக்க வந்தமர்ந்தார். சரஸ்வதி இராசவள்ளிக் கிழங்கைக் கொடுத்தாள். 'யார் தந்தது?' என்று கேட்காமலே சாப்பிடத் தொடங்கினார்.

'பூரணத்தின் சுபாவத்தைப் போலவே கிழங்கும் இனிக்கிறது.'

''கேட்டியளேய்யா...இண்டைக்கும் நாளைக்கும் உலை வைக்கக் கூடாதாம். நாளையண்டைக்குத்தான் நல்ல நாளாம்...''

''கொழும்பிலை இருந்த உமக்குமெணை உந்தப் பஞ்சாங்கங்களைப் பாக்க நல்லாத் தெரியுது போலை...''

''பூரணக்காதான் சொன்னா...இண்டைக்கும் நாளைக்கும் தானே சமைச்சு அனுப்பப்போறது எண்டும் சொன்னாவு. நான் வேண்டாமெண்டு சொல்லவும் அவ கேக்கிறாவு இல்லை...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஓமெணை...உனக்கும் இஞ்சை துடைச்சுக் கழுவத் தானே ரெண்டுநாளும் சரியாகப் போகும்...''

''பூரணமக்கா தங்கமான மனுஷி... பொடியளும் அப்பிடித்தான்.''

''நான் கொஞ்ச நேரம் நித்திரை கொள்ளுறதுக் குள்ளை நீர் ஊருலகமெல்லாம் அறிஞ்சிட்டீர்' என்று சிரித்தபடி தேநீரையும் குடித்து முடித்தார்.

''நான் ஒருக்கா வேலியடைக்கிற நாகப்பனைப் பாத் திட்டு வாறன்...''

பூரணம் முற்றத்தில் நின்று சிரிக்கிறாள். அவரும் பதிலுக்குச் சிரித்தார்.

'மனசார இவள் ஒரு மனுஷியுந்தான்; ஒரு வடிவுந் தான்...'

**நாகப்பனும்** சின்னவனும் வேலியடைக்கிறார்கள். கொல்லை வேலி சின்னன். விடியற்புறம் வந்தவர்கள் அதனை அடைத்து முடித்த பிறகுதான் காலைச் சாப் பாட்டைப் பார்த்தார்கள்.

வெயில் ஏறத் தொடங்கியது. பூரணத்தின் வளவுப் பக்கத்து வேலி பிரிக்கப்பட்டது. அடைப்பு வேலை ஆரம்பமாகியது. சந்திரசேகரத்தார் கூட மாட நின்று உதவி செய்கிறார். 'கட்டுக் கோத்துக்' கொடுக்கக்கூட ஓர் ஆண்பிள்ளை இல்லையே.

சோட்டைக்குப் பிறந்த பொடியன் பூரணத்தின் இடுப் பிலே குந்தியிருக்கிறான்.

''நடுவாலை ஒரு பொட்டு வைச்சு அடையுங்கோ. புள்ளை குட்டியள் போய் வரட்டும்'' என்று பூரணம் சொல்லுகின்றாள்.

அந்தப் பொட்டினை அடைத்து, தன் மகனின் வாழ் வைக் காப்பாற்றுவதாகச் சாம்பசிவத்தார் நினைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொட்டுகள் உறவுக்கான வாசல்கள். உறவுகளே... அன்று பூரணத்தின் அழகிலே அவர் மனம் அலைந்தது. இன்று...அவளுடைய ஆளுமையிலே ஒரு கனிவும் சுகமும் இருப்பதை உணருகிறார். அந்தச் சுகத்தில் நெஞ்சிலே தைத்துச் சீழ் வைத்து விட்ட சிறாம்பை சந்திரசேகரத்தார் மெதுவாக இழுக்கிறார்.

இருபது வருடங்களுக்குப் பின்னர் 'பொட்டு' ஒன்று விடப்பட்டு வேலி அடைக்கப்படுகின்றது. □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14

கதை



# நேர்மை

**காலம்** தப்பிப் பிடிக்கும் வம்புப் பிஞ்சு வாக்கில், வைகாசி மாதம் பின்கூறில் திடீரென்றுவந்த மழையிலே சுகித்த ஒருநாள். சங்கரப்பிள்ளை கடையில், ஒரு பீடாவை வாங்கிக் குதப்பிக் கொண்டு, கோட்டை முனைப் பாலத்தின் மருங்கிலுள்ள கம்பியில் குந்தி யிருக்கிறேன். 'மட்டக்களப்பினை இரண்டு பாலங்கள் அணி செய்கின்றன. ஒன்று கல்லடிப்பாலம், மற்றது கோட்டைமுனைப் பாலம். அது கறுப்புப் பாலம்; இது வெள்ளைப் பாலம். அது காதலர் பாலம்; இது சோம்பேறிகள் பாலம்' என்று ஆறுமுகவடிவேல் ஓர் இலக்கியக் கூட்டத்திலே நகைச் சுவையாகப் பேசியது நினைவுக்கு வந்தது. அவர் ஆங்கிலம் கலந்த ஒரு மணிப்பிரவாள நடையிலேயே பேசினார். தனித் தமிழ் அபிமானத்தினால், சிலவற்றின் உயிர்த்துவத்தை இழக்கின்றோமோ என்கிற தவிப்பு எனக்கு. அவர் சொன்ன வார்த்தைகள்: ''That is lovers' bridge and this is loafers' bridge.' நான் loaferபோலதான்குந்தி யிருக்கிறேன். அடைமழைக் காலத்துக் குளிர் காற்றுப் போல, வாவியிலே குளித்து எம்பிய கோலத்தில் காற்று வீசியது. உடல் குளிரிலே சில்லிட்டால், சூடேற்ற வேண்டும். உடலுக்கு உஷ்ணம் ஏற்ற, ஆண்டவா, நீ எத்தனை வழிகளைத்தான், மனிதனின் மூளையிலும் அதன் கற்பனைகளிலும் சொரிந்து வைத்தாயோ? 'விடுப்புப்' பார்க்க அலையும் கோட்டைமுனைப் பால loters கூட்டம், உடலில் உஷ்ணம் ஏற்றிக் கொள் ளும் அவதியிலே மெலிகின்றது. சுபராஜ் தியேட்டரின் வர்ண பல்புகள் மருள் மாலையைக் கிழித்து... மனசின் மறுகல். இங்கிருந்து பார்க்கவே தெரியும் கூட்டம். இன்று துவக்கம் ஆங்கிலப் படம். பிரிஜட் பார்டோ நடித்தது. வெங்காயத் தோலுரித்தல் குஷினி வேலை மட்டுமல்ல, பொருத்தமான இடங்களிலே பொருந்தா உரிப்புகள். மனசு வெட்கத்தை அவிழ்த்துப் போட்டு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துச்சாதனன் ஒரு குறியீடு. அவன் மனுஷ மனசிலே துகில்உரி படலங்களை நடத்த எப்பவும் தயாராகவே இருக்கிறான்... துந்துமித் தூறல் பாலத்தைக் கடந்து, முகிலின் ஆட்டத்திலே தொங்கிக் கிடக்கிறது. வெல்லக் கட்டியாகக் கரைந்து விடுவோம் என்று ஒஞ்சும் மக்கள் ஒதுக்கிடங்கள் தேட, பாலத்தில் என்ன வேடிக்கை இருக்கப் போகிறது?

'சினிமாவுக்குப் போவம்.'

**'ஓமோம்.** சினிமாவுக்குப் போவம்.'

இந்த முடிவுக்கு, காலையில் சுபராஜ் தியேட்டர் தாண்டும் பொழுதே வந்தாச்சு. ஒன்று, இன்றைக்கு எனக்கு 'பங்காளிகள்' கிடையாது. லீவுக்குப் போன ரூபி அடுத்த வாரந்தான் வருவாள். இப்பொழுது அவளுக்குப் பெரிய அருக்காணியம். கல்யாணம் செய்துகொள்ள வற்புறுத்துறாங்களாம். இவள்ஆரோ ஒருவனுக்கு முன்னால, அவன் மாப்பிள்ளையாக வருவான் என்ற சபலத்தில், இருப்பதையும் இல்லாததையும் காட்சிப் பொருளாக்கி நிக்க போயிருக்கிறாள். சே, இவளுகளைத் திருத்த ஏலாது. மாடு வாங்கிறவனுக்கு அதன் பல்லைப் பிடிச்சுப் பாக்க உரிமை இருக்காம். அதைப்போல பெண்ணுக்கும் சில விஷயங்கள் அசலானவை என்பதைத் தொட்டுப் பார்க்கவும் உரிமை வேணும் என்று ஆண்கள் இன்னமும் குதிக்கத் துவங்காததுதான் ஆச்சரியம். ஆணாதிக்கச் சடங்குகளை ஆகுமானது என்று ஒத்துக் கொள்ளுபவர்களை முச்சந்தியில் வைச்சு, ஓம் உரிஞ்சு போட்டு நிறுத்தி, திருக்கை வாலாலை வெளுக்கவேணும். அந்தத் திருக்கை வால் அடியிலை ஆணாதிக்கம் பொலு பொலுத்துச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதறவேணும். கண்ணாடியைப் பார்த்து, சுய உடலின் வனப்பைப் பார்த்து, ஏதோ கற்பனை களை எல்லாம் துணைக்கு இழுத்துப் பிடித்துக் கொண்டு... சே, அலுத்துப் போகின்றது. காலம் காலமாக நாயும் எலும்பைக் கடித்து... எலும்பின் சுவையா, முரசின் சுவையா? கட்டை விரல் சைஸுள்ள பார்டோ எதைக் காட்டித்தான் இத்தகைய கூட்டத்தைத் தியேட்டருக்குத் திரட்டுகிறாள்? 'அடல்ஸ் ஒன்லி' என்றால், என்ன அர்த்தம்? 'ஆண்களுக்கு மட்டும்' என்று அர்த்தமா? இந்தப் படங்களுக்கு இங்கை உள்ள பெண்கள் போகமாட்டார்களாம்! ஏன்? ஆண் களுக்கு Sex-ray கண்கள், பெண்களுக்குப் பொட்டைக் கண்கள்... அப்படியா? அவங்கள் பார்க்கிறதை நானும் பார்க்கலாம். பார்ப்பேன். பெண்ணியத்தின் மேன்மையை ஆண்களின் எழுத்துக்கள் தான் நிலைநாட்ட வேணுமா?

அவங்களுக்கு ஒரு உள் நோக்கம் இருக்கும். பெண்டாட்டியைப் பறிகொடுத்தவன், படிப்பின் கர்வத்தில் வெதும்புபவன், தாய்க்குலத்தின் வாக்குகளை யாசிப்பவன்- இப்படி எத்தனையோ வகைகள்... இவங்கள் பெரிய மனசு பண்ணிப் போடும் பிச்சையிலே பெண்களின் பெருமை நிலைக்க வேணுமா? நொன்சன்ஸ்! அவங்கள் கொடுப்பது அல்ல...Shameless fellows...எங்கள் உரிமைகளை நாங்கள் பறிச்சுத் தக்க வைக்க வேணும்... நான் இந்தப் படத்துக்குப் போவன். இவனுகள் எல்லாம் என்ர அப்பனை போல பொறுக்கிகள்... ஆணினத்தின் முகத்திலே துப்ப வேணும்! ஆண்மையாம் ஆண்மை. பொலீஸ் காரன் குறுந்தடியை-குண்டாந்தடியை- Baton பொல்லை பெல்ட்டிலதொங்கவிட்டுத்திரியிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுறதுக் கான சின்னமாம். அவன் கொடுக்குக் கட்டிக் கொண்டு திரியலாம்...நெஞ்சைக் காட்டித் திரிய லாம். அதில் முளைக்கிற மசிர் ஆண்மையாம்! இவங்கள் என்னைப் பாப்பான்கள். இவ்வளவு காலமும் பார்த்துப் புடுங்காத இவங்களா? படிச்ச பெண்கள்—பெரிய உத்தியோககார மாப்பிள்ளை களோட—வரலாம். ஏன்? படத்தில வாற 'சீன்' களை அவள் கட்டிலில் முக்கிக் காட்டவா? எனக் கும் முப்பத்தைஞ்சு வயசு. நான் adult. சட்டப்படி எனக்கு உரிமையுண்டு. பெண்ணியத்தை நிலை நாட்டும் போராளி நான்!! yes, a fighter for women's rights, dignity and self-respect! முதற்வகுப்பு டிக்கற் வாக்கிக் கொண்டு தியேட்ட ருக்குள் நுழைகின்றேன். ஆண் உலகத்தை அவமதிப்பதுதான், பெண்ணியத்தை வென் றெடுப்பதற்கான முதலாவது அறை கூவல்!

**தியேட்டருக்குள்** நுழைந்ததும், 'Bar' என்ற எழுத்து கள் பளிச்சிடுகின்றன. விருப்பங்களின் பார்வைகளும் தரிசனங்களும். 'நூரளை பியரும் ஒரு பெக் ஜின்னும்?' இத்தகைய Shandy மணியானது! இந்தக் குளிருக்கு டபிள் கல்லோயா ஒன் த றொக்ஸாக அடிச்சால்தான் 'கிக்' வரும் என்று கனகசிங்கம் சொல்லுவான். திருப்தி களிலே எத்தனை கோணங்களும், ரகங்களும்! குடிக்கு தனி உலகைச் சிருஷ்டிக்கும் சக்தியும் இருக்கிறது. 'துரை, ஷோ துவங்கீட்டுது' என்றுகுடிபானப் பரிசாரகன் ஞாபகப் படுத்துகின்றான்... 'வயது வந்தவர்களுக்கு மட்டும்' என்று விளம்பரப்படுத்தினால் போதும்... இது இருபது வருசத்துக்கு முந்தி வந்தபடம். ஏன், இப்ப இவங்களும் பிரன்ஸு நடிகை பார்டோவின் கியாதியை யும் அறிஞ்சு வைச்சிருக்கிறாங்கள்... நல்ல கூட்டம். 'நல்ல வேளை, நான் முதல் வகுப்பு டிக்கற் வாங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யது...' என் ரஸனை; என் உஷ்ணம்; என் சுகம். முதலில் Trailer. படம் துவங்கினாலும் Titles...பியர் குடிப்ப திலே ஒரு நாகரிகம் இருக்கு. மிடறு மிடறாக... தொண்டை முழுவதும் நனைந்து குளிரும் பாங்கத்திலே குடிக்க வேணும். அதனுடன் ஜின் கலந்தால், காற்று வீசு வீச ஒருவகைச் சுகம்... மெயின் படம் ஓடத் துவங் கீட்டுதாம். ஆரம்பத்திலேயே சில நல்ல சீன் வருமாம்... பரிசாரகனுக்கு என்மீது அக்கறையா, அல்லது என்னை அனுப்பிவிட்டால், கதவு ஓரத்தில் நின்று அந்த நல்ல சீனுகளைப் பார்க்கும் அவசரமா? தொலை! உன் ரஸனைக்குக் குறுக்கே நான் ஏன் நிற்கவேணும்? Shandy ஐ அவசரமாக விழுங்கி முடித்து, படிமேல் ஏறி, தியேட்டருக்குள் நுழைகிறேன்.

திரையில் எதைப் பார்த்து கலரி மகாஜனங்கள் இப்படி ஆரவாரமாக விசில் அடிக்கிறார்கள்? வயிற்றுள் புளிக்கும் மதுவில் கால்கள் இலேசாகி விட்டது போலவும். ஓடும் படத்திலே பாதிக் கவனத் தைச் செலுத்தி. மண்டபத்துக்குள் நிலவிய இருளில், காலி இருக்கையைத் தேடி, யாருடைய கால்களிலே இடறி...

'Idiot...'

சொன்னது பெண்குரல். இப்படிச் சொல்லக்கூடியவள் துணிஞ்சவள். துணிவை வாழ்த்தியும், மதுவின் உந்து தலிலே உப்பிய ரோஷம் இழுக்கவும், நான் 'இடியற்' சொன்னவளின் பக்கத்திலே அமருகின்றேன். இருளில் பார்வை நிதானமடைய, அவள் தனியாக அமர்ந்திருக் கிறாள். தனியாக இந்தப் படத்துக்கு வந்தால், இவள் துணிஞ்சவள்தான்...பெண்களின் துணிச்சல் எனக்குப் பிடிக்கும்.

நான் இவனை 'idiot' என்று வைதேன். இருட்டில், உண்மையில், தடுமாறியும் இருக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாம். ஆண் தனகினால், தட்டினால் உடனேயே தனகுகிறான் என்று ஏன் நினைக்கிறன்? வந்தது வினை. மூதேசி கூச்சம் இல்லாமல் பக்கதில வந்து குந்தியிருக்கு. இவன் நல்ல ஹோட்டலிலை சாப்பிடவில்லை. பக்கத்திலை இரு. உனக்கு நல்ல பாடம் படிப்பிக்கிறன்.

சரி படத்தைப் பார்ப்போம். படம் துவங்கிய பத்தாவது நிமிடமே, பார்டோ பிறந்த மேனிக் கோலத்திலே, சாவகாசமாக குளிக்கப் போகிறாள். நிதானமான நடை. கொட்டுது காலடியில பணம். நான் இன்னும் சாவகாசமாக நடப்பன்! நான் இப்படி நடக்கிறதை பார்க்கிறதுக்குத் தானே இப்படி நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு இருக்கிறீர்கள்? கலரி மகாஜனங்களின் விசில் அடி ஆர்ப்பாட்டம்! ஒருத்தன் டோச் லையிட் திரையிலே அடித்துப் பார்க்கின்றான். மங்கல் வெளிச்சத்தில் துலக்கமாகத் தெரிய வில்லையே என்கிற அவதியிலே செயற்பட்ட பயங்கர அறிவு ஜீவி! 'டேய் யாரடா அது...' என்று ஏக கூச்சல்கள். ஒரு எலும்புத் துண்டுக்கு அடிபடும் நாய்கள் போல, நிழலின் பொம்மலாட்டத்திற்கு இவ்வளவு Excitement என்றால், உண்மையில் ஒரு பெண் அந்த மேடையிலே தோன்றினால், இவங்கள் என்ன பாடுபடுவான்கள்? பெண்ணின் உடல் காமாந்தகார உணர்வுகளுடன் ஆரவாரமாகப் பார்க்கப்பட வேண்டிய ஒரு பண்டம். இப்படி நினைப்பவனை மேடையிலே நிர்வாணமாக விட்டு, சூழவும் ஆயிரம் பெண்கள் நின்று கூழ்முட்டைகள் எறிந்து அந்த நாற்றத்திலேயே அவனைமுங்கிச் சாகடிக்க வேணும். என் செயல்களிலே, ஆண்கள் தலையிடக்கூடாது, என் சுதந்திரம் எனதே என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்கும் நான், அவங்களுக்கு அவங்கள் சுதந்திரம் உண்டு என்று ஏன் நினைக்கக் கூடாது? No, பெண்களைப் பரிகசிப்பதினால் அடையும் இன்பம் Perversion. ஆண்வர்க்கம் தன்னுடைய ஆபாச, அழுக்கு வெறிகளைத் தீர்த்துக் கொள்வதற்கான ஒரு சிருஷ்டி என்றே பெண்களைக் காலங்காலமாகவே நினைத்துக் கொண்டிருக்கிறது; ஆண் சொன்னால், பெண் எல்லாவற்றையும் அவிழ்த்துப் போட்டுவிட வேண்டும். புழுதியை மோந்து கொண்டு கிடக்க வேணும். அல்லது கூரையிலே கட்டியிருக்கும் ஒட்டடையைப் பார்த்துக் கொண்டு கிடக்க வேணும். அவர்களுக்கு உணர்ச்சியில்லை. மூளையில்லை. விருப்புகளில்லை. ஆண் ஆதிக் கத்தை ஆண்டவன் ஆசிவதித்தானாம். அதிகாரக் கோல் அவர்களுக்கே வழக்கப்பட்டிருக்கிறது. அதிகாரக்கோல், செங்கோல், மந்திரக்கோல், சிருஷ்டிக்கோல், எழுதுகோல், துரிகைக் கோல், முத்திரைக்கோல், சவுக்கு என்று அவர்கள் எந்த அர்த்ததிலும் அதனைப் பிரயோகிக்க அவர் களுக்கு அதிகாரம் உண்டு! ஆதிக்கத்தின் சின்ன மாக, பெண்ணைச் சாய்க்கும் அதிகாரமாக, இன்ப உற்பத்தியின் திறவுகோலாக... அடி நாளி லேயே, பிஞ்சு வயசிலேயே இந்த அதிகார துர்ப் பிரயோகங்களின் ஊமைச் சாட்சி நான்! அந்த வடுக்கள் ஆறுமா? அதை முறியடிப்பதற்கான நோன்புதான் என் வாழ்க்கையா?

அப்பா என்று ஒருத்தர். ஏன் ஆர் விகுதி? மரியாதை ஏன்? ஒருத்தன்! அப்பன்! அவன் அந்தக் கோலால் அடித்தே என் அம்மாவை கொன்றான். நான் இன்றளவும், என் அம்மா வின் சாவை அப்படித்தான் விளங்கிக் கொள்ளு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றேன். அக்கா...மூன்று வருஷம் கழித்து நான். ஆணாக, தன் ஆதிக்கத்தினதும் வாரிசாக, நான் பிறப்பேன் என்று எதிர்ப்பார்த்தானாம். நான் பெண்ணாகப் பிறந்ததும் அவனுடைய கோட்டை கள் எல்லாம் சரிந்துவிட்டதாம். மூதேசி பெற்றெடுத்த 'தரித்திரம்'-'பீடை' நான்... என் பிஞ்சு வயசிலே பார்த்த காட்சிகள்...அவன் அடிக் கப் பிறந்தவன். அம்மா அவற்றை எல்லாம் தாங்கப் பிறந்தவள். எப்படி கோவம் வரும் எண்டு தெரியாது. எதுக்குக் கோவம் வரும் எண்டு தெரியாது. கை, கால், கம்பு, விளக்குமாறு, தும்புக்கட்டு, கோப்பை, பீங்கான்...அவன் கையில் அகப்படும் எதுவும் அம்மாவை அடித்துத் துவைப் பதற்கேற்ற ஆயுதங்கள்...நான் அவள் மடியிலே கிடந்தால், பாதி அடிகள் என்மீது...அடிப்பதற் காகக் கற்பிக்கப்படும் காரணங்கள் வேறு... உண்மைக் காரணம்? அவனுக்குச் செத்தால் கொள்ளி வைக்கக்கூட ஒரு வாரிசு இல்லை. ஆண்மகன் கொள்ளி வைக்காவிட்டால் அந்த உடல் எரியாதாம்... 'உங்கட குடும்ப வம்மிசமே அதுதான். பாயைக் கடந்தால் பொட்டையாப் பீய்ச்சிடுவியள்!' இந்த வார்த்தைகளின் காங்கை கேட்டு, பெத்தாச்சிக் கிழவி அழுவா. தன் வயித் திலே ஆண்பிறக்கவில்லை என்று குத்திக்காட்டு றான் என்கிற வெப்பிசாரம்! அவன்ரை குடும்பம் 'கோல்' குஞ்சுகளைப் பெருக்கிய குடும்பமாம். எப்படிப்பட்ட உரிமை பாராட்டுதலும் ஆணவமும். பெண். என்னால்...சமைக்கச்சொன்னால்சமைக்க வேணும், இருக்கச் சொன்னால் இருக்கவேணும், அமுக்கச் சொன்னால் அமுக்க வேணும். முக்கச் சொன்னால் முக்க வேணும், அழச் சொன்னால் அழவேணும்... கட்டளைகளை நிறைவேற்றா விட்டால்? அல்ல, நிறைவேற்றச் சுணங்கினாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடி, அடி! அம்மாவைப் பார்க்கப் பாவமாகவும் இருக்கும். அவள் அவனைத் திருப்பி அடிக்கா விட்டால் பாதகமில்லை, கோவிச்சு 'டூ' விடலாம் அல்லவா? 'பாவம், அதுக்கும் ஒரு ஆண்பிள்ளை யைக் காணக் கோட்டை இருக்காதா?' விரதம், அடி அளித்தல், நோன்பு, தவம்... எந்தக் கோயி லும் பாக்கியில்லை. இன்னொரு குட்டிச் சர்வாதி காரியை பெத்துக் கொடுத்து விடவேணுமாம்...

அவன் உழைக்கிறானாம். அந்த உழைப்புச் சோறு போடுதாம்... ஆருக்கும் சொல்லும் நியாயம். அவனுக்கு முந்தி அம்மா எழும்பிடுவா. கூட்டிப் பெருக்கி, பாத்திரங்கள் தேய்த்து, அவன் முழிக்கின்ற நேரமாகக் காத்திருந்து அவன் ஆண்மையும் ஆதிக்கமுமே வாழ்க்கையின் ஆதார சுருதி என்ற அக்கறையுடன் முட்டைக் கோப்பி கலந்து கொடுத்து, குளிப்பதற்குத் தண்ணீர் மொண்டு, துணிகள் துவைத்து, மூன்று வேளையும் சாப்பாடு ஆக்கி, மரஞ் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றி, ஓலை முடைந்து, மாடு பார்த்து, கோழி மேய்ச்சு, பிள்ளைகள் இரண்டுடைய அத்தனை காரியங்களும் பார்த்து, இடித்து, அரைத்து, குத்தி, அவன் வந்து குறட்டை விடும் வரையிலும் முழிப்பாக இருந்து... இவை அனைத்தும் உழைப்பே...

இல்லை. இவை ஒரு பொட்டைச்சி செய்ய வேண்டிய கடமைகள்; ஊழியம். இந்த ஒரு வயிற்றுச் சோற்றுக்காக உழைப்பு முழுவதையும் ஏலுமோ ஏலாதோ, அவன் இஷ்டப்படும் நேரம் எல்லாம் உடலையும்... ஒரு சாண் வயிற்றுச் சாப்பாட்டுக்கு இவ்வளவு ஆக்கினைகள்! மின் விசிறியின் கீழ அமர்ந்து, இரண்டு கோப்பு களைப் புரட்டி, நாலு வசனங்கள் எழுதி, ஆறேழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையொப்பங்கள் வைப்பது தான் உழைப்பு. முறிச்சுச் செய்யிற பெரிய பணியார உழைப்பு!

ஒருநாள் அம்மா, பெத்தாச்சிக் கிழவியிடம் மெல்லமாகச் சொல்லி, அழுது கொண்டிருந் தாள். 'அம்மா எனக்குப் பயமா இருக்கு... அவர் இப்ப நல்லா, மூக்கு முட்டக் குடிக்கிறார். அடுத்தது கூத்தி... நாங்கள் நடுத்தெரு...' ஏன்? அப்பன் கோவைப் பழம் போன்ற கண் களுடன் வீட்டுக்கு வந்தால், அம்மாவுக்குப் பாவாடை நனையும் போலை... நல்லா நினைப் பிருக்கு... இரவு படுத்திருக்கேக்க ஏதோ காலைக் கடிச்சிட்டுது. நட்டுவக்காலியாத்தான் இருக்கும், செத்துப்போயிடுவன் எண்டு பயந்து போனன். அண்டைக்குப் பார்த்து பெரியம்மா வைப் பார்க்கப் போன பெத்தாச்சி வரவும் இல்லை. அழுதுகொண்டு, அம்மா படுத்திருக்கிற அறையைத் துறந்தால் ...அம்மா பாவம். அப்பா வையும் நெஞ்சிலை கிடத்தித் தாலாட்டித்தான் தூங்கவைப்பா போல... அப்பனின்ர பாரம் தாங்காமல் அம்மா திணறுவது போலவும்... அப்பன் ஓடி வந்து...'ஏண்டீ, உயிராடி போச்சு... சனியன்!' என்று என்னை இழுத்து, சுவரிலே ஒரு சாத்து... அடியில், நோவில், அந்தப்பயத்தில் எனக்கு பாவாடை நனைச்சு போச்சு... அம்மா வுக்கும் அப்பிடித்தானே?

மது செய்யப்பட்டதே ஆண்களின் சுகபோகத்திற் காகவாம்... தேவர்கள்கூட சோமபானம் குடிப் பார்களாம். போதை, தர்மம், வீராப்பு, வீம்பு, எல்லாமே மதுவினால் அவங்களுக்கு ஏற்படும் சம்பத்துகளாம். உழைப்பின் அலுப்பினைப் போக்கும் மருந்து. வெற்றிகள், தோல்விகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தோஷங்கள், துக்கங்கள், செழிப்புகள் இழப்பு அனைத்திணைக் களிக்கவும்-கவலை போக்கவும் ஆணாதிக்கம் கண்டுபிடித்த அற்புத மருந்து மது... மது ஆகுமானது. மது போதையிலே ஆணாதிக்கம் விஸ்வரூபமெடுத்து சங்கரதாண்டவமாடுதலும் தகும்... ஒருநாள். குடிவெறியில் வந்து, குடிகாரக் கூட்டாளி ஒருவனுடன் வாக்குவாதம். எங்கேயோ துவங்கியது எங்கள் வீட்டுப் படலைவரை இழுப்பட்டிருக்க வேணும்...'பேய்க் கத கதைக்காமல் மரியாதையாய் போ. இல்லாட்டி சங்கை கெடுவாய்...' அப்பன் கத்துகிறான். அவனுடைய ஆணாதிக்கதர்மம் வீட்டுக்கு அப்பாலும் வியாபித்துள்ளது என்பதைப் பறைதட்ட வேணும். அந்த வீம்பு. 'அதையும் பார்ப்பம்...' மற்றவனுக்கும் ரோஷம். 'போடா...' இருவரும் கட்டிப்பிடித்து, மல்லுக் கட்டுவது போலவும்... ஒருவன் விட்ட அறையிலே மற்றவன் வேலியுடன் சாய்ந்தது போலவும்... அம்மா கைவிளக்கை எடுத்து கொண்டு, படலைக்கு ஓடினாவு. நான் பின்னால ஓடினன். அப்பன்தான் விழுந்து கிடந்தது. மற்றவன் மீண்டும் மூர்க்கமாகத் தாக்கும் நோக்குடன், கதிகால் ஒன்றைவேலியில் பிடுங்கி எடுத்துக்கொண்டான்... 'தம்பி, கும்பிட்டன்... நீங்கள் போங்கோ... அவருக்குக் கொஞ்சம் கூடிச்போச்சு...' எடுத்த கோலை— கதிகாலை— வீசிப் போட்டு, 'உங்கடை முகத்துக்காக விட்டுட்டுப்போறன்...' ஈச்சேரிலே விடப்பட்ட அவன் புசத்திக் கொண்டிருந்தான். இனிச் சாப்பாடு இறங்காது. முட்டைப் பொரியல் எண்டாலும் திண்டிட்டுப் படுக்கட்டும். ஓடி ஆடிப் பொரிச்சுச் சுடச்சுடப் பீரிஸில் கொண்டு வந்து கொடுத்தாள். ஊட்டாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறையாகத் தின்னக் கொடுத்தால்... 'எடியே பறை வே... நீ அவனைப் போய்க் கும்பிட்டனீயே... அவன் பெரிய சண்டியனே?,.. படலையைத் துறக்கேக்கே விழுந்திட்டன்...வடுவாவைக் கொண்டிருப்பன்...ஏண்டி நீ படலைக்கு வந்தனி? பறைத் தட்டுவாணியாலை, அவன் என்னைப் பொண்ணையன் எண்டு நினைச்சுக் கொண்டு போகப் போறான்...' என்று சப்பிக் கொண்டிருந்த முட்டையை அம்மா முகத்திலே துப்ப... அவள் அதைத் தன் தாவணியால துடைத்து, பொறுமை பேணி, '...சாப்பிட்டுட்டுப் படுங்கோ. நாளைக்குப் பார்க்கலாம்' என்று அம்மா தெரியாத்தனமாகச் சமாதானம் சொல்ல, 'இவள் ஒரு ரோஷம் கெட்ட மூதேசி... அவன் என்ன கடவுளேடீ... அவனையே கும்பிட்டனீ... அவனோடை படுத்தால் கடுவனைப் பெறலாம் எண்ட நினைப்போடி' என்று கேட்டு, கையில் இருந்த பீரிஸை அம்மாவின் முகத்தில் எறிய, அது நொருங்கித் தூளாகி, எல்லாம் கோரமாக இரத்தம்...ஆண்மையை நிறுவ இரத்தப்பெருக்கு வேணும்...ஏலாமைகளை எல்லாம் வீரமாக்க என் அம்மா அவனுக்குத் தேவை!

ஆனாலும், அவளைத் திருத்தவே ஏலாது. பூ, பொட்டு, தாலி எல்லாமே புனிதச் சின்னங்களாம். அவற்றைக் காப்பாற்ற வாழுதல் பதிவிரதை தர்மமாம்...அவள் அப்பனை மட்டுமா இரவு நேரங்களில் தன் உடம்பிலே கிடத்தித் தாலாட்டினாள்? அவனுடைய ஆணவம், அதிகாரம், அக்கிரமம், ஆவேசம், வெறி, இராக்கதம் அனைத்தையுமே சுமந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு ஆறேழு வயசிருக்கும். மீண்டும் அம்மா பிள்ளைத்தாச்சியானாள். அரிய விரதங்களுக்கு ஆண்டவன் பதில் தந்த களிப்பிலே, நன்றிக் கடனுக்கான விரதங்களும் நோன்பும் இருந்து, உடலைக் கயிறாகத் திரித்தாள். உப்பிப் பெருத்த வயிறை மட்டுமே சுமக்கும் ஓர் எலும்புக்கூடு! மேளத்திலே தாளம் எழுப்ப நட்டுவனுக்கும் கோல்... இன்னொரு நாள் நடந்த வெறிக்கூத்திலே, 'உதிலை வளருறது மட்டும் நடுவனேடி? கடவுள் உனக்கு வந்து சொன்னவரோ?' என்று கேலி செய்து, விட்ட உதையிலே...

கர்ப்பம் கலைந்து, வயிறு கழன்று, கட்டிலிலே சில நாள்கள் கிடந்து... அவள் செத்துப் போனாள். பூவோடும், பொட்டோடும் போன சுமங்கலி எண்டும் அவள் குடுத்து வைச்சவள் என்று ஒப்பாரி வைக்க வந்து சேர்ந்த பெண்டுகள்...இந்தச் சீரழிவிலிருந்து பெண் குலத்தைக் காப்பாற்ற வேண்டும். அது முடியாது போனாலும், என்னையாவது காப்பாற்ற வேண்டும். பூவோடும், பொட்டோடும் சாவதற்காக நான் ஒரு மிருகத்துக்கு வாழமாட்டேன்.

இப்பொழுது முப்பத்தைந்து வயசு... என் சுதந்திரம் என் வசத்து... ஆண் துணை இல்லாமல் நான் செத்தே போனன்?

'Idiot' என்று பொரிந்து தள்ளியவள் பெரிய ரோஷக்காரி என்றால், அடுத்த அடுத்த சீட்டுகளிலே மாறி இருக்கலாமே... பெரிய இவவோ... நல்லாத் தெரியுது இவளுக்கு அடுத்த 'சீற்' இரண்டும் காலியாகவே இருக்கின்றது. 'அக்கம் பக்கத்திலை வந்து ஆரேன் இருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால் உரஞ்சிப்பாக்கலாம்' எண்டு நினைக்கிறாளாக்கும். இவள் அலையிற கேஸாத்தான் இருக்கும். இதுகள் கொஞ்சம் பிகுபண்ணத்தான் செய்யும். எனக்குத் தெரியாத இவளுகளா? யோக்கியமான ஒருத்தி, 'அடல்ஸ் ஒன்லி' படத்துக்குத் தன்னந்தனியாக வருவாளா? இது ஹைற கிளாஸ் சரக்காவும் இருக்கலாம். எதுக்கும் முதலிலை ஆள் ஆர் எண்டதைப் பார்த்துக் கொள்ளுவம். பெரிய கலைஞன் எண்டு ஊரிலை பேர் எடுத்து வைச்சிருக்கிறன். அவசரப்பட்டு, மொக்கேனப்படுறதும் வடிவில்லை. நடிகை ராஜத்துடன் தனகிய பொழுது எவ்வளவு ஆர்ப்பட்டம் செய்தாள்? வேட்டி உரிஞ்சது போல...பிறகு மணிமேகலை மந்திரம் ஓத, என் படுக்கையே கதி எண்டு கிடந்தவள். துபாய்க்கு வேலை கிடைச்சுப் போயிருக்காவிட்டால், இப்பவும் எனக்கு... பாரமும் இல்லை, சுமையும் இல்லை, சுதியும் சுதிதான். நாற்பது வயசு. இதுக்குமேல் இனி...

படத்திலே புலன் செல்லவில்லை. அந்த Shandy எந்த மூலைக்கு? இன்னொரு உஷார் ஏத்தினால்தான்... இடைவேளையின் வெளிச்சம் நினையாத சடுதியிலே குதித்ததாகத் தோன்றுகிறது. மனம் தன் பாம்புத் தோலைக் கழற்றி... இருள்தான் வசதி. ஆனாலும், இந்த வெளிச்சத்திலே, பிரஞ்சு நடிகையின் நிர்வாண அழகையும், மூச்சுத் திணறும் ஆக்கினையை இன்பமாக நிறுவும் நீண்ட முத்தக் காட்சிகளையும் ரஸித்து மகிழ வந்துள்ள இந்தத் துணிச்சல்காரி யார்? இத்தகைய ஒரு துணிச்சலை நான் சந்திரகலாவிடமே பார்த்திருக்கிறேன். அவள் உலகின் எத்தனை நையிட் கிளப்புகளைக் கிறங்கடித்தவள்? அவள் இன்டர் நேஷனல்ஆட்டக்காரி. 'இடியட்' என்று அர்ச்சனை செய்த இந்தக் கர்வியைப் பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே பார்வையில் அவளுடைய சௌந்தர்யம் என் இதயத்தில் நுழைந்தது. எப்பொழுதோ, எங்கேயோ நான் பார்த்துத் தொண்டை வீங்கி விழுங்கிய அழகின் வார்ப்புப் பிசகாத உருவம். உடலின் வடிவ அமைப்பிலும் பார்க்க விநோதமான ஒரு கவர்ச்சி அவள் உடலிலே கண்ணாமூஞ்சி விளையாடுவது போலவும். உற்றுப் பார்ப்பதை ஓரக் கண்களாலே நிதானித்துக் கொள்ளும் அவள் சடுதியாக எழுந்து, Fashion Parade இல் உடலின் வளைவுகளுக்கு அழுத்தங் கொடுத்து முன்னும் பின்னும் குலுங்கல் கவர்ச்சி சிந்தி நடப்பது போல Ladies Cloak Room நோக்கி நடக்கிறாள். மெலிந்த உடல் வாக்கில், குதியுயர்ந்த சப்பாத்து அணிந்து நடப்பதால், 'இதுதான் பெண்களுக்கு அளவான உயரம்' என்கிற மருட்சியைத் தருகிறாள். கருவூரிலே குடியிருந்த காலத்தில் அவளுக்கு உணவூட்டிய இணைப்புக் கொடியின் அடித்தளக்குழியின் சுவட்டினை அம்மணமாகக் காட்டும் வகையில் சேலை உடுத்தியிருந் தாள். மார்புப் பகுதியில் பெண்களுக்குப் பிரத்தியேக மாகத் தொங்கும் தசை மேடுகளை மறைப்பது மட்டுந் தான் சோளியின் வேலை என்ற பாவத்தில் இடம் பெற்றிருக்கும் குஞ்சுச் சட்டை. வயிறின் அசினத்துக்கும் கவர்ச்சி உண்டு என்கிற நவீன எண்ணத்துக்கு மசிந் துள்ள உடையலங்காரம். எழில் சொரியும் நல்லெண் ணெய் நிறம். கைப்பிடிக்குள் சிக்க வல்லதாகத் தோன்றும் இடை. சர்க்கஸ்காரியின் சாகஸத்துடன், மார்பகப் பாரத்தை நிறுத்தி வைப்பதான மலைப்பை ஊட்டினாள். உடற்கட்டு ஒல்லியாச இருப்பினும், முகத்தில் பஞ்சமோ வரட்சியோ கிடையாது. தசையும் மெழுகுமாய்க் கொழுத்திருக்கும் வட்ட முகம். புருவ வரம்பில் செங்குத்தாக எழுந்திருக்கும் மூக்கு, நுனியில் விளைந்து பூமியைப் பார்க்கும். கன்னிக்கோழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டையின் மையத்தில், கருஞ்சாந்துப் பொட்டிட்டுப் புதைத்ததைப் போன்ற கண்கள். அவற்றைப் பாதிக்கும் பணியில் கனத்த மயிரை விசிறியாகச் சிலுப்பி நிற்கும் இமைகள். புருவங்கள் மெல்லிய தூரிகையினால் இழுக் கப்பட்ட கோடாகத் தோன்றினாலும், எருவுண்ட வாசியில் குட்டிமயிர்கள் சடைத்திருந்தன. சின்னஞ்சிறு வாய். அதனைச் சமமாக அடைத்திருக்கும் மேல்-கீழ் உதடுகள். சுருட்டுப் பிடிப்பவனின் உதடுகளில் குடி யேறியிருக்கும் கருமை அந்த இதழ்களில் மருவி நிற்பினும், கருமையின் பதினாறு வயசு லாவண்யத்தை அந்த இதழ்களிலேதான் பருகமுடியும் என்றபிரமிப்பைத் தருகின்றன. அவற்றின் திரையைக் கிழித்து, புன்னகை அரும்பும் சமயம் எட்டிப்பார்க்கும் பல்வரிசை, பற்பசை விளம்பரத்திலும் பார்க்க, நகைக்கடை ஸோகேஸில் இடம்பெறத் தக்கவை. சுருள் கேசம், பக்கவகிடா-நடு வகிடா என்ற மயக்கத்தைத் தந்து, வாமனாவதார உருவில் கழுத்துக் குழிப் பிரதேசத்தில் சுருண்டு கிடந்தது. பசியுற்ற அகோரத்தில் அவளுடைய வனப் பினை அள்ளி விழுங்கும் என் செயல் பிடரியைக் கடிச் சிருக்க வேணும். சட்டென்று திரும்பிப் பார்த்து விழி களால் என்னைச் சுட்டு, cloak roomற்குள் நுழைந் தாள். ஆசைக்கு வெட்கமில்லை; பெண்ணிச்சைக்கு எதுவும் இல்லை,

Barக்குச் செல்கின்றேன். வெளியே மழை பாட்ட மாகப் பெய்கிறது. 'இந்த மழைக்கு பியர் மூத்திர அவஸ்தையை மட்டுமே தரும்' என்கிற புதிய ஞானம். 'ஜின்ஸிலிங்' ஒன்றுக்கு 'ஓடர்' செய்கிறேன். அவளை எங்கேயோ, ஒன்றுக்கு மேற்பட்ட சந்தர்ப்பத்திலே பார்த்திருக்கிறேன். எங்கே? 'நோட்டம் பார்க்க' ஏன் இவ்வளவு தயங்கினேன்? வாழ்க்கையில் எதுவுமே அது, அல்லது இதுதான். பூ அல்லது தலை. இன்டவல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்து, மீதிக்காட்சி தொடங்கப் போகிறது என்பதை அறிவித்து மணி அலறுகிறது. காணாது. இன்னொரு 'ஜின்ஸிலிங்!'

அவன் ஆள் விவகாரமானவன்தான். வயசிலும் பார்க்க இளஞன் போல துள்ளுகிறான். சனியன் எவ்வளவு இடமிருக்கவும், மலிவாகக் குளிர்காய எனக்குப் பக்கத்திலா வந்து குந்தவேணும்? you shit உன்னைப்போல எத்தினை பொறிக்கிகளைப் பார்த்திருக்கிறன். நீங்கள் இடிக்க வந்தோடனை நாங்கள், விலகிப் போயிட வேணும். இல்லாட்டில் நாங்கள் அடங்காமாரிகள். நீ என்ன சொன்னாலும் எனக்கு என்ன? உன்னிலும் பார்க்க அஞ்சாறு வயசு கூட இருக்கும் காசிநாதன் மாஷ்டருக்கு. இது நடந்து ஆறேழு மாசத்துக்குப் பிறகுதான் நான் சாமத்தியப்பட்டனான். கணக்குப் படிப்பிச்சவன். பெரிய Strict ஆன வாத்தியார் எண்டு பெயர் பண்ணியவன். சுத்த Humbug! எங்கை நாங்கள் சின்னப் பிழை விடுவம் எண்டு காத்துக் கொண்டிருப்பான். பொடியன்களுக்கு முழங்காலுக்குக் கீழை. பொட்டையளுக்குத் துடையிலை. பிரம்பால அடி. அடிக்கிறதிலை இன்பம் இருக்கிறாப் போல சிரிப்பான். பிறகு 'பிரப்பம் பழம் பழுத்திட்டுதுபோலை. எங்கை பார்ப்பம்' எண்டு அசிங்கமாய்ச் சிரிப்பான். துடையிலே ரத்தம் கன்றி காயந் தெரிந்தால் மகா திருப்தி. வீணீர் வழியப் பார்ப்பான். ஆள் முற்கோபக்காரனாம்; பிறகு இரக்கப்பட்டுத் தடவி விடுறவராம். எவ்வளவு காலத்துக்குப் பிறகு உண்மை தெரிஞ்சுது. ஆள் ஒரு Pervert. பிரம்பு அவருக்கு Extra கோல். செங்கோல் அதிகாரத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதிப்படுத்த, இன்னொரு கோல். அவர் தினமும் பெண்டிலை படுக்கச் சொல்லி பிரம்பால அடிச்சு பிரப்பம் பழம் வந்தால்தான் 'கிக்' வருமாம். அப்ப விளங்கேல்லை; பிறகு ஸ்டெல்லா அக்கா தன்னைப் படுக்க வைச்சுப் பிரம்பால அடிக்கச் சொன்னவ. நான் மறுக்க என்னை அந்தப் பிரம்பால அடிச்சு, 'இப்பிடிஎன்னை அடி குஞ்சு' என்று கெஞ்சினவ. அதுக்குப் பிறகுதான் காசிநாதன்ட வண்டவாளம் விளங்கினது. மழை பெய்ஞ்சு பிளாடர் முட்டிக் கிடந்தால், easing ஒரு சுகமான அனுபவந்தான்.

நாடகக்காரிகளுடன் கலைத் தொடர்பினால் ஏற்படுத்திக் கொள்ளும் உறவுகள், ஒன்றின் கொடுக்கல், இன்னொன்று கொள்வனவாகக் குதிரும் என்கிற லௌகீகம். வியாபாரத்திலுள்ள சுகம் ஆதாயக் கணக்கு மட்டுமே. ஆதாயக் கணக்கு இல்லாத ஆண்-பெண் உறவிலேதான் ஒரு புதுத்துவம் இருக்கு என்பது என் அநுபவம்... என்னுடன் மிக அந்நியோன்யமாக ஒரு நர்ஸ் பழகினாள். அவளுடைய பெயர் என்ன? லில்லியா, ரீட்டாவா? மறதிப் புழுதியிலே பெயர் மறைஞ்சு கிடக்கு. ஆனால், அநுபவம் நேற்று நடந்தது போலப் பசுமையானது. அவள் தன் ஜக்கட்டின் ஊசிகளைப் பூட்டு முறித்து, முன் பக்கம் திறந்து, தனந்தூக்கிக் கச்சுகளுக்கு ஓய்வு கொடுக்கும் பாங்கத்திலே என் கரங்களைச் சுமை தாங்கியாக்கி... பார்ப்பம் ஒருகை. மூன்றாவது ஜின்ஸிலிங்கைக் குடித்து முடிக்கிறேன். சோக்கா இருக்கு. இனிக் குடிக்கக்குடாது. அளவுக்கு மிஞ்சினால் எல்லாம் பிழைச்சுப் போகும்.

பெத்தாச்சிக் கிழவிதான் எங்களுக்குத் துணை. புனித திருக்குடும்ப கன்வெண்டின் தலைவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை பற்றிஸியா எங்கள்மீது இரக்கம் கொண்டதினால், படிப்புத் தொடர்ந்தது. அக்காவுக்கு புதிய சூழலிலே, சடுதியாகப் பக்தியும் விசுவாசமும் வந்துவிட்டது. ஞானஸ்நானம். புதுப் பெயர். தன்னைப் புதிசாக்கி வாழத் துவங்கினாள். அவள் புதிய மதத்தின்மூலம் விடுதலை தேடினாள். எனக்கு இன்னொரு பாதை புலப்பட்டது. கிறிஸ்தவக் கடவுள் பிரமச்சாரி. அவருடைய திருக்குமாரனும் அவ்வாறே. அன்னை மேரி கன்னியே. ஆண்-பெண் உறவு தவிர்க்கப்பட்ட பாவம். ஆண்டவன் சேவை என்பது, பாலுறவுகளை மறுதலித்துப் புனிதம் அடைதலாகும்... இருந்தாலும் பாவங்களை மனித குலம் செய்து கொண்டிருக்கத் தக்க விதத்திலே பிறப் புறுப்புகளை ஆண்டவன் ஏன் படைத்தான் என்பதும் விளங்கவில்லை... பெண்ணுக்கும், பெண்மைக்கும் கௌரவம் இருக்க வேணும். விலாசத்துக்கு இன்னொருத்தன் பெயரைக் காவ வேண்டும். முதலில் அப்பன் பெயர். அப்புறம் புருஷன் பெயர். அவன் நபுஞ்சகனாக இருந்தாலும், அவன் பெயரைச் சுமக்க வேணுமாம்! கல்யாணத்திற்கு பிறகு செங்கோலுக்குப் பணிந்து, மணி கிலுக்கல்களுக்கு ஏற்பப் படுக்க வேணுமாம்... படுக்கை, முக்கல், முணங்கல் எல்லாமே பத்தினி தர்மங்களாம்... அப்படியா? பொம்மை; வடிகால்... எச்சில் தொட்டி அழுக்கு; மலசல கூடம் அழுக்கு, அவன் உடம்பிலிருந்து கழியும் அனைத்துமே அழுக்கு... அந்த அழுக்கை சுமக்க ஏற்படுத்தப்பட்ட இன்னொரு Garbage bin புனிதமாம்... அப்பனின் அக்கிரமங்களுக்குச் சாட்சியாய் வளர்ந்தும் அக்காள் பாடம் படிக்கேல்லை...கர்த்தரின் சேவைக்காகப் பிரமச்சாரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரதம் ஏற்றிருந்த பிரதர் பீரிஸுடன் ஓடிப்போய் விட்டாள்... ஹட்டனில் வாழ்கிறாளாம்... அவளு டைய அழுக்குக் கூடையிலே இரண்டு பிள்ளைகள் பிறந்து வளர்கின்றனவாம்.

எனக்கு என் Self respect முக்கியம். நான் இந்த ஆணாதிக்க உலகத்திலே தனித்து வாழ்ந்து காட்டுவன்... வட்ட மயமான மயக்கங்கள். வட்டம் வேணும். வட்டம் பணம். அந்த வட்டத் தைத் தருவதற்காக எங்கள் வட்டங்களைத் தூர்த்தும் பணியிலே பலியாக வேண்டும். அந்த வட்டத்தைச் சம்பாதிப்பதுதான் சொந்தக் காலில் நிற்பதற்கான உத்தரவாதம். படிப்பு என் Obsession ஆக மாறியது. படிப்பு-உத்தியோகம் இரண்டுடனும் என் வாழ்க்கையின் அர்த்தம் பிணைக்கப் பட்டிருக்கு... கொச்சையான உவமைகள். பெண் நிலம். படுத்துக் கிடக் கும். அது கரம்பு நிலம். பண்படுத்தப்படாத நிலம். செங்கோலுடன் அல்லது உழும் ஆயுதத் துடன் ஒருத்தன் வருவான். அவன் உழுவான். உழுபவன் விதைப்பவன். அறுப்பான். எல்லாமே அவன் வசமான கற்பிதங்கள்... ஆணின் கழிவுப் பொருள் தாங்கும் கிடங்கு, 'Garbage Bin' கக்கூசு என்றெல்லாம் சொல்லக்கூடாதாம். நாம்பன் சாணகம்! உழவும் வேண்டாம்; விதைப்பும் வேண் டாம்! நான் கரம்பு நிலமாகவே வாழ்வேன். பெத்தாச்சிக் கிழவி, அம்மம்மா, அம்மா, அக்கா என்று... நான் வித்தியாசமானவள். புதுயுகச் சிந்தனைகளின் தலைமகள் நான். அடிபணியாத வாழ்க்கை... பல்கலைக் கழகத்தில் சேர்ந்தேன். படிப்பு. பட்டம். அது சம்பாதிக்கும் உத்தியோகம். பிறகு வட்டம். வட்டங்கள் என் வசப்படும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் Final year படித்துக் கொண்டிருந்தன். பெண்ணியத்தை வாழ்விப்பதற்கான விவாதமாம். சர்வதேசப் பாட்டாளிகளை ஒன்று படுத்தினார் கள். பொதுவுடமைப் பூங்காவை நிறுவி உலகின் சுரண்டப்பட்ட உழைக்கும் வர்க்கத்தை ரட்சித்து விட்டார்கள். ஏழை பணக்காரன் என்கிற வேறு பாடுகளை ஒழித்து விட்டார்கள். அனைத்து மக்களின் அடிப்படைச் சுதந்திரத்தை வென் றெடுத்து விட்டார்கள். அரிவாள் சம்மட்டிச் சின்னங்கள் சர்வ வியாபகம்.எங்கும்செம்பதாதை கள் புரட்சிகரமான பாட்டாளி வர்க்கத்தின் மேன் மையைப் பாறைசாற்றுகின்றன. முற்போக்குச் சிந்தனா மகிமைகளினால், கம்பனுக்கும் மில்ட னுக்கும், பாரதிக்கும் ஷெல்லிக்கும் 'தண்ணி' காட்டக் கூடிய மகத்தான இலக்கியங்களைப் படைத்து விட்டார்கள். இனிச் சாதிப்பதற்கு ஒன்றே ஒன்றுதான் பாக்கி! பெண்மையின் மாண் பினை, பெண்ணியத்தை நிலைநாட்டுதல் ஒன்று தான் பாக்கியுள்ள பணி. கம்யூனிஸத்திலேயே விமுக்திக்கு உள்ளாகாத பெண்ணியத்தை, இப் பொழுது தமது பேச்சாலும் எழுத்தாலும்சேவித்து வென்றெடுக்கப் புறப்பட்டுவிட்டார்கள். தங்கள் பக்கத்து நியாயங்களை உறுமிக் காட்டுவதற்காக ஒரு விவாதம். இதனால், மாணவர் மன்றத் தேர்தலிலே தாய்க்குலத்தின் ஆதரவு கிட்டும் என்பது உள்நோக்கம் என்று எதிரணியினர் சாடினர். எதிர் அணிக்கு ஒருவன் பேசி னான்... பெண்கள் அடிமைத் தளைகளிலிருந்து விடுதலை பெறவேண்டுமாம். நல்லது. அவர்கள் சுயசம்பாத்தியத்துடன் சுயகாலிலே நின்றால், பெண்ணியம் வாழுமாம். நல்லது. ஆனால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று. மனிதன் உணவினால் மட்டும் வாழ்வதில்லை. உணர்ச்சிகளின் இசைவாக்கமே வாழ்க்கை. இசைவாக்கத்திற்கு இரண்டு சுருதிகளின் சங்கமம் தேவை. இரு வேறு சுருதிகளை எழுப்பும் வகையிலேதான் ஆணுக்கும் பெண்ணும் உடலுறுப்பு வேறுபாடுகள் அமைந்துள்ளன. இதனை ஆட்சேபித்தல், இயற்கையையும் படைப்பையும் இம்சித்துக் கொச்சைப்படுத்துவதாகும். நான் ஒரு சவால் விடுகிறேன். சின்னச் சவால்... நான் 'சூ' அடிக்கிறேன். அந்தத் தூரத்திற்கு பெண்ணியத்தின் தலைவிகள் செய்து காட்டட்டும். நான் Complete surrender.. நிபந்தனையற்ற பூரண சரணாகதி...' என்று சொல்லவும், மற்றைய ஊத்தையன்கள் எல்லாம் சேர்ந்து ஊளை இட்டான்கள்... கள்ள ராஸ்கல்...!

பட்டப்படிப்புப் படிப்பவன் பேச்சா இது...? ஆயிரம் யோனிகள் ஒரே சமயத்திலே உன்மீது தமது நர 'கோமய'ங்களாலே உன் மூஞ்சியை அபிஷேகஞ் செய்தால்தான் உனக்குப் புத்தி வரும்! உன் ஊத்தை புனிதப்படும்.

பெண்ணாசை உள்ளத்தின் கொச்சைத்தனமான விகாரமாக இருக்கலாம். ஆனால், சில கணப் பொழுது நேரத்திலென்றாலும் அது தேசபக்தியிலும் வீறுமிக்கது...திரையில் ஓடும் படத்திலே லயித்திருப்பதான பாவம். பார்டோ இந்தப் படத்திலே நாலாவது தடவையாக தன் மேனியின் அம்மண அழகினை சினிமா மகாஜனங்களுக்குக் காட்டுகிறாள். என்னமாய் விசிலடித்து பார்டோவின் அம்மணத்திற்கு சலாம்கொடுக்கிறார்கள். கதிரைச் சட்டத்துக்கு மேலாக அவள் பக்கமாக என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலைச் சரிக்கிறேன். இது உண்மையில் ஒரு கேஸ்தான். கூச்ச நாச்சம் இருந்தால், வேறை சீட்டுக்குப் போயிருக்கலாம் இல்லையா? எத்தனை காலியான கதிரைகள்? குளிர்காயத்தான் திரும்பவும் எனக்குப் பக்கத்தில வந்திருக்கிறாள். சாதுவாக் கையைப் போட்டு நோட்டம் பார்க்க வேண்டியதுதான்.

நோட்டமா பார்க்கப் பார்க்கிறாய்? பார், பார்ப்பம். நீ விழுங்கிறதுக்கு உனக்கு நீளமான கயிறு நான் தரவேணும். நான் என்னை வென்றவளடா. என் உடலின் பலத்தையும் பல வீனத்தையும் அறிஞ்சவள். இந்த, சுய உடல் திருப்திகளை, நான் பல்கலைக் கழகத்தை விட்டு வெளியேறுவதற்கு முன்னரே கற்றுத் தேறி விட்டேன். என் ரூம் மேட், ஐடா, இதில படு சூரி. இன்று அவள் குறுணாகலை Government Agent ஆக எல்லாரையும் ஆட்டிப்படைக் கிறாள். அவள் அப்படி ஆட்டிப் படைக்கும் ஆண்மை உள்ளவள். 'பெண்ணியம் இலட்சிய பூர்வமான நியாயங்களினால் நிறுவப்படுவ தில்லை. அது தத்துவம் அல்ல. அது வாழும் முறை. உடலும் அதன் உணர்ச்சிகளும் முற்று முழுக்க நமது கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேணும். அவற்றை நம் வசம் வைத்துக் கொண் டால், ஆண்களுக்கு அடிபணியும் சந்தர்ப்பங் களையும் நிர்ப்பந்தங்களையும் நாம் தவிர்த்துக் கொள்ளலாம். ஆண்களின் சவகாசமே இல்லாது நமது உணர்ச்சிகளைத் திருப்திப்படுத்த, நமது உடல்களையும் உணர்ச்சிகளையும் பக்குவப் படுத்திக் கொள்ளவேணும். Yield to temptations; but on our own terms பெண்ணியத்தைத் தக்க வைப்பதற்கு இதுதான் சாஸ்வதமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை. I have conquered myself... அதுதான் ஆணாதிக்கத்தின் முதுகில் நாம் கொடுக்கும் சாட்டையடி!...' என்று ஐடா பெரிய லெக்சரே தந்தாள். அவளுடைய I.Q.வும் ஆளுமையும் ஆரையும் பிய்ச்சு உதறவல்லது. அவள் கூறுவது புரியவும் இல்லை. 'எப்படி?' என்று செம்மறி போலக் கேட்டன். 'Lesbian' என்கிற சொல் லும் புதிதாய் இருந்தது. ஆனால், அவள் இலேசாக உடலின் உணர்ச்சிகளைக் கிளறி விட்டு, புதியதோர் பிரபஞ்சத்தை என்னுள் சிருஷ்டித்து, நான் ஆட்சேபிக்க இயலாத ஒரு சுக நிலையிலே என்னை வசப்படுத்தி, உடல் என்பது உடல் உணர்ச்சி நிலைகளை tune செய்து, சுகமான ராகங்கள் எழுப்பி, ஸ்கலிதங் கள் நிகழ்த்தி, மெதுவாக உடலை உணர்ச்சிகள் இழந்த நிலைக்கு மீட்டெடுக்கும் மாயவித்தையை என்னிலே நிகழ்த்தியது எனக்குப் புதுமையாக இருந்தது... முடிந்ததும், வெட்கமுடன் முகத் தைக் கைகளுக்குள் ஏந்திக் கொண்டேன். 'என் கண்களை நேரிலே பார். நீ எதையாவது இழந்துவிட்டாயா? உன் பெண்மை? உன் மென்மை? உன் கௌரவம்? உன் சுயமரியாதை? இந்த உச்சங்களையும், சிந்தப்படும் எச்சங் களையும் இச்சித்து, நாங்கள் ஒரு வோஷீங் மெஷினாக, ஒரு ஸ்ரிப் பெட்டியாக, ஒரு குக்க ராக, ஒரு குஷினியாக, ஒரு டொய்லெட்டாக, ரி.வி. உட்பட ஒரு எண்டரெயிற்மெட் செட்டாக, உஷ்ணமும் குளிரும் ஏற்றும் சாதனமாக, ஒரு கட்டிலாக, ஒரு மெத்தையாக, பிறகு அவன் குஞ்சுகளை அடைகாக்கும் இன்குபேட்டராக, ஜிம்னாஸ்டியமாக, இறுதிக் காலத்தில் மியூஸிய மாக... இன்னும் என்னென்னோவோவாக,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது சக்தி அனைத்தும் ஆண்களுடைய ஈகோவைப் பிரீதி செய்யும் சேவகத்திலே விரய மாகி, ஈற்றிலே எலும்புக்கூடாகவோ, நித்திய நோயாளியாகவோ வாழவேண்டுமா?

படிப்படியாகச் சில பக்குவங்களை மட்டுமல்ல, புதிய ஞானங்களையும் பெற்றுக் கொண்டேன். பலவீனமான நேரங்களிலும், உணர்ச்சிப் புயல் களின் மத்தியிலும், தன்னைச் செங்கோலின் அதிகாரத்திற்கு அடிபணியாது பாதுகாத்துக் கொள்வதிலேதான் பெண்மையின் முழுத்துவ மான விடுதலை கிடைக்கும்! சமையலில், சங்கீதத்தில் உள்ள ரஸவேறுபாடுகளைப் போன்றே, இதிலும் Permutation and Combinations இருப்பதை அறியும்பொழுது படு 'திறி'லாகவும் இருந்தது. பெண்ணும் பெண்ணும் ஆத்மார்த்த உணர்ச்சி ரீதியான நிலையில் உறவுகள் வைத்துக் கொள்ளலாம். இது தவிர்க்கப்பட்டதாக நிறுவும் மதங்களும் இல்லை. உயர்வு—தாழ்வு என்கிற ஆதிக்க மில்லை. நல்ல சிநேகிதிகள். நல்ல கூட்டாளி கள். சமகடமைகளும் ஈடுபாடுமுடைய பங்காளி கள். லிங்கமூர்த்திகளின் வக்கிரங்களும் ஈகோக் களும் தறித்தெறியப்படும். யோனி மயமான ஒரு புதிய உலகம் தோன்றும்... அப்பன்-பிறதர் பீரிஸ் போன்ற அகங்காரிகள் நுழையாத ஒரு வாழ்க்கை. உடலையும் தன்னையும் வசப் படுத்திய வாழ்க்கை. The Supreme நிப்பாண!

இவருக்குச் சேட்டை மிஞ்சுது. இவர் இந்தத் தடவைதான் முறையான ஹோட்டலிலே சாப் பிடப் போறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதென்ன சங்கடமடா? பக்கத்திலும் இருக்கிறாள். தேவையில்லை யென்றால், விருப்பமில்லை என்றால், அடுத்த சீற்றில் மாறி இருக்கிறதுதானே? அதை விட்டிட்டு என் கையைப் பிடிச்சுக் கிள்ளவேணுமா? இரத்தம் வரும் போல இருக்கு. இந்தத் தேவடியாளின்ரை நகங்களும் வலுகூர்! வயிற்றிலே புளித் தேறும் மதுவிலே என் ரோஷம் மூர்க்கம் கொள்ளுகிறது. உனக்கு இவ்வளவு இருக்கு மென்றால், உன் துடையைப் பிய்ச்சு நாலு நாளுக்கு நடக்க முடியாமல் செய்வேண்டி... நான் ஆண்.

> உன் ஆண்மையின் அளவென்ன? அதன் தன்மை என்ன? பெண்களின் விதிகளை அழித்தெழுதும் ரப்பரா? சிங்கப்பூர் கடைகளிலே கிடைக்கும் கடினமான பிளாஸ்டிக்கா? நரம்புத் திரட்சியா, எலும்பா?எலியா?பொந்துக்குள் பாயத் துடிக்கும் எலி!

நான் நினைச்சது சரி,ஆள் பெரிய 'ஹம்பர்'! இப்ப தன் பாட்டிலை கையை விட்டுத் துளாவுறா...ஹை கிளாஸ்... மழை விட்டால் ஆளைச் சாய்ச்சுக் கொண்டு போகலாம் போலவும் கிடக்கு...

> எப்படி? சுதியா இருக்கிறதா? புற்றுக்குள் நுழைவதற்கு முன் படமெடுத்தாடும் பாம்பா?
>
> மயங்கு? இதுக்குத்தானே அலைஞ்சனீ?... you shit! இருந்து பார். இறுதியில் சிரிக்கப் போவது என் வைராக்கியமும், ஆண்மையுமே!

'ஐயோ!'

ஊசி ஏதாவது வைச்சுக் குத்தினாளோ? வலிதாங்க முடியாது, கதறிக் கொண்டு துள்ளி எழுந்தேன். என் அலறல் கேட்டு, இரண்டு 'சீற்'றுகள் பின்னால் இருந்த இருவர், 'என்ன? என்ன விஷயம்...' என்று பரபரப்புடன் கேட்டனர்.

UNIVERSITY OF PERADENIYA
17-2-1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஏதோ நட்டுவக்காலியோ, தேளோ கடிச்சுப் போட்டு தாம்...' என்று பின் பக்கம் திரும்பி நிதானமாகப் பதில் சொன்ன அவள், மிக இயல்பான குரலிலே, 'சேர், படம் பார்க்கிறவங்களைத் தொந்தரவு செய்யாமல், Bar பக்கம் போய் வேட்டியை நல்லா உதறிப் பாருங்கோ!' என்று சொன்னாள்.

அவளுடைய கழுத்தை நெரிச்சு அவளைக் கொல்ல வேணும் போல ஆத்திரம்.

ஷோ முடியவும் போகிறது. ஆத்திரம் ஒரு புறம், வெட்க மும் அவமானமும் மறுபுறம். Barக்குள் நுழைந்து, 'ஒரு ஜின்ஸிலிங்' என்றேன்.

வெளியே பெரும் பாட்டமாக மழை பெய்து கொண்டிருக் கிறது. □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை







# பாகம் 1

## மித்தி!

இந்தப் பெயரிலேதான் நீ என் நெஞ்சில் நிலைத்துள்ளாய். மித்ரா என்கிற உன் பெயரை நீயாக அழித்தெழுதினாய், என் சித்தப்படி அல்ல; உன் சித்தப்படியே வாழ்கிறாய். என் நெஞ்சிலே, உன்மீதுள்ள அன்பு முட்டி வழிந்தால், மிகச் செல்லமாக 'பார்த்தா' என்று அழைப்பேன். அதன் அர்த்தமறிந்து நீ சிலிர்ப்பது எவ்வளவு அழகாக இருக்கும் தெரியுமா? அந்தப் பெயரிலேகூட நீ ஒரு திருத்தம் கொண்டு வந்தாய். திருத்தங்களும், விடுதலைக்கான அர்த்தத்தினைத் தேடியதுமே உன் வாழ்க்கை. நான் மானுஷீகத்தின் தேடல் என்றேன். மானுஷீகத்தின் கௌரவம் பற்றிய தேடல் என்று திருத்தம் போட்டாய். நான் தமிழ் ஊழியம் என்றேன். நீ தமிழ் இனத்தின் ஊழியம் என்று திருத்தம் போட்டாய். ஐவருள் நடுவிலன் என்கிற அர்த்தத்தில் பார்த்தன் என்றேன். விடுதலை வெறியின் கம்பீரியம் அர்ஜுனா என்கிற பெயரிலேதான் இருக்கிறது என்று திருத்தம் போட்டாய். நீ அர்ஜுனாவாகவே வாழ்கிறாய். உன் சித்தப்படி வாழ உனக்கு உரிமை உண்டு. அப்படியே வாழு! ஆனாலும், எனக்கு—எனக்கு மட்டும் என்றாலும்—நீ மித்திதான். நீ விரும்பாவிட்டாலும், அப்படித்தான் நீ என் நெஞ்சில் வாழவேண்டும். இதில் மட்டும் திருத்தம் போடாதே.

இலக்கியம் பற்றிய இந்த யாத்ராவை நீ போட்ட திருத்தங்களையும் உள்வாங்கியே மேற்கொள்ளுகிறேன். தமிழனுக்கான முகம் தேடும் யாத்ராவும்! மே 24 இல் நான் சிட்னியிலிருந்து புறப்பட்டேன். அண்ணாவும் அண்ணனும் வழியனுப்பி வைத்தார்கள். நீ வந்திருந்தால் கட்டிப்பிடித்து முத்தம் தந்தே வழியனுப்பியிருப்பாய். உன் 'ஆய்' எப்பொழுதும் எனக்கு இனிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு தோறும், என் பிறந்த நாளில், என்னை இறுக்கிக் கட்டியணைத்து, ஆலிங்கனஞ் செய்தவாறே முத்தம் தருவாய். எவ்வளவுதான் வளர்ந்தாலும், இந்த ஒரு விஷயத்தில் மட்டும் நீ குழந்தையாக மாறிவிடுவாய்.

நீ எனக்குக் கடைசியாக முத்தந் தந்த நாள் நினைவிருக்கிறதா? அது என் பிறந்த நாள் அல்ல. சென்னையிலிருந்து தில்லிக்கும், அங்கிருந்து நைஜீரியாவுக்கும் பயணம். 1984 மார்ச் 13 ஆம் நாள். அம்மாவையும் என்னையும் வழியனுப்ப நீ மட்டுமே சென்னை விமான நிலையம் வந்திருந்தாய். அதிகாலை நேரம். பறப்புக்கான நிலையச் சடங்குகள் முடிந்தன. 'அப்பா, காப்பி சாப்பிடுவம்.' இருவரும் அருந்தினோம். பறப்புக்கான அழைப்பு. சட்டென்று என்னைக் கட்டியணைத்து முத்தந் தந்து விடைபெறுகின்றாய். அதுவே நான் அனுபவிக்கும் உன்னுடைய கடைசி முத்தம் என்பது எனக்கு அப்பொழுது தெரியவே தெரியாது! நீ உணர்ந்தவன். உனக்குத் தெரிந்திருக்கும். நான் அணிந்திருந்தது சந்தனக் கலர் ஜிப்பா. உன்கதையும் அடங்கிய 'ஆண்மை' நூல் வெளியீட்டு விழாவிலும் அதையே அணிவேன். உன் நினைவாக என்னிடமுள்ள அரிய சொத்துக்களுள் அதுவும் ஒன்று.

நீ எதில் எதிலெல்லாம் திருத்தம் போட்டாய் தெரியுமா? என் தோற்றத்திலும் அலங்காரத்திலுங்கூட நீ திருத்தங்கள் கொண்டுவந்தாய். உன் திருத்தங்கள் எப்பொழுதும் கலைத்துவமானதாக இருக்கும். என் வித்துவ ஏமாப்பு என் பலம் என்று வாழ்பவன் நான். அதனை என் ஆணவம் என்று ஏனையோர் கொச்சைப்படுத்துவது பற்றி மனசை அலட்டிக் கொள்ளாதவன். ஆனாலும், உன் திருத்தங்களை ஏற்றுக் கொள்வதும் என் சுபாவமாகியது. இந்தச் சுபாவமும், என்னிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேரூன்றிய அந்த நிகழ்வும் என்னுள் பசுமையானது. நீ என் உள்ளொளியும்.

ஒரு தீபாவளிக்கு இரண்டு மூன்று தினங்கள் இருக்கும். 1979 ஆம் ஆண்டு. சூறாவளியினால் முற்றிலும் நிர்மூலமான வீட்டினை ஓரளவு திருத்தி முடித்திருந்தேன். அத்திருத்தம் எங்களுடைய தேட்டங்களையும் வருமானங்களையும் விழுங்கியதுடன், கடனாளிகளாகவும் ஆக்கியிருந்தது. கடனைக் காரணம் சொல்லி, பிள்ளைகளுடைய பண்டிகைக் குதூகலங்களை பிசக்கல் ஆகாது. உங்களுடைய குதூகலங்களுக்கும் சந்தோஷங்களுக்கும் எப்பொழுதும் உங்களுக்கு உரிமை உண்டு. அவற்றை மதித்துக் கனம் பண்ணுவதற்குப் பெயர்தான் பாசம் என்று உன் அம்மாவும் நானும் விளங்கிக் கொண்டோம். பொன் வைக்கும் இடங்களிலே பூவைத்து நிறைவு செய்வதிலும் உன் அம்மா வலு சூரி. எனவேதான், சொற்ப பணத்தில் உங்களுக்கான புத்தாடைகள் வாங்கும் பொறுப்பினை அவளிடம் ஒப்படைத்தேன்.

இடையில் ஒரு சந்தேகம். உன் அக்காள் எப்பொழுதும் அப்பா பிள்ளை. அவள் மூஞ்சியும் சிக்கனமும் யாழ்ப்பாணமாம். உண்மையில் என் அம்மாவின் முகச்சாயலும் உண்டு. அப்பா பிள்ளையாக்க கட்சி சேருவதில் அவளுக்கு விருப்பம். அண்ணா எப்பவும் அம்மா பிள்ளைதான். தன் தந்தை தம்பான் வன்னியசிங்கத்தின் உருவச் சாயலை உரிச்சுப் பிறந்திருக்கிறான் என்பதிலே உன் அம்மாவுக்கு மகா கர்வம். நான் கலையென்றும், அதன் உப விளைவான 'குடி'யென்றும் குடும்பத்தின் அன்றாட நிர்வாகம் பற்றி அலட்சியமாக இருந்த காலங்களில், அவன் குடும்பத் தலைவனாய் நடந்தான். இதனாலும் அம்மா பிள்ளை. பேச்சாளனாய் மேடையில் முழங்கும் பொழுது மட்டும் அப்பா பிள்ளை. மற்றும்படி, முழுநேர அம்மா கட்சி ஊழியன். நீ அம்மா கட்சியும் இல்லை; அப்பா கட்சியும் இல்லை. எப்பொழுதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயத்தின் கட்சி. நியாயச் சேவிப்பிலே நீ தர்மத்தின் உபாசகனாய்ப் பரிணமித்தாய்.

அம்மாவுக்கு மட்டக்களப்பு மண்ணின் பெருமை பேசுவது அலுக்காது. அம்மம்மா எப்பொழுதும் அம்மா கட்சியின் உச்சப் பிரசாரகர். சில கதைகள் புராணங்கள் சாங்கத்தில். அந்தக் கதைகள் உன் நம்பு திறனை உசுப்பினால் ஒரு வகைக் குறும்பு கலந்து சிரிப்பாய். இந்த லோகத்திலேயே சிரிப்பால் மயக்கியவர் அப்பையாதான். அவர் செத்தபின்னர், அந்த வஞ்சகமற்ற சிரிப்பை நீஒருவனே சுமந்து திரிந்தாய். உன் சிரிப்பு எதிர்பாராத சடுதியிலே முகை அவிழும். மட்டக்களப்பு பற்று இதிகாஸ ரூபங்கள் பெறும் பொழுது. அந்தக் கள்ளச் சிரிப்பு உன் முகத்திலே என்னமாய் மனைகோலும் தெரியுமா? 'இது தொக்கம்மா கதை!' உன் உதடுகளின் அசைவில் நான் விளங்கிக் கொள்ளுவேன். அம்மாவுக்கு அவதி. அவளை யாரும் எதிர்ப்பதில்லை. சின்ன உப்போடையின் ஹிட்லர் என்கிற ஒரு ராங்கியும். நான் வீட்டிலே அம்மாவின் சிண். எத்தனையோ முனைகளிலே பகையை வளர்த்து, அவற்றின் சங்காரமே வாழ்வின் சாரமாக்கிக் கொண்டவனுக்கு, இந்தச் சிண் விளையாட்டுத் தோதானது. ஆரம்பத்தில் 'தொக்கம்மா' என்பதைத் தனக்கு எதிரான குரல் என்று விளங்கிக் கொண்டாள். அந்த முகத்தில் ஏற்படும் கிரகணம் மகா கொடியது. நீ அவளைப் பின்னின்று அணைத்து, உன் கரங்களுக்குள் இறுக்கிக் கொஞ்சுவாய். 'என்ர தொக்கம்மா...உள்ளம் அளவே உருவுடைய தொக்கம்மா' என்பாய் ஒருசமயம். 'தொக்காக இருப்பது என் அம்மாவுக்கு மட்டுமே வடிவு' என்பாய் பிறிதொரு சமயம். நீ மகாவித்தைக் காரண்டா! அவள் முகத்தைப் பீடித்த இராகு-கேதுக்கள் விலகி, பூரணையான முகத்துடன் 'விடடா மித்தி' என்று கத்துவாள். அவள் மனசை நோகச் செய்யும் எண்ணம் எப்பொழுதும் உனக்கு இருந்ததில்லை. ஆனாலும், ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைக்காகக்கூட அவள் அநியாயத்தின் பக்கம் சாய் வதை நீ உடன் 'சலஞ்' செய்யாது விட்டதுமில்லை. அப்பொழுது அவளிடம் ஏற்படும் பரிதவிப்பு, எனக்குத் தரும் மகிழ்ச்சி கொஞ்சமல்ல. உன் வெற்றிகளை என் வெற்றிகளாகக் கணக்கிடும் களிப்பு! ஆனால், அம்மா வும் ஜெயித்துக் கொண்டே இருக்க வேண்டும். குடும் பத்தை அன்புடனும் ஆரோக்கியத்துடனும் கட்டி வளர்ப் பதிலே அவள் அடைந்த வெற்றிகளே இன்று என் திருப்திகளாக நிலைத்துள்ளன. உண்மை. ஆனாலும், அவள் சதா உன்னிடம் தோற்றுக் கொண்டே இருக்க வேண்டும் என்றும் ஆசைப்படுவேன். இல்லா விட்டால், கிரகணமும் பூரணையும் விரல் நொடிப்பு நேரத்தில் நிகழும் அற்புதத்தை எப்படி ரஸிக்க முடியும்?

அவள், அந்தத் தீபாவளிக்கு, 'லக் சலா'வில் மலிவு விற்பனைத் துணிகளை உங்கள் புத்தாடைகளுக்கு வாங்கி வந்தாள். அந்தத் துணிகளிலிருந்து வீசிய மண்ணெண்ணெய் மணமே அதன் தரத்தைப் பறை சாற்றியது! தன் இயலாமையை, ஏழ்மையை எல்லாம் மறைத்து வீராப்பாகப் பேசுவது தொக்கம்மா சுபாவம். தான் வாங்கிய துணிகள் எல்லாம் ஒவ்வொரு பிள்ளைக்கும் எவ்வளவு 'மாட்ச்' ஆன நிறங் களும் டிசைன்களும் என்று அவள் தாளித்துக் கொண் டிருந்தாள். அண்ணா எப்பவும் அம்மா பிள்ளை. வீட்டுச் செலவுகளைச் சிக்கனப்படுத்துவதில் அக்கா, அம்மா பிள்ளையாக மாறியிருந்தாள். சின்னவன்கள் இருவரும் எடுப்பார் கைப்பிள்ளைகள். வீட்டுப் பிரச்சினைகளில் நான் பச்சோந்தி—படு பச்சோந்தி! நியாயத்தினதும், தர்மத்தினதும் நிறமல்ல. எண்ணிக்கையே என் நிறத் தைத் தீர்மானிக்கும். நீ எப்பொழுதும் தனி. நியாயத் தின் குரல்; அநியாயத்துக்கு எதிரான போர்க்குரல். அது அவளுக்குத் தெரியும். உனக்கான சட்டைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணியை உன் தோளிலே போட்டுப் பார்த்து, 'மித்திக்கு இது என்ன வடிவு?' என்று தாளித்தாள். நீயா மசிபவன்?

'போங்கம்மா. தீபாவளிக்குப் புதுத் துணிவேணும் என்று கேட்டனா? இது மகா மோசமாக துணியம்மா...'

'எட, மித்தி! இது அம்மாவின்ர செலக்ஸன்... என்ர செலக்ஸனை ஆரும் கூடாது என்று சொன்னது இல்லை...' பிடிவாதம் அம்மாவுடன் கூடப் பிறந்ததல்ல. திரேஸா கண்வென்ட் சகவாசத்தால் வந்தது என்று அம்மம்மா சொல்லுவாள். அப்பொழுது அவள் திரேஸாவிலேதான் டீச்சர். 'My selection is always a perfect selection' என்று தன் குரலை உயர்த்தி அழுத்திச் சொன்னாள்.

'அம்மா உங்களுடைய செலக்ஸன் எண்டு சொல்லாதேயுங்க... அப்பாகூட உங்கள் செலக்ஸன்தானே?' நக்கல் அடிப்பதிலும் நீ மன்னன்டா!

'இஞ்சை பாருங்கோ, இவன் உங்களைப் பற்றி என்ன சொல்லுறான் எண்டு...' ஆத்திரத்தில் அம்மாவின் குரல் உடைந்து விடுகிறது.

'அவன் சொன்னதில் என்ன தப்பு? தினமும் கண்ணாடியில என்ர மூஞ்சியைப் பார்க்கிறேன்... என்ர மூஞ்சியைக் காதலிக்கிறதுக்கு அசாத்தியத் துணிச்சல் தேவைப்பட்டிருக்கும்டீ...'

என் பதிலைக் கேட்ட மற்ற பிள்ளைகளும் சிரித்தார்கள். அம்மாவின் அழுகுரல்தான் அந்தச் சிரிப்பலையை அடக்கிற்று.

நீ மாயங்கள் அறிந்தவண்டா. 'தொக்கம்மா' வைக் கட்டிப் பிடித்து, அவள் செவிகளுக்குள் ஏதோ செல்லக் கதைகள் பிழிகின்றாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'காக்கைக்கும் நரிக்கும் கல்யாணம் நடக்கும்' வேளை யிலே மழை பெய்ததும், வீச்சு வெயில் எறிக்குமே! அப்பொழுது இலை நுனிகளிலே வழியும் நீர்த்துளிகள் என்னமாய் ஜொலிக்கும் தெரியுமா? அம்மாவின் இமை விளிம்புகளிலே காயாது தேங்கிய கண்ணீர்த் துளிகள் அவள் முகத்திலே சடுதியாக வெடித்த சிரிப்பிலே எத்தகைய மோகனம் சேர்த்தது தெரியுமா? உன் அம்மாவின் முகம் அப்பொழுது அப்பிக்கொண்ட மோக னத்துக்கு இந்த லோகமே ஈடாக மாட்டாது.

அதற்குப் பிறகு உனக்கு உன் 'செலக்ஷன்' என்கிற சுயாதீனம் உன் வசத்து. உன் ஆளுமை அதற்கும் மேலானது. நான் எப்பொழுதும் வெள்ளை ஜிப்பாவே அணிவேன். நிறத்துணியில் தைக்கலாம் என்றஎண்ணம் எப்பொழுதும் எழுந்ததில்லை. மதுரையில் நடைபெற்ற தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்குச் செல்ல அம்மாவும் நானும் ஆயத்தமாகிக் கொண்டிருந்தோம். அங்கு நான் என் ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பிக்கும்படி கேட்கப்பட் டிருந்தேன்.

நீ எனக்காக சந்தனக் கலரிலே துணி வாங்கினாய். ஜிப்பாவுக்கான புதிய டிசையின் ஒன்று தேர்ந் தெடுத்தாய். என்னை இழுத்துச் சென்று, அளவு கொடுத்து, தைப்பித்துத் தந்தாய். 'அப்பா, மதுரை யிலே கட்டுரையைச் சமர்ப்பிக்கும் பொழுது இதைத் தான் அணியவேண்டும்' என்றும் சொன்னாய். அதை நிறைவேற்றினேன். இன்றளவும் அதனையே என் 'தர்பார்' உடையாகப் பயன்படுத்துகின்றேன். அதனை அணியும் பொழுதெல்லாம் உன் அன்புத் தழுவலை என் மேனி சுகிக்கின்றது. அட, மித்தி! நீ தொட்டது அனைத்தும் அதிர்ஷ்டத்தில் பொலியும் என்று நான் சொன்னதெல்லாம் பொய்த்தனவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் சாதனைகளைப் பற்றி நான் கட்டிய வண்ணக் கோட்டைகள் அனைத்தும் கடுதாசிக் கூட்டத்திலே கட்டப்பட்ட கோபுரங்களாகச் சரிந்தனவா?

நைஜீரியாவுக்கு ஏன் உன் அம்மாவை அழைத்து வந்தேன் என்று துக்கித்த சந்தர்ப்பங்கள் ஏராளம். பிள்ளைகள் அனைவரையும் ஏணைகளிலும், தொட்டில் களிலும் விட்டு வந்து விட்டதைப் போன்று ஏங்கிப் புலம்புவாள். தான் உங்கள் பக்கத்தில் இல்லாத தினால், நீங்கள் அனைத்து ஆதாரங்களையும் இழந்த அனாதைகளாகத் தவிப்பீர்கள் என்கிற கற்பனை களிலும் சோகங்களிலும் அவள் வாழ்ந்தாள். அவள் நிலையை உனக்கு எழுதினேன். நீ என் மகன் மட்டு மல்ல. உயிருக்கு உயிரான தோஸ்த்!

உன் பதிலில் 'அம்மா' என்ற தலைப்பில் ஒரு கவிதை யும் அனுப்பியிருந்தாய். 'ஹைகூ' பற்றிய பிரஸ் தாபங்கள் சந்தைக்கு வராத காலம் அது. அந்தச் சீட்டுக் கவியின் ஒவ்வொரு அட்சரமும் என் நினைவு ஆற்றலில் மிக ஆழமாகச் செதுக்கப்பட்டிருக்கிறது.

'உலகம் போற்றும் அறிஞனையும்
பால்குடி மறவாதத் தவ்வலாக
நினைக்கும் தலைக்கனம் மிகுந்த ஆத்மா'

உன் அம்மா மட்டுமல்ல. இந்த அம்மாக்களே மகா தலைக்கனமானவர்கள். அன்பு செலுத்துவதற்கு தாங்கள் மட்டுமே தத்துவக்காரர் என்கிற மமதை! அப்பாமாருக்கும் அருகதை உண்டு என்பதைக்கூட அவர்களுடைய ஆணவ மாயை மறைத்துவிடும். என் அப்பையாவை உனக்குத் தெரியும். அவரைப் போல நீ நடித்துக் காட்டி மகிழ்வாய். அவர் எனக்கு மகா ஆதர்ஷம். அவர் நினைவாக 'அப்பையா காவியம்' எழுதினேன். அவர் சமர்ப்பணமாகச் 'சடங்கு'. கவிதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் நான் ஓரளவில் தோல்வி. அந்தத் தோல்வியை ஈடு செய்ய நீ கவிஞனாய் பிறந்தாய் என்பது எனக்கு மகா ஆறுதல். உண்மையிலே புதிய பரிமாணம், கற்பனை யிலே புதிய சுருதிகள், படைப்பாற்றலிலே புதிய ஊற்று, பார்வையிலே புதிய கூர்மை, படிமங்களிலே புதிய தரிசனம், சொற்களிலே புதிய ஆளுமை, இவற்றின் இசைப்பிலே புதிய புலமை அனைத்துமே உன்னிடம் மண்டிக்கிடந்தன. என் மரணம் உன் தமிழ் ஊழியத்திலே முற்றிலும் புதிய பாரகாவியம் ஒன்றினை மலர்விக்கும் என்கிற கற்பனையிலே ஈடுபடுவது எவ்வளவு சுகமாக இருந்தது தெரியுமா? எத்தனையோ விஷயங்களிலே நீ என் ஆசானாய் வாழ்கிறாய் என் பதை நீ அறியமாட்டாய். உன் நினைவும், அது தரும் ஊக்கமும் உறுதியுமே, அடுத்த நூற்றாண்டின் உலக ளாவிய தமிழ் ஊழியத்திற்கு நுழைவாயில் சமைக்கும் ஒரு மயனாக என்னை மாற்றியது. என்னுடைய பழைய கொள்கைகள் பலவற்றை மறு பரிசீலனை செய்வதற் கான தேவையையும் துணிவையும் நீயே இணக் கினாய். நான் தமிழன் என்கிற இனமான உணர்விலே வீறுபெறச் செய்தவன் நீ! லங்கா தகனத்திலே முகமிழந்து, உயிர் வாழுதல் மட்டுமே யாசகம் என்று புலம்பெயர்ந்த நாடுகளிலே அகதிகளாய் வேரூன்றிய பரதேசிக் கும்பலுக்கு மீள்முகம் நாட்டும் ஊழியம் மகத்தான தமிழ்ப்பணி என்கிற ஆன்மாவை உணரச் செய்தவன் நீ. மித்ர வெளியீடினை உன் புனர்ஜன்ம மாகவே நான் சம்பாவனை செய்கின்றேன். பிறந்த மண்ணின் புழுதிகளிலே புதையுண்டு கிடக்கும் வேர் களின் உயிர்ப்பிலேதான் பரதேசிகளுக்குத் தனித்துவ அடையாளமான முகம் மலரும் என்கிற உண்மையின் உள்ளொளியை நீயே பாய்ச்சினாய். அறுபட்ட வேர் களின் தேடலே 'நனவிடை தோய்தல்'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
17-2-1996

விடுதலை
வெறியின்
ஆகுதியாகி
என்னுள்
தீபமாக
வாழும்
என்
இனியன்
மித்திக்கு

ஓர் இலக்கியப் படையலாய் அது பிறந்தது; நிலைத்தது!

அந்த இலக்கியத்தால் நீ நிலைப்பாய் என்று சத்தியமாக நான் என்னை ஏமாற்றவில்லை. என் நூலிலும் பார்க்க உன் நினைவுகள்— அவை ஆண்மை வீறுமிக்கனவாதலால்—காலத்தை ஊடறுத்து வாழும் என்பது நிச்சயம். நீ விடுதலை வெறியன். உன்னுடன் ஒப்பிடும் பொழுது, உன் தந்தை சாமான்யன். இலக்கியத்தை மதமாகவும், எழுத்தைத் தவமாகவும் நாட்டிட வாழ்ந்திடும் ஊழியக்காரனும். இலக்கியகாரனின் சின்னச் சின்ன ஆசைகள் வெட்கமறியாதன. வெட்கமறியாத ஆசைகள் மனித பலவீனம் என்பதை நீ அறியாயோ? என்னை மன்னித்துவிடு.

'நனவிடை தோய்த'லை உன் நண்பன் கலாமோகன், என் நண்பன் நித்தியானந்தன் உட்படப் பலரும் மெச்சினார்கள். எழுத்தாளர்களுக்குப் புகழ்மொழிகள் சுவாசம் போல. ஆனாலும், அதிலே என் வல்லபம் எதுவும் இல்லை. மித்தி உன்னை நாளைகளிலே தேட வக்கற்றவனாய், நேற்றைகளிலே தேடினேன். அதற்கு ஒரு வாழ்வு உண்டானால், அஃது உன்னாலே சித்தித்தது. நீ எனக்குத் தந்துள்ள மீளுயிர்ப்பின் ஓர்மம் என்பதை அவர்கள் அறியமாட்டார்கள். எனக்கும் உனக்குமுள்ள

ஆத்மார்த்த உறவை உன் அம்மாவே அறியாள். மற்றவர்கள் அறிதல் சாலுமா? நான் நைஜீரியாவில் இருந்தபொழுது, மதுரை விலாசம் ஒன்று மேல்பார்த்து, ஒரு கடிதம் எழுதினாய். அந்தக் கடிதத்தின் வாசகங்களை உன் அம்மாகூட இன்றளவும் அறியாள். 'என்னை சாகக் கொடுத்துவிட்டதாக நீங்கள் கவலையுடன் எழுதுவது துக்கமாக இருக்கிறது. சாவு வாழ்விலும் பார்க்க மகா நிச்சயமானது. ஆனால், அந்தச் சாவு ஒரு மகத்தான இலட்சியத்துக்காகச் சம்பவிப்பதுதான் மகா நேர்த்தியானது. அந்த நேர்த்தியை நான் தேர்ந்தெடுத்ததிலே மகிழ்ச்சிபெறும் அப்பாவாகவே உங்களை நான் கொண்டாடுகிறேன். என் மகிழ்ச்சியைத் தயவு செய்து திருட வேண்டாம்.'

'நீ யாழ்ப்பாணத்திலே குண்டடிபட்டியாம். இடது காலைத் தறிக்க வேண்டும் என்று வைத்திய அபிப்பிராயமாம். எனவே, அவசரமாக கடல் கடந்து மதுரையிலுள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டாயாம். பிறகு என்ன நடந்ததோ தெரியாது...' இப்படி ஒருதகவல் எனக்குப் பாரீஸிலிருந்தது கிடைத்தது. நான் துடித்துப் போனேன். ரகு மாமாவுடன் தொடர்பு கொண்டேன். பாலசிங்கம் வீரகேசரிக் காலத்தில் பத்திரிகையாளன் என்ற முறையில் அறிமுகம். அந்த அறிமுகத்தின் வசதியால் மாமா உன்னை மதுரையிலே சந்தித்தார். மோட்டார் சைக்கிள் விபத்திலே கால் அடிபட்டதாக நீ மாமாவுக்குச் சொன்னியாம். உண்மையை நீ மட்டுமே அறிவாய். உன் இயக்கம் பற்றிய இரகசியங்களை எனக்குக்கூடச் சொல்லாத நீ, வேறு யாருக்குத்தான் சொல்லுவாய்? மதுரை மருத்துவ மனையிலிருந்து சொஸ்தமாகி, இடது கால் bandage உடன் நீ எடுத்து அனுப்பிய படம் ஒன்றுதான் என்னிடம் இருக்கிறது. நீ உயிர்வாழும் செய்திதான் அந்தப் புகைப்படம். உன் சமர்ப்பணத்தை அலங்கரிக்க அந்தப் புகைப்படத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நனவிடை தோய்த'லில் பயன்படுத்தினேன். இலங்கையிலிருந்து ஒரு வாசகன் எனக்குக் கடிதம் எழுதியிருந்தான். உன் புகைப்படம் பிரசுரமான ஒற்றை கிழிக்கப்பட்ட நிலையிலேதான் அந்த நூல் தன் வாசிப்புக்குக் கிடைத்ததாம். அவன் உன் நண்பன். அந்த ஒற்றை நீக்கிய நூலைக் கொடுத்தவனும் உன் நண்பன். பெயர்கள் எதற்கு? உன்னை இழந்துதான், உன் நினைவான என் இலக்கியப் படைப்பு ஈழத்து வாசகனைச் சென்றடைவது எவ்வளவு கொடுமை? தமிழ் மக்கள், அச்சந் துறந்து, தலை நிமிர்ந்து, சுயாதீனம் சுகிக்கும் மனிதர்களாக வாழ்ந்திடச் செய்யும் உன்னத ஊழியத்திற்கு உன்னையே பலிப்பொருளாய் நியமித்தாய். ஆனால், அவர்கள்? 'பிறருக்கு நன்மை செய்யப் பிறந்த நீ, நன்மை செய்யாது விடினும் தீமையாவது செய்யாது இருப்பாயாக!' என்கிற விவேகானந்தர் வாக்கியத்தை நீ அடிக்கடி சொல்லுவாய். இந்த வாக்கியங்கள் எல்லாம் பன்றிகளுக்கு முன்னால் வீசப்படும் நித்திலங்கள். ஓர் இனத்தின் படுநாசத்திலேதான் தங்களுடைய வசதிகளை நிலைநிறுத்தலாம் என்பதை மதமாகவும் வேதமாகவும் வழிபடும் சாதியாரிலும் பார்க்கப் பன்றிகள் மேலான பிறவிகள் என்று நீ எப்பொழுதாவது நினைத்ததுண்டா?

நினைத்திருப்பாய். இத்தகைய நினைவுகளின்றி விடுதலைச் சமரிலே ஆகுதியாகும் அருள் நெஞ்சிலே சுரந்திருக்கமாட்டாது.

என் நினைவுகள் தாளமோ? தறியோ? ஏனிந்தப் பாடுகள்? உன்னைக் கதைக்கான பொருளாக்கும் எண்ணம், இந்த எட்டுவருட காலங்களுக்கு மேலாக என்நெஞ்சிலே சாதுவாகக்கூடத் துளிர்த்ததில்லை. இப்பொழுதுகூட உன்னைப் பற்றி எழுதுவதின்மூலம் உன்னைக் கொச்சைப்படுத்துகின்றேனோ என்கிற அவதியும் ஆக்கினையும் என்னை அலைக்கழிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மித்தி என் நெஞ்சு வலிக்குதடா!

நீ உயர்ந்தவன். உள்ளத்தால், இலட்சியத்தால், மானிட நேசிப்பால், இன்ப பற்றால், விடுதலை வெறியால்! இவை மட்டுமல்ல. உடலாலும் உயர்ந்தவனே. உன் உயரத்தையும், நிறத்தையும், சிரிப்பையும் பார்த்து 'தமிழ் நாட்டின் அமிதாபச்சன்' என்று காது கேட்க வாயூறியதையும் அறிவேன். எழும்பூர் பகுதியில், மூன்று நாள்களுக்கிடையில், நாலுபேர் வாயாலே கேட்டேன். இந்த வயசிலும் அவர்களுடைய 'கொள்ளிக்கண்' களால் 'திருஷ்டி' பட்டுவிடுமோ என்று மனம் சஞ்சலப்பட்டது. என் நினைவுகள் அனைத்திலும் மகா புனிதமும் பவுத்திரமும் நீ. அதனைக் கொச்சைப்படுத்தினாண்டா ஒருவன், அப்பொழுது ஏற்பட்ட நெஞ்சு வலி இன்றளவும் நீடிக்குதடா!

மார்க்ஸிஸ மதத்திலே, நான் மிகப் பிஞ்சு வயசிலே ஊன்றிய பக்தியினால் இன்றளவும் அடைந்துவரும் இடர்களும் துயர்களும் நெடியன. முன்னர் வேற்று மதத்தினரால்! இன்று அந்த வேதத்தின் புரோகிதர்களாய்த் தங்களை நிவேதித்துக் கொண்ட சநாதனிகளாலே. மத பக்தி நியாயங்களை எஃதலித்தும் நிற்கும் மனித நேசிப்பு, மானுஷீகத்தின் தேடல், முற்போக்குப் பயணம், பாட்டாளிகளின் மீட்சிப்பு... எத்தகைய அற்புதமான இலட்சியங்கள்? கட்சியின் கட்டுப்பாடு என்கிற சடங்கிலே தலைவர்கள் சிறு தெய்வங்களாகவும் வழிபாட்டிற்குரியவர்களாகவும், உயர்த்தப்படும் இராக்கதத்திலே அந்த அற்புதங்கள்யாவும் வெறும் கோஷங்களாகவும், காகிதப்பூக்களாகவும் தாழ்ந்து போகும் அவலத்தையும் உப்பின் சுவை அறிந்த ஒருவன் சகித்தல் சாத்தியமா? கோஷங்களை நியாயப்படுத்த அறிவு பயன்படலாம். ஆனால், தர்மம் நியாயங்களுக்கும் அறிவுக்கும் மேலானது. மார்க்ஸிஸ வேதத்தின் தர்ம பரிபாலனம் என் தேடலாகியது. இராணுவ வீரனுக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்பாடுகள் தேவை. மூட நம்பிக்கைகளை ஒட்டி வைக்கவும் கட்டுப்பாடு தேவை. மானிட விமுக்திக்காக உச்சரிக்கப்பட்ட வேதத்திலும் புரோகிதர்களும் விக்கிரக வழிபாடுகளுமா? இந்த அதாப்பியங்களை மௌனமாக ஏற்பதினால், எனக்கு இலக்கியத் திருத்தவிசிலே ஓர் இடம் கிடைக்கும் என்றால், அது எனக்கு வேண்டாம். வேண்டவே வேண்டாம். அக்கிரமங்களைச் சங்காரஞ் செய்யப் புறப்பட்ட விடுதலை வெறியனடா நீ. நான் உன் அப்பன் என்று சொல்லிக் கொள்ளும் உரிமையை மானசீகமாகச் சுகிப்பதற்கென்றாலும், பெயருக்கும் புகழுக்கும் ஈடாகத் தர்மத்தைப் பிசக்க நான் விரும்ப வில்லை. உன்போன்ற ஆயிரமாயிரம் இளைஞர்களின் உயிர்ப்பலிகளினாலே உருவாகும் நாளைய உலகத் திற்குச் செப்பமான ஆவணங்கள் தேவை. ஐம்பது ஆண்டுகளாக நான் ஊழியக்காரனாய் வாழ்ந்ததினால், இதற்கான அதிகாரமும் என் வசத்து. உன் பயணம் வேறு வழி; என் பயணம் வேறு வழி. ஆனால், அந்த இரண்டு வழிகளும் நாளைய நூற்றாண்டில் சந்தித்தே தீரும் என்கிற நம்பிக்கையும் எனக்கு உண்டு.

நம்பிக்கையே தேடலை அர்த்தமுள்ளதாக்குகின்றது. பிசக்கப்பட்ட ஆவணங்களைச் செப்பமிடும் தேடலுக் கான பயணத்திலே என் இன்றைய கதை துவங்கிற்று. என் ஊழியத்தை ஒளிவு மறைவின்றி பிரசித்தப்படுத் தினேன். பலர் என் பணியைப் புரிந்துகொண்டனர். சிலர் என் தேடலின் நியாயத்தை அங்கீகரித்தனர். ஒரு சிலரே என்னை அச்சத்துடனும், சந்தேகத்துடனும் பார்த்தனர். சந்தேகிக்கும் தோமாஸையும் ஏசுநாதர் சீடனாய் ஏற்றுக் கொண்டார்.

என் எழுத்து ஊழியம் இலங்கை சுதந்திரம் பெறுவதற் கும் முற்பட்டது. அது தவ்வலாக இருந்த காலத்திலே, இத்துறைக்கு வந்த முதியவர்களும் வாழ்கிறார்கள். அவர்களுடன் பேசுவதின் மூலம் சில நினைவுகளைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பம் பார்க்கலாம் என்று நான் அலைந்தது தப்பா? என் 'தவ்வல்' பராயத்தில் என் ஆதர்ஷமாக விளங்கிய வன். என் நண்பன் என்று அன்றுவரை பாராட்டப் பட்டவனும். ஓர் இரவு திடீரென்று வந்தான். என் தேடல் பற்றி அறிந்ததாகச் சொன்னான். செப்பமிடப் படும் ஆவணத்தில் தன் சாதனைகள் இவையெனக் குறிக்கப்படுதல் தகுமென வாய்முறைப்பாடு செய்தான். அதுவரையிற் சேமமே. நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் பரமேஸ்வராவில் என் உடன்சாலை மாணாக் கன். பின்னர் சில காலம் ஒரே பாடசாலையில் உடனா சிரியர்களாகவும் இருந்தோம். சுற்றி வளைத்துப் பார்த் தால் உறவும்.

'என்னைஸே... உம்முடைய மகன்தான் அர்ஜுனா வாம்...'

'ஓம்.'

'அவன் மாவீரனாம். அவன்ர பெயரை ஒரு வீதிக்கு வைச்சிருக்கிறாங்களாம்...'

'கேள்விப்பட்டன்.'

'எந்த வீதி தெரியுமே?'

'தெரியாது.'

'ஸ்டான்லி வீதிதான்.'

'அப்படியா?'

'வீதிப் பெயரிலை அவன்ர படமும் அல்லே போட்டு வைச்சிருக்கிறாங்கள். வேறை ஆருக்குமில்லாத இந்த நடப்பு ஏன் அவருக்கு மட்டும்? அவுஸ்ரேலியாவிலிருந்து வந்த பணத்துக்காகவா அவன் படத்தை மாட்டினனீங் கள்? சத்தியமா, நான் புதுவை ரத்தினதுரையிட்டை... அவர் தானே இவங்கட ஆஸ்தான வித்துவான் நேரிலை கேட்டனான்.'

ரத்தினதுரையிடம் நேரிலே கேட்டது மார்க்ஸிஸ வீர மாம்! தமிழ் ஊழியத்தை-இலக்கியத்தை-அதன் தர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்ணய விமர்சனங்கள்- தரத்தின் மதிப்பீடுகளையும் அளவுகோல்களையும் பிசக்கிக் கொச்சைப் படுத்தியது போதாதா? இளம் குருத்துக்களின் தன்னலமற்ற உயிர்த் தியாகங்களையுமா கொச்சைப் படுத்துதல் வேண்டும்? என்னிடம் இப்படிப் பேசுவதுதான் மார்க்ஸிஸ வேதம் கற்பித்த வீரமா?

அர்ஜுனாவை இழந்த அப்பன் நான். அந்த சோகத்தை நான் சுமந்து திரிவது அவனுக்குத் தெரியாததல்ல. உன் இழப்பு என்னை எவ்வாறெல்லாம் பாதித்துள்ளது என்பதை மூடி மறைக்கத் தெரியாத கோழையாக நான் இருக்கலாம். உன்னை விடுதலை வெறியுடன் இணைத்து நினைவு கூர உன் வீரமும் ஆண்மையும் காரணமல்ல; பிற்கதவாலே புகுந்த பணம் காரணமாக இருக்கலாம் என்று ஓர் எழுத்தாளன்-நண்பன்-புத்திஜீவி என்று ஆணவத்துடன் கொக்கரிப்பவன் கொச்சைத்தனமான கற்பனைகளை வித்தித்திரிகிறான் என்றால்...

மார்க்ஸில மதம் எத்தகைய மனோ வியாதிக்காரர்களின்- புரட்டர்களின்- வீரத்தை அங்கீகரிக்க மறுக்கும் கோழைகளின்-சுயகியாதி மெச்சும் புல்லர்களின்-சத்திய ஹீனர்களின்-வக்கிர நெஞ்சர்களின் கூடாரமாக மாறி இருக்கிறது! மார்க்ஸே, உன் பெயராலே செய்யப்படும் அத்தனை ஊழல்களையும் மோசடிகளையும் அறிந்த பின்னரும் கல்லறையிலே உன்னால் தூங்க முடிகிறதா? ஆனாலும், சமவுடமைக் கோட்பாடுகளின் மெஸயாவே, இவர்களுக்காக உன் சத்தியத்தை மறுதலிக்க ஒப்பேன். நீ தந்த தத்துவ வெளிச்சத்திலே மானுஷீகம் பற்றிய என் தேடல் தொடரும்...

அந்தத் தேடலே என் நெஞ்சு வலிக்கான ஔசதம்!

உன் வாழ்வும் ஊழியமும் இத்தேடலை அர்த்தச் செறிவுள்ளதாகவும் ஆக்குகின்றது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அவுஸ்ரேலியாவிலிருந்து புறப்படும் பொழுது, தமிழ் ஊழியம் தொடர்பான சில திட்டங்களைச் செயற் படுத்தும் விழைவும் இருந்தது. என் சிறுகதைத்தொகுதி ஒன்றினை வெளியிடலாம் என்றும் நினைத்திருந்தேன். 'ஆண்மை' என்கிற ஒரே தலைப்பில் பல சிறுகதைகள். 'ஆண்மை' பற்றிய பலதரப்பட்ட கருத்துவங்களை அக்கதைகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும். ஆனாலும், என் இனியனே! என் நடுவிலா! என் பார்த்தா! என் மித்தி! இத்தேடலிலே நீ என் கதைப் பொருளாவாய் என்று நான் நினைத்துக்கூடப் பார்த்த தில்லை. நீ கதைப் பொருளுக்கு மேலானவன். உன்னு டன் பங்கிட்ட அந்தச் சின்னச் சின்ன வேளைகள் இனிமையானவை. நீ சுத்தமான சுருதி. கலப்படமற்ற தேன். ஊற்றடைக்காத அன்பு. பரம இரகசியமாக, யாருடனும் பங்கு போடாமல், உன் நினைவுகளை தனிமையில் தன்னந் தனியனாய்ச் சுமந்திடல் வேண்டும் என்று பேராசைப்பட்டனெடா. உன் நினைவுகள் சுகமானவை மட்டுமல்ல; வேதனை மண்டியவையும். அந்த வேதனைகளைச் சுமக்கும் ஏகவாரிசாக என் னையே நான் நியமித்திருந்தேன்டா! ஏன் தெரியுமா? மற்றவர்களுக்கு இனிமை அளிப்பதையும், துன்பங் களை நீ ஒருவனே சுமப்பதையும் நீ வாழ்க்கையாக்கிக் கொண்டாய்.

உன்னைக் கொச்சைப்படுத்திய அதே மூச்சிலேயே தன் னுடைய சாதனையையும் அவன் கக்கி வைத்தான். ஜாதியத்துக்கு எதிரான போராட்டப் 'பிரசார'த்துக்கு உதவிய 'கந்தன் கருணை'யின் மூலக்கதை தன் கற்ப னையினதும் சாதனையினதும் உச்சமாம். ஜாதியத் திற்கு எதிராகப்பேனா தூக்கியது பாரிய ஆண்மையாம். அதே மூச்சிலே, அவுஸ்ரேலியக் காசிலே உன் ஆண்மை நிலைநிறுத்தப்படுவதாக... எனக்கு முன்னால் சொன் னதுபோல, புதுவை இரத்தினதுரையிடம் கேட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல, எத்தனை பேருக்கு முன்னால்? கோஷ்டியாகக் கோஷம் போட்டு, கோஷத்தின் ஓங்காரத்தையே உண்மையாகத் தரிசிக்கும் கூட்டத்தைச் சேர்ந்தவன். அவனுடன்இன்னும் எத்தனை பேர் புறப்பட்டிருக்கிறார்களோ? இன சங்காரத்தினைச் சங்காரஞ் செய்ய அர்ஜுனா அவதாரம் செய்தவனுடைய வீரம் அற்பமாம். இஷ்டர்களின் முதுகுகளைச் சொறிந்து இன்பமூட்டுதலையும், தங்களுக்குப் பூஜை செய்ய மறுப்பவர்களின் ஆற்றல்களை இருட்டடிப்புச் செய்தலையுமே தமிழ் ஊழியம் என்று போக்குக் காட்டுபவர்களுடைய... அவர்களுடைய அனைத்து அதாப்பியங்களையும் அழித்தெழுதும் போராளியாக கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். நீங்கள் வாய்ச்சொல் வீரர்; பேனாச் சண்டியர். உங்களுக்கு நான்தான் ஜாரி... மித்தி! என் வயசு, முதிர்ச்சி, அனுபவம், பக்குவம் அனைத்தையும் உன்னைப்பற்றி நினைக்கும் சில வேளைகளில் இழந்து விடுகிறேன். குழந்தையாகிவிடுகிறேன். சூரியனை முகிற்கூட்டங்கள் மறைக்கின்றனவே என்று கவலைப்பட்டு, அதன் இருப்பைப் பிரகாசித்துக் காட்ட வானத்திலே ஏணி சார்த்தி, கையில் கை விளக்குடன் ஏறினானாம் ஒருவன். அவனைப் போன்றுதான் நானும் பைத்தியக்காரனாக நடந்து கொள்ளுகின்றேன். முகிற்கூட்டங்கள் ஓடிக்கலைந்துவிடும்; அன்றேல் ஒழுகிக் கரைந்துவிடும். கைவிளக்கின் துணையின்றிச் சூரியன் பிரகாசிப்பான். அது நிச்சயம். உன் வீரத்துக்கும் ஆண்மைக்கும் விளம்பரம் தேவை இல்லை. அற்ப விளம்பரங்களுக்காக ஆத்மார்த்த உறவுகளைச் சொல்லிப் பிலாக்கணம் வைப்பதிலும் அர்த்தமில்லை. அறிவேண்டா சில சமயங்களில் நீ என் ஆசானும்!

இன்னொன்றுக்காக, இவ்வாறு புலம்பி, என் மனசிலே கவிந்துள்ள கருமேகங்களைக் கரைத்து, என்னை இலேசாக்கிக் கொள்ளாமலும் இருக்கமுடியவில்லை. எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழியம் என்பது மானுஷீகம்-அருள்-சத்தியம்-தர்மம் ஆகியவற்றின் இடையறாத தேடல் என்று உனக்கு எத்தனையோ சந்தர்ப்பங்களிலே சொல்லியிருக்கிறேன். இலக்கியம் என் மதம்; எழுத்து என் தவம். என் எழுத்துச் சத்தியத்தையும்,சிந்தனா சுயாதீனத்தையும் இறுதி வரை பூண்டொழுகி வாழ உன் நினைவுகளே போதுமானவை. மித்தி, நீ தந்த வாழ்வு தானேடா இது?உன் அப்பனாக அல்ல. உன் மகனாகவே இப்பொழுது வாழ்கின்றேன். உன் பெயரும் நினைவுந்தான் எனக்கு அனைத்துச் சக்திகளையும் அருளும் மந்திரம்.

பிறப்புக் கொப்பியின்படி நான் பிறந்தது ஜூன் 4. ஆனால், 'கந்தன் கருணை' உருவாகுவதற்கு முன்னரே ஜாதியத்தை வென்று, 'இரு மரபும் துய்ய வந்த' உன் அம்மாவை வதுவை செய்து, யாழ்ப்பாணம் சென்றிருந்தபொழுது உன் அம்மாவும் என் அப்பையாவும் எங்கேயோ தூசி மண்டிக்கிடந்த என் ஜாதகத்தை வைத்துச்செய்த ஆராய்ச்சிகளின் பெறுபேறாக நான் பிறந்த உண்மையான திகதி மே 24 என்று தீர்ப்பளிக்கப்பட்டது. அது அப்பையாவின் மகனாக நான் பிறந்த நாள். நான் உன் மகனாகப் பிறந்தநாள் நினைவிருக்கிறதா?

1978, நவம்பர் மாதம், 23ஆம் நாள். வங்காளவிரிகுடாவிலே மையங்கொண்ட சூறாவளி, அன்றுதான் கரை தட்டி, மட்டக் களப்பைத் தரைமட்ட மாக்கிய நாள். இரண்டு நாள் தொடர் மழை. அன்று பிற்பகல் காற்று சற்று வேகமாக வீசத் துவங்கியது. பாத்தியிலிருந்து முளைக்கீரைச் செடிகளைப் பிடுங்கி எடுப்பதுபோல,அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தென்னை மரங்களை வேருடன் பிடுங்கி தரையிலே வைத்த வண்ணம் வீசும் காற்று. இரவு எட்டு மணிக்கு மேல் சூறாவளி கரை தட்டும் என்கிற அறிவிப்பு மக்களைப் பீதி கொண்டலைய வைக்கின்றது. பாதுகாப்பற்ற வீடுகளிலே வாழ்ந்தவர்கள், பாதுகாப்பான இடங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடி அலைகிறார்கள். அப்பொழுது நாங்கள் வாழ்ந்தது பழைய வீடு. ஒரு காலத்தில் தென்னந் தோட்ட பங்களாவாக பயன்படக் கட்டப்பட்ட வீடு. அதனைச் சூழ முப்பத்தொன்பது தென்னை மரங்கள். சாயங் காலமே வாய்க்கால் ஓரம் நின்ற மூன்று தென்னைகள் வேருடன் சாய்ந்து விட்டன.

அந்த ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களும் நோய் காரணமாக நீண்ட விடுப்பிலே நின்றேன். 'ஈழத்தின் புனைகதை இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்' என்கிற ஆய்வு நூலை எழுதிச் சமர்ப்பிக்கும்படி கொழும்பு பல்கலைக்கழகம் கேட்டிருந்தது. விடுப் பினைப் பயன்படுத்தி அதற்கான நூல்களையும் சான்று களையும் சேகரிக்கத் துவங்கினேன். எத்தனையோ இலக்கிய இனியர்களுடைய ஒத்துழைப்புடன் Archives இல் கூடக் கிடைக்காத அரிய நூல்களைச் சேர்த்தேன்.

வித்துவ பரம்பரையின் வாரிசு என்று காட்டப் புனையப் பட்ட 'இடைக்காடர்' மான்மியத்தின் உண்மைகளை நிறுவுவதற்கான அபூர்வ நூல்கள். சில நூல்களின் தாள்கள் கவனக் குறைவாகப் புரட்டினாற் கூட நொருங்கி உடைந்து விடும். அவ்வளவு பழையன. பதினெட்டம் நூற்றாண்டிலே அச்சான நூல்கள் கூட இருந்தன. அந்த வீட்டின் Store-roomஐ, அது ஒதுக் குப்புறமாக இருந்ததினால், என் ஆய்வுகூடமாக மாற் றியிருந்தேன். என் எழுத்துப் பணிகளுடனும் ஆய்வுட னும் சம்பந்தப்பட்ட அனைத்து நூல்கள்-பத்திரிகை நறுக்குகள்- கையெழுத்துப் பிரதிகள்-தஸ்தாவேஜுகள் அனைத்துமே அதற்குள் குவிக்கப்பட்டிருந்தன. அந்த அறையிலே குவிக்கப்பட்டிருந்தனவும் நானும் வேறல்ல என்கிற பாந்தம்.

உங்கள் அனைவரையும், நீங்கள் எடுத்துக் கொள்ளக் கூடிய சொத்துக்களுடன், அதே தெருவின் மொக்கிலே இருந்த பாதுகாப்பான வீட்டுக்கு அனுப்பிவிட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து எழுத்துக் கருவூலங்களையும் என்னாலே சுமந்து செல்ல இயலாது. அவற்றை நிராதரவாக விட்டுப் பிரியவும் மனசில்லை. தன்னந்தனியாக நின்று பாதுகாக்க முனைவோம். சூறாவளி என்றால் என்ன? அநுபவமே ஆசான் என்கிற பக்குவம். பலமாகக் காற்று வீசும். மரங்கள் விழும். வீட்டுக்கூரைகள் பறக்கும். தந்திக் கம்பங்களும், மின்சாரக் கம்பங்களும் சாயும். வெள்ளம் பெருகும். அவ்வளவுதானே? பிரளயமே வந்தது போல பயந்து ஓடுவதா? வீட்டை விட்டு அசைவதில்லை என்கிற தீர்மானத்துடன் தங்கிவிட்டேன்.

காற்றின் வேகம் அதிகரித்துக் கொண்டே போகிறது. கிணற்றடிப் பக்கமாக நின்ற இரண்டு தென்னை மரங்கள் விழுந்து மாமரத்திலே தொங்கிக் கொண்டு நிற்கின்றன. வாய்க்கால் ஓரமாக மேலும் இரண்டு தென்னைகள் விழுந்து படுத்துக் கிடக்கின்றன. காற்றின் ஹுங்காரம் நிமிஷத்துக்கு நிமிஷம் அதிகரிக்கின்றது.

நீ எப்பொழுதுமே திருத்தம் போடுபவன். என் தனிமையை அழித்து அண்ணாவுடன் தோன்றுகின்றாய்.

'அப்பா, உங்களுக்கு என்ன பைத்தியமா? வாருங்கள் எங்கள்கூட...'

'இல்லை, மித்தி. அந்த வீடு மட்டும் பாதுகாப்பானது என்பது என்ன நிச்சயம்?' என்று குழந்தைச் சுபாவத்துடன் அணாப்புகின்றேன்.

'இந்தச் சூறாவளியிலேதான் எங்களுக்குச் சாவு என்றால், நாங்கள் எல்லாரும் ஒரே இடத்திலிருந்து எதிர் கொள்ளுவோம். அவ்வளவுதான்... அண்ணா, அப்பாவோட நியாயம் பேசாது, தூக்கிக் கொண்டு போவோம்...'

அண்ணாவுக்கு மருத்துவ கல்லூரியில் அனுமதி கிடைத்திருந்தது. சில பாடங்களிலே விசேட ரியூஷனுக்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீயும் யாழ்ப்பாணம் செல்வதாக ஏற்பாடு. நீங்கள் இப்பொழுது தலையெடுத்துவிட்ட பிள்ளைகள்... முரண்டு பிடிக்காமல், 'பசுபதி'யாக உங்கள்கூட வருகிறேன்.

எல்லோரும் அந்த வீட்டில். கதவுகள், யன்னல்கள் அனைத்தும் சாத்தப்பட்டிருந்தன. வெளியுலகும் முற்றாகத் துண்டிக்கப்பட்டது போல. சூறாவளியின் இரைச்சல் மட்டுமே வெளியுலகத் தொடர்பு. அம்மம்மா வைப் பார்க்க வந்ததினால் பெரிய மாமாவும் 'மடுபட்டு'ப் போனார். ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளுகிறோம். இந்து மட்டும் அம்மாவின் மடிக்குள் முகம் புதைத்துக் கிடக்கிறான். மற்றவர்கள் விழி களிலே பயம். இறுதித் தீர்ப்பினை எதிர் நோக்கும் 'கியாமத்து' நாளில் எல்லோரும் வாழ்வது போலத் தோன்றுகின்றது. அவதிகள் மத்தியிலேயும் கற்பனை கள் உறங்குவதில்லை.

அனைத்து ஊளைகளும் மடிகின்றன. மகா நிசப்தம் மலர்கிறது. கதவைத் திறந்து பார்த்தால்... சூறாவளி யின் வலிமையை எதிர்த்து நின்ற மரங்களின் எஞ்சிய இலைகள் மூச்சுத் திணறி மரித்தன போன்று...கோரத் தின் சாட்சியத்திலே ஸ்மரணைகள் முழுவதையும் இழந்து உறைநிலை அடைந்தன போன்று... காற்றின் ஊழித் தாண்டவம் ஒரு கனவு போன்று...

'இது சூறாவளியின் கண். அரை மணி அல்லது முக்கால் மணி நேரம் அமைதியாக இருக்கும். சுழலின் மறுகரை மறுகா வந்து எதிர்திசையிலே அதே வேகத் துடன் வீசும்' என்று விளக்கம் தரப்படுகிறது. கண் என்ன கண்? சூறாவளியின் வயிற்றுக்குள்? மரண பூதத் தின் வயிற்றுக்குள்! ஆனாலும், மகா அமைதி.

வீதியில் மக்களுடைய ஆரவாரம். அந்த குறுகிய அமைதி இடைவெளியை வழுவவிடாது, பெரிய மாமா அயலிலுள்ள தன் வீட்டின் சேமத்தை அறிய ஓடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றார். மனவிறைப்பைப் போக்க அவசர தேநீர் தயாரிப்பு. கை கால்களை உசுப்பி, ஆக்கினையின் பாதிதூரம் தாண்டியதின் திருப்தி.

காலாறுவது போல நான் வீதியில் இறங்குகின்றேன். வீதியிலே மக்கள் கூட்டத்தின் அவசரம், புலம்பல், மேலும் பாதுகாப்பான இடங்களை நாடிய விரைவு. இருளிலே முகமிழந்த மனிதர்களின் நடமாட்டம். குரல்கள் மகா தெளிவாக. தமிழ்-சிங்களம்-ஆங்கிலம்-பறங்கி மொழி. சொற்கள் வேறுபாடுகளை இழந்து, அனைத்து மொழிச் சொற்களும் 'பயம்' என்கிற ஒரே அர்த்தத்தைத் தொனிக்கின்றன. சதா இத்தகைய அழிவுகள் நிகழ்ந்தால் மொழி தொற்றிய பிணக்குகள் அனைத்தும் ஞான ஒடுக்கத்திலே உறங்கிவிடும் போலவும்.

வீதியின் குறுக்கே விழுந்து கிடக்கும் மரங்களைத் தாண்டி, அவசரம் அனைத்தையும் இழந்த தனியனாக வீடு நோக்கிச் செல்கின்றேன். எங்கள் வீடு...அது எங்கே? ஓ, அது ஜெயசுந்தரா வீடு. அதற்குப் பக்கத்தில் வெற்று வளவு. அடுத்தது எங்கள் வீடு... எங்கே அது? எங்கள் வீடு வாழ்ந்த இடத்தைக் காட்டுவதுபோல இரண்டு சுவர்கள் நிற்கின்றன. என் அறை! ஓயாத அறிவுத் தேடலை அடைத்து வைத்துப் பூஜை செய்த அறை எங்கே? அது இருந்த இடத்திலே ஐந்தாறு தென்னை மரங்கள் விழுந்து, அடிமுடி தெரியாத அவலத்திலே குவியலாகக் கிடக்கின்றன. எஞ்சிய அறைகளின் கூரைகள், கதவுகள், யன்னல்கள் அனைத்துமே மாயமாக மறைந்தன போன்று.

இந்த அழிபாடு நான் கற்பனைகூடச் செய்யாதது. மகா ஆக்கினை என்றாலும் புதிய அநுபவம். முற்றத்திலே விசிறிக் கிடந்த ஆணியோ, தகரமோ, கண்ணாடித் துணுக்கோ காலைக்குத்திக்கிழித்துவிட்டது என்பதை உணருகிறேன். பரவிக்கிடந்த ஊமை இருளிலே படுத்துக் கிடந்த தென்னைமரம் தெரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. மெதுவாக அதிலே குந்துகிறேன். சூறாவளியின் சங்காரத்தை அடுத்து வந்த இந்த இடைக் கால அமைதியிலே, தன்னந்தனியாக, ரத்தம் வடிந் தோடும் காலுடன் அமர்ந்து எதைத் தேடுகிறேன்? ஒன்பது மாத நீண்ட விடுப்பிலே தேற்றி எடுத்த என் உடல், இரத்தப் பெருக்குடன் உருகி ஒழுகுவதாகவும் தோன்றுகின்றது. பிழைப்பதற்கான தியானத்திலே, கூட்டுப்பிரார்த்தனையிலே ஒன்று சேர்ந்திருந் தோம். பிழைத்த பின்னர் ஒவ்வொருவருக்கும் தனித் துவமான கவலைகள். பாதுகாப்பு உணர்வு மட்டும் கூட்டாக! கவலைகள் தனிமனித வட்டங்கள். என் கவலைகள் என்கிற மாறாப்பினைத் தன்னந்தனியாகச் சுமந்து கொண்டு குந்தியிருக்கிறேன். ஏன் கூட்டுப் பாது காப்பு நிலையைத் துறந்து இங்கு தன்னந்தனியாக வந்தேன்? எனக்கு என்ன நேர்ந்தது? வீட்டின் அழி பாட்டினை எல்லோருக்கும் முன்னர் தரிசித்துவிட வேண்டும் என்கிற அவசரத்தில் வந்தேனா? இங்கு வந்து முக்கால்மணி நேரமாகி விட்டதா?

சடுதியாக மீண்டும் சூறாவளியின் எக்காளம். அழிவுத் தாண்டவத்தை நட்டுவாங்கம் செய்யும் பேரிரைச்சல். இத்தகைய இரைச்சலை அன்றுவரை கேட்டதில்லை. இன்றுவரை பிறிதொரு தடவை கேட்டதுமில்லை. காற்றின் திசை மாறிவிட்டது. உக்கிரம் அதிகரித்ததா? ஆயிரம் ஊசிகளை ஏக காலத்திலே ஏற்றுவதுபோல உடலெல்லாம் புண்ணாக நோகின்றது. கடலுக் குள்ளோ வாவிக்குள்ளோ என்னை வீசி எறிய சித்தம் கொண்டது போல, என்னை இருக்கை நிலையிலிருந்து புரட்டுகிறது. என் ஏமாப்பு எங்கே? என் வித்துவம் எங்கே? என் ஓர்மம் எங்கே? என் தனித்துவம் எங்கே? எல்லாம் இணைந்தும் கலந்தும் உருவான நான் எங்கே? எல்லாவற்றிற்கும் மேலானது என் உயிர் என்கிற ஒரு வெறி என் சென்னிவரை ஏறிவிட்டது. எதையும் இழக்க லாம்; உயிரை மட்டும் அல்ல. தற்பற்றின் உச்சத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழலுகின்றேன். தவழ்ந்தாவது றோட்டிலே ஏறிவிட்டால், உருண்டாவது மனைவி-மக்கள் இருக்கும் அந்தப் பாதுகாப்பான இடத்துக்குப் போய்விடலாம். அனைத்து இடர்களையும் எதிர்த்து என் உயிரைக் காப்பாற்ற வேண்டும்... வாய்க்காலைத் தாண்டினால், றோட்டு, பிறகு உருளலாம். உயிர்காக்கும் வேள்வியிலே பிரதட்டை செல்லும். நான் வரும் பொழுது, வாய்க்காலில் கணுக்காலளவு தண்ணீர். சடுதியாகக் காட்டாற்று வெள்ளம் போல பிரவகித்து ஓடுகிறது. எங்கிருந்து வந்தது? தாமதித்தால் இன்னும் பெருகும். எவ்வளவு விரைவோ, அவ்வளவே வாய்ப்பு. எப்படியும் றோட்டில் ஏறவேண்டும். பிரதட்டைக்கு உடம்பிலுள்ள வலு போதும். நீரோட்டத்தின் வலிமையைத் தப்பாகக் கணக்குப் போட்டு விட்டேன்... என் ஆணவங்கள், என் வீராப்புகள், தமிழ் ஊழியம் என்னும் மானுஷீகத் தேடல் என்றும் நான் இயற்றிய சபதங்கள், ஏற்றுக் கொண்ட சவால்கள் அனைத்துமே கனவுகளாகக் கரைந்து... இலக்கிய வெறியிலே பித்துப்பிடித்து, மனைவி-மக்கள் அத்தனை பேரிடமும் சொல்லாமல், என் எழுத்துப் பொக்கிஷங்கள் அனைத்தையும் சூறாவளியின் ஆக்ரோஷத்திலிருந்து காப்பாற்றலாம் என்கிற பேராசையின் வசப்பட்டு...

அவையின்றி நான் மட்டும் வாழ்வதினால் என்ன பயன் என்று சாவுடன் இணக்கம் கொள்ளுகின்றேன். சாவை இவ்வளவு அண்மையிலே சந்தித்தால்தான் சாப்பயத்தின் கோரம் தெரியும். அந்த அசாத்திய சாப்பயம் சில கணநேரந்தான். தப்பிவிடும் வெறியும், தப்புவதற்கான நொய்மையான மார்க்கம் இருக்கலாம், என்கிற நப்பாசையும் இருக்கும் வரையிலேதான் பயம்! பயம் அறுந்ததும் இணக்கம். எல்லாத்துன்பங்களிலிருந்து நிரந்தர விமுக்தி கிடைக்கிறது என்கிற தேற்றம். நோய்-நோ-துன்பம் அனைத்திலிருந்து நித்திய விடுதலை கிடைக்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் என்று இடையிலே சொடுக்கும் எண்ண மின்னல் அந்தத் தேற்றத்தை இயல்பாக்கின்றது. அந்தத் தேற்றம் சாவின் கொடூரத்தைச் சந்திக்கும் மனிதனுக்கு மகா வரப்பிரசாதம். மித்தி, இந்த அவதிகள் அனைத்தும் உனக்கு ஏற்பட்டதா? சாவின் மூஞ்சியிலே காறித் துப்பும் ஒரு வாழ்க்கை முறையை நீயாகவே தேர்ந்தெடுத்தாய். ஓர் இனத்தின் விமுக்திக்கு சில சாவுகள் தேவை; தகும். அந்தச் சாவைத் தன் கழுத்திலே காவித் திரிபவனுக்கு சாவின் பயம் தோன்றுவதில்லையா? நீ உண்மையில் வீரனடா. உன் வீரத்தின் சுடரிலேதான், மதங்களின் வைதீக ஆசாரங்களுக்குள் பூரண சரணாகதி அடைவதிலுள்ள கோழைத்தனத்தினைத் தரிசித்தேனடா. இவை பிற்பட்ட வரலாறும் ஞானங்களும்!

நீ ஆபத்சகாயனா? என் கண்ணனா? அப்ப உனக்கு பதினைஞ்சு வயசு, பதினாறு ஆகவில்லை. மீசை கறுக்காத பொடியன். கிறிக்கெட் விளையாடுவதுதான் உந்நத சாதனை என்று சாதாரண கனவுப் பூச்சிகளை விரட்டித் திரிந்த பையன்டா. அந்த நேரத்தில், சூறாவளியின் இரண்டாவது முகத்தையுங் கிழித்துக்கொண்டு தன்னந்தனியாக நீ ஏன் அங்கு வந்தாய்? என்னைத் தேடியா? எனக்கு உயிராபத்து ஏற்படுகிறது என்கிற உள்ளுணர்வின் உதைப்பினால் அங்கு வந்தாயா?

சடுதியாகத்தான் நீ தோன்றினாய். சூறாவளியின் படுபயங்கர அழிவுத்தாளங்கள் அனைத்தையும் ஊடறுத்து 'அப்பா' என்ற உன் குரல். என் வாழ்க்கையில் என் பிள்ளைகள் அனைவரும் அழைத்த-அழைக்கும் அத்தனை 'அப்பா'க்களிலும் பார்க்க, என அவலத்தைக் கண்டு, துடித்து, 'அப்பா' என்று நீ அழைத்த அந்த அபயச் சுருதியை என்றும் செவி மறக்காத வகையில் இனித்தது! மித்ர, சொற்களை வைத்துச் சித்துக்காட்டுவதிலே நான் வித்தகன் என்று ஏமாப்புக் கொண்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் போலியே... அந்த க்ஷணத்திலே, உன் குரல் கேட்ட அந்த க்ஷணத்திலே, ஏற்பட்ட உணர்ச்சிகளைச் சொல்வதற்கு வார்த்தைகள் கிடைக்காமல் தடுமாறு கின்றேன்... மானிடத்தின் எத்தனையோ துல்லிய உணர்ச்சிகளைச் சொல்வதற்கு வார்த்தைகளேஇல்லை. மானுஷீகத்தின் தேடல் என்பது வேறு... அந்தத் தேட லின் அனுபவங்களை அச்சாவாகச் சித்திரிப்பது என்பது வேறு... புதிய சொற்கள் மட்டுமல்ல, புதிய மொழி கை தரவேண்டும். அந்த மொழி என் வசப்படவில்லை... அந்தப் 'புதி'தை வசப்படுத்துவதற்கான தவந்தான் எழுத்து, ஊழியமா? கல்லறையிலே கிடக்கும் மார்க்ஸை எழுப்பி. நாளைய 'புதி'தையும் அறிந்து கொள்ளலாம் என்று வக்கிரமாகக் கொக்கரிப்பது எவ்வளவு பேதமை? இயலாமைகளை ஒப்புக் கொள்வதற்கு நான் வெட்கப் பட்டதேயில்லை. 'அப்பா' என்ற அந்த அழைப்பின் மதுரத்தைச் சித்திரிப்பதற்கான மொழியைத் தேடிக் கொண்டுதானிருக்கின்றேன்.

...உன் பிஞ்சுக் கரங்கள், வெள்ளத்தின் பிரவாகத்திற் குள் மசிந்த என் உடலை அள்ளி எடுக்கின்றன... பார மான மூட்டையை நாட்டாமைக்காரன் தோளிலே அடிப் பதைப்போல... கனவா, நனவா, இயக்கங்களை இழந்து கொண்டிருக்கும் என் கற்பனையின் சரஸங் களா?... நிதானிக்க இயலாத குழப்பங்கள்... சூறாவளி யின் இயல்பினை உள்வாங்கிய குழப்பங்கள்...

விடியலின் ஊமை வெளிச்சம், சூறாவளி மடிந்து வரலா றாகிவிட்டது! நான் உயிர்வாழ்கிறேன் என்பது படு நிஜம். ஜெயசுந்தராவின் காருக்குள், பின்சீட்டில், உன் மடியில்... இரவு முழுவதும் நீ என் குளிர்ந்த உடலுக்கு உஷ்ணமூட்டியிருக்கிறாய் என்பதும் தெரிகிறது... என் சுமையைத்தூக்கி, சூறாவளியின் வலிமையை எதிர்த்து, இந்த 200 யார் தூரத்தை எப்படி நடந்தாய்? சூறாவளி யின் சங்காரத்தினைப் புறமுதுகிடச் செய்யும் பணிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கார்தான் பாதுகாப்பான இடம் என்பதை எப்படி அறிந்தாய்? பூட்டிக்கிடந்த காரை எப்படித் திறந்தாய்? உனக்குப் பதினைஞ்சு வயசுதான். நீ குழந்தையடா. ஆனாலும், அந்தச் சூறாவளி இரவிலே நீ விஸ்வரூபம் எடுத்தாய். அந்த விஸ்வரூபமே எனக்கு இரண்டாம் வாழ்க்கை அருளியது. இன்றைய என்இந்த வாழ்க்கை புனர்ஜன்மம்; மறு ஜனனம். இதன் ஜனன தினம்: 24.11.78.

நீ அலட்டிக் கொள்ளவில்லை. 'அப்பாவும் நானும் பாதுகாப்புக்காக ஜெயசுந்தராவின் காருக்குள் இருந்தோம்' என்று Casual ஆகச் சொன்னாய். உன் வீரத்துக்கு மூக்கும் விழியும் வைத்துப் பேச வேண்டாம். உண்மையான உன்பாடுகளைத் தானும், உன் அம்மாவுக்கும் உன் உடன்பிறப்புகளுக்கும்தான் சொல்ல ஏன் கூச்சப்பட்டாய்? கடமையைச் செய். பயனை எதிர்பார்க்காதே. பயனா? அதனையும் ஈசுரார்ப்பணமாக்கிவிடு. உன் மாயை அறும். அகங்காரம் ஒடுங்கும், சமத்துவ புத்தி ஓங்கும். குருநிலத்தில் பந்தபாச உணர்வுகள் மீதூர, மாயையின் வசப்பட்டு மன உலைவில் சோம்பிய தன் ஆருயிர்த் தோழன் அர்ஜுனாவுக்கு கீதையைப் போதித்தான் கண்ணன். பார்த்தனுக்கும் தீர்த்தனுக்குமிடையிலுள்ள உறவும் உரையாடலும். இந்தப் போர்க்களப் போதனைகளை வைத்து, எத்தனை பேர் ஆதாயமான ஆன்மீக பிஸினஸ் நடத்துகிறார்கள்? அவர்கள் மத்தியிலும் நீ கீதையின் சாரமாய் உயர்ந்தாய்! வாழ்கிறாய்.

மித்ர, விடுதலைப் போரிலே ஆகுதியாக நியமிக்கும் வீறிலும் அருளிலும் சிலிர்த்தெழுதலும் மறு ஜன்மமா? அந்தப் புதுஜனனத்துக்குப் புதுப் பெயர் தக்கது என்பதுவே உங்கள் ஞானப் பார்வையா? நீ பூண்ட புது ஜனனப் பெயர் அர்ஜுனா ஏன்? நான் நைஜீரியாவில் வாழ்ந்த காலத்தில், நீ அதற்கு ஒரு விந்தையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கமும் எழுதியிருந்தாய். ''அப்பா, நீங்கள் என்னைப் 'பார்த்தன்' என்று செல்லமாக அழைப்பீர்கள். 'மித்தி' வீட்டுப் பெயராகவும், 'பார்த்தன்' என் வாழ்க்கையை அர்த்தப்படுத்தும் பெயராகவும் எனக்குத் தொனிக்கும். என்னுள் நீங்கள் 'பார்த்தன்' என்று அழைப்பதையே மிகவும் விரும்பினேன். என் புதிய ஊழியத்திற்கு உங்கள் அன்பையும் ஆசியையும் பெற்றுள்ள திருப்தியின் அடையாளமாகவும் 'அர்ஜுனா' என்று இயக்கப் பெயர் சூட்டியுள்ளேன். அப்பா, அர்ஜுனாவை ஆசீர்வதியுங்கள்.''

நீ அர்ஜுனனாகப் புது ஜன்மம் எடுத்ததற்குப் பிறகு மூன்று நான்கு கடிதங்கள் மட்டுமே எனக்கு எழுதியிருந்தாய். அவை, நாலு ஐந்து வரிகளுக்கு மேற்படாத குறுங் கடிதங்கள். நீ நலம் என்கிற செய்தி தவிர உன்னைப்பற்றி வேறு எந்தத் தகவலும் இருப்பதற்கும், அப்பாவின் நெஞ்சில் உன் அன்புச் சுவட்டினைப் பதிப்பதற்கும் அந்த வரிகள் உனக்குத் தாராளம்.

என் ஐந்து பிள்ளைகளுள் நீ நடுவிலன்; ஐந்துவிரல்களிலும் நடுவிரல் நீளம். நீ நெடுவிலன். அப்பவே ஆறடிகளுக்குமேல்! சிவலை. அழகன். நீ தொட்டன அனைத்தும் உன்வசப்பட்டன. 'அப்பா, தம்பிஎன்னிலும் கெட்டிக்காரன். என்னிலும் அதிகம் சாதிப்பான்' என்று அண்ணா வாய்நிறையச் சொல்லுவான். ஏனைய தம்பிமாரை அவன் பெயர் சொல்லியே அழைப்பான்; குறிப்பான். 'தம்பி' என்ற சொல்லுக்கு நீ மட்டுமே முழு அர்த்தமானாய். அந்த அர்ஜுனன் கீதோபதேசத்தை பகவானின் குரலிலே கேட்டான். என் அர்ஜுனா கீதையின் சாரமாகவே தன் வாழ்க்கையை அமைத்தான். கொலையிற் கொல்லாமை பயிலச் சென்றவன் நீ. அஹிம்ஸையின் பெயராலே நடந்த சங்காரங்களுக்குப் பதில். கொல்லாமை என்பது இனஉயிர்ப்பு. அந்த உயிர்ப்பைப் பாதுகாக்கச் செய்யப்படும் கொலைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லாமை என்னும் தர்மத்தினை நிலை நாட்டுவதினால், அறமாகவும், தர்மமாகவும் உயர்ந்த அஹிம்ஸாவாகவும் நிற்கும் என்கிறவேதத்தின்திருவாக வாழ்ந்தாய். நீ வாழும் வீரம் என்று உன்னை உன் சகாக்கள் தங்கள் நெஞ்சிலே வைத்தார்கள். நாளைய தலைமுறையும் உன் சாதனைகள் கேட்டு எழுச்சியுற வேண்டும் என்று விரும்பியிருக்கலாம். அதற்கு அவர்கள் புத்தியிலே சிக்கிய உபாயம். ஆனால் மார்க்ஸிஸ தத்துவத்தின் முற்போக்குக் கருத்துக்கள் அனைத்தையும் 'கந்தன் கருணை'யின் மூலக் கதையை இணக்கியதினால் நிலை நாட்டி விட்டதாகக் கொக்கரிக்கும் ஒருவன், அவுஸ்ரேலிய பணம் செய்த ஊழலிலே நீ வீதிப் பெயராயும் நிலைக்கின்றாய் என்று கொச்சைத் தனமாகக் கேட்டான்டா! கொச்சை மனங்கள் கொச்சைக் கற்பனைகளின் விளைநிலம் என்று என் மனம் அமைதி கொள்ள மறுகுகின்றது.

அவனுடைய அந்த ஆணவம் மண்டிய சிரிப்பு, உன் ஆண்மையைக் கொச்சைப்படுத்தும் அந்த ஏளன நகை என் நெஞ்சைப் பிளந்து எதிரொலிந்துக் கொண்டே இருக்கின்றது.

நான் கேட்ட அவப்பெயர்களே என் புதிய தரிசனங்களுக்கான படிக்கற்களாக அமைந்தன. நீ அதை அறிவாய்.

அவனால் உன்னைப் பற்றிய தியானமும், மீள்தியானமும் என் நெஞ்சிலே சடைக்கலாயிற்று. உன் நினைவுகள் இன்றியே இத்தொகுதிக்கான அனைத்துக் கதைகளையும் எழுதியிருப்பேன். என் தேடல்முகமற்றமனிதர்களிலே ஒளிர்ந்த, அன்றேல் பொறி காட்டி மறைந்த ஆண்மையின் தரிசனங்களாகவே மட்டுமே அமைந்திருக்கும். நீ ஆண்மையின் முகமும் உயிர்ப்புமாக இருக்கும்பொழுது.. மித்தி, என் இனிய அர்ஜுனா, அப்படியும் இல்லையடா. உன்னைப் பற்றி எழுத எனக்கு அருகதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. உன்னைப் பற்றி எழுதுவதான நினைப்பிலே என் நெஞ்சிலே தேங்கியுள்ள சோகங்களுக்குத்தானே வடிகால் அமைத்துக் கொண்டிருக்கிறேன்? உன் புனிதம், உன் தனித்துவம், நீ ஒருத்தனே பயின்ற ஆண்மை வார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட உந்நத புனிதமாகவே நிலைத்திருக்க விரும்பினேன்... ஆனால், மார்க்ஸிஸ இலக்கியவாதிகளாகிய கிழடுகள் மொழியிழந்து, சொல்லிழந்து, உயிர்ப்பிழந்து, ஆண்மையிழந்து; பழைய கோஷங்களையும் சொற்களையும் கூண்டிலடைக்கப் பட்ட கிளிகளைப் போல சுரத்தற்றுச் சொல்லிக் கொண்டிருக்கும் அவலங்களின் மொத்த அம்மணமே கந்தன் கருணைக்காரன் உன் பெயரையும் இழுத்துச் செய்த அபவாதம்!

நீ என்னிலே எத்தனையோ திருத்தங்கள் போட்டாய். கலர் ஜிப்பா அணியும் அற்பமான திருத்தம் உட்படப் பல! ஏற்றேன். நீ மித்தி. நான் அப்பா. இப்பொழுது என் திருத்தத்தை நீ ஏற்றுக்கொள். நீ அர்ஜுனனாக உயர்ந்த பொழுது, நான் உன் மகன். உன் சேவகன். உன் பணியிலே உழவாரப் பணி செய்யும் அடிமட்டத் தொண்டன். விடுதலை மனிதனின் பிறப்புரிமை. அந்தப் பிறப்புரிமையை ஏலம் போடும் அனைத்துத் தத்துவங் களும் எனக்குத் துச்சமே! அனைத்து ஊழியங்களும் அற்பமே. உன் புகழைத் தக்க வைக்க நான் யார்? எனக்கு அந்தத் தகுதி இல்லை. அதிகாரம் இல்லை. பிஞ்சுகளாக, பட்டாம் பூச்சிகளுடன் காதலின் தெய்வீகத் தன்மைகள் பற்றிப் பிதற்றித் திரியவேண்டிய பருவத்திலே, பெண்சுகம் துறந்த பீஷ்மர்களாக, ஓர் இனத்தின் விடுதலை வேள்விக்கு ஆகுதியாகத் தங்களை அனைத்தையும் அர்ப்பணித்த அந்த வீரர்களை, ஜனநாயகப் பாதையிலிருந்து தப்பிச் சென்ற ஆட்டிக்குட்டிகள், விளக்கின்மீது போர் தொடுத்த விட்டில் பூச்சிகள் என்று நாநோகா புத்திஜீவிதப் பேச்சுகள் அரசியலின் அங்காடித் தரகர்களிடமிருந்து வரலாம். அவர்களுடைய வீரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்கு அஞ்சலி செலுத்தவேண்டாம். அவர்களுடைய மானவீரம் அற்பமானது என்று கொச்சைப்படுத்தட்டும். இனப்படுகொலையும் அதனைத் தொடர்ந்து நிலவும் யுத்த நிலைமைகளும், மேலை நாடுகளிலே ஏற்படுத்திய 'அநுதாப அலை'யைப் பயன்படுத்தி, வசதியான நாடுகளுக்குச் சென்று, அகதி மனுவிலே ஆயிரம் பொய்கள் ஜோடித்துப் பெற்ற ஜீவிதத்திலே, பிள்ளைகளோ அல்லது பிள்ளைகளைக் கொண்டவர்களோ அனுப்பும் Remittance வசதியிலே, நாற்காலி நலுங்காத நாகரிக அரசியல் பேசட்டும். அது அவர்கள் பாடு! 'இது பொடியள் பாடு' என்று ஒதுங்கியிருக்கும் அற்ப அறிவு நாகரிக ஈரமாவது அவர்கள் நெஞ்சிற் சுரக்காதா?

நீ உணர்ச்சி அலையிலே அள்ளுண்டு போராளியானவனல்லன் என்கிற உண்மையை நான் அறிவேன். 'விஞ்ஞானக் கல்விதான் வசதியான உத்தியோகங்களுக்கான 'பாஸ்போர்ட்' என்கிற நேற்றைய தமிழனின் சாதாரண எண்ணத்திற்கு மசிந்தவன் நீ. நீ அப்ப ஆறாம் வகுப்புப் படிக்கின்றாய் என்று ஞாபகம், 1974-இல் யாழ்ப்பாணத்திலே உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு நடந்த பொழுது அந்த மகாநாட்டுக்குப் போகவேண்டும் என்று நச்சரிக்கிறாய். 'நீ சின்னப்பொடியன். ஆராய்ச்சிக் கட்டுரைகள் உனக்கு விளங்காது ராசா!' என்று நான் தட்டிக் கழிக்கின்றேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், என் அப்பையா இறந்து போனார். அவர் மரணத்தின் பின்பு யாழ்ப்பாண உறவுகள் அனைத்துமே அறுபட்டது போன்ற ஓர் உணர்வு. இதனாலும் பயணத்திற்குப் பஞ்சிப்படுகிறேன். நீ பிடிவாதக்காரன் அல்லன். சின்ன வயசிலிருந்தே நியாயங்களுக்காக வாதாடுபவன். 'அங்கு வருகிற தமிழ்அறிஞர்களைப் பார்க்க ஆசைப்படுகிறன்.' உன்ஆசை தவறல்ல. ரகு மாமா எப்பொழுதும் உனக்கு 'சப்போட்'. எனவே, எங்களுடைய யாழ்ப்பாணப் பயணம் நிகழ்கிறது. மகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் கடைசி நாள். அடுத்த நாள் கொழும்புப் பயணம். நான் ஏ. ஜே. மாமாவுடன் சில இலக்கியச் சல்லாபங்களிலே ஈடுபட ஆசைப்படுகின்றேன். நீயும் ரகு மாமாவும் மகா நாட்டு நிகழ்ச்சிகளைப் பார்த்து முடித்துக் கொண்டு, எங்களை கிறான்ட் ஹோட்டலில் வந்து சந்திக்கிறது என்பது ஏற்பாடு. நீ உன் வழி; நான் என் வழி. என் விருப்புகளை எந்தப் பிள்ளையிடமும் திணித்தது இல்லை. பிஞ்சு வயசிலேயே உங்கள் தனித்துவத்தை மதிக்கும் நாகரிகத்தை நான் பயின்றேன்.

முற்றவெளிப் பக்கமிருந்து அவலக் குரலோசை எழுகின்றது. நான்கு திக்குகளிலும் மக்கள் சிதறி ஓடுகிறார்கள். 'பொலீஸ்காரன்கள் புகுந்து கூட்டத்தைத் தாக்குகிறார்கள்.' 'மின்சாரக் கம்பியிலே விழுந்து ஆக்கள் செத்துப்போனார்களாம்.' 'ராணுவமும் வந்திருக்கு.' தமிழின் உணர்ச்சிப் பிரவாகத்தினைப் பருக வந்த கூட்டம், உயிரைப் பாதுகாக்கப் பதறி ஓடுகிறது. ஹோட்டல் உடனடியாக மூடப்படுகிறது. ஒவ்வொருவரும் வீடுகளின் பாதுகாப்பு நாடுகிறார்கள். நீயும் மாமாவும் எங்கே? 'ஏஜே வீட்டில்' 'என் குஞ்சு உருயிடன் தப்பி வந்துவிட வேண்டும்' என்ற பிரார்த்தனையை நெஞ்சமெல்லாம் நிரப்பிக் குந்தியிருக்கிறேன். மலங்கமலங்க விழித்த வண்ணம் வந்து சேர்ந்து, என் நிம்மதியான சுவாசத்திற்கு வழி வகுக்கின்றாய்.

தமிழின் தொன்மையும் இனிமையும் சுவைக்கச் சென்ற அமைதித் தமிழர்களுள் ஒன்பது பேர் அரச இயந்திரத்தின் அச்சுறுத்தலுக்கும், அட்டகாசத்துக்கும் பலியானார்கள்! இந்த அட்டூழியத்திற்கு நீ ஒரு வாழும் சாட்சியாக வளர்ந்தாய். நீ நீண்ட நேரங்கள் பெரிய பெரிய புத்தகங்கள் வாசிக்கத் துவங்கினாய். தமிழர் வரலாறு சொல்லும் சரித்திர நாவல்களை வாசிக்கத் துவங்கிய நீ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழர் காலத்திலே தமிழர் நாட்டிய உச்சங்களை அறிந்து கொள்ளும் நித்திய தேடல்களாக உன் ஓய்வு நேர வாசிப்புகள் அமைந்தன. 'சோழர்கள் இந்து மா சமுத்திரத்தை நீச்சல் தடாகமாற்றிய கடலோடிகளாக வாழ்ந்தார்கள் என்பது உண்மையா அப்பா? பொலநறுவையை இலங்கையின் கோநகர் ஆக்கியவர்கள் சோழர்களா அப்பா? கலிங்கமும், கடாரமும், ஈழமும், புஷ்பகமும் வெற்றி கொண்ட தமிழன் இன்று பண்டைய பெருமை மட்டும் பேசும் கனவுலகவாதிகளாக மாறியதற்குக் காரணம் என்ன அப்பா?' இப்படி எத்தனை கேள்விகளை நீ கேட்டாய். அப்பொழுது நான் சரித்திர பாடத்திற்குப் பிரதம பரீக்ஷகராயும் பணிபுரிந்தேன். என சக்திக்கும் அறிவுக்கும் ஏற்ப நான் உண்மைகளைச் சொன்னேன். அப்பொழுதெல்லாம் உன் கண்களிலே மின்னலிட்ட பிரகாசங்களின் அர்த்தங்களை அறியாது போனேனே!

நீ போராளியாக மாறிய பின்னர், உன் வாழ்க்கை பற்றிய குறிப்புகளையும், நீ விட்டுச் சென்றிருக்கக் கூடிய எழுத்துக்கள், புகைப்படங்கள் ஆகிய வேட்டையிலும், இந்தக் கதையை எழுதத் தீர்மானமான பிறகு ஈடுபட்டேன். பின்னர் பிரஸ்தாபிக்கத் தக்க சிலவும், என் நெஞ்சிலே மட்டும் சீராட்டும் விஷயங்கள் சிலவும் கிடைத்தன. கிடைத்த ஒரு தகவல் உன் சிந்தனைப் பாங்கத்தை மட்டிட உதவியது.

அஸ்வினி உன்னிடம் நேசம் பாராட்டிய அக்கா. பாரீஸ் கலாமோகனுக்கு எழுத்துப் போஷகத்தில் உதவியவர். அவருக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு ஈழ விடுதலைப் போரின் எழுச்சி மிக்க வீரன் ஒருவனின் பெயரைச் சிபார்சு செய்யும்படி கேட்டிருக்கிறாள். நீ ''சிவகுமாரன் என்று பெயர் வையுங்கோ அக்கா'' என்று சொன்னாயாம். யார் இந்தச் சிவகுமாரன்? அவன் பெயரை நினைவுகளிலே புதுப்பித்து வைக்கும் வாஞ்சை ஏன் உனக்கு ஏற்பட்டது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ச் சுவைப்பிற்காக மட்டுமே தமது உயிர்களை இழக்க நேரிட்ட ஒன்பது தமிழ் உயிர்களைப்பலிவாங்கிய செயலுக்கு பொறுப்பாளியாக இருந்த போலீஸ் அதிகாரியை வேட்டையாட ஆயுத பாணியானவர் சிவகுமாரன். அடிபட்ட இனம் தன் சுதந்திரத்தை மீளப் பெற ஆயுதந் தாங்கும் வழியே எஞ்சியுள்ளது என்று முதலிலே தீர்மானித்தவன் சிவகுமாரன். அந்தச் சிவகுமாரன் போலீஸாரிடம் சிக்க நேர்ந்த கட்டத்தில், தன்னுயிரையே மாய்த்துக் கொண்டவன். புதிய யுகத்தின் விடிவெள்ளி. அவன் நினைவினை நீ உன் நெஞ்சிலே பத்து ஆண்டுகளுக்கு மேலாகப் பசுமையாகச் சுமந்து திரிந்தாயா? உன் போர் மூர்க்கம், ஒன்பது அப்பாவித் தமிழ்ச் சுவைஞரின் சங்காரத்திலே துவங்கிற்று என்பது போன்றும் சில ஆதாரங்கள். உண்மையை நீ மட்டுமே அறிவாய். சில என் சடைத்த ஊகங்களாகவும் இருக்கலாம்.

ஆயுதம் தாங்கும் போர்க் குழுவிலே சேர்வது ஒரு Fashion போன்று நமது இளைஞர்களை ஆகர்ஷித்த கால கட்டம் ஒன்று உண்டு. அவ்வாறு 'ஆயுதகலாசாரத்'தின் பக்தராக மாறிய பலரை நான் அறிவேன். அவர்களிலே சிலர் கொள்ளையர்களாகவும், கூலிக்கு வன்செயல் இயற்றும் துஷ்டர்களாக தாழ்ந்து வீழ்ந்ததையும் அறிவேன். அவர்களிலே சிலர் பெற்றோர்களுடைய பணவசதிகளினால் 'மீட்கப்'பட்டு, புலம் பெயர்ந்த நாடுகளிலே ஜனநாயக மேன்மைக்கு வாழிபாடும் பிரசாரர்களாக வலம் வருவதையும் பார்த்திருக்கின்றேன். போர் நெறியை நீ கவர்ச்சியாய்த் தரிசித்தவனல்லன்; விடுதலைக்கான கடமையாய் ஏற்றவன். உன்னை எஸ்.பொ.வின் மகனாக வாழச் செய்யலாம் என்று நான் போட்ட திட்டங்கள் அனைத்திலும் திருத்தம் போட்டாய். இருந்தாலும், ஆண்மையின் ஓர்மத்திலே நீ மகாபெரியவன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ யாழ்ப்பாணத்திலே படித்து கொண்டிருந்த காலம். என்னை உன் சைக்கிள் பாரிலே வைத்து ஏ.ஜே மாமா வீட்டுக்கு மிதிக்கிறாய், தபாலாபீஸிலிருந்து பார்க்கும் பொழுது... ஒன்பது தமிழ்ச் சுவைஞர்களுக்கு, யாழ்ப் பாணத்தின் எளிமை நாட்டிய நினைவுத் தூண்கள் ஒன்பதும் இராணுவ வன்மையினால் சிதைவுற்றுக் கிடக்கின்றன. உண்மையான போர் வீரன் எதிரிக்கு மரியாதை செலுத்துவதையும் தன் நாகரிகமாகக் கைப்பற்றுவான். ஆனால், யாழ்ப்பாண மண்ணிலே நிலைகொண்ட ராணுவம் இனவெறியின் கிங்காதரர்கள். அவர்கள் நாகரிக உணர்வுகளை கிராமத்தின் 'பன்ச ல'க்களிலே விட்டிட்டு வந்தவர்கள். மிலேச்சத்துக்கு முன்னால் நினைவுத் தூண்களா? நினைவுத் தூண்களின் சிதைபாடு அந்த மிலேச்சத்தின் சின்னமாகக் கிடக் கின்றது.

முன்னியப்பா கோயில் தாண்டி, டவுன் ஹோல் முடக்குக்கு வருகிறோம். பாரிய இரும்புக் கம்பிகளையும் தொன் கணக்கான கொங்கிறீட் கலவைகளையும் விழுங்கி செல்வா நினைவு தூபி எழுந்து கொண்டிருக் கின்றது. 'இவ்வளவு பணத்தையும் செலவு செய்து ஒரு மண்டபம், ஒரு படிப்பகம்... மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். Colossal waste of money. என் பாட்டில் அணுங்குகின்றேன்...நீ விடவில்லை.'அப்பா இது நமது ஓர்மத்தின் சின்னம். சவால்! ராணுவமே, அந்த ஒன்பது தூண்களையும் உடைத்து உன் வீரத்தைக்காட்டினாயே. உம். உன்னால் முடியுமானால் இந்த தூபியை உடை! நமது உணர்ச்சிகளை வெளிக்காட்டுவதற்கு புதிய மொழி தேவைப்படுகிறது. சிங்கள ராணுவத்தின் ஆணவத்துக்கும் மூர்க்கத்திற்கும் விளங்கக் கூடிய மொழி!' மித்தி, நீ எவ்வளவு அழகாகப் பாடுவாய். அந்தச் சுந்தரக் குரலிலே, இத்தகைய ஒரு தீர்மானம் எப்படி விளைந்தது. உன் மொழிகள் எனக்குப் புரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. அதைப் புரிந்து கொள்ளப் பிரயாசைப்படு வதையும் என் ஊழியமாக நியமித்து விட்டாயே!

நீ புதுமொழி தேடி அலைகின்றாய் என்பது உன்னைச் சுற்றி மொய்த்த பெண்கள் கூட்டத்துக்குத் தெரியாது. அவர்களிலே பெரும்பாலானவர்கள் உன் அண்ணாவின் சிநேகிதிகள், அல்லது 'அக்கடமி'யில் அவனிடம் படித்த மாணவிகள். தினமும் வண்ணத்துப் பூச்சிகளின் படை யெடுப்பு வீட்டில்! 'அன்ரி' என்று உன் அம்மாவை அவர்கள் அன்பிலே தோய்த்தெடுத்தார்கள். பெண்ணி யம் பற்றி ஆரவாரமாக எழுதுவதும் முற்போக்கு எழுத்துப் பணி என்று நேற்று வந்த 'தாமரை'யில் சித்தாந்தத்தெளிவோடு பிரசித்தம்செய்திருக்கிறார்கள்.

ஓர் ஆணைச்சுற்றி, பெண் தன் காதலை வெளிப்படுத்து வதற்கு உரிமை உண்டு. பெண்ணியத்தின் பட்டியலில் இது அடங்குமோ என்பதை அறியாத மொக்கன் நான். நேற்றைய தலைமுறைக்காரன்.

இருப்பினும், பெண்ணியம் சுயாதீனம் பெற்று, வீட்டிலே பறப்பு நடத்தியது எனக்கு வேடிக்கை யாகவும் இருந்தது. நான் சீதன முறையைத் தகர்த்து, கலப்பு மணம் செய்தவன். இதனைப் பெரிய புரட்சி யென்றும், சமூகச் சீர்திருத்தம் என்றும் அலட்டிக் கொண்டது கிடையாது. மிக இயல்பான வாழ்க்கை முறை என்று அர்த்தப்படுத்திக் கொண்டவன். என் பிள்ளைகளுக்கும் தங்கள் மண வாழ்க்கையை தாங்களே தேர்ந்தெடுக்கும் சுயாதீனத்தை வழங்கியவன். வண்ண வண்ண உடைகளிலே, இவ்வளவு சிங்கார முறைகள் உண்டு என்பதைப் பறைசாற்றி வந்த அந்த இளமை குவியலிலே... கடைசியில், ஒன்றுமே பேசாது, ஒரு மூலையிலே மங்குளிப் பெண்ணாக மௌனம் சாதித்த அந்தக் கீரிசாம்பாளுக்குத்தான், மோதிர மோதகம் கிடைத்தது! அந்த கீரிசாம்பாளின் பெயர் ஷாமினி. 'இருந்து பாருங்கப்பா, அண்ணாவுக்கு ஷாமினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காவில தான் விருப்பம். 'She will be the best Choice' என்று ஒரு சமயம் என் செவிகளிலே கிசுகிசுத்தாய். மித்தி, நீ படு கள்ளனடா. உன் வாக்கே பலித்தது. அந்த ஷாமின் அக்காவுக்கு நீ என்றும் லட்சுமணனாகச் சேவை செய்வதிலே மகிழ்ந்தாய் என்பதைக் கண்டு அதிசயப்பட்டேன். அண்ணியின் ஆத்மார்த்த சேவிப்புக்கு அந்த இராமாயண லட்சுமணன் உன்னிடம் பயிற்சி பெறவேண்டும் என்று நான் நினைத்த சந்தர்ப்பங்கள் ஏராளம். வெயில், மழை, புயல், இரவு, பகல் எதுவானாலும், 'ஷாமின் அக்கா' வின் சௌகரியங்களை உன் கண்ணின் கருமணிகளாய்ச் சுமந்தாய். ஆத்மார்த்த அர்ப்பணம் என்ற சொல்லுக்கு மித்தி, உன் செயல்களிலிருந்துதான் அர்த்தம் அறிந்து கொண்டேன்.

நீ போராளியாக மாறிய பின்னர்... உன் தொடர்புகள் மகா அரிதான பின்னர்... 'அப்பா, நேற்றைய தினத்தை நான் என்றும் மறக்க மாட்டேன். நேற்று எங்களுக்குப் பட்டமளிப்பு விழா என்பது உங்களுக்குத் தெரியும். விழா முடிந்து அநுவுடன் திரும்பிக் கொண்டிருந்த பொழுது, மித்தி வந்து எங்களை வாழ்த்தினான். பட்டமளிப்பு விழா அமைதியாக நிறைவேற அவனுடைய ஆண்மையும் காவல் நின்றதாம் அப்பா...' என்று ஷாமின் மகள் நைஜீரியாவுக்குக் கடிதம் எழுதியிருந்தாள். உன்னைப் பற்றிய அந்தச் செய்தியை நான் ஆயிரம் தடவைகள் வாசித்து வாசித்து மகிழ்ந்தேன்டா. ஆனால், ஷாமின் உன் அண்ணாவின் மனைவியாக—உன் அண்ணியாக—எங்கள் வீட்டின் மகாலட்சுமியாக நிவேதிக்கப்பட்ட அந்த அழகிய பட்டாபிசேகத்திலே, பால் அறுகு கலந்த அட்சதை போடுவதற்கு நீ இல்லாமல் போய்விட்டாயே... நீ இல்லாத அந்தப் பென்னம் பெரிய வெறுமையை, ஒருவரும் அறியாவண்ணம், நான் நெஞ்சிலே சுமந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது... என் கை நடுங்குகின்றது... எழுத முடிய வில்லை...

'பிள்ளோய், மித்தியின் சாதகப்படி, அவனிலும் பார்க்க வயசு கூடிய ஒருத்திதான் அவனை மயக்கிப் பிடிப் பாளாம்...' என்று அம்மம்மா தளர்ந்து போன முன் பல்லைச் சிரிப்பிலே மினுக்கிச் சொல்லுவா, 'போணெய் கிழவி' என்று நீயும் செல்லமாகச் சினப்பாய். உன் வயசு ஒத்த, அல்லது வயசு குறைந்த பெண்களுடன் நீ பழகியதை நான் கண்டதில்லை. உன் சிநேகிதிகள் எல்லோருமே உனக்கு 'அக்கா'...

அம்மா பாவம். நல்லவள். யார் மீதும் சட்டென்று ஐமிச்சப்படுவது அவள் பலவீனம். நேரிலே பேசுவது போலத்தான் அவள் கடிதம் எழுதுவாள். உணர்ச்சி களை மொழியினால் திரையிடாது, நேரில் பேசுவது போலத்தான் எழுதுவாள்.

'இவள் வேணியைத் தெரியுமல்லே அப்பா?...அந்த வேணிதான் மாப்பிள்ளை கொள்ளி. நானும் இந்துவும் பாடசாலைக்கு. மேகலா கந்தோருக்கு, மித்தி மட்டுந் தான் வீட்டில. அம்மாவுக்கு ஒண்டுக்கும் ஏலாது. வருத்தவாளி. Combined study எண்டு சொல்லிக் கொண்டு ஒவ்வொரு நாளும் வாராள். படிப்பு என்ன படிப்பு? ஒரே சிரிப்பும் கலகலப்பும் தானாம். அவளுக்கு அநுரா கிடைக்கேல்லை எண்ட வெப்பிசாரம்... அவனுக்குஇவள்இரண்டு வயசு மூப்பு. அதுகூட அவளுக் குத் தெரியாதே? அவளை வீட்டை வரவிடாதை எண்டா லும் கேக்கிறான் இல்லை. சண்டைக்கு வாறான்... நீங்கள் செல்லம் குடுத்து எல்லாப் பிள்ளைகளையும் கெடுத்திருக்கிறியள். அவளை நான் ஒரு நாளும் என்ர மருமகளா வீட்டிலை எடுக்கவும் மாட்டன். நீங்கள் உடனை மித்திக்குஒரு கடுதாசி போடுங்கோ... அவளு டைய சவகாசத்தை உடனடியாக மறக்கச் சொல்லி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இண்டைக்கே அவனுக்கு எழுதுங்கோ... பேந்து என்னைப் பைத்தியக்காரி ஆக்காதேயுங்கோ...'

உன் அம்மாவின் கடிதம் ஊட்டிய எரிச்சல் அடங்குவதற்கு முன்னரே, நான் உனக்கு ஒரு கடிதம் எழுதினேன். அம்மாவின் இஷ்டத்தை நிறைவேற்ற, என் எழுத்து வித்தையை என் கடிதமாக உனக்கு கொட்டியதாக ஞாபகம். நீ வேணியைக் காதலிக்கிறாய் என்கிற பிரமேயத்தில் அந்தக் கடிதம் எழுதப்பட்டது என்பது நிச்சயம்.

உன் பதில் உரிய காலத்தில் வந்தது. அந்தக் கடிதத்தை நான் நைஜீரியாவைவிட்டு இறுதியாகப் புறப்படும் பொழுதுதான் கிழித்தெறிந்தேன். அதன் வாசகங்களை இப்பொழுதுமுழுமையாக நினைவுக்கு கொண்டுவர முடியவில்லை. அம்மா சாட்டிய குற்றச்சாட்டுகளை, உன்னிடம் விளக்கம் கேளாமல் ஏற்று, உன்னைக் குற்றவாளியாக நான் நியமித்தஎன் அநியாயத்தை நீ எதிர்த்தாய். விசாரிக்காது ஒரு தலைப்பட்சமான தீர்ப்பு என் அறிவுக்கும் முதிர்ச்சிக்கும் அநுபவத்திற்கும் ஏற்றதல்ல என்று மனம்நொந்து கொண்டாய். என் வேண்டுகோளை ஏற்று வேணியை வீட்டுக்கு வரவேண்டாம் என்று கேட்டுக் கொண்டதாக உன் கீழ்ப்படிவைக் காட்டினாய். அதேசமயம் உன் நிலைப்பாட்டினையும் சுயாதீனத்தையும் இழக்கத் தயாராகவும் இல்லை. 'ஒரு பெண்ணுடன் ஓர் ஆண் காதல் வசப்பட்டுத்தான் பழக வேண்டும் என்கிற கட்டாயம் இல்லை. வேணி, அண்ணாவை விரும்பியிருக்கலாம். அது அவளுடைய உரிமை. அது அவளுடைய தப்பும் இல்லை. அதற்காக அவள் என் நல்ல சிநேகிதியாகஇருக்கும் தகைமைகளைஇழந்துவிடவில்லை. வேணி எனக்கு நல்ல சிநேகிதி. ஆண்களுக்கு ஆண்கள் மட்டுமே நண்பர்களாக இருக்கலாம் என்று நான் நினைக்கவில்லை. நட்பு என்பது உடல் சார்ந்தது அல்ல. அது பரஸ்பரப் புரிந்துணர்விலும்-உதவும் அருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சிலும் வேர் கொள்வது. உடலுறவுச் சிந்தனைகள் எதுவும் இல்லாமல் ஓர் ஆணும் பெண்ணும் நல்ல நண்பர்களாக வாழமுடியும் என்று நான் சத்தியமாகவே நம்புகின்றேன். இதுவே நாளைய அறிவு நாகரிகமாக நிலைக்கும். அம்மம்மாவும் அம்மாவும் பழைய கால மனிதர். புதிய யுகத்தின் சிந்தனா வேகத்தை உணராதவர்கள். ஆனால், நீங்களுமா அப்பா... புதிய சிந்தனா வேகத்திற்கு உங்களுடைய எழுத்து ஊழியம் அற்புதமான நாற்று மேடையென்று உங்களைப் பற்றி நான் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தேனே, அப்பா. நீங்களுமா?...' என்று ஏதேதோ எழுதினாய். உன் கடிதம் என் எழுத்து வல்லபங்கள் அனைத்தையும் குதறிக் கிழித்தது. நான் மகா சின்ன மனிதனாக நடந்து கொண்டேன் என்பதை நினைத்துக் கூனிக் குறுகினேன். தலைமுறை இடைவெளியின் பொறுப்பங்களை அறியாத பாமரனாய் வாழ்ந்தேனே என்று சாம்பினேன். உன்னிடம் மன்னிப்புக் கேட்பது தான் தர்மம் என்பதை உணர்ந்தேன். 'என்னை மன்னித்துக் கொள்ளடா ராசா, நான் மகா சின்ன மனிதனாக உனக்கு எழுதிய அந்தக் கடிதத்தை மறந்துவிடு. நீ வேணியுடன் நல்ல நண்பனாய் வாழலாம் என்பதை நான் புரிந்து கொள்ளுகின்றேன். அவளை நோகச்செய்யும் வசனங்கள் சென்ற கடிதத்திலே எழுதியிருந்தால், உனக்காக என்னை மன்னிக்கும்படி கேட்டுக் கொள்ள மாட்டாயா? நான் அவசரப்பட்டு உன் சுயாதீனத்திலே தலையிட்டதற்காக உண்மையிலேயே மனவருத்தப்படுகின்றேன். ஒரு பக்கத்துக் கதையைக் கேட்க, பெண்டாட்டி தாஸனாக நடந்து கொண்டதற்காகவெட்கப்படுகின்றேன். என்னை மன்னித்ததாக பதில் எழுது. எழுதி எனக்கு ஆறுதல்தா...' என்று எழுதியிருந்தேன். மித்தி, உன் உள்ளம் மகா விசாலமானது. சொந்தச் சுக துக்கங்களிலும் பார்க்கப் பிறருடைய சுக-துக்கங்களிலே அக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறை ஊன்றுவதை உன் மதமாக வைத்தவன். உன் பதிலில், 'எனக்காக நீங்கள் வாங்கி வைத்திருக்கும் 'கமரா'வால் எப்பொழுது உங்களைப் படம் எடுப்பேன் என்று ஏங்கிக் கொண்டிருக்கிறேன்' என்று எல்லாம் மறந்துவிட்ட குழந்தைபோல குதூகலந் தொனிக்கப் பதில் எழுதினாய்.

நைஜீரியாவுக்கு என்னை பயணமனுப்பிய பொழுதே உனக்கு ஒரு ஜெஸிக்கா கமரா நான் வாங்கி வரவேண்டும் என்று கேட்டிருந்தாய். நண்பர்களிடம் கமரா 'ஓஸி' யிலே பெற்று வந்து, படம் எடுத்து நீ பட்ட சிரமங்கள் நான் அறியாதனவல்ல. அட, மித்தி. எந்தக் கலை தான் உனக்கு வசப்படவில்லை? 'புகைப்படக் கருவி எடுப்பவனின் தூரிகையாக மட்டுமே பயன்படுதல் வேண்டும்' என்று விளக்கினாய். இதனால், எலக்ரோனிக் டிவைஸ் உள்ள கமரா வேண்டாம் என்று சொல்லியிருந்தாய். லண்டன் சென்றிருந்த ஒரு நண்பன் மூலம் உனக்கு நல்லதொருஜெஸிக்கா வாங்கி வைத்துக் கொண்டேன். உன் ஆசைகள் எப்பொழுதும் எனக்கு Top Preority!

1983 ஜூலை மாதம் ஊர் திரும்புவதாக இருந்தேன். 'டிக்கற்' கைக்குக் கிடைத்து, பறப்புக்கான தோதான தேதிகளை உறுதிசெய்யக் 'கானோ' சென்று திரும்பினேன். அப்பொழுதுதான் இலங்கையின் அதி உந்நத ஆரிய பௌத்த கலாசாரத்தின் 'உச்ச'ங்களை பி.பி.ஸி உலகுக்கு அறிவிக்கத் துவங்கியது. தமிழனின் தொண்டையை வாளாலே வெட்டி, சீறிப்பாய்ந்த தமிழ்இரத்தத்தைப் பச்சையாகக் குடித்து புத்த பகவானின் தணியாத தாகத்தை ஒருத்தன் தணித்தானாம். வெளிக்கடைச் சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகளைக் கொன்று குவித்து, மனுநீதிக்கும் உயர்வான 'துட்ட காமினி' நீதி நிலைநாட்டினார்களாம். மரணதண்டனை விதிக்கப்பட்ட பொழுது 'என் விழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைத் தானஞ்செய்கின்றேன், அந்த விழிகளாவது மலரப்போகும், தமிழ் ஈழத்தைக் கண்டு களிக்கட்டும்' என்று குட்டிமணி வசனம் பேசலாமா? 'நுங்கின் கண் களைப் பிதுக்கி எடுப்பதுபோல, அவன் கண்களைத் தோண்டி எடுத்து வீதியில் எறிந்து, பறைத் தமிழரின் சிங்காரக் கனவுகளை நொருக்கி' சிங்கள மக்களின் தர்மிஷ்ட அரசின் உச்ச சமநீதிப் பரிபாலனத்தை அவனிக்கே அறிவித்தார்களாம். 'யுத்தம் என்றால் யுத்தம், சமாதானம் என்றால் சமாதானம்' என்று அதி உத்தம ஜனாதிபதி அகதி முகாம்களிலே மிடிமைப்பட்ட மக்களைப் பார்த்துச் சொன்னாராம். பி.பி.ஸி.யில் ஒலி பரப்பான வர்த்தமானங்களைக் கேட்டு என் மனம் சவுங் கியது. அஹிம்ஸா மூர்த்தி புத்தபகவானின் நாமத்தி னைப் புனிதப்படுத்துவது என்கிற பெயரால், ஓர் இனம் இவ்வளவு மிலேச்சத்தனமாகக் கூத்தாடக்கூடும் என் பது என் அதி பயங்கரக் கற்பனைகளிலேகூடச் சிக்குப் பட்டது கிடையாது... அது வரையிலும் சர்வதேசியமான மானிடத் தேடலிலே ஈடுபடுவதுதான் தமிழ் ஊழியம் என்று தந்தக் கோபுரங்களின் முகடுகளிலே இருந்து சத்தம் போட்டேனே! அனைத்தும் அனைத்துமே புதிய தரிசனத்திற்கு உட்படுத்தப்படுதல் வேண்டும் என்கிற ஞானத்தின் விளைநிலம் அந்தப் பயங்கர ஜூலை சமர்க் களத்திலே விளைந்ததுதான் கீதை. எத்தனை தடவை கள் என்னுடைய 'கீதை நிழலில்...' என்கிற படைப்பை வைத்துப் பேசினோம். கொலையிற் கொல்லாமையே நமக்கு ஏற்ற தர்மம் என்கிற ஞானம் உனக்கு எப் பொழுது வந்தது? 74 இலா? 83 இலா? எனக்குத் தெரி யாது. அல்லது 63இலா?

இந்தப் புதுக் கணக்கை இப்பொழுதுதான், இதை எழுதும் இந்தக் கணத்திலேதான், அசை போடுகிறேன். முற்போக்கு இலக்கிய ஊழியத்தை மகத்தானதாக ஒரு காலத்திலே ஏற்றிருந்தவன் நான். 'இலக்கிய வசதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்தவர்களுடைய லாகிரிவஸ்து என்று கொச்சைப் படுத்தப்படுதல் ஈனம். மானிட குலத்தில் அச்சாவான உணர்ச்சிகளை, அவர்கள் தங்களுடைய மானுஷீகத் தினை மீள்தரிசனம் செய்யும் வகையில் அவர்களுடைய மொழிக்கு உயிர்த்துவம் கொடுத்து எழுதும் கலையே முற்போக்கு இலக்கியம் என்று ஒரு காலத்தில் விளங்கிக் கொண்டேன். அதுவே, பாட்டாளி வர்க்கத்தின் நிமிர் நடைக்கான கீதம் என்று நம்பினேன். அத்தகைய இலக்கியங்கள் ஈழத்தின் மண்ணிலும் மொழியிலும் அறுவடை செய்யும் தோட்டக்காரனாக என்னை நியமித்துத் தமிழ் செய்தவன். ஆனால், அந்த வட்டத்துக்குள் ஜாதி அபிமானங்களும், படிப்புத் தகைமைகளும் பாராட்டப்பட்டு 'இரட்டை அளவு கோல்கள்' புகுத்தப்பட்டு, சத்தியங்கள் அணாப்பப் பட்ட பொழுது, நான் ஆணவக்காரனாய்த் திமிர்ந்து எழுந்தேன். போலிகளையும், அசத்தியங்களையும் சாடு வதற்கு அந்த ஆணவந் தேவை. சர்வாதிகார மூர்க்கம் பெற்றிருந்த அந்த இயக்கத்துக்கு எதிராகத் தன்னந் தனியாக என்னையே போராளியாக நியமித்தேன். எத்தனை எதிர்ப்பு? எத்தனை இழப்பு? எத்தனை சோகம்? எத்தனை கொடுமை! இருந்தும் நான் துவண் டேனல்லன். சத்தியத்தின் பக்கல் நிற்கின்றேன் என்கிற தைரியம். புதியன தேடும் ஆக்கினைக்குள் என்னை உட்படுத்திக் கொண்டேன் என்கிற பெருமிதம். அவர்கள் எவற்றை எதற்காக இழக்கத் தயாரா னார்கள் என்கிற புதிய தேடலும். இழக்கத் தக்கன எவை? இழக்க முடியாத மானிட விழுமியங்கள் எவை? அந்தத் தேடலிலே நான் சாம்பிய காலத்தில் உன் அம்மா எனக்குப் பேராதரவாயும் துணையாகவும் துணிந்து நின்றாள். அப்பொழுதுதான் நீ சூலுற்று வளர்ந்தாய். நீ பிறந்த அதே ஆண்டில்—63இல்— உன் குஞ்சுச் சிரிப்புகளிலே பெற்ற புதிய உற்சாகத் தினாலும், நற்போக்கு இலக்கியப் பிரகடனத்துக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்ற களமாக மட்டக்களப்புத் தமிழ் விழாவை ஏற்பாடு செய்தேன். அது ஒரு தனி வரலாறு. அது என் வரலாறு. உனது அல்ல. ஆனாலும், என்னையே நான் வெற்றி கண்டு, என் இலக்கிய ஊழியத்தின் சரியான அர்த்தத்தினைப் பிரசித்தம் செய்ததற்கும், உனக்கும் ஓர் உறவு உண்டு என்கிற காவிய மயமான மயக்கம். இதனாலும், உன் நினைவுகள் என் நெஞ்சிலே குதூகலத்தைப் பெருக்கும்.

நீ மிகவும் அழகான குழந்தையாகப் பிறந்தாய். அழ மாட்டாய். சதா வேடிக்கை காட்டுவாய். ஓர் இடத்திலும் குந்தியிருக்காத 'துரு துரு'. தரையில் இறக்கி விட்டதும் 'குடு குடு' ஓட்டம். நடக்கும் பருவத்தில் ஓட்டம். வால்ற்டிஸ்னி Cartoon இல் வரும் Donald Duck போல் ஓட்டம். நான் உனக்குச் சூட்டி அழைத்த பட்டப்பெயர் அது தான். ஏதோ பெரிசாக விளங்கிக் கொண்டவன் போல நீ சிரிப்பாய்.

என் அத்தனை பிள்ளைகளிலும் நீ வித்தியாச மானவன்; தனித்துவமானவன். கலைக் கண்கள். உன் குரல் கூட இனிய சங்கீதம். உன் குரலைக்கேட்டு உனக்குச் சங்கீதம் நன்றாக வரும் என்று உன் அம்மா ஆசைப்பட்டாள். அவள் இறை தியானத்திலே பாடும் தேவாரங்கள் மகா இனிமையானவை. கோபால கிருஷ்ண வாத்தியாரிடம் நீ முறையாகச் சங்கீதப் பாடங்கள் கேட்கத் துவங்கினாய். உன் சங்கீதப் பயிற்சிக்கு ஹார்மோனியப் பெட்டி தேவை என்றாய். என் எழுத்தின் ஆண்மைக்கு தமிழ்நாட்டுப் பத்திரிகை அனுப்பி வைத்த சன்மானத்திலேதான் உன் ஹார் மோனியப் பெட்டி வாங்கப்பட்டது. அந்தப் பெட்டி உன் அண்ணாவின் செலக்ஸன். அவன் அதை வாங்கி எவ்வளவு பெருமையுடன் கொழும்பிலிருந்து கொண்டு வந்து உன்னிடம் ஒப்படைத்தான்! உன் குரல் இனிமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானது. ஆனால், சங்கீதத்தைச் சாதகம் செய்தல் மகா கொடுமையான பயிற்சி என்று நான் நினைப்பதும் உண்டு. அவஸ்தையான சாதகத்தினை முடித்து வரும்பொழுது, கற்கண்டு போட்டுக் காச்சிய பாலுடன் அம்மம்மா காத்திருப்பாள். நீ இனியவன்; நீ வாழ்ந்த குடும்பச் சூழலும் மகா இனியது.

உன் அக்கறைகளும், ரஸனைகளும் சங்கீதத்துக்குள் மட்டும் அடங்கியதல்ல என்பதை நீ சீக்கிரமே நிருபித்தாய். ஓவியம். கவிதை. கிரிக்கட். நான் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் பிரதி மதிப்பீட்டுக் குழுத்தலைவராக இருந்த பொழுது, திரைப்படப் பிரதியாக்கம் 'கல்யாணி' என்கிற ராகத்தை ஆதார சுருதியாக வைத்து, நீ அற்புதமான திரைப்படப் பிரதி ஒன்றினை எழுதிக் காட்டினாய். அப்பொழுது உனக்கு வயசு பதினெட்டுத்தான். கந்தசாமி நாயுடு அந்தப் பிரதியை வாங்க முற்பணம் கூடத் தந்திருந்தார். நீ Jack of all trades அல்ல! ஒன்றை வசப்படுத்திய பின்னர், இன்னொன்றுக்குத் தாவுவாய். எப்பொழுதும் புதிது புதிதாக வாழ்க்கையின் அர்த்தங்களையும் சுருதிகளையும் அறிந்து கொள்ள வேண்டும் என்கிற ஒரு வேகம். இந்த உன் வேகத்தையும் வளர்ச்சியையும் கண்டு என் கண்களே உன்னைச் சுட்டுவிடும் என்று நான் பயந்தது கூட உண்டு. என் மனசிலே உனக்கு எத்தனை தடவைகள் 'நாவூறு' கழிச்சிருக்கிறேன் தெரியுமா?

நான் 84இல் ஊர் திரும்பிய பொழுது, உன்னை மட்டக் களப்பிலே பார்க்கிறேன். என்னமாய் வளர்ந்திருந்தாய்! முழு ஆண் மகன்! நீ தனித்துவமானவன். உன் ஆற்றல்கள், பார்வைகள், போக்குகள் அனைத்துமே தனித்துவமானவையாகச் சடைத்திருப்பதையும் உணர்ந்தேன். உன்னை வீட்டிலுள்ளவர்கள் புரிந்துகொள்ளாததினால், அந்நியப்படுத்தப்பட்ட உணர்வுகளுடன் நீ தவித்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருப்பதையும் என்னால் விளங்கிக் கொள்ள முடிந்தது. நீ நியாயத்தின் புத்திரன் என்றாலும், என் உணர்ச்சிகளில் என் மகனும்...

விடிந்ததும் சைக்கிளில் ஏறி முற்றவெளி சென்றுவிடு வாய். சரியாக ஒரு மணித்தியாலம் ஓட்டம், உடற் பயிற்சி முதலியன. திரும்பியதும், வீட்டிலே நீ தொங்க விட்டிருந்த மணல் மூட்டை மீது boxing பயிற்சி. உடல் வேர்வை ஆறும் வரையிலும், வேப்பங் கிளை ஒன்றிலே அமர்ந்திருந்து உனக்குப் பிடித்தமான பாடல்களை உன் சுவைப்பிற்காகவே பாடுவாய். குளிப்பு. மட்டக் களப்பு வாகடப்படி தயாரிக்கப்பட்ட 'கரையல்'. பிறகு புத்தகங்களிலே மூழ்கிவிடுவாய்.

உன் போக்கைப் புரிந்து கொள்ள முடியாததினால் வீட்டிலுள்ளவர்களிடமிருந்து ஏராளமான குற்றச்சாட்டு கள் என் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

'அப்பா, இவன் மித்தி இப்ப ஒரு சொல்வழியும் கேக் கிறான் இல்லை. இந்தப் புதுவீட்டைக் கட்டி எழுப்பு வதற்கு எல்லாரும் பாடுபட்டாங்கள் அப்பா. லீவில வந்த அநுராகூட மண்வெட்டியுடனும் அலவாங்குடனும் கூலிக்காரன் போல பாடுபட்டான். அவர்கூட வாற நேரமெல்லாம், சாறனைக் கட்டிக் கொண்டு முட்டாள் போல பாடுபட்டார். இது சரியில்லைத்தானே அப்பா? மித்தி அசையவே மாட்டான். பெரிய ஜென்ரில்மென் போல, வேப்ப மரத்துக்குக் கீழ கதிரைப் போட்டு வாசிச் சுக் கொண்டே இருப்பான். பாடப் புத்தகங்கள் என்றால் காரியமில்லை. எல்லாம் கதைப் புத்தகங்கள். உங்களைப் பார்க்கப் பெரிய எழுத்தாளன் எண்ட நினைப்பு அவனுக்கு... இஞ்சை, அந்த அறையை வந்து பாருங்கோ...இதிலைதான் மணல்மூட்டை கட்டி boxing practice. நிலத்துக்கு சீமேந்து இழுத்த அன்றைக் கும் Practice. மூட்டை விழுந்து இஞ்ச பள்ளம்...' என்று உன் அக்காள் ஒருபாட்டம் அழுது ஓய்ந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைக்கும் அந்த அறையிலே அந்தப் பள்ளம் இருக்கிறது. அதனை உன் ஆண்மையின், உடல் வீரியத்தின் சுவடு என்று சம்பாவனை செய்கின்றேன் என்பதை யாரிடம் சொல்வேன்?

'வேணி இப்ப வீட்டை வாறது இல்லைத்தான். இவர் அவளை வெளியிலை சந்திச்சுத் திரியிறார் என்று கேள்வி... நீங்கள் திரும்பவும் நைஜீரியாவுக்குப் போறதுக்கு இடையிலை அவனுக்கு நல்ல வழி ஒன்றை ஏற்பாடு செய்திட்டுப்போங்கோ... மேகலாவை இவன் தமக்கை என்றும் மதிக்கிறான் இல்லை...' என்று அம்மா தன் பங்கிற்கு மூக்கைச் சிந்தினாள்.

நான் வந்தது இரண்டு மாத லீவில். புதிய வீட்டை முழுமைப்படுத்த வேண்டும். அக்காவின் கல்யாணத்தை டீங்கா முடிக்கவும் வேணும். பச்சையப்பன் கல்லூரியில் பி.எஸ்.ஸி. படிப்பதற்கு அட்மிஷன் கிடைச்சும் நீ போகவில்லை. நீ இஷ்டப்படும் ஒரு course இலே உன்னை இந்தியாவில் சேர்க்க வேண்டும். அக்காவின் கல்யாணம் முடிந்துவிட்டால், அம்மாவுக்கு இங்கை என்ன வேலை? அங்கு அவளுக்கு ஒரு teaching job கிடைக்கும் வாய்ப்பும் இருக்கிறது. அம்மாவையும் இந்துவையும் அழைத்துச் செல்வதற்கான டிக்கற்றும் கொண்டு வந்திருக்கிறன். அம்மாவின் pass-port இல் all country endorsement குத்தி எடுக்க வேண்டும். திரும்பிப் போகும் பயண ஏற்பாடுகளைக் கவனிக்க வேண்டும். சடுதியாக இமயமலையைப் பிடுங்கி என் தோளிலே வைத்துச் சுமக்கச் சொன்னது போல ஒரு பாரம்... அந்தப் பாரத்தினை சுமக்க எனக்குச் சகாயமாக நீ ஒருவனே உதவியதை யாரும் கண்டுகொள்ளவும் இல்லை.

அம்மாவின் பாஸ்போட் 'எண்டோஸ்மெண்ட்' ஐ கவனிக்க, அம்மாவுக்கு அனுப்பப்பட்டிருக்கும் பயணச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீட்டினைப் பெற, கொண்டு வந்த T.Cயில் Duty-free கடையில் சில சாமான்களை வாங்க...நான் கொழும்பு செல்லும் பயணம் வைத்தாகிவிட்டது. 'அப்பா, நானும் உங்கள் கூடக் கொழும்பு வரட்டுமா? பழைய கொழும்பு அல்ல. Duty-free shopping எனக்குத் தெரியும். அம்மாவின் பாஸ்போட் விஷயத்தில் செல்லச்சாமியின் உதவியைப் பெறலாம். செல்வாக்குள்ள டிரவல் ஏஜண்ட் ஒருவன் என் நண்பன்...' என்கிறாய்.

நான் நாட்டில் இல்லாத காலத்தில், நீ கொழும்பை நன்றாகப் படித்து வைத்திருக்கிறாயா? உன்னுடன் மனம் விட்டுப் பேசுவதற்கும் இந்தப்பயணம் பயன்படும். 'எனக்குத் துணையாக நீயும் வாவன்... இரண்டு பேருக்கும் நீயே டிக்கற் புக் செய்து கொண்டு வா!' என்று என் ஒப்புதல் தருகிறேன்.

'அப்பா, ஒரு நிபந்தனை. நான் கேட்கும் சில சாமான்களை நீங்கள் வாங்கித் தரவேண்டும். நான் வாங்கும் சாமான்கள் ஐம்பது டாலருக்கு மேற்படாது என்பது உத்தரவாதம்.' உன் சுபாவமே அதுதான். வெட்டு ஒன்று; துண்டு இரண்டு!

'பார் அம்மா, மித்தியும் அப்பாகூட 'டூடி ஃப்ரீ' சாமான்கள் வாங்கப் போறானாம். காசைக் கரியாக்கத்தான் இந்த எடுப்பு எடுக்கிறான்?' உன் அக்கா இப்பவும் அப்படித்தான்.

'மித்தி என்னதுக்குக் கொழும்பு வாறான்? உங்களுக்கு செடில் பிடிக்கவே?' அம்மா எப்பொழுதும் மூத்த இரண்டு பிள்ளைகளின் கட்டுப்பாட்டிற்குள்.

மித்தி, உனக்கு நல்லாத் தெரியும். வீட்டிலே நான் ஓரளவு மௌன மனிதன். மற்றவர்கள் சொல்வதைச் செவி மடுத்துக் கேட்பவன். என் தீர்மானங்களை அவர்களுடைய நியாயங்கள் அதிகமாகமாற்றுவதும் இல்லை. நீ என் துணையாகக் கொழும்பு வருகின்றாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணம் முழுவதும் நீ கதைக்கிறாய். ஒவ்வொரு கதையிலும் உன் முதிர்ச்சியைக் காண்கிறேன். வீடு என்கிற சிறிய கூட்டமைக்கு அப்பாலுக்கு அப்பாலான சமுதாயப் பிரச்சினைகளிலும் உன் அக்கறைகள் அகலித்திருப்பதைக் காண்கிறேன். வழிமுழுவதும் பேசிய அனைத்தையும் இன்று நினைவுக்குக் கொண்டு வரமுடிகின்றதா? அவற்றை நினைவுக்குக் கொண்டுவர வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்படும் என்றுதானும் நினைந்தேனா?

'புயலில் இடிந்த வீட்டைத் திருத்திய பொழுது நீ எவ்வளவு பாடுபட்டாய்! இப்பொழுது ஏன் அலட்சியம்?'

'அப்பொழுது வீடு கட்டினோம், இப்பொழுது சொத்துக் குவிக்கிறோம்.'

'விளங்கவில்லை, மனே...'

'அப்பா, நீங்கள் என் அப்பா. உங்கள் உழைப்பின் மீது ஒரு வயசு வரையிலும் எனக்குப் பாத்தியதை இருக்கு. அதற்கு மேல்உங்கள் உழைப்பினை அபகரித்தல்Exploitation சுரண்டலை நான் வெறுக்கிறேன். அது தந்தையின் உழைப்பைப் பிள்ளையே சுரண்டுவதாக இருந்தாலுங்கூட....'

'வீடு கட்டுவதற்கும் சுரண்டலுக்கும் என்னடா சம்பந்தம்?'

'வீடு கட்ட அனுப்பிய பணத்திலும் பார்க்க ஐம்பதாயிரம் கடன். அதனை முடிக்க இன்னும் ஐம்பதாயிரம். அத்துடன் கல்யாணச் செலவுகள். ஆபிரிக்க நாடுகளின் ஸ்தரமற்ற அரசியல் நிலைமைகளை நினைத்துப் பார்க்காமல், அடுத்த ஒப்பந்த கால உழைப்பை நம்பி,இன்று உங்களைக் கடனாளியாக்குவதும் சுரண்டலே...'

'எடேய்... ஒரு அக்காச்சி... அவளுக்குத்தானே எல்லாம்...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஆமா. நான், அண்ணா, தம்பிமார் எல்லாம் உழைச் சுக்கொடுப்போம். அது எங்கட கடமை. ஆனால், தனி மையில் இருந்து உழைக்கும் ஒருத்தனின் நாளைய உழைப்புகளையும் வறுகுவதுபோல பாரிய செலவு களுக்கு அம்மா அக்காச்சி சார்பாக வழிவகுப்பது கொடுமை. இதுவும் ஒரு வகைச் சுரண்டல்தான். நீங்கள் என்ன நினைத்தாலும், நான் அதற்குத் துணைபோவ தற்கு என் மனச்சாட்சி இடந்தரவில்லை. எனக்கு விருப்ப மில்லாத ஒன்றை, மற்றவர்களைத் திருப்திப் படுத்து வதற்காகச் செய்யவும் மாட்டன். அக்காச்சியை நான் நேசிக்கிறன். அது வேறு விஷயம். அதிலும் பார்க்க நான் நியாயத்தையும் தர்மத்தையும் நேசிக்கிறன்...'

அர்ஜுனா, சுரண்டல் என்னும் தத்துவத்தைக் குடும்ப உறவுகளிலே பொருத்திப் பார்க்க எப்படியடா உனக்கு மனசு வந்தது? கடன் என்பதே நாளை ஊதியத்தை நம்பி இன்று செலவு செய்வது தானே? உனக்கு இன்ன மும் 21 வயசில்லை. குடும்ப விவகாரங்களை, உன்னை அதிலிருந்து வேறுபடுத்திப் பார்க்கும் வானபிரஸ்த mood உன் மனசிலே எப்படிக் கவிந்தது? உன் தரிசன தளம் சரியா தவறா என்று தர்க்கிக்கக்கூட எனக்கு மனசு வரவில்லை. எனவே, பொது விஷயத்துக்குத் தாவுகின்றேன்.

'ஏ.ஜே மாமா கடிதம் எழுதியிருக்கிறார். நிர்மலா அக்கா இன்னமும் மட்டக்களப்பு ஜெயிலிலைதானாம். சிறை உடைக்கப்பட்ட பொழுது அவவால தப்ப முடியேல்லை யாம். நான் போய் அவவைப் பார்த்தால் ஆறுதலாக இருக்கும் என்று அவர் அபிப்பிராயப்படுகின்றார்...'

நீ முன்னாலும் பின்னாலும் பார்க்கிறாய். பதில் சொல் லாது மௌனிக்கிறாய். 'பிறகு கதைப்பம் அப்பா' என்று என் செவிகளிலே மட்டும் விழும் குரலிலே சொல்லு கிறாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் கேள்விக்கான பதிலைச்சொல்லும் வேளையைநீயே தேர்ந்தெடுக்கிறாய். பல நாள்கள் கழித்து, வேப்ப மர நிழலில் அமர்ந்து,ஒரு சாயந்தர நேரம் நீயும் நானும் தேநீர் அருந்திக் கொண்டிருந்த வேளை.

'மட்டக்களப்பு ஜெயில் பிரேக் ஒரு Shoddy வேலையப்பா. நல்லாகத் திட்டமிடப்படவில்லை. அவசர கோலத்திலே செயல்படுத்தப்பட்டது. சிறைச்சாலை ஊழியர்களிடம் ஏற்பட்ட திகிலும் அச்சமும் மட்டுமே நமக்குச் சாதகமாக அமைந்தன...அது நமது வீரத்துக்கும் திட்டமிடலுக்கும் கிடைத்த வெற்றியல்ல...' ஜெயில் உடைப்பு நிகழ்ச்சிகளை அருகில் நின்று பார்த்தவன் போன்று விளக்குகின்றாய். அதில் நிகழ்ந்த எத்தனையோ குளறுபடிகளைச் சொல்லி, அவை எவ்வாறு misfire ஆகியிருக்கும் என்று சொல்லுகிறாய். 'உனக்கு இவ்வளவு விபரம் எப்படித் தெரியும்' என்று அப்பொழுது நான் உன்னைக் கேட்கவில்லை. இப்பொழுது யோசித்துப் பார்க்கிறேன். அந்த உடைப்பிலே எங்கேயோ ஒரு சங்கிலிவளையத்தில் நீ சம்பந்தப்பட்டிருந்தாயா? May be; may not be! யாரிடம் இனி அறிவது? அறிந்துதான் என்ன பயன்?

'நீங்கள் நிர்மலா அக்காவைப் போய்ப் பார்க்கிறது புத்தியில்லை. அவவைக் கண்டிக்கோ அல்லது கொழும்புக்கோ கொண்டு போகவும் நினைக்கிறாங்களாம்... அவவோட யாரும் contact வைக்காமல் இருந்தால், சீக்கிரமே தப்பிச் செல்றதுக்கு வாய்ப்பு உண்டு...'

மித்தி, உன் மொழி எனக்கு mystic ஆகப்படுகின்றது. நீ குடும்பத்திலிருந்து விலகிக் கொண்டிருப்பது போல ஓர் உள்ளுணர்வு. உன் பாதையைத் தெளிவாக அறிந்த ஒரு மகானைப்போல...வேலைப்பளுக்களின் மத்தியிலே, உன்னைப் பற்றிய தியான நேரத்தை ஒத்தி போட்டுக் கொண்டே இருந்தேன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்குக் கொழும்பின் சந்து பொந்துகள் எல்லாம் அத்துப்படி. நான் பத்து ஆண்டுகள் கொழும்பில் வாழ்ந் தவன். நீ?, மாமா ஆட்டுப்பட்டித் தெருவிலே அரசு பதிப்பகம் நடத்திய காலத்தில், நீ குஞ்சுப் பையன். மாமாவுடன் ஒட்டிக் கொண்டால் சினிமா பார்க்கலாம்; நிறைய ஐஸ் கிரீம் கிடைக்கும். மாமா இந்தியாவுக்குப் போன பிறகு, மருதானையில் பாலனண்ணன் கடையின் மேல் மாடியிலே தங்குவாய். அப்பொழுது பாலனண்ணன் போடுற ஜிப்பா 'மொடல்' ஐ வைத்துத்தானே அந்த சந்தனக் கலர் ஜிப்பாவை நீ தைப்பிச்சாய்.

'மித்தி, உனக்கு எப்பிடியடா 'டூடி ஃப்ரீ ஷொப்பிங்' தெரியும்?'

'இரண்டுமூன்றுதரம் அண்ணமாருக்கும் அக்காமாருக்கும் உதவி செய்ய வந்திருக்கிறேன். அந்த ஏஜன்ட் மூலம், அவனுக்கும் சாமான்கள் வாங்கிக் கொடுத்தால், ஒவ்வொரு டொலருக்கும் இரண்டு ரூபாய் அதிகமாகக் கிடைக்கும். எதிலும் இஷ்டப்பட்ட Quantity வாங்க லாம். எல்லாம் ஊழல்தான். போகிற போக்கைப் பார்த்தால் இலங்கை ராணுவத்தைக்கூட ஒரு விலைக்கு வாங்கிப் போடலாம்...' நீ சிரிக்கிறாய். அந்த உன் சிரிப்பை என்னால் எப்பொழுதுமே மறக்க ஒண்ணா.

நீ என் கூட வந்தது எவ்வளவு சகாயமாயிற்று. நீ இப் பொழுது என் dependent child என்று நினைத்துப்பார்க் கவே முடியவில்லை. பசி உனக்கில்லை. காப்பி, தேநீர் என்கிற பழக்கமில்லை. ரணசிகிச்சை செய்யும் டாக்ட ரைப்போல, எடுத்த கருமத்தைத் துரிதமாகவும் நேர்த்தி யாகவும் செய்து முடிக்கும் தீவிரம். ராணுவ வீரனின் மிடுக்கும் ஆளுமையும். அந்தக் காலங்களிலே, கொழும் பில், நீ என் பின்னால் வருவாய். இப்பொழுது தலை கீழ். நான் உன் பின்னால் இழுபடுகின்றேன். நீ இவ்வளவு வளர்ந்து விட்டாய் என்பதை நினைக்கப் பெருமையாகவும் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ டூடி ஃப்ரீ கடையில் உனக்கான ஐந்து ரோல் பிலிம் வாங்குகிறாய். நீ Fuji பிலிம் தேர்ந்தெடுக்கிறாய்.

'ஏன் மனே, 'கொடக்' நல்லதல்லே?'

'Viewவுக்கும் colourருக்கும் எனக்கு ஃபியூஜி தான் பிடிக்கும்.'

உன் இஷ்டம். இரண்டு திறமான 'சொக்லற்' பக்கற் வாங்கிக் கொள்கிறாய்.

'இந்த 'சொக்லற்' எனக்கு வாங்கித் தந்த சமாச்சாரம் வீட்டில தெரியக்கூடாது...'

'ஏன்?'

'அப்படித்தான்.'

'சரி.'

'இன்னும் ஒரு உதவி அப்பா.'

'என்ன?'

'எனக்காக நீங்கள் வேணியை ஒருதடவை சந்திக்க வேணும்... அவளுக்குத்தான் ஒரு extra சொக்லற் வாங்கினன்.'

'ஓ. கே.'

நீ சொல்லும் எதற்குமே மறுப்புச் சொல்ல ஏலாத mesmerism மூலம் என்னை நீ கட்டுப்படுத்தி வைத்திருப்பவன் போலவும்.

மட்டக்களப்புத் திரும்பியதும் வீடு கட்டும் வேலை, கல்யாண ஒழுங்குகள் என்று ஏக காலத்தில் இரண்டு படகுகளிலே பயணிப்பவனைப் போன்ற அவஸ்தை. கல்யாண ஒழுங்குகள் பலவற்றை நீ சின்னவனுடனும் குமாருடனும் சேர்ந்து செய்ய பொறுப்பு ஏற்கின்றாய். இருப்பினும் உன் வாழ்க்கை ஒழுங்குகளை நெகிழ்த்தவும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அப்பா, வெளியிலே போறீங்களா?'

'லைபிரரியில ஒரு சின்ன வேலை... கனகாலமா ஒத்திப் போட்டிட்டன்...'

'அப்பா, இப்ப ஒரு புது அக்கா லைபிரேரியனாக வந்திருக்கிறா. நல்லவ... மதுரை ஆய்வுக் கட்டுரைகள் அச்சிட்ட புத்தகங்கள் வந்திருக்கின்றன. உங்க கட்டுரை ரொம்ப நல்லா இருக்கப்பா... வாங்க நான் drop பண்ணுறன்.'

உன்னுடைய சைக்கிள் பாரிலே வருவது எனக்கு எப்பவும் விருப்பம். அலுங்காமல், நலுங்காமல், மெத்தையிலே வைத்துக் கொண்டு போவதுபோல மிகப் பவ்வியமாகச் சைக்கிள் ஓட்டுவாய்.

'11.30க்கும் 12க்கும் இடைப்பட்ட நேரத்தை எனக்கு ஒதுக்கித் தருவீர்களா?' என்னை நூல் நிலையத்தடியில் இறக்கிவிடும் பொழுது கேட்கிறாய்.

'சந்தோஷமாக. வேண்டுமானால் முழு நாளையுமே உனக்குத் தாறன்...'

'11.30க்கு வாறன்...' பெரிய மனிதத் தோறணையிலே பேசுகிறாய். நடக்கிறாய். ஆனால், குதூகலத்தை மறைக்கத் தெரியாமல் குழந்தைப் பிள்ளையாக மாறிவிடுகின்றாய்.

Punctuality இல் நீ எப்பொழுதும் அப்பா பிள்ளை.

நான் நூல் நிலையத்துக்கு வெளியே வருகிறேன். அன்று ஞாயிற்றுக் கிழமையா? ஆனால், ஏதோ லீவு நாள். நீதிமன்ற அயல் வெறிச்சோடிக்கிடக்கிறது. அதன் முகப்பில் குடை விரித்திருக்கும் வாகை மரத்தின் கீழ் நீ ஒரு பெண்ணுடன் நிற்கின்றாய். என்னைப் பார்த்ததும் சிநேகம் தடவிச் சிரிக்கிறாள். யார் அவள்? அட, வேணி! இப்ப எவ்வளவு அடக்கமான பெண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணாகத் தோன்றுகின்றாள்? வேணி மாநிறந்தான். ஒவ்வொரு உறுப்பும் மிக நுணுக்கமாகக் கடைந்தெடுத்துப் பொருத்தப்பட்டது போல, அப்படி ஒரு ஸ்படிகமான அழகு. அவளுக்குப் பக்கத்தில் நீ. அவள் உன் மார்பளவு உயரம் கூட இல்லை.

ஒரு சங்கடமான மௌனம் நீளுகின்றது. நான் நெளிவதைக்கண்டு, நீ நிலைமையை உணருகிறாய்.

'வேணி, அப்பா மிகவும் வித்தியாசமானவர். I am very proud of him. உனக்கான இந்த சொக்லற்றை அப்பாதான் டூடி ஃப்ரியில் வாங்கித் தந்தவர்.'

அதனைப் பெறும் போது மிகமெல்லிய குரலில், 'தாங்ஸ் மித்தி... தாங் யூ அங்கிள்...' என்றாள்.

உனக்கு மிகவும் இஷ்டமானவர்களைத் தவிர, மற்றவர்களை நீ உன்னை மித்தி என்று அழைக்க அனுமதிப்பதில்லை. அவள் மிகவும் நெருக்கமான சிநேகிதி, இப்பொழுது அவள் செயலிலே அதிகம் பெண்மை ஒட்டிக் கொண்டதையும் கவனித்தேன்.

'வேணி, நான் அப்பாகூட மெட்றாஸ் செல்வது என்று முடிவாகிவிட்டது. அநேகமாக 11 அல்லது 12ஆம் திகதி புறப்படுவேன். அக்காச்சி கல்யாணம் 6ல்.ரொம்ப பிஸி. ஆனால், கட்டாயம் உன் வீட்டுக்கு வந்து அங்கிள்-அன்றி எல்லாரிடமும் சொல்லீட்டுத்தான் போவன்.'

'அப்ப, 9ஆம் திகதி மத்தியானம் சாப்பாட்டுக்கு வாவன்...'

'இது நியாயமில்லை. அன்று என் பிறந்த நாள் மட்டுமல்ல. அன்றைக்குத்தான் அக்காச்சிக்கு நாலாம் சடங்கும். சகாக்களான survey partyக்கு டின்னரும்...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வேணி, நீ அவனுக்கு பத்தாம் திகதி லன்ஞ் கொடேன். அவன் கட்டாயம் வருவான்...' சமரசம் காண்பவன் போல சொல்கின்றேன்.

'அப்ப, நீங்களும் வாருங்கோவன் அங்கிள்...'

'வர ஆசைதான். மித்திதானே உன் நண்பன்? நட்பு மிகவும் புனிதமானது. ஆத்மார்த்தமானது. மூன்றாம் மனிதன் வந்தால் அது crowd ஆகிவிடும்... உண்மை யில், நான் பயண ஆயத்தங்களைக் கவனிக்கக் கொழும் புக்கும் போகவேணும்...' சமாளித்துச் சிரிக்கிறேன்.

'மித்தி சொன்னது சரி. அங்கிள் யூ ஆர் கிரேற்...' என்று வேணியின் நாக்கு தளதளத்துச் சொல்கிறது.

'உண்மையில் மித்தி இஸ் ஏ நைஸ்போய். அவன் என்னி லும் பார்க்க கிரேற்றர். நீ அவன் best friend. அப்ப யூ ஆர் the greatest!' என்று சொல்லி நான் சிரிக் கிறேன். அந்தச் சிரிப்பிலே நீங்கள் இருவரும் சங்கமிக் கின்றீர்கள். உலகம் சிரிப்புகளின் பொங்குமாங்கடலாக இருந்தால், எவ்வளவு இனிமையாக இருக்கும்?

வரும் பொழுது, நீ உற்சாகமாக ஏதோ ஒரு பாட்டை 'ஹம்' பண்ணுகிறாய். இடையில் அதனை விழுங்கிக் கொண்டு, 'வேணியின் இந்தச் சந்திப்பு வீட்டிலே தெரிய வேண்டாம் அப்பா...' என்கிறாய்.

'ஒரு காலத்தில் நானும் உன் வயசிலே வாழ்ந்தவன். அப்ப, I was running after two girls at the same time என்னுடன் ஒப்பிடும்பொழுது நீ நல்லவன்' என்கிறேன். நான் பிள்ளைகளுடன் எதுபேசுவது, எது பேசக்கூடாது என்பதை அறியாத மொக்கன் என்பது உன் அம்மாவின் அபிப்பிராயம். இந்த அபிப்பிராயத்தை அவள் எங்க ளுக்கு அறுபதாம் கல்யாணம் நடந்த பிறகுகூட மாற்றிக் கொள்ளவில்லை. புருஷன்-பிள்ளைகளுடைய அனைத்து விஷயங்களிலும் தலையிடத் தனக்கு உரிமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு என்கிற அவளுடைய நம்பிக்கையை மாற்றவும் முடியாது.

6-ஆம் திகதி அக்கா கல்யாணம்.

7-ஆம் திகதி துறை நீலாவணைக்குக் கால்மாறிச் சென்று திரும்புகிறோம்.

9-ஆம் திகதி நாலாம் சடங்கு. உன் பிறந்த நாள்—உன் 21-வது பிறந்தநாள். மணமக்களின் கந்தோர் நண்பர் களுக்கு டின்னர்.

8-ஆம் திகதி, காலையில் நீ வழக்கம் போல முற்ற வெளிக்குப் புறப்படுகின்றாய்.

'கல்யாண விருந்துகளினால் செமியாக் குணம். மித்தி, நானும் உன்கூட வாறன். Jogging கொஞ்சம் செய் தால் நல்லது...' என்று எல்லோருக்கும் கேட்கக் கூடிய தாகச் சொல்லி, உன்னுடன் தொற்றிக்கொள்ளுகிறேன்.

முற்றவெளியில் நீ ஓடுகிறாய். பல்வகை உடற்பயிற்சிகள் மூலம் உன் உடலைக் கயிறாக முறுக்கி, ஊழைச் சதையை வியர்வையாகப் பிழிந்து வெளியேற்றுகிறாய். பொய் சொன்னதுக்கு அபராதமாக நான் முற்றவெளி யைச் சுற்றி ஒருதடவை ஓடிக் களைத்து, நீ வரும் வரையிலும், மசூதிக்கு முன்னால் வளர்ந்திருக்கும் மரத்தின் வேர் ஒன்றிலே குந்தியிருக்கிறேன். இளமைத் துடிப்புடன் உன் உடல் ஆரோக்கியத்தைப் பேண நீ மேற்கொள்ளும் ஆக்கினைகளைப் பார்க்கச் சுகமாகவும் இருக்கிறது.

நீ களைத்துப் போய் வருகிறாய்.

'ஹொட்லண்டில் ஒரு டீ சாப்பிடுவமா?'

'நீங்க குடியுங்கோ... நானும் வாறன். டீ, காட்பி சாப் பிடுவதை நான் குறைத்துக் கொண்டன்...'

தேநீர் வந்தது. நான் குடித்துக் கொண்டிருக்கிறன். நீ பேச்சுக் கொடுக்கிறாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அப்பா, நான் சென்ற ஆண்டில் சென்னையில் நின்ற காலத்தில் Martial Art வகுப்புகளுக்குச் சென்றனான். முறையான course ஜூன் அல்லது ஜூலை மாசந் தான் தொடங்கும். அதுவரையில் நான் மார்டியல் ஆர்ட் கோர்ஸ் முடிக்கட்டுமா அப்பா?'

'உன் இஷ்டம். லளித கலைகளிலே ஈடுபாடுள்ள உனக்குத் திடீரென்று புஜபலம் பெருக்கும் கலைகளிலே நாட்டம் ஏன்?' உன்னைக் கேட்பது போலில்லாமல் என்னையே கேட்டுக் கொள்வது போன்ற தொனியிலே உரத்த சிந்தனையின் பாவத்திலே கேட்கிறேன்.

'அது உடலுக்கு மட்டும் அல்ல, மனசுக்கும் நல்லது. மாற்றானின் உடற்பலத்தைக் கண்டு பயப்படுகிற சுபாவம் மறையும். சாந்த குணம் வரும். அதனால், பலாத்காரத்துக்கு மசியாத ஓர் ஓர்மம் பிறக்கும். தன்னைத்தான் பாதுகாக்கும் ஒருவன், தன் சமூகத்தின் மானத்தைப் பாதுகாக்கும் தகுதியையும் பெறு கிறான்...'

நீ சொல்வது எனக்கு விளங்கவில்லை. விளங்கிக் கொள்ளும் ஆர்வமும் இல்லை. 'பேனா வாளிலும் வலிமை மிக்கது' என்று திருப்திப்பட்ட கும்பலைச் சேர்ந்தவன்டா நான்.

'எனக்குத் தெரியாது. என் கையைப் பார்த்தாயா?'

'அப்பா, இது சாகும் வரை எழுதிக் கொண்டிருப்பதற் காகவே படைக்கப்பட்ட கை...' என்று வாஞ்சையுடன் என் வலது கையைத் தடவுகின்றாய்.

'எழுத்துப் பணியில் நீ என் வாரிசு என்று தான் நான் நம்பிக் கொண்டிருக்கிறேன்...'

'அப்பா, அப்பா! உங்கள் காலமும் என் காலமும் வேறை...'

'Generation gap என்று சொல்லுகிறாயா...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உங்களுக்கா? ஒரு நாளும் இல்லை. எங்கள் தலைமுறையின் உணர்வுகளைத் துல்லியமாகப் புரிந்து வைத்திருக்கும் மாமனிதன் நீங்கள்... வேணிகூடச் சொன்னாள். உங்களைப் போன்ற ஒரு understanding அப்பா உலகத்திலேயே இல்லை என்று...

'போதும்டா, மித்தி. நீயும் வேணியும் வைக்கும் ஐஸில் எனக்கு ஜலதோஷம் பிடிக்கக்கூடாது என்பதுதான் என் கவலை...' என்று தேநீரைக் குடித்து முடிக்கின்றேன். அந்த நேரத்தில் ஹோட்டலில் ஆள்கள் குறைவு. நானும் நீயும் மட்டுமே ஒதுக்குப் புறமான மேஜையண்டை அமர்ந்திருப்பதை உணருகின்றேன்.

நான் ஒரு சிகரெட் பற்றவைத்துக் கொண்டு, சில நாள்களாகவே என் மனசிலே தோன்றிய ஒன்றைச் சொல்ல விழைகின்றேன். உண்மையில், அதைப் பற்றிப் பேசுவதற்காகத்தான் உன்னை இங்கு அழைத்து வந்தேன். 'மித்தி...நான் ஒரு விஷயத்தைச் சொல்லுவன். நீ கோபப்படக்கூடாது. ஒரு suggestion. அவ்வளவு தான்...'

'நீங்கள் போடுகிற பீடிகையைப் பார்த்தால், இது பயங்கரமான விஷயம் போலத்தான் தெரியுது, உங்கள் மொழியிலே சொன்னால், cough it out...நான் ஏன் அப்பா உங்களைக் கோவிக்கப் போறன்? எதையும் யோசிச்சு சொல்லுறது உங்கள் சுபாவம்...'

'வேணி நல்ல பிள்ளை. அவள் அழகாக இருப்பதினால், நாலு பேர் அவள் பின்னாலே சுத்தத்தான் செய்வார்கள். அதுக்காக அவள் கெட்டவளாகி விடமாட்டாள்... நீ சென்னை சென்று படித்துத் திரும்பும் வரை, அவள் உனக்காகக் காத்திருப்பாள் என்றால், நீ அவளைக் கல்யாணம் செய்து கொள்வதற்கு நான் தடையாக இருக்க மாட்டேன்...'

'நாளைக்குத்தான் நான் மேஜராகின்றேன்...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இந்த நாட்டில் பதினெட்டு வயசில் வாக்குரிமை உண்டு... நான் ஒரு option தருகிறேன்.'

'வேணியையா? நானா? திருமணமா? I promise...நான் இந்தக் கோணத்திலே அவளை என்றும் பார்த்த தில்லை...'

'எனக்குத் தெரியும்... ஆனால், அவள் மீது நீ தனித் துவமான அன்பும் அக்கறையும் செலுத்துவதற்கு ஒரு காரணம் இருக்க வேணும்...'

'இருக்கு, காதல் மயமான நினைவுகளிலே மிதப்பவள் அவள். எத்தனையோ பேர் அவளை விரும்பவும், அவள் அண்ணாவையே விரும்பினாள். அண்ணாவின் குற்ற மும் அல்ல. அவர் இவளுக்கு என்றும் hopes கொடுத் ததும் இல்லை. இவளாகவே தன் ஆசைகளை வளர்த் துக்கொண்டாள். அவளை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. அவளுக்கு ஒரு ஆறுதல்... ஒரு அநுதாபம்... Comrabeship என்று சொல்லலாம் போல...'

'அது உன் பக்கம். அவளுடைய பக்கமும் ஒன்று உண்டு. அவளுடைய கண்களின் மினுக்கங்களிலே நான் அதைப் பார்க்கின்றேன்...'

'தெரியுமப்பா...'

'அப்படியானால், அவளுக்கு ஒரு வாழ்வு கொடுப்பது பற்றி ஏன் நீ யோசிக்கக்கூடாது?'

'அப்பா, எனக்கென்று சில இலட்சியங்கள் உண்டு. அது என்ன என்று இப்பொழுது கேட்க வேண்டாம். வேளை வரும் பொழுது கட்டாயம் சொல்லுவேன். அந்த இலட்சியத்தை அடையும் வரை நான் பிரமச்சாரி. நிச்ச யமாக நான் அதுவரையில் பிரமச்சாரியாக வாழ்வேன். அதற்கான நெஞ்சுறுதியும், ஆத்மபலமும் எனக்கு உண்டு...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'Good. நீ உன் இலட்சியத்தை அடையும் வரை இவள் காத்திருக்கலாம் தானே?'

'வேணியா?... No! யாரும் எனக்காகக் காத்திருக்க வேண்டாம். என் இலட்சிய பயணத்துக்கு காதல் உணர்ச்சிகள் தடை என்பதை நான் அறிவேன். பெண் களுடன் நண்பனாய்ப் பழகும் ஒரு பக்குவமும் திடமும் எனக்குத்தேவை. இந்த வழியிலே அவள் கூட எனக்கு உதவி செய்துள்ளாள். இதனாலும் அவள் என் best friend...'

'வேணி பாவம்...'

'வேணியை எனக்குத் தெரியும். நான் சென்னைக்குச் சென்று மூன்று நான்கு மாதங்கள் அவளுடன் தொடர்பு கொள்ளாவிட்டால், அவள் ஒரு புதிய நட்பை, ஏன் ஒரு புதிய காதலைக்கூடத் தேடிக்கொள்ளுவாள்...'

'அட மித்தி, பட்டாம் பூச்சிகளுடன் சிறகடித்துப் பறக் கும் ஓர் adolescent ஆகவே உன்னைத் தரிசித்துக் கொண்டிருந்தேன். நீ படுகிழவனைப் போல இலட்சியம் பற்றியும், பிரமச்சாரியம் பற்றியும், உன்னிலும் வயசு மூத்த ஒரு பெண்ணின் மன இயல்புகள் பற்றியும் பேசு கிறாய்... நீ ஒரு புதிராக என் முன்னால் அமர்ந்திருக் கிறாய். என் உள்ளங்கை ரேகைகளைப் போல உன்னை அறிந்திருந்தேன் என்று நான் உன்னைப் பற்றிக் கொண்ட இறுமாப்பு அனைத்தும் பொய்யானதே!

நான் உன்னுடன் வேணியைப் பற்றிப் பேசியதே தப்பு. நான் பேய்க்குஞ்சர் பெற்ற பேய்க்குஞ்சு! வாழ்க்கை யிலே கற்றுக் கொள்ள நிறைய உண்டு. நான் அரிவரி மாணாக்கன். நான் மனமிடிந்து எழுகின்றேன். இல்லை. உன்னைப் பற்றிய கர்வம் என்னுள் இளமை பாய்ச்சு கின்றது. உன் இலட்சியம் என்ன? அதை எப்பொழுது சொல்வாய்? காதல் என்கிற கற்பனைகளிலே வாழும் சாதாரண இளைஞனுக்கு அப்பாற்பட்டவனும், மேலான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனுமா நீ? சென்னைக்குச் சென்ற பின்னர்? உன் வயசிலேதான் நானும் சென்னையில் வாழ்ந்தேன்; படித்தேன். அங்குள்ள இளைஞர்களும்-யுவதிகளும் கோடம்பாக்கத்துக் கனவுத் தொழிற்சாலைகளிலே உற்பத்தியாகும் சினிமா அலைகளிலே மிதந்து செல்லும் பட்டாம் பூச்சிகள் தானே? எம்மா இல்லையென்றால், எம்மா மகள்! ஆண்டாளுக்கு இப்பொழுது மகள்கள் இருப்பார்கள். வாழ்க்கையை நீ இலட்சியமயமாகப் பார்க்கிறாய். இலட்சியங்கள்கூட கொள்கை ஈடுபாடுகள் குஞ்சு பொரித்த கனவுகளே... உன் கனவுகள் யாருக்கும் துன்பந் தராதன... கனவுகள் என்றால், விழிப்பு நிலைகளும் உண்டு. வா, வீட்டுக்குப் போவோம்!

அந்த பிப்பிரவரி 9ஆம் திகதியை நான் எப்படி மறப்பேன்? அந்த கல்யாண வீட்டின் உம்பார அலுவல்கள் மத்தியிலும் அம்மா உனக்கு மாமாங்கப் பிள்ளையார் கோயிலிலே பூஜை கட்டுவிக்கிறாள். அவளுடன் கோயிலுக்குப் போய் மீளுகிறாய். அந்தப் பட்டுவேட்டி உன் இடையை இரண்டாவது தடவையாக அலங்கரிக்கிறது. என்னைப் பட்டு வேட்டி உடுக்கச் செய்கிறாய். அக்காவின் கல்யாண நிகழ்ச்சிகளைப் படம் பிடிக்க நான்கு றோல்கள் செலவு செய்துவிட்டாய். ஐந்தாவது றோலை கமிராவில் 'லோட்' செய்கின்றாய். என்னையும் பட்டு வேட்டி கட்டிக் கொள்ளும்படி நிர்ப்பந்திக்கின்றாய். அம்மாவையும் அக்கம் பக்கமாக நிறுத்தி ஒரு படம்... உன் கலையும், உன் இஷ்டமும்.

'அப்பா நான் set பண்ணித் தருவதுபோல, என்னைப் படம் எடுங்கள்...'

'நானும் உன் வயசில் photographerதான்.'

'Kodak 620 Box cameraதானே?' என்று சொல்லிச் சிரிக்கின்றாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது நான் எடுத்த முதற்படம் முற்றத்தில் மதாளித்து நிற்கும் மாமரத்தினைப் பின்னணியாகக் கொண்டது.

அந்தக் கறுத்தக் கொழும்பான் மாமரம் இன்றும் சின்ன உப்போடை வீட்டிலே, முற்றத்தின் அமைப்பை அழகு படுத்திக் கொண்டு நிற்கின்றது. அதன் பழத்துக்கு நிகரான பழம் அந்த அயலிலே இல்லை என்று மெச்சுகிறார்கள். இன்று வரை, அந்த மரத்தின் ஒரு பழத்தின் ஓலை நெட்டிக்கணியமான ஒரு துண்டினை மட்டுமே சுவைத்திருக்கிறேன்... 'நீங்கள் நட்டு வளர்த்த மரம். உங்களுக்காக நாங்கள் எடுத்து வைத்தது...' என்று அக்காச்சியும் அம்மாவும் எவ்வளவு உற்சாகமாகச் சொன்னார்கள்... அவர்கள் மனம் நோக வேண்டாம். அதையும் சுவைத்த பொழுது, அந்தப் பழத்தை என்னுடன் பங்கிட்டுச் சாப்பிட நீ வரமாட்டாய் என்கிற உணர்வு... என் நெஞ்சின் ஒவ்வொரு அலைகளிலும் எப்படியடா உன் நினைவும் உருவமும் படிந்திருக்கின்றன...

புயலிலே வளவில் இருந்த அனைத்து மரங்களும் வேர் சாய்ந்தன. இன்று இங்கே சிரித்துக் குலுங்கும் அத்தனை மரங்களும் என் உழைப்புக்குச் சான்று சொல்லும். இந்த மரம் என் உழைப்பிலே நீ பாய்ச்சிய அக்கறைக்கும் சான்றாக வாழ்கின்றது. இணுவிலிலுள்ள ஒட்டு மாங்கன்றுப் பண்ணைக்குச் சென்று, உயர்ரக கறுத்தக் கொழும்பான் கன்றுகள் நான்கினை வாங்கி, கட்டிக்காவி, உப்போடை கொண்டு வந்து சேர்த்தேன். குடியிருப்பதற்கான வீட்டின் திருத்த வேலைகள் பணத்தை விழுங்கியதினால், சுற்றியுள்ள வேலிகளைச் செப்பமாக அடைக்க முடியவில்லை. வேலியோரங்களிலே நடப்பட்ட மூன்று மரங்களையும் பள்ளத்துச் சனங்கள் வளர்த்த ஆடுகள் மேய்ந்துவிட்டன. 'அந்த மனுஷன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுபட்டுக் கொண்டு வந்து நட்ட மரங்கள். முற்றத்து மரத்தை என்றாலும் காப்பாத்துங்கோ...' என்று அம்மம்மா, இரவிலே புலம்பியது உன் செவிகளிலும் விழுந்திருக்க வேண்டும். அடுத்த நாள் அதிகாலையில், கம்புகளும், ஓலைகளும், கயிறுகளும் சேகரித்துக் கொண்டு வந்து, 'வாங்க அப்பா, இதற்கு வேலி கட்டு வோம்...' அது எத்தகைய உயர்ந்த வேலி! அப் பொழுது நீ சுள்ளி என்றாலும், என்னிலும் பார்க்க ஒரு நெட்டி உயரம். உன் உற்சாகமும் அக்கறையுந்தான் அந்த மரத்துக்கு உயிர் கொடுத்தது. இன்று வளவிலுள்ள அனைத்து மரங்களிலும் அதுவே வயசா லும் பயனாலும் மூத்தது! என்னைப் போல உனக்கும் green fingers என்பதை எத்தனை மரங்கள் பறை சாற்றும்!

நீ எடுத்த அக்காச்சியின் கல்யாணப் படங்கள் அனைத் தும் அற்புதமாக வந்துள்ளன. உன் கலையுள்ளத்துக்கும் புகைப்படத்துறை நுட்பத்துக்கும் அவை சாட்சியங்கூறி, அவளுடைய கல்யாண அல்பத்திலே கிடக்கின்றன. அந்த ஐந்தாவது றோலிலே எடுத்த படங்களும் மிக அழகாக இருந்தன. நீ கோயிலில் இருந்து வந்ததும், அது வரையில் யாருக்கும் காட்டாது வைத்திருந்த கைக்கடிகாரத்தை உன் கையிலே கட்டிவிட்டேன். அது ஜெனீவா நகரத்தில், உன் 21 ஆம் பிறந்த நாளை நினைவில் வைத்து உனக்காகவே நான் வாங்கியது. அந்தப் படங்களில் எல்லாம் அந்தக் கடிகாரம் உன் கைக்கு அழகு சேர்த்தது. அந்த அழகிய படங்களிலே ஒன்று தானும் இன்று எங்கள் குடும்ப அல்பத்தில் இல்லை. நீ வேண்டுமென்றே அந்த நினைவுச் சுவடு களை அழித்தாயா?

எத்தனை நினைவுகள் சடைத்துக் கொண்டு வருகின் றன? அவற்றை அழிக்கவோ, அவற்றிலே திருத்தம் போடவோ உன்னால் முடியுமா? இந்தக் கதையிலே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Craftsmanship என்கிற மேதா விலாசத்தினை ஊன்ற, எத்தகைய ஜிகினா வேலைகள் செய்யலாம்? இவை பற்றி எல்லாம், இந்தக் கதையை எழுதும் பொழுது மட்டும் எனக்குக் கவலையில்லை. அர்ஜுனா, உன் ஊழியம், என் ஊழியத்திற்கும் திருத்தம் போட்டுள்ளது. என் ஊழியத்திற்கு உன் வாழ்க்கை புதிய தரிசனத்தைக் கொண்டுவந்து சேர்த்துள்ளது. என் அதி உயர்ந்த சிருஷ்டி நீ தானடா! இன்றைய என் வாழ்க்கை நீ அருளிய பிச்சை. என் இலக்கியம், என் வாழ்க்கை, என் விழுமியங்கள், சத்திய உபாசனை, மொழி பற்றிய அக்கறைகள், இனத்தின் தனித்துவ அடையாளங்களை நாட்டும் வெறி அனைத்தினதும் சரஸ் நீயே! அர்த்தம் நீயே! நீ அனைத்திலும் மேலானவன். உன்னை நான் இழக்கவில்லை. என்னுள் கலந்தவன். என்னுள் உயிர்த்துச் சிலிர்ப்பவன். என் இஷ்டன். என் நடுவிலன். என் பார்த்தன். அதனால் அர்ஜுனாவும்!

என்னையும், என் குடும்பத்தையும், உன்னையும், உன் இளமையையும், உன் கனவுகளையும், உன் லளித கலைகளையும்...அனைத்தின் அனைத்தையும் பார்க்கிலும், உன் இனத்தின் தனித்துவமும், அதன் கௌரவமும், அதன் வாழ்வும், அதன் எதிர்காலச் சுயாதீனமும் மகத்தானவை என்கிற புதிய பாடத்தினை எனக்குக் கற்றுத் தந்தனை ஐயனே! நீ விடுதலை வெறியன் மட்டுமல்ல; அந்த விடுதலையின் ஆகுதி.

1984 மார்ச் 13 ஆம் திகதி. என்னையும் அம்மாவையும் சென்னை விமான நிலையத்தில், விடிகாலை நேரத்திலே வழி அனுப்பி வைத்தாய்.

'சாலையாரும் சாலினியாரும் உங்களுக்காக தில்லி விமான நிலையத்திலே காத்திருப்பார்கள் அப்பா!' என்று முத்தமிட்டு விடை தந்தாய். ஏனோ, தெரியாது. அன்றும், நீ எனக்குத் தந்த சந்தனக் கலர் ஜிப்பாவே அணிந்திருந்தேன்.

பிறகு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னையும், உன் ஆண்மையையும், உன் இலட்சியக் களையும், உன் நினைவுகள் பற்றிய ஆவணங்களையும் தேடிக் கொண்டே இருக்கிறேன்... அந்தத் தேடல் என் எழுத்து ஊழியத்தின் ஒரு பகுதியுமாகியது...

சிவப்புக் கல்லறைகளின் அயலிலே பனைமர மண்ணின் கலாசார வேர்களைத் தேடுபவர்களும், தமிழின் தனித்துவ அடையாள கௌரவங்களை பிறர் இடும் பிச்சையாக நினைப்பவர்களும், சொந்த மன வக்கிரங் களையே இலக்கிய மதிப்பீட்டு அளவுகோல்களாகச் சந்நதம் ஆடுபவர்களும், 'கந்தன் கருணை' புகழிலே குருக்ஷேத்திரச் சமரன்களைக் கொச்சைப்படுத்துபவர் களும் மக்களே போல்வர். பேடிமைக்கு நடுகல் நாட்டுதல் நம் வழக்கன்று.

என் உள்ளத்தின் அதி உள்ளமாய்ச் சுடரும் உள்ளொளி பற்றிய தரிசனம் என் உண்மை. உண்மையே என் எழுத்து.

இதயத்தின் உள் நரம்புகளிலே ஜனிக்கும் சோக காவியத்தின் நேர்த்தி எனக்குப் புரிந்தால் போதும்.

புரிந்தவன் நீ; உன்னில் கலந்தவன் நான்.

உன்னையும், என்னுள் திருத்தம் போடவும், உன்னையே ஆகுதியாக்கிய அந்த மானுஷீகத்தின் கௌரவம் பற்றிய தேடலும் என் தமிழ் ஊழியமாகியது.

நீ தர்மம். எனவே, நான் உன் உபாசகன்.

நீ விடுதலை வெறியன். எனவே, நான் உன் பக்தன்.

நீ தற்பற்றை அறுத்த மகான். எனவே, நான் உன் சேவகன்.

நீ மானிட புருடார்த்தத்தின் உந்நதம். எனவே, ஆண்மையின் விஸ்வரூபம்.

ஆனாலும், மித்தி! நீ என் மகனும். அவ்வாறே உன்னை என் நெஞ்சில் நிறுத்தும் சுயாதீனத்தை எனக்கு, எனக்கு மட்டுமே, அளித்து விடு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாகம் 2

## மித்தி!

சென்னை விமான நிலையத்தில் எனக்கு நீ முத்தம் தந்து வழியனுப்பியதே நமது கடைசிச் சந்திப்பு.

அதற்குப் பின்?

அது பற்றிய என் தேடலிலே பல ஆவணங்கள் கிடைத்தன. இன்னும் கிடைக்கும். அவை உன் தரிசனத்திலே புதிய பரிமாணத்தினை தருகின்றன. அவை அனைத்தையும் பிரசுரித்தல் சாலாது. உன் புகழிலே குளிர் காய்ந்து வாழ எனக்கு வெட்கமாக இருக்குதடா. ஏனென்றால் நான் உன் அப்பன்!

உன்னைப் பற்றிய உன் கதையை முழுமைப்படுத்து வதற்கான சில குறிப்புகளை மட்டுமே இங்கு பரப்பி வைக்கின்றேன். இஃது ஈனச் செயலா? அப்படி என்றால் என்னை மன்னிப்பாயா? என் எழுத்து ஊழியத்தின் சுயாதீனத்தை என் வசம் வைத்துள்ள வணங்காமுடியன் நான் என்பதை நீ அறிவாய்.

● நீண்ட நாட்களாக அவனைக் காணவில்லை. மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்த பொழுது, திடீரென அவன் வந்தான். அவன் எப்பொழுதும் அப்படித்தான். களைப்பாக காணப்பட்டான். நாற்காலியில் அமர்ந் தவன், கால்களின் தொடைப் பகுதியை அமுக்கிவிட்ட படி இருந்தான். காரணம் கேட்டபொழுது 'ஒன்று மில்லை...ஒன்றுமில்லை...' என்று மழுப்பினான். நானும் விடுவதாக இல்லை. கடைசியிலே மசிந்து, 'பனிஷ் மண்ட் அக்கா' என்றான். குற்றஞ் செய்ததற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருந்தும் முகபாவம். 'ஐநூறு தோப்புக்கரணம். எழுந்து, எழுந்து உட்கார்ந்ததில் தொடையெல்லாம் வலிக்குது...' அவனுடைய வார்த்தைகள்கூட நைந்தன வாகத் தொனித்தன.

'ஐயய்ய... ஒரு பெரிய போராளி... AK 47 தூக்கிற போராளி! இதுக்குப் போய் அழுகிறீர்களே... என்னைத் தோப்புக்கரணம் போடச் சொன்னால், ஆயிரம்கூடப் போடுவேன்' என்று என் பக்கத்திலிருந்த இவர் சீண்டினார்.

'நான் அதுக்காக வருத்தப்படவில்லை, அண்ணா... இந்தத் தண்டனையை அனுபவிக்கும் அளவுக்கு ஒரு குற்றம் செய்திட்டன் தானே? அது தான் கவலையா இருக்கு...'

'அப்படி வருத்தப்படும் அளவுக்கு என்ன குற்றம்?' என்று நான் கேட்டேன்.

'ஒரு டொஃபிய சாப்பிட்டுட்டு, அந்த பேப்பர நின்ற இடத்தில போட்டுட்டன்...'

மிகப்பெரிய அதிர்ச்சியான செய்தியால் தாக்குண்டவள் போல நான் மலைப்புற்று நின்றேன்.

'இந்தச் சின்ன விஷயத்துக்கு இவ்வளவு பெரிய தண்டனையா? ஏன்? இதில் என்ன குற்றமிருக்கு?' அறியாமையுடன் நான் கேட்கிறேன்.

'ஒன்று, இது டிஸிப்பிளின் இல்லை. மற்றது, இதைப் போல சின்னச் சின்ன கவனயீனமான விஷயங்கள்கூட எங்களுக்கு எதிரான எவிடென்ஸாக மாறக்கூடும் இல்லையா?'

இப்படிப்பட்ட மிகச் சிறிய விஷயங்களிலேகூட கடைப் பிடிக்கப்படும் இந்த ஒழுங்கு முறைதான், இந்த இயக்கத்தை ஒரு கட்டுக்கோப்புக்குள் வைத்திருக் கின்றது என்கிற வியப்பு எனக்கு மேலிடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மித்தி தொடர்ந்தான். 'தம்பி இதிலெல்லாம் வலு கவனம். இரக்கமே பார்ப்பதில்லை. டொஃபி பேப்பர் போட்டதால ஐநூறு தோப்புக்கரணத்தோட போச்சுது. இதுவே பஸ் டிக்கட்டாக இருந்தால் கதையே வேறு...' என்றவன், முகாம்களிலே குற்றமாகக் கருதக்கூடிய ஒவ்வொரு விஷயத்துக்கும் வழங்கப்படும் தண்டனை முறைகளைப் பட்டியலிட்ட பொழுது, எனக்கு மயக்கமே வந்துவிடும் போலிருந்தது!

●● வீட்டுக்கு மித்தி மோட்டார் சைக்கிளில் தான் வருவான். அவனைப் பார்த்ததும் என் மகனுக்கு எப்பொழுதும் ஒரே குதூகலம். 'அக்கா, தம்பிக்கு சட்டையைப் போட்டுவிடுங்கோ' என்பான். சட்டையை போட்டுக் கொண்டதும் என் மகன் வீட்டிலிருக்கும் பெரிய விளையாட்டுத் துப்பாக்கியைக் கையில் தூக்கிக் கொள்ளுவான். இந்தத் துப்பாக்கியுடனேயே மோட்டார் சைக்கிளில் வைத்துக் கொண்டு அந்தப் பகுதியை ஒரு சுற்றிச் சுற்றி வருவான்.

'பார். சிலோன்காரங்க பிள்ளைகளுக்கு விளை யாடுறதுக்குக்கூட துப்பாக்கியைத்தான் வாங்கிக் குடுக்கிறாங்க...' என்று அண்டை அயலவர்கள் பேசிக் கொள்வார்கள்.

தமிழ்நாட்டிலே அன்று நிலவிய இந்த மனப்பான்மை மீண்டும் வருமா?

●●● சென்னை இந்திரா நகரில் அர்ஜுனாவைப் பார்த்திருக்கிறேன். நெருப்பாகவும் இருந்தான்; அமைதியாகவும் இருந்தான்.

எரிந்து கொண்டே, அதே வேளை அமைதியாகவும் எப்படி அவனால் இருக்க முடிகிறது என்று நான் நினைப்பேன்.

அர்ஜுனாவின் தந்தையை எனக்குத் தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்புக்கு ஆசிரியர் பணி ஏற்று வந்த தொடக்க நாள்களில் அவரோடு நான் நெருக்கமாகப் பழகியவன்.

எஸ். பொ.விடம் போராட்ட உணர்வு எப்பொழுதுமே இருந்தது.

ஒடுக்கப்பட்ட தொழிலாளிகளின் விடுதலைக்காக ஐம்பதுகளிலும் அறுபதுகளிலும் பொதுவுடைமைவாதி எஸ். பொ.வின் குரல் ஓங்கி ஒலித்தது.

அர்ஜுனாவில் இருந்த நெருப்பின் வேர் எஸ்.பொ. தான்.

● 1978 என்று நினைவு. மட்டக்களப்பு மாணவர் சிலரை ஏற்றிக் கொண்டு குடியரசு விழாவிலே கலந்து கொள்ளக் கொழும்புக்குப் புறப்பட்டது. அவ்வாறு புறப் பட்ட பேருந்து ஒன்றின் மீது கைக்குண்டு வீசப்பட்டது.. பெஞ்சமின், வேணுதாஸ், அநுரா உட்பட பத்துப்பேர் கைதானோம். குண்டு வீசத் திட்டம் போட்டதாகவும், தமிழர்களைத் தூண்டி விட்டதாகவும் எங்கள் மீது வழக்கு. குண்டை வீசியது அநுராவே என்றும் குற்றஞ் சாட்டப்பட்டார். மட்டக்களப்புச் சிறைச் சாலையிலும், போகம்பரைச் சிறைச் சாலையிலும் இருந்தோம். அண்ணன் அநுராவின் சிறைவாசம் அர்ஜுனாவைப் பாதித்திருக்கவும் கூடும்.

●● மலர்ந்து மணம் வீசுவதற்கு முன் அரும்பிலேயே கருகிப்போன வீர இளைஞன் அர்ஜுனாவை நினைக் கும்பொழுது என் நெஞ்சம் நெகிழ்கின்றது. எப்பொழு தும் புன்னகை தவழும் அவனது நெடிய உருவம் என் மனக்கண் முன்னால் இன்னமும் நிற்கிறது. சென்னை யில் விடுதலைப்புலிகள் இயக்க அலுவலகம் இயங்கிய காலத்தில் நான் அவனைப் பலமுறை சந்தித்திருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றேன். அரசியல் பொறுப்பாளராக இருந்த பேபி சுப்ரமணியம் என்னைச் சந்திக்க வரும் பொழுதெல்லாம் இவனும் உடன் வந்திருக்கிறான்.

ஆனால் 1985ஆம் ஆண்டில் தமிழீழத்தில் நான் இரகசிய சுற்றுப்பயணம் செய்த பொழுதுதான் அர்ஜுனாவைப்பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ள முடிந்தது. அந்த 24நாட்கள் என் வாழ்நாளில் மறக்க முடியாத நாள்கள். சிங்கள இராணுவத்தின் வேட்டைக் காடாக தமிழீழம் திகழ்ந்த வேளையில், விடுதலைப் புலிகளின் துணையுடன் அங்கு நான் சுற்றுப்பயணம் செய்தபோது என்னுடனேயே இருந்தவன் அர்ஜுனா. ஏறத்தாழ 40 மணி நேரத்துக்கு மேலாக ஓடும் அந்த வீடியோ படந்தான் தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப்பற்றிய முதலாவது ஆவணத் தொகுப்பாகும்...

40 மணிநேரம் ஓடக்கூடிய அந்தத் தொகுப்பின் முக்கிய காட்சிகளை இரண்டு மணி நேரத்துக்குச் சுருக்கி 'சுதந்திர தாகம்' என்ற தலைப்புக் கொடுத்து வீடியோ செய்திப்படம் ஒன்று தயாரிக்கப்பட்டது... தமிழ்நாட்டில் இந்தப் படம் வெளியிட்டபோது பார்த்தவர்கள் கண்ணீர் வடித்தார்கள்... இந்தப் படம் ஆங்கிலத் தலைப்புகளுடன் இந்தியாவின் பிற பகுதிகளிலும் போட்டுக் காட்டப்பட்டது. டில்லியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பல்வேறு கட்சித் தலைவர்கள், பத்திரிகையாளர் உள்ளிட்ட பலரும் இந்தப் படத்தைப் பார்த்து நெகிழ்ந்தனர். பின்னாளில் பிரதமராக விளங்கியவரும், அப்பொழுது ஜனதாக் கட்சித்தலைவருமாய் இருந்தவருமான திரு. சந்திரசேகர் அப்படத்தைப் பார்த்துப் பின் வருமாறு கூறினார்:

> '...புலிகளின் இயக்கம் உணர்ச்சி வசப்பட்ட இளைஞர்களைக் கொண்ட வெறும் பயங்கரவாத இயக்கம் என்று நினைத்தேன். ஆனால் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸின் இந்திய தேசிய இராணு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம் போன்ற தேசபக்தி நிறைந்த, கட்டுக் கோப்பான ஒரு அமைப்பு என்பதை இந்தப் படத்தைப் பார்த்த பிறகு நான் புரிந்து கொண்டேன்' என்று குறிப்பிட்டார்.

அதைப்போல உலகநாடுகள் எல்லாவற்றிலும் இந்தப் படம் வெளியிடப்பட்டது. இந்தப் படத்தைப் பார்த்தவர்கள் மனதில் என்ன விளைவுகள் ஏற்பட்டன என்பதை எனது வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தின்போதுதான் நேரில் அறிந்து கொண்டேன்... உலகெங்கிலும் உள்ள தமிழர்களின் மனதில் இந்தப்படம் பெரும் மனமாற்றத்தை ஏற்படுத்தியது. இத்தகைய திருப்பு முனையை உருவாக்கிய இந்தப் படத்தை முழுமையாக எடுத்தவன் வீரஇளைஞன் அர்ஜுனாவேதான்.

...அவனது நெடிய உருவம் அவனது தொழிலுக்குப் பெருந்துணையாக இருந்தது. நாங்கள் வாகனத்தில் செல்லும் போது அவன் கேமராவும் கையுமாக முன்னால் செல்லும் மோட்டார் சைக்கிளில் பின்னால் அமர்ந்து கொண்டு எங்கள் வாகனம் வருவதைப் படமெடுத்தான். மக்களின் அவலங்களை அவன் படமெடுத்து இருக்கின்ற நேர்த்தியினைக் கண்டு திரைப்படத் துறையைச் சேர்ந்த பல நண்பர்கள் என்னிடம் வியந்து பாராட்டினார்கள். தொழில் ரீதியில் சிறந்து விளங்கும் கேமராமேன்கள்கூட இவ்வளவு சிறப்பாக எடுத்திருக்க முடியாது என்று மனம் திறந்து பாராட்டினார்கள்.

●●● 'தம்பி' இப்ப எங்க?' என்று மிகத் தயக்கத்துடன் கேட்டேன். பத்திரிகையிலே பலவிதமான வதந்திகள் வந்ததினாலும், ஒரு பாமர curiosity.

'என்னைப் பெற்ற அம்மாவே வந்து, ஆயிரம் சமாதானங்கள் சொல்லி இந்தக் கேள்வியைக் கேட்டாலும் நான் பதில் சொல்ல மாட்டேன். என்னைப் பொய் சொல்லத் தூண்ட வேண்டாம். பிளீஸ். வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ விஷயங்கள் பேசலாம். 'அர்த் ஸத்ய' என்ற படம் பார்த்தீர்களா?' என்று சிரித்துக் கொண்டே பதில் சொன்னான்.

● '...இவன்தான் என் மகன் மித்ரா' எஸ்.பொ. முடிக்கவில்லை. 'தமிழ்நாட்டு அமிதாப் பச்சன்' என்று சொல்லிச் சிரித்தார் வீ.கே.டி பாலன். எங்களுடைய சிரிப்புச் சத்தம் அடங்கச் சில விநாடிகள் ஆயிற்று.

ஒரு சினிமா நடிகனுடன் தன்னை உவமித்தது பிடிக்காமலேயோ என்னவோ, மித்தி, குழந்தைக்குக் கடையில் ஏதாவது வாங்கிக் கொடுக்கும் சாக்கில் அவ்விடம் விட்டு மெதுவாய் நாகரிகமாக நழுவினான்.

●● இப்பொழுது அவன் எங்கள் குடும்பத்துடன் நெருங்கிய உறவு கொண்டுவிட்டான். சென்னையில் தங்கும் நாட்களில் எங்கள் வீட்டுக்கு வருவான். அவன் வீட்டுக்கு வரும் பொழுதெல்லாம், எஸ்.பொ.வின் வேண்டுகோள் என்னை உறுத்திக் கொண்டே இருந்தது. 'எஞ்சினியரிங் சீட் கிடைச்சுதா? பிலிம் இன்ஸ்டிட்யூட்டில் சேரவில்லையா?' என்று நச்சரிக்கத் துவங்கினேன். இரண்டில் ஒரு கோர்ஸிலே சேரும் option ஐ மித்திக்கு வழங்கி எஸ்.பொ. சென்றதை நான் அறிவேன்.

'பச்சையப்பாவில் சீட் sure. அதில எனக்கு விருப்பம் இல்லை. ஃபில்ம் இன்ஸ்டிட்யூட்டில எழுபத்தஞ்சாயிரம் ரூபா வெறும் லஞ்சமா மட்டும் கேட்கிறான். இவன் உருப்படுவானா? இவ்வளவு தொகையை லஞ்சமாக் கொடுத்து அதுக்கு மேலயும் லட்சக் கணக்கான காசச் செலவழிச்சுப்படிச்சு நான் ஒரு கேமராமேனாவோ ஏதோ ஒரு விஷராகவோ வந்து எங்கட சமுதாயத்துக்கு என்னத்தச் சாதிக்கப் போறன்? எங்கட நாட்டில பயமில்லாமல் வாழ முடியாது. எங்கட மொழியில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசக்கூடப் பயம். உயிர் தப்பினாலே போதும் என்று அகதிகளாக எத்தனையோ பேர் பிற நாடுகளுக்குப் போறாங்கள். ஏஜன்ஸிகளிலே புதிய பூமி பார்க்கத் துடிக்கும் தமிழ்ப் புத்திரர்கள் பொங்கி வழிகிறார்கள்! புதிய பூமியிலே முகமிழந்து, மொழியிழந்து, பிளேட் கழுவி அல்லது கக்கூசு கழுவி வயித்தைக் கழுவுவதும் ஒரு வாழ்க்கையா? நமது இனம் தலைநிமிர்ந்து கௌரவத்துடன் வாழக் கோமணக் கச்சை அளவு விஸ்தீரணமுள்ளதாயினும், ஒரு சுதந்திர பூமி தேவை. மற்றைப் பொடியன்கள் போராடி இந்த பூமியை வென்று தரட்டும் என்று நினைக்கக்கூடிய அளவுக்கு அப்பாவின் ஓர்மம் வீழ்ந்துவிடவில்லை. வீட்டுக்கு ஒரேயொரு போராளியாவது உருவாக வேண்டும். அதுதான் தர்மம். எஸ்.பொ.வீட்டில் இந்த மித்தி... அவருக்கு இதனை விளக்க வேண்டியது உங்கள் பொறுப்பு...' உணர்ச்சிகளை வசப்படுத்தும் வாசகங்கள். ஆனால், அவன் இவற்றை மிகவும் சாதாரண தொனியிலேதான் சொன்னான். அந்தக் குரலிலே இனந்தெரியாத சோகமும் இழையோடி இருந்தது.

'நீயே எழுதன்...'

'எழுதலாம்... அப்பா, இந்த முறை ரொம்பத் தளர்ந்திட்டார். நல்லா வளைஞ்சிட்டார். வயசாயிட்டுது என்றது அவர்ட முகத்தில தெரியுது.. பாவம். என் மூலமாக அல்லாமல், உங்கள் மூலமாக என் எண்ணங்கள் அவருக்குத் தெரியிறது நல்லது...'

பிறகு?

பிறவிக் கலைஞனான அவன், எழுபத்தைந்தாயிரம் லஞ்சம் கொடுத்து ஃபிலிம் இன்ஸ்டிட்யூட்டில் சேராமல் சிறந்த கேமராமேனாக உருவாகிறான். ஈழத்தின் உண்மை நிலையை இந்த உலகுக்கு வீடியோ படம் மூலம் எடுத்துக் காட்டி, தனது போர்த் தர்மத்துக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவாக, உலக அபிப்பிராயத்தை உலுக்கும் வகையில் எடுத்தான்.

●● ...நாற்பது மணி நேரம் ஓடிய அந்த வீடியோ படத்தை முழுமையாக தம்பி அவர்களுடன் உட்கார்ந்து நான் பார்த்த பொழுதுதான் அர்ஜுனாவை அவர் தேர்ந்தெடுத்தது ஏன் என்பது எனக்கும் மற்றவர்களுக்கும் புரிந்தது,விடுதலைப் புலிகள் இயக்கத்தில் வீடியோ பணிக்கு அவன் முன்னோடி என்று சொன்னால் அது மிகையாகாது. சிறந்த கலைஉள்ளம் படைத்த அவன் நல்ல சிந்தனையாளனாகவும் விளங்கினான். தமிழ் நாட்டில் பல காலம் தங்கியிருந்த காரணத்தினால் தமிழ்நாட்டின் அரசியல் அவல நிலையைக் குறித்து அவன் வருந்தினான்.

சுற்றுப் பயணத்தில் ஒருநாள் அவனுடன் பேசிக் கொண்டிருந்தபோது தமிழ்நாட்டு அரசியலைப் பற்றியும் பேச்சு வந்தது. அவன் பின்வருமாறு சொன்னான்:

'அண்ணா! தமிழ்நாட்டின் இன்றைய நிலைமையைப் பார்க்கும்போது என் நெஞ்சம் பொருமுகிறது. தமிழ் நாட்டு இளைஞர்கள் சினிமா மோகம் பிடித்தவர்களாக, வாழ்வையே சினிமா என்று நினைப்பவர்களாக இருக்கிறார்கள். எத்தனையோ உத்தமமான தியாக சீலர்கள் பிறந்த தமிழ்நாட்டில் அவர்கள் பெயராலே மன்றங்கள் வைப்பதைவிடச் சினிமா நடிகர்கள் பெயரால் மன்றங்களும் ரசிகர்கள் மாநாடுகளும் நடத்தப் படுகின்றன. பணம் சம்பாதிப்பதைத்தவிர வேறு எந்தக் குறிக்கோளும் இல்லாத இந்த நடிகர்களுக்காகத் தங்களது அருமையான வாழ்வையும் உழைப்பையும் இந்த இளைஞர்கள் வீணாக்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து எமது நெஞ்சம் எல்லாம் வெதும்புகிறது. எது உண்மை, எது போலி என்பதைக் கூட உணர முடியாதவர்களாகத் தமிழ் நாட்டு இளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞர்கள் இருக்கிறார்கள்... எமது தியாகத்தினாலும் நாங்கள் சிந்தும் இரத்தத்தினாலும்... தமிழீழம் தலைநிமிர்ந்து நிற்கும். ஆனால் இன்னும் 50 ஆண்டுகள் ஆனாலும் தமிழகம் தலைநிமிர்ந்து நிற்பதற் குரிய அறிகுறி எங்களுக்கு தெரியவில்லை...' என்று சொன்னான்.

●●●● அன்பு மித்ராவுக்கு,

நலம். உனது நலத்திற்காகவும் பிரார்த்திக்கின்றேன். உன்னுடைய கடிதங்களைப் பெற்று மிகவும் மகிழ்ச்சி யடைகிறேன். அனுப்பியிருந்த அரசியல், இலக்கிய சமாச்சாரங்களுக்கான எனது நன்றிகள்.

உன்னிடம் இருந்து கடிதம் வந்த அடுத்த தினமே, அப்பாவிடம்(எஸ்.பொ.இருந்தும் ஒரு கடிதம் வந்திருந் தது. சுவையான கடிதம். இயக்கத்துக்குள் நீ புகுந்தமை அப்பாவிற்கு அவ்வளவு விருப்பம் தர வில்லைப் போலும் என்பதாக நீ எனக்கு எழுதியிருந் தாய். ஆனால், அப்பாவோ—நீ களம் புகுந்தமையை ஒரு வீர நிகழ்வாகக் குறிப்பிட்டு எனக்கு எழுதியிருக் கிறார்.

'ஜே.ஜே. சில குறிப்புக்கள்'—உடன் கடிதம் வந்த அன்றைய தினமே என்னை வந்து சேர்ந்தது. மிகவும் தரமான ஒரு நூலை அனுப்பி வைத்திருக்கிறாய்... நீ குறிப்பிட்டது சரியே. ஒவ்வொரு எழுத்திலும் நீண்ட அனுபவத்தின் தெறிப்பு. மிகவும் துணிகர முயற்சி... வெகுவிரைவில், உன் விருப்பப்படியே, படித்து முடித்தபின், அப்பாவுக்கு அனுப்பி வைப்பேன்.

இலங்கைப் புதினங்கள் எப்படியுள்ளன? இங்கு பிரெஞ்சு வானொலியில் 'தமிழ் ஈழத்தில் குரல்' ஒலிபரப்பாகிறது.

● வந்த நாள் வந்தேன்
எந்த நாள் செல்வேன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

●● கவிதை உனக்கும் பிடிக்கும்
எனக்குப் பிடித்தது புதுக் கவிதை
பல பாகங்களாகத் தொடரும்
கவிதைகள் எழுதப்பட காத்துக் கொண்டிருக்கு
பேனாவில் நிறைய மையும்கூட...

●●● கடல்கடந்து காணவாரீர்
கற்பனைகளையும் வாரிவாரீர்
அத்தனையும் உண்மையாக
அப்பாவிற்கு வாழ்த்துக்கள்

●●●● ''இப்ப நான் குடிக்கிறேல்ல...''
''ஏன்?''
''இப்ப நான் குடிச்சால், நாளைக்கு என் பிள்ளையும் குடிப்பான்!''

''ஐயய்யோ...'' நக்கலாகச் சிரித்து முடித்தான். ''அப்படியெண்டால் நான் இப்ப சாராயப் பீப்பாக்குள்ள தான் இருக்க வேணும்.''

அதுவும் புரியாமல் மலங்க...
''எங்கட அப்பா எப்படிப் பெரிய எழுத்தாளர் என்று பெயர் பெற்றிருந்தாரோ, அந்த அளவுக்கு, 'பெருங் குடியர்' என்றும் பெயர் பெற்றிருந்தார்...எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு. நான் சின்னப் பிள்ளையா இருக்கையில எல்லாம் கொஞ்சம் கொஞ்சம் பருக்கி இருக்கிறார். அதால நான் குடிச்சுக் கொண்டா இருக்கிறன்? இதெல்லாம் சும்மா பேச்சு. பிள்ளைகள் வளர்ந்துட்டா நல்லது கெட்டதுகளைத் தீர்மானிக்கிற பொறுப்பு அந்தப் பிள்ளைகளைத்தான் சேரும். அப்பா செய்யிற நல்ல காரியங்களை எல்லாம் பிள்ளையும் செய்தால் நல்லது தான். கெட்ட காரியங்களுக்கு அப்பாவைப் பொறுப் பாக்கிறது அநியாயம். உங்களுக்கு ஒரு கதை தெரியுமா? அப்பா அந்தக் கதையை எங்களுக்குப் பல தடவைகள் சொல்லியிருக்கிறார்...''

UNIVERSITY LIBRARY 17-2-1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- The youngest betsman to score a double hundred : Javid Mianded of Pakistan against New zeland (76-77) 19 years 141 days-206runs

- அப்பா 'ஙனம்'பற்றி எனக்கும் எழுதியிருந்தார். உனக்கு எழுதிய கடிதத்தில் அது பற்றிக் குறிப்பிட மறந்துவிட்டேன். எனது எழுத்து முயற்சிகள் அடக்கு முறைக்கு எதிராகத்தான் அமையும்... சில மாதங்களாக இலங்கையில், சிங்கள அரசால் கட்டவிழ்த்து விடப்பட்ட கொடுமைகள் மனதை நோகப்பண்ணி இருக்கின்றன. சர்வதேச செய்தித் தொடர்பு ஊடகங்களில் அநேக மானவை தமிழ் இனத்தை நசுக்கும் விதத்தில் செயற் பட்டுக் கொண்டிருப்பதைக் காணுகின்றேன்...

- மித்ர: நாங்கள் எல்லா வகையாலும் சிங்கள பேரின வாத அரசால் நசுக்கப்பட்டே வந்ததால், எங்கள் உரிமைக்காகப் போராட வந்திட்டோம். இதுல கம்யூ னிஸம் தெரியாத ஜனங்கள்கூட எங்கள் போராட்டத்தில் நியாயத்தைப் புரிஞ்சுகொண்டு ஆதரவு தாராங்கள். தமிழ்நாட்டில் அப்படிப் பலபேர நான்கண்டன். ஆனால் 'நான் கம்யூனிஸ்ட்' என்று சொல்றவனும் கம்யூனிஸ்ட் கட்சியும் அப்படி இல்லை. 'நாங்கள் தமிழ் ஈழம் பிரியிறத ஆதரிக்க மாட்டோம்' என்று சொல்றாங்க. இது வேடிக் கையா இல்லியா?

ஐ.என்.ஆர்.ஓ: இதிலென்ன வேடிக்கை? அவங்க அவர் களுடைய கொள்கையைச் சொல்றாங்க!

மித்ர: என்ன அவங்க கொள்கை? மார்க்ஸியம் தானே! மார்க்ஸ் என்ன சொன்னார்? 'தேசிய சிறுபான்மை இனத்தின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண் டும்' என்றுதானே சொன்னார். அப்ப எங்கள ஆதரிக்க வேண்டியதுதானே? ஏன் ஆதரிக்கவில்லை?

ஐ.என்.ஆர்.ஓ: நீங்களே சொல்லுங்களேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மித்ர: மார்க்ஸின் தத்துவம் மிக உயர்ந்தது என்று எங்களுக்குத் தெரியும். நான் பிறந்த மண்ணிலே தோழர் கிருஷ்ணக்குட்டியுடன் சேர்ந்து கிராமம் கிராமமாக மார்க்ஸிஸம் வளர்த்த அடிநாளையத் தொண்டன் என் அப்பா. மார்க்ஸியத்தின் உன்னதத்தப் பற்றி அப்பா வாய் நிறையச் சொல்லுவார். அந்த மார்க்ஸியத்தை எந்த உருவத்திலாவது எங்க நாட்டில கொண்டு வருவம்...ஆனா, இங்க உள்ளவங்க கட்சி நடத்த வில்லை. வியாபாரம் பண்ணுறாங்க! இவங்களப்போல கொம்யூனிஸம் பேசியே கொம்யூனிஸத்த கொல்லுற காரியத்த நாங்க செய்ய மாட்டோம்.

ஐ.என்.ஆர்.ஓ.: புரியல்லயே!

மித்ர: பொய் சொல்லாதீங்க! உங்களுக்குப் புரியாமல் இல்லை. ஆனால் நான் சொல்லணும்னு எதிர்பார்க்கிறீங்க. சொல்லுறன்.

...மக்களுக்குத்தான் மார்க்ஸிஸம் பிறந்தது. மக்கள் வர்க்கமாக—முதலாளி வர்க்கம் பாட்டாளி வர்க்கம்என்ற வகையில்—மார்க்ஸிஸம் பார்க்கிறது. இங்கிருக்கிற கொம்யூனிஸ்டுகளுக்கு இந்த 'வர்க்கம்' என்ற வேதம் மட்டும்தான் தெரியும். வேற என்ன தெரியும்? கொள்கையே இல்ல. எலக்ஷன்ல சீட்டு அதிகம் கொடுத்தா இந்த பாட்டாளி கொம்யூனிஸ்டுகள் முதலாளிகளுடன் சேரும். கேட்டா கூட்டணினு சொல்லும். இங்கே அடிப்படைக் கொள்கையை முதலாளிக்கு அடகு வைச்ச கதைய மக்கள் புரிஞ்சு கொள்ளாம இருக்க மேடையில-பத்திரிகையில கதை சொல்லுவாங்க!

மக்களுக்குப் புரியிற மாதிரி கொள்கையை சொல்லணும். 'இன்குலாப் ஜிந்தாபாத்' 'பூர்ஷ்வா'... —இப்படிச் சொன்னா ஒரு பாமரனுக்கு என்ன புரியும்?... ஜிந்தாபாத்—பூர்ஷ்வான்னு சொல்லி மக்களை அந்நியப்படுத்தறதோடு இல்லாம, இப்படிச் சொன்னாத்தான் கொம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூனிஸ்டு என்று ஒரு போலித்தனத்தையும் அவங்க உருவாக்கிறாங்க .. இவங்களுக்கு தத்துவத்தின் லட்சியம் கணக்கில் இல்லை. இது ஒரு வகையான முலாம் பூசின வியாபாரம். தேனைக் கொடுத்தே ஆளைக் கொல்லுவதைப்போல கொம்யூனிசம் பேசியே கொம் யூனிசத்த கொல்லுற ஒன்றுதான் இது.

மார்க்ஸிச தத்துவத்தைச் சரியா புரிஞ்சி கொள்ளாமல் மறைக்க வேணும்னு நினைக்கிறதால, இவங்க கிட்ட சரியான தத்துவக் கொள்கையை எதிர்பார்க்க முடியாது... மார்க்ஸூம் ஏங்கெல்ஸூம் ஒத்துக்கொண்டாலுங்கூட, இவங்க தேசீய சிறுபான்மையின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க மாட்டாங்க...

● சிறந்த எழுத்தாளரான எஸ். பொன்னுத்துரை அவர்கள் பெற்றெடுத்த புதல்வன் அவன் (அர்ஜூனா) என்பதை எனக்குக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் சொன்னபோது நான் திடுக்கிட்டுப் போனேன். ஒரு தடவைகூட அவன் தான் யார் என்பதை என்னிடம் வெளிப்படுத்திக் கொண்டதே இல்லை. புலிகளுக்குரிய அடக்கம் என்னும் பண்பு அவனிடம் நிறையவே குடிகொண்டிருந்தது.

1986ஆம் ஆண்டில் ஏப்ரல் மாதத்தில் ஒரு நாள் மதுரையில் என் வீட்டுக்குப் புலேந்திரனும் அர்ஜூனாவும் மற்றும் சில தம்பிகளும் திடீர் வருகை தந்தனர். அவர்களைக் கண்டபோது நான் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன். அன்று பகல் எங்கள் வீட்டில் தங்கி விருந்துண்டு, அளவளாவி அவர்கள் மகிழ்ந்த அந்தக் காட்சி இன்னமும் என் நெஞ்சில் நிற்கிறது... விடை பெறும்போது, என் துணைவியாரிடம், 'அக்கா இன்னொரு வாழைப்பழம் கொடுங்கள்' என்று குழந்தை போல அவன் கேட்டான். அவளும் சிரித்துக் கொண்டே ஒரு சீப்பு பழத்தை எடுத்து அவனிடம் நீட்டினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலகலவென்று நகைத்த வண்ணம் அதை வாங்கிக் கொண்டே அவனும் மற்றவர்களும் விடைபெற்றுச் சென்றார்கள். அவனைப் பார்ப்பது அதுவே கடைசித் தடவை என்பதை நான் அறிந்திருக்கவில்லை.

● 1. டைரக்டர் கடிதம்
2. நூல்கள்—சிறுகதைகள்
3. மோகமுள்— Stills
4. கறுத்தம்மா—Stills
5. மணி அண்ணன்
6. மோகன் Art
7. நடராஜன்
8. Note Book
9. இரவு உணவு
10. டிரஸ்—சூட்கேஸ்
11. இரவு—பயணம்

● கடலில் எதிர்பாராத சூழலில் சிங்களக் கடற்படையைச் சந்திப்பதும்— போராடுவதும்—மடிவதும்—ஒரு செய்தி என்ற அளவிலேயே வெளியில் உள்ளவர்கள் கருதக்கூடும். கடலில் நாமே இருப்பதாக நினைத்துக் கொண்டு அந்த நொடிப் பொழுதே எண்ணிப்பார்த்தால் மட்டுமே அந்தக் கொடுமையான சூழலைப் புரிந்து கொள்ளமுடியும்...

அர்ஜுனா கடல் போரில் மாவீரன் ஆன நாள் 24.04.86.

அவன் கடலாகியிருப்பான்... இன்னும் சுதந்திர தாகப் பேரலைகளுடன் அவன் ஈழத்தமிழ் மண்ணைத் தழுவிக் கொண்டேயிருக்கிறான்.

சாவதற்கு முன்பு அவன் சாவை மிதித்து விட்டுத்தான் சாய்ந்தான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● எங்கள் கடல்மிசை
எங்கள் படகினை
எவனடா எவன்வந்து
தடுப்பான்?

பொங்கி எழுந்தனன்
கண்டீர் தமிழ்ப்புலி!
புயலெனப் பாய்ந்தது
படகு!

சிங்களவர் படை
அஞ்சக் கடல்மிசை
செருக்களம் அர்ஜுனா
செய்தான்!

அங்கு நிகழ்ந்த போர்
செங்குருதிக் கடல்
ஆடிய தமிழனின்
போரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலும் தமிழர் மண்
என்று முழங்குவான்...
கடலெனக் கடல்மிசை
எழுந்தான்!

சுடரும் விழியொடும்
உடன்புலித் தோழர்
சூழவே பகையொடும்
பொருதான்!

உடல்நின் றுயிர்தனை
விடல் என் நிலம்உய்ய
உதவுமேல் உயிர்இதோ...
என்றான்!

அடஎங்கள் சிறுத்தை
அர்ஜுனா மறத்தை
அளக்கவும் தமிழுண்டோ?
உண்டோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீறு மிகுதமிழ்
ஏறு விடுதலை
வேண்டியே செருவிடை
நின்றான்!

நீறு பகைஎனு
மாறு களத்தினில்
நின்றவன் அர்ஜுனா
வேங்கை!

சீறு கடலிடை
நூறு வெடிகணை
சிதறலும் ஆழியில்
வீழ்ந்தான்

ஊறு நிறைவர
லாறு பொடிபட
உயிர்தனை வீசினான்
கண்டீர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்குல் இடிகொண்டு
வானம் பிளந்தது!
கடும்புலம் படைத்தது
காற்று!

பொங்கு திரைகடல்
பொருமி வெடித்தது!
புடைத்தன வையகத்
திசைகள்!

'எங்கு மறைந்தனன்
பிள்ளை?' எனத்தமிழ்
ஈழம் அதிர்ந்ததும்
கண்டோம்

சங்கு முழங்கிற்று...
மாவீரன் அர்ஜுனா
சாவினுக் குயிர்தந்தான்
என்றே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA LIBRARY
17-2-1996



## பாகம் 1

(ஆரம்பத்தின் தொடர்ச்சி)

**மித்தி,**

நீ எழுதியவை. உனக்கு எழுதப்பட்ட கடிதங்கள். உன்னுடன் கொண்ட உறவுகள் பற்றி உன் இனியர்கள் எழுதியவை. உன்னுடன் நடத்திய உரை யாடல்கள் பற்றிய குறிப்புகள். உன் வீரம் கண்டு பொங்கிய உணர்ச்சிக் கவிதைகள்... இவை அனைத் தையும் பிரசுரித்தால் இன்னும் நூற்றுக்கணக்கான பக்கங்கள் விரியும். அவற்றை எல்லாம் அச்சிலே போட்டுத்தான் உன் ஆண்மையைத் தமிழ் நெஞ்சங் களிலே நிலைநாட்ட வேண்டுமா?

''ஆண்மை' என்பது ஆளுமை மட்டும் அன்று. மானிடத்தின் உயர்வுக்கும் உந்நதத்துக்கும் உபகாரி யாய் அமைந்து புருடார்த்தத்திலே தோய்ந்த எதுவோ, அது... அது முகமற்றது போன்றும் தோன்றும்... ஆழ் தியானத்தின்போது அதன் முகத்தைக் கண்டேன். அட, மித்தி! நீ சொன்னால் நம்பமாட்டாய்... அது உன் முகம்... லோகத்தின் மோஹனம் அனைத்துக்கும் அர்த்தம் சொல்லும் உன் சிரிப்பு...

இந்த ஜன்மத்தில் நீ மகனாய் எனக்குத் தந்த செழுமை, என் ஏழேழு ஜன்மத்துக்கும் போதும். அர்ஜுனன் ஒரு யுகத்தில் ஒரு தடவையே பிறப்பான்!

469044

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்படிப்பட்ட ஒரு படைப்பாளி தனித்துவத்தோடு இருப்பதில் வியப்பில்லை. சிறுகதை, கட்டுரை, நாவல், உருவகக் கதை, விமர்சனம், மொழி பெயர்ப்பு, கல்வி, நாடகம், வானொலி போன்ற எல்லாத் துறைகளிலும் அகலக்கால் பரப்பினாலும், ஒவ்வொரு துறையின் அகத்தை-புறத்தையும் உணர்ந்து செயற்பட்டிருக்கிறார். ஓர் இயக்கத்தின் எதிர்ப்பை வெல்ல அவர், தன் எழுத்தை ஆயுதமாக்கியுள்ளார். இவரது துணிவு-ஆளுமை இரண்டும் சம அளவென்றால், எழுத்தும்-பேச்சும் கூட சம அளவில் இருந்திருக்கிறது. கரு, நடை, உத்தி என்கிற அம்சங்களின் தனித்துவத்தைத் தன் படைப்பின் மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார்.... புனைகதை வரலாற்றில் அவரது பங்கு முக்கியமானது. அவர்தான் எஸ்.பொ. என்கிற எஸ். பொன்னுத்துரை

- சுபமங்களா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org